595/86

தமிழ்நாடு

சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

## செயலக வெளியீடு
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜூலை 11, 1985—தொகுதி 217 - எண்

Thursday, 11th July 1985 Volume - 217 No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2-00]

# பொருளடக்கம்

| | பக்கங்கள் |
| --- | --- |
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் | iii—vi |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப் படி தயாரிக்கப்பட்ட பட்டியல்) | vii—xi |
| 1. அறிவிப்புகள் — | |
| (1) சட்ட மன்ற மேலவைச் செயலாளராக திரு. பள்ளிகொண்ட பெருமாள் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டமை. | 1 |
| (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு | 31 |
| 2. வினாக்கள்—விடைகள்— | 1 —30 |
| 3. தகவல் கோரல் | |
| (1) தனி உறுப்பினர் அலுவல்களுக்கு நாள் ஒதுக்குவது குறித்து. | 30 |
| (2) பல்வேறு குழுக்களிலிருந்து எதிர்க் கட்சி உறுப்பினர்கள் விலகிக் கொண்டதாக செய்தி வந்தது குறித்து. | 31 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (1) திருச்சி நகரையொட்டி உள்ள மணிகண்டம் அந்த நல்லூர், திருவெறும்பூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படும் நிலையில் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் வீட்டு வாடகைப் படி வழங்கப்படாதது குறித்து | 32—33 |
| (2) அரசின் அங்கீகாரம் பெறாமல் துவக்கப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் குறித்து | 34—37 |

5. அரசின் தீர்மானங்கள்—

(1) முன்னாள் சட்ட மன்ற மேலவைச் செயலாருக்குப் பாராட்டு. 37—41

(2) தொழில் கொள்கைகளும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். 41—126

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்— 127—131


143960

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU.

### THIRU SUNDAR LAL KHURANA.

### Members of the Council of Ministers.

THE HON. Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology, Prohibition excluding grant of Liquor Permits, Excise and Passports.

2. THE HON. Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in-charge of Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-Servicemen.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in-charge of Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. THE HON. THIRU K. A. KRISHNASWAMY, Minister for Labour, in-charge of Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HON. THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

6. THE HON. THIRU K. RAJARAM, Minister for Industries, in-charge of Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister for Local Administration, in-charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. THE HON. THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in-charge of Education, Official Language, Tamil Development and Culture.

9. THE HON. Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering, Agro Service Co-operative Societies, Water Supply and Drainage Boards.

10. THE HON. THIRU C. PONNAIYAN, Minister for Law, in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. THE HON. Dr. H. V. HANDE, Minister for Health, in-charge of Health and Environmental Pollution Control.

12. THE HON. THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Acts, Ports and Highways.

13. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Food, in-charge of Food, Price Control and Census.

14. THE HON. THIRU V. V. SWAMINATHAN, Minister for Handlooms and Textiles, in-charge of Handlooms and Textiles.

15. THE HON THIRU R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in-charge of Nutritious Meals.

16. THE HON. THIRU T. VEERASAMY, Minister for Commercial Taxes, in-charge of Commercial Taxes.

17. THE HON. THIRU N. NALLUSAMY, Minister for Housing, in-charge of Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. THE HON. THIRU ANOOR P. G. JAGADEESAN, Minister for Rural Industries, in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries.

19. THE HON. THIRU T. RAMASAMY, Minister for Rehabilitation and Employment, in-charge of Rehabilitation, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. THE HON. THIRU A. ARUNACHALAM, Minister for Adi Dravidar Welfare, in-charge of Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. THE HON. THIRU M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in-charge of Backward Classes and Fisheries.

22. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in-charge of Social Welfare including Women and Children and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

23. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in-charge of Khadi, Bhoodan and Gramdhan.

24. THE HON. THIRU Y. S. M. YUSUF, Minister for Public Works, in-charge of Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. THE HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN, Minister for Co-operation, in-charge of Co-operation.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்திய பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிபபு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல், ஆயத்துறை, மதுவிலக்கு, மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மற்றும் கடவுச்சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, வருவாய், சட்ட மன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு, செய்திக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கே. கிருஷ்ணசாமி (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர் நலம், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. இராம வீரப்பன் (செய்தி-அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பெருந் தொழில்கள், சுரங்கமும் கனிவளமும், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சி, நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப் பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறி யியல் பிரிவு, வேளாண்-பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம்.

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடுதடுப்புத்துறை.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து.



13. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவு.

16. மாண்புமிகு திரு. நா. வீராசாமி (வணிகவரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி (வீட்டுவசதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியங்கள், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆலூர் பி. ஜி. ஜகதீசன் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. டி. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மறுவாழ்வு, வேலைவாய்ப்பும், பயிற்சியும், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் நலன்.

20. மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைக் கொதிலாளர்

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், இரவலர் இல்லம், அனாதை இல்லம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொதுப்பணித் துறை, சிறுபாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. சே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திருமதி வி. ஜெயலட்சுமி.
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்.சி., பி.எல்.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

சார்புச் செயலாளர்கள்

திரு. ரெ. கு. இராமச்சந்திரன், பி.ஏ., பி.எல்.

திரு. இரா. சந்திரசேகரன், பி.ஏ.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.

மேலவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கே. சந்திரசேகரன்

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி. |
|---|---|
| 1. அங்கமுத்து, திரு. பா. | நியமனம் |
| 2. அருணாசலம் திரு. க. | நியமனம் |
| 3. ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4. இராகவானந்தம். திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5. இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6. இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7. இராஜேந்திரன், திரு. மானாமதுரை, ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8. கண்ணப்பன், திரு. காடுவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9. கணேசன், திரு. ஆர். என்கிற மிசா ஆர். கணேசன் | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி |
| 10. கருணாநிதி, டாக்டர் மு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11. கலைமணி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 12. கோலப்பா, திரு. சி. ஆர். | நியமனம் |
| 13. சங்கரலிங்கம், திரு. மு. செ. | திருநெல்வேலி — கன்னியாகுமரி ஆசிரியர்கள் |
| 14. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் |
| 15. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 16. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்) | நியமனம் |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி. |
|---|---|
| 17. சிவராமன், திரு. அ. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 18. சித்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 19. சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 20. சுப்பு, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 21. சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் |
| 22. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் |
| 23. தாரா செரியன், திருமதி | நியமனம் |
| 24. தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25. பழனிவேல்ராஜன், திரு. பி. டி. ஆர். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் |
| 26. பாலாஜி, திரு. நெல்லை | நியமனம் |
| 27. மதுசூதனன், திரு. இ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28. மயில்சாமி, திரு. அ. | சேலம் — தர்மபுரி — கோயம்புத்தூர் — நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 29. மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 30. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 31. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி — புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி |
| 32. முத்துலிங்கம், கவிஞர் | நியமனம் |
| 33. முனுசாமி, திரு. பி. | நியமனம் |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி. |
|---|---|
| 34. யூசுப், திரு. யா. சை மு. (பொதுப்பணித் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 35. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி |
| 36. லீலாவதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள். |
| 37. வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38. வீரப்பன், திரு. இராம. (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39. ஜெயச்சந்திரன், திரு. எல். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் |
| 40. ஜெயலட்சுமி, திருமதி வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 41. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 45. வெற்றிடம் | சேலம்—தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 46. வெற்றிடம் | சேலம்—தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் | தொகுதி. |
|---|---|
| 49. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 50. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 59. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 60. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 61. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் அறுபத்தியேழாவது கூட்டத்தொடர்).

**வியாழக்கிழமை, 1985 ஜூலை 11.**

ஆனி 27, குரோதன—திருவள்ளுவராண்டு—2016.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. அறிவிப்புகள்.

(1) சட்டமன்ற மேலவைச் செயலாளராக திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டமை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற மேலவைச் செயலாளராக 30—6—1985 அன்று பிற்பகலிலிருந்து பொறுப்பேற்றுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

**வாலாஜாப்பேட்டை கலைக் கல்லூரி**

* 76 **வினா—திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வாலாஜாப்பேட்டை கலைக்கல்லூரியில், வணிகவியல் பட்டப்படிப்பு துவங்கும் திட்டம் ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, அக்கல்லூரியில் வணிகவியல் பாடப் பிரிவு தொடங்க இருப்பதாகக் கூறியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அக்கல்லூரியில் வணிகவியல் பட்டப் படிப்பு எப்போது முதல் தொடங்கப்படவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்த ஆண்டு முதலே தொடங்க வேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது. எனவே அரசு தன்னுடைய பரிந்துரையைச் செய்து பல்கலைக் கழக இணைப்புக் குழுவிற்கு அனுப்பி இருக்கிறது. அவர்களிடமிருந்து முறையான அனுமதி கிடைக்கப்பட்ட உடன் இப்பட்டப் பாடப் பிரிவு தொடங்கப்பட்டுவிடும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, வணிகவியல் பாடப் பிரிவில் சேருவதற்கு அதிகமான மாணவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். எனவே இப்பாடம் கற்பிக்கப்படும் கல்லூரிகளில் வணிகவியல் பிரிவில் அதிகமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்படி அரசு ஆணை பிறப்பிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்தப் பிரிவில் அதிக மாணவர்கள் படிக்க விரும்புகிறார்கள் என்பதால்தான் இப்போது இந்தக் கல்லூரியிலும் அந்தப் பிரிவைக் கொண்டு வர வேண்டும் என்று நாம் அனுமதித்திருக்கிறோம். எனவே மற்ற கல்லூரிகளிலிருந்து முறையாகக் கோரிக்கைகள் வந்தால், அவற்றைப் பரிசீலித்து எந்தெந்த இடத்திற்கு எவ்வளவு தேவை என்பதைப் பார்த்து அறிந்து அனுமதிக்கலாம். அதுவும்கூட ஒரு கட்டுப்பாட்டின்கீழ் இருக்க வேண்டியிருக்கிறது. எல்லாக் கல்லூரிகளிலும் ஒரே பாடத்தைப் படித்து அதிகமான மாணவர்கள் பட்டம் பெறுகிற வாய்ப்பை ஏற்படுத்திவிட்டால், அதுவும் ஒரு தொழில் கல்வியாக இருக்கிற காரணத்தால், அதுவே அவர்களுக்கு ஒரு பிரச்சினையாகிவிடக் கூடும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** வணிகவியல் பாடப் பிரிவில் சேருவதற்கு அதிகமான பணம் பெறப்படுவதாகப் பொதுவான குற்றச்சாட்டு பொது மக்களிடமிருந்து வருகிறது. எனவே அந்தக் காரணத்தை அடிப்படையாக வைத்து, அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் இந்தப் பாடத்தைப் போதிக்க அதிகமான பிரிவுகளையும், அதில் அதிகமான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்கும் உரிய வகையில் அரசு ஆணை பிறப்பிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசு அதை உணர்ந்திருக்கிறது என்பதன் அடையாளமாகத்தான் இப்போது இந்தக் கல்லூரிக்கும் வணிகவியல் பாடப் பிரிவை அனுமதித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற அரசு மகளிர் கல்லூரி இது ஒன்றுதான். எனவே அந்த முக்கியத்துவத்தின் அடிப்படையில் பல்கலைக் கழகத்திற்கு அரசுத் தரப்பில் இதன் அவசியத்தை வலியுறுத்தி—இந்த ஆண்டு வகுப்புகள் தொடங்கப்பட்டுவிட்ட காரணத்தால்—உடனடியாக இந்தப் பாடப் பிரிவைத் தொடங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசுத் தரப்பில் முயற்சி மேற்கொள்ளப்படும்.

**திரு. அ. மயில்சாமி:** வணிகவியல் பாடப் பிரிவில் மாணவர்கள் அதிக அளவில் சேருகிறார்கள். தொழிற் கல்வி வந்த பிறகு, தொழிற் கல்வி கற்ற மாணவர்கள் இந்த வணிகவியல் பட்டப் பாடப் பிரிவில் சேர முடியாமல் இருக்கிறார்கள். எனவே இதற்காகத் தான் தொழிற் கல்வியில் அவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்பதால், அவர்களுக்கு என்று ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சதவித இடங்களை ஒதுக்கி அவர்களை இந்தப் பிரிவில் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படி ஒரு நிலைமை இருந்தால், அதற்குத் தகுந்த நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** நமது மாநிலத்தில் உள்ள அனைத்து பெண்கள் கல்லூரிகளிலும் இவ்வாறு வணிகவியல் பட்டப் பாடப் பிரிவுகளை உருவாக்குவதுடன், மனையியல் பட்டப் பிரிவினையும் உருவாக்க அரசு முன்வருமா? காரணம் மனையியல் பட்டப் படிப்பு என்பது மாணவியர்களுக்கு மட்டும் உரியதாகும். எனவே அனைத்து மகளிர் கல்லூரிகளிலும் மனையியல் பட்டப் படிப்பைத் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஏதேனும் குறிப்பிட்ட கல்லூரியில் இப்படி ஆரம்பித்தால், நிறைய மாணவிகள் வந்து சேருவார்கள் என்று இருக்குமானால், அதற்குரிய கோரிக்கையை அவர்கள் அனுப்ப வேண்டும். அதற்குப் பிறகு அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கையை எடுக்கும்.

[1985 ஜூலை 11

தங்கும் வசதிகொண்ட சிறப்புப் பள்ளி.

* 77 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பின்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வெளிநாடுகளில் இருந்து தாயகம் திரும்பியவர்களின் குழந்தைகள் கல்வி பெற, தங்கும் வசதிகொண்ட சிறப்புப்பள்ளி ஒன்று, புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாக சிறப்புப் பள்ளி ஆரம்பிக்கும் கருத்துரு இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்படவில்லையென்றால், இவ்வாறு தாயகம் திரும்புபவர்களுடைய குழந்தைகள் கல்வி பெற ஏதேனும் அமைப்புகள் இருக்கின்றனவா ? அப்படி இருக்கின்றன என்றால், அந்த அமைப்புகளை விரிவுபடுத்தி, அங்கு வசதிகளை அதிகப்படுத்தி, அதிக அளவில் மாணவர்கள் கல்வி பயில வாய்ப்பு தரும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : புதுக்கோட்டை மாவட்டம், கொளத்தூர் வட்டம், விராலிமலை பகுதியில் மாத்தூரில், பர்மாவிலிருந்து வந்த அகதிகளின் குழந்தைகள் தங்கிப் பயில ஆரம்பப் பள்ளி ஒன்று 1965 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இப்பள்ளி 1975 ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாக ஆக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு அப்பள்ளியில் பத்தாம் வகுப்பு துவங்கப்பட்டது. தொடர்ந்து தங்கி பயிலும் பள்ளியாக அது இயங்கி வருகிறது. இதுதான் அகதிகள் குழந்தைகளுக்காக முன்னாள் ஏற்படுத்தப் பட்ட சிறப்புப் பள்ளி.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இப்போது ஸ்ரீலங்காவிலிருந்து ஏராளமான அகதிகள் தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட முகாம்களில் தங்க ஏற்பாடு செய்திருப்பதால், ஆயிரக்கணக்கில் குறிப்பிட்ட இடங்களில் அவர்கள் தங்கியிருப்பதால், அவர்களுடைய கல்வி பாதிக்காத வண்ணம், அவர்கள் அந்தந்த இடங்களிலேயே கல்வியைப் பெற ஆங்காங்கே தற்காலிகப் பள்ளிகளை ஏற்படுத்தும் சிறப்பான நடவடிக்கையை கல்வித் துறை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



[1985 ஜூலை 11

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் சார்பாக கல்வித் துறைக்கு வருகிற கோரிக்கைகளை அனுதாபத்தோடு பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம். இப்போது அவர்களுக்காகவே ஒரு தனித் துறை ஏற்படுத்தப்பட்டுவிட்டதால், அவர்களுடைய குழந்தைகள் சார்பாக சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டு கல்வித் துறையின் அனுமதியைக் கேட்டால், கல்வித் துறையால் நிச்சயமாக அது வழங்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தாயகம் திரும்புறவர்களுக்கு மண்டபம் போன்ற முகாம்களில் படிப்பு வசதி செய்து தந்திருக்கிறார்கள். பல மாவட்ட அளவிலும் அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அரசுப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவர்களை மிகுந்த அனுதாபத்தோடு ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் தனியார் பள்ளிகளில் அந்த முறையில் நடந்துகொள்வதில்லை. ஆகவே ஸ்ரீலங்காவிலிருந்து வந்த அகதிகளுக்காக தனியார் பள்ளிகளில் இரண்டு, மூன்று இடங்களைத் தர வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : குறிப்பிட்ட பள்ளிகளில் சேர்க்க வேண்டுமென்றால், பல்வேறு பிரச்சினைகள் வரும். அவர்கள் கல்வி பயில தேவையான வசதிகளை அரசு நிச்சயமாகச் செய்யும். அது மட்டுமல்லாமல், நிறைய குழந்தைகள் இருக்கும் இடங்களில் அவர்களுக்காக ஒரு பள்ளி ஆரம்பிப்பது என்பது உத்தமமாக இருக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஸ்ரீலங்காவிலிருந்து வந்திருக்கக்கூடிய தமிழர்களுடைய—அகதிகளுடைய குழந்தைகளை, அவர்களுடைய சான்றிதழ்களைக் கொண்டுவராவிட்டாலும்கூட, எல்லாப் பள்ளிகளிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசு கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணையின் நகல் எனக்கு வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நிறைய குழந்தைகள் இருந்தால், அந்தக் குழந்தைகளையெல்லாம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டு சென்று அங்கு அவர்களுக்கு என்று தனியாக தங்கிப் பயிலும் பள்ளி ஒன்றைத் துவங்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாத்தூர் பள்ளியைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பள்ளியில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு, ஏனைய பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் காலத்திலே வருவதில்லை. அதற்குத் தக்க நடவடிக்கை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரே இடத்திலே அவர்களைக் கொண்டு வந்து அதற்காக பள்ளிகளை அமைப்பது என்பது அவர்களுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள அகதிகள் சம்பந்தப்பட்ட துறையின் பொறுப்பாக இருக்கும். அவர்கள் எடுக்கிற கல்வி சம்பந்தப்பட்ட முயற்சிகளுக்கு கல்வித் துறை அனுமதி கொடுக்க, மற்ற உதவிகளைச் செய்ய தயாராக இருக்கிறது. ஆனால் முயற்சி எடுக்க வேண்டியது அகதிகள் துறை, மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டு, அந்த அமைச்சரிடம் கேட்டால், அவர்கள் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள், என்னென்ன செய்ய முடியும் என்பதைப்பற்றி விளக்கமாகச் சொல்ல முடியும். அங்கேயுள்ள ஆசிரியர்கள்பற்றி அரசு நன்கு பரிசீலிக்கும்.

## ஆசிரியர்கள் இல்லம்.

* 78 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கிழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டுக்கல் கல்வி மாவட்டத்தில், ஆசிரியர் இல்லம் கட்டுவதற்கென வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அத்தொகை வசூலிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியும், இல்லம் கட்டும் பணி தொடங்கப் பெறாததை அரசு அறியுமா?

(உ) ஆம் எனில், அது தொடர்பாக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ரூ. 4,196.50.

(இ) மற்றும் (உ) ஆசிரியர் நல சங்கத்தால் வசூலிக்கப்பட்ட தொகை இல்லம் கட்டப் போதுமானது இல்லையென்பதாலும், தகுதி வாய்ந்த இடவசதி கிடைக்காத காரணத்தாலும் ஆசிரியர் இல்லம் கட்டும் பணி இன்னும் துவக்கப்படவில்லை. ஏற்கனவே மதுரை மாவட்டத்தில் கொடைக்கானலில் அரசின் உதவியுடன் ஓர் ஆசிரியர் இல்லம் கட்டப்பட்டுள்ளதால் இதன் பொருட்டு மேல் நடவடிக்கை அரசால் எடுக்கப்படவில்லை. ஆசிரியர் இல்லம் கட்டும் பொறுப்பு அந்தந்த மாவட்ட ஆசிரியர் நல சங்கத்தைச் சார்ந்தது.



(முற்பகல் 10-10)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, கொடைக்கானலிலே ஏற்கெனவே இந்த இல்லம் இருக்கின்ற காரணத்தினால், இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். அப்படியானால், இதிலே வசூலிக்கப்பட்ட பணத்தை திருப்பித் தர அரசு உத்தேசித்துள்ளதா? இதுபோலவே தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களிலும் 10 ஆண்டுகளுக்கு மேலாக வசூலிக்கப்பட்ட பணம் அப்படியே இருக்கின்றது. அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபற்றி அரசினுடைய தற்போதைய கொள்கை என்ன, விரைந்து அதில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, கொடைக்கானலில் அமைக்கப்பட்ட ஆசிரியர்கள் இல்லத்திற்கு என வீட்டு வசதி வாரியத்திற்கு பணம் தரவேண்டியிருக்கிறது. அந்தப் பணத்திற்காக ஆசிரியர்களிடம் வசூலிக்கப்பட்ட தொகையை தந்து விடலாம் என்ற முடிவு அரசின் மூலமாக எடுக்கப்பட்டு வருகிறது. மற்ற மாவட்டங்களில் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டால், கிட்டத்தட்ட அரசு உதவி செய்யும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து திண்டுக்கல்லிலே அந்த இல்லம் கட்டுகின்ற உத்தேசம் இல்லை என்று தெளிவாகவே தெரிகிறது. ஆகவே அங்கே கட்டவேண்டுமென்பதற்காக வசூலிக்கப்பட்ட பணத்தை, கொடைக்கானலில் கட்டப்பட்ட கட்டடத்திற்காகத் தருவதாகச் சொல்கிறார்கள். ஒரே கல்வி மாவட்டத்திலே இரண்டு இடத்திலே இல்லங்கள் இருக்கக்கூடாதா? அப்படி இருந்தால் நல்லதுதானே. திண்டுக்கல் போல கொடைக்கானலுக்கு அடிக்கடி செல்லக்கூடிய ஆசிரியர் பெருமக்கள் இருக்க முடியாதே. ஆகவே அதைப்பற்றி அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், ஏனைய மாவட்டங்களிலேயும் இருக்கிற நிலையைச் சீர்படுத்துவதற்கு விரைவில் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களிலே அமைக்கப்பட்டிருக்கின்ற ஆசிரியர்கள் நல சங்கங்கள் வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் அரசிடத்திலே வந்து உதவி கேட்பார்களானால், அந்த உதவியை அரசு செய்யுமே தவிர, அரசு இதிலே நேரடியாகத் தலையிட்டு முயற்சி எடுக்கின்ற நிலை இல்லை. இப்போது திண்டுக்கல்லிலே இருக்கின்ற பணம் ரூ. 6,000 தான் வட்டியோடு

சேர்ந்திருக்கின்றது. அது செலவழிக்கப்படாமல், பயன்படாமல் இருப்பதற்குப் பதிலாக திண்டுக்கல் ஆசிரியர்களுக்கும் பாத்தியதைப்பட்ட கொடைக்கானலில் இருக்கின்ற இல்லத்திற்கான கடனைக் கட்ட அந்தப் பணத்தைத் தருவதிலே எந்தவிதமான தவறும் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதே பிரச்சினைதான் தென்னாற்காடு மாவட்டம் கடலூரிலேயும் இருக்கின்றது. 15 ஆண்டுகளுக்கு மேலாகவே வசூலிக்கப்பட்ட பணம் சரியாகச் செலவழிக்கப்படாமல் இருக்கின்றது. ஆசிரியர்கள் நம்பிக்கை இழந்துகொண்டு வருகின்றார்கள். அமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மாவட்டத்திலே உள்ள ஆசிரியர்கள் நலச் சங்கம் தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த ஆசிரியர்கள் நலச் சங்கத்திற்குத் தலைவரான முதன்மைக் கல்வி அதிகாரி நம்முடைய கல்வித் துறையினுடைய பிரதிநிதியாக இருக்கின்றார்கள். துணைத் தலைவராக ஒவ்வொரு மாவட்டக் கல்வி அலுவலரும் இருக்கின்றார். அந்தக் காரணத்தினாலே கல்வித் துறையும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆகவே மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியும், மாவட்டக் கல்வி அலுவலர்களும் அதில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு கல்வித் துறையின் மூலமாக ஒரு ஆணையை அனுப்பி, எங்கெங்கெல்லாம் அவர்களால் தாமதம் நிகழ்கின்றதோ அங்கங்கே எல்லாம் உரிய நடவடிக்கை எடுத்து விரைவாக அந்தக் கட்டடங்களை கட்ட நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களில் ஆசிரியர் இல்லம் கட்டுவதற்கான தொகையினை அதிகரிப்பதற்காக இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர் குழுவினால் நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாவட்டங்களில் இல்லக் கட்டுமானப் பணியில் முயற்சியின் வளர்ச்சி குறித்தும் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பள்ளிக் கல்வி இயக்குநரால் அறிக்கை பெறப்பட்டு வருகிறது. சென்னையிலே இருந்துகொண்டு அவர்கள் இந்த முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் ஆசிரியர்கள், நலச் சங்கத்திலே இருக்கின்ற ஆசிரியர் பிரதிநிதிகள் அதை மேலும் வற்புறுத்தி மேற்கொண்டு என்ன முயற்சிகளை எடுக்கவேண்டுமோ அதை எடுத்தால், நலமாக இருக்கும்.



செல்வி ஆ. லீலாவதி : அநேக ஆசிரியர்கள் தங்களுடைய ஊரிலேயிருந்து சென்னை மாநகரத்திற்கு வந்து இயக்குநர், எஜுகேஷன் செக்ரட்டரி ஆகியவர்களைப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் தங்குவதற்கு இல்லம் இல்லாமல் இருக்கின்றது. அவர்கள் இங்கே அதிகமான தொகையைக் கட்டி லாட்ஜுகளில் தங்க வேண்டியிருக்கின்றது. ஆகவே சென்னை நகரத்தில் ஒரு ஆசிரியர் இல்லம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆசிரியர்கள் சங்கம் நல்லபடியாகச் செயல்பட்டு வருகின்றது. அதற்காக முயற்சிகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும், அப்படி அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்றால், அதன் பிரதிநிதிகளை மாற்ற வேண்டும். ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் காரியங்களை மேற்கொள்ள வேண்டும். அந்த ஆசிரியர் பிரதிநிதிகள் அந்தக் காரியங்களை மேற்கொள்ளாததனாலேயே இப்போது நாம் இங்கே பேசவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் இல்லங்களைக் கட்டுவதற்கு அரசு ஆதரவு தருகிறது. அதை அவர்கள் மேற்கொள்ளாததால், நாம் அவைகளை எடுத்துக் கொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைச் செய்யக்கூடாது என்ற கொள்கையை நாங்கள் எடுத்துக்கொள்ளவில்லை.

(முற்பகல் 10-15)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, அரசு அதற்கு ஆதரவு தருகின்றது என்றாலும், வசூலிக்கப்பட்ட பணம் ஒழுங்காகச் செலவு செய்யப்படுகிறதா, அது இருப்பில் இருக்கிறதா என்று கண்காணிக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினரவர்கள் குறிப்பிட்டது போல, முதன்மைக் கல்வி அதிகாரி அவர்கள் அதன் தலைவராக இருக்கிறார்கள். ஆகவே இதுநாள் வரை கட்டாமல், வசூலித்த பணத்தை 10, 15 ஆண்டுகளாக வைத்திருப்பவர்களிடம், கட்டிடம் கட்டுங்கள் அல்லது பணத்தைத் திருப்பித் தாருங்கள் என்று சொல்லுமளவுக்கு உரிய நடவடிக்கையை ஏன் அரசு எடுக்கக்கூடாது ? அந்த நடவடிக்கையை மேற்கொள்ளலாமல்லவா? 6,000 ரூபாயை திரும்ப கொடைக்கானலுக்குத் தரலாம் என்று சொன்னார்களே, அதற்கு ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் பொதுக் குழுவில் முடிவெடுத்து, அரசுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்களா ?

[1985 ஜூலை 11

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கொடைக்கானல் இல்லத்திற்கு அளிப்பது பற்றி திண்டுக்கல் கல்வி மாவட்ட ஆசிரியர் நலக் குழுவினரிடத்திலே ஒப்புதல் பெற மாவட்டக் கல்வி அலுவலர் அளவில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, ஊட்டியில் ஆசிரியர் களிடம் வசூல் செய்து, கட்டப்பட்டிருக்கிறது. அது ஆண்டுக்கு அரை அடி பூமிக்குள் போய்க்கொண்டிருக்கிறது. ஆசிரியர்களை எவ்வளவோ உயர்த்தி யுள்ள அமைச்சரவர்கள், அந்தக் கட்டிடத்தையும் அரசின் சார்பில் எடுத்து, ஆசிரியர்கள் இல்லமாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** உறுப்பினர் அவர்கள் சொல்லு வதைப் பார்த்தால், அந்த இடம் அவ்வளவு சரியாக இல்லை என்றுதான் தோன்றுகிறது. அதைப்பற்றிப் பரிசீலித்து, வேறு இடத்தில் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும். அந்த இடத்தில் ஆசிரியர் இல்லம் கட்ட அனுமதிக்கக்கூடாது.

**திரு. பா. ரா. தாமஸ் :** கொடைக்கானலிலே அமைக்கப்பட்டிருக்கும் ஆசிரியர் இல்லம் மதுரை வருவாய் மாவட்ட சார்பிலே கட்டப்பட்டிருக்கிறது. அது அதிகாரிகளின் பிடிப்பிலேதான் இருக்கிறது. அங்கே ஆசிரியர்கள் அதிக மாகச் சென்று தங்குவதில்லை. அதனுடைய அமைப்பு அப்படி அமைந்திருக் கிறது. மதுரை நகரிலே அந்த இல்லம் வந்தால், அதனால் ஆசிரியர் பெரு மக்கள் நலம் பெறுவார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு திட்டமிட்டு, வருகிற 5 ஆண்டுகளுக்குள்ளாக ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஆசிரியர் இல்லம் கட்டப்பட வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலர் 5 லட்சம் அல்லது 3 லட்சம் ரூபாய் சேகரிக்க வேண்டும், அரசு அதற்கு இணையாகக் கொடுக்கும் என்று சொல்லி, ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது பெரும்பாலும் ஆசிரியர் களின் முயற்சியின் காரணமாகக் கட்டப்படுகிற இல்லம். அவர்கள் ஆர்வத் தோடு செயல்பட்டாக வேண்டும். ஆசிரியர் நலச் சங்கத்தில் உள்ள ஆசிரியப் பிரதிநிதிகள் முறையாகச் செயல்பட்டால், இந்தப் பிரச்சினைகள் எழாது. அவர்கள் ஒழுங்காகச் செயல்படும் இடங்களில் கட்டிடங்கள் வந்திருக்கின்றன. ஒன்று, ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் முறையாகச் செயல்பட வேண்டும் அல்லது அவர்களை மாற்றி நல்லவர்களைப் போட்டு, இந்த இல்லம் கட்டும் முயற்சியில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். அவர்கள் முயற்சி எடுத்து, அரசிடம் அணுகும்போது, அரசு அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யும்.



லை 11]

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆசிரியர் இல்லம் கட்டுவதற்கான முயற்சிகளை ஆசிரியர் நலச் சங்கம் எடுக்க வேண்டு மென்று கூறினார்கள். தென் ஆற்காடு மாவட்டம், கடலூரில் அந்தச் சங்க மானது சட்டபூர்வமாக இயங்கவில்லை. அது 'டிபங்க்ட்' ஆக இருக்கிறது. இதுபற்றி முதன்மைக் கல்வி அதிகாரியிடமும், மற்ற அதிகாரிகளிடமும் பல முறை முறையிட்டாகிவிட்டது. இதுவரை அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. எனவே அமைச்சரவர்கள், முதன்மைக் கல்வி அதிகாரி இது குறித்து விரைவில் ஆவன செய்ய, அந்த ஆசிரியர் நலச் சங்கம் சட்ட பூர்வ மாக இயங்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கடலூரில் மட்டுமல்ல, எந்த ஊராக இருந்தாலும், ஆசிரியர் நலச் சங்கத்தில் இருக்கின்ற பிரதிநிதிகள் ஒழுங்காகச் செயல்படவில்லை என்றால், அதை மாற்றி அமைத்து, புதிய உறுப்பினர்களைப் போடுவதுதான் சரியாக இருக்கும். அந்த முறையில் முதன்மைக் கல்வி அதிகாரி அவர்கள் அறிவுறுத்தப்படுவார்கள்.

### *Assistant Professors upgraded as Professors*

* 79. *Q.* THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that as per G.O. Ms. No. 893, Education, dated 21st May 1980, Assistant Professors after 10 years of service, have to be upgraded as Professors ; and

(*b*) if so, the number of them upgraded ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) 31—3—1985 வரை இத்திட்டத்தின்படி பேராசிரியர்களாகப் பணி மேம்பாடு செய்யப்பட்டவர்கள் :

| | |
|---|---|
| தனியார் கல்லூரி | 2661 |
| அரசுக் கல்லூரி | 584 |
| மொத்தம் | 3245 |

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவரவர்களே, தமிழக அரசானது உதவிப் பேராசிரியர்களை மேல் நிலைக்கு உயர்த்துவதற்காக அவர்களுக்குப் பேராசிரியர் அந்தஸ்து கொடுத்து, ஆணை வழங்கியிருக்கிறது. ஆனால் அன்று இருந்த நிலையை வைத்துக்கொண்டு, அதற்குப் பிறகு மேல் உயர்வு

[1985 ஜூலை 11

கொடுப்பதை கல்வித் துறை தடுத்திருக்கிறது. 10 ஆண்டுகள் முடிந்த உடன் அந்தத் தகுதிக்கு வரும் உதவிப் பேராசிரியர்கள், பேராசிரியர்களாக உயர்வு பெறாமல் இருக்கிறார்கள். அதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அந்த இயக்கம்கூட அதுபற்றி முறையிட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். 1980-க்குப் பிறகு கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அது குறித்து அரசு ஆவன செய்யுமா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 31—3—1985 வரை 3 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு பதவி உயர்வு தரப்பட்டிருப்பதாக விவரம் தரப்பட்டிருக்கிறது. அந்த வகையில் நாங்கள் தந்த உறுதிமொழியை நிறைவேற்றிக் கொண்டு தான் இருக்கிறோம். மற்றபடி உதவிப் பேராசிரியர்கள் பதவி உயர்வு பெறாமல் காலதாமதம் ஏற்பட்டிருக்குமானால், அவர்கள் உரிய தகுதி பெறாமல் இருக்கலாம். 10 ஆண்டு பணிக்காலம் முடிக்காமல் இருக்கலாம் அல்லது பணி முறிவு ஏற்பட்டு 10 ஆண்டு பணிக்காலம் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கலாம். அப்படிப்பட்டவைகள் பரிசீலனையில் இருக்கலாம். ஆனால் முறையாக முழுத் தகுதி பெற்றிருப்பவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு தந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்ற அனைத்துத் தகுதிகளும் பெற்றிருந்தும், அவர்களுடைய நிலை உயர்த்தப்படவில்லை என்று தான் கூறுகிறார்கள். இதை நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன். அதுபோல் போஸ்ட் கிராஜுவேட் துறைக்கு மட்டும் 'ஹெட் ஆப் டிப்பார்ட்மென்ட்' இருக்கிறது. அதற்குக் கீழ் இருக்கின்ற துறைக்கும் 'ஹெட் ஆப் டிப்பார்ட்மென்ட்' அந்தஸ்து கொடுத்து, அந்த வகையில் அவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துறைத் தலைவர்களைப் போடுவதுபற்றி ஏற்கெனவே விதி முறைகளை அமைத்து அதன்படிதான் போடுகிறோம். ஆனால் இரண்டு துறைத் தலைவர்களைப் போட வேண்டுமென்று இப்போது சொல்கிறார்கள். அதுபற்றி தனியாக எப்படிச் செய்வது என்று பரிசீலிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



985 ஜூலை 11]

திரு. மு. செ. சங்கரலிங்கம்: 10 ஆண்டுகள் பணிபுரிந்த உதவிப் பேராசிரியர்கள், பேராசிரியர்களாக நிலை உயர்த்தப்படாமல், கடந்த 3 ஆண்டுகளாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தகுதியில்லாதவர்கள் அல்ல. அதோடுகூட தனியார் கல்லூரிகளில் பணிபுரிகிறவர்களும் அல்ல. ஆகவே இதுபற்றி உடனே முடிவெடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு முடிவெடுத்துதான் உதவிப் பேராசிரியர்களை எல்லாம் பேராசிரியர்களாக நிலை உயர்த்தி வருகிறோம். அப்படி பேராசிரியர்களாகப் போடவில்லை என்றால், அதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். அந்தக் காரணங்களால் காலதாமதம் இருக்கலாம். ஆனால் ஒழுங்காக 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கும், தகுதியுள்ளவர்களுக்கும் பதவி உயர்வு கொடுத்து வருகிறோம். அதனால்தான் 3 ஆயிரம் பேர்களுக்கு மேல் பயனடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கும் நியாயமாகக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வுக்கு நிதித் துறையின் ஒப்புதல் பெற வேண்டும் அல்லது உரிய அதிகாரிகளின் அனுமதி பெறவேண்டும் என்கிற நடைமுறை இப்பொழுது பின்பற்றப்படுவதால்தான், உதவிப் பேராசிரியர்களுக்கு ஒரு தண்டனைபோல் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால்தான் முறையாக 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களும்கூட பேராசிரியர்களாக நிலை உயர்த்தப்படவில்லை. இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன், இப்பொழுதாவது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 10 ஆண்டுகள் பணி முடித்திருக்கலாம். ஆனால் பதவி உயர்வு கொடுக்கும்போது, இந்த 10 ஆண்டுகள் பணியை மட்டும் பார்ப்பதில்லை. எல்லாவிதமான தகுதிகளும் உண்டா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. பதவி உயர்வு என்று வரும்போது, இந்தப் பிரச்சினை வரத்தான் செய்யும். ஒவ்வொரு சமயத்திலும் பதவி உயர்வு என்கிற பிரச்சினை வருகிறபோது, சம்பந்தப்பட்ட துறையினர் அதைப் பரிசீலிக்கத்தான் செய்வார்கள். அந்த முறையை மாற்ற இயலாது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: 10 ஆண்டுகள் பணி புரிந்தும் பேராசிரியர்களாக நிலை உயர்த்தப்படாத உதவிப் பேராசிரியர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? தேங்கியிருக்கின்ற முழு தகுதியுடைய உதவிப் பேராசிரியர்களை

எல்லாம் பேராசிரியர்களாக இந்தக் கல்வி ஆண்டிலேயே நிலை உயர்த்தினால் அவர்கள் பயனடைகிற வாய்ப்பு ஏற்படும். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எவ்வளவு பேர் தேக்கத்தில் இருக்கிறார்கள் என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்குப் பதவி உயர்வு தந்திருக்கிறோம். அந்த வகையில் கணிசமான உதவிப் பேராசிரியர்களுக்குப் பதவி உயர்வு தரப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். மற்றவர்களைப் பொறுத்தவரை, அவ்வப்போது பரிசீலித்து முடிவெடுக்கப்படும்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : அமைச்சர் அவர்கள் அறிவித்த 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களில் 2,000-க்கும் மேற்பட்டவர்கள் தனியார் கல்லூரிகளில் பணியாற்றுபவர்கள். அரசுக் கல்லூரிகளில் பணியாற்றுபவர்களைப் பொறுத்தவரையில், போலீஸ் வெரிபிக்கேஷனுக்கு அவர்கள் பெயர்கள் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படி அவர்களுக்கு போலீஸ் வெரிபிக்கேஷன் தேவையில்லை. பதவி உயர்வு பெறுவதற்கு இது ஒரு தண்டனையாக இருப்பதால், கால தாமதத்தை ஏற்படுத்துவதால், அதை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசுப் பதவியில் இருப்பவர்கள் பதவி உயர்வைப் பெறுவதற்கு என்னென்ன விதி முறைகள் இருக்கின்றனவோ அதே விதிமுறைகள் அரசுக் கல்லூரிகளில் பணிபுரிபவர்கள் பதவி உயர்வு பெறும்போதும் பின்பற்றப்படும். அவர்களுக்கு போலீஸ் வெரிபிக்கேஷன் தேவை என்றால், அது முடிந்த பிறகுதான், அவர்கள் பேராசிரியர்களாக நிலை உயர்த்தப்படுவார்கள். ஆகவே பேராசிரியர்களுக்கு மட்டும் தனியாக விதிவிலக்கு தர வேண்டுமென்ற நிலைமை கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-25)

திரு. அ. மயில்சாமி : தலைவர் அவர்களே, உதவிப் பேராசிரியர்கள், பேராசிரியர்களாகப் பதவி உயர்வு செய்யப்படுவதற்கு 10 ஆண்டுக் காலம் பணியாற்றியிருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது பதவி உயர்வு என்று சொல்ல முடியாது. பணி மேம்பாடுதான். இதற்கு 'மெரிட்' அடிப்படையில் அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றே தோன்றுகிறது. மற்ற துறைகளில் பத்தாண்டுக் காலம் பணியாற்றியவர்களுக்குத் தேர்வு நிலை,





சிறப்புத் தேர்வு நிலை என்பன போன்ற பதவிகள் தரப்படுகின்றன. அதுபோல் இதையும் பரிசீலிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதுபோன்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்கள், கல்வித் துறையில் பத்தாண்டுக் காலம் ஒருவர் பணியாற்றியிருந்தால் செலக்ஷன் கிரேடு, பிறகு சிறப்புத் தேர்வு நிலை தரப்படும் என்று நம்முடைய அரசு ஆணையிட்டிருக்கிறது. அதன்படி வழங்கியும் வருகிறோம். அந்த அடிப்படையில்தான் இந்தக் கோரிக்கையே அமைந்திருக்கிறது. பேராசிரியர்கள், மற்ற ஆசிரியர்கள் ஆகியவர்கள் எல்லாம் சில ஆண்டுகளுக்கு முன் இதுகுறித்து போராடித்தான், இந்தச் சலுகையை அரசாங்கம் கொடுக்க முன்வந்தது. அந்தச் சலுகையை முறையாக அமல் படுத்த அரசு முன்வருமா என்று அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பத்தாண்டு, இருபதாண்டு என்று சில விதிமுறைகள் வைத்து, அதன் அடிப்படையிலும் அணுகுகிறோம். ஆனால் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் விஷயத்தில் சில விதிமுறைகள் வைத்திருக்கிறோம். அரசிடம் இருக்கிற விதிமுறைகளை அனுசரித்துத்தான் இங்கே பேச முடியும். அதில் விதிவிலக்குத் தருவதற்கில்லை. பணி உயர்வு கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டால், அதுகுறித்து விரைவில் பரிசீலித்து அது தவிர்க்கப்படும்.

இரயில்வே மேம்பாலம்.

* 80. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலையில், திருவாரூர் அருகே இரயில்வே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (இ) தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் அருகே மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலையில் கி.மீ. 41/8-ல் இரயில்வே பாதை கடவுக்குப் பதிலாக மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, திருவாரூர் புகைவண்டி நிலையத்திற்கு அருகில் உள்ள ரயில்வே கேட் எப்போதும் மூடப்பட்டே இருக்கிற நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்களும், அவ்வழியாகச் செல்லும் போது பார்த்திருக்கக்கூடும். அந்தப் பணி தொடங்கியது பல ஆண்டுகளுக்கு முன் என்று கருதுகிறேன். எப்போது தொடங்கியது ? எப்போது முடியும் ? அதற்கு என்ன செலவானது ? அதில் நமது அரசின் மானியம் எவ்வளவு ? மத்திய அரசின் பங்கு என்ன ? எப்போது அந்தப் பணி முடியுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதற்காகும் செலவு ரூ. 44 லட்சம். அதில் மத்திய அரசு பாதித் தொகையையும், மாநில அரசு பாதித் தொகையையும் ஏற்றுக்கொள்கிறது. அந்தப் பாலத்தைப் பொறுத்த வரையில், ஆகஸ்ட் 1985-ல் முடிக்கப்பட்டுவிடும். அதற்கு அணுகு சாலை அமைக்கப்பட வேண்டும். அதுவும் 1986 ஜனவரிக்குள் முடிக்கப்பட்டு, போக்கு வரத்திற்காக அந்தப் பாலம் திறக்கப்படும்.

### மயிலாடுதுறை-திருவாரூர் சாலையில் உள்ள பாலத்தை விரிவுபடுத்துதல்.

*81. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை-திருவாரூர் சாலையில் திருவாரூரிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள பாலத்தை, விரிவுபடுத்தும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.



திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அந்த இடம் மிகவும் குறுகியதாக இருப்பதால், அதன் காரணமாகவே அடிக்கடி விபத்துக்கள் ஏற்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. அத்தகைய விபத்துக் குறிப்புக்களை அமைச்சர் அவர்கள் வரவழைத்துப் பார்த்தால், நிலைமை புரியும். ஆகவே இப்போது அந்தத் திட்டம் எடுக்கப்படாவிட்டாலும், எதிர் காலத்திலாவது அந்தத் திட்டம் எடுக்கப்பட்டு, அதை விரைவுபடுத்தும் செயல் குறிப்பை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைகளுக்கேற்ப, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### Air Craft Service.

*82. *Q.* THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether it is a fact that the State Government have recommended to the Central Government, to have Air Craft Service, connecting important District headquarters in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) தமிழ் நாட்டில் இந்திய விமானப் போக்குவரத்தில் சேராத, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் மாவட்டங்களின் தலைநகரங்களை இணைக்கும் குறுகிய விமானப் போக்குவரத்து சர்வீஸ்களை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு மைய அரசை மாநில அரசு கோரியது. இக்கோரிக்கைக் கிணங்க முதற்கட்டமாக தூத்துக்குடி அருகில் வாகைகுளம் என்ற இடத்தில் விமானதளம் அமைத்தல் பொருளாதார ரீதியாக இலாபகரமாக இருக்குமா என்பதைக் கணிக்க சர்வே ஒன்றை நடத்த மத்திய அரசு தீர்மானித்துள்ளது. இது தவிர சேலம் அருகே ஒரு விமான நிலையம் அமைக்க கமலாபுரம் என்ற இடத்தில் 200 ஏக்கர் நிலம் இலவசமாகக் கையகப்படுத்துமாறு மைய அரசு கேட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் சாலைப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே நாம்தான் முதலிடத்தில் இருக்கிறோம். வெளி மாநிலங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் இந்த டெக்னிக்குகளைக் கற்க, நமது வல்லுநர்களை அவர்கள் அனுகுகிறார்கள். ஆகவே, மாவட்டத் தலைநகர்களை மட்டும் அல்லாமல், வெளி மாநிலங்களிலும் உள்ள விமான நிலையங்களை ஒருங்கிணைத்து, மாவட்டத் தலைநகர்களுடன் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அதற்கான திட்டங்கள் அரசிடம் இருக்கின்றனவா?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதற்கு மத்திய அரசினுடைய அனுமதி முதலில் தேவை. அவ்வாறு மத்திய அரசின் அனுமதி கிடைத்தாலும், அவர்களின் பண உதவி இல்லாமலும் செய்ய முடியாது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நாம் கேட்டிருந்தோம். மத்திய அரசு, முதலில் சேர்த்துக்கொள்வதாகச் சொல்லியது. ஆனால், இப்போது, வட மாநிலங்களில் துவக்கப்பட்டிருப்பதாகவும், தொடர்ந்து அதன் வெற்றிகரமான போக்கைப் பரிசீலித்து, இந்தப் பக்கத்திலேயும் செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். நாம், தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம்.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, அவ்வாறு விமானப் போக்குவரத்துப் பணி நடத்த ஆரம்பித்த பிறகு மாநிலத்திற்குத் தேவையான விமானங்களைப் பெற வேண்டும் என்றால், வெளிநாடுகளிலிருந்துதான் பெற வேண்டும். அவ்வாறு வெளிநாடுகளிலிருந்து விமானங்களைப் பெற ஏதேனும் திட்டம் இருக்கிறதா? அப்படி திட்டம் இருந்தால், அதில் மாநில அரசின் பங்கு என்ன? மத்திய அரசின் பங்கு என்ன? இதுகுறித்து தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, முதலிலே மத்திய அரசு அனுமதி தர வேண்டும். அதன்பிறகுதான் விமானங்களை எங்கு வாங்குவது, எந்த விமானங்களை வாங்குவது என்று யோசிக்க முடியும். மத்திய அரசின் அனுமதி இல்லாமல் விமானங்களை வாங்கவோ, விமானப் போக்குவரத்தை நடத்தவோ வாய்ப்பு இல்லை. மேலும் மத்திய அரசு பண உதவியும் கொடுத்தால்தான், அதைச் செய்ய முடியும். ஏனென்றால் விமானப் போக்குவரத்து அவ்வளவு இலாபகரமாக இருக்க வாய்ப்பில்லை. இலாபகரமாக நடத்துவது மிகவும் கடினம். இருந்தாலும் பொது



மக்களின் நன்மையைக் கருதி விமானப் போக்குவரத்தை நடத்துவதற்கான முயற்சிகளை மாநில அரசு தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறது. அதற்காக மத்திய அரசை வலியுறுத்திக்கொண்டிருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, விமானப் போக்குவரத்துப் பணி முக்கிய மாவட்டத் தலைமையிடங்களில் துவக்கப்படும்போது, ஊட்டி, சேலம் போன்ற இடங்களிலும் துவக்க இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், முன்பு திருச்சிராப்பள்ளிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே விமானப் போக்குவரத்து இருந்து வந்தது. அதை தற்சமயம் நிறுத்தி விட்டார்கள். இதுகுறித்து நான், மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. அசோக் கலாட் அவர்களுக்கு எழுதிக்கேட்ட போது, அவர்கள் அதற்குப் பதில் எழுதியிருக்கிறார்கள். அதில், அகில உலக விமானச் சட்டத்தின்படி, விமானங்கள் சென்றடையும் நாடுகள் சரிசமமான அளவில் விமானங்களை ஓட்ட முடியும் என்று எழுதியிருந்தார்கள். அதன்படி ஏர் லங்கா இந்தியாவில் திருச்சி, பம்பாய், சென்னை, திருவனந்தபுரம் ஆகிய இடங்களுக்கு விமானப் போக்குவரத்துப் பணியை நடத்துகிறது. ஆனால் ஏர் இந்தியா கொழும்புவிற்கு மட்டும்தான் விமானப் போக்குவரத்துப் பணியை நடத்துகிறது. எனவே, இந்த அரசு மீண்டும் திருச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே விமானப் போக்குவரத்துப் பணி தொடர, மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சேலத்தைப் பொறுத்தவரை, விமானப் போக்குவரத்து 'ரெகுலர் சர்வீஸ்' நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் மத்திய அரசு எப்போது அதை எடுத்துக்கொள்ளும் என்பது தெரியாது. மத்திய அரசு, சேலத்தில் விமானப் போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கோரி நம்மிடம் 200 ஏக்கர் நிலம் இலவசமாகத் தர முடியுமா என்று கேட்டிருந்தது. நாமும் அவ்வாறு 200 ஏக்கர் நிலம் இலவசமாகத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறோம்.

அடுத்து, திருச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் மீண்டும் விமானப் போக்குவரத்துப் பணியைத் தொடர மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் அனுப்பிய கடிதத்தைக் கொடுப்பார்களேயானால், அதையே அடிப்படையாக வைத்து மத்திய அரசை வலியுறுத்த நடவடிக்கை எடுக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, விமானப் போக்குவரத்துப் பணியை அனைத்து மாவட்டத் தலைமையிடங்களுக்கும் விரிவாக்கும்போது, தென்னாற்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரிலும் விமானப் போக்குவரத்துப் பணியை நடத்துவதற்கு அரசு முன்வருமா? தென்னாற்காடு மாவட்டத்திற்கு அருகில் பாண்டிச்சேரி மாநிலம் இருக்கிறது; நெய்வேலி இருக்கிறது. எனவே அங்கே நடத்தினால் மிகவும் வசதியாக இருக்கும்.

அவ்வாறு கடலூரில் நடத்துவதற்கு முடியவில்லை என்றாலும், தற்போது உளுந்தூர்பேட்டையில் விமானத்தளம் இருக்கிறது. அந்தத் தளத்தைப் பயன் படுத்திக்கொண்டு, அங்கே விமானப் போக்குவரத்துப் பணியை மேற்கொள்ள அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, கடலூரில் விமானப் போக்குவரத்துப் பணி தற்போதில்லை. உளுந்தூர்பேட்டையில் விமானத்தளம் இருப்பதால், அங்கே தொடங்குவதுகுறித்து ஆலோசிக்கலாம்.

திரு. அ. ப. சிவராமன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ஜெயச்சந்திரன் அவர்கள் சொன்னதுபோல, உளுந்தூர்பேட்டையில் ஏற்கெனவே விமானத்தளம் இருக்கிறது. எனவே, வருங்காலத்திலாவது இதுகுறித்துப் பரிசீலனைக்கு வருகிறபோது, உளுந்தூர்பேட்டையில் அல்லது கடலூரில் ஒரு பகுதியில் விமானத்தளம் அமைக்கும் செயற் குறிப்பை ஆய்விலே எடுத்துக்கொள்வார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மத்திய அரசு அனுமதிக்க வேண்டும், மத்திய அரசு தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும். ஒரு விமானப் போக்குவரத்துப் பணியைத் தொடங்குவதற்குப் பல வகைகளில் சிந்திக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு தொடங்கினால், இலாபம் கிட்டுமா என்பனவற்றையெல்லாம் பார்த்துச் செய்ய வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, எல்லாம் சரியாக வருமானால், நடவடிக்கை எடுக்கப்படும்.



(முற்பகல் 10.35)

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, காவல் துறையினர் பயன்படுத்துவதற்காக விமானங்கள் வாங்க இருப்பதாக அண்மையிலே அறிவிப்பு வந்திருக்கிறது. பயணிகள் போக்குவரத்து என்ற அடிப்படையில் விமானங்கள் வாங்கினால் சம்பிரதாயங்களும், சட்டதிட்டங்களும், மத்திய அரசிடம் இருந்து அனுமதி வாங்க வேண்டிய சூழ்நிலைகள் எல்லாம் இருக்குமேயானால், சுற்றுலாத் துறையில் சுற்றுலாப் பயணிகளுக்கென்று சிறப்பு விமானப் பயணத்தை நடத்துவதற்கு சட்டதிட்டங்கள் அனுமதிக்கிறதா? மாநில அரசினுடைய ஆளுகைக்கு உட்பட்டு, அதிகாரங்களுக்குட்பட்டு, அப்படிப்பட்ட வழிமுறைகள் இருக்குமேயானால் நாமும் பயன்படுத்திக் கொண்டு சுற்றுலாப் பயணிகள் விமானப் போக்குவரத்து நடத்துவதைப் பற்றி பரிசீலிக்கலாமல்லவா? அதுகுறித்து அமைச்சரவர்கள் ஏதேனும் கருத்து தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதுபற்றி சுற்றுலாத் துறையைக் கேட்டால், விளக்கமாகப் பதில் கிடைக்குமென்று கருதுகிறேன். ஆனால் எப்படியிருந்தாலும், அதிலே பயணம் செய்யக்கூடியவர்கள் பயணிகள்தான். சுற்றுலாத் துறையிலே அதை வாங்கி பயணம் செய்தாலும் சரி, அல்லது ரெகுலர் சர்வீஸாக நடத்தினாலும் சரி, அதிலே பயணிகள்தான் பயணம் செய்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமா, அதற்கு வாய்ப்பு இருக்கின்றதா என்பதையெல்லாம் பார்ப்பதற்காகத்தான் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே அதைப் பொறுத்தவரை, பயணிகளுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்ற அடிப்படையில் அவர்கள் அந்த முறைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிற காரணத்தால், எந்தத் துறையிலே செய்தாலும் அவர்கள் அனுமதி இல்லாமல் செய்ய முடியாது என்று நான் நினைக்கிறேன். அதைப்பற்றி பார்த்துத்தான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. லெட்சுமிகாந்தன் அவர்களின் கேள்வியில் இருந்து இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். பேருந்துகளுக்கு சுற்றுப் பயணத்திற்கென்று அனுமதி வாங்கிவிட்டு அவைகளை ஆம்னி பஸ்களாகப் பயன்படுத்துவதுபோல, சுற்றுலாப் பயணிகளுக்கென்று விமானத்தை வாங்கி ஆம்னி விமானமாகப் பயன்படுத்தினால் என்ன என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்களை அப்படிப் பயன்படுத்துவது நியாயமென்று அவர்கள் கருதுவாரே யானால், இதைச் செய்வதும் நியாயமாக இருக்கும். ஆனால் அரசைப் பொறுத்தவரை, இதை நியாயமென்று கருதவில்லை. எனவே எந்தக் காரணத்தைக் கொண்டும் அப்படித் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அரசு தயாராக இல்லை.

## பேருந்து வழித்தடம் 21-டி

* 83 வினா —திரு. மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, இந்திரா நகரிலிருந்து பாரிமுனை செல்லும் பல்லவன் போக்குவரத்துக் கழக தடம் என் 21-டி-ல் செல்லும் பேருந்துகளின் எண்ணிக்கையை, மேலும் அதிகரிக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

(உ) அப்பேருந்து தடத்தில், பெசன்ட் நகர் வீட்டுவசதி வாரிய காலனியிலிருந்து, பாரிமுனை வரை குறுகிய தூர (Cut Service) பேருந்து விடும்படி, 9—4—1985 அன்று அப்பகுதி மக்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) இவ்வாண்டு இறுதிக்குள் ஓர் பேருந்து கூடுதலாக விட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(உ) மற்றும் (எ) அம்மாதிரியான முறையீடு ஏதும் வரவில்லை; எனினும் காலை மற்றும் மாலை முறையே மூன்று வெட்டுப் பயணத்தடவைகள் பெசன்ட் நகரிலிருந்து இயக்கப்படுகின்றன.

திரு. மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: தலைவர் அவர்களே, குறிப்பாக இந்திரா நகரப் பகுதி, வட சென்னையில் மகாகவி பாரதியார் நகர் போன்ற பகுதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றுகிறவர்கள் அதிகமாக இருக்கிற பகுதிகளாக இருக்கின்றன. வாரத்தில் 5 நாட்கள் பணி என்ற நடைமுறை வந்ததற்குப் பிறகு, அந்தப் பகுதியிலே இருக்கிற பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகளும், அரசு





அலுவலர்களும் விரைவாகச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த இரண்டு பகுதிகளிலும் மின்சார இரயில் நிலையங்களும் இல்லாத சூழ்நிலையில், பல்லவன் போக்குவரத்துக் கழகம் அதிக பஸ்களை விட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே, 12 பேருந்துகள் அந்தப் பகுதிகளில் இயக்கப்படுகின்றன. சாதாரணமாக இன்னொரு பேருந்து தேவை என்று இருந்தால்தான், நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது வாரத்தில் 5 நாட்கள் வேலை நாட்கள் என்று குறைக்கப்பட்ட காரணத்தால், காலையிலேயிருந்து பயணிகள் வரத் தொடங்கி விடுகிறார்கள். எனவே அந்த அடிப்படையிலே தனியாக ஆய்வு செய்து கூடுதலாக வண்டிகள் தேவை என்று கருதினால், பஸ்கள் விடப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, கூடுதலாக ஒரு பஸ் இந்த மாத இறுதிக்குள்ளே, இந்த ஆண்டு இறுதிக்குள்ளே விடப்படுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூடுதலாக ஒரு பஸ் விடுவதற்கு ஆறு மாத காலமா? எவ்வளவு கஷ்டத்தோடு அந்த மக்கள் இருக்கிறார்கள்? விரைவிலே பஸ் விடுவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். 9—4—1985 மற்றும் 11—4—1985 ஆகிய இரண்டு நாட்களிலே பொதுமக்கள் சார்பிலே அரசுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. எனக்குக்கூட நகல் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் வரவில்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். குறைந்தது ஒரு மினி பஸ், பெசன்ட் நகர் வீட்டுவசதி வாரிய காலனியிலிருந்து அடையாறு பஸ் நிலையம் வரை விடவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். பெசன்ட் நகர், அடையாறு, மந்தவெளி, மைலாப்பூர், சாந்தோம், தி. நகர், சைதாபேட்டை ஆகிய இடங்களிலுள்ள பள்ளிக் கூடங்களில் மிக அதிகமான பிள்ளைகள் படிக்கிறார்கள், ஆகவே அவர்களுடைய வசதிக்காக 'பீக்' அவர்லேயாவது 21-டி, 23-ஏ, 23-டி, 47-ஏ ஆகிய 4 பேருந்துகள் காலை ஒரு தடவை, மாலை ஒரு தடவை விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு பேருந்து விடுவதற்கு 6 மாத காலம் தேவையா என்று மாண்புமிகு உறுப்பினர் இப்போது கேட்டார்கள். அவர்களுக்குத் தெரியும், இந்த அரசாங்கம் வந்த பின்பு எத்தனை பஸ்களை விட்டிருக்கிறது என்று. இந்த 7, 8 ஆண்டுக் காலத்திற்குள் நாங்கள் கூடுதலாக 5 ஆயிரம் பஸ்களை விட்டிருக்கிறோம்.

இந்த ஒரே ஒரு பேருந்து என்று சொன்னால், தாஜையதினமே விட்டுவிட்டுப் போய்விடலாம். இதுபோன்ற கோரிக்கைகள் பல இடங்களிலே இருக்கின்றன. ஆனால் இதை மட்டும் மேலவையிலே பேசிவிட்ட காரணத்தினாலே, இது ஒன்றுதான் என்பதுபோல் வெளியிலே சொல்லிக் கொண்டிருப்பது சரியாக இருக்காது. இந்தக் கோரிக்கை கூட இந்தக் கேள்வி கேட்ட பின்பு வந்திருக்குமோ என்னவோ எனக்குத் தெரியாது. அல்லது இந்தக் கேள்வி வருவதற்கு முன்னாலே இந்தக் கோரிக்கை வந்ததா என்றும் தெரியாது. நான் ஏற்கெனவே அவர்களுக்குச் சொல்லியதைப்போல, அங்கு இருக்கின்ற நிலைமைகளைப் பரிசீலித்து, கூடுதலாகப் பேருந்து தேவை என்று இருக்குமானால், கூடுதலாக விடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10.40)

*செல்வி ஆ. லீலாவதி:* தலைவர் அவர்களே, பள்ளிகளின் வேலை நேரமும், அலுவலகங்களின் வேலை நேரமும் ஒன்றாக இருப்பதால், பேருந்துகளில் மக்கள் நெரிசல் அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பே பள்ளிகளுக்குத் தனிப்பட்ட முறையில் பேருந்துகளைக் கொடுப்பதற்கு ஒரு திட்டம் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் இப்போதும் அமுலில் இருக்கிறதா? அப்படி இருந்தால். இதுவரை எத்தனை பள்ளிகள் அப்படிப்பட்ட பேருந்துகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:* எந்தெந்தப் பள்ளிகளில் தனியாகப் பேருந்து கேட்டார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எத்தனை பள்ளிகள் என்ற கணக்கு தற்போது என்னிடம் இல்லை. அப்படியே பேருந்துகளைப் பெற்றாலும்கூட, அத்தனை குழந்தைகளும் அந்தப் பேருந்தில் பயணம் செய்துவிட முடியும் என்று நம்ப முடியாது. எனவே தான் நெரிசலைத் தவிர்க்க நேரத்தை மாற்றி அமைப்பதுபற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே எதிர்காலத்தில் இந்த நெரிசல் தவிர்க்கப் பட்டுவிடும் என்று நம்புகிறேன்.

*டாக்டர் இரா. சனார்த்தனம்:* சென்னை நகரில் சுமார் 80 சதவீத மக்கள் பேருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே அவர்களின் வசதிக்காக நீண்ட தூரப் பேருந்துகள்—ரவுண்டு ரூட் திட்டம்—செயல்படுத்தப்படுமா? அதாவது இரண்டு பஸ்களில் ஏறி இறங்கிச் செல்லும் திட்டத்தைக் கொண்டு வந்தால், அதன் மூலம் ஜனநெரிசலைத் தவிர்க்கலாம். அடுத்து, ஹெல்மெட் போடுவதற்கு மறந்து போகிறவர்களின் வசதிக்காக அவர்களெல்லாம் தங்களின் ஸ்கூட்டர்களை ஸ்டேண்டில் நிறுத்திவிட்டு இப்படிப்பட்ட பேருந்தில் பயணம் செய்வதற்கும் இது வசதியாக இருக்கும். அடுத்து பள்ளிக் குழந்தைகள், ஆசிரியர்கள் பிரச்சினைபற்றிப் பேசும்போதெல்லாம் பொதுவாக சென்னை போன்ற நகர்ப்புறத்தில் உள்ள நிலைமைகளைப்பற்றி மட்டுமே ஆராயப்படுகிறது. என்னுடைய தொகுதியான, கோவை, நீலகிரி பெரியார் போன்ற மாவட்டங்களில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பள்ளி செல்லும் வசதியைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கும் தனியாகப் பேருந்துகளை விடுகிற யோசனை அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.





*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:* மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் நீண்ட தூரப் பேருந்துகளை விட வேண்டுமென்று கேட்டார்கள். அதற்குப் பிறகு ஏறி இறங்கிச் செல்லுகிற வசதி இருக்க வேண்டுமென்றும் கேட்டார்கள். இதில் எதை அவர் வேண்டுகிறார் என்பது எனக்குத் தெளிவாகப் புரியவில்லை. இருந்தாலும் நீண்ட தூரப் பேருந்துகளைப் பல இடங்களில் ஏற்கெனவே விட்டு வருகிறோம். அடுத்து, 'சென்னையை மட்டும் அதிகமாகக் கவனிக்கிறீர்கள். மற்ற இடங்களைப்பற்றிக் கவனிப்பதில்லை' என்பது சரியல்ல. எல்லா இடங்களிலும் பேருந்துகளைக் கொடுக்கிறோம். மற்ற இடங்களில் தனிப் பேருந்துகளை அதிகமாகக் கொடுக்க முடியாததற்குக் காரணம் இருக்கிறது. கிராமப்புறங்களில் 2 அல்லது 3 பேர்கள்தான் பள்ளிகளுக்கு வருகிறார்கள். பெருவாரியான மாணவர்கள் வராத காரணத்தால் இதைச் செய்ய முடியவில்லை. மேலும் அப்படிப்பட்ட பகுதிகளில் ஏற்கெனவே சாதாரணப் பேருந்து வசதிகள் இருக்கின்றன. எனவே இவைகளையெல்லாம் பார்த்துத்தான் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

*திரு. எல். ஜெயச்சந்திரன்:* சென்னை நகரில் இப்படி மக்கள் நெரிசலைத் தவிர்ப்பதற்காகத்தான் கடந்த ஆண்டு இங்கே போக்குவரத்துத் துறை டிரெய்லர் பஸ்களை கிண்டியிலிருந்து பாரி முனைவரை விடுவதற்கான திட்டத்தை அமுல்படுத்தியது. அதைப்போன்று புதிதாக சென்னை நகரில் வேறு பல டிரெய்லர் பஸ்களை விடுவதற்கான எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

*மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:* டிரெய்லர் பஸ்கள் 'ட்ரயல் பேசிஸ்'-ல் தான் விடப்பட்டன. சென்னையிலிருந்து அது இப்போது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அது இயக்கப்பட

வேண்டும் என்ற உணர்வில் அதைச் செய்து வருகிறோம். சென்னை நகரில் விடுவது சிரமமாக இருக்குமோ என்று பார்ப்பதற்காக முதலில் இங்கே விடப்பட்டது. ஆனால் அதற்கு இங்கே வரவேற்பு இருக்கிற காரணத்தால், தொடர்ந்து அதை இங்கே இயக்குவதற்காகக் கேட்டுக் கொண்டுள்ளோம். அதற்குரிய பேருந்துகள் கிடைத்த பிறகு அவை விடப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இந்தக் கேள்வி கேட்கப்பட்ட பிறகு, இந்த விண்ணப்பங்கள் வந்திருக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். இந்தக் கேள்வி கேட்டு நீண்ட காலமாகிறது. அதற்குப் பிறகு இப்போதுதான் விடையளிக்கப்படுகிறது. எனவே அதுபற்றிய தொடர்பான விண்ணப்பங்கள் பிறகு பெறப்பட்டிருந்தாலும்கூட, அவற்றையும் பரிசீலித்து இன்றைக்குப் பதில் சொல்லலாம். எனவே இனிமேலாவது இப்படிப்பட்ட முறையில் விடைகள் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் புதிதாக அங்கே பஸ்களை விடுவதற்கு வாய்ப்பில்லாமல் இருந்தாலும்கூட, மினி பஸ்களை சர்க்குலர் ரூட்டில் ஒரு மணிக்கு ஒன்று என்று விடுவதற்கு அரசு முன்வருமா ? கட் சர்வீஸ்களை விடுவதில் தாமதம் ஏற்பட்டாலும், 7-வது அவென்யூவில் உள்ள இந்தியன் வங்கி முன்பிருந்து கட் சர்வீஸ் விடலாம். அதையாவது அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எத்தனை கேள்விகளைக் கேட்கிறார் என்பது புரிகிறது. நிறைய கேள்விகளைக் கேட்பதால்தான் காலதாமதம் ஏற்படுகிறது. ஒரு வினா கேட்ட பிறகு அதற்கான பதில் கிடைத்தவுடன் பிறகு மீண்டும் கேள்வி கேட்டால், அதற்கு மீண்டும் ஒரு மாதம் தேவைப்படும். எதையும் நாம் முறைப்படி செய்ய வேண்டிய கட்டாயமிருக்கிறது. இதன் காரணமாகத்தான் காலதாமதம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களின் ஆலோசனையைக் கருத்தில் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். ஆனால் ஆலோசனை சொல்வது என்பது மிகவும் சுலபம். அதைச் செய்வது என்பது எவ்வளவு கடினமானது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். தற்போது ஓடிக் கொண்டிருக்கிற பேருந்தில் வசூலாகும் தொகை ரூ. 910 ஆனால் அதற்கான இயக்கச் செலவு ரூ. 1,229, எனவே இப்படிக் கூடுதலாகப் பேருந்து விடுகிறபோது செலவு அதிகமாகிறது. வருவாய் குறைகிறது. இதன் காரணமாக நட்டம் ஏற்படுகிறது. இதன் காரணமாக மொத்தத்தில்



நட்டம் ஏற்படுகிறது. நட்டம் ஏற்பட்டால் எப்படி நட்டம் ஏற்படுகிறது என்று கேட்கிறோம். மக்களுடைய வசதியைக் கருதி நடவடிக்கை எடுக்கிறபோது, சில சிரமங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைபபோல், அங்கேயிருக்கிற பயணிகளின் எண்ணிக்கையைப் பார்த்து அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Rapid Transit Project*

*84. *Q.* THIRU P. R. THOMAS. Will the Hon. the Minister for Housing be pleased to state :

(*a*) whether it has been estimated by the Central Government, that the Rapid Transit Project between Madras Beach Station and Luz would cost about Rs. 53.46 crores; and

(b) if so, the stage at which the matter stands ?

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி: (அ) ஆம்.

(இ) கட்டுமானப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. சென்னை கடற்கரை ரயில் நிலையத்திற்கும் பூங்கா ரயில் நிலையத்திற்கும் இடையேயான தரைமட்டப் பகுதியில் நில்வரங் மற்றும் சிறு பாலங்களுக்கானக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னேற்ற நிலையில் உள்ளன.

(முற்பகல் 10-45)

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, இந்த துரித போக்குவரத்து வண்டியானது தரை மட்டத்திலே போவதாக சில பத்திரிகைகளிலும், தரைக்கு மேலே பத்து அடி, பதினைந்து அடி உயரத்திலே போவதாக சில பத்திரிகைகளிலும், பாதாளத்திலே போவதாக சில பத்திரிகைகளிலும் செய்தி வந்திருப்பதால், இது குறித்து மக்களுக்கு பெருத்த குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இது குறித்து அமைச்சர் அவர்கள் விளக்கம் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி: நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிகைகளில் போட்ட செய்தியைத் தொடர்ந்து இப்படிப்பட்ட சந்தேகங்கள் வருகின்றன. இப்போதுள்ள திட்டத்தின் அடிப்படையில் சென்னை-கடற்கரையிலிருந்து மைலாப்பூர்-லஸ் வரை உள்ள மொத்த தூரம் 8.45 கி.மீ. இதில் 2.92 கி.மீ. தூரத்திற்கு தரை மட்டத்திலேயும், 5.52 கி.மீ. தூரத்திற்கு 18 அடி உயரமுள்ள பாலத்தின் மேலும் போகின்ற அளவில் இரயில்வே துறையினர் இந்தத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திரு. பா. ரா. தாமஸ்: இந்தத் திட்டம் எவ்வளவு விரைவிலே முடியவிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி: இப்போது வேலை துவங்கப்பட்டு படிப்படியாக முறையாக நடந்து வருகிறது. மத்திய அரசின் நிதி எவ்வளவு விரைவாக, எவ்வளவு அதிகமாகக் கிடைக்கிறதோ அந்த அளவிற்கு விரைவாக முடிக்கப்படும். மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ள இப்போதுள்ள திட்டத்தின் அடிப்படையில், 1990-ல் இந்தத் திட்டம் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இந்தப் பாதையில் மணிக்கு எத்தனை இரயில்கள் விடப்படும்? நெரிசலைக் குறைக்க இது எந்த அளவு பயன்படும் என்பது ஆய்வு செய்யப்பட்டிருக்கிறதா? இது மேலும் நீண்டு மகாபலிபுரம் வரையில் போகிற அளவிற்கு ஏதேனும் எதிர்காலத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி: இப்போது போடப்பட்டிருக்கிற திட்டத்தின் அடிப்படையில் ஒரு மணி நேரத்திற்கு 12 இரயில்கள் விடப்படும். ஒரு நாளைக்கு மொத்தம் 310 முறை விடப்படும். சென்னை-கடற்கரை நிலையத்திலிருந்து மைலாப்பூர்-லஸ் வரை செல்ல ரன்னிங்-டைம் 17 நிமிடங்கள் என்று குறிப்பிலே இருக்கிறது.

ஆரம்பத்திலே இந்தத் திட்டம் துவங்கப்பட்டபோது, சென்னையிலிருந்து திருவான்மியூர் வரை செல்ல மதிப்பீடு 150 கோடி ரூபாய். இது 1983-ல முடிவு எடுக்கப்பட்டது. இப்போதுள்ள விலைவாசி நிலையில் இது மேலும் அதிகமாகும். மகாபலிபுரம் வரையில் நீட்டிக்க வேண்டும் என்பதற்கு மத்திய அரசின் நிதி உதவி கிடைப்பது கடினமாக இருக்கும். இது நல்ல யோசனைதான். நிதி கிடைப்பதில் உள்ள காலதாமதத்தை வைத்து, முதற்கட்டமாக சென்னை-கடற்கரையிலிருந்து மைலாப்பூர்-லஸ் வரை போடலாம் என்றும், திருவான்மியூர் வரை செல்லுகிற திட்டத்தைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மற்றவைகளை 1990-க்குப் பிறகு பரிசீலனை செய்யலாம்.

திரு. ஏ. ஜே. தாஸ்: இந்தத் திட்டத்தை தரமணி வரைக்கும் நீட்டப் போவதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அப்படி தரமணி வரைக்கும் நீட்டிக்கும் திட்டம் இருக்கிறதா? இப்போதே இதற்கு 150 கோடி ரூபாய் ஆகும் என்று சொல்லப்படுகிறது. இன்னும் காலதாமதம் ஆவதால் பணச் செலவு மேலும் அதிகரிக்கும். ஆகவே இதைத் துரிதமாக முடிக்க திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி: நான் ஏற்கெனவே இந்த இரயில் எங்கேயிருந்து எது வரையில் செல்லும் என்ற விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். சென்னை-கடற்கரையிலிருந்து மைலாப்பூர்-லஸ் வரை 1983 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் 53 கோடியே 46 இலட்சம். இப்போது 1985 ஆக இருப்பதால், கொஞ்சம் நிதி அதிகமாகும் சூழ்நிலை உருவாகும். மற்ற விவரங்கள் இப்போது என்னிடத்திலே இல்லை. மேலும் நீட்டிக்கிற திட்டம் தற்சமயம் இல்லை.

திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான பதிலைத் தந்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற மாவட்டங்களில் இதுபோன்ற மேம்பாட்டுத் திட்டங்களை வருங்காலத்தில் அரசு நிறைவேற்றவிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி: சென்னையைப்போல் போக்குவரத்து நெருக்கடி இருக்கின்றது என்ற விவரங்கள் தெரிந்த பிறகு, அப்படிப்பட்ட திட்டங்கள் தமிழகத்தின் வேறு பகுதிகளுக்குத் தேவையென்றால், அதற்குப் பிறகு பரிசீலிக்கப்படும்.

## *Insurance Scheme for Huts and Dwellings.*

* 85 *Q.*—THIRU S. J. SADIQ PASHA: Will the Hon. the Minister for Housing be pleased to state—

(*a*) whether it is a fact that the Government are actively considering an Insurance Scheme to cover huts and dwellings in Madras City, which are being frequently ravaged by fire, especially in peak summer; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி: (அ) மற்றும் (இ) விவர அறிக்கை @ தனியே அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-50)

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படிக்க எனக்கு நேரமில்லை. அதனால் இப்போது என்னால் துணை வினா கேட்க முடியவில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இப்படி வீடு எரிந்த பிறகு பணம் தருவதைக் காட்டிலும், அவைகளை 'டைட்ரூபின்' முறையாக அமைத்து, அதற்கு

@ 132 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

உதவி செய்கின்ற எண்ணம் அரசுக்கு இருக்கின்றதா? அப்படிச் செய்வதன் மூலம் அவர்கள் குடிசைகளை அப்படி மாற்றிக்கொள்வார்கள். அதற்கு அரசு உதவி செய்யுமா? அப்படிச் செய்வதால் எரிவதைத் தடுக்கலாம். அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** டூரிங் தியேட்டர்களில் இப்போது 'லைட் ரூபிங்' என்ற முறையில் மாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். சென்னையில் குடிசைகள் அதிகமாக இருப்பதால். இப்படிப்பட்ட திட்டங்களை நிதி நிலைமையை அனுசரித்து பரிசீலிக்கலாம். இதைப்பற்றி முடிவு செய்த பின்பு, இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு மேல்லைவத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்.

### (1) தனி உறுப்பினர் அலுவல்களுக்கு நாள் ஒதுக்குவது குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மேலவை விதிகளிலே தனி உறுப்பினர்கள் அலுவலுக்காக சனிக் கிழமைக் கூட்டத்தை ஒதுக்குவது என்று விதி இருக்கின்றது. அத்தியாயம் 6, விதி 23-ல் அப்படி இருக்கின்றது. தொடர்ந்து கூட்டம் பல மாதங்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. தனி உறுப்பினர் அலுவலுக்கான தீர்மானத்திற்கான முன்னறிவிப்பை நான் 20—3—1985 அன்று கொடுத்திருக்கின்றேன். சனிக்கிழமை என்று தற்போது குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது சனிக்கிழமை அவைக் கூட்டம் கிடையாது. ஆனால் விதியிலே சனிக்கிழமை 'தனி உறுப்பினர் அலுவல்' என்று இருக்கிறது. நான் கேட்டுக் கொள்வது, தனி உறுப்பினர் அலுவல் பற்றிய மேலவை விதி மாற்றம் செய்யப் பட இருக்கின்றதா அல்லது மாற்று ஏற்பாடு ஏதாவது செய்யப்பட்டிருக்கின்றதா? நான் தந்திருக்கின்ற தனி உறுப்பினர் அலுவல் தீர்மானம் ஏற்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** விதிகள் மாற்றப்பட இருக்கின்றன. ஆனால் அதற்கிடையிலே அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் தேதி நிச்சயிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள தனி உறுப்பினர் தீர்மானம் கவனத்தில் இருக்கின்றது. அது எடுத்துக்கொள்ளப் படும்.



### (2) பல்வேறு குழுக்களிலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விலகிக் கொண்டதாக செய்தி வந்தது குறித்து.

**திரு. அ. ப. சிவராமன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பல்வேறு குழுக்களிலிருந்து பல காரணங்களுக்காக விலகிக் கொண்டதாக பத்திரிகையிலே செய்தி வந்ததைப் பார்த்தேன். அது தொடர்பான விளக்கங்கள் அவைக்கு வந்திருக்கின்றனவா? மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு வந்திருக்கின்றனவா? அதைப்பற்றி அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஏற்கெனவே வந்திருக்கிறது. இங்கேயிருந்து அவர்களுக்கெல்லாம் பதில் எழுதி அவர்கள் அதைத் திரும்பப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். மேலவை தனியானது, சுதந்திரமானது. அங்கே எடுத்த நடவடிக்கைக்குத் தொடர்பு கிடையாது என்பதை நினைவுபடுத்தி பதில் எழுதியனுப்பியிருக்கிறேன். அவர்களிடமிருந்து பதில் வந்த பிறகு அதுபற்றிச் சொல்லலாம்.

## 1. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது:

**ஜூலை.**

| | | |
|---|---|---|
| 11 | — | தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| 12 | — | 1. அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். 2. பழங்குடியினர், ஆதிதிராவிடர் மற்றும் பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது விவாதம். |
| 13 & 14 | — | விடுமுறை. |
| 15 | — | பழங்குடியினர், ஆதிதிராவிடர் நலன் மற்றும் பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது தொடர்ந்து விவாதம். |
| 16 | — | நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவினை ஆய்வு செய்தல். |
| 17 மற்றும் 18 | — | அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |

**மேலவை வழக்கம்போல் காலை 10-00 மணிக்குக் கூடும்.**

## 4. கவன ஈர்ப்பு.

(1) திருச்சி நகரையொட்டி உள்ள மணிகண்டம், அந்தநல்லூர், திருவெறும்பூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படும் நிலையில் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் வீட்டு வாடகைப்படி வழங்கப்படாதது குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"திருச்சி நகரையொட்டி உள்ள மணிகண்டம், அந்தநல்லூர், திருவெறும்பூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஊழியர்கட்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படும் நிலையில் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் வீட்டு வாடகைப்படி வழங்கப்படாததால் ஏற்பட்டுள்ள அதிருப்தியைக் குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் அந்த வீட்டு வாடகைப் படியினை ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழங்குமாறு 23—6—1981-லே ஆணையிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே அந்தப் பணத்தினை ஊராட்சி ஒன்றியமே செலுத்த வேண்டும் என்று குறிப்பு இருக்கின்ற காரணத்தினாலே, அரசு ஊழியர்களுக்கு என்று தனியாகப் போடப்படாத காரணத்தினாலே, அந்த கருவூலத்திலே மறுக்கப்பட்டு அவர்களுக்கு அந்தப் படி வழங்கப்படாத நிலை இருக்கிறது. இது 1981-லே போடப்பட்ட ஆணை. இப்போது 1985. நான்கு ஆண்டுகள் சரியாக ஆகின்றன. இந்த 4 ஆண்டுகள் வரையிலே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படாமல், இந்தத் துறை மிகவும் மெத்தனமாக இருக்கிறது என்று இதிலிருந்து தெரிய வருகிறது. ஆக 4 ஆண்டுகளுக்குப் பின்னாலே ஒரு கவன ஈர்ப்புத்

---

@ 134 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தீர்மானம் கொண்டு வந்தபோது, இதற்குப் பதில் அளிக்கின்ற நேரத்தில் அதை முடித்துவிட்டு, 'அதை முடித்துவிட்டோம்' என்று சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இப்போது அது முடிக்கப்படவில்லை. பரிசீலனையில் இருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. இந்தப் பரிசீலனை எப்போது முடியும்? எப்போது அவர்களுக்கு விடிவு காலம் ஏற்படும் என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-55)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, அனாவசியமான காலதாமதத்தைத் தவிர்த்து, விரைவிலே தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று அதிகாரிகள் அறிவுறுத்தப்படுவார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, இப்போது வேறு ஒரு மிகப் பெரிய ஆபத்து வந்திருப்பதாகச் செய்தி தெரிகிறது. இது மறுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களாக இல்லாமல், அவர்கள் அரசு ஆசிரியர்களாக மாற்றப்பட்டதால், தனி ஆணை வேண்டுமென்று சொல்லப்பட்டது. இதுவரையில் இது தரப்படவில்லை. இப்போது ஒரு கருத்து அரசுத் தரப்பிலே சொல்லப்படுகிறது. அரசு ஊழியர்களாக்கப்பட்ட அவர்கள் மீண்டும் ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கருத்துக்குப் பல்வேறு தரப்புகளிலிருந்து எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது என்றாலும்கூட, இந்தக் காலதாமதம் நீடித்துக்கொண்டே இருந்தால், அந்த மாற்றம் ஏற்பட்ட பிறகு, இதைக் கொடுப்பதிலே சிக்கல் ஏற்படுமே? அப்படி மாற்றம் செய்யப்படுமென்றால், அந்தத் தேதிக்கு முன்னால் இந்தப் பணத்தை பட்டுவாடா செய்ய துரித நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்படி மாற்றங்கள் ஏற்படுவதே தாமதத்திற்கு ஒரு காரணமாகும். ஆகவே இந்த மாற்றங்கள் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் இந்த உரிமைகள் ஆசிரியர்களுக்குக் கிடைக்க காலதாமதமின்றிச் செயல்பட வேண்டுமென்று உரிய அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளலாம்.

## 2] அரசின் அங்கீகாரம் பெறாமல் துவக்கப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"அரசின் அங்கிகாரம் பெறாமல் வியாபார நோக்குடன் துவக்கப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளினால் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து.".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஒரு விளக்க அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, அங்கீகாரம் பெறாமல், வியாபார நோக்குடன் நடத்தப்படுகின்ற இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் தமிழ் நாட்டில் மிக முக்கியக் கல்விப் பிரச்சினையாகவும் மாணவர்கள்-பெற்றோர்கள் பிரச்சினையாகவும் வளர்ந்திருக்கிறது. இதற்கு வழிகாட்டியாக இருந்தது கர்நாடக மாநிலம். இப்படிப்பட்ட பயிற்சிப் பள்ளிகளை கர்நாடக மாநிலம் துவக்கியதை முன்மாதிரியாக வைத்து நம்முடைய மாநிலத்தில் ஆரம்பித்திருக்கிறார்கள். இங்கே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஏராளமாகத் தேவைப்படுகிறார்கள். இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அதனால் மாணவர்களும் இப்படிப்பட்ட போலி நிறுவனங்களை நம்பி ஏமாறுகிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட அறிக்கையில் மைனாரிட்டி நிறுவனங்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மைனாரிட்டி அல்லாதவர்கள்கூட இப்படிப் பட்ட கல்வி நிறுவனங்கள் ஆரம்பித்துள்ளது சம்பந்தமான பத்திரிக்கைத் துண்டுப் பிரசுரங்களை வைத்திருக்கிறேன். அனைத்துப் பிரச்சினைகளாலும் அதிகமாகப் பாதிக்கப்படுகிறவர்கள் ஒட்டுமொத்தமாக மாணவர்கள்தான். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால், இரண்டு வழிகளில் அரசு முடிவு செய்யலாமென்று கருதுகிறேன். ஒன்று, ஏற்கெனவே பல பயிற்சிப் பள்ளிகளை மூடிவிட்டோம். அரசுப் பயிற்சிப் பள்ளிகளை மூடிவிட்டோம், தேவையில்லாததால். இப்போது தேவை இருக்கின்ற காரணத்தால், அதை மீண்டும் துவக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பிரிவிலே இடைநிலை ஆசிரியர் பயிற்சியை அளிக்கலாம். அந்த

---

@ 135 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



வாய்ப்புக்களை அளித்தால், ஏழை எளிய மாணவர்கள் பல கல்வி நிறுவனங்களை நம்பி ஏமாறாத நிலைமை ஏற்படும். அவர்கள் கோர்ட்டிலே சென்று வாதாடி, வெற்றி பெறலாம். இப்படிப்பட்ட வாய்ப்புகளைத் தருவதால், மாணவர்களைக் காப்பாற்றலாம். இந்தக் கருத்து குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து, நடப்பு ஆண்டிலேயே அதை அறிவிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ் நாட்டில் பல்வேறு தனிப்பட்டவர்கள் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைத் தாங்களாகவே துவக்கி, அனுமதி கேட்கின்றார்கள். நாம் அனுமதி மறுத்தாலும், அதைத் தொடர்ந்து நடத்துகிறார்கள் அல்லது உயர்நீதி மன்றம் போன்ற வழக்கு மன்றங்களுக்குச் செல்கிறார்கள். அரசைப் பொறுத்தமட்டில், தனிப்பட்டவர்கள் யாரும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆரம்பிப்பதை ஆதரிக்கவில்லை. அந்த மாதிரி ஆரம்பிக்கக்கூடாது என்று அரசு சொல்லி வருகிறது. அப்படி ஆரம்பித்தால், அவர்களுக்கு அனுமதி தருவதில்லை என்ற முடிவிலேதான் அரசு இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதுபோன்ற தனிப்பட்டவர்கள் சிலர் வியாபார நோக்குடன் ஆரம்பித்து, இதிலே மாணவர்கள் போய் சேர்ந்து, பணத்தை இழக்கும் நிலையில் இருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் அரசு அனுமதி தருவதில்லை என்பது தெரிந்திருந்தும், அதே நேரத்திலே தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை ஆரம்பிக்கிறார்கள் என்றால், அது மக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் ஒரு நிலைதான் என்பதைத் தெளிவாக எடுத்துக்

(முற்பகல் 11-00)

காட்டுகிறது. அப்படிப்பட்டவர்கள்மீது மோசடி செய்கிறவர்கள் என்கிற அளவில் கிரிமினல் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு சிந்தித்துக்கொண்டிருக் கிறது. அப்படிப்பட்டவர்கள்மீது இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். நம்முடைய தேவையைப் பொறுத்து ஆசிரியர்கள் எவ்வளவு பேர் வேண்டும் என்கிற விவரங்களை சேகரித்துக்கொண்டிருக்கிறோம். அதோடு கூட இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஆசிரியர் பயிற்சிக்கு நாம் ஆட்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி அளித்துக்கொண்டிருந்தோம். சென்ற ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுத்து பயிற்சியளிக்க அனுமதி யளித்திருக்கிறோம். அந்த வகையில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக அதிகரித்திருக்கிறோம். இதற்கு மேலும் ஆசிரியர்கள் தேவையென்றால், அரசு தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும். மேலும் 11, 12 ஆம் வகுப்புகளில் தொழிற் கல்விப் பிரிவு என்று இருப்பதால், அதற்காக தனியாக ஆசிரியர் பயிற்சி என்கிற அளவில் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று மேல்நிலைக் கல்வி பற்றிய குழுவினுடைய அறிக்கையில்,

அதாவது டாக்டர் லட்சுமணசாமி முதலியார் கமிஷன் அறிக்கையில் குறிப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையை நாம் பின்பற்றும் போதுகூட, இதற்காக தனியாகப் பயிற்சி நிலையங்கள் தேவையில்லை. நாமே பரவலாக ஆங்காங்கே ஹையர் செக்கண்டரி பள்ளிகளிலேயே ஆசிரியர் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்து, அங்கேயே சிறப்பான முறையில் பயிற்சி அளிக்கலாம். விரைவில் இதுபற்றி உரியவர்களைக் கலந்தாலோசித்து முடிவு மேற்கொள்ளப்படும். எந்த வகையிலும் தனிப்பட்டவர்களை அனுமதிப்பதை அரசு எதிர்க்கிறது. அவர்கள் தனிப்பட்டவர்கள் என்கிற பெயரில் மோசடி செய்வதால் அவர்கள்மீது போலீஸ் நடவடிக்கை எடுக்கப்படும். சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இருக்கின்ற உரிமையை அவர்கள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்று அரசு பல்வேறு சந்தர்ப்பங்களில் உணர்ந்திருப்பதால், சிறுபான்மையினரால் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகள்பற்றி அரசு திட்டவட்டமாக முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கொடுத்திருந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே விரிவாக பதில் கொடுத்தார்கள். என்னைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்கிறேன். சிறுபான்மையினர் என்கிற போர்வையில் இன்றைக்கு வியாபார நோக்குடன், சிலர் மோசடி செய்யும் வகையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நடத்துகிறார்கள். அரசு நல்லெண்ணத்தில் சிறுபான்மையினருக்குச் சலுகைகள் கொடுக்கிறது. அண்மையில் இந்தப் பயிற்சிப் பள்ளிகளின் மூலமாக இந்துக்களையும், முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களாக மாற்றிக்கொண்டிருந்தார்கள். இப்படி மோசடி செய்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்படி தனிப்பட்டவர்களிடம் பயிற்சி பெற்று வருகிறவர்களை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு பதிலாக தமிழகத்தில் ஏராளமான படித்த பட்டதாரி இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்களே, அவர்களையெல்லாம் இடைநிலை ஆசிரியர்களாகப் போட்டால் கல்வியின் தரமும் உயரும், வேலைவாய்ப்பு அளித்தது போலவும் இருக்குமல்லவா? இதுபற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து பதிலறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வேலையில்லாத படித்த பட்டதாரிகளை, இடைநிலைப் பயிற்சி முடித்து ஆசிரியர்களாகப் போடுகின்ற பணியிடங்களில் நியமிப்பதுபற்றி அரசு பரிசிலித்துக்கொண்டிருக்கிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களே இல்லை என்கிற நிலை வந்தால், அவர்களைவிட உயர் கல்வித் தகுதி பெற்றிருக்கின்ற பட்டதாரிகளை நியமிப்பதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் சிறுபான்மையினர் என்கிற பெயரால் கல்வி ஸ்தாபனங்களில் பயிற்சியளிக்கும் நிலையும், மோசடி செய்யும் நிலையும் இன்றைக்கு நாட்டிலே இருக்கிறது. இதுபற்றி நடவடிக்கை எடுக்க அரசு பரிசிலித்துக்கொண்டிருக்கிறது. அதோடுகூட வேறு மாநிலங்களில் இருந்து வருகிற நிலைமையையும் தெரிந்து, அந்தவகையில் மோசமான நிலைமைகளை மாற்றியமைக்கிறோம். எப்படி இருந்தாலும், பெரும்பான்மையினராக இருக்கின்ற சமுதாயத்தில் இருக்கும் உரிமைதான் சிறுபான்மையினராக இருக்கும் சமுதாயத்தினருக்கும் இருக்க வேண்டும். ஆனால் அதற்கும் அதிகமான உரிமையை வைத்துக்கொண்டு, அதையும் தவறாகப் பயன்படுத்தும் போக்கை கட்டுப்படுத்தும் வகையில் இந்த அரசு விரைவில் தக்க முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அரசின் தீர்மானங்கள்.

### (1) முன்னாள் சட்டமன்ற மேலவைச் செயலாளருக்குப் பாராட்டு.

***மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டமன்ற மேலவைச் செயலாளராக 6—10—1976 முதல் 30—6—1985 வரை சிறப்புற பணியாற்றியவரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளராக 1—7—1985 முதல் பொறுப்பேற்று இருப்பவருமான திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்., அவர்கள் தமது நீண்ட கால பணி அனுபவம் காரணமாக, சட்டமன்ற சிறப்புரிமைகளையும், மரபுகளையும், விதி முறைகளையும், சட்ட நுணுக்கங்களையும் அவைத் தலைவருக்கும், அமைச்சர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், முன்னுதாரணத்துடன் எடுத்து விளக்கிய பாங்கினையும், மிகச் சிறப்பாகவும், பாராட்டத்தக்க வகையிலும் நிதானப் போக்குடனும் கடமைகளை நிறைவேற்றும்போது காட்டிய ஆர்வத்தைக் கண்டு மேலவை தனது உளங்கனிந்த நல்வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவிப்பதுடன், அவர் ஏற்றிருக்கும் புதிய பொறுப்பில் வெற்றி பல பெற்றிட மேலவை நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது என்பதனை அவருக்கு தெரிவிக்குமாறு மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களை இவ்வவை கேட்டுக்கொள்கிறது".

[திரு. இராம. வீரப்பன்] [1985 ஜூலை 11

(முற்பகல் 11-05)

என்ற இந்தத் தீர்மானத்தை இந்த அவையின் சார்பில் நான் முன் மொழிவதில் மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய சட்டமன்ற மேலவைக்கு, ஆணையர்-செயலாளராக இருந்த திரு. சி. கு. இராமசாமி அவர்கள் இப்போது ஓய்வு பெற்றுவிடவில்லை என்றாலும், கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்த அவையில் தங்களுடைய சுதந்திரத்திற்குக் கட்டுப்பட்டிருக்கின்ற ஒரு துறையினுடைய செயலாளராகவும், சென்ற ஆண்டு முதல் ஆணையர்-செயலாளராகவும் இந்த அவைக்கு மிகச்சிறந்த பணியாற்றிக் கொண்டிருந்தவர், இப்போது சட்டமன்றப் பேரவையின் ஆணையர்-செயலாளராகச் சென்றிருக்கிறார்கள்.

ஆகவே நம்மைப் பொறுத்தவரையில், இந்த அவையைப் பொறுத்த வரையில், அவருடைய பணி நமக்கு சட்டபூர்வமாக விடுவிக்கப்பட்டிருக்கிறது என்கின்ற அந்த அடிப்படையில்தான், நம்முடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். இதற்கு முன்பு இந்த அவையில் பணியாற்றிய செயலாளர்களுக்குப் பாராட்டுரைகள் வழங்கிய மரபும் இங்கே கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக அரசுத் துறையில் ஆணையர்-செயலாளர்களாக இருப்பவர்களுக்கில்லாத, அல்லது தேவைப்படாத பல சிறப்புக்கள், பொறுப்புக்கள் இந்தச் சட்டமன்றத் துறைகளில் பணியாற்றுகின்ற செயலாளர்களுக்குத் தேவைப்படுகின்றது. காரணம், இங்கே பல்வேறு உறுப்பினர்கள் அல்லது அமைச்சர்கள், இவர்களிடையே நடக்கின்ற விவாதங்கள், பல்வேறு நேரங்களில் பல உணர்ச்சிகளுக்குட்படுத்தப்பட்டு, கருத்துக்கள், விவாதங்களாக உருப்பெற்று, சில நேரங்களில் கடுமையான விவாதங்களாக மாறி, மோதலாக ஏற்படுகின்ற சூழ்நிலையும் ஜனநாயகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற மரபாக உள்ளது. அப்படிப்பட்ட நேரத்தில், அவைத் தலைவர் அவர்கள் மிகத்தெளிவான தீர்ப்புக்களை, சட்ட ரீதியான தீர்ப்புக்களை, சில நேரங்களில் மரபுகளை ஒட்டிய தீர்ப்புக்களை, சில நேரங்களில் தலைவருக்கே உரிய அதிகாரத்தின் அடிப்படையில் தீர்ப்புக்களை வழங்குகின்ற அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளை அடிக்கடி சந்திக்கவும், மிகச் சாமர்த்தியமாக அவைகளைத் திறம்பட நிறைவேற்றவும், இந்த சட்டமன்றத் துறையில் பணியாற்றுகிற செயலாளர்களுக்கு அவசியம் ஏற்படுகிறது.



1985 ஜூலை 11] [திரு. இராம. வீரப்பன்]

ஆகவேதான், இந்தத் துறையில் பணியாற்றுகிற செயலாளர்கள் மிகுந்த பொறுமையுணர்ச்சியோடும்; அனுபவங்கள் அல்லது அவர்கள் கற்றறிந்த சட்ட நுணுக்கங்கள் அல்லது மரபுகள், பல்வேறு அவைகளின் நடவடிக்கைகள், இவைகளையெல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டு, அவசியமான நேரத்தில் இந்த அவையில் உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும், இவைகளுக்கு மேலாக சில நேரங்களில் தலைமையேற்றிருக்கிற அவைத் தலைவருக்கும் அவர்கள் வழி காட்டுகிற, ஆலோசனை கூறுகிற பொறுப்பைக்கூட ஏற்றுக் கொள்கிறார்கள். அப்படி வழிகாட்டுகிற அப்படிப்பட்ட நேரத்தில், இந்த அவையின் மரபை பாதிக்காத அளவுக்கு, அவையை அமைதியாக நடத்து வதற்கும் பெரிய அளவில் உதவிகரமாக அவர்களின் செயல்கள் அமைகின்றன. அப்படிப்பட்ட பணியை நிறைவேற்றுவதில், திரு. சி. கே. இராமசாமி அவர்கள் மிகச் சிறந்தவராக விளங்கினார்கள்.

அவர்கள் எப்போதும் அமைதியாக இருப்பவர், உணர்ச்சி வசப்படாதவர். அவையில் உறுப்பினர்கள் உணர்ச்சிகளைக் கொட்டிக் கொண்டிருந்தாலும், தனக்கே உரிய அமைதியோடு, அவையில் அமர்ந்து வழிகாட்டுகிற, ஆலோசனை வழங்குகிற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள். முப்பது ஆண்டுகளாக அரசுத் துறையில், சட்டமன்றத்தில், பணியாற்றுகிற அவர், நான்காண்டுக் காலம் சார்புச் செயலாளராகவும், நான்காண்டுக்காலம் துணைச் செயலாள ராகவும், எட்டு ஆண்டுக்காலம் செயலாளராகவும் ஒரே தலைவரின்கீழ் பணியாற்றி, ஓராண்டுக்காலம் ஆணையர்-செயலாளராக இங்கே தங்களின்கீழ் பணியாற்றி வந்த பெருமையையும் பெற்றுக் கொண்டிருப்பவர் அவர். எந்த

(முற்பகல் 11-10)

உறுப்பினரிடத்திலேயும் அவர் கடிந்து கொண்டு அல்லது முகம் கோணி தன்னுடைய வெறுப்புகளைக் காட்டாதவாறு அல்லது அவர்களுடைய மனதிலே வருத்தத்தை ஏற்படுத்தாதவாறு நடந்துகொள்வதில் மிகச்சிறந்த பண்பாளராக, திறமையாளராக விளங்கியவர். அவர் வேறொரு அவைக்கு—சட்டமன்றப் பேரவைக்கு—செயலாளராகச் சென்றிருப்பதை நாம் மகிழ்வோடு பாராட்டி வாழ்த்துகிறோம்.

இந்த அவைக்குப் புதிதாக வந்திருக்கிற செயலாளர் திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள் அவர்களையும் அவையின் சார்பிலே வரவேற்கிறேன். இவரும் முப்பது ஆண்டுகாலம் சட்டமன்றத் துறையிலே அனுபவத்தைப் பெற்றிருப்பவர். அவரையும் வரவேற்கிறேன். திரு. சி. கு. இராமசாமி அவர் களுக்கு இந்த அவையினுடைய வாழ்த்துக்களை, பாராட்டுக்களைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நம்முடைய அவையில் கடந்த ஒன்பது ஆண்டு காலமாகத் தொடர்ந்து செயலாளராக இருந்த திரு. சி. கு. இராமசாமி அவர்கள் பேரவையின் செயலாளராகச் சென்றிருக்கிறார்கள். இவ்வளவு காலம் பணியாற்றிய அவருக்கு நாம் மனநிறைவு கொள்ளும் வகையிலே அவையின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ள அவையின் முன்னவர் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார். நம்முடைய செயலாளராக இருந்த திரு. சி. கு. இராமசாமி அவர்கள், பதவி வகித்த ஒன்பது ஆண்டு காலத்திலே, ஒரு சந்தர்ப்பத்திலேகூட ஒரு விஷயத்திலேகூட, நான் கொஞ்சம்கூட சலிப்பு அடையும்படியாகவோ அல்லது எரிச்சல் அடையும்படியாகவோ நடந்து கொண்டதேயில்லை. எந்த உறுப்பினரும் என்னிடம் வந்து செயலாளர்பற்றிப் புகார் கூறவோ, நியாயமான முறையில் தாங்கள் கேட்ட தகவலைத் தர மறுத்ததாகவோ அல்லது தாங்கள் கேட்ட தகவலைத் தவறாகத் தந்துவிட்டார் என்றோ புகார் கூறியதில்லை. அவ்வளவு சிறப்பாகப் பணியாற்றிய அவரை நாம் பாராட்டுவது நியாயம். அவ்வாறு பாராட்டைப் பெறும் தகுதி அவருக்கு உண்டு. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல, நான் துணைத் தலைவராகவும், தலைவராகவும் பத்தாண்டுகளுக்குமேல் இந்த அவையில் இருந்திருக்கிறேன். அதிலே ஒன்பது ஆண்டுகள் அவர் இங்கே செயலாளராகப் பணியாற்றியிருக்கிறார். என்னைப் பொறுத்தவரையில், அவர் செயலாற்றிய காலத்தில், அவர் குறித்து ஆண்டு இறுதியிலே அவரைப்பற்றிய குறிப்புகளைக் கொடுத்த நேரத்திலே, ரொம்ப மனநிறைவோடு செய்திருக்கிறேன்.

அவை முன்னவர் அவர்கள் சொன்னதுபோல, இங்கிருந்து அவர்கள் போய்விடவில்லை. அடுத்த கட்டிடமான பேரவைக்குத்தான் சென்றிருக்கிறார். இருந்தாலும் நம்மிடமிருந்து முறைப்படி அவர் விலகுகிறார். இடையில் வாய்ப்பு நேர்ந்தால், இடைக்காலமாகக்கூட அவர் வந்துபோகிற சந்தர்ப்பம் இருக்கும். இருந்தாலும் இங்கு பணியாற்றிய அவரை நாம் பாராட்டுவது மிகவும் அவசியமாதலால், இந்தப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வோம். அவர் முற்றிலும் ஓய்வு பெற்ற நிலையாக இருந்தால், அவருக்கு அவை முழுவதுமே பாராட்ட நேரம் தந்திருப்பேன். அவர் இன்னொரு அவைக்குத் தான் போயிருக்கிறாராதலால், அவை முன்னவர் அவர்களுடன் நானும் என்னுடைய மனப்பூர்வமான பாராட்டுதல்களை அவையின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அவையிலுள்ள ஒவ்வொரு கட்சியினரும், ஒவ்வொரு உறுப்பினரும் இதை மனமுவந்து ஆதரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.





தீர்மானத்தை அவையின் முடிவிற்கு விடுகிறேன். அவை முன்னுள்ள தீர்மானம் :—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவைச் செயலாளராக 6—10—1976 முதல் 30—6—1985 வரை சிறப்புற பணியாற்றியவரும், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைச் செயலாளராக 1—7—1985 முதல் பொறுப்பேற்று இருப்பவருமான திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்., அவர்கள் தமது நீண்டகால பணி அனுபவம் காரணமாக, சட்டமன்ற சிறப்புரிமைகளையும், மரபுகளையும், விதிமுறைகளையும், சட்ட நுணுக்கங்களையும் அவைத் தலைவருக்கும், அமைச்சர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், முன்னுதாரணத்துடன் எடுத்து விளக்கிய பாங்கினையும், மிகச் சிறப்பாகவும், பாராட்டத்தக்க வகையிலும் திறனட்போக்குடனும், கடமைகளை நிறைவேற்றும்போது காட்டிய ஆர்வத்தைக் கண்டு, மேலவை தனது உளங்கனிந்த வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவிப்பதுடன், அவர் ஏற்றிருக்கும் புதிய பொறுப்பில் வெற்றி பல பெற்றிட மேலவை நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது என்பதனை அவருக்கு தெரிவிக்குமாறு மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களை இவ்வவை கேட்டுக்கொள்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

(உ) தொழில் கொள்கைகளும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தொழில் கொள்கைகளும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என முன்மொழிகிறேன்.

---

@ 137 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தொழில் கொள்கைகளும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" பத்து உறுப்பினர்கள் பேச பெயர் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு பேரும் பேச வேண்டிய கடமையும் இருக்கிறது; பேசுவதற்கு உரிமையும் இருக்கிறது. கடமையையும் உரிமையையும் காலத்தோடு செய்தால் நேரத்தோடு முடியும். வள்ளுவர், பேச்சாளர்களாகிய நமக்கு, அவை அறிதல், காலம் அறிதல் ஆக இரண்டையும் சேர்த்தே கட்டளையிட்டிருப்பது தெரியும். அந்தக் காலத்திலேயே பாராளுமன்றத்திலே பேசுகிறவர்களுக்குத்தான் திருவள்ளுவர் அவ்வாறு மற்றோர் சொல் அறிந்து சுருக்கமாகப் பேச வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அவர் சொன்னதைத் தான் சொல்கிறேன். நான் ஆணையிடவில்லை. அடுத்து மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள்...

(முற்பகல் 11-15)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிற் கொள்கைகளும், திட்டங்களும், ஊரகத் தொழில்களும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் இங்கே சிறந்த முறையிலே அளிக்கப்பட்டிருக்கின்றன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, தொழில் துறையில் அதுவும் ஊரகத் தொழில் துறையிலும் சேர்ந்து எவ்வளவு நல்ல முறையில் தமிழ் நாட்டில் நிலைமை இருந்து வருகிறது என்பதைப்பற்றி சிறப்பாக அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் துறைக்கு இரண்டு பேரும் புதிய அமைச்சர்கள். தொழில் அமைச்சராக நமது மாண்புமிகு மதிப்பிற்குரிய திரு. இராசாராம் அவர்கள் பதவி ஏற்றிருக்கிறார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. ஆனூர் ஜெகதீசன் அவர்கள் ஊரகத் தொழில்களுக்கு இங்கே அமைச்சராகப் பதவியேற்று மிகச் சிறந்த ஒரு கொள்கை விளக்கக் குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் அடிப்படையில் எந்தெந்த நல்ல காரியங்களையெல்லாம் ஆரம்பிக்க செய்திருக்



கிறது என்று நான் மீண்டும் பேசி, தாங்கள் கொடுத்திருக்கிற கொஞ்சக் காலத்தையும் வீணாக்காமல் ஏதோ ஒருசில வார்த்தைகளை மட்டும், குறைபாடுகள் எங்கெங்கே இருக்கின்றனவோ அவைகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். குறைபாடுகளைச் சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல, ஒரு ஆலோசனை என்ற அடிப்படையில் சொல்ல விரும்புகிறேன். முன்னாலே இங்கே ஒரு கேள்வி கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள், ஆலோசனை சொல்வது எளிது, அந்த ஆலோசனையைக் கடைப்பிடிப்பது ரொம்பக் கஷ்டம் என்று சொன்னார்கள். நான் கூட என்ன பேசுவது என்று எண்ணிக்கொண்டிருந்த போது, ஆலோசனை சொல்ல வேண்டுமென்று நான் எண்ணிக்கொண்டிருந்தபோது, அவர்கள் அந்தமாதிரி சொன்னார்கள். ஆலோசனை சொல்வது எளிதாக இருந்தாலும் கூட, ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆலோசனைகளா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் பார்த்து, முடியுமானால் அந்த ஆலோசனைகள், நல்ல ஆலோசனைகளாக அவர்களுடைய மனதிலே பட்டால் எடுத்துக் கொள்ளலாம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையில் ஓரிரு ஆண்டுகளிலே எனக்கு வேண்டியவர்கள், படித்துப் பட்டம் பெற்றவர்கள் என்னை வந்து அணுகி, "புதிய தொழில்களை எங்களுடைய வாழ்க்கைக்கு ஆரம்பிக்க வேண்டுமென்று எண்ணுகிறோம். நீங்கள் தொழில் துறையிலே சில ஆண்டுகளாக இருக்கிற காரணத்தால், எந்தவிதமான தொழிலை ஆரம்பிக்கலாமென்று ஆலோசனை சொன்னால் நன்றாக இருக்கும்" என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கும்போது, "என்ன தொழில் ஆரம்பிக்கலாமென்று சொன்னால், தொழில் ஆரம்பிக்க உதவக்கூடிய ஸ்தாபனங்களாகிய டிக், சிப்காட், வங்கிகள் போன்றவற்றை அணுகி, அவர்கள் என்ன தொழில் ஆரம்பிக்கலாம் என்பதற்கு வைத்திருக்கும் பிராஜெக்ட் ரிப்போர்ட்டை வாங்கி, நீங்கள் படித்த படிப்புக்கும், ஆரம்பிக்க இருக்கிற தொழிலுக்கும், நீங்கள் போடுகிற பணத்திற்கும், உங்களுக்கு வரவேண்டிய வருமானத்திற்கும் கணக்குப் பார்த்து எந்தத் தொழில் உங்களுக்கு நல்லது என்று நினைக்கிறீர்களோ அந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம்" என்று நான் சொல்வது வழக்கம். அவர்கள் மாணவர்களாக இருந்து பட்டதாரிகளாக ஆனவர்கள். ஒவ்வொரு

இடமாகப் போய், வங்கிக்குப் போய், சிப்காட்டுக்குப் போய், டிக்-குக்குப் போய் அங்கு இருக்கிற பிராஜெக்ட் ரிப்போர்ட்டை வாங்கி அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது, அதன் அடிப்படையிலே தொழிலைத் துவங்க முடியுமா என்பது உண்மையிலேயே சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது. காரணம், டிக்-இலே கேட்டாலோ, சிப்காட்டிலே கேட்டாலோ, வங்கியிலே கேட்டாலோ அல்லது மற்ற நிறுவனங்களிலே கேட்டாலோ அவர்கள் வைத்திருக்கிற பிராஜெக்ட் ரிப்போர்ட் எல்லாம் அண்மையிலே தயாரிக்கப்பட்டது. அண்மையிலே தயாரிக்கப்படாத, கிட்டத்தட்ட 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலே தயாரிக்கப்பட்ட பிராஜெக்ட் ரிப்போர்ட் இருக்கிறது. அதிலே பல மாறுதல்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கும். இந்த 2, 3 ஆண்டுகளில் பல பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கலாம். "அதை நம்பி நீங்கள் அதைப்பற்றிச் சரியாக ஆராயாமல் ஏதாவது தொழிலைத் துவங்கினால், அதற்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல" என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே, கிட்டத்தட்ட ஒரு 6 மாத காலம் இதையெல்லாம் சேகரித்துவிட்டு, அந்த இளைஞர்கள் பலர் சோர்வுடன், எதை ஆரம்பிப்பது என்று தெரியாத நிலையில் இருக்கிறார்கள். இதற்கு முக்கியமான காரணம், நாம் கொடுக்கக் கூடிய இந்த புராஜெக்ட் ரிப்போர்ட்டை எல்லாம் ஒவ்வொரு இடத்திலிருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏதாவது ஒரு பொதுவான இடமாக வைத்து, டிக் மூலமாக மாவட்ட அளவிலே கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். சென்னையிலே கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். பொதுவான ஒரு இடம் வைத்து அந்த பிராஜெக்ட் ரிப்போர்ட்டை அவர்கள் கொடுக்க வேண்டுமென்பது மட்டுமல்ல, அந்த பிராஜெக்ட் ரிப்போர்ட் லேடஸ்ட் ரிப்போர்ட்டாக இருக்க வேண்டுமென்பதையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும். 'மார்க்கெட் இன்டெலிஜென்ஸ்' இதற்கு முக்கியமாக இருக்கிறது. தொழிலை ஆரம்பிப்பது ரொம்ப எளிதாகக் கூட இருக்கிறது. அவர்கள் வந்து பணம் கேட்டால், கிட்டத்தட்ட 75 சதவிகிதம், 80 சதவிகிதம் பணம் கிடைக்கிறது. அதுவும் சிப்காட் போன்ற நிறுவனங்களுக்குப் போனால், கிட்டத்தட்ட 3 லட்ச ரூபாய் பணத்தை





(முற்பகல் 11-20)

வைத்துக்கொண்டு, 80 லட்ச ரூபாய் பணத்தில் கூட ஒரு தொழிலை ஆரம்பித்து விடலாம். அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற இந்த நிறுவனங்களிலே மிகவும் எளிதாக நாம் பணத்தை பெற்றுவிட முடியும். ஆனால், அந்த நிதி நிறுவனங்கள் பண உதவியைச் செய்த பின்னர் அந்தத் தொழில்கள் நல்ல முறையில் நடைபெறுகின்றனவா இல்லையா என்பதைப்பற்றியோ அல்லது அத்தகைய தொழிற்சாலைகளால் உருவாக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு நல்ல மார்க்கெட்டிங் இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றியோ கவலைப்படுவதே இல்லை. தற்போது சரியான முறையில் உற்பத்தியான பொருள்களை எப்படி விற்பனை செய்வது என்பதைத் தெரிந்துகொள்வது இன்றியமையாத் தேவையாக இருக்கிறது. அந்தப் பொருள்களுக்கு நாட்டில் எந்த அளவுக்குத் தேவை இருக்கிறது அல்லது அதை எவ்வளவு நுகர்வோர் வாங்குவார்கள் என்பதைப்பற்றி எந்த விவரமும் இந்த ஸ்தாபனங்களில் தற்போது இல்லை என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது.

நான் இந்த வகையில் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். எம்.பி.ஏ. படித்தவர்களை இந்த நிறுவனங்களில் சேர்த்துக்கொள்ள வேண்டும். உற்பத்தியாகிய பொருள்களுக்குரிய விற்பனையைப் பொறுத்த வரையில், நல்ல முறையில் தேர்ந்தவர்கள் இந்த நிறுவனங்களில் இருந்தால்தான், இந்த விவரங்களை நாம் பெற முடியும். எந்தெந்தப் பொருள்களுக்கு நல்ல விற்பனை இருக்கிறது அல்லது எந்தெந்தப் பொருள்களைத் தயாரித்தால், நல்ல விற்பனை செய்ய முடியும் என்று உரிய ஆலோசனையை இந்த நிறுவனங்களே வழங்கினால் ஒழிய, நாம் தொழில் துறையில் மிகப் பெரிய அளவில் முன்னேற்றம் காண முடியாது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நமது மாநிலத்தில் பலர் பல தொழில்களை ஆரம்பித்து விடுகிறார்கள். ஏறத்தாழ 60,000 சிறு தொழில்கள் தொடங்கப்பட்டிருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் தொழில்களையெல்லாம் தொடங்

குவது என்பது மிகவும் எளிது. ஆனால் அவற்றைத் தொடர்ந்து நல்ல முறையில் நடத்துவது என்பதுதான் கஷ்டமாக இருக்கிறது. காரணம், தொழிலைத் தொடங்குவதற்கு முன்னாலே தேவையான கடனைப் பெற்றுத் தொடங்கி விடுகிறார்கள். முதல் தவணை கட்ட வேண்டிய நேரம் வரும் போது அதனுடன் வட்டியைச் சேர்த்துக் கட்ட வேண்டும் என்று வருகிற போதுதான், தாங்கள் தயாரிக்கும் பொருள்களுக்குத் தேவையான மார்க்கெட்டிங் இல்லை என்ற நிலையில் அந்தத் தொழில்கள் எல்லாம் நலிவுற்றனவாக மாறிவிடுகின்றன. தொடங்குவதற்கு முன்னாலேயே அந்தப் பொருள்களுக்கான விற்பனையைப் பற்றிக் கவலைப்படாமல் தொடங்கிவிடுவதன் காரணமாகத்தான் பல தொழில்கள் பின்னாலே மூடப்பட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் 30 சதவிதம் தொழிற்சாலைகள் நலிவுற்ற தொழிற்சாலைகளாக உள்ளன—அதாவது சிக் யூனிட்களாக உள்ளன என்று சொல்லுகிறார்கள். எனவே எந்தவிதமான தொழில்கள் அல்லது எந்தவிதமான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இவ்வாறு நலிவுற்றிருக்கின்றன என்பதைப்பற்றிக் கணக்கெடுத்து அவைகள் ஏன் அப்படி நலிவுற்றுப் போயிருக்கின்றன என்பதற்கான அடிப்படைக் காரணத்தைத் தெரிந்துகொண்டு, மீண்டும் அவைகளையெல்லாம் நல்லமுறைக்குக் கொண்டு வந்து செயல்படும் தொழில்களாக மாற்றுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இரண்டு நிதி நிறுவனங்களைப் பொறுத்தவரையில், ஒரு தொழிலுக்குக் கடன் கொடுப்பதற்கு முன்பாக அதற்கான பிராஜெக்ட் ரிப்போர்ட்டைக் கேட்கிறார்கள். எப்படி விற்பனை செய்யப் போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். "நாங்கள் இந்த மாதிரியாக உற்பத்தியாகிற பொருளை விற்கப் போகிறோம்" என்று தொழில் தொடங்குகிறவர்கள் சொல்லுகிறார்கள். அதையும் ஒப்புக்கொண்டு அதற்குத் தேவையான பணத்தைக் கொடுத்து





விடுகின்றன. பிறகு அந்தத் தொழில்கள் எல்லாம் நல்ல முறையில் செயல்படுகின்றனவா இல்லையா என்று பார்ப்பதே இல்லை. தொழில் அதிபர்களைப் பொறுத்தவரை; அதிகமான அளவுக்குக் கஷ்டப்படுவதில்லை. பணம் திருப்பித் தராவிட்டால், நிதிநிறுவனங்கள்தான் நஷ்டத்திற்குள்ளாகின்றன. இந்த இரண்டு நிதி நிறுவனங்களும் எப்போது தொழில் தொடங்கியவர்களைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள் என்றால், அவர்கள் திரும்பப் பணம் கட்டாத போதுதான். அதாவது ஜெஸ்டேஷன் பீரியட் என்று 2, 3 ஆண்டுகள் கழித்து தொழிலைத் தொடங்கியவர்கள் முதலையும் வட்டியையும் கட்டாத போது, அதிலும் குறிப்பாக மார்ச் மாதத்தில் நெருக்கடி வருகிறபோது--தங்களிடம் பணம் வாங்கியவர்களில் எவ்வளவு பேர் கட்டாமல் இருக்கிறார்கள், எவ்வளவு பணம் கட்டாமல் வெளியே நிலுவையில் நிற்கிறது என்று பார்க்கிறார்கள். அதுவரை எந்த பாலோ-அப் ஆக்ஷனும் இந்த இரு நிதிநிறுவனங்களும் செய்வதில்லை. ஒரு தொழில் தொடங்குபவருக்குக் கடன் கொடுத்தால், அவர் என்ன செய்கிறார் என்பது குறித்து எந்தவிதமான பாலோ-அப் ஆக்ஷனும் தற்போது இல்லை. எனவே அடிப்படையிலேயே இந்தக் கோளாறு இருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் உடனடியாக இப்போதே கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதி நிறுவனங்கள் பணத்தைக் கொடுப்பது மட்டும் போதாது. அந்த பாலோ-அப் ஆக்ஷனை மேற்கொள்ள வேண்டும். காரணம் சிலர் இருக்கிறார்கள். தொழில் நடந்தாலும் நடக்காவிட்டாலும் அதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. காரணம் 70, 80 லட்சம் ரூபாய் செலவில் தொழில் தொடங்கப்படுகிறது என்றால், அதில் அவருடைய சொந்தப் பணம் என்பது சுமார் 2, 3 லட்சம்தான் இருக்கும், மீதியை நிதி நிறுவனங்களிடமிருந்து தொடங்கிவிடுகிறார்கள். தொடங்கும்போதே கட்டுகிற கட்டிடம், வாங்குகிற மிஷனரி ஆகியவற்றிற்கும் நிதிநிறுவனங்களில் பணம் வாங்குகிறார்கள். அப்படி வாங்கும்போது, தாங்கள் முதலீடு செய்யும் பணம் எவ்வளவோ அதை ஏதோ ஒரு வகையில் திரவி விடுகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் போடுகிற முதலீடு அவர்கள் கைக்குத் திரும்ப வந்துவிடுகிறது. எனவே, அவர்களுக்குத் தொழிலில் நட்டம் வந்தாலும், அவர்களுடைய பணம் எதுவும் அதில் இல்லை என்பதால், அவர்களுக்கு நட்டம் ஏற்படுவதில்லை, தங்களுக்கு

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1985 ஜூலை 11

எந்தப் பொறுப்பும் இல்லாத நிலையில் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப் படுவதே இல்லை. அப்படிப்பட்ட நிலையில்தான் அவர்களுக்கு நிதி உதவி செய்த நிறுவனங்கள் மூழ்கிக் கொண்டிருக்கின்றன. இது கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதைப் போல் இருக்கிறது. ஆனாலும் இதுதான் நீண்டகாலமாகக் கடைப்பிடிக்கப்படும் முறையாக இங்கே இருக்கிறது.

(மணி 11-25)

டிட்கோ நல்ல முறையில்தான் நடக்கிறது. இருந்தாலும் அது குறித்து ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். 66.9 கோடி அதற்காக முதலீடு செய்திருக்கிறோம். 1983-84 ஆம் ஆண்டில் 163 இலட்சம் ரூபாய் உபரி வருமானம் வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதில் போடப்பட்டுள்ள 66.99 இலட்சம் ரூபாயைப் பார்க்கும்போது, வந்துள்ள லாபம் 2.44 சதவிதம் தான். இது மிகவும் குறைவு. ஆறு சதவிதத்திலிருந்து எட்டு, ஒன்பது சதவிதம் வரை லாபம் வந்தால்தான் ஒரு தொழில் நல்ல முறையில் நடக்கிறது என்று சொல்ல முடியும். மொத்தமாக 163 இலட்சம் ரூபாய் லாபம் என்று போடுகிறார்கள். எவ்வளவு பணத்திற்கு இந்த 163 இலட்சம் ரூபாய் லாபம் என்று பார்த்தால், கிட்டத்தட்ட 67 கோடி ரூபாய்க்கு இந்த 163 இலட்சம் ரூபாய் வருமானம் என்பது மிகவும் குறைவுதான். இதிலே எந்த அளவிற்கு நஷ்டம் இருக்கிறது என்று பார்த்தால், கிட்டத்தட்ட ரூபாய் 86.77 இலட்சத்திற்கு நஷ்டம் இருந்து கொண்டிருக்கிறது. 'டிட்கோ'-வில் உள்ள அநேக தொழில்களும் நஷ்டத்திலேதான் இருக்கின்றன. ஜாயிண்ட் செக்டர் புராஜெக்டில் 23 தொழில்களை வைத்திருக்கிறார்கள். இந்த 23 தொழில்களில் 15 தொழில் நிறுவனங்களில் ரூபாய் 1,243 இலட்சம் நஷ்டமாக இருக்கிறது. 7 நிறுவனங்களில் 1,594 இலட்ச ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. ஆக மொத்தம் பார்க்கும்போது 350 இலட்சம் ரூபாய் லாபம் என்று சொல்கிறார்கள். இதிலே உண்மையிலே யார் லாபத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், ஸ்பிக் நிறுவனம் மட்டும் 1,506 இலட்சம் ரூபாய் லாபம் கொடுத்திருக்கிறது. மற்ற 23 நிறுவனங்களையும் சேர்த்துப் பார்க்கும்போது குறைவான லாபம்தான் வந்திருக்கிறது. அதிலே நஷ்டத்தையும் கழித்துப் பார்த்தால் மொத்தத்திலே நஷ்டம்தான்.



1985 ஜூலை 11] [திரு. ஜி. சுவாமிநாதன்]

சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்தில் 1,506 இலட்சம் ரூபாய் லாபத்தையும், தமிழ்நாடு தாதா ஃபோர்மகட்டிக்கல்ஸ் 156 இலட்சம் ரூபாய் லாபத்தையும் தந்திருக்கின்றன. தூத்துக்குடி ஆல்காலிக் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில் இந்த ஆண்டு நஷ்டம் வந்திருக்கிறது. சென்ற ஆண்டுகளில் நல்ல முறையில் நடந்திருக்கிறது. மொத்தத்தில் பல நிறுவனங்கள் நஷ்டத்திலே இருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கும்போது, 'டிட்கோ' இவ்வளவு சிறிய நிறுவனங்களையெல்லாம் நிர்வகிக்க வேண்டுமா என்ற சந்தேகம் வருகிறது. சில நிறுவனங்களின் முதலீடு 35 இலட்சம் ரூபாய், 59 இலட்சம் ரூபாய், 60 இலட்சம் ரூபாய் என்று இருக்கிறது. இப்படிப்பட்ட நிறுவனங்களையெல்லாம் 'டிட்கோ'-வில் வைத்திருக்கிறார்கள். 35 இலட்சம் ரூபாய் முதலீடு உள்ள சிறிய தொழில்களை 'டிட்கோ' நிறுவனத்தில் வைத்திருக்க வேண்டுமா? இத்தகைய நிறுவனங்களில் எவ்வளவு லாபம் என்று பார்த்தால், கிட்டத்தட்ட 61 ஆயிரம் ரூபாய்தான் வருகிறது. தேவையில்லாமல் 'டிட்கோவில்' இப்படிப் பட்ட பல நிறுவனங்களை நிர்வகிக்கிறார்கள். Diffused concentration என்ற முறையில் டிட்கோ நடந்து வருகிறது.

அண்மையில் தொழிலமைச்சர் அவர்கள் பேசியதாக பத்திரிகையில் பார்த்தேன். "ஒரு கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்கிறவர்கள் எல்லாம் நம்முடைய மாநிலத்தில் முதலீடு செய்ய விரும்பவில்லை. அவர்கள் வெளி மாநிலங்களில் முதலீடு செய்கிறார்கள் என்று பேசியதாகப் பத்திரிக்கையில் பார்த்தேன். Monthly Review of the Indian Economy என்ற புத்தகம் வருகிறது.

"Centre for monitoring Indian Economy—June 1985" என்ற புத்தகத்தில் New Issues என்ற முறையில் அடுத்த 12 மாதங்களில் எவ்வளவு பெரிய நிறுவனங்கள் நம்முடைய நாட்டில் வரவிருக்கின்றன என்று போட்டிருக்கிறார்கள். 143 பெரிய நிறுவனங்கள் 566 கோடி ரூபாய் முதலீடு அளவிற்கு வரவிருக்கின்றன என்று போட்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டில் அடுத்த 12 மாதங்களில் 3 நிறுவனங்கள் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்று போட்டிருக்கிறார்கள். மொத்தம் உள்ள 143 பெரிய நிறுவனங்களில் மூன்று நிறுவனங்கள் மட்டும் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட இருப்பதாகப் போட்டிருக்கிறார்கள். அதிலே பண்ணாரியம்மன் சுகர்ஸ் நிறுவனம் ஒன்று. இது திரு. மகாலிங்கம் குரூப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். இதிலே

3.75 கோடி ரூபாய்க்கு ஈக்குவிட்டி போட இருக்கிறார்கள். கார்த்திக் இன்வெஸ்ட்மென்ட்—ரூபாய் 0.75 கோடி. ரெலையன்ஸ் ஹையர் பர்சேஸ்—ஒன்றரை கோடி ரூபாய். ஆக மொத்தம் ஆறு கோடி ரூபாய் முதலீடு. அடுத்த 12 மாதங்களில் ஆறு கோடி ரூபாய் முதலீட்டு அளவில் தமிழ் நாட்டில் தொழிற்சாலைகள் வரவிருக்கின்றன. இதிலே 3.75 கோடி ரூபாயை பண்ணாரியம்மன் சுகர்ஸ் ஈக்குவிட்டி ஷேராகப் போடுகிறார்கள். மற்றவர்கள் எல்லாம் டிபென்சராக வாங்குகிறார்கள். முதலீடு கிடையாது—கடன் வாங்குகிறார்கள். மொத்தம் 17.32 கோடி ரூபாய் அளவிற்கு தமிழ் நாட்டில் கடன் வாங்குகிறார்கள். ஆனால் ஆந்திர மாநிலத்தில் 14 கம்பெனிகள் வருகின்றன.

(முற்பகல் 11-30)

ஆந்திர மாநிலத்தைப் பார்க்கின்றபோது, அங்கே 14 கம்பெனிகள் இருக்கின்றன.

They are raising Rs. 48.69 crores and another sum of Rs. 4.06 crores.

மொத்தம் பார்த்தால் 52.75 கோடி. இப்போது ஆந்திராவிற்கு வரப்போகிறது, இன்னும் 12 மாத காலத்தில். இதே நிலைமைதான் குஜராத்துக்கும் மகாராஷ்ட்டிரத்திற்கும் இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கின்றபோது, மற்ற மாநிலங்களிலே இவர்கள் எல்லாம் நல்ல முறையில் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஏன் வெளிமாநிலங்களிலே இருக்கக் கூடியவர்கள் நம்முடைய மாநிலத்திற்கு வரவில்லை என்பதைப்பற்றி நான் ஆலோசனை செய்து பார்க்கின்றபோது—அண்டர் ரைட்டிங் என்று சொல்வார்கள்—ஷேர்ஸ் என்று வருகிறபோது, அதை அண்டர் ரைட்டிங் பண்ணுவதற்கு என்று இன்றையதினம் மெர்ச்செண்ட்ஸ் பாங்க் என்று இருக்கின்றது. ஒவ்வொரு வங்கியிலேயும் ஆரம்பித்திருக்கின்றார்கள். முன்பெல்லாம் இன்டஸ்ட்ரீஸ் புரோமோஷனுக்காகத்தான் இந்த சிட்கோ, சிப்காட் எல்லாம் வந்தது. இதற்கு முன்னாலே சிட்கோ, சிப்காட் எல்லாம் தங்கள் பெரும்பாலான பணத்தை இந்த கம்பெனிகளுடைய ஷேர்ஸ்லே போட்டிருக்கின்றார்கள். ஆரம்ப காலத்திலே பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், கிட்டத்தட்ட ரூபாய் 5 கோடி அளவுக்குப் போட்டிருக்கின்றார்கள். இப்போது அதிலே போட்டிருக்கின்ற இன்வெஸ்ட்மெண்ட் என்று பார்க்கின்றபோது, ரூபாய் 10 ஷேர் என்பது இப்போது ரூ. 100-க்கு விற்கின்றது. இன்று நம்முடைய



பணம் ரூபாய் 50 கோடி அளவுக்கு அதில் இருக்கின்றது. அப்படி விற்கக் கூடிய அளவுக்கு பணம் இருக்கின்றது. அதேமாதிரி தமிழ்நாடு தாதா ஃபார்ம் சூட்டிகல்ஸ். ரூபாய் 25 லட்சம் அந்தக் காலத்திலே போட்ட பணம் இன்றைக்கு எட்டு பங்கு அளவுக்கு வந்திருக்கிறது. ரூபாய் 2.40 கோடிக்கு இன்றைக்கு அதை விற்கலாம். டுடிகோரின் ஆல்ககால் நிறுவனம். அதில் ரூபாய் 5.88 கோடி அந்தக் காலத்திலே போட்டிருக்கிறோம். அது இப்போது கிட்டத்தட்ட ரூபாய் 22.34 கோடி ஆகியிருக்கிறது. நான் உடனடியாக அதை விற்க வேண்டுமென்று சொல்லவில்லை. காரணம் விற்றால் அதனாலே பிரச்சினைகள் வரலாம். அந்தப் பணம் முடங்கிக் கிடக்கிறது. அந்தப் பணத்தை நாம் அந்தக் கம்பெனிகளிலே இருந்து எடுக்காமல் வைத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், கிட்டத்தட்ட 23 கம்பெனிகளில் ஏழு கம்பெனிகள் தவிர பாக்கியெல்லா கம்பெனிகளும் நஷ்டத்திலே நடக்கின்றன. லாபம் வருகின்ற கம்பெனியிலே இருந்து நாம் பணத்தை எடுத்து விட்டால், மொத்தத்தில் சிட்கோவே நஷ்டமாகிவிடும். ஆகவே அது சிட்கோவாக இருந்தாலும் சரி, சிப்காட்டாக இருந்தாலும் சரி, இந்தப் பணத்தை நாம் அதற்குள்ளேயே வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்ற அத்தியாவசியமான சங்கடத்தில் இருக்கிறோம். இந்தச் சங்கடம் ஏற்படுகின்றதனாலேயே அந்தப் பணத்தை எடுத்து வேறு மாநிலங்களிலேயிருந்து யாராவது நம்முடைய மாநிலத்திலே ரூபாய் மூன்று கோடி, ரூபாய் நான்கு கோடி அளவுக்கு தொழில் ஆரம்பிப்பதாகச் சொன்னால், அவர்களுக்காக நாம் அண்டர் ரைட்டிங் செய்து அந்த ஷேர்களுக்கு முதலீட்டாக எடுத்துக்கொள்ளலாம். நாம் அப்படிச் செய்ய முடியாத துர்ப்பாக்கியமான நிலையிலே இருக்கிறோம். மற்ற மாநிலங்களைப் பார்க்கின்றபோது, அங்கே இருக்கக்கூடிய நிறுவனங்கள் நல்ல முறையிலே செய்கின்றன. ஆகவே அந்த மாநிலங்களிலே இருக்கக்கூடியவர்களுக்கு தொழில்களிலே முதலீடு செய்யக்கூடிய துணிச்சல் இருக்கின்றது என்று சொல்கின்றார்கள். அதை அமைச்சர் அவர்களும் மிகவும் நல்ல முறையிலே கூர்ந்து கவனித்து இதைப்பற்றி நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று டி.ஐ.ஐ.சி. ஐப் பொறுத்தவரையில், சொல்கின்றார்கள். தொழில் ஆரம்பிக்க சிப்காட்டில் சிட் கேபிடல் என்று கொடுக்கிறார்கள். இந்த சிட்கேண்டலில் 100 சதவிகிதம் என்பதற்கு ஐ.டி.பி. யில் பணத்தைக் கொடுக்கின்றார்கள். அதிலே ஒரு சதவிகித்தை அவர்கள் முதலிலேயே வாங்கிக்கொள்கிறார்கள். ஆனால் அதே சிப்காட்டிலே ஆரம்பிக்கக்கூடிய தொழில்களுக்கு ரூபாய் 3.15 கோடிகூட கொடுத்திருக்கின்றார்கள். சிப்காட்டிலே ஒரு நிறுவனத்திற்கு ரூபாய் 15 லட்சம்கூட கொடுக்கின்றார்கள். அண்மையில் எனது நண்பர்கள் தொழில் ஆரம்பித்திருக்கின்றார்கள். அவர்கள் டி.ஐ.சி.யில் போய் தொழில் ஆரம்பித்திருக்கலாம். இப்போது 30 லட்சம், 35 லட்சம் என்று வைத்து தொழில்களை ஆரம்பித்திருக்கலாம். டி.ஐ.ஐ.சி. யிலே பணத்தைப் பெற்று ஆரம்பித்திருக்கலாம். ஆனால் அவர்கள் எல்லாம் சிப்காட்டுக்குப் போகிறார்கள். நீங்கள் ஏன் அப்படிப் போகிறீர்கள் என்று கேட்டால், இந்த சிட் கேபிடல் ஸ்கீம் அங்கே இருக்கிறது. அதனாலே ரூபாய் 10 அல்லது 15 லட்சம் வாங்கிக்கொள்ளலாம். குறைந்த முதலீட்டிலே நாம் தொழில் ஆரம்பிக்கலாம் என்று சொல்கின்றார்கள். டி.ஐ.சி. க்கு வர அவர்கள் விருப்பப்படுவதில்லை. காரணம், இந்த டி.ஐ.சி. யில் இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேலே, இந்த கன்சர்வேடிவ் பாலிசியை வைத்துக்கொண்டு, ‘ சாப்ட் லோனை ’ அதற்கு மேலாகக் கொடுக்காத நிலைமைதான் அங்கே இருக்கிறது. இதுவரையிலே அவர்கள் கொடுத்ததைப் பார்த்தால், 90 லட்சம் ரூபாய்தான் கொடுத்திருக்கின்றார்கள். எனக்கு அண்மையிலே சொல்கின்றார்கள். ' 15 லட்சம் ரூபாய் டி.ஐ.ஐ.சி. யிலே கொடுக்கவேண்டும் என்று, சிறு தொழில்களுக்கு கொடுக்க வேண்டும் என்று டி.ஐ.ஐ.சி. யிலே சொல்கிறார்கள். அதைப்பற்றி யோசனை செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன், சிப்காட்டில் சிறந்த முறையிலே ‘ சாப்ட் லோன் ஸ்கீம் ’ என்று வைத்திருக்கிறார்களே அதுபோல டி.ஐ.ஐ.சி. யில் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இன்னொன்று டி.ஐ.ஐசி. ஐப் பொறுத்தவரையில், நல்ல முறையிலே இயங்கிக் கொண்டிருந்தாலும், அதிலே தொழில் முனைவர்கள் அதற்காக அப்ளிகேஷன் போடுகிறார்கள் என்றால், அதில் காலதாமதம் ஆகிறது என்று தொடர்ந்து





சொல்லப்படுகின்றது. அரசாங்கம் கூட 45 நாட்களில் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் தற்சமயம் உள்ள நிலைமையைப் பார்த்தால், அப்ளிகேஷன் போட்டு அவர்கள் பணம் வாங்குவதற்கு குறைந்தது ஆறு மாத காலம் ஆகிறது. நான் அரசாங்கத்தைக் குறை சொல்லவில்லை, நான் டி.ஐ.சி.யை குறை சொல்லவில்லை. காரணம் என்னவென்றால் இந்தமாதிரி காலதாமதம் ஆவதற்குக் காரணம் பார்க்கின்றபோது, அது கவர்ன்மென்ட் டிப்பார்ட்மெண்ட் மாதிரி நடந்துகொண்டிருக்கின்றது. எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள் என்று சொன்னால், அசிஸ்டெண்ட், அசிஸ்டெண்ட்க்கு மேலே சூப்பிரண்ட்டெண்ட்டன்ட், அதற்குமேலே அசிஸ்ட்டன்ட் மேனேஜர் இப்படிப் போய்க்கொண்டிருந்தால், 5 லெவலுக்குப் போகிறது. ஒரு ஃபைல் ஐந்து லெவல்களுக்குப் போய் வரவேண்டும். கீழேயிருந்து ஐந்து லெவல் தாண்டி வரக்கூடிய அளவுக்கு நடந்துகொண்டிருக்கின்றது.

(முற்பகல் 11-35)

ஒரு பைல் ஐந்து லெவலுக்குப் போகும் நிலை இருக்கிறது. ஐ.சி.ஐ.சி.ஐ.-ல் பார்த்தால் மேனேஜர் இருந்தால், அவருக்கு ஒரு ஸ்டேனோ, ஒரு பியூன்தான். கீழே கிளார்க் கிடையாது. முடிவெல்லாம் மேனேஜர் அளவிலேயே எடுக்கும் அளவுக்கு, நான்கு ஐந்து டையர்களை ஒன்றிரண்டாகக் குறைத்துவிடுகிறார்கள். அதனால் பைல்கள் விரைவாக ‘ மூவ் ’ ஆகின்றன. இதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். இன்னும் ஒன்று, ஐ.எஃப்.எஸ.டி. லோன். சிப்காட் மத்திய தர, பெரிய தொழில்களுக்கு 23.14 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. ‘ டிக் ’ என்ன கொடுத்திருக்கிறது என்று பார்க்கலாம். இன்றைக்கு ஆயிரக்கணக்கான சிறு தொழில்கள் இருக்கின்றன. அந்தச் சிறு தொழில்களுக்குக் கொடுத்திருப்பது ஐ.எஃப்.எஸ்.டி. லோன் ரூபாய் 83.31 இலட்சம்தான். அந்த அளவுக்குத்தான் வாங்கியிருக்கிறோம் என்பதைப் பார்க்கிறோம். இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அரசாங்கம் கொடுக்கும் பணம் மிகவும் குறைவாக இருப்பதாகப் பார்க்கிறேன். இந்த ஆண்டு கிட்டத்தட்ட 60 லட்சம் ரூபாய் வரையிலே கொடுத்திருப்பதைப் பார்க்கிறோம். அரசாங்கம் கொடுக்கும் பணம் குறைவாக இருப்பதால், அவர்கள் ஐ.எஃப்.எஸ்.டி. லோன் வாங்குவதில் கஷ்டமான நிலைமைகள் இருப்பதைப் பார்க்கிறோம். போன ஆண்டு சிப்காட் 492 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. சிட்கோ மூலம் வாங்கியிருப்பது ரூ. 50 இலட்சம்தான். காரணம், அரசாங்கம் கொடுப்பது குறைவாக இருக்கிறது என்பதுதான்.

சிறு தொழில்கள் எவ்வளவு சங்கடமான நிலைமைக்கு ஆளாகின்றன என்பதை அமைச்சரவர்கள், குறிப்பாக ஊரகத் தொழிலமைச்சரவர்கள் இங்கே இருப்பதால் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ' இன்ட்ரஸ்ட் ப்ரீ சேல்ஸ் டாக்ஸ் லோன் ' என்பது சிறு தொழில்களுக்குப் பொருந்துமா, பொருந்தாதா என்பது பிரச்சினையாக எழுந்தது. இன்ட்ஸ்ட்ரீஸ், ஜி.ஓ. 1364, நாள் 3—10—1981 என்று ஒரு ஜி.ஓ. போட்டார்கள். அதிலே Liberalised interest-free Sales-tax Loan கொடுக்கலாமென்று சொன்னார்கள். நடுத்தரத் தொழில்கள், பெரிய தொழில்களுக்குக் கொடுக்கலாமென்று சொன்னார்கள். 20 per cent of the fixed assets or Rs. 20 lakhs whichever is lower என்று போட்டார்கள். 3—10—1981-க்குப் பிறகு சிறு தொழில்களும் லோன் கேட்க ஆரம்பித்தார்கள். அவர்கள் அப்படிக் கேட்ட பிறகு, இது அவர்களுக்குப் பொருந்துமா, பொருந்தாதா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டு 11—1—1982-ல் தொழிற் துறை கடிதம் எழுதி, அவர்களுக்கும் பொருந்தும், ஆனால் ஆறு வருடங்கள் என்பதை மூன்று வருடங்கள் என்று வைத்துக் கொள்ள வேண்டும். 20 per cent of the fixed assets or Rs. 20 lakhs for a period of three years பெரிய தொழில்களுக்கு, நடுத்தரத் தொழில்களுக்கு ஆறு வருடங்கள் என்று வைத்திருக்கிறார்கள். நாங்கள் சிறு தொழில்களுக்கு 3 வருடங்கள் என்று வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். பிக்சட் அசெட்ஸ் இவர்களுக்குக் குறைவாக இருக்கிறது. நடுத்தர தொழில்களுக்கும், பெரிய தொழில்களுக்கும், 6 வருடங்கள் கொடுத்துவிட்டு சிறு தொழில்களுக்கு மூன்று வருடங்கள் கொடுப்பது தப்பு என்று சொன்னார்கள். அதற்குமேல் டிஸ்டிரிக்ட் இன்டஸ்டிரியல் சென்டர்ஸ்-யிடம் கேட்கும்போது, அவர்கள் இந்த ஸ்கீம் இவர்களுக்குப் பொருந்தாது என்று சொன்னார்கள். எல்லா மாவட்டங்களிலும் சொன்னார்கள். குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் 27—3—1985-லே மேலவையிலே பதிலளித்தார்கள். இது சிறு தொழில்களுக்கும் பொருந்தும், 20 இலட்சம் அல்லது 20 சதவிகிதம். இதிலே எது குறைவாக இருக்கிறதோ அந்த அடிப்படையிலே மூன்று ஆண்டுகளுக்குக் கொடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். ஆனால் இதுவரையிலே டிஸ்டிரிக்ட் இன்டஸ்ட்ரீஸ் சென்டர்ஸ் " 20 சதவிதத்தை ஒத்துக்கொள்கிறோம், ஆனால் ரூபாய் 1.25 இலட்சம்தான் கொடுக்க முடியுமே தவிர,



ரூபாய் 20 லட்சம் கொடுக்க மாட்டோம் என்று சொல்லி, அங்கே இருக்கிறவர்களின் அப்ளிகேஷன்சைத் திருப்பி அனுப்புவதைப் பார்க்கிறோம். இந்த மாதிரி நிலைமை இருக்கும்போது, அரசாங்கம் 1981-ல் முடிவெடுத்து, இப்போது 1985 ஆகிறது. கிட்டத்தட்ட நான்கு ஆண்டுக் காலம் ஒரு கொள்கை முடிவு மேலே இருந்து கீழே போக தாமதமானால், அதனால் பிரச்சினைகள் எழுகின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

முடிவாக ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு டிக், சிப்காட் போன்ற நிறுவனங்கள் எல்லாம் எப்படி இயங்குகின்றன என்பதைப்பற்றிக் கூறுகிறேன். திரு. மாதவன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, மாதத்திற்கு ஒரு முறை நிர்வாகிகளை எல்லாம் அழைத்து ரெவியூ மீட்டிங் என்கிற வகையில் கூட்டத்தை நடத்தினார்கள். இப்பொழுது இருக்கிற இரண்டு அமைச்சர்களும் நடத்துகிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அவர்களை எல்லாம் கூப்பிட்டு எவ்வளவு மனுக்கள் பெறப்பட்டன, எப்படி எப்படி மேற்கொண்டு செய்யலாம் என்பதுபற்றி எல்லாம் விவாதித்து, உடனுக்குடன் முடிவெடுத்தார்கள். அதுபோல் இப்போது இருக்கிற அமைச்சர்கள் ரெவியூ மீட்டிங் நடத்தவில்லையென்றால், இனிமேலாவது நடத்த வேண்டும். அப்படிச் செய்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, டிக்கோவைப் பொறுத்தவரையில், ஸ்கூட்டர் ப்ராஜெக்டை பத்து வருடத்திற்கு முன்பே ஆரம்பித்திருந்தால், மிகவும் சிறப்பாக இருந்திருக்கும் அந்த வகையில்தான் மத்திய அரசாங்கத்திடமிருந்து இன்டென்ட் வாங்கி வந்தோம். பத்து வருடங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டிருந்தால், லாபம் வந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்து டான்சியைப் பொறுத்தவரையில் மொபட் மூலம் 2.98 கோடி ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நஷ்டத்திற்குக் காரணம் எட்டு ஆண்டுக்காலமாக இழுத்துக்கொண்டிருந்ததுதான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஆறு, ஏழு வருடம் இழுத்தது. கடைசியில் மொபட் வந்தபோது, நமக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி நஷ்டம் ஏற்பட்டதற்கு எந்த அதிகாரி பொறுப்பு என்று பார்த்து நடவடிக்கை எடுத்

திருக்க வேண்டாமா? அவர்களுக்கு என்ன, இங்கே நஷ்டம் என்றால், இன்னொரு துறைக்குப் போய்விடுகிறார்கள். அங்கே மிகவும் வசதியாக இருப்பார்கள். ஆனால் நஷ்டம் என்று வந்தால், அவர்களைப் பொறுப்பேற்கச் செய்து தண்டனை வழங்க வேண்டும். நஷ்டம் என்றால் தண்டனையும் இல்லை, லாபம் என்றால் ஒரு பாராட்டுகூட இல்லை என்றால், அப்படிப்பட்ட நிலை சரியில்லை. தனியார் நிறுவனங்களை எடுத்துக்கொண்டால், நல்ல முறையில் லாபம் வரும் என்றால், பணம் கொடுக்க வேண்டுமென்றால், பணம் கொடுக்கிறார்கள்; இல்லையென்றால் வேறு பரிசு கொடுக்கிறார்கள். அதே சமயத்தில் நஷ்டம் என்றால், வேறு தண்டனை கொடுக்கிறார்கள் அல்லது வேலையை விட்டு வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். ஆனால் அரசு நிறுவனங்களைப் பொறுத்தவரையில், மிகச் சிறந்த முறையில் தொழிலை நடத்தினாலும்கூட, ஒரு ரூபாய்கூட கொடுக்க முடியாது. 2.98 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தியதற்கு ஒரு தண்டனைகூட கொடுக்கப்படவில்லை. அவர் வேறு இடத்தில் இன்னும் வசதியாக இருக்கிறார். இதுபற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று. நாடாளுமன்றத்தில் இன்டஸ்ட்ரீஸ் கன்சல்டேட்டிவ் கமிட்டீஸ் வைத்திருக்கிறார்கள். அது மிகவும் நல்ல முறையில் இயங்குகிறது. இங்கேயும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை தலைவராகவும், சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட கன்சல்டேட்டிவ் கமிட்டி ஒன்றைப் போட்டு அந்தக் குழு இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி பிரச்சினைகள்பற்றிப் பேசினால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது இருக்கின்ற பப்ளிக் அன்டர்டேக்கிங் கமிட்டி என்பது போஸ்ட் மார்ட்டம் கமிட்டி என்கிற அளவில்தான் இருக்கிறது. அதற்குப் பதிலாக ரெவியூ கமிட்டி என்கிற வகையில் இதனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு நிறுவனங்களில் செயர்மேன், எம்.டி. எல்லாம் இருக்கிறார்கள். இப்படி போடப்படுகிறவர்கள் குறைந்தது ஐந்து வருடமாவது இருக்க வேண்டுமென்கிற கருத்து உருவாகியிருக்கிறது. ஆனால் இன்றைக்கு உள்ள நிலையில் ஒவ்வோர் ஆண்டும் அரசு நிறுவனங்களில் உள்ள தலைவர்



களும், மேனேஜிங் டைரக்டர்களும் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். இவர்கள் குறைந்தது ஐந்து வருடமாவது தொடர்ந்து குறிப்பிட்ட தொழில் நிறுவனங்களில் இருந்தால்தான், அவை நல்ல முறையில் இயங்குமாறு பார்க்க வசதியாக இருக்கும். இதுகுறித்து பரிசீலிக்க வேண்டும். நிதி நிறுவனம்கூட இந்தக் கருத்தைத்தான் கூறியிருக்கிறது.

பேலன்ஸ் ஷீட் காலதாமதமாக வருகிறது. அண்மையில் கம்பெனி ஆக்டில் ஆறு மாதத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே ஒன்பது மாதம். ஒரு வருடம் என்றுகூட ஆகிறது. தனியாரே காலத்தில் கொடுக்கும்போது, அரசு நிறுவனங்களைப் பொறுத்தவரையில், இதைக் கொடுப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று புரியவில்லை.

அடுத்து, தொழில் மையங்களை ஆரம்பிப்பதற்கு பாராட்டுக்கள். எக்கனாமிக்ஸ் டைம்சில் அண்மையில் நம்முடைய தமிழகத்தைப்பற்றி மிகவும் பாராட்டி கட்டுரை எழுதியிருந்தார்கள். அந்த வகையில் இந்த கோர்ஸ் சென்டர்சைப் பொறுத்தவரையில், முழுமையாக நிறைவேற்ற வேண்டும். முதலில் 600, 1,000 ஏக்கர்களை வாங்கி அதற்குப் பிறகு தொழில் துறையில் தேர்ந்திருப்பவர்களை எல்லாம் அழைத்துக் கேட்பதற்கு முன்னால் அவர்களை எல்லாம் அழைத்து, "இப்படி சென்டர்ஸ் ஆரம்பிக்கப் போகிறோம், என்னென்ன செய்யலாம்?" என்பதுபற்றி இப்போதே ஆலோசிக்க வேண்டும். இப்படிச் செய்வதற்கு பதிலாக பின்னால் அவர்களை அழைத்துப் பேசலாம் என்று முடிவெடுத்தால், 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பதில் 8 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் இது போய் முடியும். அந்த வகையில் தொழில் முனைவோர்களை எல்லாம் இந்த சென்டர்ஸ் அமைப்பதற்கு முன்னாலேயே அழைத்துப் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

(முற்பகல் 11-45)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கையின்மீது நடைபெறும் இந்த விவாதத்தில் என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பாக, தொழில் துறையின் இரு பிரிவுகளுக்கும் பொறுப்பேற்றிருக்கிற இரண்டு அமைச்சர்களிடமிருந்தும் நமது மாநிலம் நிறைய எதிர்பார்க்கிற அளவுக்கு நிலைமை இருப்பதால், அத்தகைய ஆற்றல் பெற்றவர்கள் அவர்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நமது மாநிலத்தில் ஊரகத் தொழிலாக இருந்தாலும், சிறிய,

நடுத்தர, பெருந்தொழில்களாக இருந்தாலும், பெருமளவு வளர்ச்சி பெறவும், அதிகமான அளவுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணமாக, புதிய அமைச்சர்களிடமிருந்து நாம் இன்னமும் அதிகமாக எதிர்பார்க்கிறோம். நிச்சயமாக நமது நம்பிக்கையை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

தொழில் கொள்கையைப் பொறுத்தவரையில், நமது துணைத் தலைவ அவர்கள் விரிவாகப் பேசியிருக்கிறார்கள் என்பதால், நான் என்னுடைய பேச்சைக் குறைத்துக்கொள்கிறேன். இன்றைய சூழ்நிலையில், நம்முடைய மாநிலத்தில் நாம் முக்கியமாக இப்போது செய்யவேண்டிய பணி, நம்முடைய செயலாற்றுத் திறன் இப்போது வரவேற்கத் தக்க நிலையில் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறோம். இருந்தாலும், இப்போது நம்முடைய மாநிலத்தில் என்னென்ன பொருட்கள் நமக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றன, அந்தத் தேவைக்கேற்ப உற்பத்தி இருக்கிறதா, எந்தெந்தத் துறைகளில் உற்பத்திக் குறைவு ஏற்படுகிறது, நம்மிடம் என்னென்ன பொருட்கள் அதிகப்படியாக உள்ளன, பிற மாநிலங்களிலிருந்து என்னென்ன பொருட்களை நாம் எதிர்பார்க்கிறோம் என்று சிந்தித்து, புதிய தொழில்களை அதற்கேற்றவாறு துவக்கலாம் என்பது போன்ற விபரங்களை சேகரிக்கவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

நாம் இப்போது தனித்தனியாக ஒவ்வொரு தொழிலையும் எடுத்துப் பார்த்தால், 40 சதவீதம் உற்பத்தி ஆகிறது, 60 சதவீதம் இந்தத் தொழிலில் வெளி மாநிலங்களிலிருந்து பொருட்களைப் பெறுகிறோம் என்றுதான் நிலைமை இருக்கிறது. சில தொழில்களில் சுத்தமாக நாம் உற்பத்தி செய்ய முடியவில்லை என்ற நிலையும் இருக்கிறது. சில தொழில்களைப் பொறுத்த வரையில், 75 சதவீதம் வரை வெளி மாநிலங்களிலிருந்து மூலப்பொருட்களை எதிர்பார்க்கவேண்டிய நிலை இருக்கிறது. இதற்கெல்லாம் விரிவான சர்வே ஒன்று எடுக்கப்பட்டு, எந்தெந்தத் தொழில்களுக்கு நம்மிடம் மூலப்பொருட்கள் இருக்கின்றன, எவ்வளவு பொருட்கள் அதன்மூலம் உற்பத்தி செய்ய முடியும் என்று விரிவாக சர்வே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை புதியதாக தொழில் ஆரம்பிக்க முன்வரும் தொழில் முனைவர்களுக்கு அறிவிக்க வேண்டும். இதன்மூலம் புதிய புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும். ஆகவே இதில் தொழில் துறை கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கிராமப் பகுதிகளில் தொழில்கள் துவக்கப்படுவதற்கு புதிய தொழில் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன என்று இந்தக் கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி தொழில்களை ஆரம்பிக்கும்போது, தொழில் முனைவர்களுக்கு எவ்வித அலைச்சலும், நம்பிக்கையின்மையையும் நாம் ஏற்படுத்தாதவாறு நமது நடவடிக்கைகள் அமைய வேண்டும். அதுதான் அரசின் கொள்கையாகவும் இருக்கும் என்று நம்புகிறேன். அப்படிப்பட்ட இலட்சியம் நிறைவேற்றப்பட வேண்டுமானால், நாம் இப்போது வைத்திருக்கும் சில கட்டுப்பாடுகளை, சில நியதிகளைத் தளர்த்தவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. உதாரணமாக, மதுரையில் ஒரு தொழிற்சாலை அமைக்கப் படுகிறது என்றால், அது தனியார் தொழிலாக இருந்தாலும், அரசுத் துறை அமைப்பாக இருந்தாலும், அந்தப் பகுதி மக்களுக்கு குறிப்பிட்ட சதவீதம் வேலைவாய்ப்பு அங்கே வழங்கப்பட வேண்டுமென்று நியதி இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நியதி ஏற்பட்டால், அது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படுவதாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, புதிய தொழில்களை ஆரம்பிக்கும்போது, நாம் பல வசதிகளை வழங்குகிறோம் என்று துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். தொழில் கொள்கைபற்றி இப்போது அதிகமாகப் பேசப் படுகிறது. அதில் 'சிங்கிள் விண்டோ சிஸ்டம்' என்பது முக்கியமானதொன்று. நாம் ஒரு தொழில் தொடங்குவதற்காக, பல்வேறு சம்பிரதாயங்களைப் பூர்த்தியாக்க வேண்டிய கடமை இருக்கிறது. ஆனால், அவைகள் பல்வேறு இடங்களில், பல்வேறு நடைமுறைகளில் அமைந்திருப்பதால், அத்தகைய நடைமுறைகளை நிறைவேற்ற தொழில் முனைவர்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். சிப்காட், டி.ஐ.ஐ.சி. போன்ற நிறுவனங்களின் மூலம் இப்போது தனியார்கள் தொழில் தொடங்க முன்வந்தால், அத்தகைய சம்பிரதாயங்களை நிறைவேற்றவும், அதாவது லைசன்ஸ், பர்மிட், மின்சாரம் இதுபோன்ற தேவைகளை நிறைவேற்றக்கூடிய சம்பிரதாயங்களை அந்த மையத்திலேயே பூர்த்தி செய்யக்கூடிய அளவில் நாம் திட்டங்களைத் தீட்டி, நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த முறையை நாம் நிறைவேற்றுவதற்கான திட்டம்

[திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்] [1985 ஜூலை 11

(முற்பகல் 11-50)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

இப்போது துவக்கப்பட்டிருக்கிறது. அதை இன்னும் சரியான முறையிலேயும் செம்மையான முறையிலேயும் நடத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசை. இன்று பல தொழில் முனைவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற அதிருப்தியைத் தவிர்ப்பதற்கு இது வாய்ப்பாக இருக்கும். ஆகவே இதைச் சரியான முறையில் செய்ய வேண்டும். இதைச் சரியான முறையில் செய்ய பல குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தும்கூட சில பல காரியங்களில் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே சிப்காட்டாக இருந்தாலும். டி.ஐ.ஐ.சி.-யாக இருந்தாலும், அந்த நிறுவனங்கள் எல்லாம் வெறும் ஆலோசனை செய்யும் அமைப்புகளாக இருக்கக்கூடாது. அவைகள், அதிகாரம் வழங்கும் அமைப்புகளாக ஆக்கப்பட வேண்டும். அதற்கு சட்டத்தில் என்ன என்ன திருத்தங்கள் செய்ய வேண்டுமோ அந்த அந்தத் திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு சட்டத் திருத்தங்களைச் செய்யாமல், அவற்றை வெறும் ஆலோசனைக் குழுக்களாக வைத்திருந்தால், அது வெற்றியைத் தேடித் தராது என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, அரசு தனக்கிருக்கிற அதிகாரங்களைப் பயன்படுத்தி, விரைவாக அவற்றை நிறைவேற்றுவதற்கு எதுவெல்லாம் முட்டுக்கட்டையாக இருக்கிறதோ அவற்றையெல்லாம் தகர்த்தெறிய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்போதுதான் 'சிங்கிள் விண்டோ சிஸ்டம்' வெற்றிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிப்காட் அதிகாரிகள், ஊழியர்கள் மிகவும் திறமையாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களிடமுள்ள ஆர்வத்தை, உற்சாகத்தைப் பார்க்கிறபோது, அவர்களுக்கு இன்னும் அதிகாரங்கள் வழங்குவோமானால், நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு வேகமாக அவர்கள் பணியைச் செய்ய முடியும். அவ்வாறு அதிகாரங்களை வழங்குவதற்கு ஏற்ற வகையில் தேவையான சட்டத் திருத்தங்களை எல்லாம் கொண்டுவர வேண்டும், அரசாணைகள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிப்காட் போன்ற தொழில் வளாகங்களைப் பல இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் இங்கெல்லாம் பொதுவாக தேவையான அளவிற்கு மின்சார வசதி இல்லை. அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுகிறது. இவ்வாறு மின்சாரத் தடை ஏற்படுவதற்கு சிப்காட் காரணமல்ல. பொதுவாக மாநிலம் முழுவதும் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறபோது அங்கேயும் ஏற்படுகிறது. இந்தக் குறைபாட்டை போக்குகின்ற வகையில்,



1985 ஜூலை 11] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

சிப்காட் வளாகம் இருக்கும் இடங்களில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ஆங்காங்கே ஒரு தனி யூனிட்டை அந்த அந்த வளாகத்திலேயே ஏற்படுத்தியாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாக கடலூர் பக்கத்திலேயே நெய்வேலி இருக்கிறது. இருந்தாலும்கூட, கடலூரிலே சிப்காட் வளாகத்திற்குத் தேவையான மின்சார வசதி கிடைப்பதில்லை. ஆகவே எங்கெல்லாம் சிப்காட் வளாகம் ஏற்படுத்துகிறோமோ அங்கெல்லாம் மின்சார யூனிட்டும் தனியாக நிறுவ வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிப்காட் வளாகம் இருக்கும் இடங்களில் எல்லாம் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கும் உதாரணமாக கடலூரையே எடுத்துக்கொள்கிறேன். கடலூர் மாவட்டத் தலைநகரமாக இருந்தாலும்கூட, அங்கே 'ஆட்டோமாடிக் டயலிங் சிஸ்டம்' இதுவரை கிடையாது. இப்போதும்கூட நம்பர் வாங்கித்தான் பேச வேண்டும். அங்கே சிப்காட் காம்ப்ளெக்ஸ் இருக்கிறது. தொலைபேசித் தொடர்பு தொழிற்துறைக்கு மிகவும் அவசியம். தொழில் துறைக்கு எஸ்.டி.டி. அவசியமாகி இருக்கிற இந்தக் காலக் கட்டத்தில் ஆட்டோமாடிக் டயலிங் சிஸ்டம்கூட அங்கு இல்லை. ஆகவே கடலூருக்கும், அங்கேயுள்ள சிப்காட் வளாகத்திற்கும் எஸ்.டி.டி. வசதியும், ஆட்டோமாடிக் டயலிங் வசதியும் உடனடியாக ஏற்படுத்துவதற்கு மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிற மாநிலங்களில் தொழில் முனைவர்களுக்கு பல சலுகைகள் அளிக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். உதாரணமாக பாண்டிச்சேரி மாநிலத்தில் விற்பனை வரி கிடையாது. விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். பல சலுகைகள் அளித்திருக்கிறார்கள். இதன் காரணமாகவே,

(முற்பகல் 11-55)

எனக்குத் தெரிந்தவரையில், தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து பல பேர்கள் பாண்டிச்சேரி மாநிலத்திற்குச் சென்று அங்கே தொழில்களை ஆரம்பித்திருக்கிறார்கள். காரணம், சேல்ஸ் டாக்ஸ் விலக்கு. இன்னொன்று அங்கு கூடுதலாக 10 பர்சென்ட் சப்சிடி கொடுக்கப்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் 15 பர்சென்ட். பாண்டிச்சேரியில் கூடுதலாக 10 பர்சென்ட், 25 சதவீதம் சப்சிடி கொடுக்கப்படுகிறது. இது ஒரு காரணம். ஆகவே இங்கே தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டிய பலர் இந்த இரண்டு சலுகைகளைப் பயன்

பயிற்சி அங்கு செல்கிறார்கள். இதையும் நமது அரசு கவனத்தில்கொண்டு அப்படிப்பட்ட சலுகைகளை எல்லாம் நம்முடைய மாநிலத்திலேயும் அளிக்க முடியுமா, கூடுதலாக சப்சிடி அளிக்க முடியுமா, சேல்ஸ் டாக்ஸ் விலக்கு நம்முடைய மாநிலத்திலும் அளிக்க முடியுமா என்பதைப்பற்றித் தீவிரமாகச் சிந்தித்து, அதுகுறித்து ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னதைப்போலவே, சிப்காட்டாக இருந்தாலும், டிக்-காக இருந்தாலும், அவர்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். அதிகமாக அவர்களுக்கு வேண்டிய அலுவலர்களையும் நாம் தர வேண்டும். சிப்காட்டில் இப்போது அமைந்திருக்கிற இடமே குறைவு. அமைச்சர் அவர்களே சென்று அண்மையிலே ஒரு பொருட்காட்சியைக்கூட திறந்து வைத்திருக்கிறார்கள். மிகவும் வசதிக் குறைவான இடத்தில் அலுவலர்கள் சரியான முறையில் வேலைகளைச் செய்ய முடியாத சூழ்நிலையில் அமர்ந்திருக்கிறார்கள். 'டன்ஜன்' (dungen) என்று சொல்வார்களே, அதைப்போல் பல அறைகள் தடுக்கப்பட்டு அங்கேயுள்ள ஊழியர்களும், அதிகாரிகளும் வேலை செய்கிறார்கள். இருந்தாலும்கூட அவர்கள் உற்சாகமாக வேலை செய்கிறார்கள். இன்னும் அதிகமான வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமாகவும், அதிகமான ஊழியர்களையும் அலுவலர்களையும் அனுமதிப்பதன் மூலமாகவும், அவர்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுப்பதன் மூலமாகவும் எதிர்பார்க்கின்ற இலக்குகளை நாம் இன்னும் நல்ல முறையில் அடைய முடியும்; சாதனைகளைச் செய்ய முடியும் என்று சொல்ல விரும்புகிறேன். சிப்காட்டிற்கு தலைவர் அடிக்கடி மாற்றப்படுகிறார். இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளாகவே நேற்று மூன்றாவது முறையாக தலைவர் நியமிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வருகிறது. இப்படிப்பட்ட நிறுவனங்களிலெல்லாம் தலைவர் பொறுப்பிலே, எம்.டி. பொறுப்பிலே இருக்கிறவர்கள் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட காலமாவது அந்தப் பணியிலே நீடிக்க வேண்டும். அப்படிக் குறிப்பிட்ட காலமாவது நீடித்தால்தான், அவர்கள் பணியிலே நல்லமுறையிலே கவனத்தைச் செலுத்தி, தங்களுடைய திறமைகளைச் செலுத்தி நல்ல சாதனைகளை நிறைவேற்ற முடியும். ஓராண்டுக் காலத்தில் சிப்காட்டில் மூன்று முறை சேர்மன் பதவி மாற்றப்பட்டிருக்கிறது. தவிர்க்கமுடியாத பல காரணங்கள் இருக்கலாம். இருப்பினும், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. சிப்காட், டிக் போன்ற நிறுவனங்கள் எல்லாம், தொழில் முனைவர்களுக்கு உதவிகரமாக இருக்கக்கூடிய செய்திகளையும், கருத்துக்களையும் ஆங்காங்கே மாவட்டங்களிலே முக்கியமான இடங்களிலே



பொருட்காட்சி மூலமாக, கண்காட்சி மூலமாக அவர்களுக்கு நாம் அறிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போதுகூட அமைச்சர் அவர்கள் அயல் நாடு சென்று வந்த பிறகு, சிப்காட்டிலே ஒரு புத்தகக் கண்காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. நான்கூட சென்று பார்த்தேன். நல்ல விவரங்கள், நாம் தெரிந்துகொள்ளக்கூடிய பல விவரங்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அதிகமாக பல மாவட்டங்களில் இதுபோன்ற செய்திகளை எல்லாம் வெளியிட்டு, வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தை மட்டுமல்லாமல், உள்நாட்டிலே நாம் தெரிந்துகொள்ள வேண்டிய தொழில் நுட்பத்தைப்பற்றி அறிய நாம் பல்வேறு மாவட்டங்களில் இதற்கென்று சிறப்புக் கண்காட்சிகளை எல்லாம் அமைக்க வேண்டும். இன்று பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் படித்தவர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து, அந்த வாய்ப்புக்களை நாம் அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. வெளிநாடுகளில் நம்முடைய இந்தியர்கள் இருக்கிறார்கள். நான் அண்மைக் காலத்தில் சந்தித்த நண்பர்கள் எல்லாம் இங்கே தொழில்களில் முதலீடு செய்ய ஆர்வமாக இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களிடம் பணம் இருக்கிறது. ஆனால் அதை எப்படிச் செய்வது, யாருடன் தொடர்பு கொள்வது, அங்கே இருந்துகொண்டே என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறார்கள். ஆகவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, வெளிநாடுகளில் இருக்கிற இந்தியர்களிடம் நிதி வசதி இருக்கிற காரணத்தால், அதைப் பெறுவதற்கு ஆங்காங்கே உள்ள இந்தியர்களைச் சந்திக்க அதிகாரிகள் மூலமாகவோ, அமைச்சர் அவர்கள் மூலமாகவோ ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், அவர்களிடமிருந்து நாம் நிறைய நிதிவசதிகளைப் பெறலாம். இப்போதுகூட ஆந்திர மாநில முதல்வர் அவர்கள் அமெரிக்கா சென்றபோது அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட்டது பத்திரிகையில் வந்தது. அதைப்போல எங்கெங்கெல்லாம் இந்தியர்கள் இருக்கிறார்களோ அவர்களோடு தொடர்புகொள்வதற்காக ஒரு சிறப்பு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1985 ஜூலை 11

இன்னொன்று. கடலூரைப் பொறுத்தவரையில், சிப்காட் காம்ப்ளக்ஸ்-ஐ இன்னும் விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா, சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா? அதற்கான திட்டங்கள் ஏதேனும் இருந்தால், அதனுடைய விவரங்களை அறிய விரும்புகிறேன். விருத்தாசலத்தில்கூட 'பார்ம் கார்ப்பரேஷன்' மூடப்பட்டுவிட்டது. அதற்குச் சொந்தமாக 1,500 ஏக்கர் நிலம் அப்படியே இருக்கிறது. அதைப் பயன்படுத்தி சிப்காட்டை மேலும் விரிவுபடுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கலாம். அப்படிப்பட்ட எண்ணங்கள் இருக்கின்றனவா? கடலூர் சிப்காட் ஒரு சிறப்பான இடமாக இருப்பதால், அதை மேலும் விரிவுபடுத்துவதற்கு, மேலும் இடங்களைக் கையகப்படுத்தி சில தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் ஏதேனும் செயல்படுத்த வேண்டும். அதுகுறித்து கருத்துக்கள் ஏதேனும் பரிசீலனையில் இருந்தால், அதன் விவரங்களை அறிய விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்து, செல்ப் எம்ப்ளாய்மென்ட் ஸ்கீமைப் பொறுத்தவரையில், ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் வங்கியின் பிரதிநிதிகள் டி.ஐ.ஐ.சி.யில் உட்கார்ந்து இன்னின்னாருக்கு இவ்வளவு உதவி செய்வது என்று முடிவு செய்துவிட்ட பிறகு, அவர்களுடைய கோரிக்கைகள் முன்மொழிவு செய்யப்பட்டு; ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு வங்கி மேலாளர்கள் பணம் இல்லை என்ற காரணத்தைச் சொல்லி, நிதியுதவி அளிக்க மறுக்கிறார்கள். இதைப்பற்றி மாநில அரசு என்ன முடிவெடுக்கப் போகிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதாவது டி.ஐ.ஐ.சி-யில் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டங்களுக்குக்கூட தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் பணம் இல்லை, எனவே கொடுக்க முடியாது என்று சொல்லுகிற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட புகார்கள் பல இடங்களிலிருந்து வந்திருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட நிலையைத் தடுக்க மாநில அரசு தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அவர்களுக்குப் பணம் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். டி.ஐ.ஐ.சி.-யில் வங்கியின் பிரதிநிதியே வந்து அமர்ந்து கலந்துகொண்டு ஒப்புக்கொள்கிறார். ஆனால் வங்கிக்குச் செல்லும்போது அவரே பணம் இல்லை என்று கையை விரிக்கிற நிலைமை இருக்கிறது. எனவே இதுபோன்ற நிலைமைகளை முதலில் தவிர்க்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூலை 11] (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்)

அடுத்து, ஐ.டி.பி.ஐ. யைப் பொறுத்தவரையில், அதில் நமது மாநில அரசுக்கு ஏதேனும் பிரதிநிதித்துவம் இருக்கிறதா என்று எனக்குத் தெரிய வில்லை. நமது மாநில அரசுக்கு ஐ.டி.பி.ஐ.-யில் பிரதிநிதித்துவம் இருந்தால் தான், அந்த நிறுவனம் ஒரு சரியான அணுகுமுறையைக் கையாளச் செய்ய முடியும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கிற திட்டங்களுக்கு நியாயமான முறையில் நாம் வாதாடி நிதி உதவியைப் பெற முடியும். எனவே இந்தக் காரணத்திற்காகவே மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, ஐ.டி.பி.ஐ.-யில் மாநில அரசுக்குப் பிரதிநிதித்துவம் பெறுவதற்காக தீவிர முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர் களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நலிந்த தொழிற்சாலைகளைப்பற்றி, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, இங்கே விரிவாகக் குறிப்பிட்டார்கள். இந்த வகையில் நாம் ஒரு கடுமையான அணுகுமுறையைக் கையாளாமல், அப்படிப் பட்ட நலிந்த தொழிற்சாலைகளுக்கு எல்லாம் ஒரு புத்துணர்ச்சியை அளித்து, மீண்டும் அவை முறையாகச் செயல்படுவதற்கான வழிவகையைப்பற்றி அரசு சிந்திக்க வேண்டும். அதையும் விரைவில் சிந்தித்து அவைகளுக்கு உதவி செய்து மீண்டும் அவற்றையெல்லாம் நல்ல முறையில் செயல்படும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுத் துறையில் பல தொழில்கள் நட்டத்தில் நடக்கின்றன என்று சொல்லப்பட்டது. நாம் அதைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட வேண்டிய தில்லை. அரசுத் துறையில் புதிதாக முயற்சி மேற்கொள்ளப்பட்டு தொழில் தொடங்கும்போது, ஆரம்ப காலத்தில் நட்டம் ஏற்படுவது என்பது தவிர்க்க இயலாத ஒன்றாகும். காரணம் நம்முடைய அதிகாரிகள் பாரம்பரியமாகத் தொழிலில் ஈடுபட்டவர்களோ அல்லது பயிற்சி பெற்றவர்களோ அல்ல. அவர் களும் புதிதாகத்தான் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக் கிறது. அப்படி இருக்கும்போது ஆரம்ப கட்டத்தில் நிர்வாகத்தில் சில கோளாறு காரணமாகவும் அனுபவக் குறைவு காரணமாகவும் நட்டம் ஏற்படும். இது பொதுத் துறையில் தவிர்க்க இயலாத ஒன்று. ஆனால் அதைக் காரண மாகக் காட்டி பொதுத் துறையில் தொழில்களே வேண்டாம் என்று சொல்வது சரியல்ல.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1985 ஜூலை 11

நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நிறுவனம் ஒரு காலத்தில் ஏராளமான நட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது பல கோடிக் கணக்கான ரூபாய் இலாபத்தை ஈட்டித் தருகிறது. அப்போது நட்டத்தில் நடக்கிறது என்று குறைபட்டுக் கொண்டவர்கள் இப்போது ஒன்றுமே பேசாமல் இருக்கிறார்கள். எனவே இதைப்பற்றியெல்லாம் அதிகமாகக் கவலைப்படாமல், எப்படி நஷ்டத்தைப் படிப்படியாகக் குறைப்பது அல்லது போக்குவது, எப்படி லாபத்தை ஈட்டுவது என்று நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன்.

முடிப்பதற்கு முன்பாக இன்னொரு கருத்தையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டம் நான் சார்ந்துள்ள மாவட்டம். ஆனால் வடாற்காடு மாவட்டமும் என்னுடைய தொகுதியில் அடங்கியிருக்கிறது. ஆனால் அரசுத் தரப்பில் எந்தப் புதிய தொழில் தொடங்குவது பற்றி அறிவிப்பு செய்தாலும், இந்த இரண்டு மாவட்டங்களுமே கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த இரண்டு மாவட்டங்களுமே தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்கள். பொருளாதாரத் துறையிலும் சரி, தொழிற் துறையிலும் சரி, கல்வித் துறையிலும் சரி, இவை இரண்டும் பின் தங்கிய மாவட்டங்கள் என்று சொல்லப்படுகின்றன. அப்படி இருக்கும்போது, அரசுத் தரப்பில் அறிவிக்கப்படுகிற எந்தத் திட்டமானாலும், இந்த இரு மாவட்டங்களில் ஒன்றுக்கும் அளிக்கப்படுவதில்லை. இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. இந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட குறை அந்தப் பகுதி மக்களிடத்தில் இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, இனியாவது பெரிய தொழில்களை அமைப்பதற்கான திட்டங்களை அறிவிக்கும் போது, தென்னாற்காடு மாவட்டத்தையும், வடாற்காடு மாவட்டத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூலை 11] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

இந்த இரண்டு மாவட்டங்களிலும் சிமிண்ட் தொழிற்சாலை ஏதும் கிடையாது. சர்க்கரை ஆலைகள் இன்னும் அந்த மாவட்டங்களுக்குத் தேவைப்படுகின்றன. காகிதத் தொழிற்சாலை என்று ஒன்று தனியாரால் நடத்தப்படுகிறது என்று நினைக்கிறேன். எனவே இப்படிப்பட்ட நிலையில் உள்ள இரண்டு மாவட்டங்களில் இனி புதிய தொழில்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிரானைட் பற்றியும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தற்போது கிரானைட்களைப் பாலிஷ் செய்யாமல் கொடுக்கிறோம். இதன் காரணமாக மட்டும் நாம் 300 சதவீத லாபத்தை இழந்து வருகிறோம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 'பாலிஷ்' செய்யாமல் கொடுப்பதால் நாம் ஆண்டுதோறும் 300 சதவீத லாபத்தை இழந்து வருகிறோம். எனவே அவைகளையெல்லாம் நாமே 'பாலிஷ்' செய்து விற்பனை செய்தால், நம்முடைய மாநில நிறுவனமான டாமின் மேலும் 300 சதவீத லாபம் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-05)

நம்மால் முடியாவிட்டால், தனியார் துறையில் உள்ள திறமையுள்ளவர்களுக்கு அனுமதி கொடுத்து அப்படிப்பட்ட நிறுவனங்களை அமைக்கலாம் என்று கேட்டுக்கொண்டு, இறுதியாக . . . .

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** இன்னும் எட்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். ஆளுக்கு 15 நிமிடங்கள் என்றாலும், அவை இரண்டு மணிக்குத்தான் முடியும். ஆகவே இன்னுமொன்று, இன்னொமொன்று என்று வளர்த்துக்கொண்டு போய்விட்டால் எப்படி?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இறுதியாக ஒன்றைக் கூறி முடித்துக் கொள்கிறேன். 'ஜீரோ இண்டஸ்ட்ரீஸ் டிஸ்ட்ரிக்ட்' பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்காக பல ஆண்டுக் காலமாக மத்திய அரசை அணுகி வருகிறோம். 'ஜீரோ இண்டஸ்ட்ரீஸ் டிஸ்ட்ரிக்ட்' என்று எந்த மாவட்டத்தையும் அறிவிக்க மத்திய அரசு ஒப்புக் கொள்ளவில்லை. அப்படி இல்லையென்றால், வட்டாரத்தையாவது அப்படி அறிவிக்க வேண்டும் என்று மாநில அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிறது. நாம் இது குறித்து பல ஆண்டுக் காலமாக மத்திய அரசை வற்புறுத்தியும், மத்திய அரசு ஏன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை? இந்த விஷயத்தில்

[திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்] [1985 ஜூலை 11

மத்திய அரசு நம்மைப் புறக்கணித்திருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே பின்தங்கியிருக்கும் ஏரியா என்று குறிப்பிட்டு அறிவிக்கும் கொள்கையைக் குறித்து மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, தொழில் துறையைப் பொறுத்தவரையில், சலுகைகளைத் தருவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றி சொல்லி அமைகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கை பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். எனக்கு முன்பாக உரையாற்றிய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் இரண்டு வேறு கோணத்திலே இதைக் கண்டார்கள். மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்கள் ஒரு தொழிற்சாலையை நடத்திக் கொண்டிருப்பவர். அதனாலே மனம் ஆனவருடைய சலிப்பு அவருடைய பேச்சிலே, திரு. லெட்சுமிகாந்தன் பேச்சிலே களிப்பு இருந்தது. இலட்சம் எவ்வளவு ஆனாலும், எப்படியாவது செய்யுங்கள் என்றார். நான் இரண்டுங்கெட்டான் நிலையில் இருக்கிறேன், கல்யாணம் ஆகாத பிரம்மச்சாரியைப் போல. வேண்டும் என்ற இடத்திலே தொழிற்சாலைகளை ஆரம்பியுங்கள் என்று எனக்கு ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் கருத்துக்களைச் சொல்லுகிறேன். குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொழில் துறையில் முன்னேறியிருக்கிறோம்; பிற மாநிலங்களைப் பார்க்கிறபோது, நாம் உயர்ந்த நிலையில் இருக்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்வார்கள். எதிர்காலத்திற்காக வைத்துக் கொண்டுள்ள திட்டங்களைப் பார்க்கும்போது பெருமைப்படக்கூடியதாக இருக்கிறது. காட்பாடியில் 20 கோடி ரூபாய்க்கு மேல் முதலீட்டில் வெடி மருந்து தொழிற்சாலையை ஏற்படுத்துகிற திட்டம், கடலூரில் 15 கோடி ரூபாய் அளவில் பிளாஸ்டிக் மற்றும் வண்ணங்களுக்குரிய பொருள்களைத் தயாரிக்கும் நிலை, அங்கே 400 ஏக்கர் நிலம் எடுத்து இரசாயனப் பொருள்களுக்குத் தொழிற்சாலையை உருவாக்குகிற திட்டம் ஆகியவைகள் எல்லாம் மிகுந்த மகிழ்ச்சிக்குரிய காரியங்களாகும். மணலியில், துணி துவைக்கும் டிட்டர்ஜென்ட் உருவாக்குகிற திட்டம். அதுவும் தாவர எண்ணெயிலிருந்து தயாரிக்கும் முறையை மாற்றி புதிய அடிப்படையில் டிட்டர்ஜென்ட் உருவாக்குகிற புதிய முயற்சியில் 'சிப்காட்' நிறுவனம் இப்போது தலைப்பட்டிருக்கிறது. தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், இந்தியா ஐந்து சதவீதம் என்றால், தமிழகம் எட்டு சதவீதம் என்பதும் மூலதனம் 13 சதவீதம் என்பதும் சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் 59,000 சிறு



1985 ஜூலை 11] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

தொழில்களை உருவாக்கியிருக்கிறது என்பதும் இது இந்தியாவிலே இருபது சதவீதம் என்பதும் இந்த ஆண்டு பத்தாயிரம் சிறுதொழில்களை உருவாக்கும் நிலையிலே இருக்கிறோம் என்பதும் பெருமை தரக்கூடிய காரியங்களாகும். இந்தியாவிலுள்ள தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களில் பத்து சதவீதம் பேர் தமிழகத்திலே இருக்கிறார்கள் என்பதையும், உற்பத்தியில் 10.8 சதவீதம் என்பதையும் எண்ணிப் பார்க்கும் இந்த நேரத்தில் தொழிலில் எந்த இடத்தில் நாம் இருக்கிறோம் என்று அடிக்கடி கேட்கிறார்கள். பக்கத்திலே நெருக்கமான உறவோடு இருக்கும்போது மூன்றாவதாகவும், கொஞ்சம் எட்டிப் போகும்போது 13 ஆகவும் இருக்கிறோம். மாண்புமிகு திரு. ஆர். வி. அவர்கள் ஒரு முறை, இந்தியாவில் தொழில்களை வளர்க்க சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய மூன்று இடங்கள்தான் ஏற்ற இடம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிற நிலையில், தமிழகம் ஓரளவிற்கு தொழில் துறையில் முன்னேறியிருந்தது. இன்று எல்லா மாநிலங்களும் தொழில் முன்னேற்றத்தில் முனைந்திருக்கும்போது, இதுவே தேசிய ஒருமைப்பாட்டுக்கு விரோதமாக இருக்குமோ என்று கருதுகிறேன். ஆகவே திட்டமொன்று ஒரு முடிவு எடுத்து பின்தங்கிய மாநிலங்கள் பட்டியலை எடுத்து, அந்தப் பின்தங்கிய மாநிலங்களுக்கு உதவியை உயர்த்தினால், அப்போது நமக்கு வருகிற வருவாய் போகும் என்பதால், தொழிலில் நாம் எந்த இடத்தில் இருக்கிறோம் என்ற பிரச்சினையில் ஈடுபடத் தேவையில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவின் தோல் உற்பத்தியில் 60 சதவீதம் நம்மிடத்திலே இருக்கிறது; நீரேற்றும் பம்ப் வைத்துக்கொள்வதில் மூன்றில் ஒரு பங்கு—46 சதவீதம், நூல் உற்பத்தியில் 20 சதவீதம். டீசல் என்ஜினில் 35 சதவீதம், தட்டச்சுப் பொருளில் 41 சதவீதம் என்ற கணக்கு நமக்குப் பெருமை தருகிறது. அது மட்டுமல்லாமல், தொழிற்பேட்டைகளையும் பெருக்கியிருக்கிறோம்

(பிற்பகல் 12-10)

பொதுவாக நம்முடைய வருத்தமெல்லாம் மத்திய அரசினுடைய மூலதனத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் செய்திருக்கின்றது என்பதெல்லாம் ஒன்றிரண்டு பழைய விவகாரமாக வருகிறதே தவிர, நாம் மகிழ்ச்சியடையக் கூடிய காரியமாக இல்லை.

சேலம் உருக்காலையை எடுத்துக்கொண்டால்கூட, தனியார் ரோலிங் மில் வைத்திருப்பதுபோல இருக்கின்றது. அதை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. இராசாராம் அவர்களும், நாடாளுமன்றத்திலே நமது பேரறிஞர் அண்ணா அவர்களும் பலவேறு கால கட்டங்களிலே வலியுறுத்தியபோதிலும், 'ஃபிசிபிள்' இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இப்போது பார்த்தால், அது லாபத்திலே நடக்கிறது. இந்த நாட்டிலே இருக்கின்ற மூலப் பொருள்களை வைத்துச் செய்கின்றபோது, விவாதங்களிலே அதை நீக்கிவிடவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இன்று சேலம் உருக்காலை நல்ல திட்டமாக அமைந்திருக்கிறது. அதனாலே மேலும் 100 கோடி ரூபாயை மத்திய அரசு மூலதனமாகக் கொடுக்குமானால், சேலம் உருக்காலை மேலும் வளர்ச்சியுறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையைப் பொறுத்தவரையில், சிறு தொழில், பெரும் தொழில் இரண்டையும் ஒன்றாக வைத்து, இரு அமைச்சர்களுக்கும் எங்கள் எண்ணங்களைச் சொல்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற காரணத்தினாலே, நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மதிப்பிற்குரிய டாக்டர் நாயுடம்மா அவர்கள் மறைந்துவிட்டார்கள். உள்ளபடியே அவருக்குப் பெருமை சேர்க்கின்ற ஒரு காரியம் இருக்குமானால், தமிழகத்திற்கு என்று அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். 700 சிறு தொழில்கள் இங்கே ஏற்படுத்தலாம் என்றும், தமிழகத்திலே இருக்கின்ற மூலப்பொருள்களை வைத்து தமிழகத்ினுடைய சூழ்நிலைகளை வைத்து ஏற்படுத்தலாம் என்றும் அறிக்கை வைத்திருக்கின்றார்கள். அதைப் பரிசீலித்து அதிலே ஏதேனும் செய்ய இயலுமா என்பதைப் பார்க்க வேண்டும். அதையெல்லாம் இணைத்து ஒரு பெரிய தொழிலை உருவாக்க முடியுமா என்று பார்க்கலாம். ஒவ்வொன்றாக பல மாவட்டங்களில் பல பகுதிகளில் உருவாக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். அதற்கெல்லாம் வாய்ப்பு இருக்கிறதா என்பதை நாம் எண்ணிப் பார்த்தால், அது நாம் அவர்களுக்குச் செய்கின்ற மரியாதையும், பெருமையும் ஆகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் என்று பார்க்கின்றபோது, நம் முன்னாலே வருவது மின்சாரம், தண்ணீர், ரா மெட்டீரியல்ஸ், அத்தோடு தொழில் நுணுக்கம் தெரிந்த தொழிலாளர்கள் மற்றும் முதலீடு. இந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது. அதைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை. நாம் நெருக்கடியிலே இருக்கிறோம். நீர், அதுவும் ஒரு பாதிப்பிலே இருக்கிறது. ரா மெட்டீரியல்ஸும் உற்பத்தியாகின்ற இடத்திற்கு வருவதில் சிரமம் இருக்கின்றது. அதுவும் நேரத்திலே கிடைக்





காததால் ஏற்படுகின்ற ஆபத்தும் இருக்கின்றது. அது சில முதலாளிகளிடம் அகப்பட்டுக்கொண்டு விடுகின்றது. அதனால் சிறு தொழில்கள் நடத்துபவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இத்தனை சிரமங்களுக்கு இடையிலே நாம் இந்த அளவுக்கு தொழில்களை வளர்க்க முடிந்திருக்கிறது என்று சொன்னால், இந்த அளவுக்கு சிரமங்கள் இல்லாமல் இருக்குமானால், நாம் மேலும் பெரு வளர்ச்சி பெற்றிருக்க வாய்ப்பு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், அவ்வப்போது சில அறிவிப்புகள் மத்திய அரசிலிருந்து வருகின்றன. அது மிகுந்த ஆவலைத் தருகிறது. நேவலைச் சேர்ந்த தொழில் அரக்கோணத்திற்குப் பக்கத்தில் வருகின்றது என்று சொன்னார்கள். ஆண்டு ஆண்டுக்காலமாக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் இன்னும் வரவில்லை.

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலை நீலகிரியிலே இருக்கின்றது. அதனுடைய விஸ்தரிப்புக்காக வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். ஏழாவது திட்டத்திலே வருமா என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த நிலையிலே மத்திய அரசினுடைய கவனத்தை அதிக அளவுக்குத் திருப்பக் கடமைப்பட்டிருக்கிறோம். மாவட்டத்திற்கு தொழில் என்ற அடிப்படையில் மத்திய அரசு கொள்கை வைத்திருக்கின்றது. இந்த அவையிலேகூட நான் சொன்னேன். மத்திய அரசு தொழிற்சாலைகளை அமைக்க மாவட்ட அளவிலே பெரிய தொழில் என்று கணக்கிடுகிறது என்றால், அதற்கேற்றபடி நம்முடைய மாவட்டங்களைப் பிரித்து மத்திய அரசினுடைய உதவியைப் பெறுகின்ற வகையிலே செய்ய வேண்டும் என்று சொன்னேன். அப்போது நாம் அப்படிச் செய்தால், அவர்கள் வேறு முறையில் செய்துவிட்டால் என்ன ஆவது? தன்னுடைய பயனைப் பெறுமா என்ற அச்சத்தைச் சொன்னார்கள். எனக்கும் அந்த ஐயம் இருக்கிறது. ஆனாலும் நம்முடைய பிரதமர் அவர்கள் அந்த அடிப்படையை மாற்றி லாபத்தை நோக்கி நாம் செயல்பட வேண்டும், தொழிலாளர்கள் வேலை இழந்துவிடுவார்கள் என்ற காரணத்தினாலேயே நசித்த தொழில்களை நாம் நடத்திக்கொண்டே இருக்கவேண்டும் என்பது நியாயம் இல்லை என்றும் புதிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். குறிப்பாக அக்ரோ பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் அதிலே அக்கறை காட்ட வேண்டும் என்றும், ஆப்ரிக்கா போன்ற நாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்வதற்காக வாய்ப்பு வசதிகளைப் பெருக்க வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் தொடக்க டெல்லி

யிலே நாம் ஒரு அலுவலகம் வைத்து, தமிழகத் தொழில் அதிபர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்கு உதவவேண்டும். மகாராஷ்ட்ரா, குஜராத் போன்ற மாநிலங்கள் செய்கின்ற வகையிலே நாமும் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அதைச் செய்யலாம். 'சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ்' போன்றவர்கள் கூட அப்படி ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அதன் மூலம் ஏதேனும் தொழில் தொடங்குபவர்களிடம் உதவியைப் பெற்றுச் செய்யலாம். அது அவர்களுக்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டி.ஐ.சி.-யைப் பொறுத்தமட்டில், அவர்கள் கார், ஆட்டோ ரிக்ஷா போன்றவைகளுக்குக் கடன் உதவி வழங்குகின்றார்கள். அவர்கள் அதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. மற்ற துறையிலேயும் அதிக அக்கறை காட்ட வேண்டும். கடன் தரும்போது புதிய புதிய கார் என்று மட்டும் தரவேண்டும் என்பதல்ல. மூன்று ஆண்டு காலத்திற்கு ஒரு வாகனம் என்று இருந்தால் கொடுக்கிறோம். பழைய வண்டிகளுக்கும் கடன் தருவதிலே தவறு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

(பிற்பகல் 12-15)

ஏற்கெனவே உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல, தொழிற் துறையைப் பொறுத்தமட்டில், பணியாற்றும் அதிகாரிகள் மாற்றப்படக்கூடாது. ஒரே இடத்தில் 3 ஆண்டுக்காலம் இருக்க விருப்பம் உடையவர்களை வைத்துக் கொண்டு, பயன்படுத்த வேண்டும். ஒருவர் அனுபவம் பெற்றவுடன் அவரை மாற்றி, இன்னொருத்தர் வந்து, அவர் அனுபவம் பெறும் தருவாயில் அவரும் மாற்றப்பட்டு, இன்னொருவரைப் போடுவது என்பது நல்லதல்ல. மேலும் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் என்ற அடிப்படையில் ஸ்ரீலங்காவிலிருந்து வந்துள்ள அகதிகளையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட 1 லட்சத்திற்கு மேல் அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை விரைவில் தீரும் என்று எதிர்பார்க்கிறோம். இருந்தாலும், அப்படி வந்திறங்கும் அகதிகளில் யார் வல்லுநர்களாக இருக்கிறார்கள், அவர்கள் என்ன தொழில் செய்பவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அவர்களைப் பயன்படுத்திக்கொள்வது சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன். இப்போது வீடு கட்டித்தரும் திட்டம் இருப்பதுபோல, தொழிற்கூடம் மட்டும் கட்டித் தருவதுபோல இல்லாமல், ஒரு தொழிலையே அமைத்து, அந்த முழுத் தொழிலையும் நடத்துவதற்கு யாருக்காவது





கொடுக்கும் முறையைக் கையாளலாம். கட்டிடம் கட்டிய அனுபவம் போதாது; லைசன்ஸ் எடுத்து, தனியார் படும் சுமையை நாங்களும் அனுபவிக்க வேண்டுமா என்று கேட்கக்கூடாது. பட்டால்தான் தெரியும் என்ற முறையில், இதையும் செய்யலாம்.

நீலகிரி-கோத்தகிரி பகுதியில் 100 ஏக்கரில் நுட்பமான மின் அணுப் பொருள்கள் உற்பத்தி பற்றி அரசு சொல்லியிருக்கிறது. அதை விரைவிலே செயல்படுத்த வேண்டும். அயல்நாட்டு முதலீட்டைப் பொறுத்தவரையில், நிபுணர்கள் குழு ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறது. இந்தியாவிலே அயல் நாட்டு மூலதனம் குறைந்துவிடும் என்கிறார்கள். அயல் நாட்டு இந்தியர்கள் இங்கே முதலீடு செய்வது குறைந்திருக்கிறது என்ற நிலையிலே, ஸ்ரீலங்கா பிரச்சினையால் ஒரு நன்மை ஏற்பட்டிருக்கிறது. அங்கேயிருந்து இலட்சம் பேர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களைச் சார்ந்தவர்கள் இங்கே முதலீடு செய்யத் தயாராக இருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கும் வகையிலே ஏதாவது செய்ய வேண்டும்.

சென்னையிலே ஏற்றுமதித் தொழில் மையம் பற்றிச் சொல்லும்போது, அது பெருமை தருவதாக இருக்கிறது. அதிலே நம்முடைய பங்கு என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அது நம் கையிலே இல்லை என்று கருதுகிறேன். இட ஒதுக்கீடுபற்றி நமக்குப் பொறுப்பு இருக்கிறதா என்பதில் ஐயம் இருக்கிறது. இருந்தாலும், அதை உருவாக்க விரும்புகிறவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், தங்களுக்கு அனுமதி கிடைக்குமென்று கருதுகிறார்கள். அதற்காக வல்லுநர்களை வேலைக்கு அமர்த்தி விட்டார்கள். 5,000 முதல் 25,000 ரூபாய்வரை சம்பளம் பேசி, 3, 4 மாதங்களாக எப்போது சாவி வருமென்று காத்திருக்கும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குஜராத் சேம்பர் ஆஃப் காமர்ஸ் 2, 3 ஏக்கர் நிலங்களை எடுத்து, அங்கே சிறு தொழில்கள் வளர உதவி செய்திருக்கிறார்கள். அதைப்போன்ற எண்ணம் இங்கே இருக்கும் சேம்பர் ஆஃப் காமர்சுக்கும் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தர்மபுரி ஆரூரில் சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1985 ஜூலை 11

அடுத்து, மால்கம் ஆதிசேஷையா அவர்கள் அண்மையிலே ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே அயல்நாடுகளிலே இருந்து விஞ்ஞான தொழில் ஒத்துழைப்பைப் பெற கடந்த ஒரு வருட காலத்தில் 650 உடன்பாடுகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றில் சுயேச்சையாக வளராமல், பிறரை நம்பி இருக்கும் நமது நிலைக்கு இந்த உடன்பாடுகளே ஒரு எடுத்துக்காட்டு. சுசுகி-மாருதி மோட்டார் வாகன விஷயத்தில் இறக்குமதி செய்த ஜப்பானிய தொழில் நுட்பத்தை இந்திய நிலைமைக்கு ஏற்ப திருத்தி அமைத்து, பயன்படுத்த நாம் தவறி வருகிறோம். சுசுகி-மாருதி உடன்பாட்டால் பயன் பெறப்போவது ஜப்பானியர்களே. வெப்பம் நிறைந்த நாடுகளில் தங்கள் தொழில் நுட்பம் எப்படிச் செயல்படுகிறது என்பதைக் கண்டறிந்து, மேலும் அவர்கள் தங்கள் தொழில் நுட்பத்தை அபிவிருத்தி செய்வார்கள் என்று சொல்லி, அவர்கள் மேலும் சொல்லுவது, இப்படி தொழில் நுட்பம் பயன்படுத்துகிறபோது, நம்முடைய நாட்டுக்கு ஏற்ற வகையிலே அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

கோவையிலே கொடிஷியா என்ற ஓர் அமைப்பு இருக்கிறது. அவர்கள் அண்மையிலே ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக மின்சாரத்தை எடுத்துக்கொண்டால், 50 சதவிகிதம் தொழிற்சாலைகள் பயன்படுத்துகின்றன. 20 சதவிகிதம் நம்மைப்போன்றவர்கள் வீடுகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். 25 சதவிகிதம் விவசாயத்திற்குப் பயன்படுகிறது. எப்போது கட்டண உயர்வு என்றாலும், தொழிற்சாலைகள்தான் பாதிக்கப்படுகின்றன என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது நியாயம் இல்லாத ஒன்று என்றும், எப்போது மின்சார வாரியத்திற்கு நஷ்டம் வந்தாலும் அதை ஈடு கட்டுவதற்கு தொழிற்சாலைகளுக்கு அதிகக் கட்டணம் என்ற நிலை மாற வேண்டுமென்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

குறிப்பாக உலக வங்கியிடம் இந்தியா 3,000 கோடி ரூபாய்க்கு மேல் கடன் பெற்றிருக்கிறது. எனவே எதிர்காலத்தில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி என்பதைக் கருத்திற்கொண்டு செயல்பட வேண்டுமென்று பல அறிஞர்கள் தெரிவித்திருக்கிறார்கள். உலக வங்கியின் வைஸ்-பிரசிடெண்ட் டேவிட் கூப்பர் அவர்கள் அண்மையிலே ஒன்றை எழுதியிருக்கிறார்கள்.



1985 ஜூலை 11] (டாக்டர் இரா. சனார்த்தனம்)

விவசாயத்தை மட்டும் நம்பி அதிகத் தொழில்கள் நடக்க முடியுமென்ற கருத்தில் இந்தியா செயல்படக்கூடாது; தொழிற்சாலைகள் உருவாக்குவதில் அக்கறை காட்டுவதால் பலருக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர முடியும் என்ற அடிப்படையிலே நாம் தொழில் அபிவிருத்தியில் அக்கறை காட்ட வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதோடு மத்திய அரசினுடைய ஆர்டினன்ஸ் பேக்டரி ஒன்றை சேலத்தில் தொடங்குவதுபற்றித் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கான முயற்சியை எடுக்கவேண்டும். மத்திய அரசினுடைய பெரிய தொகையுடன் கூடிய முதலீடுகள் இருந்தால்தான், ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். குறிப்பாக படித்த பட்டதாரிகளின் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் நான் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் பெரிய முதலீட்டுடன் கூடிய தொழிற்சாலைகள் பல தொடங்கப்பட வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஹோசூரில் தொழிற்சாலைகள் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதுபோல் காகித ஆலைகள் மூலம் பல பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. பொருளாதார ஆய்வு அறிக்கையில் தற்போதுள்ள நிலைமைகளை அறிந்து தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டும், இல்லையென்றால், அந்நியச் செலாவணிப் பிரச்சினை ஏற்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய அரசினுடைய நடவடிக்கை அமைய வேண்டும்.

அடுத்து, 400 கோடி ரூபாய் முதலீட்டில் நாப்தா தயாரிக்கும் நிறுவனம் அமைக்க மத்திய அரசை அணுகுவதுபற்றி திரு. முத்தையா அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் 10 கோடி ரூபாய் முதலீட்டில் மேக்னெட் டேப் தொழிற்சாலை துவங்க இருப்பது குறித்தும் தெரிவித்திருக்கிறார்கள். மேக்னெட் டேப்பைப் பொறுத்தவரையில், அதைத் தயாரிக்க நீலகிரி மட்டுமே ஏற்ற இடம் என்று சொல்கிறார்கள். அதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்து, தொழிற்சாலைகளுக்கு மனிதனுக்கு வருகின்ற வியாதியைவிட வேகமாக நோய் வருகிறது. இந்த வியாதியை சில முதலாளிகளும் மற்றவர்களும் ஏற்படுத்துகிறார்கள். இதிலேயும் அரசு கவனம் செலுத்த வேண்டும். அப்படியானால் தான் ஏற்கெனவே இருக்கின்ற தொழில்களை நல்லமுறையில் காப்பாற்ற முடியும்.

[1985 ஜூலை 11

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் 15 நிமிடங்களுக்கு மேல் பேசிக்கொண்டிருக்கிறார். 15 நிமிடம் விதம் பேசினால் கூட 2 மணி நேரம் வேண்டும். இன்னும் 8 உறுப்பினர்கள் பேச வேண்டும். இருக்கிற நிலைமையைப் பார்த்தால், பேசி முடியவே 2½ மணி ஆகும். அமைச்சரவர்களுக்கு 45 நிமிடம் ஆனால் கூட அவைக் கூட்டம் முடியவே 3 1/4 மணிக்கு ஆகும். ஆகவே உறுப்பினர் வேகமாக முடிக்க வேண்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: அடுத்து, கோவையில் ஆலைகள் இருக்கின்றன. மிகுந்த லாபத்தில் இயங்கிக்கொண்டிருந்த ஆலைகள் கூட இன்றைக்கு நஷ்டத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கின்றன. குறிப்பாக மேனேஜ்மெண்டிலே மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அதுபற்றியும் பரிசிலித்துப் பார்க்க வேண்டும்.

தமிழகத்திற்குத் தொல்லை இல்லாத அளவில், மூலதனம் குறைந்த அளவு இருந்தாலும், அதை வைத்து சிறு சிறு எலெக்ட்ரானிக் பொருள்களைத் தயாரிக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதிலே இந்த அரசு அதிக அளவில் கவனம் செலுத்தியிருக்கிறது என்பதையும் நான் காண முடிகிறது. இப்போது நாம் கம்ப்யூட்டர் உலகத்திலே வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். 'ஆரட்டிபிசியல் இன்டெலிஜென்ஸ்' என்கிற அளவில் வளர்ந்து கொண்டிருக்கிறோம். அந்தவகையில் மக்கள் இப்போது 5-வது ஜெனரேஷனுக்குப் போய்விட்டார்கள். இன்னும் எந்த அளவில் இதன் வளர்ச்சி இருக்கும் என்பதுபற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். நாம் பேசுகின்ற வார்த்தைகள் பதிவாகி அது டைப்பாகி காகிதத்தில் வருகின்றன. நம்முடைய விமானம் கடலில் விழுந்தது, அதிலிருந்து கறுப்புப் பெட்டி ஆறாயிரம் அடிக்குக்கீழ் போய்விட்டது, அதனை போய்த் தேடி எடுக்கும் அளவுக்கு விஞ்ஞான மனிதனைத் தயாரிக்கும் அளவுக்கு மேல்நாட்டில் விஞ்ஞான நுண்ணறிவு வளர்ச்சியடைந்திருக்கிறது. நம்முடைய பிரதமர் அவர்கள் ஒன்றை அண்மையில் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது தொழில் துறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு தொழில் சரியில்லையென்றால், வேறு ஒரு தொழிலை நடத்தும் அளவுக்கு அதுபற்றி அறிந்திருக்க வேண்டும், ஒரு தொழில் நசிந்து விடும் என்றால், வேறு தொழிலை நடத்துவதுபற்றி புதிய கண்ணோட்டத்துடன் அணுக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தனியார் தொழில்களில் மட்டுமே தொழில் வளர்ச்சி அடங்கிவிட



1985 ஜூலை 11] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

இன்றைக்கு டெலிபோன் இலாகாவைப் பொறுத்தவரையில், அதனுடைய வளர்ச்சி தொழில் துறை வளர்ச்சியோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. அது போல் ஒரு தொழிலைத் தொடங்குகிறோம் என்றால், அதற்கு உடனடியாக மின்சார இணைப்பு கிடைக்க வேண்டும். எப்படி இருந்தாலும் இருப்பதை வைத்துப் பங்கீடு செய்யப் போகிறோம். தமிழ்நாட்டில் தொழில் என்றைக்கும் இல்லாத அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கிறது. படித்துப் பட்டம் பெற்ற ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி வேகமாக வளர்ந்து வருவதுடன், இந்தியாவுக்கே வழி காட்டும் அளவுக்கு இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் அதன் வளர்ச்சி இருக்கும் என்கிற நம்பிக்கையைத் தெரிவித்து, தமிழகம் பெரிய முதலீட்டுகள் கூடிய பல தொழில் மையங்களைக் கொண்டு இன்னும் சிறந்து விளங்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தைத் தெரிவித்து தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பினை மனதார வரவேற்று, பாராட்டி அமைகிறேன்.

(பிற்பகல் 12-25)

* திரு. க. அருணாசலம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கை பற்றி எனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு மனமார நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, தொழில் கொள்கையை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். வறுமையை ஒழிப்பது, வேலைவாய்ப்பு கொடுப்பதன் மூலம் அந்த வறுமையை ஒழிப்பது என்று வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். பெருந் தொழில்கள் மூலமாக அதிகமாக வேலை வாய்ப்பு கொடுக்க முடியாது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. இருந்தாலும் பெருந்தொழில்கள் அதிகமாக்கப்பட வேண்டுமென்று நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். சிறு தொழில்கள் நடத்தவும் பெருந்தொழில்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றன. முன்பு சிறு தொழில்கள் பெருந்தொழில்களுக்கு உதவியாக இருந்தன என்று சொல்வார்கள். இப்போது அதை மாற்றி, பெருந்தொழில்கள் சிறு தொழில்கள் வளருவதற்கு உதவியாக இருக்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.

டாக்டர் நாயுடம்மா அவர்களைப்பற்றி இங்கே பேசினார்கள். தொழில் துறையில் அவர் மிகப் பெரிய சாதனையைச் செய்திருக்கிறார். இப்போது பெருந்தொழிலாக வளர்ந்திருக்கிற தோல் தொழிலை கிராமந்தோறும் நடக்கிற ஒரு தொழிலாக மாற்றிய பெருமை அவரைத்தான் சேரும். அந்தத் தொழிலை முன்பு பெருந்தொழிலாக ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது அதை ஏற்றுக்கொள்ளும்படியாகிவிட்டது.

ஜப்பான் நாட்டை எடுத்துக்கொள்வோம். அங்கே முன்பெல்லாம் சிறு தொழிலை எல்லோரும் செய்து போட்டி போட்டு சரக்குகளை விற்றார்கள். ஆனால் தரம் குறைந்து விட்டதால், அந்தச் சிறு தொழிலுக்கு அங்கே இடம் இல்லாமல் இருந்தது. மறுபடியும் அரசாங்கம் அதில் தீவிரமாகக் கவனம் செலுத்தி, தரத்தை அதிகமாக உயர்த்துவதற்கு அங்கே பெருந்தொழிலைப் பயன்படுத்துகிறார்கள். இப்போது அமெரிக்க அதிபர் ரீகன் என்ன சொல்கிறார் என்றால், அமெரிக்க நாட்டுப் பொருட்களை 25 சதவீதம் நீங்கள் இறக்குமதி செய்தாலதான், உங்கள் பொருட்களை வாங்குவோம் என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. ஜப்பானின் பொருட்கள் மிகவும் தரமாக இருப்பதால், வெளிநாட்டுப் பொருட்களை அந்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே வெளிநாட்டு வர்த்தகம் படுத்துவிட்டது. இப்போது அநத நாட்டு அரசே அமெரிக்க நாட்டுப் பொருட்களை வாங்குங்கள் என்று தனது மக்களுக்குச் சொல்கிறது. இப்போது ஜப்பான் வாழ வேண்டுமெனறு சொன்னால், ஜப்பான் தலை குனிந்து அமெரிக்காவின் சொல்லைக் கேட்கிற நிலைமையில் இருக்கிறது. நாம் இதை ஒரு எச்சரிக்கையோடு கவனித்து, இனிமேலாவது விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மக்களின் வாங்கும் சக்தியை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் இப்போது வாங்கிக் கொண்டுதானே இருக்கிறார்கள் என்று சாதாரணமாக நினைத்துவிடக்கூடாது. பெரிய தொழிற்சாலைகள் தங்களது பொருட்கள் எப்படியாவது நம் நாட்டிலோ அல்லது வளர்ந்துவரும் வெளிநாட்டிலோ விற்பனையாகிவிடும் என்று ஏராளமாக பொருட்களைத் தயாரித்து வருகின்றன. வளர்ந்த நாடுகளில் விற்பனை செய்யாவிட்டாலும் கூட, வளர்ந்து வருகிற நாடுகளான ஆப்பிரிக்கா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் அவற்றை விற்கலாம் என்று நினைக்கிறார்கள். கலோனியலிசம், இம்பீரியலிசம் மறுபடியும் வந்தால்தான் இந்தக் காரியம் நடக்கும். இப்போதே நாம் போடும் திட்டங்களை இரண்டு பிரிவாகப் பிரித்திருக்கிறோம்.



ஊரகத் தொழில்கள், சிறிய—நடுத்தர—பெரிய தொழில்கள் என்று பிரித்திருக்கிறோம். இவற்றின் மூலம் நமது மக்களின் வாங்கும் சக்தியை நாம் அதிகப்படுத்த வேண்டும். அப்படி தொழில்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, வேலைகள் வேகமாக நடைபெற்றாக வேண்டுமென்பதற்காக, இரண்டு துறைகளாகப் பிரித்து, இரண்டு அமைச்சர்களைப் போட்டிருக்கிறோம். அப்படியிருந்தும் நாம் மக்களின் வாங்கும் சக்தியை அதிகப்படுத்தியிருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். எப்போது நமது நாட்டிலேயே உற்பத்தியாகும் பொருட்களை நமது மக்களே வாங்கும் நிலை ஏற்படுகிறதோ, அவர்களுக்கு வாங்கும் சக்தி ஏற்படுகிறதோ அப்போதுதான் நாடு தொழில் வளர்ச்சி பெற்றதாகக் கருதப்படும்.

அண்மையில் நான் மகாராஷ்டிரா மாநிலத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே எம்ப்ளாய்மென்ட் கியாரண்டிக்குப் பொறுப்பாக இருந்த திரு. பாகேஜி என்பவர் என்னைப் பார்த்துச் சொன்னார் "ஐயா, நீங்கள் தமிழகத்திலிருந்து வருகிறீர்கள், தமிழர்கள் திறமைசாலிகள், எங்களைப் போல் ஏமாந்து விடாமல், தொழில் வளர்ச்சியில் முதலிலேயே ஊரகத் தொழிலைச் சீர் செய்து, அதற்குத் திட்டம் போட்டு, பிரமாதமாகச் செய்திருக்கிறீர்கள். இப்போது அங்கே பெரிய தொழில்கள் ஆரம்பிக்க, முதலில் தண்ணீர் கிடைக்கிறதா, மின்சாரம் கிடைக்கிறதா, அங்கே பள்ளிக்கூட வசதி இருக்கிறதா என்று பார்க்கிறீர்கள். மக்களுக்கு வேண்டிய ஒரு சமுதாயப் பொறுப்பும் விழிப்புணர்ச்சியும் வளர்ந்துள்ளது. தொழில்கள் என்பதற்கு வெறும் பொருளாதாரத்தை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல், சமுதாயக் கண்ணோட்டத்துடனும் நடக்க வேண்டியவை. உங்களிடமிருந்து நாங்கள் பொறுப்புணர்ச்சியையும், கடமையுணர்ச்சியையும் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று அப்போது அவர் சொன்னார். மக்களுக்கு அதிகப் பொறுப்புணர்ச்சி ஏற்பட நீங்கள் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்றும் அவர் சொன்னார்.

(பிற்பகல் 12-30)

மிகவும் பொருத்தமானது. இன்னும் அதிகமாக உங்களிடமிருந்து நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறதென்று சொன்னார்கள்.

அதற்குப் பிறகு, ஊரகத் தொழில்கள், கிராமத் தொழில்கள், சிறு தொழில்களை ஆரம்பித்திருப்பதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டேன். அவர் ஓரிடத்திற்கு என்னைக் கூட்டிக்கொண்டு சென்றார். அங்கே சாதாரணமாக 'ஃபைபர் கிளாஸ் இண்டஸ்ட்ரீஸ்' நடந்து கொண்டிருந்தது. ஒரு பட்டம் பெற்ற இளைஞர் அதை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருந்தார். அதற்கு

மின்சாரம் வேண்டியதில்லை. பெரிய இடம் தேவை இல்லை. மூன்றே பேர் போதும். சென்ற ஆண்டு பத்தாயிரம் ரூபாய் இலாபம் பெற்றிருக்கிறார்கள். அதில் தான் எவ்வளவு எடுத்துக் கொள்கிறாரோ அதே அளவுக்கு தன்னுடைய ஊழியர்களுக்கும் கொடுத்திருக்கிறார். அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்த 'பைபர் கிளாசை' இரயில்வேக்குக் கொடுத்திருக்கிறார்கள். இரயில்வேயில் முன்பெல்லாம் இரும்பிலே செய்ததைப் போட்டுக் கொண்டிருந்தார்களாம். இப்போது இதைப் போட்டுக் கொள்கிறார்களாம். காரணம் இது மிகவும் இலேசானதாக இருக்கிறது, நிரந்தரமாகவும் இருக்கிறது, அதிக நாட்கள் உழைக்கிறது என்று சொல்கிறார்கள். இவ்வாறு இதுபோன்ற சிறு தொழில்கள் பெரும் தொழில்களாக வளர வாய்ப்பு இருக்கிறது. மேலும் அந்த இளைஞர், மகாராட்டிர மாநில அரசு உதவி செய்யுமானால், இதைப் பெரும் தொழிலாக மாற்ற முடியும் என்று சொன்னார். மேலும் அவர், இதுபோன்ற சிறு சிறு தொழிற் பகுதிகளாகப் பல இடங்களில் செய்ய ஏற்பாடு செய்து, தன்னுடைய தொழில் திறமையை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுத்து பல இடங்களில் செய்யப்படும்போது, இது பெரும் தொழிலாக மாறிவிடும் என்று சொன்னார். இப்போது ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். இதுபோல் பல இடங்களில் தொடங்கி பல, இரண்டாயிரம் ரூபாய் சம்பாதிப்பவர்களை வளர்க்க வேண்டும் என்று சொன்னார். ஆனால் நாம், வெளிநாடுகளிலிருந்து தொழில் நுட்பத்தை வாங்க வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நம்முடைய நாட்டிலேயே இருக்கிற தொழில் நுட்பங்களை நாம் பயன்படுத்துவதில்லை. நம்முடைய நாட்டு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, அவர்களை ஊக்குவித்து நம்முடைய இண்டிஜினஸ் டெக்னாலஜியை வளர்க்க வேண்டும். நம்முடைய மாநிலத்தில் ஐ.ஐ.டி.யில் வேலை செய்கிறவர்களும், அண்ணா பல்கலைக் கழகத்தில் வேலை செய்கிறவர்களும் ஒன்றுசேர்ந்து ஒரு பத்திரிகை நடத்துகிறார்கள். அதிலே அவர்கள் இண்டிஜினஸ் டெக்னாலஜியை வளர்க்க வேண்டுமென்று அதிக அளவில் வற்புறுத்துகிறார்கள். இவ்வாறு நாம் அந்தத் தொழில்களையும் வளர்க்க வேண்டும்.

நூற்புத் தொழிலை எடுத்துக் கொள்ளுங்கள், முன்பு ஒரு ஸ்பிண்டிலில் 3,000 மீட்டர்கள் நூல் நூற்பார்கள். இப்போது 20 மடங்கு அதிகமாக நூற்கக்கூடிய அளவில் வந்திருக்கின்றன. வீட்டிலேயே உட்கார்ந்து நூற்க முடியும். இவ்வாறு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு பல துறைகளில் வளர்ந்திருக்கின்றது. நம்முடைய விஞ்ஞானிகள் நல்ல கருவிகளை எல்லாம் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பயன்படுத்த





ஏற்பாடு செய்தால், இன்னும் அதிகமான அளவில் சிறு தொழில்கள் பெரும் தொழில்களாக வளர வாய்ப்புண்டு. அவற்றைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரும் தொழில்களுக்காக நாம் காத்துக்கொண்டிருக்கக்கூடாது. இவ்வாறு சிறு தொழில்களை பெரும் தொழில்களாக மாற்ற முயற்சிக்கலாம். பெரும் தொழில்கள் துவங்க மத்திய அரசை வற்புறுத்துகிறோம், அவர்கள் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. அவ்வாறு சொல்லிக்கொண்டிருந்தால், அதற்கு எப்போது முடிவு வரும் என்றே கூற முடியாது.

நீலகிரி பிலிம் இண்டஸ்ட்ரிஸ் பற்றி எட்டு வருஷங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறோம். இப்போது அது வேறு மாநிலத்திற்குப் போய்விட்டது. நம்முடைய தொழில் முனைவர்களைப் பயன்படுத்தி, நீலகிரி மாவட்டத்தில் நான்கு இடங்களில் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, நடத்த ஏற்பாடு செய்திருந்தோமேயானால் நாமே அதைச் செய்துகொள்ளலாம். நாம் மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டே இருப்போம். ஆனால் என்றைக்காவது ஒரு முடிவுக்கு வரவேண்டும் அல்லவா? ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவில்லை என்று சொல்கிறார்கள். இப்படிப் பேசிக் கொண்டே இருப்பதைவிட காரியத்தில் ஈடுபடுவது நல்லது. Based Industries பற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம்

(பிற்பகல் 12-35)

அவர்கள் சொன்னார்கள். அதை எவ்வளவு வளர்க்க முடியுமோ அவ்வளவு அதிகமாக வளர்ப்பதிலே நாம் ஈடுபாடு காட்ட வேண்டும். பருத்தியை இப்போது ஏராளமாக நாம் இறக்குமதி செய்வதற்கு இந்த டெக்ஸ்டைல் பாலிசியிலே இருக்கிறது. இறக்குமதி செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். நம்முடைய நாட்டிலே ஒரு காலத்திலே நெட்டைப் பருத்தி, குட்டைப் பருத்தி வளர்ந்து கொண்டிருந்தன. வேளாண்மைத் துறையிலே திட்டமிட்டு, தமிழகத்திலே இனிமேல் நெட்டை இழை பருத்தி, உற்பத்தி செய்ய வேண்டுமென்று ஒரு முடிவு செய்தார்கள். அதன்படி தென் மாவட்டங்களிலே இருக்கிற பயிர்களை அழித்தார்கள். ஆனால் இப்போது நெற்பயிருக்காக பயன்படுத்திய பகுதியே இல்லாமல் போய்விட்டது. ஆகவே அவைகளையெல்லாம் மறுபடியும் ஆராய்ச்சி செய்து, நம்முடைய பல்கலைக் கழகங்களின் மூலமாக, அக்ரிகல்சுரல் பல்கலைக் கழகங்களை இணைத்து, தொழிலின் ஒரு பகுதியாக இதைச் செய்யும்படி தூண்டி, அவர்களை வற்புறுத்திச் செய்தோமேயானால், அடிப்படைத் தேவைகள் எல்லாம் பூர்த்தியாகும்.

[திரு. க. அருணாசலம்] 1985 ஜூலை 11]

தன்னிறைவுத் திட்டத்தில் கிராமத்தைப் பற்றிச் சொல்லும்போது, பொருளாதாரத் தன்மையைப்பற்றிச் சொல்லவில்லை. அதற்கு வேண்டிய 'இன்பிராஸ்டிரக்சர்' நாம் அங்கே வைத்திருக்கிறோமேயொழிய, உற்பத்தி செய்வதற்கு முனையும்போது பெரிய குறைகள் எல்லாம் வருகின்றன. தொழில் மூலமாக தொழில் முனைவர்களைத் தயார் பண்ண பல்கலைக் கழகங்களை நடத்துகிறார்கள். அங்கு எம்.பி.ஏ. படித்தவர்கள் 'வேலை கொடுங்கள்' என்று கேட்கிறார்கள். "பணம் கிடைக்க உதவி பண்ணுங்கள், நாங்கள் தொழில் செய்கிறோம்" என்று சொல்கிற படித்த இளைஞர்களை நான் இதுவரை பார்க்கவில்லை. பி.ஏ., எம்.ஏ., படித்து விடுகிறார்கள். பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி படித்துக்கொண்டு வருகிறார்கள். ஏதாவது ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு பணம் கொடுக்கிறேன் என்று சொல்கிறார்களே, அதற்கு அரசாங்கம் உதவி செய்கிறதே. ஆனால் அந்த படித்த இளைஞர்கள் அதெல்லாம் ரொம்பக் கஷ்டம் என்று சொல்லி தனக்கு வேலை வாங்கிக் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாமும் "நூறு பேர்களுக்கு வேலை கொடுக்கிறோம்" என்று சொல்லி அதன் மூலமாக ஒரு பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கதர் கமிஷன் தமிழ் நாட்டிலே ஒரு பயிற்சி நடத்தியது. 10, 15 பேர்களுக்குப் பயிற்சி கொடுத்தோம். அந்தப் பயிற்சியை இந்த மாநிலத்திற்கு மட்டுமல்ல அது என்று சொல்லி, வேறு மாநிலங்களுக்குக் கொண்டுபோய் விட்டார்கள். என் அந்தப் பயிற்சியை நம்முடைய அரசாங்கமே நடத்தக்கூடாது? நாமே அந்தப் பயிற்சியைக் கொடுக்கலாம்.

அதுமட்டுமல்ல, பலவிதமான தொழில்கள் இருக்கின்றன. எலக்ட்ரானிக் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கு போனாலும் சொல்கிறார்கள். நம்முடைய தமிழகத்திலே எலக்ட்ரானிக்ஸ் தொழில் வளர்வதற்கு ஏராளமான மான வாய்ப்பு இருக்கிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டு எல்லோரும் வேண்டிய வசதிகளை எல்லாம் செய்துகொள்கிறார்கள். எலக்ட்ரானிக்ஸ் மூலமாக நம்முடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும். வேறு தொழில்களுக்கு க்வாலிட்டி கன்ட்ரோல் கூட ஆட்டோமட்டிக்காக வந்து விடுவதை நான் கண்டிருக்கிறேன். ஆகவே இந்த முறையிலே இவைகளில் எல்லாம் கவனம் செலுத்தி நம்முடைய நாட்டிலே ஒரு புதிய மாற்றத்தை, பெரும் தொழில்கள், சிறு தொழில்களுக்கு உதவியாக இருக்கிறமாதிரி, பெரும் தொழில்கள் சிறு தொழில்களோடு இணைந்து நம்முடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிற மாதிரி, இந்த சோசியல் எக்கனாமிக் ரெஸ்பான்சிபிலிட்டியை ஏற்படுத்தினால், அதன் மூலமாக நம்முடைய சமுதாய அமைப்பே



1985 ஜூலை 11] [திரு. க. அருணாசலம்]

ஏற்றம்பெறும். நாம் உலகம் போகிற போக்கிலே போய்க் கொண்டிருந்தால், தமிழ்ப் பண்பு என்று ஒன்று இல்லாமல் போய்விடும். இப்போதெல்லாம் 'மல்ட்டி நேஷனல்ஸ்' எங்கு பார்த்தாலும் தொழிலை ஆரம்பிக்கிறார்கள். அப்போது நம்முடைய நாகரிகம், தமிழ்ப் பண்பு என்று ஒன்றும் இல்லாமல், எல்லோரும் ஒரே மாதிரியாக இருப்போம். ஜார்ஜ் ஆர்வெல் என்பவர் அண்மையில் ஒரு புத்தகம் 1984-ல் எழுதினார். அவர் சொல்கிறார் All animals are equal. Some animals are more equal than the other animals. அப்படித்தான் நம்முடைய சமுதாயம் இருந்து கொண்டிருக்கிறது. All men are equal but some are more equal than others. People continue to live as they have been living in poverty and suffering. We அதாவதுknow about poverty line. இந்தக் கொள்கையை அவர் எப்போது எதற்கு எழுதினார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இப்போது அதை இந்திய நிலைமைக்கு மிகப் பொருத்தமாகச் சொல்லியிருப்பதாக நான் நினைக்கிறேன். இந்த நிலைமைகள் மாற வேண்டும். உண்மையாகவே எல்லோரும் சரிநிகர் சமத்துவமாகப் பகிர்ந்து வாழ்வோர் சமூகத்தை உண்டுபண்ணுவதற்கு இந்தத் தொழில் துறை உதவியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

(பிற்பகல் 12-40)

திரு. க. சுப்பு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தொழிற் கொள்கையும் திட்டங்கள் குறித்தும் நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வேலை வாய்ப்பைப் பெருக்கி, அதன் மூலம் வறுமையை அகற்றும் நோக்கத்தைக் கொண்டு பல திட்டங்கள் நமது மாநிலத்தில் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் தமிழகத்தில் ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சி குறித்து அதிகமான கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது என்பதைக் கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ள விவரங்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. 1977 ஆம் ஆண்டில் 14,789 ஆக இருந்த சிறு தொழில்களின் எண்ணிக்கை 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 60,259 ஆக அதிகரித்துள்ளது என்று இங்கே கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறு சிறு தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் பெரும்பாலானவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதற்காக அரசு எந்த அளவுக்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை நம்மாலே புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் இவ்வாறு தொடங்கப்பட்ட சிறு தொழில்களில் இன்றைக்கு, எத்தனை தொழிற்சாலைகள் உண்மையிலேயே நடந்துகொண்டிருக்கின்றன என்பதையும் நாம் பார்க்க வேண்டும். பல பேர் கோட்டா வாங்கவும் வேறு சிலவற்றை வாங்கவும் மட்டுமே பதிவு செய்துகொள்கிற நிலை இருக்கிறது. அதிலேகூட ஒரு போகஸ் முறை இருக்கிறது. வெறும் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையைக் கண்டு நாம் ஏமாந்துவிடக் கூடாது. பதிவு செய்யப்பட்ட அந்தத் தொழில் நிறுவனங்கள் எல்லாம் முறையாக இயங்குகின்றனவா கோட்டாவுக்காகப் பெறப்பட்டனவா என்பதையும் நாம் ஆய்வு செய்தாக வேண்டும்.

அதைப் போலவே மத்திய அரசிடமிருந்து தமிழகத்தில் தொழில் தொடங்க உரிமங்கள் பெறுவதிலும் இசைவைப் பெறுவதிலும், நாம் நல்ல முன்னேற்றத்தை எட்டியிருக்கிறோம் என்று புள்ளிவிவரங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. இது தமிழகத்தை மேலும் மேலும் தொழில் மயமாக்க நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகள் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. ஆனால் இன்றைய தினம் நமக்கு இருக்கிற இடையூறு என்னவென்றால் மத்திய அரசு வைத்திருக்கிற ஒரு தொழில் கொள்கையாகும். அதன் அடிப்படையில் "தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டம் என்று போட்டு அங்கெல்லாம் சில வகையான தொழில்களைத் தொடங்க உரிமங்கள் வழங்கப்படுகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட மாவட்டங்களே இல்லை என்று சொல்லப்படுகிறது. தொழிற்சாலை இல்லாத மாவட்டம் என்று தமிழில் போட்டிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் "நோ இன்டஸ்ட்ரி டிஸ்ட்ரிக்ட்" என்று போட்டிருக்கிறார்கள். எனவே ஒரு தொழிலும் இல்லாத மாவட்டம் என்ற அடிப்படையில் பார்க்கிறார்களா அல்லது பல தொழில்கள் இல்லை என்ற அடிப்படையில் பார்க்கிறார்களா என்று எனக்குப் புரியவில்லை. காரணம் தொழில்களே இல்லாத மாவட்டம் என்பது வேறு. 'நோ இன்டஸ்ட்ரி டிஸ்ட்ரிக்ட்" என்பது வேறு. இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதிலே எதை மத்திய அரசு எடுத்துக்கொண்டு உரிமங்களைக் கொடுக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினால் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





இவ்வாறு மத்திய அரசு நமக்கு உரிமங்கள் வழங்குவதில் பல்வேறு தடங்கல்கள் இருந்தாலும், தடைகள் இருந்தாலும், நாம் இவற்றையெல்லாம் தாண்டி தொழிற் வளர்ச்சியை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதற்காக ஒரு அமைப்பையே உருவாக்கி, இதற்காக ஒரு அதிகாரியை டெல்லியிலே போட்டு நாம் தமிழகத்திற்காகக் கேட்கிற உரிமங்களை மத்திய அரசிடமிருந்து விரைவாகப் பெறுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். இவைகளெல்லாம் தமிழகத்தை விரைவாக தொழில் மயமாக்க வேண்டும் என்பதற்காக நாம் மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகள் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை.

அடுத்து, நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் முதலீடு என்பது கடந்த பல ஆண்டுகளாகவே மிகவும் குறைந்துவிட்டது என்று புள்ளிவிவரங்கள் இங்கே சுட்டிக்காட்டுகின்றன. அதிலும் புதிதாக தமிழகத்தில் மத்திய அரசு முதலீடு செய்வதற்குத் தயக்கம் காட்டுகிறது என்பது ஒருபுறம் இருந்தாலும், ஏற்கெனவே தமிழகத்தில் இருக்கிற தொழிற்சாலைகளையும் வேறு பல இடங்களுக்கு எடுத்துச் செல்லும் நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட அபாயம் அதிகமாக இருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே தமிழகத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் சேலம் இரும்பாலை உருட்டாலையாக மாறியிருப்பது வேறு. இருக்கிற தொழில்களில் ஒன்றான போட்டோ பிலிம் தொழிற்சாலையின் பிரிவு இங்கிருந்து வேறு மாநிலங்களுக்குச் சென்றுகொண்டிருக்கும் நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல. பாரத் ஹெவி எலெக்ட்ரிகல் நிறுவனம் திருச்சியில் செயல்படுகிறது. அங்கேதான் 'ஹெவி பாய்லர் பிளாண்ட்' இருக்கிறது. அதன் பிரிவுகள் இன்றைக்குப் பல்வேறு மாநிலங்களுக்குப் போகிற நிலைமை இருக்கிறது. பவுலர் மில் ஏற்கெனவே திருச்சியில் இருந்தது, இப்போது ஹைதராபாத்துக்குப் போய்விட்டது. அதைப் போலவே இன்டஸ்ட்ரியல் வால்வ் செய்வது திருச்சியில் இருந்தது. மத்திய அரசில் திரு. சனானா அவர்கள் அமைச்சராக இருந்தபோது, அவருடைய சொந்த ஊரான கோவிந்த்வால் என்கிற பஞ்சாபில் உள்ள இடத்திற்குப் போய்விட்டது. அதைப் போலவே கன்ட்ரோல் பேனல் அசெம்பளி திருச்சியில் இருந்தது இப்போது பெங்களூருக்குப் போய்விட்டது. எலெக்ட்ரிகல் பிரிசிபிடேடர்ஸ் எல்லாம் செய்வது ஏற்கெனவே திருச்சியில் இருந்தது இப்போது இராணிப்பேட்டைக்கு வந்திருக்கிறது. இராணிப்பேட்டையில் புதிதாகத் தொழில் தொடங்கியதாகச் சொல்லுவார்கள். ஆனால் உண்மை நிலை என்னவென்றால், திருச்சியில் செயல்பட்டுக்கொண்டிருந்தது இன்றைக்கு இராணிப்பேட்டைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதைப்போலவே புளோயர்

ஷாப் என்பது ஒரிசாவுக்கு மாற்றப்படும் அபாயம் இருக்கிறது. நான் எனக்குத் தெரிந்த விவரங்களைச் சொல்லுகிறேன். தெரியாத விவரங்கள் நிறைய இருக்கக்கூடும். திருச்சியில் பி.எச்.இஎல். மிகப் பெரிய நிறுவனம். அதற்கு யார் யார் தலைவராக வருகிறாரோ அவருக்குச் சொந்தமான இடத்திற்கு அதன் பிரிவுகளை மாற்றுவதற்கான முயற்சியை மேற்கொண்டு மாற்றி விடுகிறார். அப்படிப்பட்ட போக்கைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சி களை மேற்கொள்ளுவதற்கு நாம் நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிற் கொளகை விளக்கக்குறிப்பில் பல சொல்லப்பட்டிருந் தாலும்கூட, சில விடுபட்டுப் போயிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் நாடு ஸ்டீல்ஸ் ஏன் விடப்பட்டது என்று எனக்குப் புரியவில்லை. தமிழ் நாட்டில் தமிழ் நாடு ஸ்டீல்ஸ் மிகவும் முக்கியமான தொழிற்சாலை. ஒரு லட்சம் டன் கெபாசிடி உள்ள ஒரு ஸ்டீல் ரோலிங் மில் அங்கே வைத்திருக்கிறோம். ஆனால் 50,000 டன் கெபாசிட்டிக்குத் தான் நாம் உற்பத்தியைச் செய்து கொண்டிருக்கிறோம். காரணம் அங்கே ஒரே ஒரு பர்னஸ்தான் இருக்கிறது. இரண்டாவது பர்னஸ் இன்னும் வர வில்லை. இதன் காரணமாக 50,000 டன் பெல்லட்ஸ்தான் உற்பத்தி செய்யக் கூடிய திறனோடு இருக்கிறது. அதிலும் 33,000 டன் அளவுக்குத்தான் பெல்லட்களைத் தயாரிக்கிறோம். அந்த அளவுக்கு அதன் கெபாசிடி அன்- யுடிலைஸ்டாக இருக்கிறது. 'கெபாசிடி யுடிலைசேஷன்' அங்கே மிகக் குறை வாக இருக்கிறது. அதையும் அங்கே தயாரிக்க முடியாது என்ற நிலையில் வெளியே கொடுத்து தயாரிக்கிறார்கள். தனியார்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குச் செல்வாக்கு இருக்கிற காரணத்தால், அவர்கள் அதையும் வாங்கிக்கொள்ள முடிகிறது.

(பிற்பகல் 12-45)

அதற்குக் காரணம் நம்முடைய ஸ்டீல் ரோலிங் மில்களில் விசேஷமான நிலை மைகள் இருப்பதுதான். மொத்தத்தில் தமிழகத்தில் இருபத்தைந்துக்கு மேற் பட்ட ஸ்டீல் ரோலிங் மில்கள் இருக்கின்றன. இதில் பெரும்பாலான மில்களில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் கிடையாது, வடநாட்டுக்காரர்கள்தான் வைத் திருக்கிறார்கள். இராமகிருஷ்ண கோல்வந்ராய், திருவொற்றியூர், ஸ்ரீராம் மெஷினரி கார்ப்பரேஷன், திருவேணி ஸ்டீல்ஸ் என்ஜினியரிங், போன்று பல கம்பெனிகள் இருக்கின்றன. அவைகளின் பெயர்களையெல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை. இந்தக் கம்பெனிகளையெல்லாம் வடநாட்டி



லிருந்து வந்தவர்கள்தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கே தொழிலாளிகள் கூட வடநாட்டுக்காரர்கள்தான். அவர்கள் எல்லோரையும் அந்தக் கம்பெனி யின் காம்பவுண்டுக்குள் ஒரு கொட்டகை போட்டு அங்கேயே குடியமர்த்தி யிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் செய்யக்கூடிய தில்லுமுல்லுகள் வெளியே தெரியக்கூடாது என்பதற்காகத்தான். இரயில்வே மூலமாக திருட்டுத் தனமாகக் கொண்டு வருவதும், கொண்டு போவதும் வெளியே தெரியக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் செய்திருக்கிறார்கள். அங்கே தொழிற் சங்கம் வரக்கூடாது, அதிகாரிகள் வரக்கூடாது. உள்நாட்டிலேயே வெளிநாடு மாதிரி நடக்கிறது. வரியற்ற விற்பனை மண்டலத்திலே போக முடியாது என்பதைப் போல இந்த மண்டலத்திலேயும் நாம் போக முடியாது. அப்படி ஸ்டீல் ரோலிங் மில்கள் நடத்தப்படுகின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய தொழி லாளிகளையும், மூலப்பொருள்களையும் கொண்டு வருகிறார்கள். ஆனால் நம்மால் நடத்தப்படும் ஸ்டீல் ரோலிங் மில்களில் கப்பாசிட்டி யுட்டிலைசேஷ னுக்கு பில்லெட்களைக் கொடுக்க முடியவில்லை. அங்குள்ள பில்லெட்ஸ் டைவர்ட்டாகிறது. டில்லியிலேயிருந்து லைசென்ஸ் வாங்குவது என்பது அவர் களுக்குச் சுலபமாக இருக்கிறது. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கூட சட்டமன்றப் பேரவையில் பேசும்போது, டில்லியில் லைசென்ஸ் வாங்க டில்லியைத் தெரிந்த ஆளைப் போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். டில்லியில் தெரிந்த ஆளைப் போடுவதிலேகூட ஒரு அபாயம் இருக்கிறது. அவர்கள் டில்லியில் தெரிந்த ஆளைப் பார்த்து அவர்களிடமே விஷயத்தை முடித்துவிடுகிறார்கள். ஆகவே நமக்குத் தெரியாத, டில்லி தெரிந்த ஆளைப் போடுவதிலும் அபாயகரமான நிலைமை வந்துவிடும். தொழிலில், தொழில் தெரிந்த ஆளாக இருந்துவிட்டால், வேறு அபாயகரமான நிலை வந்துவிடும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, டில்லியிலே தெரிந்தவர் என்றால், டில்லியில் உள்ள முக்கிய அலு வலகத்தில் உள்ள அதிகார வட்டாரத்தைத் தெரிந்தவர், மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதைப் போல் வேலைகளைச் செய்கிற ஆள் அல்ல.

**திரு. க. சுப்பு:** அப்படி அதிகார வட்டாரங்களைத் தெரிந்தவர்களைப் போடுவது நல்லது. ஏனென்றால் பஞ்சாபில், அரியானாவில் உள்ளவர்கள் எல்லாம் லைசென்ஸ் உடனடியாக வாங்குகிறார்கள். கட்டிடங்கள் கட்டா மலேயே லைசென்ஸ் வாங்கிவிடுகிறார்கள். அவர்கள் அந்த அளவிற்கு நெருக் கத்தில் இருக்கிறார்கள். நாம் தள்ளி உட்கார்ந்திருக்கிறோம். ஆகவே லைசென்ஸ் வாங்குவதும் கஷ்டம், தொழிலைத் தொடங்குவதும் கஷ்டம்

[திரு. க. சுப்பு] [1985 ஜூலை 11

இப்படிப்பட்ட நிலைகளில் அதிகாரிகளைப் போடும்போது, நம்முடைய மண் வாசனை உள்ள அதிகாரிகளாக இருந்தால் நல்லது. ஸ்டீல் பிளான்டைப் பொறுத்தவரையில், சோவியத் நாட்டுடைய கொலாபரேஷனோடு போட்டிருக்கிறோம். ஆனால் கப்பாசிட்டி யுட்டிலைசேஷனே கிடையாது. அதற்கு வேண்டிய பில்லெட்ஸ் இல்லாமல் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கியிருக்கிறோம். ஆயிரம் டன் பில்லெட்சை ஒரே ஒரு மாதத்தில் ஆந்திரா ஸ்டீல் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கியிருக்கிறோம். ஆனால் அவர்கள் 16 இலட்சம் டன் இருப்பு வைத்திருக்கிறார்கள். 'ஹையஸ்ட் புரடக்ஷன்' அளவிற்கு அவர்கள் ரீச்சாகிவிட்டார்கள். இவைகளையெல்லாம் கருத்திற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். ஐயர்ன் அண்டு ஸ்டீலைப் பொறுத்தவரையில், நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள் என்ன செய்கிறார்கள், ஏன் அவர்கள் தொழிலாளிகளை வெளியே விடமாட்டேன் என்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.

'டிட்கோ'-வின் நிர்வாகத்தின் கீழ் பல்வேறு தொழிற்சாலைகளை வைத்திருக்கிறார்கள். ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரி, அரியலூர் சிமெண்ட் பாக்டரி, மாயனூர் ஆஸ்பெஸ்டாஸ் ஆகிய கம்பெனிகளை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதிலெல்லாம் நாம் கவனம் செலுத்த வேண்டியதுதான். தனியாரிடத்திலே உள்ள சிமெண்ட் கம்பெனிகள் லாபத்திலே நடக்கின்றன. ஆனால் நம்முடைய தொழிற்சாலைகள் ஏன் லாபத்திலே நடக்கவில்லை என்பதைக் கண்டுபிடித்தாக வேண்டும். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள்கூட லாப நட்டக் கணக்கையெல்லாம் சொன்னார்கள். நாம் போட்டுள்ள முதலீட்டுக்கு ஏற்ப லாபம் வருகிறதா நஷ்டம் வருகிறதா என்றெல்லாம் சொன்னார்கள். நம்முடைய ஆறுதலுக்காக 'பிராஃபிட் பிஃபோர் டாக்ஸ்' என்று போட்டிருக்கிறார்கள். 'பிஃபோர் டாக்ஸ்' என்று பார்த்தால், ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் வருகிறது. 'ஆஃப்டர் டாக்ஸ்' என்று பார்த்தால் லாபம் வருகிறதா, நஷ்டம் இருக்கிறதா என்றால், நாம் போட்ட முதலீட்டுக்கு ஏற்ப லாபம் இல்லை. மேலும் டிட்கோவின் சப்சிடியரி நிறுவனங்கள் எல்லாம் சேர்த்து 603 கோடி ரூபாய் மூலதனம் போட்டு 10,500 பேருக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அதிலும் 'லே-ஆஃப்' இல்லாமல் இருந்தால்தான். மின்சாரம் வேறு இல்லாமல் போகிறது. இரயில் வேகன் இல்லாமல் போகிறது, நிலக்கரி இல்லாமல் போகிறது. இந்த நிலையில் பக்கத்து மாநிலங்களோடு போட்டி போடுவது கொஞ்சம்



1985 ஜூலை 11] [திரு. க. சுப்பு]

கஷ்டம்தான். ஆந்திராவில் நிறைய ஸ்டீல் இன்டஸ்ட்ரீஸ் வருகிறது, நிறைய சிமெண்ட் இன்டஸ்ட்ரீஸ் வருகிறது. ஏகப்பட்ட புரடக்ஷன் இருப்பதால் குறைந்த விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-50)

இங்கே ஆஸ்பெஸ்டாஸ் பேக்டரி வைத்திருக்கக்கூடிய தனியார் நிறுவனம் அரக்கோணத்திலே இருக்கின்றது. அங்கே ஆஸ்பெஸ்டாஸ் நிறுவனம் ஆரம்பித்திருப்பதற்குக் காரணம் அவர்கள் சிமெண்ட் பாக்டரியும் வைத்திருக்கின்றார்கள். அப்படி மெட்ராஸ் சிமெண்ட் பேக்டரி என்று வைத்திருப்பதால்தான் அவர்கள் அந்த ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலையை வைத்திருக்கின்றார்கள். அந்த மெட்ராஸ் சிமெண்ட் பேக்டரியில் உற்பத்தியாகும் சிமெண்டை என்ன செய்கின்றார்கள்? அதையும் கேரளாவில் விற்றுவிடுகின்றார்கள். ஆலங்குளத்திலே இருந்து கேரளா பக்கம், நல்ல விலைக்கு அங்கே விற்றாகிவிடுகிறது. குறைந்த விலைக்கு ஆந்திராவிலே அல்லது மற்ற வட மாநிலங்களிலேயிருந்து வாங்கிக்கொள்கின்றார்கள். பிறகு ஆஸ்பெஸ்டாஸ் செய்கின்றார்கள். அவர்களுடைய சிமெண்ட் இருந்தாலும், அதை அதிக விலைக்கு கேரளாவில் விற்றுவிடுகின்றார்கள். லாரிச் செலவு திருச்சிக்குப் போவதற்கு எவ்வளவு என்று கணக்குப் பார்த்து செய்கின்றார்கள். ஃப்ரெய்ட்பற்றியெல்லாம் பார்க்கின்றார்கள். இங்கே இரண்டு மடங்கு இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் என்ன? நஷ்டம் வந்தால் அதைப்பற்றி கவனிக்க வேண்டும். ரெஸ்பான்சிபிலிட்டி பிக்ஸ் பண்ண வேண்டும் என்று சொன்னார்கள். யாராக இருந்தாலும் நிர்வாகத்திலே போடுகிறோம். அப்படிப் போடும்போது, அது யாராக இருந்தாலும் அந்தப் பொறுப்பு இருக்க வேண்டும். பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும். அந்தப் பொறுப்பு இதுவரைக்கும் இல்லை. ரொம்பவும் ஊழலாக இருந்தால், வேறு இலாகாவிற்கு மாற்றி விடுகிறார்கள். அவ்வளவுதான். வேறு எந்த டிமோஷனும் கிடையாது. இலாகாவிலிருந்து மாற்றுகிறோம். அவ்வளவுதான். பல இடங்களிலே, நம்மைப் பொறுத்தவரையில், மூலதனம் போடுவதில் எந்தக் குறையும் இல்லை. அங்கே உற்பத்தி குறைவாக இருந்தால், அதற்கு என்ன காரணம் என்று கண்டறிய வேண்டும். அதை சரிப்படுத்த வேண்டும். அந்த நடைமுறை நம்மிடம் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. இங்கே சேர்மென் என்று போட்டிருக்கிறோம். சேர்மன் சேரோடு இருந்துவிட்டுப் போகிறார். அத்தோடு அவர் காரியம் முடிந்துவிடுகிறது. அங்கே பிளாண்டிலே என்ன நடக்கிறது? ஆலத்தூரிலே என்ன நடக்கிறது?, அரியலூரில் என்ன நடக்கிறது? நினைத்த பிளான்படி சரியாக நடப்பதில்லை. இதற்காக டெவலப்மெண்ட் மேனேஜர்,

(திரு. க. சுப்பு) [1985 ஜூலை 11

மேனேஜிங் டைரக்டர் எல்லாம் இருக்கின்றார்கள். அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பார்க்கின்றார்கள். அவர்கள் அங்கு பார்க்கும்போது நன்றாக இருக்கின்றது. இங்கே வந்தால் சிக்கலாக இருக்கிறது. வந்த பிறகு தான் தெரிகிறது. சிமெண்ட்டிலே சரப்பகை இருக்கிறது என்று தெரிகிறது. அதற்கு என்ன பண்ணுவது என்று பார்க்கின்றார்கள். அதற்கு டிரையர் வேண்டும் என்கின்றார்கள். புதிய மெஷினரி வேண்டும் என்று சொல்கின்றார்கள். நாம் ரொம்ப நஷ்டப்பட வேண்டியிருக்கின்றது, என்ன காரணம்? சிமெண்ட் பாக்டரியைப் பொறுத்தவரையில், நிர்வாகத்திலே கோளாறுகள். நிர்வாகத்திலே இருப்பவர்களைப்பற்றி நாம் சொல்லி பிரயோஜனம் இல்லை. நிர்வாகத்தில் வருகின்றவர்களுக்கு 'பிசினஸ் மைண்ட்' இருக்க வேண்டும். Business-like people -ஐ நாம் கொண்டு வருகிறோமா என்றால் இல்லை. டெக்னிக்கல் பீபிளை நாம் கொண்டு வருவதில்லை. நமக்கு பொதுத் துறையிலே தொழில்களைக் கொண்டுவர வேண்டும் என்பது கொள்கை. அந்த நோக்கத்தோடுதான் அதிகாரிகளைப் போடுகிறோம். அவர்களுக்கு முடிந்தது அவ்வளவுதான். நாம் எந்த அதிகாரிகளைப் போடுகிறோம். ரெவின்யு அதிகாரிகளைத்தான் போடுகிறோம். ரெவின்யு அதிகாரிகளுக்குத் தெரிந்தது எல்லாம் கலெக்ஷன்தான். அதை அவர்கள் செய்வார்கள். புரொடக்ஷனுக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் கிடையாது. 'புரோடியூஸ்' பண்ணிவிட்டுதான் 'கலெக்ட்' பண்ண வேண்டும். ரெவின்யு அதிகாரிகள் வேறு என்ன செய்வார்கள்? டிரெயினிங் ஓரியன்டேஷன் வேறு. அவர்களை நான் குறை சொல்லவில்லை, ஐ.எ.எஸ். அதிகாரிகள். அவர்கள் நிர்வாகம் தெரிந்தவர்கள்; கலெக்டர்களாகப் போவார்கள். அவர்களைக் கொண்டுவந்து பேக்டரியிலே போடுகிறோம். அதுவும் அவர்களை நாம் நிரந்தரமாக அங்கே போட்டால், அவர்களுக்கு இன்டரஸ்ட் இருக்கும். அதன் காரணமாக அவர்கள் நம்முடைய வாழ்வு இதிலேதான் அடங்கியிருக்கின்றது என்ற இன்ட்ரஸ்டோடு செய்வார்கள். 'இன்ட்ரஸ்ட்' இருப்பவனை 'செலக்ட்' பண்ணிப் போட வேண்டும். அப்படி இல்லாமல் நமக்குப் பிடித்தவரை இங்கே போடுவோம், பிடிக்காதவரை அங்கே போடுவோம் என்று போடுகிறோம். அந்த அதிகாரிகள் அங்கே போய் எதையும் செய்கின்றார்கள்: அதனாலேதான் நமக்கு நஷ்டம் வருகிறது. வேறு ஒன்றுமில்லை. நஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. என்ன கொள்கை முடிவு என்று கேட்டால், யாரையும் டெபுட்டேஷனிலே அனுப்புவதில்லை. டெபுட்டேஷனிலே அதிகாரிகளை அனுப்பி நிர்வாகம் பண்ணுகின்ற முறை கிடையாது. பூரா காலமும் அந்த பிளான்ட்டிலேயே இருக்க வேண்டும். அங்கேயிருந்து வந்தால்



1985 ஜூலை 11] (திரு. க. சுப்பு)

இங்கேயிருந்து டிப்பார்ட்மெண்டுக்கு வர முடியாது. இங்கேயேதான் இருக்க வேண்டும். ஆப்ஷன் தெரிவித்துவிட வேண்டும். அங்கே யு.பி.எஸ்.சி. மாடலில் வைத்துவிடுகிறார்கள். பப்ளிக் என்டர்பிரைசஸ் செலக்ஷன் போர்ட் என்று வைத்தாகிவிட்டது. செலக்ஷன் போர்டிலே சீனியர் ஆபீசர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அந்த அதிகாரிகளுக்கு என்ன என்ன தகுதி இருக்கவேண்டும் என்று அறிந்து முடிவு பண்ணுகிறார்கள். அங்கே வந்துவிட்டால், வேறு எங்கும் போகமுடியாது. இதைப்போலவே பீகார் மாநிலத்திலேயும் செய்திருக்கின்றார்கள். இது எல்லாம் வளர்ச்சித் திட்டங்கள். நாம் அந்தப் பக்கம் போகவில்லை. பலதொழில்களிலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைத்தான் போடுவது என்று இல்லை. அவர்களைத்தான் போடவேண்டுமென்ற நிலைமை இன்றைக்குக் கிடையாது. டிப்ளமோ இன் எலக்ட்ரிகல் என்ஜினியரிங் திரு. கிருஷ்ணமூர்த்தி. பி.ஈ. அவர்கள் பி.எச்.ஈ.எல். சேர்மேனாக இருந்தார். அவர் நல்ல நிர்வாகியாக இருந்தார். இப்போது மொத்தமாக எல்லா பி.எச்.ஈ.எல். நிறுவனங்களுக்கும் சேர்மேன் ஆனார். இந்தியாவிலேயே சிறந்த நிர்வாகம் அவர் செய்தார். பிறகு அவர் மாருதிக்கு சேர்மேன் ஆனார். "செய்ல்"-க்கு அடிஷனல் சேர்மேன். நாம ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டால் தான், நிர்வாகம் நடக்கும் என்ற அந்த concept ஓடு இருக்கிறோம். அந்த கன்செப்டை எடுத்துவிட்டு மற்றவர்களைக் கொண்டு வர வேண்டும். நாமும் செலக்ஷன் போர்ட் வைத்துச் செய்ய வேண்டும். மத்திய சர்க்காரிலே பார்க்கிறார்கள். அவர்கள் என்னென்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்று பார்க்க முடிகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் பார்க்கின்றார்கள். எனக்குத் தெரியும் ஒரே டிஸ்ட்ரிக்டைச் சேர்ந்தவர்கள் 10, 12 பேர்கள் ஒரே மாதத்தில் வேலைக்கு வருகின்றார்கள். டென்சேம் நிர்வாகத்தில் அப்படி நடந்திருக்கிறது. அவர்கள் எப்படி வருகின்றார்கள் அவர்கள் 'கேர் ஆப் அட்ரஸ்' வைத்துக்கொண்டு வருகிறார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் எப்படி அனுப்பினார்கள் என்று தெரியவில்லை. அவர்களுக்கு இன்டர்வியூ கார்டு அனுப்பியிருக்கிறார்கள். உள்ளூரில் இருப்பவர்களுக்கு வருவதில்லை. அவர்களுக்கு வரமாட்டேன் என்கிறது.

(பிற்பகல் 12.55)

ஊர்களைசேவுடைய நன்மைக்காகச் செயல்பட வேண்டும். அப்படி இல்லாமல் அவர்களே கோஷ்டி சேர்த்துக்கொண்டு, அவர்களுக்குள்ளேயே தகராறை உண்டுபண்ணக்கூடாது. தமிழ் நாடு குரோமைட்ஸ் கெமிகல்ஸ் இராணிப்பேட்டையில் இருக்கிறது. அங்கே ஒரு அதிகாரி எக்சிகியூடிவ் டைரக்டர்; இன்னொருவர் ப்ரொடக்ஷன் மேனேஜர். இரண்டு பேருக்கிடையே

[திரு. க. சுப்பு] [1985 ஜூலை 11

கருத்து வேறுபாடு. மேலே உள்ளவர் ப்ரொடக்ஷன் மேனேஜருக்கு வேண்டியவர். அதனாலே ப்ரொடக்ஷன் மேனேஜரைப் ப்ரொடக்ட் பண்ணுவதற்காக டெலிகிராம் கொடுத்து வரச்செய்து, தமிழ் நாடு ஸ்டீலில்-ல் வேலை கொடுக்கிறார். ஆனால் எக்சிகியூடிவ் டைரக்டர் பிடிக்கலை, ஒத்துவராத ஆள். அவருக்கு 6 மாதச் சம்பளம் கொடுத்து போகச் சொல்லிவிட்டார். அவர் கம்பெனி என்றால் கொடுப்பாரா? 23,000 ரூபாயை மொத்தமாகக் கொடுத்து 'போ' என்று சொல்வாரா? ஏன் அப்படிச் சொல்கிறார்? தனக்கு ஒத்து வராத ஆள் தனக்கு வேண்டாத ஆள் அவனைக் காலி பண்ணு—இப்படி விவகாரங்கள் நடக்கின்றன. இதுமாதிரி விவகாரங்களைத் தடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் நான்-அபிஷியல் சேர்மெனைப் போட வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டோம். எத்தனையோ பேர்கள் கேட்டார்கள், நான்-அபிஷியல் சேர்மென் போட வேண்டுமென்று. சம்பந்தமில்லாத ஆள் இருந்தால், அவர்கள் கவனிப்பார்கள் என்றுதான் அவர்களைப் போடச் சொன்னோம். நல்லவேளை, இன்றைக்கு டிட்கோவில் நான்-அபிஷியல் சேர்மென் என்று அரசு அறிவித்திருக்கிறது. அறிவித்த உடனே, மறுநாள் 'கோல்மால்' நடந்திருக்கிறது. முன்னாலே இருந்த 2, 3 சேர்மன் டிட்கோ மாத்திரமல்ல, அதனுடைய சப்சிடியரியையும் சேர்த்துப் பார்த்தார்கள். அவர்கள் எல்லாவற்றையும் பார்த்தார்கள். ஆனால் இன்றைக்கு போடப்பட்டுள்ள சேர்மனுக்கு என்ன பவர் என்றால், டிட்கோ என்றால் டிட்கோ மாத்திரம்தான். அதனுடைய சப்சிடியரிஸ் கிடையாது என்று ஆர்டர் வாங்கி வருகிறார்கள். சப்சிடியரிஸ் என்றால் ஸ்டீல் இருக்கிறது, டான்சம் கிடையாது. அதனுடைய சப்சிடியரியாக உள்ள 4 யூனிட்டுகள் கிடையாது என்று ஆர்டர் போடுகிறார்கள். என்ன காரணம்? அதிகாரிகள் வர்க்கத்திற்கு இன்னும் அந்த மனப்பான்மை வரவில்லை. நாம் உட்கார்ந்த இடத்தில் எப்படி ஒரு நான்-அபிஷியலை உட்கார வைப்பது என்று நினைக்கிறார்கள். அப்படி அவர்கள் உட்கார்ந்தாலும், இதை மாத்திரம் பார்க்கட்டும் என்று நினைக்கிறார்கள். என்ன நடந்தது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள்தான் சொல்ல வேண்டும். முன்பு இருந்த சேர்மனுக்குக் கொடுத்த அதிகாரம் ஏன் நான்-அபிஷியல் சேர்மனுக்கு மறுக்கப்படுகிறது? இதற்கு விசேடமான காரணங்கள் இருக்கின்றனவா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்னும் சில அதிகாரிகள் இருக்கிறார்கள். எல்லோர் மீதும் குறை சொல்லவில்லை. அவர்கள் பிரைவேட் ஓரியன்டட் ஆக இருக்கிறார்கள். பாளையம் சிமெண்ட் பாக்டரி ஆரம்பிக்க லெட்டர் ஆஃப் இன்டன்ட் கேட்டோம் என்று சொல்லுகிறார்கள். கேட்டு எவ்வளவு நாள் ஆயிற்று? 7, 8 வருடங்கள் ஆகிறது. தமிழ்நாடு அரசு 1980-ல் அதற்கு கிளியரன்ஸ் கொடுத்துவிட்டது. ஏன் 'லெட்டர் ஆஃப் இன்டன்ட்' வரவில்லை? அது தடுக்கப்படுகிறது. சில அதிகாரிகள் என்ன நினைக்கிறார்கள் என்றால், பாளையம்



1985 ஜூலை 11] [திரு. க. சுப்பு]

சிமென்ட் பேக்டரி வேண்டாம் என்று நினைக்கிறார்கள். ஏற்கெனவே நஷ்டம், இதை வேறு எடுக்க வேண்டுமா என்று சொல்லுகிறவர்கள் இருக்கிறார்கள். இப்படிச் சொல்லுகிறவர்களை வைத்துக்கொண்டு எப்படி தொழிலை லாபகரமாக நடத்த முடியும்? நல்லவேளை, தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய நிதித்துறை அதை ஏற்றுக்கொள்ளாததால், அந்தப் 'ப்ரபோசல்' 'ரிஜெக்ட்' ஆகிவிட்டது. ஆனால் அதே அதிகாரிகள் டெல்லிக்குப் போய் 'சாபடேஜ்' பண்ணமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? பாளையம் சிமென்ட் பாக்டரிக்கு 'லெட்டர் ஆஃப் இன்டன்ட்' வராததற்கு என்ன காரணம் பக்கத்தில் உள்ள தனியார் முதலாளிக்கு அதில் 'இன்டரஸ்ட்' இருப்பதால், 'ஸ்டாப்' பண்ணி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அவருக்கும், நம்முடைய அதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கிறதா? என்ன காரணம்? மத்திய அரசிடம் இதை வலியுறுத்த முடியாதா? 7, 8 வருடங்களாக 'லெட்டர் ஆப் இண்டன்ட்' கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். அதைப்போல மினி சிமென்ட் பிளான்ட் அரசு ஆரம்பிக்க அனுமதி கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். 8 மினி சிமென்ட் பிளான்டுகள் ஆரம்பிக்க வேண்டும். அதற்கு ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். முன்னாலே பைலட் பிராஜக்ட் போட்டு, நல்ல முறையிலே அது முதுகுளத்தூரில் நடந்தது. சென்ட்ரல் கவர்ன்மென்ட் சென்ட்ரல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் வேண்டுமென்று கேட்டார்கள். அதை அவர்களுக்குத் கொடுத்தோம். ரொம்ப நாள் அதை அவர்கள் நடத்தினார்கள். இப்போது 'நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்கிறார்கள். அதை டான்சம் எடுத்துக்கொள்ளும்போது, வையபிலிடீஸ் இருக்கிறது. 78 தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதை எப்படியாவது நடத்த வேண்டுமென்று வரும்போது, அதற்குரிய துரித நடவடிக்கை இல்லை. அங்கே இருக்கும் அதிகாரி, இது நமக்கு வேண்டாமென்று எழுதுகிறார். இது 'வையபிள்' ஆக இல்லை என்று எழுதுகிறார். இதுவரைக்கும் வையபிளாக இருந்தது. இப்போது வையபிளாக இல்லை. அதிகாரியே வையபிளாக இல்லை. பின் எப்படி 'யூனிட்' வையபிளாக இருக்கும்? இப்படி இருக்கிறவர்கள் எப்படி இன்டஸ்ட்ரீஸ் நடத்த முடியும்? 78 தொழிலாளர்கள் சும்மா இருப்பதோடு, முதுகுளத்தூரில் பிளான்ட் ஓடாத நிலையில், பக்கத்திலே தனிப்பட்ட முதலாளி ஒருவருக்கு மினி பிளான்டுக்கு பெர்மிஷன் கொடுக்கப்படுகிறது. அதிகாரிகளைப்பற்றி தனிப்பட்ட முறையில் சொல்ல விரும்பவில்லை. எல்லா ஆப்டிடியூட்களையும் பார்த்து, தொழிலிலே உற்சாகம் காட்டுகிறவர்களை எடுத்துப் போடுவது நல்லது. இல்லை என்றால், இதை சந்தைமடம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இங்கே இல்லை என்றால், டெல்லிக்குப் போகலாமென்று நினைக்கிறார்கள்.

இன்னும் ஒன்று. உப்புக் கழகம் நாம் வைத்திருக்கிறோம். வேலை வாய்ப்பை அதிகமாகப் பெருக்குவதற்காகத் தொடங்கப்பட்ட ஒரு நல்ல அமைப்பு இது. மிகவும் பின் தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலி நோக்கம்-மாரியூரில் ஆரம்பிக்கப்பட்டது. அது பட்டுக்கோட்டைக்குப் பக்கத்தில் தம்பிக் கோட்டையிலும் இருக்கிறது. தமிழ் நாட்டில் ஜி பெல்ட் இருக்கிறது. உப்பை அடிப்படையாக வைத்து இரசாயனத் தொழிற்சாலையை உருவாக்க நல்ல வளம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி தொழில் வளத்தைப் பெருக்க பார்க்கிறோம். அதோடு வேலை வாய்ப்பைப் பெருக்கவும் பார்க்கிறோம். இந்தக் கழகத்தில் 2 கோடி ரூபாய் முதலீடு போட்டோம். 600, 700 பேர்கள் வேலை பார்த்தார்கள். இன்றைக்கு அந்த எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து 150 பேர் அளவுக்குக் குறைந்துவிட்டது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. நிர்வாகத்தில் பல கோளாறுகள். டாக்டர் மேத்யூ, ஜாயிண்ட் டைரக்டர் ஒரு டெக்னிகல் மேன். அவர் நன்றாக நடத்தினார். அவர் துறையிலிருந்து டெப்புடேஷனில் போகும் போது அவருக்கு 250 ரூபாய் கொடுக்க வேண்டுமாம். அதை கேட்கிறார். தரமாட்டேன் என்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீடிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-00)

திரு. க. சுப்பு: டெப்யூடேஷன் என்று அனுப்பும்போது அவருக்கு 250 ரூபாய் அலவன்ஸ் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கவில்லை. ஆகவே அவர் அங்கு போய் பணியாற்ற விரும்பவில்லை. அதுபோல் அங்கே உற்சாகமாகப் போய் வேலை பார்க்கிற அதிகாரிகளை வேறு இடத்திற்கு அழைத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். இப்போது வாலிநோக்கம் மற்றும் தம்பி கோட்டை ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே இந்தத் தொழில் நடைபெறுகிறது. ஹெட் ஆபீஸ் சென்னையில் இருக்கிறது. இராமநாதபுரத்தில் இந்த ஹெட் ஆபீஸ் இருக்கும் வகையில் மாற்ற வேண்டும். சிமெண்ட் கார்ப்பரேஷனில் ரொம்ப அதிகமாக டிரான்சாக்சன் இருந்தபோது, 'ஸ்டாப்' கம்மியாக இருந்தார்கள். சிமெண்ட்டை இறக்குமதி செய்ததினால், 13 கோடி ரூபாய் லாபம் வந்தது. இப்போது இறக்குமதி செய்யாத நிலையில் 'ஸ்டாப்' எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். வேண்டுமென்றால் அதிகப்படுத்துவது, ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பது, ரெக்ரூட்மென்டை இஷ்டத்துக்குச் செய்வது போன்ற விஷயங்களில் எல்லாம் அதிகாரிகள் வேண்டியவர்கள் வேண்





டாதவர்கள் என்கிற கண்ணோட்டத்தில் காரியங்களைச் செய்கிறார்கள். தொழிலாளர்களிடையே அதிருப்தி ஏற்படும் நிலை இருக்கக்கூடாது. இன்றைக்கு அதிகாரிகளின் அதிருப்தியான நடவடிக்கை காரணமாக, தொழிலாளர்கள் நிம்மதியில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஒருசில அதிகாரிகளால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. உப்புக் கழகத்தைப் பொறுத்தவரையில், இன்னும் அபிவிருத்தி செய்ய வேண்டும். அந்த ஊர் ஜனங்கள் நல்லபடியாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்தக் கழகம் செயல்பட வேண்டும். இங்கே ஹெட் ஆபீசை வைத்திருந்தால், எப்படி நல்லபடியாக வேலை நடக்கும்? மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கூட இதுபற்றிப் பேசினார்கள். இங்கே ஹெட் ஆபீசை வைத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் ஆபீசில் 3 ஆட்கள் கூட இருக்க மாட்டார்கள். இங்கே ஒரு பெர்சனல் ஆபீசர் இருப்பார். அங்கேயும் ஒரு பெர்சனல் ஆபீசர் இருப்பார். இருவரும் செய்கின்ற ஒன்றுக்குப்பின் முரணான செயல்களால் மொத்த வேலையே கெட்டுவிடும். ஆனால் செட்டிநாடு சிமெண்ட் இருக்கிறதே, அது போன்ற நிறுவனங்களைப் பாருங்கள். அங்கே நிலைமை வேறுமாதிரியாக இருக்கிறது. அதிகாரிகளின் இப்படிப்பட்ட செயல்களால் ஆலங்குளம் போன்ற இடங்களில் எல்லாம் பெயர் ரொம்ப கெட்டுக்கொண்டிருக்கிறது.

மூதாகுளத்தாரில் சிமெண்ட் பிளான்டை எடுப்பதுபற்றி அரசு குறிப்பு அனுப்பியிருக்கிறது. தூத்துக்குடி ஆல்காலிக்ஸ் லிமிடெட்டை ஒரு கார்ப்பரேஷனாக ஆரம்பித்திருக்கிறோம். முன்பு 51 சதவிகிதப் பங்கு நம்மிடம் இருந்தது. இப்போது 25 சதவிகிதப் பங்கை ஸ்பிக்குக்குக் கொடுக்கும் நிலையில் அன்றைக்கு இருந்த வேல்யூவைக் கொடுத்தால் போதும் என்று எம்.டி. எழுதுகிறார். இன்றைக்கு ரூபாய்க்கு உள்ள மதிப்பையும் அன்றைக்கு ரூபாய்க்கு இருந்த மதிப்பையும் பார்க்க வேண்டும். ஆகவே நிதித் துறை அவர்கள் சொன்னதை ஒத்துக்கொள்ளவில்லை. இதையெல்லாம் அரசு கண்காணிக்க வேண்டும். இன்றைக்கு மத்திய லஞ்சத் துறை அதிகாரி ஒன்றைத் தெரிவித்திருக்கிறார். லஞ்சத்தை ஒழிக்கமுடியும் என்று அவர் சொல்லவில்லை. ஆனால் மேல்மட்டத்தில் லஞ்சத்தைக் கண்காணிக்கவேண்டும். அந்த வகையில் லஞ்சத்தை ஒழிக்கலாம். டான்செம், ஸ்டீல் லிமிடெட் போன்ற நிறுவனங்களில் எல்லாம் இருக்கின்ற உயர் அதிகாரிகள் அண்ணாநகர் போன்ற இடங்களில் 10 லட்சம், 15 லட்சம் ரூபாய் செலவில் வீடு கட்டியிருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைத்த லோன் எவ்வளவு, சம்பளம் எவ்வளவு போன்ற விவரங்களை நான் பார்க்கத் தயாராக இல்லை. அவர்களைச் சரியான முறையில் கண்காணிக்காததால், அவர்கள் கெட்டுப் போகிறார்கள். இனி என்ன பண்ண முடியும்?

பல இடங்களில், பல கார்ப்பரேஷன்களில் டெவலப்மென்ட் மேனேஜர் என்கிற பதவியில் வந்தவர்கள் கார்ப்பரேஷனை டெவலப் பண்ணவில்லை, தங்களை டெவலப் பண்ணிக்கொண்டார்கள். தவிட்டுப் பானைக்குள் விட்ட பெருச்சாளி மாதிரி அவர்களுடைய நலன்தான் அவர்களுக்குப் பெரிது. பொறுப்பான இடத்தில் இருந்துகொண்டு மக்களுடைய வரிப்பணத்தைச் சம்பளமாக வாங்கிக்கொண்டு பெருத்த தவறுகளையும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-05)

"நம்மை வெளிநாட்டுக்கெல்லாம் போகச் சொல்கிறார்கள். எதற்கு என்று தெரியாமலேயே போகச் சொல்கிறார்கள். நாமும் போய் வருகிறோம். வந்து இப்படி அநியாயம் பண்ணுகிறோமே' என்று அவர்கள் நினைப்பதில்லை. ஒரு ப்ராஜக்ட் என்று ஆரம்பித்தவுடனேயே, அங்குள்ள எம்.டி.யும், மேனேஜரும் முதலில் வெளிநாட்டுக்குப் போய்விடுகிறார்கள். நான் கேலிக்காகச் சொல்லவில்லை. அப்படி 'டூர்' போய்விட்டு வந்த பிறகும், இரண்டு மூன்று திட்டங்கள், இரண்டு மூன்று வருடங்களாக எந்தவித வேலையும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அதற்காகச் சொல்கிறேன். அவர்களால் முடியவில்லை. என்னைப்போய் எம்.டி.யாகப் போட்டால், என்ன ஆகும்? 'எம்ப்டி' யாகும். அவ்வளவுதான். நிர்வாகம் என்பது தனி. அட்மினிஸ்ட்ரேஷன்தான் மேனேஜ்மென்ட் என்று நினைத்துக் கொள்கிறார்கள். மத்திய அரசில் Admi-nistration is only part of management என்று. சரியாகச் சொன்னார்கள், அதுதான் சரியான கான்சப்ட். மேனேஜ்மென்ட்டின் பகுதிதான் அட்மினிஸ்ட்ரேஷன். ஒரு ஆபிஸ் நிர்வாகம் செய்ய மூன்று ஆள் மேனேஜ்மென்ட்டா? மேனேஜ்மென்ட் என்பது பெரிய விஷயம். 'வாஸ்ட் சப்ஜெக்ட்'. அதிலே குருவி தலையில் பனங்காயை வைத்தமாதிரி, யாரையாவது கொண்டுவந்து, எம்.டி.யாகப் போட்டால், அவர்கள் அதைப்பற்றிப் படித்துக்கொள்ளவே பல நாள் பிடிக்கிறது. அதற்குள், வருகிறவர்கள் இவர்களைப் பிடிப்பதற்கு ரொம்ப லேசாகிவிடுகிறது. அதனால்தான் காண்ட்ராக்ட் விடுவதிலெல்லாம் ரொம்ப தப்பு வந்து விடுகிறது. கெட்ட பெயர் வந்துவிடுகிறது. கடைசியில் யாரை வந்து பாதிக்கிறது என்றால், அரசாங்கத்தை வந்து சேருகிறது. பொதுத் துறையே மோசமோ என்று நினைக்க வேண்டி வந்து விடுகிறது. ஜாயின்ட் செக்டாரை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். தொழில் முனைவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்று இங்கே கொள்கைக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. போகிற போக்கைப் பார்த்தால், அவர்களிடம் 500 கோடி ரூபாயைக் கொடுத்து, நாம் நஷ்டம் அடைவதைவிட, அதையே





தனியாரிடம் கொடுத்து தொழிலை ஆரம்பிக்கச் சொன்னால், நமக்கு வட்டியாவது கிடைக்குமே என்று நினைக்கிற அளவுக்கு வந்துவிட்டது. காரணம், நம்மால் செய்ய முடியவில்லை. நமக்கு ஆட்கள் இல்லை. ஆள் இல்லாமல் தொழிலை ஆரம்பிக்கிறோம். அப்படி ஆரம்பித்த பிறகு, ஆட்களைப் போடுகிறோம். அவர்கள் வந்த பிறகு, அவர்களுக்கும் அதிலே பழக்கம் இல்லாததால், ரொம்ப சிரமப்படுகிறார்கள். இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்டுவதற்கு உண்மையிலேயே ஒரு செலக்ஷன் போர்டு அமைக்க வேண்டும். நாமே வைக்கலாம். ஸ்டேட் லெவலில் ஆரம்பிக்கலாம். மத்திய அரசு செய்த மாதிரி, பிகார் செய்த மாதிரி நாமும் செய்ய முடியாதா என்பதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து, அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அடிப்படையில் தொழில் துறையில், பொதுத் துறையின் நிர்வாகத்தை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். ஜாயின்ட் செக்டார் என்றால் நமது செலவிலேயே அவர்கள் எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதோடு அவர்கள் திருப்தி அடைவதில்லை. அதிலே இருக்கிற பணத்தை எடுத்து வேறு எதிலாவது போடுகிறார்கள். ஜாயின்ட் செக்டாரில் உள்ளவர்கள் ரொம்ப 'எக்ஸ்பர்ட்' ஆக இருந்தால் பரவாயில்லை. அவர்கள் முதலாளியாக இருக்கிறார்கள் என்று பணத்தைக் கொடுத்து விடுகிறோம். ஜாயின்ட் செக்டாரை 'என்கரேஜ்' செய்கிற நிலைமை ஏன் வருகிறதென்றால், அதுவாவது லாபத்தில் ஓடுகிறதே என்ற எண்ணத்தில் அப்படி கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறோம். அவர்களே லாபத்தில் ஓட்டும்போது, நாம் ஏன் லாபத்தில் ஓட்ட முடியாது என்று சிந்திக்க வேண்டும். சிமெண்ட் பாக்டரி ஆரம்பித்தோம், தமிழ் நாடு ஆஸ்பெஸ்டாஸ், பிரஷர் பைப் லிமிடெட் போன்றவைகள் ஆரம்பித்தோம். 'ஆஸ்பெஸ்டாஸ்' கம்பெனி நன்றாக ஓடுகிறது. கேரளாவிலிருந்து இதை வாங்குகிறார்கள். ஆனால் பிரஷர் பைப்புக்கு எப்போதும் பிரஷர்தான். இப்போதுதான் அரசாங்கம் ஒரு நல்ல உத்தரவைப் போட்டு, பப்ளிக் செக்டாரில் உள்ள வாட்டர் போர்டு, இங்கேதான் பைப்புகளை வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்படித்தான் டான்சியை நாம் பிழைக்க வைத்தோம். இங்கேதான் வாங்க வேண்டும், வேறு இடத்தில் வாங்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறோம். அப்படி முன்கூட்டியே உத்தரவு போடாததால், இப்போது நிறைய ஸ்டாக்கில் இருக்கிறது. கோடிக்கணக்கான பணம் மதிப்புள்ள பிரஷர் பைப் இப்போது ஸ்டாக்கில் இருக்கிறது. அதற்கு அரசாங்கம் பிரஷர் கொடுத்தால்தான், அதைத் தள்ளிவிட முடியும். இல்லாமல் முடியாது. அதற்கு முன் கேரளா

வில் இருக்கிற ஒரு பெரிய கம்பெனி பெரிய ஆர்டரை கொடுக்க இருந்தது. ஆனால் போட்டி போட்டு, அதை பிர்லாவுக்குக் கொடுத்து விட்டார்கள். ஐ.எஸ்.ஐ. இல்லை, அது இல்லை, இது இல்லை என்று நமக்குக் கிடைக்கக் கூடிய ஆர்டரை. அங்கே புகுந்து தட்டிக் கொண்டு போய்விட்டார்கள். பிரஷர் பைப் கம்பெனி கஷ்டப்படக்கூடிய நிலைமையில் இருந்தது. இப்போது நல்ல வேளையாக, அரசாங்கம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களாவது அந்தப் பைப்பைத்தான் வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதே மாதிரி, மற்ற நிறுவனங்களிடமும் நாம் அணுகி, அதை வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும். செய்ய முடியும். அப்படிச் செய்யும்போது, பொதுத் துறையின் நிர்வாகத்தையும் சீர்திருத்தி, வைக்க வேண்டும். அது ரொம்ப அவசியம் என்று சொல்லிக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை சம்பந்தமாக, குறிப்பாக முதலில் நான் ஊரகத் தொழில் துறையை எடுத்துக் கொண்டு, பின்பு கனரக, பெரிய தொழில்கள் சம்பந்தமான சில பிரச்சினை களைக் கூற விரும்புகிறேன்.

ஊரகத் தொழில் துறையில், 'டான்சி'யில் நஷ்டம் அதிகமாகி இருக் கிறது. எவ்வளவென்றால் சுமார் 110 லட்சம் ரூபாய் என்று குறிப்பிடப்பட் டிருக்கிறது. அதிலே இவ்வளவு பெரிய நஷ்டம் வருகிறது என்பது மட்டு மல்ல, இந்தத் துறையில் நான் அதிகமான விபரங்களுக்குள் போக விரும்ப வில்லை. டான்சியில் பல தவறுகள் நடக்கின்றன. உற்பத்தி செய்கிற பொருட்கள் சில இடங்களில் அவர்களுடைய சொந்த உபயோகத்திற்கே போய்விடுகிறது. இவைகளைக் கண்காணிக்க, தடுக்க இப்போது வழியில்லை. இந்த நஷ்டத்தை நாம் குறைக்க முடியும். எந்தத் தொழிலிலும் நஷ்டம் ஏற்படும் என்பது உண்மைதான். என்றாலும்கூட, ஆரம்பக் கட்டத்தில் என்று சொன்னால், புரிந்துகொள்ள முடியும். பல ஆண்டுகள் ஆகியும் இந்த நஷ்டம் அதிகரிக்கிறது என்று சொன்னால், ஏராளமாகத் தவறுகள் நடக்கின்றன என்றுதான் பொருள். இந்த நஷ்டத்தைக் குறைப்பதற்கு மட்டுமல்ல, டான்சி உற்பத்தி நிலையங்களிலும் திறம்பட நடக்க, கண்காணிப்பு முறை அவசியமாகத் தேவைப்படுகிறது.



(பிற்பகல் 1-10)

மற்றொன்று, இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் நாடு மோபெட்—நம்முடைய அரசு சார்பிலே ஆரம்பித்து பின் நிறுத்தப்பட்டு விட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக தகடுகள் உற்பத்தியை ஆரம்பித்திருக்கிறார்கள். அது ஏன் நிறுத்தப்பட்டது என்பது குறித்து எனக்குக் கிடைத்த விவரங்கள் அரசுக்குக் கிடைத்த விவரங்களோடு ஒத்துப் போகாமல் இருக்கலாம். இது குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு முன் னாலே பிரச்சினை கிளப்பப்பட்டிருக்கிறது. இப்போது அப்பிரச்சினையை மீண்டும் கிளப்புவதில் பயன் இல்லை என்பதையும் நான் உணர்கிறேன். 'மயூரா' ஒரு சிறப்பான மொபெட் என்றுதான் பயன்படுத்தியவர்கள், தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் சொன்னார்கள். ஆனாலும் ஒரு பெரிய தொழில் நிறுவனம் வேறொரு மோபெட்டை உற்பத்தி செய்ததால், அதற்கு இது போட்டியாக அமைந்துவிட்ட காரணத்தால், இது இதிலிருந்த சிலரின் உதவியுடன் நிறுத்தப்பட்டுவிட்டது. அந்தக் கம்பெனியின் பெயரைக் குறிப் பிடுவது முறையாக இருக்காது. நான் இந்த விவரங்களை நன்கு விசாரித்த பிறகுதான் குறிப்பிடுகிறேன். அப்படி நிறுத்தப்பட்ட தொழிலை மீண்டும் ஆரம்பிப்பதில் கஷ்டம் இருக்கிறது. இப்போது அரசு, புதிதாக மோபெட் மார்க்கெட் போட்டியில் ஈடுபடுவதென்பது முடியாது. நம் அரசு நடத்தும் சில ஊரகத் தொழில்களைக் கூட நடத்தும் முறையில் நடத்தினால் வெற்றி கரமாகச் செய்ய முடியும் என்பதற்காகத்தான், இதை நான் சொல்கிறேன். அவ்வாறு வெற்றிகரமாகச் செய்து, அதற்கு மார்க்கெட் கிடைக்கும் என்றால், அதைச் சிதைப்பதில் சில பெரிய நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. காரணம் தற்சமயம் ஊரகத் தொழில் வளர்கின்ற சமயத்தில் அதைக் காப்பாற்று வதற்கும் கண்காணிப்பதற்கும் வழியில்லாமல் இருக்கிறது. இது தொடர்ந் தால், அரசுத் துறையிலே வருகின்ற பல ஊரகத் தொழில்கள் அழிந்துவிடும். எனவே மோபெட் நிறுவனம் மூடப்பட்டதை மீண்டும் புதுப்பிக்க முடியாமல் போய்விட்டதை நாம் பார்க்க வேண்டும். இனியும் எதிர்காலத்தில் இதுபோல் நடக்க விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து, கைத்திறன் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் குறித்து ஒருசில கூற விரும்புகிறேன். கைத்திறன் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உற்பத்தியில் நஷ்டம் வருகிறது என்று கூறப்படுகிறது. அதில் நஷ்டம் வரத்தான் செய்யும். இதுபோன்ற பொருட்கள் எல்லா நாடுகளி

[திரு. ப. மாணிக்கம்] [1985 ஜூலை 11

லேயும் இருக்கின்றன. இவை அந்த அந்த நாடுகளின் மரபுவழி பண்பாட்டைக் —கலாசாரத்தை—காட்டக்கூடிய பொருள்களாகும். சமீப காலத்தில் இதன் நஷ்டத்தை வெகுவாகக் குறைக்க, பொருட்காட்சிகள் மூலம் இவற்றின் விற்பனையை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப் படுகிறது. ஆனால் இதுகுறித்தும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பொருட்காட்சிகளில் மேற்படி பொருள்களை விற்கும் நிலையங்கள் பல இடங்களில், பொருத்தமற்ற இடங்களில் அமைந்திருக்கின்றன. என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விற்பனை நிலையங்களில் அமர்ந்திருப்பவர்கள் எப்போதும் உறங்குவது மாதிரியே இருக்கின்றனர். இந்த விற்பனை நிலையங்கள் எப்போது திறக்கப்படும் என்றே தெரியவில்லை. இக் கடைகளில் ஆளே இருப்பதில்லை. அப்படி எல்லாம் நிலைமைகள் இருக்கின்றன. இதுபோன்ற நிலைமைகள் மதுரை போன்ற பெரு நகரங்களில் உள்ள கடைகளிலேயே இருக்கின்றன. இந்நிலையங்கள் மக்கள் போக்குவரத்து இல்லாத இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இம்மாதிரி விற்பனை நிலையங்களை மக்கள் கூடும் இடங்களில் வைத்தால், விற்பனை அதிகரிக்கும் ; நஷ்டத்தைக் குறைக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு செய்தால் பலன் அதிகரிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மிக முக்கிய விஷயம், தோல் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுப்பொருள்கள் குறித்ததாகும். இதுபற்றி தமிழ் நாட்டிலே பல்வேறு இடங்களில் கருத்தரங்குகள் நடக்கின்றன. இவற்றை சுத்திகரிப் பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கிறது, நகராட்சிகளும் நடவடிக்கைகள் எடுக்கின்றன. இருந்தாலும் எவ்வித முன்னேற்றமுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வடாற்காடு மாவட்ட வாணியம்பாடி பகுதிகளில் குடிதண்ணீர் பாதிக்கப்பட்டிருக்கிறது. பல்லாவரத்தில் உள்ள பெரிய ஏரி குடிதண்ணீர் ஏரியாக இருந்தது ; இப்போது அந்நீரை வாயிலேயே வைக்க முடியவில்லை. ஆனால் இவற்றைக் கெடுப்பவர்களின்மீது நகராட்சி நடவடிக்கை எடுத்தால், அவர்கள் கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள்.

(பிற்பகல் 1-15)

இப்போது அதைச் சுத்தம் பண்ண வேண்டுமானால் அரசு பணம் கொடுக்க வேண்டும். நம்முடைய நாட்டிலே ஆற்றுநீர், குளத்துநீர் சமூகம் பயன்படுத்தக் கூடிய நீரைச் சுத்தப்படுத்துவதற்கு சட்டம் உருப்படியாக இல்லை. சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டாலும்கூட, நாம் நீரைப் பாழ்படுத்தக்கூடாது என்பதற்கு



1985 ஜூலை 11] [திரு. ப. மாணிக்கம்]

திட்டவட்டமான சட்டம் வைத்திருக்கவில்லை. இப்போது கங்கையை சுத்தம் பண்ண ஆரம்பித்திருக்கிறார்கள். நமக்கு தமிழ் நாட்டிலே ஆறுகள் குறைவு. நீர்ப்பிடிப்பு நிலையங்கள் மிகக் குறைவு. இவைகளைக் காப்பாற்ற முடிய வில்லை. இப்போது என்ன ஆகிவிட்டதென்றால், நீர் எல்லாம் கெட்டுப்போய் விட்டது. அந்த இடங்களைப் பூராவும் மனைகளாகப் போட்டு விற்கிறார்கள். இதில் யாரும் தலையிட முடியாது. சில இடங்களிலே டெண்டர் என்று சொல்வார்கள். சில இடங்களிலே, கடலிலே பிராணி இருப்பதாகச் சொல்வார்கள். பல்வேறு இடங்களில் அதனுடைய கரங்கள் ஆளை அமுக்கி அப்படியே உள்ளே சாப்பிட்டுவிடும். அப்படி சில பிரச்சினைகள் இருக்கின்றன. யார் யாரோ எங்கிருந்தோ வந்து ஒன்றும் இல்லாமல் ஆகிவிடுகிறார்கள். அரசு தோல் தொழிற்சாலையிலிருந்து வரக்கூடிய கழிவுப் பொருட்களைத் தடுத்திருக்கிறது என்று சொன்னால், பல இடங்களிலே நன்றாக இருக்கக் கூடிய தண்ணீர் கூட இன்னும் கெட்டுப்போய்விட்டது. அதுபற்றி ஒரு கருத்தரங்கு நடக்கிறது. முடிவு எடுக்கப்படுகிறது. அதை யார் நிறைவேற்றுவது ? அதனால்தான் இதுசம்பந்தமாக தொழிற்சாலைகளைச் செய்வதற்கு எங்களுடைய முதலீட்டிலே நட்டம் என்று சொன்னால், ஆம் வாஸ்தவம்தான். அந்த முதலீட்டிலே நட்டம் இருக்கலாம். அவர்களுடைய பங்கும் ஒன்று. அரசு நீரைக் காப்பாற்றுவதற்கு ஒரு பொறுப்பு எடுத்து, ஒரு வழி முறையைத் துரிதமாகக் காண வேண்டும். இல்லையென்றால், தமிழ் நாட்டிலே நீர் வளம் குறைவாக இருக்கிற காரணத்தாலே, நமக்குக் குடிக்கக் கிடைக்கிற நீர் கூட இன்னும் பாதிக்கப்படும். இது இன்றைக்கு நம்முடைய தலைமுறைக்குத் தெரியாமல் இருக்கும். அடுத்து வரக்கூடிய தலைமுறை கஷ்டப்படக்கூடும். இதுபற்றி எச்சரிக்கை பல ரூபத்திலே வர முடியும். ஏனென்றால் drinking water will be a precious commodity. குடிநீர் ஒரு அருமையான விலை பொருளாக மாறக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. அப்படி ஒரு நிலை முன்பு வந்தது. பாலாற்றுத் தண்ணீர் சில இடங்களிலே கழிவுப் பொருட்களாலே கெட்டுப் போயிருக்கிறது. அதனாலே தான் இந்த விஷயத்திலே கொஞ்சம் துரிதமான நடவடிக்கை தேவை என்று வற்புறுத்த விரும்புகிறேன். இதுமட்டுமே ஊரகத் தொழில் சம்பந்தமாகக் குறிப்பிடக்கூடிய சில பிரச்சினைகள்.

V2,11,3;'N85
N85. 21-7-62
143960

[திரு. ப. மாணிக்கம்] [1985 ஜூலை 11

பெரும் தொழில் சம்பந்தமாக நாம் 13 அமைப்புகள் வைத்துக்கொண்டிருக்கிறோம். சிமென்ட், சர்க்கரை, தொழில்களுக்கு நிதி உதவி செய்வதற்கு இட்கோ, சிப்காட் போன்ற அமைப்புகளை வைத்திருக்கிறோம். இதிலே சில காரியங்கள் நடைபெற தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டுமென்று அரசு ஒரு திசை நிர்ணயித்து செயல்படுத்தினால் நன்றாகச் செயல்படும். ஆனால் இவைகளிலே இணைப்பு சரியாக இருக்கிறதா ? எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சிலவற்றைக் குறிப்பிட்டார்கள். அவருக்கே உரிய பாணியிலே அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கிருந்து அதிகாரிகளை யார் யாரையோ போடுகிறார்கள். சில நேரங்களில் நிர்வாகத்திலே வேண்டியவர்களுக்கு வேண்டாதவர்களுக்குப் பிடிக்கலாம். ஆனால் இந்த இணைப்பு என்ற முறையிலே அரசினுடைய நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய முறையிலே அந்த 13 அமைப்புகளிலே எந்தத் துறையிலே காரியம் சரியாக நடைபெறுகிறது, எந்தத் துறையிலே சரியாக நடைபெறவில்லை என்பதைக் கவனித்து இதற்கு முதல் முக்கியத்துவம் அளிப்பதற்கு இந்த நேரத்திலே கவனம் செலுத்த வேண்டும். 1985-86-ல் இந்த 13 அமைப்புகளில் எதற்கு முதல் முக்கியத்துவம் கொடுக்கிறோம்? நிதி ஒதுக்கீடு மட்டுமல்ல, தொழில் வளர்ச்சிக்கான விஷயத்திலே ஒரு 'கோஆர்டினேஷன்' வேண்டும். நாம் இந்தப் பிரச்சினையை ஏற்கெனவே விவாதித்திருக்கிறோம். குறிப்பாக எல்லாத் துறைகளுக்கும் இல்லாவிட்டாலும், கல்வி, மின்சாரம் போன்ற துறைகளுக்கு ஒரு கன்சல்டேட்டிவ் கமிட்டி இருக்க வேண்டும். காரணம், இந்தத் துறைக்கு அமைச்சராக இருப்பவர்கள் பார்லிமென்டில் பல கன்சல்டேட்டிவ் கமிட்டிகளிலே செயல்பட்டவர்கள். அவர்கள் அந்த அமைச்சரகத்தின் பல காரியங்களிலே தலையிட்டு, கொள்கை மாற்றம் மட்டுமல்ல, நடைமுறையிலேகூட மாற்றங்களைக் கொண்டுவர முடிந்திருக்கிறது. அதனால்தான் இந்தத் துறையிலே அனுபவம் உள்ளவர்களை வைத்து ஒரு கன்சல்டேட்டிவ் கமிட்டி அமைத்து காரியம் நடத்துமேயானால் இப்படிப்பட்ட சில குறைபாடுகளை நீக்க முடியும். அரசு எடுக்கும் கொள்கைகளை நிறைவேற்றும் இந்த



1985 ஜூலை 11] [திரு. ப. மாணிக்கம்]

13 அமைப்புகளிலே அதற்கு 'பிரையாரிட்டி' கொடுக்கிறோம். எந்தப் பிரச்சினையிலே ஓட்டை இருக்கிறது என்பதைக் கவனிப்பதற்கு அது உதவிகரமாக இருக்கும். அவையிலே ஆலோசனைகள் வரலாம், உறுப்பினர்கள் பேசலாம். அவையினுடைய பண்பை நான் எந்தக் காரணத்தைக் கொண்டும் குறைத்துச் சொல்லவில்லை. ஆனால் நெருக்கமாகப் பார்த்து எங்கே கடிவாளம் போட வேண்டுமோ அங்கே போடுவதற்கு கன்சல்டேட்டிவ் கமிட்டி போன்ற ஒரு அமைப்பு இருக்குமானால், உதவிகரமாக இருக்கும் என்பது என்னுடைய யோசனை.

(பிற்பகல் 1-20)

அடுத்து, இங்கே தரப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பில் கனிமம் சம்பந்தமாகச் சில விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் செம்பு கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னாலேயே கூட இப்படிச் சொல்லப்பட்டது. தற்போது அதுபற்றிய ஆய்வு தொடருகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தொடர்வது குறித்து நான் மகிழ்ச்சியடைந்தாலும் கூட, ஏன் இதுபோன்ற விஷயங்களில் அரசு அதிக கவனம் செலுத்தவில்லை என்று கேட்க விரும்புகிறேன். செம்பு என்பது சாதாரணமாக ஒரு 'பிரெஷியஸ் மெட்டல்'. உலகத்திற்கு மிகவும் அத்தியாவசியமானது. மேலும் அது எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை. இதன் காரணமாகவே அது உலகம் முழுவதும் ஒரு அபூர்வமான பொருளாக இருக்கிறது. எனவே நாம் அதைப்பற்றி ஆய்வு செய்வதிலும், அதைப் பயன்படுத்துவதிலும் இன்னும் அதிகமான அக்கறை செலுத்த வேண்டும். சில நிபுணர்களைக் கேட்டால்— இது போதிய அளவில் இல்லை என்று சொல்லிவிடுவார்கள். அதாவது இந்தக் கனிமம் தோண்டி எடுக்கக்கூடிய அல்லது தொழில் துறையில் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு அதிகமாக இல்லை என்று அறிக்கை கொடுத்துவிடுவார்கள். இந்தியாவுக்கே இதுபோன்ற அனுபவம் அதிகம் உண்டு. அப்படிச் சொல்வதால், தமிழ் நாட்டிற்கு அந்த அனுபவம் இல்லை என்று சொல்லவில்லை.

இந்தியாவில் எந்தவிதமான எண்ணெய் வளமும் இல்லை என்று அமெரிக்கா போன்ற நாடுகளைச் சார்ந்தவர்கள் ஆய்வு செய்து முன்னாலே அறிக்கை கொடுத்தார்கள். ஆனால் வேறு சிலரோ இங்கு அப்படிப்பட்ட எண்ணெய் வளம் இருக்கிறது என்பது மட்டுமல்ல, அது தேவைக்கு மேலேயே இருக்கிறது என்று ஆய்வு செய்து பின்னாலே அறிக்கை கொடுத்தார்கள். எனவே அந்த வகையில் தென்னாற்காடு மாவட்டத்தில் காணப்படும் செம்பு பற்றி முறையான ஆய்வை அரசு மிகுந்த அக்கறையோடும் வேகத்தோடும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென் ஆற்காடு மாவட்டம் நான் சம்பந்தப்பட்ட மாவட்டம் என்பதற்காக இதைச் சொல்ல வில்லை. உலகத்திலேயே செம்பு மிகவும் அபூர்வமாகக் கிடைப்பதால் இதைச் சொல்கிறேன். இதைப்பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக சில ஆண்டு களுக்கு முன்பே சொல்லப்பட்டது. ஆனால் அதில் நாம் காட்டக்கூடிய கவனம் போதாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. செம்பு போன்று இன்னொரு 'பிரெஷியஸ் மெட்டல்' ஒன்று இருக்கிறது. அதாவது தமிழ் நாட்டில் ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் மாணிக்கக் கல் கிடைக்கிறது என்று முன்பு சொல்லப்பட்டது. ஆனால் அத்தகைய மாணிக்கக் கல் கிடைக்கும் நிலங்கள் எல்லாம் தனியார் வசம் இருக்கிறது என்றும் அப்போது சொல்லப்பட்டது. மாணிக்கக் கல் வெறும் தனியார் உபயோகத்திற்கு மட்டுமல்லாமல் 'இன்டஸ்டிரியல்' உபயோகத் திற்கும் பயன்படுகிறது. ஆனால் அதுபற்றிய ஆய்வு முழுமையாக நடத்தப் பட்டதாகவோ அதன் அறிக்கை என்ன என்பதைப்பற்றியோ இதுவரை ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை. எனவே இத்தகைய கனிமத்தையும் தோண்டி எடுப்பதிலும், அதுபற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதிலும் இந்தத் துறை இன்னும் அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை)

அதைப் போலவே நம் மாநிலத்தில் இன்னும் அதிகமான சர்க்கரை ஆலைகளை நிறுவ வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. இந்த ஆண்டு மேலும் 10 சர்க்கரை ஆலைகள் தொடங்க இருப்பதாக இங்கே சொல்லப் பட்டது. அதில் மூன்று தனியாருக்குக் கொடுக்க மத்திய அரசு அனுமதி





மறுத்துவிட்டது என்றும் சொல்லப்பட்டது. ஏன் அவ்வாறு மறுத்தார்கள் என்று புரியவில்லை. இருந்தாலும் 10 புதிய சர்க்கரை ஆலைகள் தொடங்க அதிகமான வாய்ப்புகள் இங்கே இருக்கின்றன. காரணம் தமிழ் நாட்டு கரும்பில்தான் சத்து அதிகமாக இருக்கிறது. உத்திரப் பிரதேசத்து கரும்போடு ஒப்பிடும்போது, இங்கே நமக்கு அதிகமான ரெக்கவரி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் நமக்கு இருக்கிற கஷ்டம் என்னவென்றால், விவசாயிகள் கரும்பு பயிரிட்டு, இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆலைக்குக் கரும்பு சப்ளை செய்த பிறகும்கூட, அதற்கான ரெக்கவரி ரேட்டை உடனடியாகப் பார்த்து அவர்களுக்குரிய பணத்தைக் கொடுக்காத காரணத்தால், அவர்கள் இரண்டு, மூன்று வருஷம் கழித்தும் ஆர்ப்பாட்டம், கிளர்ச்சி ஆகியவற்றை நடத்த வேண்டிய நிலை இருக்கிறது. எனவே அவர் களுக்கு விலை தருவதில் தாமதம் இல்லாமல் பணம் கொடுக்க ஏற்பாடு செய்வது மிகவும் அவசியமாகும்.

அதைப்போலவே சிமின்ட் தொழிற்சாலைபற்றி பலர் இங்கே பல விவரங்களைக் குறிப்பிட்டார்கள். நமக்குள்ள நிதி வசதிக்கு இந்த ஆண்டு சாத்தியப்படுமா என்பது வேறு விஷயம். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், இன்னும் அதிகமான சிமின்ட் ஆலைகளைத் தொடங்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. காரணம் அந்த அளவுக்கு இங்கே 'லைம் ஸ்டோன்' கிடைக்கும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. ஆதித்தனார் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, சாத்தான்குளம் பகுதியில் ஏராளமான 'லைம் ஸ்டோன்' கிடைக்கிறது என்றும் அதுபற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக் கிறது என்றும் குறிப்பிட்டார்கள்.

இதை நான் சொல்லுவதற்குக் காரணம் இவைகளெல்லாம் மிகவும் லாபகரமான தொழில்களாகும். சமுதாயத்திற்கு அத்தியாவசியமான தொழில்கள் என்பது மட்டுமல்லாமல் லாபத்தை ஈட்டித் தருகிற தொழில் களாகும். தொழில் வளர்ச்சி என்று சொல்லிக்கொண்டு ஒரு பக்கத்தில் எல்லாத் தொழில்களிலும் நட்டத்தை ஏற்படுத்திக் கொண்டேயிருப்பது சரியல்ல. தொழில் வளர்ச்சி என்பது அரசுக்கு நிதி நட்டத்தை உருவாக்கக் கூடிய ஒரு இலாக்கா என்று நினைக்கிற அளவுக்கு வந்துவிடக்கூடாது. ஆகவே தான் வருவாய் ஈட்டித் தரக்கூடிய சிமின்ட், மற்றும் சர்க்கரை ஆலை போன்ற தொழில்களில் அரசு இன்னும் அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், தமிழ் நாட்டில் இந்த இரு தொழில்களுக்கும்

[திரு. ப. மாணிக்கம்] [1985 ஜூலை 11

(பிற்பகல் 1-25)

அதிக வாய்ப்பு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் தமிழ் நாட்டில் தொழில் வளம், செல்வம், வேலை வாய்ப்பு, சமூகத்திற்குத் தேவையான பொருள்கள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும்.

வளர்ச்சி மையங்கள் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை, கடலூர், ராணிப்பேட்டை, மானாமதுரை போன்ற பல இடங்களில் உள்ள வளர்ச்சி மையங்கள்பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. மானாமதுரை மையத்தில் பலவீனம் இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். கடந்த காலத்திலே தோற்றுவிக்கப்பட்ட பல தொழிற் பேட்டைகளில் பண நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, முழுப் பலன் இல்லாமல் இருக்கிறது. ஏற்கெனவே ஆரம்பித்தவைகள் நஷ்டத்தில் இயங்குவதால், புதிதாக ஆரம்பிப்பதில் அரசு அதிகக் கவனம் செலுத்த வேண்டும். பலன் அளிப்பவைகளை வைத்துக்கொண்டு பலன் அளிக்காதவைகளுக்கு ஊக்கம் தர வேண்டும். ஊக்கம் தந்துதான் மற்றவர்களை ஈர்க்க வேண்டும். சில இடங்களில் ஊக்கம் தந்தாலும் ஈர்க்க முடியாது. எங்கே அப்படி ஈர்க்க முடியுமோ அங்கேதான் ஈர்க்க முடியும். சில இடங்களில் ஊக்கம் தந்தாலும் முடியாது. அப்படி பலன் அளிக்காத வளர்ச்சி மையங்களைக் கைவிடுவதற்கும், பலனளிக்கும் இடங்களில் அதிக முதலீடு செய்வதற்கும் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து, நலிவுற்ற தொழில்கள், தொழில் நலிவுற்றதற்கு ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு காரணம் இருக்கலாம். நலிவுற்ற தொழில்கள், நிதி உதவிக்கு உத்திரவாதம் என்று இரண்டு கொள்கைகள். நலிவுற்ற தொழில்களுக்கு நிதியுதவி செய்ய வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி தொழில்களில் ஏற்பட்ட அனுபவத்தை வைத்துக்கொண்டு அரசு கொள்கைகளை உருவாக்க வேண்டும். ஒரு பக்கம் இந்தத் தொழில்களைக் காப்பாற்ற வேண்டும். தொழில்கள் நடக்க வேண்டும், வேலை வாய்ப்பு காப்பாற்றப்பட வேண்டும். இன்னொன்று தொழில் நடக்கிறது, ஆனால் நிதிப் பற்றாக்குறை, நிதி சிரமம். இப்படிப்பட்டவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை அரசு தருவதிலே தப்பில்லை. தொழிலைக் காப்பாற்றி நடத்த, வேலைவாய்ப்புத் தர உதவி வேண்டும். ஆனால் இதிலே என்ன மோசடி நடக்கிறது என்று பார்க்க வேண்டும். தொழிலை நடத்துகிறவர்கள் 'டைவர்சிஃபிகேஷன்' என்ற முறையில் வேறு இடத்திற்கு பணத்தை மாற்றிவிடுகிறார்கள். அப்படி பல தொழில்களில் நடந்திருப்பது எனக்குத் தெரிந்திருப்பதால்தான் நான் சொல்கிறேன். பணம் வேறு இடங்களுக்குச் செல்கிறது. அதனால் தொழிலை நடத்த முடியவில்லை.



1985 ஜூலை 11] [திரு. ப. மாணிக்கம்]

நஷ்டம் ஏற்பட்டுவிட்டது, நிதி உதவி இல்லை என்ற முறையில் அரசிடம் வருகிறார்கள். இவர்களைப்பற்றி ஆராய்ந்து, அவற்றில் மோசடி இருக்குமானால், மோசடி செய்தவர்களிடமிருந்து அரசு பெற வேண்டியதைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்துகிறேன்.

கடைசியாக, மத்திய அரசின் உதவி பற்றிய விவரங்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக மத்திய அரசின் போக்கு சரியில்லை என்பதை வலியுறுத்திக் கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் உருக்காலை, ஸ்பெஷல் அலாய் ஸ்டீல் ஆலையாக ஆரம்பிக்கப்பட்டது. அங்கேயுள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்தி, விசேஷ கலவை உருக்கு உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று அது ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இப்போது வேறு ஒன்று நடக்கிறது. ஆகவேதான் இப்போது நம்முடைய அரசு மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி தொடர்ந்து ஸ்பெஷல் அலாய் ஸ்டீல் தொழிற்சாலையை அங்கே கொண்டு வருவதற்கு, குறிப்பாக அங்கேயுள்ள மூலப்பொருள்களைப் பயன்படுத்துவதற்கு அமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கவனம் தேவையென்று வலியுறுத்த விரும்புகிறேன். இதற்காக தமிழ் நாட்டில் கடந்த காலத்தில் மக்கள் இயக்கம் நடத்தப்பட்டிருக்கிறது. இப்போதுகூட இந்தப் பிரச்சினையில் மக்களுடைய ஆதரவை தமிழ் நாடு அரசு பெற முடியும். ஆகவே இந்த விஷயத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும். இப்போது மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் நல்ல உறவு இருப்பதால், இதை வற்புறுத்திப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். இது தமிழ் நாட்டில் முக்கியமான தொழில் மாத்திரமல்லாமல், நம்முடைய தொழில் வளத்திற்கு மூலத்தொழிலாக விளங்கும். எனவே இதற்கு முதல் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தத் துறையில் சில நிறுவனங்களில் நஷ்டம் இருக்கிறது. 13 அமைப்புகள் இந்தத் துறையின் கீழ் இருக்கின்றன. இவைகளின் இணைப்பை ஏற்படுத்தவும், நம்முடைய திட்டங்கள் சரியாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்பதை அறியவும், நிர்வாக அமைப்பு எப்படிச் செயல்படுகிறது என்பதை அறியவும், எங்கே 'பாட்டில்நெக்ஸ்'—நாசவேலை—நடக்கிறது என்பதை அறிவதற்கும், இந்தத் துறையில் அனுபவம் உள்ளவர்களைக் கொண்டு—இந்த அவையின் உறுப்பினர்கள் மட்டுமல்லாமல்—ஒரு கன்சல்டேட்டிவ் கமிட்டி அமைப்பது அவசியம். ஏற்கெனவே காலதாமதமாகி விட்டது. இன்னும் காலம் கடத்தாமல் இதை அரசு பரிசீலித்துச் செய்ய வேண்டும், என்று கேட்டு அமைகிறேன்.

(பிற்பகல் 1-30)

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய தொழில் கொள்கையின் அடிப்படையில் எழுந்துள்ள விவாதத்தில் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி அடைந்திருக்கின்றதா இல்லையா என்பதை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்து என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒன்று உற்பத்திப் பொருள்களை வைத்து கொடுத்திருக்க வேண்டும் அல்லது வேலை வாய்ப்பு நிலைமைகளை வைத்து கொடுத்திருக்க வேண்டும். ரூபாய் 560 கோடி செலவழிக்கப்பட்டு பப்ளிக் செக்டாரில், டிட்கோவில் நாம் 10 ஆயிரம் பேர்களுக்குத்தான் வேலை வாய்ப்புக் கொடுக்க முடிகிறது. அந்த அளவுக்குக் கொடுக்கத்தான் வாய்ப்பிருக்கிறது. எவ்வளவு பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன, எப்படி தொழில்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்றெல்லாம் தெளிவாகக் காட்டப்படவில்லை. டிட்கோவினால் ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளில் அந்த ஜாயின்ட் செக்டாரில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளில், அங்கே கோ-பார்ட்னர்களாக இருந்தவர்கள், சென்றுவிட்டார்கள். அரசாங்கம் முதலீடு போட்டு ஆரம்பித்த பிறகு, ஒரு கால கட்டத்திலே அவர்கள் அதை நடத்தாமல் போய்விட்டிருக்கின்றார்கள். அந்தத் தொழிற்சாலைகளில் முதலீடு முடங்கிக் கிடக்கிறது. உதாரணம் தமிழ் நாடு ரப்பர் லிமிடெட். பணத்தை எடுக்க முடியாத நிலைமைக்கு அது போயிருப்பதாகத் தெரிகிறது. அரசுத் துறையிலே அந்தப் பணம் போடப்பட்டு முடங்கியிருக்கிறது. அந்தத் தொழிற்சாலைகள் நடத்தப்படுமா என்று இருக்கின்றது. பாதியில் விட்டுப்போயிருக்கின்றார்கள். அப்படி விட்டுப்போன தொழிற்சாலைகளை திரும்ப நடத்த வேண்டும். அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். இதுபோன்ற ஜாயின்ட் செக்டார் கம்பெனியில் அரசு சரியான கவனம் செலுத்தாதனால்தான், இதுபோல பாதியிலே நின்றுவிட்டிருக்கின்றது. அரசு முதலீட்டை எடுத்துக்கொண்டு அவர்கள் சென்றுவிட்டிருக்கின்றார்கள். தொழில்கள் நடக்கவில்லை. தொழிற்சாலைகள் நடக்கவில்லை. ஜாயின்ட் செக்டார் தொழிற்சாலைகளில் கிட்டத்தட்ட 14 தொழிற்சாலைகள் முழுமையாக இழப்பிலே நடந்துகொண்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக இழப்பில் நடந்துகொண்டிருக்கின்றன. தொழில்கள் திரும்பவும் நசிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. மயூரா மொபெட் ஆரம்பிக்கப்பட்டது. வருடத்திற்கு 12,500 மொபெட் தயாரிக்கவேண்டும் என்று திட்டமிட்டிருக்கின்றார்கள். 1972 ஆம் ஆண்டில் திட்டமிட்டு 1977-ல் ஆரம்பிக்கப்பட்டது. அது மொத்தமாகக்கூட, 5 ஆண்டுக்காலத்தில் 10 ஆயிரம்



மொபெட்கூட தயாரிக்கவில்லை. அந்த அளவில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அங்கு இப்போது பழுது பார்க்கின்ற வேலைதான் நடந்துகொண்டிருக்கின்றது. இதுபோன்று படகுத் தொழில். படகு தயாரிக்க வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை இப்போது படகு தயாரிக்கப்படாமல், பழுது பார்க்கின்ற இடமாக இருந்துகொண்டிருக்கின்றது. நாம் திட்டம் போட்டு தொழில் ஆரம்பித்தால், அது கடைசியிலே ரிப்பேர் செய்கின்ற இடமாகத்தான் அமைகிறது. மோபட் தொழிற்சாலை எப்படி நடக்கிறது? இதில் அதிகாரி மட்டும் பொறுப்பல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இதற்கு அதிகாரிகள் மட்டும் பொறுப்பு என்று சொன்னார்கள். அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. 1972-லே திட்டம் போட்டு 1982-ல் இப்படி இருக்கிறது.

**திரு. க. சுப்பு :** உறுப்பினர் அவர்கள் அரசுக்குப் பொறுப்பு இருக்கின்றது, என்று சொல்கின்றார்கள். எந்த அரசுக்கு என்று சொல்லுங்கள். 1972-லே போடப்பட்ட திட்டம்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** ஆளுகின்ற அரசு என்றுதான் நான் சொல்கின்றேன். அரசு ஆணையை அரசே மீறுகின்ற அளவில் இருக்கின்றது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு நஷ்டம் ஏற்படுவதாகக் குறிப்பு கூறுகிறது. நிர்வாகத்தில் பொறுப்பில் இருக்கின்ற அதிகாரிகள், பொறுப்பாளர்கள், இயக்குநராக இருக்கின்ற அதிகாரிகள் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் இருக்க வேண்டும். அதுவும் அந்தத் துறையைச் சார்ந்தவர்கள், அந்த டெக்னாலஜியைத் தெரிந்தவர்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பில் இருக்கின்றது. 1981 ஆம் ஆண்டிலேயே உத்தேசிக்கப்பட்டது. ஆனால் அது நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. மூன்று மாதத்திற்குட்பட்ட அனுபவம் உள்ள அதிகாரிகள், இயக்குநர்கள் ஆறு பேர்கள். மூன்று

(பிற்பகல் 1-35)

மாதத்திலிருந்து ஆறு மாதங்கள் வரை வேலை பார்த்தவர்கள் பத்து பேர்; ஆறு மாதத்திலிருந்து ஒரு வருடம்வரை வேலை பார்த்தவர்கள் 14 பேர்கள். இப்படி 1984 கணக்குப்படி அங்கே வேலை பார்த்தவர்களில், அதாவது தொடர்ந்து வேலை பார்த்து வரும் 33 அதிகாரிகளில் இரண்டு அதிகாரிகளே மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பதவி வகித்தவர்கள். எனவே அதிகாரிகளை மாற்றும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அமைச்சரவர்களைக் கேட்காமல் அதிகாரிகளை மாற்ற மாட்டார்கள். நிர்வாகச் சிக்கல் காரணமாக மாற்றப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கே நிர்வாகமே இல்லை. அங்கே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அங்கே நிர்வாகமே இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

[திரு. மு. செ. சங்கரலிங்கம்] [1985 ஜூலை 11

இந்த மாதிரி நிலைமைகளைப் பார்க்கும்போது, தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்துவதில் மேலும் அதிக கவனம் செலுத்த வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன. பல்வேறு புள்ளிவிவரங்கள் தரப்படுகின்றன. தமிழ் நாட்டுக்கு மூன்றாம் இடம் என்று சொல்லப்படுகிறது. எனக்குத் தெரிந்தவரையில், முன்னாள் நிதிச் செயலாளர் திரு. குகன் அவர்கள் தமிழ் நாட்டுக்கு 12 ஆம் இடம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது சரியா, தப்பா என்பதை அமைச்சரவர்கள்தான் கூற வேண்டும். நமக்குத் தெரிந்தவரையில், மகாராஷ்டிரா, பஞ்சாப், ஹரியானா, குஜராத் போன்ற மாநிலங்கள் உண்மையிலே தொழில் வளர்ச்சியிலே முன்னேறியிருக்கின்றன. ஆனால் இங்கே தொழில் முன்னேற்றம் கண்ணுக்குத் தெரியும் அளவுக்கு இல்லை.

அடுத்து, பைபர் இன்டஸ்ட்ரீஸ் ஆரம்பிக்க முதலமைச்சரவர்கள் கடிதம் எழுதியும், வரவில்லை என்று இருக்கிறது. தமிழக முதல்வர் கடிதம் எழுதியிருக்கிறார், பதில் வரவில்லை என்று அரசின் அறிக்கை கூறுகிறது. இது போன்ற பைபர் இன்டஸ்ட்ரீஸ் மிக முக்கியமான ஒன்று. நிறைய பெயர்கள் புரியவில்லை. அந்த மாதிரி இன்டஸ்ட்ரீஸ் இருக்கின்றனவா, இல்லையா என்பது தெரியவில்லை. மக்களுக்குத் தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்யும் பாப்புலர் இன்டஸ்ட்ரீஸ் தமிழ் நாட்டில் இல்லை. அதற்குரிய வாய்ப்புகளும் இல்லை என்பது அரசின் குறிப்பிலிருந்து தெரிகிறது. தொழில் முனைவர்கள் தொழில் துவங்க வருவதில்லை. தொழிற்சாலைகள் இல்லை என்பது ஒருபுறமிருக்க, தொழில் துவங்க ஆள் வருவதில்லை என்கிறார்கள். இரண்டும் கான்ட்ரடிக்டரியாக இருக்கின்றன. தொழிலும் இல்லை, தொழில் முனைவர்களும் இல்லை என்றால், சிஸ்டத்தில் கோளாறு இருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு அரசிடம் இருக்கிறது. தொழில் முனைவர்கள் இங்கே அதிகமாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னதுபோல், வட இந்தியாவிலிருந்து வர வேண்டுமா, வேண்டாமா என்ற கருத்து இருந்தாலும், தமிழ் நாட்டிலே இருக்கிறவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கருத்து எனக்கு இருந்தாலும், ஏன் அவர்கள் தொழில் செய்ய முன்வரவில்லை? அரக்கோணம் ஸ்டீல் இன்டஸ்ட்ரீஸ் இருக்கிறது. அது பெருக்க நஷ்டத்தில் இருக்கிறது. அதற்குக் காரணம் எலக்ட்ரிசிட்டிதான். தொழில் வளர்ச்சிக்கு முக்கியமாகத் தேவைப் படும் மூலப்பொருள் மின்சாரம். அந்த மின்சாரத்தின் உற்பத்தியை நாம் 'லிங்க்' பண்ணிப் பார்க்கவில்லை. மூலப்பொருள்கள் தொடர்பு இல்லாமல், தனிப்பட்ட தொழிலையும், பணத்தையும் வைத்துப் பார்க்க முடியாது. எனவே மின்சார உற்பத்தியில் தமிழக அரசு கவனம் செலுத்தினால்தான்



1985 ஜூலை 11] [திரு. மு. செ. சங்கரலிங்கம்]

தொழில்கள் முன்னேற வாய்ப்பு ஏற்படும். அடுத்து வரும் திட்டத்தில் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில்கள் நஷ்டமானாலும் பரவாயில்லை என்று சொன்னார்கள். அதற்குக் காரணம், அதனுடைய உற்பத்தித் திறன் அளவுக்கு உற்பத்தி செய்யவில்லை என்பதுதான். தனியார் சிமெண்ட் தொழிற்சாலைகளில் நஷ்டம் ஆகிறதா? ஆறு ரூபாய் இருந்தது இன்றைக்கு 82 ரூபாய் அளவுக்கு விற்கிறது. அப்படி 82 ரூபாய்க்கு ஒரு மூட்டை விற்கும்போது நஷ்டம் ஆகிறதென்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு உற்பத்தித் திறன் குறைவாக இருந்தாலும், நிச்சயமாக நஷ்டம் வர வாய்ப்பு இல்லை. அங்கேயுள்ள அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த நஷ்டம் இல்லாமல் இருக்கும். ஆனால் எந்த அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை. அப்படி நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. யாருக்காவது மெமோ கொடுத்திருக்கிறோமா என்றால் இல்லை. அதிகாரிகள் தரும் பதிலைத்தான் இங்கே சொல்லுகிறார்கள். அந்த நிலைமையிலே நம்முடைய பொறுப்பு இருந்து கொண்டிருக்கிறது. ஆக, நம் தொழிற்சாலைகளில் நஷ்டம்

(பிற்பகல் 1-40)

வரக்கூடிய நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும். மத்திய அரசை வற்புறுத்துவதாகத்தான் பல இடங்களில் கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன. பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசின் முதலீடு குறைந்து கொண்டே வருகிறது. தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் பல்வேறு வகைகளில் உறவு இருக்கிறது. உறவை வைத்து உரிமை கேட்பதுதான் நியாயம். உரிமையை வலியுறுத்தும் வகையில் நாம் கோரிக்கைகளை பலமாக வைக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்திற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். அதுகுறித்து மேற்கொண்டு தொடர்ந்து வலியுறுத்த வேண்டும். மத்திய அரசிடமிருந்து நியாயமாக தமிழகத்திற்கு வர வேண்டிய பணம் வர வேண்டும். மத்திய அரசின் பல தொழிற்சாலைகள் தமிழகத்திலே ஆரம்பிக்கப் படவேண்டும். தொழில் இல்லாத மாவட்டம் என்ற பெயரில் இருந்த தர்மபுரி மாவட்டத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால், அதை மற்ற மாவட்டங்களுடன் 'கம்பேர்' பண்ணும் போது மற்ற பல மாவட்டங்கள் தொழிலில் பின்தங்கிவிட்டன. பொதுவாகவே மற்ற மாவட்டங்களில் கடந்த 10 ஆண்டுகளாக புதிய தொழில்கள் எதுவும்

ஆரம்பிக்கப்படவில்லை. ஏற்கெனவே இருந்த ஒன்றிரண்டு தொழில்கள் தவிர வேறு தொழில்கள் புதிதாக ஆரம்பிக்கப்படாததால், அவைகள் எல்லாம் பின்தங்கிவிட்டன. ஆகவே ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் இதுபற்றிப் பரிசீலித்து பின்தங்கிய மாவட்டங்களில் எல்லாம் புதிதாகத் தொழில்களை ஏற்படுத்தி அவற்றை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும். ஒரே மாவட்டம் தொடர்ந்து பல ஆண்டுகள் பின்தங்கி இருக்கும் நிலை இருக்கக் கூடாது. அங்கு தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால், ஒன்றிரண்டு ஆண்டுகளில் பின்தங்கிய நிலை மாறிவிடும். அதற்குப் பிறகு மற்ற மாவட்டங்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். அந்தவகையில் உண்மையிலேயே பின்தங்கிய நிலையில் இருக்கும் மாவட்டங்களில் தொழில்களைக் கொண்டு வந்து வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்கு முதலில் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இன்றைக்கு மின்னணுவியல் மிக சிறப்பான முறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அண்மையில் நடைபெற்ற விமான விபத்தின்போது கடலுக்குள் மூழ்கிப்போன கறுப்புப் பெட்டியைக் கண்டுபிடிக்க முடியுமா என்ற சந்தேகம் எல்லோருக்கும் இருந்தது. இன்றைக்கு 6 ஆயிரம், 7 ஆயிரம் அடிக்குக் கீழே கடலில் கிடந்த அந்தக் கறுப்புப் பெட்டியை இயந்திர மனிதன் கண்டுபிடித்து எடுத்து வந்தான் என்கிற செய்தியை நாம் படித்தோம். அப்படி என்றால் உலகத்திலேயுள்ள பல நாடுகள் இந்தத் துறையிலே எந்த அளவுக்கு முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் நன்றாக அறிய முடிகிறது.

அதைப்பற்றி பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஒருமுறை கூறியதாக எனக்கு கவனம். இயந்திர மனிதன் என்ற முறையிலே மிகப் பெரிய அறுவை சிகிச்சைகள் எல்லாம் கூட இயந்திரத்தால் செய்கின்ற அளவுக்கு மேல்நாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் சென்னையிலே இருக்கிற, மிகப் பெரிய மருத்துவ நிபுணராக இருக்கின்ற டாக்டர் இராமமூர்த்தி அவர்கள் அண்மையிலே 'லெட்டர்ஸ் டு தி எடிட்டர்' என்ற பகுதியிலே ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். ஒரு சாதாரண ஆபரேஷனைச் செய்வதற்குக்கூட அரசாங்கப் பொது மருத்துவமனையில்





மின்சாரம் கிடைக்காத சூழ்நிலை இருப்பதால், ஆபரேஷனையே செய்ய முடியவில்லை என்று எழுதியிருந்தார். ஆக, உலக அளவில் மேல்நாடுகள் எல்லாம் எந்த அளவுக்கு முன்னேறிக்கொண்டிருக்கின்றன என்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், இங்கே நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை, அறுவை சிகிச்சை செய்வதற்குக்கூட மின்சாரம் கிடைக்காத நிலையும், அதன் காரணமாக அறுவை சிகிச்சை செய்யும் அந்த மிக முக்கியமான பணி நின்று போய்விடக் கூடிய நிலையும் இருக்கிறது என்பதைப்பற்றி அந்த மருத்துவ நிபுணர், தலைசிறந்தவர் கூறியிருப்பதையும் நாம் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியவில்லை.

தொழில்கள் பெருக வேண்டுமென்றால், அதற்கு மின்சாரம் மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. தமிழ் நாட்டில் மின்வெட்டு நாமே நினைத்துப்பார்க்க முடியாத சந்தர்ப்பங்களில் எல்லாம் கூட ஏற்பட்டுவிடுகிறது. முதலில் அதற்குரிய நல்ல வழிமுறைகளைக் கண்டுபிடித்தாலே போதும், நம்முடைய தொழில் துறை வேகமாக முன்னேறும்.

அடுத்து, மின்னணுவியல் தொழிலைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பல்வேறு நாடுகளைப் பொறுத்தவரை, எலெக்ட்ரானிக்கை எடுத்துக் கொண்டால், மிகவும் வேகமாக முன்னேறியிருக்கின்றது. இந்த அரசைப் பொறுத்தவரையிலும்கூட, மிகுந்த முனைப்புடன், சிறந்த முறையில் இந்தக் காரியத்தில் செயலாற்றுவோம் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கொள்கைக் குறிப்பின் கடைசியில், கடந்த

(பிற்பகல் 1-45)

23—3—1985-ல் மத்திய மின் அணுத்துறை அமைச்சர் திரு. சஞ்சீவி ராவ் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மூன்று மாதத்திற்குப் பிறகு இங்கே இந்தக் கொள்கைக் குறிப்பின்மீது பேசுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களுடைய பேச்சுவார்த்தை, எந்த அளவுக்குப் பயன்பட்டிருக்கிறது, மத்திய அரசிலிருந்து சிறப்பான திட்டத்தை அவர்கள் தமிழகத்திற்கு அளிக்க முன் வந்திருக்கிறார்களா என்ற விபரத்தையும் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்) [1985 ஜூலை 11

தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் என்ற தலைப்பில், 1—1—1985 ஆம் நாள் முதல் 31—3—1985 ஆம் நாள் வரையிலான கால அளவில், பின்வரும் தொழிற்சாலைகள் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நான்கு மாதம் காலம் கடந்து விட்ட அளவில், அந்தத் தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றனவா என்ற எந்த விபரமும் இதில் இல்லை. அப்படி ஒரு இணைப்பு இதில் இருந்தால், உறுப்பினர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

இன்னொரு விபரத்தை நான் தெளிவாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் என்ற தலைப்பில், இரண்டாவதாகச் சொல்லப்பட்டிருப்பது, 31—12—1984 ஆம் நாள் நிலவரப்படி உற்பத்தியைத் தொடங்கியுள்ள தொழிற்சாலை, நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள் எவ்வளவு என்று சொல்லி, அதற்கான திட்டச் செலவுகளையும் அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுத் துறையில் ஆறு தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன என்று சொல்லி, 65.49 கோடி ரூபாயில் திட்டச்செலவு செய்து, கடைசியில் 3,815 நபர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு அளித்திருக்கிறார்கள். அதேபோல, நான்கு நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள் என்று சொல்லி, ரூ. 51.48 கோடியில் திட்டச்செலவு போடப்பட்டு, 1,335 பேர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

இதைக் கணக்கிட்டால், ஒரு கோடி ரூபாய் செலவு செய்து, 30 பேருக்குத் தான் வேலை வாய்ப்புக் கொடுக்கமுடிகிறது. நான் கூட்டல், கழித்தல், வகுத்தல் கணக்குக்காக சொல்லவரவில்லை.

மாண்புமிகு மத்திய நிதியமைச்சர், 1985-86 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டை வெளியிட்டு, கருத்துக்கள் சொல்கிறபோது, நமது பிரதமர் அவர்களின் கருத்துக்களைச் சொல்லி, அதன்சார்பாகவே ஒரு குறிப்பைச் சொல்லியிருக்கிறார்கள்.

"The challenges before our country are many. We have to modernise India. We have to change the thinking of the people to look ahead into the future and not keep on dwelling on the past. We have to make India self-reliant in every important sphere. We have to create a dynamic machinery which is equal to any other country in the world. Our greatest asset is the human resource and crucial to the success of our policies is the development of an effective programme for the best utilisation of this resource."



1985 ஜூலை 11] (மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்)

என்று சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய மனித சக்தியை நாம் அதிக அளவில் பயன்படுத்தக் கூடிய நிலையில் இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட சூழ்நிலையைப் பார்த்தால், இப்போது கொள்கைக் குறிப்பில் இருக்கக்கூடிய விஷயங்கள் அவ்வளவு சிறப்பாக இல்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

51.48 கோடி ரூபாய் செலவில் 1,335 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்க முடியும் என்ற நிலையை மாற்றி, அதை உயர்த்த வேண்டும்.

அடுத்தபடியாக, சில குறைபாடுகள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கூட தனக்கே உரித்தான வகையில் அவைகளைச் சுட்டிக் காட்டினார்கள். அரக்கோணம் ஸ்டீல் ரோலிங் மில் பற்றி இன்றைக்கு அறியாதவர்களே இருக்க முடியாது. அந்த அளவுக்கு பத்திரிகைகளில் அந்த மில்லைப்பற்றிச் செய்திகள் வந்திருக்கின்றன. பத்திரிகைச் செய்திகளை இங்கே படிக்கிறேன் என்று தவறாகக் கருதக்கூடாது. அங்கே நடந்து முடிந்த பல்வேறு குளறுபடிகளை அந்தச் செய்திகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அதைப்பற்றி, ஆடிட்டர் ஜெனரல் தன்னுடைய அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அங்குள்ள அதிகாரிகள் கடுமையான முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நேரத்தின் அவசியம் கருதி நான் அவற்றை

(பிற்பகல் 1-50)

குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பக்கங்களை மட்டும் குறிப்பிடுகிறேன். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இதில் சற்று கவனம் செலுத்தி இதிலுள்ள கோளாறுகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதில் சொல்கிறார்கள் :

"Losses due to disposal of slag to the tune of 10.69 lakhs".

10.69 இலட்சம் ரூபாய்க்கு அந்தக் கழிவுப்பொருள்களை அகற்றுவதிலே மிகப்பெரிய மோசடி நடந்திருக்கிறது. அதைப்போல,

"Transport contracts awarded at a cost of Rs. 3.30 lakhs remain unfulfilled resulting in infructuous expenditure".

என்று பக்கம் பத்திலே இருக்கிறது. இதை எல்லாம் யாரோ சொல்வதாகக் கருதக்கூடாது. அக்கவுண்டண்ட்-ஜெனரல் ரிப்போர்ட்டிலே இவ்வாறு தெளிவாக இருக்கிறது. அந்த ஒரு நிறுவனம்பற்றி இவ்வளவு மோசமாகச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் 'இண்டர்னல் ஆடிட் நோட்ஸ்' கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த 'டிராப்ட் இண்டர்னல் ஆடிட் நோட்ஸ்'

ஃபைலில் இதுசம்பந்தமான மூன்று தாள்களை மட்டும் காணவில்லை. இவ்வாறு பக்கம் 11-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் யார் யாரைப்பற்றிக் குறை சொல்லி, அவர்கள் செய்த மோசடிகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிற பக்கங்களைக் காணவில்லை. இதை எல்லாம் தக்க பரிகாரம் காண வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேற்படி ரிப்போர்ட்டில் எட்டு முதல் முப்பத்தாறு பக்கங்கள்வரை இதைப்பற்றித்தான். அந்த அதிகாரியின் பெயர்கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் பெயர் டி. கே. பட்டாச்சார்யா, கமர்ஷியல் மானேஜர். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தடுக்கப்பட வேண்டும்.

அதைப்போலவே நம்முடைய புகளூர் காகித ஆலை எரிந்ததைப் பற்றியும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள், அதுகுறித்து நீதி விசாரணை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லக் கூடும். நானும் ஒரு வழக்குரைஞர் என்ற முறையில் அதன் உள்ளே செல்ல விரும்பவில்லை. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அந்தக் கருவி எளிதாகத் தீப் பிடிக்காது என்று சொல்கிறார்கள். அந்த 'பல்ப்' தீப்பிடிக்க முடியாத அளவில் வைக்கப்பட்டிருந்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் அதிலே ஓர் அறிக்கை அளிக்கப்பட்டால், அந்த அறிக்கையில் எவர்மீதேனும் நடவடிக்கை எடுக்கக் கூறி அளிக்கப்பட்டால், அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை மாவட்டம் குறித்து இதில் சொல்லியிருக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறப்பான முறையில் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக இதில் சொல்லியிருக்கிறார்கள். பக்கம் 26-இல் இதுபற்றிய குறிப்பு இருக்கிறது. அதில், "பிற்பட்ட பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக முனைப்படுத்தப்பட்ட தொழில் இணையங்களை அமைக்க வேண்டும் என்ற இந்திய அரசின் கொள்கைக்கேற்ப முனைப்படுத்தப்பட்ட மின் அணு இணையத்தை மேன்மேலும் தொழில் வளர்ச்சிக்காக புதுக்கோட்டையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது" என்று கண்டிருக்கிறது. ஆனால் நான் கேள்விப்பட்ட வரையில், புதுக்கோட்டையிலே எந்த இடத்திலும் யாரும் தொழிற்சாலை தொடங்க முன்வரவில்லை என்று சொல்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்திற்குப் பக்கத்திலே திருச்சி மாவட்டம் இருக்கிறது. அங்கே 'பெல்' நிறுவனம் இருக்கிறது. அது சிறப்பான முறையிலே இலாபகரமான முறையிலே இயங்கிக் கொண்டிருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் நல்ல





பயன்தரத்தக்க மாவட்டம். தொழில் தகராறு இல்லாத மாவட்டம். ஆனால் தொழில் தொடங்க அங்கே யாரும் முன்வராத சூழ்நிலை இருக்கிறது. ஒரேயொரு நிறுவனம் தொழில் தொடங்க முன்வந்திருக்கிறது. அதன் பெயர் ஜெய்ன் ஸ்டீல் என்பதாகும். ஆனால் அதுவும் இன்னும் தொடங்கப்படாத நிலையில் இருக்கிறது. அது உற்பத்தியைத் தொடங்கத் தயாராக இருக்கிறது. ஆனாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேதி தராததால், உற்பத்தியைத் தொடங்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். இந்தச் சமயத்தில் அவர்கள் வேறொன்றையும் சொல்கிறார்கள். தொழில் அமைச்சர் பதவி புதுக்கோட்டை மாவட்டத்துக்காரரிடமிருந்து, வேறொருவரிடம் சென்றுவிட்டதால் மேற்படி மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறதோ என்கிற ஐயப்பாடு இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள்.

**திரு. அ. ப. சிவராமன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. மிசா கணேசன் என்கிற ஆர். கணேசன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவன். இருந்தாலும் நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அந்தப் பகுதி மக்களுக்கு இதுபோன்ற ஐயப்பாடு இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். நிச்சயமாக நம் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் நிர்வாகத் திறமையுள்ளவர்கள். அவர்களுக்கு நிச்சயமாக அப்படிப்பட்ட எண்ணம் இருக்காது. இருந்தாலும் அவர்கள் ஐயப்பாட்டைச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேதி தராத காரணத்தால், இன்னும் தொழில் தொடங்கப்படாத நிலை இருக்கிறது. அம்மாவட்டத்திலே இருப்பதே ஒன்று. அதுவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேதி தராததால் நிறுத்தப்பட்டிருக்கிறது என்கிறபோது, அப்பகுதி மக்களுக்கு இதுபோன்ற ஐயப்பாடு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-55)

அதைப்போலவே 50ஆவது பக்கத்திலே நம்முடைய கிராபைட்டைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது அது சிறந்த முறையில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற ஒரு தொழில். அதைத் துவங்குவதற்குரிய வாய்ப்பைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோல, மானாமதுரையிலே இந்தியா கிராபைட் தொழிற்சாலை என்று ஒன்று தோன்றுவதற்கு இரண்டு

[மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1985 ஜூலை 11

ஆண்டுக் காலம் அவர்கள் பல்வேறு முயற்சிகள், பிரம்மப் பிரயத்தனம் என்று சொல்வார்களே அதைப்போல எவ்வளவோ முயற்சி செய்தும் இன்றுவரை அனுமதி வழங்கப்படவில்லை. இரண்டு ஆண்டுக் காலமாக அது அரசாங்கத்தில் பெண்டிங்காக இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இல்லாதவாறு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவுக்கு கொள்கைக் குறிப்பிலே கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

* கவிஞர் முத்துலிங்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, எல்லோரும் சோர்வாக இருக்கிற நேரத்திலே என்னைப் பேச அழைத்திருக்கிறீர்கள். நான் சோர்வாக இருந்தாலும், மற்றவர்கள் சோர்வாக இருந்தாலும், தமிழ் நாட்டிலே தொழில் துறை சோர்வாக இல்லாத காரணத்தால், சோர்வு இல்லாத அந்தத் துறை மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். "உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம். வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்றார் பாரதி. உழவுக்கும், தொழிலுக்கும் நாம் வந்தனை மட்டும் செய்து கொண்டிராமல் உழவும், தொழிலும் வளர்க்கும் ஒரு நல்ல திட்டத்தின் கீழ் புரட்சித் தலைவரின் அரசு சிறந்த பல திட்டங்களைத் தீட்டி வந்திருக்கிறது. அதிலும் தொழில் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் திரு. இராசாராம் அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்ற பிறகு, தமிழ் நாட்டைத் தொழில் மயமாக ஆக்கிவிடுவதில் மிகவும் கண்ணும் கருத்துமாக அக்கறையோடு செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நாம் எல்லாம் அறியும்போது அதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஒரு காலத்தில் காங்கிரசு கட்சி ஆண்டபோது தொழில் அமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் எப்படி எல்லாம் பாடுபட்டு தமிழ் நாட்டுக்குத் தொழில் வளங்களைக் கொண்டு வந்தார்களோ அப்படி எல்லாம் திரு. இராசாராம் அவர்கள் பாடுபடுகிறார்கள். ஆனால் திரு. வெங்கட்டராமன் அவர்கள் தொழில் அமைச்சராக இருந்தபோது, அமைச்சர் என்ற அந்தஸ்தை எல்லோரிடத்திலும் காட்டாமல் மந்திரியே இருக்கக்கூடிய தொழில் இலாக்காவிலே உள்ள கடைநிலை ஊழியர் வரையிலும் மிக எளிமையாக இனிமையாகப் பழகினார்கள். அப்படி அவர்கள் பழகியதன் காரணமாகத்தான் தமிழ் நாட்டுக்கு ஏராளமான தொழிற்சாலைகள் வந்தன. அதைப்போலவே மிக எளிமையாகவும் இனிமையாகவும் எல்லோரிடமும் பழகக்கூடியவர் திரு. இராசாராம் அவர்கள். அவர்கள் எல்லாக் கட்சிகளுக்கும் வேண்டியவர். எல்லோருக்கும் இனியவர். சர்வ கட்சிக்கும் சொந்தக்காரர் தி.மு.க. ஆட்சியில் இருந்த காலத்திலே மத்திய அரசிடம் நல்ல உறவை



1985 ஜூலை 11] (கவிஞர் முத்துலிங்கம்)

ஏற்படுத்திக் கொண்டவர். அன்பு மிக்கவர், பண்பு உடையவர், ஆற்றல் மிக்கவர், அடக்கம் மிக்கவர். அதுமட்டுமல்ல. அவர் மந்திரியாக இருந்தாலும், நல்ல மனிதராக இருக்கக்கூடியவர். ஆகவே அப்படிப்பட்ட இந்தத் தொழில் துறைக்கு அமைச்சராக இருக்கக்கூடியவர் . . .

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சர் அவர்களைக் குறித்து, அவர் எந்தக் கட்சிக்கும் சொந்தக்காரர் என்று சொன்னால், அவர் காம்பிளிமெண்டாகச் சொல்கிறாரா அல்லது குறையாகச் சொல்கிறாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

கவிஞர் முத்துலிங்கம் : நல்லவர்கள்தான். எல்லோருக்கும் வேண்டியவராக இருப்பார்கள். அந்த வகையிலே அவர் நல்லவர். எனக்கு மிக மிக வேண்டியவர். அந்த அளவுக்கு அவர் . . .

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, அவர் மந்திரியாக இருந்தாலும் மனிதராக இருப்பவர் என்று அவரைப் பாராட்டினார். அதை நான் வரவேற்கிறேன். மற்றவர்கள் யாருமே அப்படி இல்லை என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறாரா ?

கவிஞர் முத்துலிங்கம் : நீங்களாகவே உள்நோக்கம் வைத்து யாரையாவது நினைத்துக் கொண்டால் நான் என்ன செய்வது ?

அதைப்போலவே ஊரகத் தொழில் அமைச்சராக இருக்கிற திரு. அரூரா ஜகதீசன் அவர்களும் எளிமையானவர், இனிமையானவர். அவருடைய ஊரகத் துறையும் சிறப்பான வளர்ச்சி அடையும். திரு. இராசாராம் அவர்களுடைய துறையும் சிறப்பாக இந்த தமிழ் நாட்டுக்கு தொழில் வளத்தைப் பெருக்கும் என்பதையும் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்தத் திட்டம் அரசாங்கம் போட்டாலும், அதற்கு எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பு மிக அவசியம். பொறுப்போடு அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். இங்கிலாந்து நாட்டை எடுத்துக்கொண்டால், அந்த அரசாங்கத்தின் இரகசிய அறிக்கையைக்கூட மூன்று பேர்களுக்குக் கொடுப்பார்கள். அந்த நாட்டின் பிரதமருக்கு, ஒரு அறிக்கை, இங்கிலாந்து நாட்டு இராணிக்கு ஒன்று, எதிர்க் கட்சித் தலைவருக்கு ஒன்று. அங்கே இருக்கிற அமைச்சர்கள் எப்படி அந்த இரகசிய அறிக்கையைப் பாதுகாப்பார்களோ, அதுபோல் அங்கே இருக்கின்ற எதிர்க் கட்சித் தலைவரும் அந்த இரகசிய அறிக்கையைப் பாது

காத்து பொறுப்போடு நடந்துகொள்வார். அதிகாரம் இல்லாமல் இருக்கலாம் எதிர்க் கட்சித் தலைவருக்கு. ஆனால் பொறுப்பு என்று வரும்போது, ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் சமமாக இருக்க வேண்டும். இங்கிலாந்தில் அந்தப் பொறுப்புணர்வு மிகச் சிறப்பாக இருக்கிறது. அதைப்போல நாமும் அரசாங்க அறிக்கையை எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்க முடியுமா என்றால் அந்த அளவுக்கு நாம் இன்னும் பக்குவம் பெறவில்லை. அவ்வளவு தான், வேறு ஒன்றும் இல்லை.

(பிற்பகல் 2-00)

நான் இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில் சொல்லுகிறேன். அவ்வளவுதான்.

அடுத்து, உலகத்திலும் சரி, ஆசிய நாடுகளிலும் சரி, தொழில் துறையில் மிகவும் முன்னோடியான நாடாக ஜப்பான் நாடுதான் இருக்கிறது. இரண்டாவது உலகப் போருக்கு முன்னால் ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள நாடுகள்தான் தொழில் துறையில் முன்னேற்றமடைந்த நாடுகளாக இருந்தன. அப்படி அவைகளெல்லாம் முன்னேற்றமடைந்திருந்தபோது, நாம் அடிமைப் பட்ட நாடாக இருந்த காரணத்தால், அந்த நாடுகளில் உற்பத்தியான பொருள் களையெல்லாம் விற்பனை செய்யக்கூடிய ஒரு சந்தையாக, ஒரு மார்க்கெட் டாக இந்திய நாடு இருந்தது. அதனாலேதான் நாம் அப்போது முன்னேற முடியவில்லை. இதைப் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களே ஒருமுறை குறிப்பிட்டார்கள். தொழிற் புரட்சி என்கிற முதல் பஸ்ஸை நாம் ஏற்கெனவே தவற விட்டுவிட்டோம். இப்போது இரண்டாவது பஸ்ஸான எலெக்ட்ரானிக் பஸ்ஸையும் நாம் தவற விட்டுவிட்டால், இந்திய நாடு போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேராது என்று குறிப்பிட்டார்கள். எலெக்ட்ரானிக் தொழில் துறையின் மூலம்தான் இந்திய நாட்டை நாம் வளப் படுத்தியாக வேண்டும் என்று திரு. ராஜீவ் காந்தி அவர்களே குறிப் பிட்டார்கள். அந்தக் கருத்துக்கு இணங்க, அந்தக் கருத்துக்கு செயல் வடிவம் கொடுக்கக்கூடிய வகையில்தான் இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு மின் அணு இயல் தொழிலைப் பெருக்க தீவிரமான அக்கறை காட்டுகிறது.



அதிகமான பெருக்கு வேலை வாய்ப்பை அளிப்பது இந்த மின் அணுத் துறைதான். அதைச் சிறப்பாகச் செய்தால்தான், நாம் இன்றைக்கு முன்னேற்றமடைய முடியும். இந்தியாவில் மின் அணுவியல் சாதனங்கள் உற்பத்தியாவதில் 2.5 சதவீதம் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் பத்து சதவீதம் என்ற அளவுக்கு நம்முடைய உற்பத்தி அதிகரித்துவிடும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பத்து சதவீதம் என்று சொல்லப்பட் டிருக்கிற இலக்குக்கு மேல் நாம் போகாவிட்டாலும்கூட, எந்த வகையிலும் பத்து சதவீதத்திற்குக் குறைவில்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் எலெக்ட்ரானிக் தொழிற்சாலைகள் வளராமல் போன தற்குக் காரணம் கருநாடகத்தைப் போல் இங்கே ஒரு பெல் நிறுவனம் இல்லாமல் போனதுதான். அந்தப் பெல் நிறுவனம் தனது விரிவாக்கத் திட்டத்தின்கீழ் அண்மையில் ரூ. 38 கோடி முதலீட்டில் ஒரு தொழிற் சாலையை இங்கே அமைக்க இருப்பதாக தினமணியில் ஒரு செய்தி பார்த் தேன். அப்படி இங்கே அமைந்தால், தமிழ்நாடு மிகச் சிறந்த தொழில் வளர்ச்சியை அடையும் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை.

அடுத்து, நாப்தா தொழிற்சாலை ஒன்று கடலூரில் அமைக்கப்பட இருக் கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை எவ்வளவு விரைவில் அமைக்க முடியுமோ அவ்வளவு விரைவில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அங்கே தயாரிக்கப்பட இருக்கும் இரசாயனப் பொருள் சாயத் தொழில், ரப்பர் தொழில், தோல் தொழில் முதலியவற்றுக்கு உபயோகப்படும். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

பீகார் அரசுக்குச் சொந்தமான 40 நிறுவனங்கள் மிகவும் சீர்கேடு உற்றிருப்பதாகவும், அதற்குக் காரணம் நிதிநிலைச் சீர்கேடும் தொழில் அறிவு போதுமானதாக இல்லாததாகும் என்றும் சொல்லப்பட்டது. ஒரு நிறுவனத் திற்கு ஒருவர் இயக்குநராகவோ அல்லது தலைவராகவோ நியமிக்கப்பட்டால், அதில் அவருக்கு ஓரளவாவது அறிவிருக்க வேண்டும். எனவே, தொழில் அறிவு போதாமையினாலும் அரசியல் குறுக்கீடு காரணமாகவும், அதிகாரிகளை அடிக்கடி மாற்றிக்கொண்டிருந்த காரணத்தாலும், 40 அரசு நிறுவனங்களில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை

ஏற்பட்டிருக்கிறது. எனவே அதையே நாம் ஒரு முன்னெச்சரிக்கையாகக் கொண்டு தமிழ்நாடு அரசு நிறுவனங்களில் அப்படிப்பட்ட நிலைமை உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்ற குறளைப் படித்தவர் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள். ஆகவே அவருக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

புதுவையில் ஆங்கிலோ-பிரெஞ்ச் மில் நீண்ட நெடுநாட்களாக மூடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் திறப்பதற்கு ரூ. 17 கோடிக்குமேல் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். ஒரு மில்லைத் தொடங்க 17 கோடி ரூபாய் செலவாகும் என்றால் பரவாயில்லை. ஆனால் மூடிய ஒரு மில்லைத் திறக்க 17 கோடி ரூபாய் செலவாகும் என்றால், அது எந்த அளவுக்கு நிர்வாகச் சீர்கேடு உற்றதாக இருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, அதை ஒப்பிட்டுப் பார்க்கும் போதும், பீகார் மாநிலத்தில் நடந்துள்ளதைப் பார்க்கும் போதும் நாம் உயர்ந்த நிலையில் இருக்கிறோம் என்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போது, இந்த அரசு தொழிற் துறையில் அக்கறையற்றதாக இருக்கிறது என்றும், தொழில் வளர்ச்சியில் அக்கறையும் கவனமும் செலுத்தவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்கள். அவர் சுட்டிக்காட்டிய அத்தனை குற்றச்சாட்டுகளும் வீணான குற்றச்சாட்டுக்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு பாதுகாப்புத் துறையின் மூன்று தொழிற்சாலை தொடங்க இடம் கேட்டபோது ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரசு இலவசமாக அளித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் யார் தொழில் தொடங்க வந்தாலும், அவர்களுக்கு உதவி செய்ய இந்த அரசு முன் வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

கலைஞர் ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டிருந்த தொழிற்சாலைகள் எல்லாம் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில்தான் திறக்கப்பட்டன. தொழில் வளர்ச்சியில் அக்கறை இல்லை என்றால், மூடப்பட்ட தொழிற்சாலை மூடப்பட்டே இருக்கட்டும் என்று விட்டிருக்கலாம் அல்லவா? நாட்டு வளர்ச்சியிலும் தொழில் வளர்ச்சியிலும் அக்கறை இருந்த காரணத்தால்தான் மூடிய தொழிற்சாலைகளையெல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் திறந்தார்கள்.



(பிற்பகல் 2-05)

அதைப்போல தொழில் உரிமம் வழங்குவதில் மாராட்டிய மாநிலம் முதலிடத்தில் இருக்கிறது; உத்திரப் பிரதேசம் இரண்டாவது இடத்தில் இருக்கிறது, குஜராத் மூன்றாவது இடத்தில் இருக்கிறது, தமிழ்நாடு நான்காவது இடத்திலே இருக்கிறது என்று அமைச்சர் திரு. இராசாராம் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. டி. வி. அந்தோணி அவர்கள், உரிமம் வழங்குவதில் நான்காவது இடத்திலும், தொழில் வளர்ச்சியில் மூன்றாவது இடத்திலேயும் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே அதிகமாக பெருகியிருக்கின்றன. கலைஞர் ஆட்சிக் காலத்தில், 1970 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் 6,215. புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு 1979-80-ல் 9,043 தொழிற்சாலைகள். பிறகு புரட்சித் தலைவர் இரண்டாம் முறையாக பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு 1983-ல் 11,920 தொழிற்சாலைகள் என்ற அளவிலே வளர்ந்திருக்கின்றன.

கலைஞர் ஆட்சிக் காலத்திலே மாவட்டத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் (பிப்காட்) இரண்டு தொழில் மையங்கள் இருந்தன. இன்றைக்கு ஐந்து தொழில் மையங்கள் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளை அமைப்பது மட்டுமல்லாமல், திட்டங்களுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்வதில் பணம் போதாமல் இருந்தாலும், அவற்றை வாதாடி வாங்குவதிலும் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 4,750 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியபோது, புரட்சித் தலைவர் அவர்கள் அதிகம் தர வேண்டும் என்று கேட்ட பிறகு, அவருடைய குரலுக்குச் செவி சாய்த்து ஆயிரம் கோடி ரூபாய் அதிகப்படுத்திக் கொடுத்ததற்காக மத்திய அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இருந்தாலும் மத்திய அரசு தொழிலில் முதலீடு செய்வதில் தமிழகத்திலே அதிக அளவு செய்யவில்லை என்ற குறை இருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் மற்ற மாநிலங்களில் செய்ததைப் போல தமிழகத்திலே முதலீடு செய்யவில்லை. அப்படிச் செய்திருந்தால் தமிழ் நாடு மிகவும் முன்னேற்றம் கண்டிருக்க முடியும். மத்திய-மாநில உறவுகள் சுமுகமாக இருக்கும்போது ஒன்று, சுமுகமான உறவு இல்லாத நிலை இருக்கும்போது இன்னொன்று என்று

மத்திய அரசு முடிவு எடுப்பது நல்லதல்ல. நல்ல உறவு இருந்தபோது, கலர் பிலிம் தொழிற்சாலைக்கு உதகமண்டலம் தேர்வு செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, கலர் பிலிம் தொழிற்சாலையைத் தொடங்க தகுதியான இடம் உதகமண்டலம் தான் என்று அறிவித்தார்கள். **அதன் பிறகு மாநில உறவு சரி** யாக இல்லாமல் இருந்தபோது, உத்திரப்பிரதேசத்திற்குக் கொண்டு போய் விட்டார்கள். உறவு நிலை சரியாக இருக்கும்போது உருக்காலை என்கிறார்கள், சரியாக இல்லாமல் இருக்கும்போது உருட்டாலை என்று சொல்லுகிறார்கள். தானாக உதவ முன்வரவில்லை. அதனால், புரட்சித் தலைவர் அவர்கள் அடையாள உண்ணாவிரதம் இருந்தார்கள். மத்திய அரசு தொகுப்பிலிருந்து அரிசி வழங்க வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்தார்கள். இப்போது அப்படி இல்லை. எல்லாம் சுமுகமாக இருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலமாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலமாக இருந்தாலும் சரி, மத்திய அரசு மாநிலங்களுக்கு உதவி செய்வதில் எதைச் செய்தாலும் அதை இந்தியாவிற்குச் செய்கிறோம் என்ற எண்ணத்திலே செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கட்சி வித்தியாசம் பார்க்கக் கூடாது.

சுற்றுலா வளர்ச்சிக்கு உற்சாகம் ஊட்டவில்லை என்று அமைச்சர் திரு. ஆர். எம். வீ. அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். இதையெல்லாம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியவர்கள் மத்தியிலே சொல்ல வேண்டும். தமிழகம் கேட்காமலே நன்மை செய்தால் அடுத்த முறை காங்கிரஸ் ஆட்சிக்கு வர முடியும், அல்லது காங்கிரஸ் கட்சி வேர் ஊன்ற முடியும். அறிஞர் அண்ணா அவர்கள் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்று பிரச்சாரம் செய்தபோது, அப்போதிருந்த திரு. காமராஜ் அவர்களும் திரு. வெங்கட்ராமன் அவர்களும், தமிழகத்திற்கு அதைப் பயன்படுத்திப் பல தொழில்களைக் கொண்டு வந்தார்கள். அதைப் போல செய்வதிலே தவறு இல்லை. அடுத்து, காங்கிரஸ் கட்சிதான் ஆட்சிக்கு வரும் என்று சொல்லு கிறார்கள். இதை மக்கள் சொல்லவில்லை, காங்கிரஸ்காரர்கள் அவர்களுக் குள் சொல்லுகிறார்கள். அண்மையில் காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு விழா கருத்தரங்கு சென்னையில் நடந்தது. அதிலே, அந்தக் காலத்திலே திரைப்பட நடிகையாக இருந்த ஜமுனா ஒரு கருத்தைச் சொன்னார். "தமிழ் நாட்டில் எப்படியும் காங்கிரஸ் ஆட்சியைக் கொண்டு வருவோம், அதற்காகப் பாடுபடுவோம்" என்றார். அப்போது நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அவர்கள் ஒன்றைச் சொன்னார். 'காங்கிரஸ் கட்சியை அரியணையில் ஏற்றாமல் கண் மூடமாட்டேன்' என்று சொன்னார். இது இந்த ஆண்டின் பெரிய நகைச்சுவை என்று எல்லோரும் சொல்கிறார்கள். இங்கே யுள்ள காங்கிரஸ் பெரியவர்கள் உதகமண்டலத்திற்கு வர வேண்டிய தொழி



காலை உத்திரப் பிரதேசத்திற்குப் போய் விட்டிருந்தாலும், நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்தபோது வாதாடிப் பெற்றோம். "எதிர்க்கட்சியாக இருக்கும் போதே நாங்கள் தமிழகத்திற்கு நன்மை செய்திருக்கிறோம் என்றால், ஆட்சிக் கட்சியாக இருந்தால், எந்த அளவிற்கு நன்மை செய்வோம் என்பதை எண்ணிப்பாருங்கள், ஆகவே எங்களுக்கு வாக்களியுங்கள்" என்று மக்களிடம் காங்கிரஸ் கேட்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதால் இதைச் சொல்கிறேன்.

**(பிற்பகல் 2-10)**

இன்றைக்கு தமிழ் நாட்டிலே பின்தங்கிய பகுதிகள் முன்னேற வேண்டு மென்பதற்காக 31 **தொழிற்சாலைகள் திறக்கப்பட இருப்பதாக இந்தக்** கொள்கை விளக்கக் குறிப்பிலே **சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான்** பாராட்டுகிறேன். **பின்தங்கியவர்கள் எல்லாம் முன்னேற வேண்டும், அவர்** களை முன்னேற்ற வேண்டும் என்பது புரட்சித் தலைவர் அவர்களின் கருத்து. அது மிகச்சிறந்த **முறையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: காங்கிரஸ் ஆட்சிக்கு வர** வேண்டுமென்று தாங்கள் என் ஆலோசனை சொல்லிக் கொண்டிருக் கின்றீர்கள்?

**கவிஞர் முத்துலிங்கம்:** நல்லது செய்தால் மறுபடியும் ஆட்சிக்கு வரலாம். மக்கள் ஓட்டுப் போட்டால், யாரும் ஆட்சிக்கு வரலாம். ஆனால் மக்கள் **ஓட்டுப்போட வேண்டும்.**

இறுதியாக ஒன்று சொல்லிக்கொள்கிறேன். **சிவகெங்கையில், முத்து** ராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் **கிராபைட் தாதுப் பொருள்களை பயன்** படுத்த 1½ கோடி **ரூபாய் செலவில் ஒரு தொழிற்சாலை அமைக்க இருப்பதாக** வும், அதே பகுதியில் **கருங்கற்களை சலவைக் கற்களாக மாற்றி வெளிநாடு** களுக்கு **ஏற்றுமதி செய்ய ரூ. 3½ கோடியில் ஒரு தொழிற்சாலை அமைக்க** இருப்பதாகவும் குறிப்பிலே கூறப்பட்டு இருக்கிறது. இருக்கின்ற மாவட்டங் **களில் மிகமிகப் பின்தங்கிய மாவட்டம் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்** தான். பொருளாதார ரீதியிலேயும் எல்லாவற்றிலும் பின் தங்கிய மாவட்டம் அதுதான். அந்த மாவட்டத்திலேதான் நான் பிறந்தேன். அந்த சிவகங்கைக்குப் பக்கத்திலே ஒரு கிராமத்தில் பிறந்தவன். அந்த மாவட்டத்தில் பிறந்ததால் நானும் பின்தங்கியிருக்கிறேன். அந்த முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் பின் தங்கிய மாவட்டம் என்று அறிவிக்க வேண்டும். பொருளாதார ரீதியாக அது வளர்ச்சி அடையும் வரை அப்படி அறிவித்திருக்க வேண்டும். **நல்ல** தொழிற்சாலைகளைக் கொண்டுவரும் வரையில் அது பின் தங்கிய மாவட்டம் என்று அறிவிக்க வேண்டும். அல்லது அந்த மாவட்டத்திலே **சிவகங்கை,**

மானாமதுரை தாலுக்கா போன்ற தாலுக்காக்களையாவது பின்தங்கிய பகுதி என்று அறிவிக்க வேண்டும். அந்த மாவட்டத்தைக் கவனிக்கும்போது; அந்த மாவட்டத்தை விடப் பின்தங்கியிருக்கும் என்னையும் சேர்த்து கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாவட்டமே இல்லாத தொழிற்சாலை என்று ஆக்க வேண்டும். தொழிற்சாலையே இல்லாத மாவட்டம் என்று . . . . .

(குறுக்கீடு)

தலைவர் அவர்களே, தங்கள் முகத்தையே பார்த்துப் பேசுகின்றவன் நான். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் முகத்தைப் பார்த்து, மிசா கணேசன் அவர்கள் முகத்தைப் பார்த்துப் பேசினேன். அவர்களைப் பார்த்துப் பேசியதால் எனக்குக் குழப்பம் வந்து விட்டது. அவர்கள் முகத்தைப் பார்த்துப் பேசினால் அப்படி பேசுகின்ற மனிதனுக்கு ஒரு குழப்பம் ஏற்படும் என்றால், அவர்கள் சேர்ந்திருக்கின்ற கட்சி இந்த நாட்டிலே ஆளும் கட்சியாக வந்தால், நாடு எத்தகைய குழப்பத்திற்கு ஆளாகும் என்பதை தாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அவையிலே இருக்கும்போதே உறுப்பினர் அவர்கள் தள்ளாடுகிறார்களே, வெளியிலே போனால் என்ன ஆகும் என்று தெரியவில்லை.

**கவிஞர் முத்துலிங்கம் :** உங்களைப் போன்ற பெரியவர்களைப் பார்க்கும் போது, இளைஞனாக இருக்கும் எனக்கும் தள்ளாட்டம் வந்து விடுகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அவர் இளைஞனா? ஆச்சரியமாக இருக்கின்றது.

**கவிஞர் முத்துலிங்கம் :** வயது அதிகமானால்தான் எல்லோருக்கும் சபலம் வரும் என்று சொல்வார்கள். எனக்கு சபலமே இல்லை. ஆகவே நான் இளைஞன் என்று நினைக்கிறேன். ஆகவே ஒவ்வொரு தொழிற்சாலை ஒவ்வொரு தாலுக்காவிற்கு என்று கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 12—7—1985 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 2.1:



## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### ஆ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

241. தர்மபுரி மாவட்டத்தில் மாம்பழங்கள் கொள்முதல் செய்வதை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண்மைத் துறையின் 18—1—1935 ஆம் நாளிட்ட 58 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.].

242. 1974 ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்ட நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்திற்குச் சொந்தமான வண்டிகளுக்கு வரி விதிப்பு குறித்து உள் (போ-1 துறையின் 16-4-1985 ஆம் நாளிட்ட 932 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

243. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 7—5—1985 ஆம் நாளிட்ட 446 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

244. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 29—11—1984 ஆம் நாளிட்ட 1201 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

245. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

246. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

[1985 ஜூலை 11

247. தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

248. தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

249. தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

250. தமிழ்நாடு அரசுத் தேர்வாணைக் குழுவின் 1980-81 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் நிர்வாக அறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (2) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

251. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

252. நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் 1984 ஆம் ஆண்டிற்கான முதல் ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

253. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. (தமிழ்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

254 பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாம் ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]



1985 ஜூலை 11]

255. பல்லவன் பொறியியற் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதினோராம் ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

256. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான 34-வது ஆண்டறிக்கை. (தமிழ்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

257. பல்லவன் பொறியியற் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

* 130. தொழிற் கொள்கையும் திட்டங்களும் (ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்), 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

131. 1985-86 ஆம் ஆண்டிற்கான ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

132. 1985-86 ஆம் ஆண்டிற்கான சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

133. தமிழ்நாட்டில் சிறு தொழில்களின் சிறப்பான வளர்ச்சிக்கு "சிட்கோ" என்ற புத்தகம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

134. 1984-85 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித்துறை பற்றிய சாதனைத் திட்டம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

135. பட்டுத் தொழிலில் சாதனை படைத் திட்ட விவசாயிகளின் வெற்றிக் கதைகள் என்ற புத்தகம். (தமிழ்).

136. தமிழ்நாட்டில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

137. எழுதுபொருள்-அச்சுத்துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

138. பாசனம் மற்றும் கட்டிடங்கள் மீதான கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

139. சமூக நலம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

140. 1985-86 ஆம் ஆண்டிற்கான சமூக நலத்துறை பற்றிய சாதனைத் திட்டம். (ஆங்கிலம்).

141. பால் பண்ணை வளர்ச்சித்துறை குறித்த கொள்கை விளக்கம், 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்.)

142. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை, 1984. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

143. தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

144. கூட்டுறவுத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

145. 'தமிழகத்தில் மத்திய கூட்டுறவு வங்கிகள்' என்ற புத்தகம், 1984-85 (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

146. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி பற்றிய சிறு குறிப்பு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

147. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் பற்றிய குறிப்பு, 1984-85. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

148. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள் பற்றிய குறிப்பு 31—3—1985-ல் உள்ளபடி. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

149. உழவர்களின் நண்பன் "டான்ஃபெட்"—'தமிழக உழவர்களுக்கு ஒரு கூட்டுறவு நிறுவனம்' என்ற புத்தகம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).



150. கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

151. 1985-86 ஆம் ஆண்டிற்கான கால்நடை பராமரிப்புத்துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

152. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1984-85 ஆம் ஆண்டு பணிகள் விவரம் பற்றிய அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

153. தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் 1984-85 ஆம் ஆண்டு நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

154. மாநில ஆயத் தீர்வைத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

155. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் சிறப்பு கூறுகள் பற்றிய குறிப்பு, 1984. (தமிழ்).

156. சென்னை நகரத்தில் பால் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் பற்றிய குறிப்பு. (ஆங்கிலம்).

157. கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறையின் கொள்கையும் திட்டங்களும், 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

158. 1985-86 ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறையின் சாதனைத் திட்டம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

159. சின்கோனாத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

160. 1985-86 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய சாதனைத் திட்டம். (ஆங்கிலம்).

161. 1985-86 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு செலவுத் திட்டம். (ஆங்கிலம்).

162. நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

---

* 5—7—1985 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

## இணைப்பு I

(29 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 85-க்கான விடையைக் காண்க.)

(அ) ஆம்.

(இ) சென்னை நகரில் உள்ள குடிசைப் பகுதிகளை இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் கொண்டுவர, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கீழ்க்கண்ட பரிந்துரைகளை செய்துள்ளது :—

(1) ஒரு குடிசைக்கு ரூபாய் 2,000 வீதம் இன்சூர் செய்ய அரசு சம்மதிக்கலாம். அதன்படி இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவு ரூபாய் 3.15 இலட்சமாகும்.

(2) பிரிமியம் தொகையில் 50 சதவிகிதத்தை குடிசைவாசிகள் கொடுக்க வேண்டும். இத்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் இன்சூர் செய்ய விரும்பும் குடிசைவாசிகளுக்கு அரசு பிரிமியம் தொகையை குடிசைவாசிகளின் சார்பில் அளிக்கலாம்.

(3) அரசு அல்லது தனியார் நிலத்தில் உள்ள குடிசைகள் என்ற வேறுபாடின்றி அனைத்துக் குடிசைகளையும் இன்சூர் செய்ய அரசு சம்மதிக்கலாம்.

(4) பொது பாதுகாப்பீட்டுக் கழகம், இன்சூர் செய்து கொள்வதற்கு ஒரு பகுதியில் உள்ள குடிசைகளின் எண்ணிக்கை 60-க்கு மேல் இருக்கக் கூடாது என்று கோரியுள்ளது. ஆனால் இந்த நிபந்தனை சென்னை நகரைப் பொறுத்தமட்டில் ஏற்க இயலாது. ஏனெனில் சென்னை நகரில் உள்ள பெரிய குடிசைப் பகுதிகள் தான் அடிக்கடி தீ விபத்துக்கு உள்ளாகின்றன. அரசு இப்பகுதிகளில் தீ விபத்தின்போது அதிக நிவாரணச் செலவு செய்கிறது.

(5) பல இடங்களில் குடிசைகளின் சொந்தக்காரர்கள் வாடகைதாரர்களிடமிருந்து வாடகை வசூலித்து வருமானம் பெறுகின்றனர். தீ விபத்தின் போது வாடகைதாரர்களுக்கு ஏற்படும் பொருள் நஷ்டத்தை குடிசைச் சொந்தக்காரர் ஈடுகட்டுவதில்லை. எனவே குடிசை சொந்தக்காரர்களை வாடகைதாரர்களும் சேர்ந்து பிரிமியம் கட்டுமாறு வலியுறுத்தி சட்டம் இயற்றலாம்.



(6) தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய சட்டம் உட்பிரிவு 4-ன் படி, குடிசைகளின் சொந்தக்காரர்கள் குடிசைவாசிகள் ஆகியவர்கள் தாங்கள் குடிசைவாசிகள் என்று குடிசை மாற்று வாரியத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். சட்ட உட்பிரிவு 6-ன்படி வாரியத்தின் முன் அனுமதியின்றி புதுக் குடிசைகள் மற்றும் புதுக்கட்டிடங்கள் கட்டக்கூடாது. இந்த இரு பிரிவுகளையும் தீவிர அமுலுக்கு கொண்டு வந்தால் இன்சூரன்ஸ் செய்வதற்கு தேவையான விவரங்கள் கிடைக்கும்.

(7) கட்டாய இன்சூரன்ஸ் திட்டத்தை அமுல்படுத்த புதுச்சட்டம் கொண்டு வரலாம்.

மேற்காணும் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

## இணைப்பு II

(32 ஆம் பக்கத்தில் இனம் 4(1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

அரசாணை எண் 1155, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 23—6—1981-ல், ஆணை வெளியிடும் நாளிலிருந்து திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மணிகண்டம், அந்தநல்லூர் மற்றும் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டது. இதனால் ஏற்படும் செலவை அந்த ஊராட்சி ஒன்றியமே ஏற்க வேண்டும் என்றும் அந்த ஆணையில் கூறப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அனைவரும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டனர். எனவே மேலே சொல்லப்பட்ட ஆணையின்படி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கும் ஊதிய பட்டியலை (Bills) அனுமதிக்க திருச்சி கிளைக் கருவூலக அதிகாரிக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அவர் மறுத்து மேலே உள்ள பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்க அரசு தனியானதொரு ஆணை வெளியிட வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்கள். மேலே உள்ள பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கக் கோரும் பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை அரசு பரிசீலித்து வருகிறது.

மேலே உள்ள சலுகைகள் மேலே சொல்லப்பட்ட ஒன்றியங்களைச் சார்ந்த தனியார் பள்ளிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் நீட்டிக்கலாமா என்பது பற்றியும் அரசு பரிசீலித்து வருகிறது. இது பற்றி அரசு கூடிய விரைவில் தக்க உத்தரவு வெளியிடும்.



## இணைப்பு III

(34 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக்காண்க.)

தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம், 1973-ன் பிரிவு 9-ன் கீழ் சிறுபான்மையினர்கள் பள்ளிகளைத் திறக்க முன் அனுமதி பெறத் தேவையில்லை. இதனைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்நாட்டின் பல பாகங்களில் வணிக நோக்குடன் இடைநிலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஏராளமான தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் அரசின் அங்கிகாரம் இன்றி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரி அரசின் அங்கீகாரம் இன்றி நடைபெற்று வரும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்வி பட்டயப் பொதுத் தேர்வில், தேர்வு எழுத தகுதி பெற்றவர்கள் அல்ல எனவும், இந்நிறுவனங்கள் வழங்கும் சான்றிதழ்கள் அங்கீகரிக்கப்பட்டவை அல்ல என்றும், இந்நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள் வேலை வாய்ப்பிற்குத் தகுதியற்றவர்கள் என்றும், இது போன்ற நிறுவனங்களில் மாணவ/மாணவிகளைச் சேர்க்க வேண்டாம் என பொது மக்களைக் கேட்டுக் கொண்டும், அரசு, தமிழ், ஆங்கிலச் செய்தித் தாள்களில் 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளில் செய்திக் குறிப்புகள் வெளியிட்டது. இருப்பினும் அங்கீகரிக்கப்படாத தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் பல தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் மேற்கண்ட நிறுவனங்களில் பயின்று வரும் மாணவ மாணவிகளின் நலன் கருதி, பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரைப்படி, 1983-85 கல்வி ஆண்டுகளின் இறுதியில், தானே மூடி விடவும் மற்றும் இவ்வாறான நிலையைப் பிறகு ஏற்படுத்தக் கூடாது என்ற நிபந்தனையை ஏற்றுக் கொள்ளவும், முன்வரும் அங்கீகரிக்கப்படாத தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று வரும், அரசு விதித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் மாணவ மாணவிகளை மட்டும், அருகில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மூலம் தேர்வு எழுத அனுமதி வழங்கலாம் என அரசாணை (வாலாயம்) எண் 1834, கல்வி, நாள் 21—11—1984-ல் பள்ளிக் கல்வி இயக்குநருக்கும், அரசு தேர்வுகள் இயக்குநருக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இதன்படி பல நிறுவனங்களில் படிக்கும் தகுதியுள்ள மாணவ மாணவியர் தேர்வு எழுத அனுமதிக்கப் பெற்றிருக்கின்றனர். இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மூடிவிட முன்வராத சில ஆசிரியர் பயிற்சி பள்ளி மேலாண்மைகள் அரசின் அங்கீகாரம் கோரி

உயர்நீதி மன்றத்தில் உரிமைப் போராணை வழக்குகள் தொடுத்து, அங்கீகாரம் எதிர்பார்த்து, நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு பெற்று அந்நிறுவனங்களில் படிக்கும் தகுதிபெற்ற மாணவ மாணவியர் தேர்வு எழுத அனுமதி பெற்று வருகின்றன. இவ்வழக்குகள் நிலுவையில் உள்ளன. வேறு சில ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இந்த நிபந்தனைகளுக்கு உட்படுவதாக பள்ளிக் கல்வி இயக்குநருக்கு தெரிவித்துவிட்டு, இதனை மறைத்து, உயர்நீதி மன்றம் மூலம் தகுதியில்லாத மாணவர்களையும் தேர்வு எழுத அனுமதிக்க இடைக்கால ஆணையும் பெற்று வருகின்றன. இந்த இடைக்கால உத்தரவுகள் மீது தடை உத்தரவு பெற அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.



## இணைப்பு IV

[41 ஆம் பக்கத்தில் இனம் 5(2)க்கான அடிக்குறிப்பைக் காண்க]

### தொழில் கொள்கையும், திட்டங்களும்.
### (பெருந் தொழில்கள்.)

வேலை வாய்ப்பைப் பெருக்குவதன் மூலம் வறுமையைப் போக்குவதே தமிழ்நாடு அரசின் கொள்கையாகும். குறிப்பாக மிகவும் பின்தங்கிய கிராமப்புறப் பகுதிகளில் சிறு தொழில்களை வளர்ப்பதன் மூலமும் அதே சமயத்தில் அரசின் நிதி வாயில்களையும் வருவாயையும் பெருக்கப் பெருந்தொழில்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமும் இந்நோக்கம் எய்தப்படுகிறது. நடுத்தர, பெருந் தொழில்களின் வளர்ச்சியுடன் சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் வளர்ப்பதே மாநில அரசின் கொள்கையாகும். இந்நோக்கத்தைக் கருத்திற் கொண்டு, இம் மாநிலம் முழுவதும் பெரும், நடுத்தர, தொழில்களின் வளர்ச்சிக்காக டிட்கோ, டான்சம், சிப்காட், டிக், எல்காட், டிஎன்பி.எல், தமிழ்நாடு உப்புக் கழகம், டான்சி, டாமின், டான்மாக், சர்க்கரை கழகங்கள் ஆகியவை பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேகொண்டுள்ளன.

2. தொழில் வளர்ச்சி.—இம் மாநிலத்தில் தொழிற்சாலைகளை அமைக்க தொழில் முனைவோரை ஊக்கப்படுத்துவதற்கு மாநில அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இசைவுக் கடிதத்தை அனுமதிப்பதும் அவற்றை தொழில் உரிமங்களாக மாற்றுவதும் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. 1984 ஆம் ஆண்டில் (டிசம்பர் வரையில்) தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அமைக்க 90 இசைவுக் கடிதங்களும் 79 தொழில் உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன.

(i) தமிழ்நாட்டில் ''தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டம்'' இல்லை. அதனால், சில வகையான உரிமங்கள் ''தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டங்களுக்கு'' மட்டுமே ஒதுக்கப்படுவதால் நம் மாநிலம் இக்கட்டான நிலைமையிலுள்ளது. இக்கருத்தை மாற்றி ''தொழிற்சாலைகளே இல்லாத வட்டம்'' அல்லது ''தொழிற்சாலைகளே இல்லாத வட்டாரம்,, என்ற கருத்தைப் பின்பற்றுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வந்துள்ளது. இது குறித்து மத்திய அரசின் கருத்து எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) மேற்கூறிய இடையூறு இருந்து வந்த போதிலும், மூலதன உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் மத்திய அரசிடமிருந்து ஈடுசெய் தொகை பெறுவதைப் பொறுத்தமட்டில், நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாடே தொடர்ந்து

முதலிடம் வகித்து வருகிறது. முக்கியமான தொழில்களுக்கு அனுமதிகளை மத்திய அரசு அளிக்க வேண்டியுள்ளது. விரைவில் அனுமதிகளைப் பெறுவதற்கு மாநில அரசு பரிந்துரைக்கும் இனங்கள் குறித்து புது டில்லியில் தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இப்பணியை மிகவும் விரைந்து செய்வதற்கு, புது டில்லியில் மாநில அரசு சார்பில் தொழில் தொடர்பு அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

3. பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பொதுத் துறையில் பெரிய, நடுத் தரத் தொழிற்சாலைகள் பலவற்றைத் தொடங்கியுள்ளது. இக் கழகம், தனியார் தொழில் முனைவோரின் ஒத்துழைப்போடு கூட்டுத் துறையில், குறிப்பாகத் தனியார் தொழில் முனைவோர் சொந்தமாகத் தொழிற்சாலைகளைத் தொடங்க முன்வராத பின் தங்கிய பகுதிகளில் எண்ணற்ற தொழிற் பிரிவுகளைத் தொடங்கியுள்ளது. நலிந்த தொழிற் பிரிவுகள் சிலவற்றுக்கும் இது உதவியளித்துள்ளது. இக்கழகம், இம் மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் கூட்டுத் துறையில் 31 தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைவதில் இது நாட்டம் செலுத்தி வருகிறது.

4. தமிழ்நாடு சிமிட்டி நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் துணை நிறுவனமாக நிறுவப்பட்டது. சிமிட்டி உற்பத்தி விற்பனை, சுண்ணாம்பு, சுண்ணாம்புக்கல், சாம்பல் கட்டி (Clinker) சிமிட்டி ஆஸ்பெஸ்டாஸ், சிமிட்டி உற்பத்திக்குத் தேவையான ஏனைய பொருட்கள் ஆகியவற்றை விற்பதே இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந் நிறுவனம் நான்கு தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது. அவை யாவன : (i) ஆலங்குளம் சிமெண்ட் ஒர்க்ஸ், (ii) அரியலூர் சிமெண்ட் ஒர்க்ஸ், (iii) தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ், (iv) தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் பிரஷர் பைப் ப்ராஜெக்ட்ஸ், அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, இந்நிறுவனத்திடம் திட்டமுள்ளது மதுரை மாவட்டம், பாளையத்தில் சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றைப் புதிதாக அமைப்பதற்கு அனுமதி வேண்டி இந்நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

5. தமிழ்நாடு கனிம நிறுவனம்.—சிவகங்கையில் கிடைக்கும் கிராபைட் தாதுப் பொருளைப் பயன்படுத்துவதற்கு ரூ. 1.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க அரசு அனுமதித்துள்ளது. மேலும், அரசு பங்கு மூலதனமாக ரூ. 20 இலட்சமும் வழங்கியுள்ளது. ரூ. 3.85 கோடி மூலதனச் செலவில் கருங்கற்களை வெட்டி மெருகேற்றுவதற்கான மற்றொரு தொழிற்சாலையைத் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசின் பங்கு மூலதனத் தொகை ரூ. 30 இலட்சமாகும். இத் தொழிற்சாலைப் பணி 1985–86 ஆம் ஆண்டில் தொடங்கும்.





6. தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம்:—மாக்னஸைட்டைப் பயன்படுத்தி ரூ. 80 கோடி மொத்தச் செலவில் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க தமிழ்நாடு மாக்னஸைட் நிறுவனம் கருதியுள்ளது. முதற்கண் ரூ. 7.65 கோடி செலவில் மாக்னசைட் தாதுப் பொருளை கரிந்த மாக்னசைட் தாதுப் பொருளாக, மாற்றுவதற்கு சுழல் சூளை ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது இத் திட்டப்பணி 1985 ஆம் ஆண்டு தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாம் கட்டப் பணியாக வெட்டி எடுக்கப்பட்ட தாதுப் பொருளிலிருந்து அதிக அளவில் மாக்னசைட் எடுப்பதற்கு வகை செய்யும் பொருட்டு, மாக்னசைட் தாதுப் பொருளை இரசாயன முறையில் சுத்திகரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 26.5 கோடி செலவில் 1987-ல் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் பங்கு மூலதனத்திற்கு அனுமதி வழங்கப்படும். மூன்றாம் கட்டப் பணியாக நவீன உருக்கு ஆலைகளில் பயன்படுத்துவதற்கான ரூ. 45 கோடி மதிப்பீட்டுச் செலவில், உயர்ந்த ரக வெப்பந் தாங்கிச் கற்களைத் தயாரிக்கத் தனித் தொழிற்சாலை ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம்.—தற்போது சர்க்கரை ஆலைகளில் எரித்து விடப்படும் கரும்புச் சக்கைகளை முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுத்தி செய்தித் தாள், அச்சுத்தாள், எழுதும் தாள் ஆகியவற்றைத் தயாரிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் நிறுவப்பட்டது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுவரும் செய்தித்தாள் காகிதத்திற்குக் கொடுக்கப்படும் அந்நியச் செலாவணித் தொகையில் ஆண்டுதோறும் ரூ. 40 கோடி அளவில் இந் நிறுவனத்தில் செய்தித்தாள் காகிதம் தயாரிக்கப்படுவதால் மிச்சம் ஏற்படும். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் காகிதக் கூழையும் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளதோடு, அப் பணி வெற்றிகரமாக நடைபெற்றும் வருகிறது. இவ்வாலை, வணிக முறையிலான உற்பத்தியை விரைவில் தொடங்கும்.

8. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்:—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், மாநில அளவில் உள்ள நிதி நிறுவனங்களில் முதன்மையான தொன்றாகும். வளர்ச்சியைத் தீவிரமாக அதிகரிக்கும் நோக்கத்துடன் நிதியுதவி வழங்குவதே இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். காலந்தாழ்த்தி தொகை வழங்குவதற்கான உத்தரவாதம், பங்கு மூலதன நிதி உதவி அளிப்பதுடன், கட்டிடங்கள், தளவாடங்கள், இயந்திரங்கள், சாதனங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கும் இந்நிறுவனம் கடன் உதவி வழங்குகிறது. கடன் மனுக்களுக்கு விரைவில் முடிவு எடுக்கும் நோக்குடன், கடன் மனுக்கள் வரப் பெற்ற 45 நாட்களுக்குள் அதற்கு முடிவு எடுக்குமாறு இந்நிறுவனத்திற்கு அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது.

9. தொழில் நுட்பம் அறிந்தவர்கள் அல்லது போதிய முன் அனுபவம் உடையவர்கள் ஆகியோர் முதல் முறையாகத் தொழில் தொடங்கினால் அவர்களுக்குக் குறைந்த வட்டியுடன் கடன் வழங்கும் திட்டத்தின் விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன; அவ்வாறு அவர்கள் தொடங்கும் தொழில்கள், பின்தங்கிய பகுதியில்லாத இடத்தில் இருந்தால் அவர்களுக்கு வழங்கும் கடன் தொகையின் உயர் வரம்பு மீதான 10 சதவீதக் கட்டுப்பாடும் பின்தங்கிய பகுதியில் அமைந்திருந்தால் 15 சதவீதக் கட்டுப்பாடும் விலக்கப் படுகிறது.

10. மத்திய அரசின் முதலீடு:—தமிழ் நாட்டிற்கு வழங்கப் பட்டு வரும் மத்தியத் துறையின் முதலீட்டுக் தொகை மிகவும் குறைவாக உள்ளது. அதிக அளவில் மத்தியத் திட்டங்களைச் செயற்படுத்துமாறு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளது. மாநிலத்தின் ஏற்றத் தாழ்வை சீர்செய்யுமாறு மாநிலத்தில் புதிய திட்டங்களை மேற்கொண்டும் செயற்படுத்து மாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்துகிறது.

11. சென்னை ஏற்றுமதி மண்டலம்:—ஏற்றுமதி மண் டலத்தை ஏற்படுத்துவதற்கென்று, சைதாப்பேட்டை வட்டம், தாம்பரத்திற்கருகில் அமைந்துள்ள 228 ஏக்கர் நிலம் ஒதுக்கப் பட்டுள்ளது. மண்டலத்தின் முதல் கட்டப் பணியைத் தொடங்கு வதற்கான கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது. இவ் வாண்டில் அவை செயற்படுத்தப்படும். இம் மண்டலத்தில் தொழில் பிரிவுகளைத் தொடங்குவதற்கென்று இதுவரை 26 தொழில் முனைவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். இம் மண்டலத்தின் இரண்டாவது கட்டப் பணிக்காக, சுமார் 292 ஏக்கர் நில எடுப்புப் பணி தொடங்கப்பட்டுள்ளது.

12. பெரிய நடுத்தரத் தொழில் ஏற்படுத்த ஒரே மைய அமைப்புக் கோட்பாடு:—தமிழ் நாட்டில் நடுத்தர, பெரிய தொழில்களுக்கு ஒரே மைய அமைப்பாக செயற்பட தொழில் துறை அரசு ஆணையாளர்-செயலாளர் தலைமையில், சம்பந்தப் பட்ட ஏனைய முதுநிலை அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்ட உயரதிகாரக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்குழு, திங்களுக்கு ஒரு முறை கூடி, நடுத்தர, பெரிய தொழில் களுக்கு அனுமதியுரிமைகள் வழங்குவதையும் அத் தொழில் களுக்குத் தேவையான இன்றியமையா அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதையும் விரைவுபடுத்துகிறது.

13. சர்க்கரைத் தொழில்:—சர்க்கரை உற்பத்தித் தொழில், கிராமப்புற மக்களுக்குப் பெருமளவில் நேரடியாகவும் பிறவகை யிலும் வேலை வாய்ப்புகளை அளித்துக் கொண்டிருக்கிறது. அது, உழவர்களின் பொருளாதார மேம்பாட்டில் வேளாண் சார்புத்



தொழிலாக இருக்கும் சர்க்கரை இன்றியமையாத ஒரு பொருளா கும். இத் தொழில் சர்க்கரை வழங்குவதுடன் இந்த ஆலைகள், சர்க்கரை ஆதாரமாகக் கொண்ட தொழில்களுக்கு முக்கிய மூலப் பொருளான கறுப்பஞ்சாற்று கசண்டையும் வழங்கி வருகின்றன. சர்க்கரையின் மற்றொரு துணைப் பொருளான கரும்புச் சக்கை காகிதத் தயாரிப்புக்கு முக்கியமானதொரு மூலப் பொருளாகப் பயன்படுகிறது. சர்க்கரைத் தொழிலின் நன்மை யைக் கருதி, 1969-ல் தனியொரு துறை அமைக்கப்பட்டது. இத்துடன், அரசுத் துறையில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைப் பதற்கென தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் என்னும் அரசு நிறுவன மொன்று அமைக்கப்பட்டுள்ளது. தற்போது, 11 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், 8 தனியார் துறை சர்க்கரை ஆலைகள், 3 அரசுத்துறை சர்க்கரை ஆலைகள், மத்திய அரசு நிர்வாகத்தில் ஒரு சர்க்கரை ஆலை உள்ளன. புதிதாக சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கென விண்ணப்பங்கள் பல மத்திய அரசின் அனு மதியை எதிர்பார்த்துள்ளன. இம்மாநிலத்தில், ஏழாம் ஐந்தாண் டுத் திட்டக் காலத்தில் மேலும் 10 புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

14. மின் அணுவியல் தொழில்:—மின் அணுவியல் தொழி லுக்கு மின்சாரம், நீர் ஆகியவை குறைந்த அளவே தேவைப் படுவதாலும், இத்தொழில் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்டுள்ளதாலும், இத் தொழில் தமிழ்நாட்டிற்கு மிகவும் பொருத்தமானதாகும். இம் மாநிலத்தில் மின் அணுவியல் தொழிலை விரைந்து விரிவாக்க சிறப்பான பொறுப்பை மேற் கொள்ளும் நோக்குடனும், தற்கால நவீன வாழ்க்கையில் மின் அணுவியல் தொழில் நுட்பப் பயன்பாட்டை விரைந்து பெருக்கும் நோக்குடனும், மின் அணுவியல்—அறிவியல்—தொழில் நுட்ப வியல் என்னும் துறை ஒன்று புதிதாக தலைமைச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சிறு அளவிலான மின் அணு வியல் தொழிற்பிரிவுகளை ஏற்படுத்த கவனம் செலுத்தப்படு கிறது. இவை குறைந்த முதலீட்டில் அதிக அளவு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, தொழில் நுட்ப வல்லுநர் களைக் கொண்ட புதிய வகைத் தொழில் முனைவர்களை உரு வாக்க உதவியும் புரிகிறது. இந் நோக்கங்களை எய்த தொழில் நுட்ப அளவில் பயிற்சி பெற்ற, தொழில்களைத் தொடங்கி, நடத்த வேண்டும் என்ற முனைப்புடைய, தகுதி வாய்ந்த பணி யாளர்கள் இம்மாநிலத்தில் பெருவாரியாக உள்ளனர். பி.எஸ்.ஸி, எம்.எஸ்ஸி, பட்டம் பெற்ற ஏராளமான பெண்களை இத் தொழிலில் பயன் தரத்தக்க விதத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம். மின் அணுவியல் தொழிலுக்கு மிகவும் பொருத்தமான தட்பவெப்ப நிலைகளைக் கொண்ட உதக மண்டலம், ஏற்காடு, கோடைக்கானல், நீலகிரி போன்ற பல மலைப் பகுதிகளை இம்மாநிலம் கொண்டுள்ளது. சோதனை நிலையங்களுக்கென்றே உரிய மின் அணுவியல்

தொழில் பிரிவுகளுக்காக தொழிற்பேட்டைகளை அமைப்பதன் மூலம், மின் அணுவியல் தொழிலை வளர்சியடைய செய்வதற்கு வசதி செய்து கொடுப்பதற்கு சிறந்த அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்கள் சோதனையிடும், தரக்கட்டுப்பாடு செய்யும் பணிகளை குறைந்த செலவில் செய்கின்றன. இதன் மூலம் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், அடிப்படைத் தொழில் நுட்பத் தகவலை அளிக்கும் புள்ளி விவர வங்கிக்கும் தகவல் நிலையத்திற்கும் உதவி புரிகிறது. இம்மாநிலத்தில், மின் அணுவியல் தொழிலை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட அரசு நிறுவனமாக, ''எல்காட்'', ஓசூரில் நிறுவப்பட்டுள்ள மின்பிரி மின்னியல் உறைகலம் தயாரிக்கும் தொழிற்சாலை, சென்னையில் தகவல் தொடர்பு முறைத் திட்டம்; அடையாறு இன்ஸ்ட்ரானிக்ஸ் வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள எண்காட்டி மணி காட்டும் எலக்ட்ரானிக்ஸ் கைக் கடியாரம் தயாரிக்கும் திட்டம் போன்ற பொதுத் துறைத் திட்டங்களை எடுத்துக்கொண்டுள்ளது. இவற்றுடன் பல கூட்டுத் துறைத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. குவார்ட்ஸ் அனலாக் வால் கிளாக்ஸ்-டைம் சிஸ்டம்களை சிறு அளவில் தயாரிப்போருக்கு விற்பனை வசதியையும் இக் கழகம் செய்து கொடுக்கிறது. ஏற்றுமதி வாய்ப்பைக் கொண்ட திட்டங்களுக்கு குறிப்பாக கம்யூட்டர் சாப்ட்வேர் திட்டங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்க இக் கழகம் கருதியுள்ளது. இம்மாநிலத்தில் மின் அணுவியல் தொழிலை விரைந்து வளர்ச்சியடையச் செய்வது தொடர்பாக, 23-3-1985 ஆம் நாளன்று சென்னைக்கு வருகை தந்த மத்திய அரசு மின் அணுவியல் குழுத் தலைவர் டாக்டர் சஞ்சீவிராவ் அவர்களுடன் மாண்புமிகு தொழிலமைச்சர் ஏற்கெனவே விரிவாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

(டிட்கோ)

தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு, தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), 1965 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்திற்கு நான்கு கிளை நிறுவனங்கள் உள்ளன. இம்மாநிலத்தில் கூட்டுத்துறை நிறுவனங்களைத் தொடங்குவதில்தான் டிட்கோ தனது முழு முயற்சியையும் மேற்கொண்டு வருகின்றது. கூட்டுத்துறை நிறுவனத்திற்கு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், 26 சதவீதம் பங்குத் தொகையையும் இதன் சகதொழில் முனைவர் 25 சதவீத பங்குத் தொகையையும் கொடுக்கின்றனர். எஞ்சியுள்ள 49 சதவீதத்திற்கு இந்நிறுவனம் பொதுமக்களை நாடுகின்றது. பொதுவாகத் திட்டச் செலவில் 1/3 பங்கு, பங்கு மூலதனத் தொகையாகவும், 2/3 நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகவும் பெறப்படுகிறது.



[1985 ஜூலை 11]

2. 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி (a) உற்பத்தியைத் தொடங்கியுள்ள தொழிற்சாலைகள், (b) நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை பற்றிய விவரங்களைப் பின் வரும் அறிக்கை காட்டுகிறது :—

| விவரம். | தொழிற் சாலைகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் கோடியில்.) | வேலை வாய்ப்பு (நபர்களின் எண்ணிக்கை.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| I. பொதுத்துறை— | | | |
| உற்பத்தியைத் தொடங்கியுள்ள தொழிற்சாலைகள். | 6 | 65.49 | 3,815 |
| நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள். | 4 | 51.48 | 1,335 |
| II. கூட்டுத்துறை— | | | |
| உற்பத்தியைத் தொடங்கியுள்ள தொழிற்சாலைகள். | 23 | 229.13 | 6,655 |
| நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள். | 9 | 218.97 | 4,155 |
| மொத்தம் .. | 42 | 565.07 | 15,960 |

3. 1985 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் ஒன்றாம் நாள் முதல் 31-3-1985 ஆம் நாள் வரையிலான கால அளவில், பின்வரும் தொழிற்சாலைகள் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது:—

| விவரம். | திட்டச் செலவு (ரூபாய் கோடியில்). | வேலை வாய்ப்பு (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பொதுத்துறை— | | |
| **ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் தொழிற்சாலை.** | **9.45** | **2.88** |

[1985 ஜூலை 11

II. கூட்டுத்துறை—

| | | |
|---|---|---|
| 1. ஃபைபர் பைப்ஸ் (இந்தியா) லிமிடெட். | 2.00 | 300 |
| 2. ஃபாப்லின் லிமிடெட் .. | 1.34 | 410 |
| 3. தமிழ்நாடு ப்ளோரின் அண்டு அலைடு கெமிகல்ஸ் லிமிடெட். | 18.20 | 307 |
| மொத்தம் .. | 30.99 | 1,300 |

4. 1985–86 ஆம் ஆண்டில் பின்வரும் தொழிற்பிரிவுகள் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது :—

| விவரம். | மூலதனச் செலவு (ரூபாய் (கோடியில்). | வேலை வாய்ப்பு (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| I. பொதுத் துறை— | | |
| 1. தமிழ்நாடு இன்டஸ்ட்டிரியல் ஏக்ஸப்ளோசிவ் லிமிடெட். | 20.85 | 540 |
| 2. மக்னீசியம் உலோகத் தொழிற்சாலை. | 5.20 | 110 |
| II. கூட்டுத் துறை— | | |
| ஆட்டுத்தோல் தொழிற்சாலை .. | 1.60 | 150 |
| மொத்தம் .. | 27.65 | 800 |

5. இன்றைய நாள் வரையில் உற்பத்தி செய்துவரும் நிறைவேறிவரும் 42 திட்டங்களில் 31 திட்டங்கள் மாநிலத்தில் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளில் நிறைவேற்றப்படுகின்றன. குறிப்பாகத் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுமாறு டிட்கோ கவனித்துக் கொள்கிறது.

6. மேற்கண்டவற்றுடன் திட்டச் செலவு ரூ. 276.82 கோடி ஆகக்கூடியதும், 6,100 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கக்கூடியதுமான 16 தொழில் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டங்களின் குறிக்கோள்களை வகுத்தல், சாத்தியக்கூறு அறிக்கைகளைத் தயாரித்தல், தொழில் உரிமம் பெறுதல்/தொழில் நுட்ப வளர்ச்சி மேளாண்மை இயக்குநரிடம் பதிவு செய்தல் முதலிய பல்வேறு நிலைகளில் இத்திட்டங்கள் உள்ளன.



185 ஜூலை 11]

7. டிட்கோ நிறுவனம் ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ள திட்டங்களின் மூலம் இது வரை ஏறக்குறைய 10,500 பேருக்கு வேலை வாய்ப்பு நல்கியுள்ளது.

8. 1984 ஆம் ஆண்டில் '' டிட்கோ '' நிறுவனம் கூட்டுத்துறையில் ஆறு தொழில் முனைவோருடன் சேர்ந்து தொழில் தொடங்க அதற்கான ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளது. டிட்கோ, நிறுவனத்தின் அனுமதியளிக்கப்பட்ட மூலதனத்தை ரூ. 60 கோடிக்கு அரசு உயர்த்தியுள்ளது. கூட்டுத்துறையில் செயற்படுத்த லீனியர் ஆல்கைல் பென்சின் தயாரிக்கும் ஒரு முக்கியமான திட்டம் சமீபத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

9. டிட்கோ நிறுவனத்திற்கு வரி செலுத்துவதற்கு முன்னர் கிடைத்துள்ள ஆதாயம் பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | ஆதாயத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1980–81 .. .. .. .. .. | 29.60 |
| 1981–82 .. .. .. .. .. | 159.80 |
| 1982–83 .. .. .. .. .. | 192.75 |
| 1983–84 .. .. .. .. .. | 163.03 |

1984–85 ஆம் ஆண்டிலும் டிட்கோ நிறுவனம் நல்ல ஆதாயத்தை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இனி வரும் ஆண்டுகளிலும் இதே போல் ஆதாயத்தை ஈட்டும் என்று டிட்கோ நிறுவனம் நம்புகிறது.

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (டான்செம்).

1. பொது :

1.1. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் (டான்செம்) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழுவதும் சொந்தமான கிளை நிறுவனமாக 11–2–1976 ஆம் நாளன்று ஏற்படுத்தப்பட்டது.

1.2. இந்நிறுவனம் ரூ. 10 கோடி அனுமதியளிக்கப்பட்ட மூலதனத்துடன் தொடங்கப்பட்டது. இந்த மூலதனம் 1977ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ரூ. 11 கோடியாக உயர்த்தப்பட்டு, 1980ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் ரூ. 12.50 கோடியாக மேலும் உயர்த்தப்பட்டது. இத்தொகையில் ரூ. 12.36 கோடி செலுத்தப்பட்டுள்ளது.

1.3. டான்செம் 1–4–1976 ஆம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது. சிமெண்ட்டை உற்பத்தி செய்து விற்பனை செய்தல், சுண்ணாம்பு, சுண்ணாம்புக்கல், சுட்ட சுண்ணாம்பு, சிமெண்ட் கல் நார் தகடுகள் முதலியனவும், சிமெண்டு தயாரிப்புக்குத் தேவையான ஏனைய தொடர்புடைய பொருட்களையும் உற்பத்தி செய்து விற்பனை செய்தல் இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந்த நிறுவனம் கீழே குறிப்பிட்டுள்ளவாறு தனது நோக்கங்களை நிறைவேற்றி வருகிறது.

2. தற்போழுது, பின் வரும் நான்கு தொழில் பிரிவுகள் '' டான்செம் '' நிறுவனத்தின்கீழ் இயங்கி வருகின்றன :—

| சிமெண்டுத் தொழிற் பிரிவு. | உற்பத்தி. | ஆண்டு ஒன்றுக்கு நிறுவு திறன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (a) ஆலங்குளம் சிமெண்டு ஆலை. | சிமெண்டு .. | 4 இலட்சம் மெ.டன். |
| (b) அரியலூர் சிமெண்டு ஆலை. | ஷை | 5 இலட்சம் மெ.டன். |
| கல்நார் தொழிற்பிரிவு : | | |
| (a) தமிழ்நாடு ஆஸ்பெஸ் டாஸ். | கல் நார் தகடுகள், துணைப் பொருட்கள். | 36,000 மெ.டன். |
| (b) தமிழ்நாடு ஆஸ்பெஸ் டாஸ் பிரஸ்ஸர் பைப் திட்டம். | கல் நார் அழுத்தக் குழாய்கள். | 36,000 மெ.டன். |

2.1. அரியலூர் சிமெண்டு ஆலையின் உற்பத்தித்திறனைப் பெருக்க அதாவது ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறனிலிருந்து 10 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்த டான்செம் நிறுவனம் கருதியுள்ளது.

3. ஆலங்குளம் சிமெண்டு ஆலை:

3.1. ஆலங்குளம் சிமெண்டு ஆலையானது 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த ஆலை 1970 ஆம் ஆண்டில் வணிக முறையிலான உற்பத்தியில் ஈடுபட்டது. அப்போது இதன் நிறுவுத்திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும்.



3.2. இந்த ஆலை தமது உற்பத்தி இலக்கினை எய்த இயலவில்லை. தேசிய அளவில் நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டது, உயர் அழுத்த மின்சாரத் தேவைக்கு தடை விதித்து, உயர் அழுத்த மின்சக்தி பயனீட்டாளர்களுக்கு மின்வெட்டு விதித்தது, போதிய அளவிற்கு இரயில்வே வேகன்கள் கிடைக்காதது முதலிய வெளியில் ஏற்பட்ட பெரிய இடர்ப்பாடுகளின் காரணமாக இந்த ஆலையின் உற்பத்தித் திறன் குறைந்தது.

3.3. இந்த ஆலையின் உற்பத்தி, விற்பனைபற்றிய விவரங்கள் 1–4–1976 ஆம் நாளிலிருந்து கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | இந்த ஆண்டில் உற்பத்தி. (மெட்ரிக் டன்களில்.) | இந்த ஆண்டில் விற்பனை (மெட்ரிக் டன்களில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1976–77 .. .. .. | 3,38,445 | 3,33,294 |
| 1977–78 .. .. .. | 3,09,105 | 3,07,607 |
| 1978–79 .. .. .. | 3,19,277 | 3,20,377 |
| 1979–80 .. .. .. | 2,74,400 | 2,77,655 |
| 1980–81 .. .. .. | 3,01,148 | 3,06,614 |
| 1981–82 .. .. .. | 2,93,515 | 2,93,399 |
| 1982–83 .. .. .. | 2,80,760 | 2,83,508 |
| 1983–84 .. .. .. | 2,43,435 | 2,38,158 |
| 1984–85 (31–3–1985 வரை.) | 3,40,031 | 3,44,096 |

3.4. இந்த ஆலையில் நவீனமயமாக்குதல் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூபாய் 490 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1984 ஜனவரி மாதத்திலிருந்து ஆலங்குளம் ஆலையின் உற்பத்தியானது சீராக உள்ளது. 1984 ஜனவரியிலிருந்து 1985 ஜனவரி வரையில் ஆன சராசரி உற்பத்தித் திறனானது நிறுவுத் திறனில் 92.47 சதவீதமாகும். இக்கால அளவில் 6 மாதங்களுக்காக ஆலை நிறுவுதிறனில் 100 சதவீதத்திற்கும் மேல் உற்பத்தி இருந்தது.

3.5. ஆலங்குளம் ஆலையானது பின் தங்கிய பகுதிகளில் ஏறத்தாழ 1,600 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு அளிப்பதோடு மூலப் பொருட்களையும், வேலை நிறைவு பெற்ற பொருட்களையும் கொண்டு செல்வதற்காக அப்பகுதியில் உள்ளவர்களுக்கு வேறு வகையில் கணிசமான அளவிற்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

[1985 ஜூலை 11

## 4. அரியலூர் சிமெண்டு ஆலை.

4.1. அரியலூர் சிமெண்டு ஆலையானது ஓர் உலர் செய்முறை ஆலையாகும். இதன் ஆண்டொன்றின் நிறுவுத்திறனான்து 5 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். டிட்கோ நிறுவனம் இத் திட்டத்தை ரூ. 2,876 இலட்சம் செலவில் முதன் முதலில் தொடங்கியது. இத்திட்டத்திற்கு சம பங்குத் தொகை என்ற வகையில் டிட்கோ நிறுவனம் 575 இலட்சம் ரூபாயும் அனைத்திந்திய நிதி உதவி நிறுவனம் நிதி உதவி (கடன்) என்ற வகையில் 1,800 இலட்சம் ரூபாயும் வணிக வங்கிகள் 501 இலட்சம் ரூபாயும் நிதி உதவி அளித்தன.

4.2. இத்திட்டப் பணிகள் அரியலூரில் 1977 ஜனவரியில் தொடங்கப்பட்டன. 1—8—1979 ஆம் நாளன்று சிமெண்டு உற்பத்தி தொடங்கப்பட்டது. அரியலூர் சிமெண்டு ஆலை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டதோடு மட்டுமின்றி அடிக்கல் நாட்டிய 30 மாதங்களுக்குள் வணிக ரீதியில் உற்பத்தியையும் தொடங்கியது.

4.3. இந்த ஆலையின் உற்பத்தி, விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| ஆண்டு. | இந்த ஆண்டில் உற்பத்தி (மெட்ரிக் டன்களில்). | இந்த ஆண்டில் விற்பனை (மெட்ரிக் டன்களில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1979—80 (8 மாதங்களுக்கு) .. | 1,15,919 | 1,15,525 |
| 1980—81 .. .. .. | 2,46,733 | 2,41,949 |
| 1981—82 .. .. .. | 2,84,350 | 2,87,474 |
| 1982—83 .. .. .. | 2,47,300 | 2,47,836 |
| 1983—84 .. .. .. | 3,01,366 | 2,99,377 |
| 1984—85 (31—3—1985 வரையில்) | 2,84,366 | 2,80,569 |

4.4. இது செயல்படத் தொடங்கிய கால அளவில் நிலக்கரி பற்றாக்குறை, மின்சக்தி பயன்படுத்துவதிலான தடைகள் போதிய எண்ணிக்கைக்கு இரயில்வே வேகன்கள் கிடைக்கப் பெறாமை முதலிய புறக்கட்டுப்பாடுகளையும், இயந்திர இயக்க கோளாறுகளையும் இந்த ஆலை எதிர் நோக்க வேண்டியிருந்தது. இயந்திர இயக்க கோளாறுகள் பெரும்பாலும் சரி செய்யப்பட்டுள்ளன. புறக்கட்டுப்பாடுகளை சமாளிப்பதும், சுண்ணாம்புக் கற்களில்



[1985 ஜூலை 11]

உள்ள ஈரப்பதத்தால் ஏற்படும் பிரச்சினைகளை நீக்கவும் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1986-87 ஆம் ஆண்டில் ஏறக்குறைய ரூ. 826 இலட்சம் செலவில் இந்த ஆலையில் நவீன மயமாக்குதல்-மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்துதல் கருதப்படுகிறது.

4.5. மேற்சொன்ன காரணங்களை முன்னிட்டு இந்த ஆலை குறைந்த அளவு உற்பத்தி செய்து வருவதால், தொடர்ந்தாற்போல் இந்த ஆலைக்கு இழப்பு ஏற்பட்டு வருகிறது.

4.6. அரியலூர் சிமெண்டு ஆலை சுமார் 900 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், மூலப் பொருட்கள், பணி நிறைவு பெற்ற பொருட்கள் முதலியவற்றின் போக்குவரத்து வகையில் அப்பகுதியில் கணிசமான அளவில் மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.

## 5. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (தகடு தொழிற்சாலை)

5.1. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் தொழிலைப் பரவலாக்குவதில் முதற்படியாக அனைத்து இந்திய நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன், ஆண்டு ஒன்றுக்கு 36,000 மெட்ரிக் டன் அளவில் உற்பத்தித் திறனுடன் ரூ. 250 இலட்சம் செலவில் சிமெண்டு தகடுகளை உற்பத்தி செய்ய ஆலங்குளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டு தகடு தொழிற்சாலையை அமைத்துள்ளது. இத் தொழிற்சாலை தன் வாணிப உற்பத்தியை 1—10—1981-ல் தொடங்கியது.

5.2. இத்தொழிற்பிரிவின் உற்பத்தி, விற்பனை தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | ஆண்டு உற்பத்தி (மெட்ரிக் டன்னில்). | ஆண்டு விற்பனை (மெட்ரிக் டன்னில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1981–82 (ஆறு மாதங்கள்) .. | 8,251 | 5,067 |
| 1982–83 .. .. .. | 19,091 | 19,867 |
| 1983–84 .. .. .. | 17,839 | 16,886 |
| 1984–85 (31—3—1985 வரை) | 25,606 | 26,613 |

5.3. 1983–84 ஆம் ஆண்டின் போது மின் வெட்டு காரணமாக உற்பத்தி அளவு குறைந்தது. நடப்பாண்டில் அதாவது 1984 ஏப்ரல் முதல் 1985 ஜனவரி வரை இதன் சராசரி உற்பத்தி 92 சதவீதத்தை எட்டியுள்ளது.

5.4. இத்தொழிற்சாலை சுமார் 250 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், கச்சாப் பொருட்கள், பணி நிறைவு பெற்ற பொருட்கள் முதலியவற்றின் போக்குவரத்து வகையில் பெருமளவுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.

6. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்டு குழாய்த் தயாரிப்பு தொழிற்சாலை.

6.1. இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு, 36,000 மெட்ரிக் டன் உற்பத்தித்திறனுடன் 80 மி. மீ. முதல் 600 மி. மீ. வரை விட்ட அளவுகள் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்டு குழாய்களை உற்பத்தி செய்யும் நோக்குடன் திருச்சி மாவட்டம் மாயனூரில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திட்டப் பணிகள் பிப்ரவரி 1983-ல் துவங்கப்பட்டன. ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்டு குழாய்களில் உற்பத்தி சோதனை அடிப்படையில் (பரிட்சார்த்தமாக) 1984 ஜூன் திங்களிலும் வணிக அடிப்படையில் 1—10—1984-லும் திட்ட அட்டவணைப்படி துவங்கியது.

6.2. ரூ. 945 இலட்சம் செலவிலான இத்தொழிற்சாலைக்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (டிட்கோ) அனைத்து இந்திய நிதி நிறுவனமும் நிதி உதவி அளித்துள்ளன. இந்த ஆலை நடப்பு ஆண்டில் 9,000 மெட்ரிக் டன் ஆஸ்பெஸ்டாஸ் அழுந்தக் குழாய்களையும் 1985–86-ல் 25,000 மெட்ரிக் டன் எடையுள்ள அழுத்தக் குழாய்களையும் உற்பத்தி செய்யும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

6.3. இத்தொழிற்சாலை சுமார் 300 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், பெருமளவில் மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.

7. அரியலூர் சிமெண்டு ஆலையின் விரிவாக்கத் திட்டம்.

7.1. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம், அரியலூர் சிமெண்டு ஆலையின் உற்பத்தித்திறன் அளவை ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 10 இலட்சம் மெட்ரிக் டன்கள் வரை அதிகரித்திட கருதியுள்ளது. இதற்கென தேவைப்படும் இசைவுக் கடிதமும் பெற்றிட மத்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தின் வேண்டுகோளை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. அதற்கான இசைவுக் கடிதம் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.



7.2. மத்திய அரசிடமிருந்து இசைவுக் கடிதம் பெறுவதற்கு உட்பட்டு 1985–86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு அடுத்து நான்கு ஆண்டு காலத்திற்குள் நிறைவு அடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 60 கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது சுமார் 1,000 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் கணிசமான அளவில் மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கும்.

8. பாளையம் சிமெண்டு ஆலைத் திட்டம், மதுரை மாவட்டம்.

8.1. மதுரை மாவட்டம் பாளையம் என்னும் பகுதியில் ஆண்டு ஒன்றுக்கு 4 இலட்சம் டன்கள் உற்பத்தி திறன் அளவு கொண்ட ஓர் சிமெண்டு ஆலையை நிறுவ தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் இதற்கென இசைவுக் கடிதம் பெற மத்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. இசைவுக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

பின்னணியும் நோக்கங்களும்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) மார்ச் 1971 முதல் தமிழக அரசிற்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக துவங்கப்பட்டு, தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்கான பணியினை தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இந்த நிறுவனம் ஜனவரி 1972 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் துவங்கி தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்களின் வளர்ச்சிக்கும், விரிவாக்கத்திற்கும் ஒரு தூண்டுகோலாகவும், இம் மாநிலத்தில் பின்தங்கிய மற்றும் தொழில் வளர்ச்சியடையாத பகுதிகளில் விரைந்து தொழில் மயமாக்கும் நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. 1985 ஆம் வருடம் மார்ச் திங்கள் 31 ஆம் தேதிவரை இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் ரூபாய் ரூ. 229.90 கோடி உதவித் தொகையாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுடன், இதன் மூலம் 83,000 பேருக்கு மேல் மொத்த நேரடி வேலை வாய்ப்புக்கு வகை செய்துள்ளது. சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கும், அதற்குறிய நிதியுதவிக்கும் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது:—

1. தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல் படுத்துதல்.

2. இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நிலங்களை வழங்குவது.

3. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி வழங்கும் திட்டத்தின் கீழ் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது.

4. தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு துணையுதவிப் பணிகள் செய்தல்.

பல்வேறு உதவித் திட்டங்களின் விவரங்கள் :

(அ) ஊக்கச் சலுகை முனைப்புத்திட்டம்.—இத்திட்டம் 1981 முதல் புதிய முறையில் அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித்தொகை ஆதாயமளிக்கும் தொழில் திட்டங்களை கண்டறிவதற்கான வாய்ப்புக் கூறுகள் பற்றி ஆய்வுகளை சிப்காட் தொழில் முனைவோர்க்குச் சலுகை விலையில் அளிக்கிறது. இந்த ஆய்வுகள் மொத்த விலையில் 10 விழுக்காடுகளை செலுத்தினால் அளிக்கப்படுகின்றது. மிஞ்சிய 40 விழுக்காட்டுத் தொகை, தொழில் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த பிறகு திரும்ப செலுத்தவேண்டிய கடனாக மாற்றப்படும், எஞ்சிய 50 விழுக்காடு சிப்காட்டிலிருந்து தரப்படும் மானியமாக அளிக்கப்படும்.

புதிய திட்டத்தின் கீழ் 28 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 14 ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதற்காக பரிசீலனையில் உள்ளது. மொத்தம் 22 தொழில் முனைவோர் இந்த ஆய்வுகளை பயன்படுத்தியுள்ளனர்.

(ஆ) வட்டியில்லா விற்பனை வரிக் கடன்.—ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாய் வட்டியில்லாத விற்பனை வரிக் கடன் மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம்மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் இணையத்திலும், மற்றும் குன்னத்தூர் வட்டாரத்திலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி நகர்ப்பகுதி தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர அல்லது பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் தேதியில் இருந்து சுலபமாக்கப்பட்ட இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதியின்



திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் தற்போது செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்கு தொழிலை விரிவுபடுத்தும்போதோ, வேறு பிரிவுகளாகப் பெருக்கும்போதோ, இச்சலுகை கிடைக்கும். அத்தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கோ விரிவுபடுத்தப்படும், அல்லது பல பிரிவுகளாகப் பெருக்கப்படும் திட்டத்தில் நிலையான இருப்புகளில் 25 சதவீதத்துக்கோ அல்லது ரூபாய் 15 இலட்சத்துக்கோ நடுத்தர, பெரிய தொழில்களுக்கும், சிறிய தொழிலிலிருந்து நடுத்தர தொழிலாக விரிவுபடுத்தும்போது ரூபாய் 7.50 இலட்சத்துக்கோ (எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப்படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள் முடித்த பிறகு 3 ஆண்டுத் தவணைகளில் சமதொகைகளாக வட்டி இன்றி இந்தக் கடன் தொகைகளை திருப்பியடைக்க வேண்டும்.

புதிய தொழில் இணையங்களை ஏதேனும் பின் தங்கிய மாவட்டங்களில் அமைத்திடவும், மற்றும் மறைமலை நகர், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள குன்னத்தூர் இணையத்தில் நிறுவப்படும் புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் வரும். இத்திட்டத்தின்கீழ் நிறுவப்பட உள்ள புதிய தொழிற் கூடங்களுக்கு அவை உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளும் முதல் ஆறு ஆண்டு காலத்திற்கு ஆண்டு தோறும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் முந்திய ஆண்டில் செலுத்திய விற்பனை வரித் தொகைக்கு சமமானதாகவும் நிலையான இருப்புகளில் 20 சதவீத அளவுக்கோ அல்லது ரூபாய் 20 இலட்சத்திற்கோ எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு அதிகப்படாமல் அளிக்கப்படும். இந்த கடன் கால் ஆண்டுக்கு ஒருமுறை, தொகை 100 இலட்சத்திற்குள் 24 காலாண்டுகளுக்கு என்ற அடிப்படையில் வழங்கப்படும். கடன் வழங்கப்பட்ட 9 ஆண்டுகளுக்குப் பிறகு ஆறு சம ஆண்டுத் தவணைகளில் வட்டி ஏதுமின்றி திருப்பி செலுத்தப்படவேண்டும்.

வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் ஊக்கச் சலுகைத் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி வரை 221 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 25,55.52 இலட்சத்துக்கு ஒப்புதல் அளித்து அதில் ரூபாய் 23,14.43 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

[1985 ஜூலை 11

கடந்த பதிமூன்று ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—

ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.

| ஆண்டு. (1) | ஒப்புதல். (2) | ரத்து செய்யப் பட்டது. (3) | வழங்கப் பட்டது. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1972–73 .. | 79.19 | .. | 12.19 |
| 1973–74 .. | 57.72 | .. | 31.56 |
| 1974–75 .. | 73.63 | .. | 91.48 |
| 1975–76 .. | 2.82 | .. | 57.60 |
| 1976–77 .. | 79.44 | 0.59 | 78.58 |
| 1977–78 .. | 1,13.30 | 1.82 | 91.23 |
| 1978–79 .. | 1,53.29 | 0.10 | 1,53.04 |
| 1979–80 .. | 2,49.63 | 3.85 | 1,85.00 |
| 1980–81 .. | 2,35.80 | 3.46 | 2,30.44 |
| 1981–82 .. | 1,69.48 | 9.93 | 2,00.28 |
| 1982–83 .. | 3,75.79 | 8.37 | 2,63.30 |
| 1983–84 .. | 4,70.51 | .. | 4,26.99 |
| 1984–85 .. மார்ச் 1985 வரை | 4,94.92 | .. | 4,92.74 |
| மொத்தம் .. | 25,55.52 | 28.12 | 23,14.43 |

மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட தொகையின் வருட வாரியான விவரங்கள் :—

| ஆண்டு. (1) | தொகை. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1972–73 .. .. | 23.18 |
| 1973–74 .. .. | 40.00 |
| 1974–75 .. .. | 74.66 |
| 1975–76 .. .. | 75.00 |
| 1976–77 .. .. | 75.00 |
| 1977–78 .. .. | 1,00.00 |
| 1978–79 .. .. | 1,50.00 |



1985 ஜூலை 11]

| ஆண்டு. (1) | தொகை. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1979–80 .. .. | 1,80.00 |
| 1980–81 .. .. | 2,50.00 |
| 1981–82 .. .. | 3,00.00 |
| 1982–83 .. .. | 3,00.00 |
| 1983–84 .. .. | 3,00.00 |
| 1984–85 .. .. | 3,00.00 |

(இ) மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை.—மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 30 பின் தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற் பிரிவு அதன் நிலையான முதலீட்டில் (நிலம், கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்) 15 சதவீதத்தை நேரடி மானியமாக அல்லது மானியமாகப் பெற தகுதியுள்ளதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப் பட்ட பகுதிகளுக்கு கருவிகள், தளவாடங்கள் மாற்றப்பட்ட போதிலும், அந்தத் தொழில் பிரிவுகள் கூட 15 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுடையதாகும். ஒவ்வொரு தொழிற் பிரிவு பெறத்தக்க மானியத்தின் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன் பாக மானியத்தின் 85 சதவீதத் தொகையும் உற்பத்தி துவங்கிய பின்பு மீதித் தொகையும் வழங்கப்படும். மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் மத்திய அரசிடமிருந்து ஈட்டுத்தொகை பெறுவதில் மற்ற மாநிலங் களைவிட தமிழ்நாடே தொடர்ந்து முந்நிலை வகித்து வருகிறது.

1–4–1983 முதல் மேலும், இலகுவான நிதியுதவி பெற அனுமதிக்கப்பட்டுள்ள 9 பின்தங்கிய மாவட்டங்கள் 10 சதவீதம் மத்திய நேரடி மானியம் பெற அனுமதிக்கப்பட்டது. இத்திட்டம் ஏற்கெனவே 15 சதவீதம் மானியம் அறிவிக்கப்பட்டுள்ள வட்டங்களுக்கோ 31–3–1983 ஆம் நாள் 30 கோடி தொழில் மூலதனம் உள்ள பகுதிகளுக்கோ அனுமதிக்கப்படமாட்டாது.

(ஈ) மாநில அரசின் மானியம் (உதவித் தொகை) :— திட்டத்தின்கீழ் மத்திய அரசின் 15 சதவீத மான்யம் இத்திட்டத்தின் கீழ் வராத 35 பின்தங்கிய வட்டங்களிலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தூத்துக்குடியிலும் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கடலூரிலும் அமைக்கப்படவிருக்கும் இணையங்களிலும் எந்தத் தொழில் பிரிவும் அதன் நிலையான முதலீட்டில் 15 சதவீதம் மானியத்தின் இணையான தொகையோ அல்லது 15 இலட்சம் உதவித் தொகையோ இரண்டில் எது குறைவோ அதை பெறும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறிய, நடுத்தர, மற்றும் பெரிய தொழில்கள் பயன்பெறும். இது 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் நாள் அமுலுக்கு வந்தது. 1984–85 (மார்ச் 1985) ஆண்டுகளுக்காக ஒப்புதல் அளிக்கவும் வழங்கவும் குறிக்கப்பட்ட குறியீடுகள் ரூபாய் 100 இலட்சமாகும். இதில் முறையே ரூபாய் 3,38.46 இலட்சமும், ரூபாய் 1,79.99 இலட்சமும் நடைமுறையில் கொண்டுவரப்பட்டது.

(2) குறிப்பிட்ட தொழில்களுக்கு மானியத் திட்டம் :—

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு இம்மானிய திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மின் அணு, மருந்துகள் தயாரிப்பு மற்றும் மோட்டார் வாகன உபரி தொழில்கள் மேலும் சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கருவிகளை தயாரிக்கும் பிரிவுகளுக்கும், சூரிய சக்தி கருவிகளையும் குறிப்பிடப்பட்டுள்ள புதுப்பிக்கும் சக்தியை கொண்டு இயங்கும் கருவிகளையும் பயன்படுத்தும் பிரிவுகளுக்கும் இந்த மானியம் அளிக்கப்படுகிறது. மேலே கூறப்பட்ட தொழில்கள் மத்திய மற்றும் மானிய திட்டத்தின் கீழ் வராத தமிழகத்தின் எந்த பகுதியில் நிறுவப்படும் எந்த ஒரு நிறுவனமும் அதன் நிலையான முதலீட்டில் 10 சதவீதம் மானியமாகவோ அல்லது ஒரு நிரந்தர ஊழியருக்கு ரூ. 20,000 அல்லது ரூ. 10 இலட்சம் ரூபாய் என்ற இந்த மூன்று வகையான திட்டத்தில் எது குறைவோ அதைப் பெறலாம். இத்திட்டம் பாரதத்தின் எந்தப் பகுதியிலும் இதுவரை செயல்படுத்தப்படாத ஈடு இணையற்ற தமிழக அரசின் திட்டமாகும். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.



நேரடி நிதி உதவி

(1) தவணைக் கடன்—கடந்த பதிமூன்று ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக் கடன் மற்றும் வழங்கிய தவணைக் கடன் உதவி கீழ்க்கண்ட அட்டவணைகளில் காணலாம் :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நிகர செல்லுபடியாகத் தக்கது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 .. | 108.50 | .. | 1,08.50 | 26.11 |
| 1973–74 .. | 197.89 | 7.55 | 1,90.34 | 33.90 |
| 1974–75 .. | 1,91.28 | 7.99 | 1,83.29 | 1,17.61 |
| 1975–76 .. | 27.08 | 7.25 | 19.83 | 1,62.87 |
| 1976–77 .. | 1,40.75 | 47.25 | 92.50 | 82.15 |
| 1977–78 .. | 3,40.55 | 69.48 | 2,71.07 | 1,23.82 |
| 1978–79 .. | 2,33.96 | 10.00 | 2,23.96 | 1,41.85 |
| 1979–80 .. | 5,80.50 | 12.74 | 5,67.76 | 2,96.61 |
| 1980–81 .. | 19,58.10 | 27.86 | 19,30.24 | 7,86.52 |
| 1981–82 .. | 18,99.05 | 2,25.01 | 16,74.04 | 14,05.86 |
| 1982–83 .. | 30,36.91 | 4,76.20 | 25,60.71 | 15,75.93 |
| 1983–84 .. | 38,48.95 | 5,36.91 | 38,12.04 | 19,33.70 |
| 1984–85 .. (மார்ச் 1985 வரை.) | 46,38.45 | 2,61.32 | 43,77.13 | 29,82.81 |
| மொத்தம் | 1,67,77.97 | 16,89.56 | 1,59,30.41 | 96,69.74 |

[1985 ஜூலை 11

மேற்கண்ட அட்டவணையை நோக்குங்கால் 1980–81இல் இருந்தே மொத்தம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. 1979–80ஆம் ஆண்டு நிலையை நோக்குங்கால் வெகுவாக உயர்வடைந்துள்ளது.

1983–84 ஆம் ஆண்டு 71.68 சதவீதம் நீண்டகால நிலுவைத் தொகை திரும்பப் பெறப்பட்டது. சிப்காட் நிர்வாகக் குழுவின் துணைக்குழு அவ்வப்போது கூடி நிலுவை ஆய்வு கூட்டங்களில் நிலுவைகளை பரிசீலனை செய்து உதவிபெறும் நிறுவனங்களுக்கு தக்க முறையில் உதவி புரிந்ததாலும் கணிசமாக திரும்பப் பெறும் சதவீதத்தை உயர்த்த முடிந்தது.

(2) உத்தரவாதமளித்தல்/நேரடி சந்தா :—

பொறுப்புகளுக்கு உத்திரவாதம் அளித்ததின் விளைவாக அல்லது நேரடி சந்தா வாயிலாக, கடந்த பதிமூன்று ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட உத்திரவாத வசதிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டவை. எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நேரடி சந்தாவுக்கு கோரிக்கை பங்குகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972–73 .. .. | 23.20 | .. | .. |
| 1973–74 .. .. | 24.30 | .. | .. |
| 1974–75 .. .. | 5.00 | .. | 0.55 |
| 1975–76 .. .. | 16.50 | .. | 1.29 |
| 1976–77 .. .. | 11.00 | 18.50 | 2.00 |
| 1977–78 .. .. | 16.00 | 13.30 | 1.13 |
| 1978–79 .. .. | 5.00 | 3.50 | 0.37 |
| 1979–80 .. .. | 6.20 | 2.50 | 1.53 |
| 1980–81 .. .. | 24.40 | .. | 12.29 |
| 1981–82 .. .. | 13.75 | .. | 8.03 |
| 1982–83 .. .. | 18.25 | .. | 1.52 |
| 1983–84 .. .. | 26.50 | 8.00 | 15.67 |
| 1984–85 (மார்ச் 1985 வரை). | 56.40 | .. | 7.65 |
| மொத்தம் ... | 2,46.50 | 45.80 | 52.03 |

(3) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டம் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தின் கீழ் தங்களது முதல், நடுத்தர தொழிலை நிறுவும் தொழில்



1985 ஜூலை 11]

நுட்ப, தொழில் அனுபவ, தொழில் முனைவோர்களுக்கு இந்திய தொழில் வளர்ச்சிகளின் முதல், நடுத்தர தொழில் திட்டத்திற்கு வங்கியானது, திட்டச் செலவில் 80 சதவீதம் வரையில் நிதியுதவி அளிக்கிறது. இத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்தலிலும் வழங்குதலிலும் அடைந்த முன்னேற்றம் கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் அறியலாம் :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை. | வழங்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1977–78 .. .. .. ... | 4.00 | ... |
| 1978–79 .. .. .. .. | 9.15 | 4.00 |
| 1979–80 .. .. .. .. | 12.90 | 21.47 |
| 1980–81 .. .. .. .. | 26.50 | 16.28 |
| 1981–82 .. .. .. .. | 38.58 | 20.10 |
| 1982–83 .. .. .. .. | 60.07 | 29.70 |
| 1983–84 .. .. .. .. | 86.20 | 93.38 |
| 1984–85 .. .. .. .. (மார்ச் 1985 வரை) | 1,84.40 | 1,30.33 |
| மொத்தம் .. | 4,30.80 | 3,15.26 |

(4) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவுசெய்துள்ளது :—

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பித்தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலை ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவில் 15 சதவீதத்தை தங்களது மூலதனமாகக் கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின் தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும் முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.)

(ஆ) உத்திரவாதமளித்தல் நேரடி சந்தா ஆகிய நிதி உதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1985 ஜூலை 11

(இ) பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்காக வழங்கப்படும் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 11 சதவீதம் வட்டியும் ஏனைய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 12.5 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். இவ்வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் 1½ சதவீதமாகும்.

(ஈ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில் பற்றிய முன் முதலிட்ட ஆய்வு அறிக்கை பெற 25 சதவீதம் மட்டுமே முன்பணமாக செலுத்தினால் போதுமானது. இதுவே மற்ற தொழில் முனைவோர்களுக்கு 50 சதவீதமாகும்.

இ. வளர்ச்சி மையங்கள்.

| இணையத்தின் பெயர். | மார்ச் 1985 வரை முன்னேற்றம். மேம்படுத்தப்பட்ட பரப்பு. | மூலதனச் செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ஏக்கர்.) | (ரூபாய் இலட்சத்தில்.) |
| இராணிப்பேட்டை .. .. | 729.78 | 1,58.88 |
| ஓசூர் .. .. .. .. | 233.86 | 3,54.19 |
| மானாமதுரை .. .. .. | 492.08 | 93.34 |
| புதுக்கோட்டை .. .. | 423.00 | 61.24 |
| கும்மிடிப்பூண்டி .. .. | 301.00 | 63.93 |
| கடலூர் .. .. .. | 463.00 | 1,05,52 |
| தூத்துக்குடி .. .. .. | .. | 12.24 |



1985 ஜூலை 11]

இராணிப்பேட்டை :

அரசு 728.78 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி சிப்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்தது. இதில் ஒதுக்கப்படுவதற்கான பகுதி 93 மனைகளைக் கொண்ட 480.68 ஏக்கர், இதில் 478.38 ஏக்கர் கொண்ட 90 மனைகள் 73 தொழில் முனைவோர்க்கு ஒதுக்கப்பட்டது. இவற்றில் 54 நிறுவனங்கள் கட்டுமானப் பணிகளை முடித்து உற்பத்தி துவக்கியுள்ளது. எஞ்சிய நிறுவனங்கள் தமது கட்டுமானப் பணியில் பல்வேறு நிலையில் உள்ளது. இந்தப் பகுதியில் உள்ள கடுமையான தேவையை நோக்கி கூடுதலாக 44 ஏக்கர்கள் ஏற்கெனவே இரண்டாவது பகுதி முதல் பகுதியையொட்டி அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்டது. 52 ஏக்கர்கள் இந்த இரண்டாவது இணையத்தில் ஒதுக்கப்பட்டது.

ஓசூர் :

தேசிய நெடுஞ்சாலை எண் 7 இன் இரு மருங்கிலும் ஒதுக்கப்படுவதற்காக வளர்ச்சி 1,235 ஏக்கர்கள் வளர்ச்சி செய்யப்பட்டது விற்பனைக்குகந்த 938 ஏக்கர் பரப்பில் 825 ஏக்கர்கள் 110 தொழில் முனைவோர்க்கு ஒதுக்கப்பட்டது. இதில் 71 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தி துவக்கியுள்ளன. எஞ்சிய 39 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன. தொழில் முனைவோரின் தேவையைக் கருதியும், சமூகத் தேவைகளைக் கருதியும் 508 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மானாமதுரை :

மதுரையிலிருந்து 45 கி.மீட்டர் தூரத்திலுள்ள மானாமதுரை தொழில் இணையம் தண்ணீரைச் சார்ந்து அமையாத பொதுவான தொழில்களுக்காக அமைக்கப்பட்டது. தொழில் முனைவோர்க்கு வழங்குவதற்கு சாலைகள், உணவு விடுதி, சினிமா, கடைகள், குடியிருப்புகள் போன்ற வசதிகள் கொண்ட 492 ஏக்கர் நிலம் வளர்ச்சி செய்யப்பட்டுள்ளது. விற்பனைக்குகந்த 363 ஏக்கரில் 86.67 ஏக்கர் நிலப்பரப்புள்ள 30 மனைகள் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டது.

புதுக்கோட்டை :

பிற்பட்ட பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக முனைப்படுத்தப்பட்ட தொழில் இணையங்களை அமைக்க வேண்டும் என்ற இந்திய அரசின் கொள்கைக்கேற்ப முனைப்படுத்தப்பட்ட மின் அணு இணையத்தை மென்மேலும் தொழில் வளர்ச்சிக்காக புதுக்கோட்டையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே

[1985 ஜூலை 11

இதற்கான முன் அளவை செய்யப்பட்டு அனுப்பப்பட்ட அறிக்கை இந்திய அரசின் பரிசிலனையில் உள்ளது. இது மின் அணு தொழில்களுக்கும், மின் பொறியியல் தொழில்களுக்கும் மிகவும் பொருத்தமாக அமைகிறது. 438 ஏக்கர்களை ஏற்கெனவே சிப்காட் தன் வசம் எடுத்துக் கொண்டது. மேலும் 167 ஏக்கர் நிலத்தினைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டு நிறுவனங்களுக்கு மேல் மொத்தம் 120 ஏக்கர் நிலத்தை ஒதுக்கும்படி மனுச் செய்துள்ளனர். இதில் 8 நிறுவனங்களுக்கு 40 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது.

கடலூர் :

கடலூரிலிருந்து 7 கி. மீட்டர் தொலைவிலுள்ள இந்தத் தொழில் இணையம், தென்னாற்காடு மாவட்ட தலைமையிடமான கிழக்குப் பகுதியில் கடலூர்-சிதம்பரம் சாலையில் அமைந்துள்ளது. இதற்கு அருகான விமான நிலையம் 200 கி. மீட்டர் தொலைவிலுள்ள மீனம்பாக்கம் விமான நிலையமாகும். அடிப்படையாக மின்சாரத்தையும், நீரையும் சார்ந்து அமையும் இரசாயன மற்றும் முறைப்படுத்தும் தொழில்களுக்காக இவ்விணையம் அமைக்கப்பட்டது. இவ்விணையம் தற்போது 443.12 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. மேலும் 100 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 310.43 ஏக்கரில் அமைந்துள்ள 43 மனைகளில், 10 நிறுவனங்களுக்கு 13 மனைகளிலான 140.25 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. பல்வேறு தொழில் முனைவோரிடமிருந்து 31 மனுக்கள் வந்துள்ளது.

கும்மிடிப்பூண்டி :

சென்னையிலிருந்து 45 கி. மீட்டர் தொலைவில் சென்னை-நெல்லூர் நெடுஞ்சாலையில் சென்னை-கல்கத்தா அகல இரயில் பாதையையொட்டி சிப்காட்டின் கும்மிடிப்பூண்டி தொழில் இணையம் அமைந்துள்ளது. வாகன உபரிகள் உற்பத்தி தொழில்களுக்கும், பொறியியல் தொழில்களுக்கும் பெரிதும் அனுகூலமான அடிப்படையாக இவ்விணையம் அமைகிறது. நிலம் கையகப்படுத்தும் விதிகளில் உள்ள அவசரப் பிரிவின்கீழ் 804 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த அறிவிக்கப்பட்டு, இதில் 315 ஏக்கர் நிலம் இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்டது. 70 நிறுவனங்களுக்கு 209.19 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. 55 நிறுவனங்கள் நிலத்தை தம் கைவசம் எடுத்து அதில் 4 நிறுவனங்கள் கட்டுமானப் பணிகளை முடித்து உற்பத்தியைத் துவங்கியுள்ளது. 32 நிறுவனங்கள் கட்டுமானப் பணியில் பல்வேறு நிலைகளில் உள்ளது. நிலம் கோரி மேன்மேலும் விசாரணைகள் வந்த வண்ணம் உள்ளது.



1985 ஜூலை 11]

தூத்துக்குடி :

தூத்துக்குடியில் தொழில் இணையம் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது. நிலத்தைக் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றமடைந்து வருகிறது.

பொது :

கீழ்க்கண்ட மாவட்டங்களில் தொழில் இணையங்கள் அமைப்பதற்கான பரிந்துரைகளை அரசு ஏற்று உத்தரவிட்டுள்ளது :—

1. மதுரை.
2. தஞ்சாவூர்.
3. மேற்கு இராமநாதபுரம்.
4. திருச்சிராப்பள்ளி.
5. பெரியார்.
6. சேலம்.
7. கோயம்புத்தூர்.
8. கன்னியாகுமரி.
9. நீலகிரி.
10. தர்மபுரி.
11. வட ஆற்காடு.

அயல்நாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கான குழு :

அயல்நாடுகளில் வசிக்கும் அல்லது பணிபுரியும் இந்தியர்கள் தமிழக தொழில்களில் மூலதனமிட ஊக்குவிக்க ஒரு தனி அமைப்பு சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அயல்நாடுகளில் வசிக்கும் தனி நபர்களும், ஸ்தாபனங்களும் இது தொடர்பாக தொடர்பு கொள்ளப்பட்டனர். இதுவரை அயல்நாடுகளிலுள்ள இந்தியர்களிடமிருந்து, முக்கியமாக அமெரிக்கா கடைசி மேற்கத்திய நாடுகளிலுள்ளவர்களிடமிருந்து 649 விசாரணைகள் வரப்பெற்றுள்ளது. அயல்நாடுகளில் வசிக்கும் இவர்களோடு தொடர்ச்சியாக தொடர்பு கொள்ள வழி வகுக்கப்பட்டுள்ளது. இதுவரை 9 திட்டங்கள் ரூபாய் 586 இலட்சம் திட்டச் செலவில் செயலாக்கப்பட்டுள்ளன. மேலும் ரூபாய் 787 இலட்சத்திலான 11 திட்டங்கள் செயலாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

[1985, ஜூலை 11

சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலம் :

சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலத்தின் வளர்ச்சிப்பணிகளை செயல்படுத்தும் முகமைப் பொறுப்பை சிப்காட்டிடம், தமிழக அரசு ஒப்படைத்தது. தாம்பரம் எலும்புறுக்கி நோய் மருத்துவமனையின் பின்புறம் 228 ஏக்கர் நிலம் கையகப்படுத்தபட்டு இதில் 98 ஏக்கர் நிலம் இக்கேந்திரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 298.64 ஏக்கர் நிலத்தை இக்கேந்திரத்தின் இரண்டாவது நிலைக்குக் கையகப்படுத்த பணிகள் முன்னேற்றமடைந்து வருகிறது.

இம்மண்டலம் அமைப்பதற்கான முதல் கட்ட கட்டுமானப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இம்மண்டலத்தைச் சுற்றிலும் 4 கி.மீ. எல்லைச் சுவர் கட்டுதல் மற்றும் சாலை அமைக்கும் பணி தமிழ்நாடு கட்டுமான கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு அதனை நிறைவேற்றும் பணி நடைபெற்று வருகிறது.

நிலையுறு வரைவில் கட்டப்படும் தொழிற்சாலையின் கட்டிடப் பணி தேசிய கட்டிட கட்டுமான கழகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் நிர்வாக கட்டிடம் கட்டும் பணியை விரைவில் துவங்க உள்ளார்கள். ஏற்கெனவே 19 மனைகள் வகுக்கப்பட்டு சிறந்த தொழில் முனைவோர்க்கு பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட தயாராயுள்ளது. மேன்மேலும் மனைகள் பகுக்கப்படும் பணி முன்னேற்றமடைந்து வருகிறது. சில நாட்களுக்கு முன் இது குறித்த சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலத்தின் ஒப்புதல் அளிக்கும் குழுவினரால் மின் அணு, இரசாயனம், தரமான பாத்திரங்கள், நகைகள் போன்ற தொழில்களுக்கான 26 மனுக்கள் ஒப்புதல் பெற்றன. அவைகளுக்கு விரைவில் மனை ஒதுக்கப்படும்.

பணியின் முடிவுகள்.

1983–84 ஆம் நிதியாண்டில் எல்லா செலவினங்களும் தேய்மானங்களும் போக நிகர லாபம் ரூபாய் 1,24.42 இலட்சம். 1982–83 ஆம் ஆண்டு இலாபம் 104.39 இலட்சமாகும்.

இணைப்பு இரண்டில்.

திட்டவாரியான நிதியுதவிகள் பற்றிய விபரங்கள்.—

1. 1983–84 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதலில் கண்ட முன்னேற்றம்.

2. 1984–85, 1985–86 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல் பற்றிய திட்ட குறியீடுகள்.



1985, ஜூலை 11]

வேலை வாய்ப்பு.

1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிய சுமார் 83,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை ஏற்படுத்திய வேலை வாய்ப்புகளும், இனி ஏற்படுத்த இருக்கும் வேலை வாய்ப்புகளும் ஆண்டு வாரியாக :—

| ஆண்டு. | | | வேலை பெற்றவர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | | | (2) |
| 1981–82 | .. | .. | 5,700 |
| 1982–83 | .. | .. | 9,000 |
| 1983–84 | .. | .. | 9,000 |
| 1984–85 (மார்ச் 1985 வரை) | .. | .. | 10,000 |

## இணைப்பு 1.

மத்திய மூலதன உதவித் தொகைத் திட்டம் 1971.
அ. ஒப்புதல் (மொத்தம்).

| ஆண்டு. | பெரிய மற்றும் நடுத்தர தொழில். | |
|---|---|---|
| | எண் | தொகை. |
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1978 மார்ச் 31 வரையில் .. .. | 154 | 9,78.89 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 46 | 2,84.04 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 52 | 3,33.72 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 69 | 5,28.42 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 46 | 2,89.98 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 103 | 7,40.69 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை. | 47 | 3,58.49 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை. | 38 | 3,19.96 |
| பிப்ரவரி 1985 வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை. .. | 555 | 3,834.19 |

| ஆண்டு. | சிறு தொழில்கள். | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1978 மார்ச் 31 வரையில் .. .. | 749 | 1,79.47 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 181 | 62.85 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 406 | 78.86 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 637 | 2,18.26 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 544 | 2,13.38 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 2369 | 8,95.76 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை. | 560 | 2,28.46 |
| ஏப்ரல் 1984 முதல் 31 டிசம்பர் 1984 வரை. | 456 | 1,56.21 |
| 31–12–1984 வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை .. | 5,902 | 20,33.25 |





| ஆண்டு. | மொத்தத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | |
|---|---|---|
| | எண் | தொகை. |
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1978 மார்ச் 31 வரையில் .. | 903 | 11,53.36 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 227 | 3,46.89 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 458 | 4,12.58 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 706 | 7,46.68 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை, | 590 | 5,03,36 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 2,472 | 1,636.45 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை. | 607 | 5,86.95 |
| ஏப்ரல் 1984 முதல் 31 மார்ச் 1985 வரை. | 494 | 4,76.17 |
| 31—3—1985* வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை. .. .. | 6,457 | 58,67.44 |

*சிறு தொழில்கள் 31—12—1984 வரை.

[1985 ஜூலை 11

ஆ. வழங்குதல்.

| ஆண்டு. | நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். | சிறு தொழில்கள் | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 1978 மார்ச் 31 வரை .. | 6,18.43 | 1,51.62 | 770.05 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை .. | 1,76.03<br>2.24 | 30.09 | 2,06.12<br>2.24 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை .. | 2,32.26 | 41.78 | 2,74.04 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை .. | 3,19.09 | 1,09.33 | 4,28.42 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை .. | 3,07.50 | 1,55,64 | 4.63.14 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை .. .. | 3,60.77 | 1,08.13 | 4,63.90 |
| ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1984 வரை .. .. | 4,26.40 | 361.96 | 7,88.36 |
| ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை .. .. | *3,87.22 | **22,44.96 | @232.12 |
| 1985 மார்ச் வரை ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை .. | 2,829.94 | 1,203.51 | @4,033.45 |

*தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மட்டும்.

**சிறுதொழில் வளர்ச்சி நிறுவனமும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

@ டிசம்பர் 1984 வரை.



1985 ஜூலை 11]

இ. மத்திய அரசிடம் திரும்பப் பெற்றது.

| ஆண்டு. | சிப்காட். | ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1978 மார்ச் 31 வரை .. .. | 4,48.30 | 6,15.59 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை .. .. .. | 1,61.51 | 2,29.63 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை .. .. .. | 1,25,54 | 1,65.57 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை .. .. .. | 3,01.91 | 4,25.35 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை .. .. .. | 2,15.52 | 3,76.49 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை .. .. .. | 1,92.23 | 2,89. |
| ஏப்ரல் 1983 முதல் டிசம்பர் 1983 வரை .. .. .. | 5,01.97 | 8,16.42 |
| ஏப்ரல் 1984 மார்ச் 1985 வரை .. .. .. | 3,82.17 | 9,24.20 |
| 31—3—1985 வரையான மொத்த தொகை .. .. .. | 23,29.15 | 38,43.69 |

## இணைப்பு 2.

1983–84 மற்றும் 1984–85 ஆண்டுகளுக்கான ஒப்புதல் மற்றும் வழங்குதல் பற்றிய விவரங்கள்—1983–84 மற்றும் 1984–85 ஆண்டுகளுக்கான திட்டங்களின் குறியீடுகள்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| விவரம். | 1983–84 முன்னேற்ற விவரம். | 1983–84 வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1984–85-ல் செயலாக்கப்பட்டது. | 1984–85, 1985–86-க்கான செயல் இலக்கு. 1984–85 | 1985–86 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **பகுதிக் கடன்—** | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 3,848·95 | 3,500,00 | 4,638.45 | 3,800.00 | 4,000.00 |
| வழங்குதல் .. .. | 1,933.70 | 2,200.00 | 2,982.81 | 2,800.00 | 3,200.00 |
| **முக்கிய மூலதனத் திட்டம்—** | | | | | |
| ஒப்புதல் ... .. | 86.20 | 1,20.00 | 1,84.40 | 1,50.00 | 2,00.00 |
| வழங்குதல் ... ... | 93.38 | 1,00.00 | 1,30.33 | 1,50.00 | 1,50.00 |
| **வட்டியில்லா விற்பனை வரிக் கடன்—** | | | | | |
| ஒப்புதல் ... ... ... | 4,70.51 | 3,00.00 | 4,94.92 | 3,75.00 | 3,75.00 |
| வழங்குதல் ... ... | 4,26.99 | 3,00.00 | 4,92.74 | 3:75.00 | 3,75.00 |



(ரூபாய் இலட்சத்தில்.)

| விவரம். | 1983–84 முன்னேற்ற விவரம். | 1983–84 வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1984–85-ல் செயலாக்கப்பட்டது. | 1984–85, 1985–86-க்கான செயல் இலக்கு. 1984–85 | 1985–86 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | |
| **மத்திய உதவி (சிப்காட்) தனியாக மானியம்—** | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 3,58.49 | 2,50.00 | 3,19.97 | 3,50.00 | 3,50.00 |
| வழங்குதல் .. .. | 4,26.00 | 2,50.00 | 3,87.22 | 3,50.00 | 3,50.00 |
| திரும்பப் பெறுவது .. | 5,01.97 | 2,50.00 | 3,82.71 | 3,50.00 | 3,50.00 |
| **உத்திரவாதமளித்தல் நேரடிச்சந்தா—** | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 18.50 | 25.00 | 56.40 | 25.00 | 50.00 |
| வழங்குதல் .. .. | 15.67 | 25.00 | 7.65 | 25.00 | 50.00 |
| **மாநில உதவி (மானியம்)** | | | | | |
| ஒப்புதல் .. .. .. | 1,83.11 | 1,00.00 | 3,38.46 | 1,00.00 | 2,00.00 |
| வழங்குதல் .. .. | 67.52 | 1,00.00 | 1,79.99 | 1,00.00 | 1,00.00 |

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

1. நோக்கங்களும் அலுவல்களும் :

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டிக்) மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் முதன்மையான நிறுவனமாகச் செயல்பட்டு வருவதோடு, 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவிக் கழகச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டும் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரி நிர்வாகத்திலும் உள்ள சிறிய நடுத்தர, தொழில்களின் மேம்பாட்டுக்கும் அவற்றின் விரைவான வளர்ச்சிக்கும் நிதியுதவி அளிப்பதே இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

2. நிலம், கட்டிடம், தளவாடம், இயந்திரச் சாதனம் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கு இந்த நிறுவனம் தவணைக் கடன்களை வழங்குவதுடன் காலவரம்பைக் கடந்து தொகை செலுத்துவதற்கு உத்தரவாதம் அளிக்கிறது. நிதியுதவிப் பெறும் தொழில் நிறுவனப் பிரிவுகளின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்கிறது. பின்தங்கிய பகுதிகளிலும் கிராமப் பகுதியிலும் பெருமளவுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் நோக்குடன். அப்பகுதியில் உள்ள சிறிய, மிகச் சிறிய தொழில் பிரிவுகளுக்குச் சிறப்பு முன்னுரிமை அளிக்கிறது. குறைந்தளவு வட்டி வீதம், குறைந்தளவு பிணையத் தொகை, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு தாராளமான கால அளவு போன்ற சலுகைகளின் அடிப்படையில், பின் தங்கிய பகுதிகளிலுள்ள சிறிய தொழில் பிரிவுகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. புதிய தொழில்களைத் தொடங்குவதற்கும் ஏற்கெனவெ உள்ள தொழில் பிரிவுகளை விரிவாக்கவும், பல்திறப்படுத்தவும், அவற்றை நவீனப்படுத்தவும் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது. 5,000 ரூபாயிலிருந்து 30.00 இலட்சம் ரூபாய் வரையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

3. தொழில் பிரிவுகளின் செயல்களை ஆய்வு செய்தல் :

பல ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், கடந்த ஐந்தாண்டுகளில் கடன் தொகை அனுமதித்தல், வழங்குதல். வசூலித்தல் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் இந்த நிறுவனம் ஆற்றிய பணி கணிசமான அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.



கடந்த ஐந்து ஆண்டுகளில் கடன் தொகை அனுமதித்தல், வழங்குதல், வசூலித்தல் குறித்த ஒப்பீட்டுத் தகவல் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | அனுமதித்த தொகை. | வழங்கப்பட்ட தொகை. | வசூலித்த தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் கோடியில்.) | | |
| 1979–80 .. | 17.19 | 10.67 | 10.55 |
| 1980–81 | 36.90 | 22.59 | 15.47 |
| 1981–82 | 52.13 | 35.07 | 13.76 |
| 1982–83 | 55.87 | 39.56 | 19.85 |
| 1983–84 | 59.74 | 41.11 | 25.23 |
| 1984–85 (31—1—1985 வரையில்). | 67.97 | 48.65 | 32.40 |

கடந்த மூவாண்டுகளில் ஒவ்வோராண்டும் அனுமதித்த கடன்களில் 99 சதவீதமானது சிறிய தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்டது. மேலும், இவ்வாண்டுகளில் அனுமதித்த மொத்தக் கடனளவில் 85 முதல் 95 சதவீதம், சிறிய தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்டது.

4. சுய வேலைவாய்ப்பு மேம்பாடு :

சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் சுய வேலைவாய்ப்பிற்கான மேம்படுத்தும் பொருட்டு, இந்த நிறுவனம் பெருமளவு நிதியுதவியை அளிக்கிறது. லாரிகள், டிரக்குகள், சுற்றுலா வாடகை வண்டிகள், டெம்போக்கள், வேன்கள் முதலியன போன்ற போக்குவரத்து வண்டிகளில் ஓட்டுநர்களுக்கு சுய வேலைவாய்ப்பினை அளிக்கும் நோக்குடன், அவ்வண்டிகளை வாங்க அவர்களுக்கு கடன் அளிக்கப்படுகிறது. 1984–85 ஆம் ஆண்டில் மொத்தம் 10.33 கோடி ரூபாய்க்கு 917 பேருக்கு போக்குவரத்துக் கடன்களை இந்த நிறுவனம் அளித்துள்ளது.

5. முக்கிய அம்சங்கள்-சாதனைகள் :

(அ) சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்ற தொழில் முனைவோர் ஆலோசனைக் குழு, திட்டத்தைத் தெரிந்தெடுப்பது, விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்வது, திட்ட அறிக்கைகள் தயாரிப்பது போன்றவற்றில் ஆவர்முள்ள தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் தகவல்களை வழங்குவதோடு, ஆலோசனையையும் நல்குகிறது. மேலும் நிதியுதவியையும் அளிக்கிறது. சிறியதும், மிகச் சிறியதுமான தொழில் பிரிவுகளின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இந்த வசதி பெருமளவு உதவுகிறது.

(ஆ) மத்திய, மாநில அரசுகள், தகுதிவாய்ந்த தொழில் முனைவோருக்கு உதவித் தொகையை அளித்த பிறகே, மத்திய, மாநில அரசு பங்கு முதலீட்டு உதவித் தொகையைப் பெற அவர்கள் தகுதியுடையவர்களாகிறார்கள். இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. இந்த இடைப்பட்ட கால அளவில், தொழில் முனைவோருக்கு இணைப்புக் கடன் அனுமதிக்கப்படுவதால், தொழில் முனைவோர் வட்டி செலுத்த வேண்டியதாகிறது. மாநில அளவிலான குழுவால் அனுமதிக்கப்பட்டவுடன் இந்த நிறுவனமானது 1—7—1983 ஆம் நாளிலிருந்து வட்டியில்லாமே உதவித்தொகையை அளித்து வருகிறது. இதன் பயனாக தொழில் முனைவோர்கள், குறிப்பாக சிறு தொழில் பிரிவுகள், செலவு, நேரவகையில் பெருமளவு பயனடைந்திருக்கின்றன.

(இ) முகப்பேர், பாடி ஆகிய இடங்களில் தொழில் கூடங்களுக்கும் உற்பத்தி அடிப்படை வசதிகளுக்கும் வகை செய்து கொடுப்பதற்கான திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் நிருவாக முகவர் அமைப்பாக, தமிழ்நாடு அரசு மூலம், உலக வங்கி நிதி உதவியுடன் ஆன சென்னை நகர்புற வளர்ச்சித் திட்டம் என்றழைக்கப்படும் தொழில் மேம்பாட்டுச் சிறப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

6. தொழில் ஏற்பாடுகளையும், நடைமுறைகளையும் சீரமைத்தல் :

தேவையான கடன் உதவியைப் பெறுவதற்கு, தொழில் முனைவோருக்கு குறிப்பாக சிறுதொழில் துறையின் உள்ளவர்களுக்கு இயலும் பொருட்டு, தொழில் ஏற்பாடுகளையும், நடைமுறைகளையும் எளிதாக்க இந்த நிறுவனம் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. விண்ணப்பப் படிவங்கள் தக்கவாறு எளிதாக்கப் பட்டுள்ளன. கவனமாக பரிசீலனைக்குப் பின்னர் நிதியுதவி வழங்குவதற்கான நிபந்தனைகள்



சீரமைக்கப்பட்டுள்ளன. பதிவு பெற்ற அடைமானத்தை, நியாயமான அளவிலான அடைமானத்தைப் பெறத் தற்போது இருந்து வரும் நடைமுறைக்குப் பதிலாக, அடைமானப் பத்திரம் எழுதிக் கொடுப்பதின் பேரில் குத்தகை வளாகங்களில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களை வாங்குவதற்கு ரூ. 5.00 இலட்சம் வரையில் தற்போது கடன் வழங்குவது ஏற்றுக்கொள்ளப்படும்.

7. சிலவகைத் தொழில்களுக்கு நிதியுதவி பெறுவதற்கு பதிவு செய்வதை நீக்குதல் :

தகுதியுள்ள வகைத் தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதை உறுதி செய்வதன் அவசியத்தைக் கருத்திற் கொண்டும், பின் தங்கிய பகுதிகளில் தொழிலை மேம்படுத்துவதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டும், தொழில்களின் தனித்தியங்கும் தன்மையைக் கருத்திற் கொண்டும் சிலவகைத் தொழிற் பிரிவுகளில் பெருகிவரும் தேவையை நிறைவு செய்யவும் சிலவகைத் தொழில்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக தடையை நீக்குவதென முடிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக மிதி அச்சு இயந்திரப் பிரிவுகள், மாவு ஆலைகள், எண்ணெய் ஆலைகள், மரம் அறுக்கும் ஆலைகள், பனிக்கட்டி தயாரிப்புப் பிரிவு போன்ற லாபமான தொழிற்சாலைகளுக்கு மீண்டும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

8. மாநிலத்தின் தொழிற்வளர்ச்சியை மேம்படுத்தும் பொதுவான நோக்குடன் வட்டார ஏற்றத் தாழ்வுகளை அகற்றும் பொருட்டு, மாநிலத்திலுள்ள பின்தங்கிய பகுதிகள், வட்டாரங்களை மேம்படுத்துவதற்கும் சமூகத்தின் நலிந்த ஏழைப் பிரிவினரை மேப்படுத்துவதற்கென பெருமளவு வேலை வாய்ப்பு வசதிகளை பெருக்குவதற்கும் வகை செய்யும் திட்டங்களுக்கு ஆதரவு நாடும் அரசின் சமூக, பொருளாதார கொள்கைகளை செயல்படுத்துவதில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தொடர்ந்து முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

9. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தொழில் முனைவோருக்கு உடனடியாக நிதியுதவி வழங்க அனைத்து முயற்சியை எடுத்து தாமதத்தை தடுக்கிறது. 45 நாட்களுக்குள் பெறப்பட்ட கடனுதவி விண்ணப்பங்களை ஆராய்ந்து பார்த்து உடனடியாக கடனுதவி அளிக்க வேண்டும் என்று இந்நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்னவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை.

மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை என்னும் புதிய துறையானது தொழில் வளர்ச்சியின் முக்கியமான ஒரு பகுதிக்குப் பொறுப்பேற்று அதன் துரித வளர்ச்சிக்கு வகை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் வலுவூட்டப்பட்டு மின்னணுவியல் தொழில்களின் வளர்ச்சிக்கு ஒரு பெரும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஆற்றலைப் பெற்றுள்ளது. அத் தொழில்களின் வளர்ச்சி தமிழகத்திற்கு மின்னணுவியலில் முதன்மையிடத்தைப் பெற்றுத்தரும்.

2. இம் மாநிலத்தில் மின்னணுவியல் தொழில்களை விரைவில் பெருக்கச் செய்வதும், நவீன வாழ்வின் பல்வேறு துறைகளிலும் மின்னணுவியல் மற்றும் தொழில் நுட்பவியலின் பயன்பாட்டை விரிவாக்குவதும் அரசின் கொள்கையாகும், பெருந்தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகிய அனைத்துக்குமே முறையான வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, சிறு தொழில்களுக்குத் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது—காரணம் அவற்றில் முதலீடு குறைவு; வேலை வாய்ப்புக்கள் அதிகம்; தொழில் வல்லுநர் குழாம் ஒன்று புதிதாக அவற்றின் மூலம் உருவாக்கப்படுகிறது. மின்னணுவியல் தொழில்களைப் பேணி வளர்க்க இம் மாநிலத்தில் போதுமான அளவுக்கு விரிவான, வலுவான அடிப்படை வசதிகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. ஆங்காங்கு தொழிற்பேட்டைகளில் ஆய்வுக் கூடங்களும், சோதனை மையங்களும் அமைக்கப்பட்டு மிகக் குறைந்த கட்டணத்தில் சோதனை மற்றும் தரக்கட்டுப்பாட்டு வசதிகள் தரப்பட்டுள்ளமையால் மின்னணுவியல் பொருட்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்படுகிறது. மருந்துவமனைகளில் பயன்படும் மின்னணுவியல் கருவிகளையும் மின்னணுவியல் சோதனைச் சாலைகளிலுள்ள கருவிகளையும் பழுதுபார்த்துப் பராமரித்து வருவதற்கான தனிப் பிரிவுகளும் நிறுவப்பட்டுள்ளன. தகவல் வங்கி மற்றும் தகவல் மையத்தின் மூலம் அடிப்படையான தொழில்நுட்ப விவரங்களை வழங்க வசதிகள்செய்யப்பட்டுள்ளன இந்த அடிப்படை வசதிகள் ஏழு மையங்களில் உள்ளன. இவை மின்னணுவியல் தொழில்களுக்கு சிறந்த நாற்றங்காலாகப் பயன்படுகின்றன. இம் மையங்களின் பயன்கள் இறுதியாகப் பொதுமக்களுக்கே செல்கின்றன. தொழில் வல்லுநர்கள் நிருவாகத்திறனை வளர்த்துக் கொள்ளவும், தகுதிபெற்ற தொழிலியல் பயின்றவர்களும் தொழில் வல்லுநர்களும் தக்க வேலை வாய்ப்புக்களைப் பெறவும் இம் மையங்கள் பயன்படுகின்றன. தொழில் நடத்துபவர் யாரும் சாதாரணமாக தனது தொழிற்சாலைக்குள் இத்தகைய வசதிகளை தங்கள் சொந்தச் செலவில் செய்து கொள்ள இயலாது.



3. கக்களூரில் உள்ள மைய மின் சோதனை ஆய்வகமும் அடையாற்றில் உள்ள மின்னணுவியல் சோதனை மற்றும் வளர்ச்சி மையமும் முழுமையான சோதனை வசதிகளையும் தொழில் நுட்ப அறிவுரைகளையும் தருகின்றன. உற்பத்தியில் பயன்படும் அளவைக் கருவிகள் துல்லியமாக சரிசெய்து தருவதற்கும், உற்பத்தி செய்வதற்குரிய பொருள்களைப் பற்றி ஆலோசனை கூறுவதற்கும், உற்பத்திக்கு உகந்த சுற்றுப்புற நிலைகள் பற்றிய சோதனைகளைச் செய்வதற்கும் இந்த ஆய்வுக்கூடங்களில் வசதிகள் உள்ளன.

4. மருத்துவத் துறையில் பயன்படும் மின்னணுவியல் கருவிகளுக்கான பராமரிப்பு மையங்கள் சென்னை. கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ளன. அரசு மருத்துவமனைகளில் உள்ள பல்வேறு மின்னணுவியல் கருவிகளைப் பராமரிப்பதும் பழுதுபார்த்துத் தருவதும் அவற்றின் பணியாகும்.

5. அடையாற்றிலுள்ள '' தகவல் வங்கி மற்றும் தகவல் மையம்'' தகவல்களைப் பரப்புவதோடு எங்கெங்கு எத்தகைய தொழில்களைத் தொடங்க வாய்ப்பு உண்டு என்பது குறித்து தொழில் வல்லுநர்களுக்கு வழிகாட்டியும் வருகிறது. கடைசி நிமிடம் வரையிலான தகவல்களை அனைவருக்கும் தருவதுடன் தொழில்களில் முதலீடு செய்பவர்களுக்கு முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்தும் அது தெரிவிக்கிறது.

6. தொழில் துறைச் செயலாளர், தொழில் வாணிபத்துறை இயக்குநர் ஆகியோரின் கிழ் ''மாநில தொழில் நுட்பக் குழுக்கள்'' செயல்பட்டு வருகின்றன. இவை தொழில் வல்லுநர்களின் உற்பத்தித் திட்டங்களுக்கு அரசின் கொள்கைகளுக்கும் விதி முறைகளுக்கும் ஏற்ப அனுமதி தருகின்றன. 81 இனங்களுக்கான அனுமதியை இக்குழுக்கள் தருகின்றன. 1984 டிசம்பர் முடிய இத்தகைய 161 அனுமதிகளை இவை வழங்கியுள்ளன. சாதாரண தொலைக்காட்சி பெட்டிகள் செய்வதற்கான 19 அனுமதிகள் தரப்பட்டுள்ளன. (மொத்தம் 1,90,000 தொலைக்காட்சிப் பெட்டிகள்). இம் மாநிலத்தில் மின்னணுவியல் தொழிலை மேலும் வலப்படுத்த பல முக்கியமான கருத்துக்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை :—

1. தொழில் தொடங்க அனைத்து வசதிகளும் கொண்ட அடிமனைகள் வழங்குவதற்காக பெருங்குடியில் அமைந்துள்ள தொழில் பேட்டையில் கொட்டகைகள் கட்டுதல்;

2. சென்னையை அடுத்த நந்தம்பாக்கத்தில் உப பொருட்கள் ( ancillary ) தயாரிக்கும் தொழிற் பேட்டை ஒன்றை நிறுவுதல்;

3. கக்கலூரிலுள்ள மைய மின் சோதனை ஆய்வுக்கூடத்திலுள்ள சோதனை வசதிகளை நவீனப்படுத்துதல்;

4. கோயம்புத்தூர், மதுரை, சென்னை ஆகிய இடங்களில் தரக்கட்டுப்பாட்டு மையங்களை அமைத்தல்;

5. சென்னையில் கச்சாப் பொருள் கிடங்கு அமைத்தல்;

6. கோயம்புத்தூர் தொழிற்பேட்டையில் அனைவரும் பயன்படுத்தற்குரிய வசதிகளைக்கொண்ட மையம் அமைத்தல்;

7. திருச்சிராப்பள்ளி உற்டத்திப்பொருள் வளர்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைத்தல்;

8. ''தகவல் வங்கி மற்றும் தகவல் மையத்தை'' தரமுயர்த்தி நவீனப்படுத்துதல்;

9. மின்னணுவியல் உபபொருள்களையும், கருவிகளையும் உற்பத்தி செய்ய தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல்

10. உயர்தர தொழில் நுட்பவியல் சார்ந்த உப பொருட்கள் மின்னணுவியல் அமைப்புக்கள், கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியை திட்டமிட்டு தயாரிக்க உதவுவதற்காக மிக நவீனமான முழுமையான மிக நுட்பம் வாய்ந்த மின் அணுவியல் பொருட்கள் '' சோதனை மற்றும் உருவாக்க மையம்'' ஒன்றை ஐக்கியநாடுகள் சங்க உதவியுடன் அமைத்தல். (இதற்கு ஏற்கெனவே மைய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது).

தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம்.

மின்னணுவியல் தொழில்களின் விரைந்த முறையான வளர்ச்சிக்கு அரசு முதன்மை தந்து வலியுறுத்தி வருகிறது. மின்னணுவியல் தொழில் வளர்ச்சியின் தரத்தையும் தன்மையையும் உயர்த்துவதுடன் குறைந்த முதலீட்டில் மிகுதியான வேலை வாய்ப்புக்களையும் தருகிறது. தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் பொதுத் துறையில் பின்வரும் நான்கு உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. அலுமினியம் மின்னாற் பகுப்பு உலைகலன்களை (Cap''cit''rs) உற்பத்தி செய்யும் பிரிவு, ஒசூர், மின் தொடர்பு சாதனங்கள் உற்பத்திப் பிரிவு சென்னை; பயன்படுத்துவோர் தேவைக்குத் தக்கவாறு கருவிகளைத் திட்டமிட்டுத் தயாரிப்பதற்கான ஒப்பந்த வேலைப் பிரிவு ஒன்று (சென்னை அடையாற்றில்); எண்காட்டும் மின்னணுவியல் கடிகார உற்பத்திப் பிரிவு இன்ஸ்ட்ரானிக்ஸ் வளாகம், அடையாறு ஆகியவையே





அந்நான்கு உற்பத்தித் திட்டங்களாகும். இவை போக சிறு தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை குறிப்பாக குவார்ட்ஸ் சுவர்க் கடிகாரங்கள்; நேரம் காட்டும் பிற கருவிகளை விற்பனை செய்யவும் இந்நிறுவனம் உதவி செய்து வருகிறது..

2. அரசும் தனியாரும் சேர்ந்து முதலீடு செய்யும் ''கூட்டுத் துறை'' தொழில் முயற்சிகள் 19-க்கு இந்நிறுவனம் ஒப்புதல் பெற்றுள்ளது. மின்னணுவியல் தொழிலின் அனைத்துப் பிரிவுகளும் இம் முயற்சிகளில் அடங்கும். ஏற்கனவே தொடங்கி உற்பத்தி நடைபெற்றுவரும் '' கூட்டுத்துறை'' முயற்சிகளில் பின்வருவனவும் அடங்கும் :—அதாவது மின்னணுவியல் தொழில் நுட்பத் துறையில் ஏற்றுமதியைக் குறிக்கோளாகக் கொண்ட திட்டம் ஒன்று; ''ரெசிஸ்டர்'' உற்பத்தி மையம், மதுரை; தொலைக் காட்சிப்பெட்டி மற்றும் நுகர்வோர் மின்னணுவியல் திட்டம், சென்னை; மைக்ரோ பிராசசர்களைக்கொண்டு அமைந்த நுண்கருவிகள் மற்றும் கட்டுப்பாட்டுக் கருவிகளைச் செய்யும் பிரிவு, மருத்துவ மின்னணுவியல் கருவிகள் தயாரிப்புச் சாலை ஆகியவை அடங்கும். ஒலி அலைகளுக்கான வடிகட்டும் கருவி; தொலைக் காட்சிப்பட குழாய்கள்; (Ferrits) தொழில் வாணிக தகவல் கருவிகள், வெப்பமூட்டும் கருவிகள், மின்சாரக் கட்டுப்பாட்டுக் கருவிகள், தொலைகாட்சி deflection உப பாகங்கள், தொலைபேசிகளுக்கான கருவிகள், மின் ஒட்டங்காட்டும் பலகைகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன. மின்னணுவியல் அமைப்புப் பொறியியல் ( Systems ngineerlng பிரிவு ஒன்றும் '' கூட்டுத் துறையில்'' அமைக்கப்பட்டு வருகிறது. குறிப்பாகத் தொலை தொடர்புச் சாதனங்கள் பற்றிய அமைப்புத் திட்டங்கள் தயாரித்து பயன் பெறுபவர் உடனடியாகச் செயல்படுத்தக்கூடிய விதத்தில் அவ்வமைப்புத் திட்டங்கள் செயலில் நிறைவேற்றியும் தரக் கூடியதாக அப்பிரிவு அமையும். தனியார்த் துறை முதலீட்டுத் தொகைகளையும் வளர்ச்சிப்பணிக்கு ஈர்த்து தொழில் வளர்ச்சியை மேலும் தீவிரமாக்கும் நோக்கமுடன் ''கூட்டு முயற்சிகளை'' தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் தொடங்கியுள்ளது. இவற்றின் மூலம் தொழிலியல் அறிஞர்களே தொழில் நடத்துபவர்களாக ஆகி இம் மாநிலத்தின் தொழில்களைப் பெருக்குவதுடன் மிக உயர்ந்த தொழில் நுட்பங்களை தமிழகத்தில் பரவலாக்க முடியும் என்பதே ''கூட்டு முயற்சிக்'' கொள்கைக்கு அடிப்படையாகும். வரும் பத்து ஆண்டுகளில் அரசுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் சேர்ந்து மொத்தம் ரூ. 200 கோடிக்கு மேல் முதலீடு செய்ய வகைசெய்ய முடியும் என்று தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் எதிர்பார்க்கிறது. 31–3–1984 உடன் முடிவடைந்த ஆண்டில் மிகக் குறைவான 35 இலட்சம் ரூபாய் மொத்தம் வருமான அளவில் இருந்த

இந்த நிறுவனம் 31–3–1985-ம் ஆண்டில் ரூ. 3.5 கோடி மொத்த வருமானத்தை அடைந்துள்ளது. 1985–86-ல் ரூ. 15 கோடியை மிஞ்சும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந் நிறுவனத்தின் வளர்ச்சி வியக்கத்தக்கதாக இருக்கிறது என்பதற்கு இப்புள்ளி விவரங்களே சான்றாகும்.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்.

செய்தித்தாள் காகிதம் மட்டுமே இன்னமும் இத்தியாவில் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. சாதாரணமாக மென்மையான மரமும், யூகலிப்ட்ஸ் மரத்தின் பலதரப் பட்ட பட்டைகளும் செய்தித்தாள் காகிதம் தயாரிக்க பயன் படும் மூலப்பொருளாகும். ஆனால் இந்த மூலப் பொருட்கள் அதிக அளவில் கிடைக்காமையின் காரணமாக பெரிய அளவில் காகித ஆலை நிறுவுவதை தடுத்து வருகிறது. எனவே இந்த மூலப் பொருட்களுக்கு மாற்றான ஒருமூலப் பொருளை செய்தித்தாள் காகிதம் தயாரிக்க பயன்படுத்தக் கண்டுபிடிப்பது ஒரு தேசிய பிரச்னையாக உருவாகியுள்ளது. கரும்புச்சக்கை இந்த சாதாரண மூலப் பொருட்களுக்கு பதிலாக பயன் படுத்தப்படுவதற்குரிய எல்லா குணங்களையும் பெற்றுள்ளது ஏராளமான அளவில் கரும்புச் சக்கை ஒவ்வொரு ஆண்டிலும் நாட்டில் தயாரிக்கப்படுகிறது. துர் அதிர்ஷ்டவசமாக தற் போது கிடைக்கும் கரும்புச் சக்கையில் பெரும்பகுதி சர்க்கரை ஆலைகளில் நீராவி தயாரிக்க பயன்படும் எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது.

2. கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு செய்தித்தாள் காகிதம் போன்ற ஒரு முக்கியமான பொருளை தயாரிப்பது என்பது, உலகில் வேறெங்கும் கிடைக்கக்கூடிய அனுபவத்தை கொண்டு செயல்படும் வளரும் நாடுகளுக் குண்டான ஒருமாற்றான வாய்ப்பாகும். வளரும் நாடுகளில் இந்தியா இந்த புதிய தொழில் நுட்பத்தை வளர்ப்பதில் நல்ல அமைப்பில் உள்ளது. கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு செய்தித்தாள் மற்றும் எழுதுதாள் காகிதம் தயாரிக்கும் ஒரு ஆலையை நிறுவும் திட்டம் தீட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டது. மத்திய அரசின் தீவிரமான ஒத்துழைப்பு மற்றும் அறிவுரைகளுடனும் நாட்டிலேயே முதன் முதலாக நிறுவப்படவுள்ள இந்த ஆலையின் மிகப் பெரிய அளவையும் அதற்காகும் பணச் செலவையும் கருத்திற்கொண்டு, தமிழக அரசு 1978-79-ல் கரும்புச் சக்கையை மூல பொருளாகக் கொண்டு செய்தித் தாள் மற்றும் எழுதும் காகிதம் தயாரிக்கும் ஒரு ஆலையை நிறுவும் பணியை மேற் கொண்டது. இந்த திட்டம், தற்போதுள்ள செய்தித்தாள் மற் றும் எழுது காகிதம் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும், அதிக அளவில் கிடைக்கக்கூடிய கரும்புச் சக்கையை பயன்படுத்து



தல் ஆகிய இரண்டு முக்கிய நோக்கங்களையும் கருத்தில் கொண்டு தீட்டப்பட்டது. இந்தக் காரணங்களுக்காகவே தமிழக அரசு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை துவக்கி யது. இந்த நிறுவனம் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது. மற்றும் பணியை 1979 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் தேதி துவக்கியது. ஆண்டொன் றுக்கு 50,000 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன் கள் அச்சிடும் மற்றும் எழுதும் காகிதமும் தயாரிப்பதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்விரண்டு பொருட் களும் முடிவுபெற்ற நிலையில் 75 சதவீதத்துக்கு குறையாமல் கரும்புச் சக்கையை உள்ளடக்கியிருக்கும். இந்த ஆலை பின் தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கும் திருச்சி மாவட் டத்தில் புகலூர் பகுதியில் நிறுவப்பட்டு வருகிறது.

3. இத்திட்டத்திற்கான பணம், பங்கு முதலீடு மற்றும் தவணைக் கடன்களாகவும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் வங்கி களிடமிருந்தும் பெறப்படுகிறது. தமிழக அரசும், சர்க்கரை ஆலைகளும் ரூ. 34 கோடியை மூலதனமாக அளிக்க வேண்டும். நிதி நிறுவனங்களும் மற்றவர்களும் ரூ. 31.00 கோடியை அளிக்க வேண்டும். 1985 மார்ச் மாதம் வரை டி. என். பி. எல். ரூ. 64.05 கோடி பங்கு மூலதனம் மூலதனத்தின் முன்பணமாகவும் சேகரித்துள்ளது. இந்நிறுவனம் ஐ.டி.பி.ஐ., ஐ.சி.ஐ.சி.ஐ., ஐ.எப்.சி.ஐ. மற்றும் வங்கிகளிடமிருந்தும் ரூ. 125 கோடியை கடனாக பெற்றுள்ளது. இத்துடன் ரூ. 13.50 கோடியை மத் திய மாநில அரசு மூலமாக இந்நிறுவனத்திற்கு சுலபக் கடனாக அளித்துள்ளது. இந்தத் தொகை முழுவதும் மாநில அரசிட மிருந்து இந்நிறுவனம் பெற்றுக் கொண்டு விட்டது.

இத்திட்டத்தின் முன்னோடியான விசேஷத் தன்மையின் காரணமாகவும், உலகிலேயே முதன்மையாக கரும்புச் சக் கையை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கக் கூடிய இவ் வாலை திட்டத்திற்கு உலக வங்கி 100 மில்லியன் டாலர் பண உதவி அளித்துள்ளது. இந்தியாவின் சரித்திரத்திலேயே முதன் முறையாக ஐ.டி.பி.ஐ. நிறுவனத்தின் மூலமாக உலக வங்கி 22.5 மில்லியன் டாலர்களை பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது.

இத்திட்டத்தில் கட்டுமான வேலைகள் 95 சதவீதமும், இயந்தி ரங்கள் நிறுவுவதில் 95 சதவீதமும் மொத்தத்தில் 80 சதவீத நிர்மாண வேலைகளும் முடிந்துள்ளன.

இந்த ஆலை ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட மரக் கூழைக் கொண்டு உற்பத்தியை துவங்கியுள்ளது. 1984 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை 2,000 டன்கள் செய்தித்தாள் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டு பலதரப்பட்ட செய்தித்தாள் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக கரும்புச் சக்கையிலிருந்து தரமான கூழ் தயாரிப்பது, இந்த நிதியாண்டின் இறுதிக்குள் செயல்படுத்தப்படும்.

இந்நிறுவனத்தின் மேல்நிலை அதிகாரிகளையும் சேர்த்து சுமார் 850 பேர் பணியாற்றுகின்றனர். நேரடியாக 1,200 பேர்களுக்கும், மறைமுகமாக 5,000 பேர்களுக்கும் வேலை வாய்ப்பளிப்பது இத்திட்டத்தின் இலக்காகும்.

இத்திட்டத்தின் வெற்றிகரமான செயல்படுத்தும் திறன், நாட்டின் தொழில் முன்னேற்றத்தில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும். தனித்தன்மை வாய்ந்த இத்திட்டம் இந்தியாவின் மற்ற கரும்பு விளையும் மாநிலங்களில் மட்டுமல்லாது, உலகின் இதர தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இது போன்ற ஆலைகளை ஏற்படுத்த முன்னோடியாகும்.

ஆண்டொன்றுக்கு 8 சதவீதம் அதிகரித்து வரும் செய்தித்தாள் காகித இறக்குமதியை குறைப்பதன் மூலம், இந்நிறுவனம் நாட்டில் ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடிக்கு அந்நிய செலாவணியை மிச்சப்படுத்தும். அத்துடன் செய்தித்தாள் காகிதத்தின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைக்கும்.

### தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடட்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ. 200 இலட்சம் ரூ. 130 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு, உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உப பொருள்கள் தயாரிப்பது ஆகும்.

### மாரியூர்-வாலிநோக்கம் உப்புத் திட்டம்.

இந்திட்டம் 1975 ஆம் ஆண்டு திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு முதல் மேம்பாட்டுப் பணிகளோடு உற்பத்தியும் தொடங்கியது. வேறு எந்த தொழிலும் ஆரம்பிக்க முடியாததும் மிகவும் பின்தங்கிய இடத்தில் அமைந்துள்ளதுமான இத்திட்டம், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் பின்தங்கிய பகுதியை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது.



இத்திட்டம் 1984 ஆம் ஆண்டு இரசாயன தொழிற்சாலைக்குத் குந்த தரமான 31,100 டன்கள் உப்பு உற்பத்தி செய்தது. ப்ரல் 1984 வரை மழையிருந்ததால் ஜனவரி 1984-ல் ஆரம் க்க வேண்டிய உற்பத்தியானது மே 1984-ல் ஆரம்பிக்கப்பட்டு ம 1984 இறுதியில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. எனி ும் இரசாயன தொழிற்சாலைக்குத் தேவையான உப்பு விற் னை கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளது. எதிர் ரராத மழையின் காரணமாக உணவுத்தொழிற்சாலைக்கு உகந்த ப்பின் தேவையானது கடந்த ஜனவரி முதல் மே 1984 வரை திகரித்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேங்கி ருந்த உப்பின் பெரும்பகுதியை இந்நிறுவனம் விற்பனை செய் து. இப்பொழுது தூத்துக்குடி அல்காலி கெமிகல்ஸ் (TAC Ltd.) ருவாங்கூர் கொச்சின் கெமிகல்ஸ் ( TCC Ltd ) மற்றும் ாத்தாரி இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் (Kothari) ;கிய நிறுவனங்களிலிருந்து தொடர்ந்து உப்பு வேண்டி 'ண்ணப்பம் வந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு ப்பு விற்பனைச் செய்யப்பட்ட 12,116 டன்களை ஒப்பிடும் பாழுது இவ்வாண்டு 6-12-1984 வரை 40,035 டன் உப்பு ற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் விடா முயற்சியினால் தமிழகத் திட்டக் மு ரூ. 75 இலட்சம் செலவில் வாலிநோக்கத்தில் ஒரு சிறிய றைமுகம் அமைக்க அனுமதி அளித்துள்ளது. மாநில துறைமுகத் றை, சிறிய துறைமுகம் அமைக்க நடவடிக்கை எடுத்து ருகிறது. இத் துறைமுகம் செயல்பட்டால் மாரியூர் வாலி நாக்கத்தில் தயாரிக்கப்படும் உப்பை மேற்கு வங்காளம், ஸ்ஸாம் மற்றும் இதர இடங்களுக்கு ஏற்றுமதி செய்து ப்பு விற்பனையைப் பெருக்க வாய்ப்பு உள்ளது.

1985 ஆம் ஆண்டில் இத்திட்டம் இரசாயன தொழிற்சாலைக்த் தகுந்த சுமார் 60,000 டன் உப்பை உற்பத்தி செய்யும். . 15 இலட்சம் செலவில் அலுவலர் குடியிருப்பு கட்ட உத் தரிக்கப்பட்டுள்ளது. மேலும் உப்பளத்திற்குள் வாகனங்கள் சல்லுவதற்காக சாலையை மேம்படுத்துதல், தொழிலாளர் ளுக்குக் குடிநீர் வசதியை விரிவு படுத்துதல் மற்றும் குறைந்த முத்த மின் வசதியை உப்பளத்தில் உள்ள மின்சார பம்புகளுக் ப் பெற்றுத் தருதல் போன்ற வேலைகள் நடைபெறத் திட்ட டப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக சுமார் 10 நபர்களுக்கு நிரந்தர வலை வாய்ப்பும், 800 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் ளிக்கப்படுவதுடன் உப்பைக் கொண்டு செல்லுவதற்கான ணிகள் மூலம் சார்பு வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

[1985 ஜூலை 11

சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டம்:

1979 ஆம் ஆண்டில் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு மே மாதம் முதல் உப்பு உற்பத்தி தொடங்கியது. இவ்வாண்டில் (1984) இத்திட்டத்தில் பாத்தி அமைத்தல் போன்ற உப்பு உற்பத்தி வேலைகளை 1984 ஏப்ரலில்தான் தொடங்க முடிந்து. மே 1984-ல் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. உப்பு உற்பத்திக்கு உகந்த காலமான ஜூலை 1984-ல் இடையிடையே ஏற்பட்ட மழையின் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டதால் இத்திட்டத்தில் எஞ்சியுள்ள கால நிலையைப்பயன்படுத்தி 3,111 டன் மட்டுமே உப்பு உற்பத்தி செய்யப்பட்டது.

1985 ஆம் ஆண்டு இத்திட்டம் சுமார் 16,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இரயில் பாதை வசதி மற்றும் சாலை வசதி உப்பு உற்பத்தி செய்யும் இடத்திற்கு அருகாமையில் இருப்பதினால் உப்பு விற்பனை செய்ய அதிகச் சிரமம் இராது என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் சுமார் 400–500 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும், 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளிப்பதுடன் சார்பு வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

4. புதுத் திட்டங்கள் :

தமிழ்நாடு கெமிக்கல்ஸ் பிராடக்ட்ஸ் நிறுவனம் (T.C.P. Ltd.) சுமார் ரூ. 5 கோடி செலவில் வாலிநோக்கத்தில் மெக்னீசியம் மெட்டல் திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறது. இந்த வகையில் இதுதான் இந்தியாவிலேயே முதல் திட்டமாகும். இதில் தயாரிக்கப்படவிருக்கும் உலோகம், விமான தயாரிப்புத் தொழிற்சாலைக்கும் நாணயம் தயாரித்தல் போன்ற தொழில்களுக்கும் பயன்படும். சுமார் 16,000 டன் அளவுள்ள 36 உப்புக் கழிவு நீர் ( Bitterns ) இத்திட்டத்திற்கு மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டம் அளிக்கும். இந்நிறுவனம் 1985 ஆம் ஆண்டு ரூ. 6.35 இலட்சம் செலவில் உப்புக் கழிவு நீரை ( Bitterns ) பிராசஸ் ( Process ) செய்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தும்.

மெக்னீசம் மெட்டர் திட்டத்திற்காக உப்புக் கழிவு நீர் (Bitterns) அளிக்கும் பொழுது உப்பைச் சார்ந்த மெக்னீசியம் சல்பேட், பொட்டாசியம் குளோரேட், பொட்டாசியம் சைனைட், சோடியம் சல்பேட் போன்ற உப இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன. இந் நிறுவனம் பவநகரில் அமைந்துள்ள ( C. S. M. C. R. I. ) நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளது. இத் திட்டங்கள் நன்றாக செயல்படுமா என்பதனை விரிவாக ஆராய்ந்து இத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.



1985 ஜூலை 11]

மாரியூர் வாலிநோக்கத்தில் தயாரிக்கப்படும் உப்பை ஊட்டச் சத்துக்களால் வளப்படுத்தும் திட்டத்தை மத்திய அரசு தமிழக அரசு மூலமாக இந் நிறுவனத்திற்குக் கொடுக்கத் தீர்மானித்துள்ளது. இந் நிறுவனம் இதற்கு இசைந்துள்ளது. மேலே சொன்ன திட்டத்தினால் இந் நிறுவனம் எந்தவிதமான செலவையும் ஏற்க நேரிடாது.

சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டத்தில் அயோடின் கலந்த உப்பு ( Iodised Salt) தொழிற்சாலையை ஏற்படுத்த உப்பு ஆணையர் மூலமாக இந் நிறுவனம் யூனிசெப் ( UNICEF) நிறுவனத்தின் உதவியை அணுகியது. இதற்கான உதவியின் ஆணையை மத்திய அரசிடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.

பவநகரில் அமைந்துள்ள ( C.S.M.C.R.I.) நிறுவனம் தமிழக அரசு மற்றும் மத்திய உப்புத் துறையின் கூட்டு மூலமாக மாதிரி உப்புப் பண்ணையை வாலிநோக்கத்தில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இந் நிறுவனம் நல்ல முறையில் உப்பு உற்பத்தி செய்யவும் மற்றும் தொழிலாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் பயிற்சி அளித்தல் போன்றவற்றில் பயன் அமையும். மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மாதிரி உப்பு பண்ணைக்குத் தேவையான 200 ஏக்கர் நிலத்தை வழங்க ஒத்துக் கொண்டுள்ளது. மற்றும் மத்திய உப்புத் துறை அதிகாரிகள் சமீபத்தில் மாரியூர் வாலிநோக்கம் உப்புத் திட்டத்தை பார்வையிட்டு விரிவான அறிக்கையை அளித்துள்ளார்கள். இந்நிறுவனத்திற்குச் சொந்தமான சுமார் 200 ஏக்கர் நிலப் பரப்பில் இத்திட்டம் ஏற்படுத்தப்படவிருக்கிறது. இத்திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ. 80.81 இலட்சம். இம் முதலீடானது மூன்றில் ஒரு பங்கு வீதம் (CMCRI) மத்திய உப்புத் துறை மற்றும் இந்நிறுவனம் மூலமாக பகிர்வு செய்யப்படும். ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிறகு இத்திட்டத்தை இந் நிறுவனம் ஏற்று நடத்தும். மேற்கொண்டு தகவல்கள் (C.S.M.C.R.I.) யிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திட்ட உதவி :

1985–86 ஆம் வருடத்தில் இப்பொழுது செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் திட்டங்களுக்கு ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்ய மத்திய திட்ட குழுவிற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டில் அதிக அளவு உற்பத்தி விற்பனை எதிர்பார்க்கப்படுவதினால் இந்நிறுவனத்தின் செயல்பாட்டுத் திறன் 1985 ஆம் ஆண்டில் மேம்படும். 1986 ஆம் ஆண்டில் பண இழப்பைத் தவிர்த்துப் பின்வரும் ஆண்டுகளில் இலாபகரமாக செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1985 ஜூலை 11

கனிவள நிறுவனங்கள்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் :

தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளுக்குத் தேவையான முக்கியமான கனிமப் பொருட்களை வெட்டி எடுப்பதற்கும் கருப்பு மற்றும் சாம்பல் நிற கற்களை வெட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) அரசு நிறுவனம் ரூபாய் 100 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது. டாமின் தனது புதிய திட்டங்களை செயல்படுத்தவும், சுரங்கங்களின் எண்ணிக்கையை உயர்த்தி உற்பத்தியைப் பெருக்க ஏதுவாக இருக்கும் பொருட்டும் அரசு அனுமதிக்கப்பட்ட மூலதனத்தை தற்பொழுது ரூ. 300 இலட்சத்திற்கு உயர்த்தியுள்ளது. இதுவரை ரூ. 172.50 இலட்சம் மூலதனமாக செலுத்தப்பட்டுள்ளது.

2. 1984–85 ஆம் ஆண்டில் (1984 டிசம்பர் மாதம் வரையில்) ''டாமின்'' நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் 1983–84 ஆம் வருடத்தில் செயல் முறைகளுடன் ஒப்பிட்டு கீழே தரப்பட்டுள்ளன :

(1) கனிம உற்பத்தி :

| | 1983–84. | | 1984–85. | |
|---|---|---|---|---|
| | அளவு. | மதிப்பு. | அளவு. | மதிப்பு. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| கருப்பு கற்கள் .. | 2,631 க. மீ. | 82.45 | 3,587 க. மீ. | 117·70 |
| சாம்பல் நிறக் கற்கள்.. | 1,818 க. மீ. | 17·30 | 3,432 க. மீ. | 42.80 |
| முக்கிய கனிப் பொருட்கள். | 29,124 டன். | 31.50 | 87,674 டன். | 49.80 |
| | | 1,31.25 | | 2,10.30 |



1985 ஜூலை 11]

(2) கனிம விற்பனை:

| | 1983-84. | | 1984-85. | |
|---|---|---|---|---|
| | அளவு. | மதிப்பு. | அளவு. | மதிப்பு. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| கருப்பு கற்கள் .. | 2,643 க. மீ. | 1,66.90 | 3,165 க. மீ. | 2,21.82 |
| சாம்பல் நிறக் கற்கள் | 1,847 க. மீ. | 54.13 | 3,402 க. மீ | 1,05.95 |
| பெருங்கனிப் பொருட்கள். | 2,36.83 மெ. டன். | 20.90 | 92,200 மெ. டன். | 80.43 |
| | | 2,41.93 | | 4,08.20 |

இந்நிறுவனம் 1984–85 ஆம் ஆண்டின் மொத்த விற்பனையின் அளவை கடந்து விட்டது. இந்த வருடத்தின் மொத்த விற்பனையின் அளவு ரூ. 408.20 இலட்சமாகும். இந்நிறுவனம் 1984–85-ல் நடைமுறை இலாபமாக ரூ. 110 இலட்சங்களும், நிகர இலாபமாக (வரிக்குப்பின்) ரூ. 8.14 இலட்சங்களும் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 1983–84-ன் நடைமுறை இலாபமான ரூ. 100.00 இலட்சத்திற்கும் நிகர இலாபமான ரூ. 7.88 இலட்சத்திற்கு அதிகமாக உள்ளது. இந்நிறுவனம் தற்சமயம் 2,500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. இது 1985–86-ல் 2,750-க்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(3) அறுத்து மெருகேற்றும் தொழிற் கூடம் :

தமிழ் நாட்டில் ஏராளமாகக் கிடைக்கும் கரும் பாறைகளை வெட்டி மெருகேற்றி பன்னாட்டுச் சந்தையில் விற்கும்பொருட்டு ரூ. 385 இலட்சம் செலவில் சென்னைக்கு அருகில் மணலியில் இறக்குமதி செய்த இயந்திரங்களுடன் நூறு விழுக்காடு ஏற்றுமதி உரிமம் பெற்ற நவீன தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க டாமின் திட்டமிட்டுள்ளது. வெட்டி மெருகேற்றிய பாறைகளை டாமின் நேரடியாக அயல்நாடுகளுக்கு அனுப்பி அதன் மூலம் அதிக இலாபம் பெற இத்திட்டம் வழி வகுக்கும். இதில் இந்திய தொழில் முன்னேற்ற வங்கியிடமிருந்து ரூ. 120 இலட்சங்களும் இந்திய தொழில் நிதியுதவி நிறுவனத்திடமிருந்து ரூ. 39 இலட்சங்களும் ஆக மொத்தம் ரூ. 159 இலட்சங்கள் இதுவரை உதவித் தொகையாகப் பெறப்பட்டுள்ளது.

அரசு இத்திட்டத்திற்கு ரூ. 3,85 இலட்சம் மதிப்பில் ஒப்புதல் அளித்து சென்னைக்கருகிலுள்ள மணலி கிராமத்தில் இத் தொழிற்சாலைக்கு கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான நிலங்களை வழங்கியுள்ளது. அரசு ரூ. 80 இலட்சங்கள் மூலதனப் பங்கு உதவியையும் அளித்துள்ளது. இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கி (ஐ.டி.பி.ஐ.) ரூ. 1,70 இலட்சங்களும் இந்திய தொழில் நிதி உதவிக் கழகம் (ஐ.எப்.சி.ஐ.) ரூ. 55 இலட்சங்களும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 50 இலட்சங்களும் ஆக மொத்தம் ரூ. 2,75 இலட்சங்கள் கடனாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளன.

இந்தத் திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்கள் மேற்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. கட்டிட வேலை சீராக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தத் தொழிற்சாலை 1985 ஆம் வருடம் ஆகஸ்டு மாதத்திற்குத் தனது உற்பத்திப் பணியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பன்னாட்டு முக்கியத்துவம் வாய்ந்த தரமுள்ள 50,000 சதுர மீட்டர் அளவுள்ள மெருகிட்ட பாளங்களும் 10,000 சதுரமீட்டர் அளவுள்ள மெருகிட்ட உருவ கற்களும் உற்பத்திச் செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(4) சிவகெங்கை கிராபைட்டை வெட்டியெடுக்கும் தொழிற்சாலை

உலகிலேயே சிறந்ததாகக் கருதப்படும் மடகாஸ்கருடன் ஒப்பிடக் கூடிய கிராபைட் தாது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுள்ள சிவகெங்கையில் கிடைக்கிறது. வெட்டியெடுக்கப்பட்ட தாதுக்களை சுத்தப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்குத் தேவைப்படும் 1,104 ஏக்கர் நிலத்தில் 600 ஏக்கர் புறம்போக்கு நிலமாகவும் 504 ஏக்கர் பட்டா நிலமாகவும் இருக்கும். அரசு புறம்போக்கு நிலத்தில் தாது எடுப்பதற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை 283 ஏக்கர் பட்டா நிலம் கையகப் படுத்தப்பட்டுவிட்டது. மீதி நிலங்களைக் கையகப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் ஜாம்சட்பூர் தேசிய கனிவள ஆய்வுக் கூடம் ஆகியவற்றுடன் கலந்து ரூ. 250 இலட்சங்கள் செலவு மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட கிராபைட் வெட்டி சுத்தப்படுத்தும் திட்டத்திற்கு அரசும் ஒப்புதல் அளித்துள்ளது. நிதி உதவி நிறுவனங்களான இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கியும் இந்தியத் தொழில் நிதியுதவி நிறுவனமும் தேவையான உதவித் தொகையை விரைவில் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.



சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டிற்கு வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் மிகுந்த கிராக்கியுள்ளது. இத் திட்டம் தனது உற்பத்தி 1985–86-ன் முடிவில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் ஒரு நாளுக்கு 100 டன் தாதுக்களை வெட்டி எடுத்து இதில் 14 டன்கள் சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டைத் தயாரிக்கும் திறனுடையது. அரசு இத் திட்டத்திற்கு மூலதன பங்காக ரூ. 20 இலட்சங்கள் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

டாமின் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. மேலும் வெளிநாட்டு கூட்டு ஒப்பந்தத்துடன் கிராபைட்டை அடிப்படையாகக் கொண்ட விமான பாகங்கள் தயாரிக்க ஒரு தொழிற்சாலை அமைப்பது பற்றிய சாத்தியக் கூறுகளை டாமின் ஆய்வு செய்து கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்.

திருவாளர்கள் தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் கச்சா மாக்னசைட்டை வெட்டியெடுக்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசு நிறுவனமாக ரூ. 2,00 இலட்சம் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் 17–1–1979-ல் நிறுவப்பட்டது. சுழலும் சூளைத் திட்டம் மற்றும் கச்சா மாக்னசைட்டைச் சுத்தம்செய்து மேம்படுத்தும் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்த இந் நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசு அதனுடைய பங்கு மூலதனமாக ரூ. 4,00 இலட்சம் வழங்கியுள்ளது. திருவாளர்கள் தமிழ்நாடு மாக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட், தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்டின் துணை நிறுவனமாகும். உருக்காலைச் செங்கற்கள், உரங்கள் இராசாயனப் பொருட்கள் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் கச்சாப் பொருட்களான மிதமாக எரிக்கப்பட்ட மாக்னசைட் மற்றும் முழுமையாக எரிக்கப்பட்ட மாக்னசைட் என்ற நடுத்தரப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்வதே துணை நிறுவனத்தின் முக்கிய பணியாகும்.

2. 1984–85 ஆம் ஆண்டில் (31–1–1985 வரை) கச்சா மாக்னசைட்டின் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் 1983–84 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகளுடன் கீழே ஒப்பிட்டுக்காட்டப்பட்டுள்ளது.

| | 1983–84 (டன்கள்) | 1984–85 (டன்கள்) |
|---|---|---|
| 1. உற்பத்தி ... ... | 117.856 | 109,845 |
| 2. விற்பனை ... ... | 107,818 | 102,474 |

[1985 ஜூலை 11

எதிர்காலத் திட்டங்கள்.—தமிழ்நாடு அரசு, கச்சா மாக்ன சைட்டை நடுத்தரப் பொருளாக மாற்றுவதற்கு, சுமார் 765 இலட்சம் செலவு மதிப்பீட்டில் சுழலும் சூளை ஒன்றினை நிறுவுவதற்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அது நடப்பு ஆண்டில் (1985 ஆம் ஆண்டிடு ஜூலை மாதத்தில்) உற்பத்தியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசு சுமார் ரூ. 26,13 இலட்சம் செலவில் கச்சா மாக்ன சைட்டை சுத்தம் செய்து மேம்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்றத் தேவையான தொழில் நுட்பத் திறனை சுவிட்சர்லாந்தில் உள்ள திருவாளர்கள் சுல்சர் பிரதர்ஸ் லிமிடெட் வின்டெர்தூர் நிறுவனத்திடமிருந்து பெறுவதற்காக இந்நிறுவனம் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை இந்திய அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது. இத் தொழிற்சாலைக்குத் தேவையான பொறியியல் பணிகளை வழங்குவதற்கும், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கும் கல்கத்தாவிலுள்ள திருவாளர்கள் எம்.என். தஸ்தூர் அண்டு கம்பெனியை, டான்மார்க் தொழில் நுட்ப ஆலோசர்களாக அமர்த்தியுள்ளது. டான்மார்க் இத்திட்டத்திற்கு ஏற்கெனவே சுமார் ரூ. 1,07.45 இலட்சம் செலவு செய்துள்ளது. 1988 ஆம் ஆண்டு இறுதியில் இத் திட்டம் நிறைவுபெற்று உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. ஆஸ்திரியாவிலுள்ள திருவாளர்கள் ரிப்ராக்டர் கன்சல்ட்டன்ட்ஸ் இன்ஜினியரிங் கூட்டு ஒப்பந்தத்துடன் வெப்பந் தாங்கிக் கற்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவதற்கு டான்மார்க் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்காக இந்நிறுவனம் இந்திய அரசின் அனுமதி பெற்று இதுவரை ரூ. 4.90 இலட்சம் முதலீடு செய்தது. இத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடு மற்றும் சம்மந்தப்பட்ட அடிப்படை விவரங்களை ராஞ்சியிலுள்ள மெட்டலூர்ஜிக்கல் அண்டு இன்ஜினியரிங் கன்சல்ட்டன்ட்ஸ் (இந்தியா) லிமிடெட், தயாரித்து வருகிறது.

## புவியியல் மற்றும் சுரங்கத் துறை.

தொழில்துறை இயக்குநரகத்தின்கீழ் இயங்கிவந்த மாநில புவியியல் பிரிவு கடந்த 25 ஆண்டுகளில் முறையாக பல கனிம ஆய்வுகளை மேற்கொண்டது. இதன் பயனாக தனியார் மற்றும் பொதுத் துறையில் கனிமம் சார்ந்த பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கனிம சலுகை மனுக்களை விரைவில் பரிசீலித்து அரசிற்கு, முறையான பரிந்



1985 ஜூலை 11]

துரைகள் அனுப்புவதற்கும் கனிம நிர்வாகத்தில் கொள்கை அடிப்படையிலான சில முடிவுகளை விரைவில் மேற்கொள்வதற்கும் புவியியல் தொழில்நுட்ப அலுவலர்கள் உதவி புரிகின்றனர்.

1983 ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ல் புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்ககம் என்ற புதிய துறையை அரசு ஏற்படுத்தியது. இதன்மூலம் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பணிபுரிந்து வந்த தனிச் சுரங்கப் பணியாளர்கள் புதிய இயக்குநரகத்தின்கீழ் பணியமர்த்தப்பட்டனர்.

புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநரகத்தின் பணிகள்—

(1) கனிம ஆய்வு.

(2) கனிம நிர்வாகப் பணி.

என இரு வகைப்படும்.

கனிம ஆய்வு :

1985—86ஆம் ஆண்டுகள் கீழ்க்கண்ட கனிம ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. தர்மபுரி மாவட்டம், கிருட்டிணகிரி வட்டம், மகராஜகடை பகுதியில் தங்கத்திற்கான முதற்கட்ட பிரிவுக்கான ஆய்வு 1983-ல் முடிக்கப்பட்டது. இரண்டாவது நிலை பகுதியில் ஆய்வுப் பணிகள் துவங்கியுள்ளன.

2. திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் ஆனந்தவாடி, கைருலாபாத், அமீனாபாத் மற்றும் பெரிநாசனூர் பகுதிகளில் படிந்தவகை சுண்ணாம்புக் கற்களுக்கான விரிவான ஆய்வு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்குறித்த இவ்வாய்வுப்பணியானது திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களின் விரிவாக்கத் திட்டத்தின் தேவைக்காக கூடுதல் சுண்ணாம்புக் கல் இருப்பு அளவினை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இப் பணியில் சுமார் 35 துளைகளிட்டு சுமார் 2,000 மாதிரிகள் இராசாயன சோதனைகளுக்காகச் சேகரிக்கப்பட உள்ளன.

3. இராமநாதபுரம் மாவட்டம், ஆலங்குளத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தினரின் சுரங்கக் குத்தகைப் பகுதிகள் மற்றும் ஆலங்குளத்தை சுற்றி 20 கி. மீ. ஆரச்சுற்றில் காணப்படும் படிகவகை சுண்ணாம்புக் கற்களுக்கான விரிவான ஆய்வு.

4. பெரியார் மாவட்டம், காங்கேயத்தைச் சுற்றியுள்ள பகுதியிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், சின்ன தாராபுரம் பகுதிகளிலும் வெங்கக் கல் மற்றும் பெல்சுபார் கனிமங்களுக்கான விரிவான ஆய்வு

5. நீலகிரி மாவட்டம், குன்னூர் மற்றும் ஊட்டி பகுதிகளில் புவிநுட்பவியல் சார்ந்த ஆய்வுப் பணிகள்.

6. மதுரை மாவட்டம், பெரியாறு நீர்த்தேக்கத்தில் துறப்பண ஆய்வு.

இவ் வாய்வுப் பணியானது பெரியாறு அணைகளில் உள்ளமைப்பை அறியவும் அதனை வலுப்படுத்தும் முறைகளை முடிவு செய்யவும் தலைமைப் பொறியாளர் (நீர்ப் பாசனம்) அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட சிறப்பு ஆய்வுப் பணியாகும்.

7. சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்தில் செவிட்டு ரெங்கன்பட்டியன் மணிக் கற்கள் மற்றும் குறைமணிக் கற்களுக்கான ஆய்வு.

8. தென்னாற்காடு மாவட்டம், மாமண்டூரில் காணப்படும் செம்பு கனிம அமைப்புப் பற்றிய மறு மதிப்பீடு.

9. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்திற்காக தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலம் அருகில் களி மண் பற்றிய ஆய்வு.

கீழ்குறிப்பிட்டுள்ள நான்கு செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

(1) தென்னாற்காடு மாவட்டத்தின் சில பகுதிகளில் சுரங்கக் குத்தகையற்ற பகுதிகளில் விரிவான ஆய்வு மற்றும் துறப்பணப் பணிகள் மேற்கொள்ளுதல்.

(2) மகராசகடை பகுதிகளில் கோலார் சிஸ்ட் வரை பாறைகளின் தென் தொடர்ச்சியில் தங்கம் கிடைப்பதனை அறிவதற்காக விரிவான ஆய்வும், துறப்பணப் பணியும் திட்டமிடப்பட்டுள்ளன.



(3) நீலகிரி மாவட்டம், ஊட்டி பகுதியில் நகர அமைப்பு தொழில் அமைப்பு மற்றும் விவசாயம் இவைகளினால் புவியியல் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றம் பற்றி அறிதல்.

(4) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டத்தில் தேயிலை மற்றும் உருளை பயிரிடுதல் மூலம் நிலச்சரிவுக்கு உட்படும் தன்மை ஆய்தல்.

மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் மற்றும் கூடலூர் வட்டங்களில் நிலச்சரிவு பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவும், நிலச்சரிவு பற்றிய அபாயங்களை கண்டறிந்து நிலத்தை பயன்படுத்தும அமைப்புகளுக்கு அறிவுரை கூறவும் குன்னூரை தலைமை இடமாகக் கொண்டு 'புவிநுட்பவியல் குழு' ஒன்றினை அமைக்கத் திட்டம் ஒன்று உள்ளது.

கனிம மேம்பாட்டு ஆய்வகம் :

வடஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலைப் பகுதியில் காணப்படும் இரும்புத் தாதுவை அடர்வூட்டி உருண்டைகள் செய்து ''ஸ்பான்ஞ்ச் இரும்பு'' உற்பத்திக்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வதற்காக மாதிரிகள் சேகரிக்கவும், சோதனைகளுக்காகவும் அரசு ரூ. 1.50 இலட்சம் அனுமதித்துள்ளது. இப் பணிக்காக சுமார் 1 டன் எடையுள்ள இருப்புத் தாது மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, சேலத்தில் அமைந்துள்ள கனிம மேம்பாட்டு ஆய்வகத்தில் அடர்வூட்டும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இவ்வடர்வூட்டப்பட்ட இரும்புத் தாது சென்னையிலுள்ள தேசீய உலோகவியல் ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்டு பூர்வாங்க சோதனைகள் முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட உருண்டைகள் ஸ்பான்ஞ்ச் இரும்பு உற்பத்தியில் பொருந்தும் தன்மை அறிவதற்காக ஆந்திரப் பிரதேசத்தில் கம்மம் என்னுமிடத்தில் அமைந்துள்ள '' இந்திய ஸ்பான்ஞ்ச் அயர்ன் லிமிடெட்'' நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் கனிம மேம்பாட்டு ஆய்வகத்தில் பொதுத் துறை தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட சுமார் 60 மாதிரிகள் சோதனையிடப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக பெறப்பட்டுள்ள கனிம மேம்பாட்டு இயந்திரங்களை நிறுவுவதற்கான அடித்தள மேடை அமைக்கும் பணிகளும், 250 கி.வோ. சக்தி மின்மாற்றுக் கருவியினை நிர்மாணிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் கனிம மேம்பாட்டு அனைத்து இயந்திரங்களும் தொடர் நிலைப் பணி ஆற்ற ஏதுவாகும்.

கனிம நிர்வாகம்.

மாநில புவியியல் பிரிவு, புவியியல் மற்றும் சுரங்கத் துறையாக உயர்த்தப்பட்ட பின்னர் கனிம நிர்வாகத்தில் பகுதி நிர்வாகப் பணி மேற்கொள்ளப்படுகிறது. 15 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அலுவலகங்களின் மூலம் உதவி இயக்குநர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கனிம நிர்வாகத்தில் உதவி புரிகின்றனர். மாவட்ட அளவில் முறையான கூட்டங்கள் நடைபெறுவதன் மூலம் கனிம நிர்வாகம் செவ்வனே செயல்படுவதற்கும் ஒத்த கொள்கைகள் அமையவும் ஏதுவாகிறது. கனிம நிர்வாகப் பணியில் ஏற்படும் அடிப்படை இடையூறுகள் பற்றி சுரங்கத் தொழிலதிபர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு அவைகளை உடன் களைவதற்கான சாத்தியக் கூறுகள் மாவட்ட அளவில் தலைமை இடத்தில் சுரங்க சொந்தக்காரர்களின் நபர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகின்றன.

வருவாய்த் துறை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் சேர்ந்தப் பணி கனிம குறைந்த மதிப்பீடுகளையும், கனிமங்களையும் கொண்டு செல்வதிலும் உள்ள சட்ட குறைபாடுகளை கண்டறிவதில் பெரும்பங்கு வகிக்கிறது. இதன் மூலம் சட்டத்திற்குப் புறம்பான முறையில் கனிமம் கொண்டு செல்லும்பணி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சிறு சுரங்க குத்தகைதாரர்களின் வேண்டுகோளிற்கிணங்க, அனுமதிச் சீட்டுகளின் செல்லுபடி காலம் 10 நாட்களில் இருந்து 15 நாட்களுக்கும், தாங்களே கனிமத்தை பயன்படுத்துவோருக்கு 15 நாட்களில் இருந்து 1 மாதத்திற்கும் உயர்த்தப்பட்டுள்ளது. மணல் கல் மற்றும் கனிமண் முதலிய சிறு வகை கனிமங்களை ஏலத்தில் விடுகிறபோது அவைகளின் தனியுரிமை பாதிக்காதவாறு கவனம் செலுத்தப்படுகிறது.

1984–85 ஆம் ஆண்டுகளில் 235 ஒப்புதல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் மாநிலம் முழுவதிலும் இருந்து சுமார் 200 சுரங்க குத்தகை மக்கள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை அளிக்கப்பட்டது. இத்துடன் சுமார் 70 உயர் நீதிமன்ற வழக்குகளும், வழக்கு மேல்முறையீடுகளும் பெரிய வகை மற்றும் சிறிய வகை கனிமங்கள் சம்பந்தமாகப் பெறப்பட்டு அறிக்கை அளிக்கப்பட்டது.

மேற்குறித்த காலத்தில் உரிம வரி, உள்ளூர் தலவரி, உள்ளூர் தலவரிமீது சிறப்பு வரி இவைகளின் மூலம் ரூ. 4,36,01 இலட்சங்கள் வருவாய் கிட்டியுள்ளது. ஒப்புதல் சான்றிதழ்கள் வழங்குவதில் புதியனவற்றிற்கு ரூ. 86,000-ம் மறு அளிப்பிற்கு ரூ. 31,175-ம் பெறப்பட்டன. ஜனவரி 85 திங்களில் மேற்படி வருவாய ரூ. 11,500-ம் ரூ. 27,750-ம் ஆகும்.



மேற்குறித்த வருவாயில் கடந்த ஐந்தாண்டு வருவாய் தகவல் கீழே தரப்பட்டுள்ளது. இதனைப் பார்க்கும்போது புதிய இயக்குநரகம் அமைத்தபின் வருவாய் கணிசமான உயர்ந்துள்ளது தெரியவரும்.

கனிம வருவாய்.

| ஆண்டு. | மொத்த கனிம வருவாய் | மாக்னசெட் விற்பனை மூலம் வருவாய். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1980–81 | 4,11.48 | 2,38.58 |
| 1981–82 .. .. .. | 4,33.08 | 2,60.00 |
| 1982–83 .. .. .. | 5,74.82 | 3,08.20 |
| 1983–84 | 2,83.09 | .. |
| டிசம்பர் வரை .. .. .. | 4,36.01 | .. |

பரிசீலிக்கப்பட்ட சுரங்க குத்தகை மனுக்களின் எண்ணிக்கை :

| | |
|---|---|
| 1981–82 .. .. .. .. .. | 21 |
| 1982–83 .. .. .. .. .. | 98 |
| 1983–84 .. .. .. .. .. | 100 |
| பிப்ரவரி 1984—அக்டோபர் 1984 .. .. | 200 |

ஒப்புதல் சான்றிதழ்கள் அளிக்கப்பட்ட விவரமும் வருவாயும்.—

| ஆண்டு | புதியன. | வருவாய். | மறு அறிவிப்பு. | வருவாய். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | | ரூ. |
| 1980–81 .. | 88 | 44,000 | 160 | 40,000 |
| 1981–82 .. | 107 | 53,500 | 204 | 53,500 |
| 1982–83 .. | 175 | 87,500 | 219 | 54,750 |
| 1983–84(டிசம்பர் 83 முடிய) | 111 | 55,500 | 118 | 39,500 |
| 1984 | 172 | 86,000 | 266 | 31,175 |
| ஜனவரி 1985 .. | 23 | 11,500 | 111 | 27,750 |

[1985 ஜூலை 11

சர்க்கரைத் தொழில்

1985—86.

வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட சர்க்கரைத் தொழில் விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கான தலையாய அங்கம் வகிக்கின்றது. மேலும் சர்க்கரை ஒரு பொதுப் பயனுடைய அத்தியாவசிய பண்டமாதலால் முக்கிய பங்கு வகிக்கிறது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை ஒருங்கிணைந்து செயல்படச்செய்தல், இந்த ஆலைகளை மேற்பார்வையிடுதல் ஆகிய பணிகளை கவனிப்பதற்காக அரசு 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தனியாக சர்க்கரைத் துறை இயக்ககத்தைத் தோற்றுவித்தது.

1.2. இம் மாநிலத்தில் கூட்டுறவுத் துறையில் 11 சர்க்கரை ஆலைகளும் தனியார் துறையில் 8 சர்க்கரை ஆலைகளும், பொதுத்துறையில் 3 சர்க்கரை ஆலைகளும், மத்திய அரசு நிர்வாகத்தின் கீழ் ஒரு சர்க்கரை ஆலையும் உள்ளன. புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க தனியார் துறையை ஊக்குவிக்கலாம் என்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதன்படி தனியார் துறையில் இருந்து பெறப்பட்ட 8 விண்ணப்பங்களை மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மத்திய அரசு இதுகாறும் 3 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையில் அமைக்க முன் உரிமம் வழங்கியுள்ளது. இரண்டு விண்ணப்பங்கள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன. எஞ்சியுள்ள 3 விண்ணப்பங்கள் மைய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறையில் கூட்டுறவுத் துறையில் நாளொன்றுக்கு 1,250 டன் பிழிதிறன் கொண்ட ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க மத்திய அரசு 1984 செப்டம்பர் திங்களில் முன் உரிமம் வழங்கியுள்ளது. இவ்வாலை கூட்டுறவுத் துறையில் தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை வட்டம், தலைஞாயிறு கிராமத்தில் நிறுவப்படுகிறது. இத் திட்டத்தின் திருத்திய திட்ட மதிப்பீடு ரூபாய் 1,190 இலட்சம். மாநில அரசு இதுவரை இத் திட்டத்திற்கான பங்கு மூலதனத் தொகையான ரூ. 357 இலட்சத்தில் ரூ. 150 இலட்சம் வெளியிட்டுள்ளது. இவ்வாலை 1986 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி பகுதியில் கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலை அமைப்பது குறித்து தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இணையம் அனுப்பியுள்ள விண்ணப்பம் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் 10 சர்க்கரை ஆலைகள் புதியதாக அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



1985 ஜூலை 11]

(2) தமிழக சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள்.

2.1. தமிழக சர்க்கரை ஆலைகளின் 1982—83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுகளில் பொதுவான செயல்பாட்டு விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

2.2. கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழக சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு போன்ற விவரங்களும் 1984-85 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடும் கொண்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| வரிசை எண். | சர்க்கரை ஆண்டு. | | பிழியப்பட்ட கரும்பின் அளவு. | உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு. | சர்க்கரை கட்டுமானம். | நிறுவிய பிழிதிறனை பயன்படுத்திய அளவு. |
|---|---|---|---|---|---|---|
| | (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | | (இலட்சம் டன்களில்.) | | (விழுக்காடுகள். | |
| 1 | 1981—82 | .. | 85.93 | 7.55 | 8.78 | 120 |
| 2 | 1982—83 | .. | 73.02 | 6.51 | 9.04 | 101 |
| 3 | 1983—84 | .. | 45.55 | 4.24 | 9.30 | 60 |
| 4 | 1984—85 | .. | 63.94 | 5.81 | 9.09 | 84 |

*மதிப்பீடுகள்.

2.3. 1983—84 ஆம் ஆண்டில் சில பகுதிகளில் நிலவிய வறட்சியின் காரணமாக இம் மாநிலத்தில் 1984-85 ஆம் ஆண்டில் 63,94 இலட்சம் டன் மட்டுமே கரும்பு அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.4. 1983—84 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 4.24 இலட்சம் டன்களாக இருந்தது. 1984—85-ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 5.81 இலட்சம் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(3) கரும்பின் விலை.

3.1. 1984–85 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 சதவீதம் அல்லது அதற்கு குறைவான சதவீத சர்க்கரை சத்துடைய கரும்பின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 140 என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. சர்க்கரை கட்டுமானம் 8.5 சதவீதத்திற்கு கூடுதலாக இருப்பின் 0.1 சதவீதம் ஒவ்வொன்றிற்கும் குவிண்டால் ஒன்றிற்கு 16.4706 பைசா வீதம் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது கரும்பு உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால் கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்த அளவு விலை ஆதாயமற்றது என முறையீடுகள் எழுந்ததாலும், வேளாண்மை இடுபொருள் விலை, கூலி உயர்வு ஆகியவற்றை கருத்திற்கொண்டும் 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைந்த் சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 185 என்று 1984–85 ஆம் ஆண்டிற்கு கொடுக்க வேண்டும் என தமிழக அரசு சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுரை கூறியுள்ளது. சர்க்கரை கட்டுமானம் 8.5 சதவீதத்திற்கு கூடுதலாக இருப்பின் 0.1 விழுக்காடுக்கு 21.7647 பைசா வீதம் அதிகமாக வழங்கவும் சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் 1984–85 -ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலைகளிடம் பதிவு செய்து கரும்பு வழங்கும் கரும்பு பயிரிடுவோர்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 10 மானியமாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த மானியம் 1984–85-ஆம் ஆண்டில் ஆலையிடம் பதிவு செய்து கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கவும், மாநில அரசு பரிந்துரை செய்யப்பட்ட கரும்பு விலையான ரூ. 185 பெறுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும் எனவும் இத் தொகைக்கு கொள் முதல் வரி விலக்கு அளித்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

3.2. 1983–84 ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்து கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு ஏற்கெனவே மாநில அரசு அறிவுறுத்திய கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ. 160 உடன் டன் ஒன்றுக்கு ரூ. 20 மானியமாக வழங்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

(4) கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம்.

ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் தான் அரவை செய்யும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் கரும் மீதான மேல்வரி (செஸ்) அரசுக்கு செலுத்துகின்றன. மேற்படித் தொகை கரும்பு வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள சாலைகளை பராமரித்தல் போன்ற இனங்களுக்கு செலவழிக்கப்படுகின்றது. 1984–85-ஆம் ஆண்டில் கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு செலவிட ரூ. 175 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



(5) சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம்.

தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காகவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் தமிழக அரசு, சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தை 1979 ஆம் ஆண்டு நிறுவியது. இந்நிறுவனம் சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு சர்க்கரை உற்பத்தி பற்றி பயிற்சி அளித்து வருகிறது.

(6) தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் (டாஸ்கோ).

6.1. பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கென தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் 1974-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

6.2. இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட மூன்று சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையில் இயங்கி வருகின்றன:—

(1) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.

(2) ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எரையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(3) மதுரை சர்க்கரை ஆலை, பாண்டியராஜபுரம், மதுரை மாவட்டம்.

6.3. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையும், ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலையும் 1983–84 ஆம் ஆண்டில் தமது நிறுவிய பிழிதிறனில் முறையே 87.28 சதவீதம் மற்றும் 75.66 சதவீதம் அளவுக்கு உற்பத்தித் திறனை பயன்படுத்தி உள்ளன.

6.4. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பாண்டியராஜபுரத்தில் உள்ள மதுரை சர்க்கரை ஆலையை எடுத்துக்கொள்ள தமிழக அரசால் அவசரச் சட்டம் இயற்றப்பட்டது. இவ்வாலை தற்போது பொதுத்துறையின் கீழ் இயங்கி வருகிறது. இவ்வாலையின் இயந்திர தளவாடங்களை புதுப்பித்து ரூபாய் 485 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்ய தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

7. சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின்சாரம் தயாரிக்கும் திட்டம் (கோஜெனரேசன் பிளாண்ட்).

சர்க்கரை ஆலைகள் கரும்புச் சக்கையை எரிபொருளாகப் பயன்படுத்தி தங்கள் சொந்த உபயோகத்திற்காக மின்சாரம் தயாரிக்கின்றன. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்த கொதிகலன்களை பயன்படுத்தி இதே அளவு கரும்புச் சக்கையை எரிபொருளாகப் பயன்படுத்தி மின்சாரம் தயாரித்து அதன் மூலம் கிடைக்கும் உபரி மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முதலில் பாலக்கோட்டிலுள்ள தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நிறுவப்படும். இத்திட்டம் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு இதற்கான முதலீட்டு முறைகள் ஆய்வில் உள்ளன.

8. வேலை வாய்ப்பு.

சர்க்கரைத் தொழில் பெருமளவில் நேரடி வேலைவாய்ப்பு அளிப்பதோடு சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு வழங்கி வருகின்றது. தமிழகத்தில் தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளில் சுமார் 18,500 பேர் நேரடிப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.



இணைப்பு.

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன் அளவு, பிழிந்த கரும்பின் அளவு, உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு மற்றும் சராசரி சர்க்கரை கட்டுமானம் பற்றிய விவரம்.

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1983-84 நாளொன்றுக்கு பிழிதிறன். | 1982–83. பிழியப் பட்ட கரும்பின் அளவு. | 1982–83. உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | 1982–83. சராசரி சர்க்கரை கட்டு மானம். | 1983–84. பிழியப் பட்ட கரும்பின் அளவு. | 1983–84. உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | 1983–84. சராசரி சர்க்கரை கட்டு மானம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) (டன்களில்). | (3) (டன்களில்). | (4) (டன்களில்). | (5) (விழுக்காடுகளில்). | (6) (டன்களில்). | (7) (டன்களில்). | (8) (விழுக்காடுகளில்). |
| (அ) கூட்டுறவுத் துறை— | | | | | | | |
| 1 ஆம்பூர் .. | 2,200 | 3,08,728 | 30,765 | 9.97 | 1,15,034 | 11,831 | 10.29 |
| 2 மதுராந்தகம் .. | 1,750 | 3,33,199 | 30,274 | 9.09 | 2,75,316 | 25,900 | 9.41 |
| 3 அமராவதி .. | 2,000 | 3,31,813 | 29,401 | 8.86 | 1,13,326 | 11,588 | 10.23 |
| 4 சேலம் .. | 2,500 | 5,87,299 | 52,237 | 8.89 | 3,01,665 | 26,673 | 8.84 |
| 5 கள்ளக்குறிச்சி .. | 2,000 | 3,14,455 | 28,172 | 8.96 | 2,04,015 | 17,875 | 8,76 |
| 6 நேஷனல் .. | 1,500 | 3,02,565 | 27,791 | 9.19 | 1,80,277 | 17,348 | 9.62 |
| 7 தர்மபுரி .. | 1,250 | 2,57,267 | 25,249 | 9.81 | 1,65,608 | 17,884 | 10.80 |
| 8 வேலூர் .. | 1,250 | 2,68,299 | 22,598 | 8.42 | 2,01,062 | 19,802 | 9.85 |
| 9 திருப்பத்தூர் .. | 1,250 | 2,01,813 | 18,352 | 9.09 | 59,067 | 5,715 | 9.68 |
| 10 செங்கல்ராயன் .. | 1,250 | 2,11,986 | 19,007 | 8.97 | 2,31,032 | 21,612 | 9.35 |
| 11 திருத்தணி .. | 1,250 | புதிய ஆலை—அரைவையை ஆரம்பிக்கவில்லை. | | | 4,345 | 186 | 4.29 |
| கூட்டுறவுத் துறை மொத்தம். | 18,200 | 31,17,424 | 2,83,846 | 9.11 | 18,50,747 | 1,76,414 | 9.54 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ஆ) தனியார் துறை— | | | | | | | |
| 12 இ.ஐ.டி. பாரி .. | 4,000 | 5,56,020 | 46,635 | 8.39 | 3,30,076 | 27,952 | 8.47 |
| 13 டெக்கான் .. | 1,850 | 4,24,633 | 34,677 | 8.17 | 1,54,610 | 12,842 | 8.31 |
| 14 சவுத் இந்தியா .. | 2,700 | 3,59,570 | 30,187 | 8.40 | 2,39,033 | 19,989 | 8.36 |
| 15 அருணா .. .. | 4,000 | 5,83,381 | 55,164 | 9.46 | 5,82,450 | 55,436 | 9.52 |
| 16 சக்தி .. .. | 4,000 | 8,03,716 | 79,295 | 9.87 | 3,39,704 | 34,375 | 10.12 |
| 17 கோத்தாரி .. .. | 2,000 | 3,00,464 | 27,098 | 9.02 | 2,64,486 | 23,870 | 9.03 |
| 18 திரு ஆரூரான் .. | 2,000 | 3,05,994 | 27,856 | 9.10 | 2,69,269 | 24,365 | 9.05 |
| 19 பொன்னி .. | 1,250 | புதிய ஆலை—அரைவையை ஆரம்பிக்கவில்லை. | | | 42.556 | 3.854 | 9.06 |
| தனியார் துறை மொத்தம். | 21,800 | 33,33,778 | 3,00,912 | 9.02 | 22,22,184 | 2,02,683 | 9.12 |
| (இ) பொதுத்துறை— | | | | | | | |
| 20 தஞ்சாவூர் .. | 1,250 | 2,03,837 | 18,624 | 9.14 | 1,87,560 | 16,662 | 8.88 |
| 21 பெரம்பலூர் .. | 1,250 | 2,28,644 | 22,106 | 9.67 | 1,62,670 | 15,352 | 9.44 |
| 22 மதுரா .. .. | 800 | 1,09,778 | 7,679 | 7.00 | 4,427 | 345 | 7.80 |
| பொதுத்துறை மொத்தம். | 3,300 | 5,42,259 | 48,409 | 8.92 | 3,54,657 | 32,359 | 9.14 |
| (ஈ) மைய அரசின் நிர்வாகத்தில் உள்ளது— | | | | | | | |
| 23 காவேரி .. .. | 1,250 | 2,08,997 | 17,834 | 8.53 | 1,36,498 | 12,892 | 9.45 |
| மொத்தம் .. | 1,250 | 2,08,997 | 17,834 | 8.53 | 1,36,498 | 12,892 | 9.45 |
| ஆக மொத்தம் .. | 44,550 | 72,02,458 | 6,51,001 | 9.04 | 45,64,086 | 4,24,348 | 9,29 |



## தமிழ் நாடு பீங்கான் நிறுவனம் (டாசல்).

இம் மாநிலத்தில், பீங்கான் தொழிலின் ஒருமித்த வளர்ச்சிக்காக, பீங்கான் சம்பந்தப்பட்ட 8 தொழிற் பிரிவுகளைக் கொண்டு தமிழ் நாடு பீங்கான் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இத் தொழிற் பிரிவுகள் பெரும்பாலும் தென் ஆற்க்காடு மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில் அமைந்துள்ளன. இந் நிறுவனத்தின் தொழிற்பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு பொருட்கள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| தொழிற் பிரிவுகள். | உற்பத்தி செய்யப்படும் பொருட்கள். |
|---|---|
| (அ) வர்த்தகப் பிரிவுகள் :— | |
| 1. டாசல் பீங்கான் தொழிலகம், விருத்தாசலம். | துப்புரவு சாதனங்கள், பீங்கான் கோப்பை, தட்டு வகை மற்றும் பீங்கானிலான மின் காப்புப் பொருட்கள். |
| 2. டாசல் கற்குழாய் தொழிலகம், விருத்தாசலம். | கற்குழாய்கள் மற்றும் அதன் சிறப்பு வகைகள். |
| 3. டாசல் இயந்திரச் செங்கற் சூளை, திருமழிசை. | கம்பி அறுவை வகை செய்கற்கள் (Wirenet Bricks). |
| (ஆ) பீங்கான் தொழில் வளர்ச்சி | நோக்குடைய பிரிவுகள்— |
| 4. பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாசலம் (முகவர் அடிப்படையில் நடத்தப்படுவது). | பீங்கான் சிறு தொழில் முனைவோர்களுக்கு சலுகை வாடகையில் தொழிற் கூடங்களை அளித்தல். |
| 5. டாசல் பீங்கான் பணிவசதி நிலையம், விருத்தாசலம். | விருத்தாசலத்திலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள பீங்கான் சிறு தொழில் உற்பத்தியாளர்களுக்குப் பதப்படுத்தப்பட்ட களிமண், வண்ணம் மற்றும் எரியூட்டு வசதி செய்து தருதல். |
| (இ) பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு நோக்கில் நடத்தப்படும் பிரிவுகள்— | |
| 6. டாசல் கலைப் பொருள் நிலையம், விருத்தாசலம். | கலைவண்ணமுள்ள மட்பாண்டங்கள். |
| 7. டாசல் பீங்கான் மையம், ஓமலூர். | பல்வகை வடிவமைப்புள்ள ஊறுகாய் ஜாடிகள் மற்றும் வெப்பந்தாங்கி செங்கற்கள். |

[1985 ஜூலை 11

2. விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற்பேட்டை, பீங்கான் சிறு தொழில் முனைவோர்களுக்கு குறைந்த வாடகையில் தொழிற் கூடங்களை அளிக்கிறது. இத் தொழில் முனைவோர்களுக்கு பதப்படுத்தப்பட்ட மூலப் பொருட்களை வழங்குவது மூலமாகவும் அவர்களது உற்பத்திப் பொருட்களை நவீன சுரங்கச் சூளையில் சுட்டு கொடுப்பது மூலமாகவும் அந்த பகுதியில் பீங்கான் தொழில் வளர்ச்சி பெற பீங்கான் பணி வசதி நிலையம் பேருதவி புரிகிறது.

3. டாசல் நிறுவனத்தால் பயிற்சி நோக்கில் நடத்தப்படும் இரு தொழில் பிரிவுகள், குறைந்த படிப்பறிவுடைய கிராமப்புற இளைஞர்களுக்கு, பீங்கான் பொருட்களின் மாதிரி வடிவமைப்பு மற்றும் உற்பத்தி பற்றிய தொழில் நுணுக்க உத்திகளில் பயிற்சி அளித்து வருகிறது. ஓமலூரில் உள்ள பீங்கான் மையத்தில் உற்பத்தி செய்யப்படும் ஊறுகாய் ஜாடிகளும், திருமழிசை இயந்திரச் செங்கற் சூளையில் உற்பத்தியாகும் கம்பி அறுவை வகை செங்கற்களும் தரத்தில் சிறந்தவையாக பெயர் பெற்றுள்ளன.

4. அண்டை மாநிலங்களில் விற்பனையை விரிவாக்கும் நோக்கத்துடன் டாசல் நிறுவனம் சென்னை மற்றும் பெங்களூரிலும் எர்ணாகுளத்திலும் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.

டாசல் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் நியாயமான விலையுடன் தரத்தில் சிறந்தவையாகவும் இருப்பதால் இம் மாநிலத்திலும் வெளி மாநிலங்களிலும் அங்காடியில் பெரும் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. இந் நிறுவனம் சுமார் 1,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் 1,000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

5. 1983–84 ஆம் ஆண்டில் டாசல் நிறுவனத்தின் அனைத்துத் தொழிற் பிரிவுகள், மொத்தம் ரூ 206.58 இலட்சம் மதிப்புடைய பொருட்களை உற்பத்தி செய்தன. 1984–85-ல் அவற்றின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 252.14 இலட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டில் கடும் மழை, மின் வெட்டு, நிலக்கரி விநியோகத்தில் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகள் ஏற்பட்ட போதிலும், இந் நிறுவனம் தன் உற்பத்தியளவை நிலை நிறுத்தியுள்ளது.

6. 1983–84 ஆம் ஆண்டில் டாசல் நிறுவனத்தின் நிகர இழப்பு ரூ. 49.92 இலட்சம் ஆகும். 1984–85 ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தின் இயக்கம் ரூ. 43.43 இலட்சம் இழப்பில் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1985 ஜூலை 11]

ரூபாய் 30 இலட்சம் செலவில், விருத்தாசலத்திலுள்ள கற்குழாய் தொழிலகத்தில் எரியூட்டு செலவைக் குறைத்து உற்பத்தியை நிலைநிறுத்த தொடர் அடுக்கு சூளை (continuous chamber kiln) ஒன்று நிர்மாணிக்க டாசல் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத் திட்டம் டாசல் நிறுவனத்தின் இழப்புகளை பெருமளவில் குறைக்கும் நோக்குடையது.

7. டாசல் நிறுவனத்தின் எதிர் காலத் திட்டங்கள்.—டாசல் நிறுவனத்தின் இயக்கத்தை செம்மைப்படுத்தவும் கிராமப்புறங்களில் அதிக வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் பீங்கான் தொழில்களை தொடங்கவும் 7-வது ஐந்தாண்டுத்திட்டத்தில் (1985–90) கீழ்க்கண்ட திட்டங்களை ரூ. 250 லட்சம் அரசு உதவியுடன் நிறைவேற்ற உத்தேசித்துள்ளது:

| வரிசை எண்ணும் திட்டமும். | தேவைப்படும் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1 தொழிற்பேட்டை, திருமழிசை .. .. | 75 |
| 2 தொழிற் பேட்டை, ஓமலூர் .. .. | 75 |
| 3 பீங்கான் தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்களை உற்பத்தி செய்தல் .. .. | 5 |
| 4 மின்னணுவியல் சார்பான பீங்கான் பொருட்கள் உற்பத்தி செய்தல் .. .. | 5 |
| 5 சிறு பீங்கான் சாமான்கள் பிரிவை நவீனப்படுத்துதல் .. .. .. .. .. | 10 |
| 6 பீங்கான் இழைகளைத் தயாரித்தல் .. | 5 |
| 7 திருமழிசையில் உள்ள செங்கற் தொழிற்சாலையை சுவர் ஓடு தயாரிக்கும் தொழிலகமாக (கூட்டுத்துறையில்) மாற்றுதல் .. | 5 |
| 8 பெரியார் மாவட்டத்தில் கூட்டுத்துறையில் வெள்ளை தரை ஓடு, மற்றும் சுவர் ஓடு தயாரித்தல் .. .. | 70 |
| மொத்தம் .. | 250 |

மேற்கண்ட திட்டங்களைப் பற்றிய விவரங்கள் கீழே சுருக்க மாக தரப்பட்டுள்ளன:

(1) திருமழிசையில் ஏற்கெனவே உள்ள நிலத்தில் ரூ. 75 லட்சம் செலவில் ஒரு தொழிற்பேட்டை உருவாக்க திட்டமிடப் படுகிறது. இதில் தொழில் முனைவர்களுக்கு பணிவசதி செய்து கொடுக்க, ஒரு பணிவசதி நிலையத்துடன் 10 தொழிற்கூடங்கள் கட்டப்படவுள்ளது. ஓடுகள், பிளாக்குகள் ஹூருடிகள் போன்ற. கனரக களிமண் பொருள்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும். இதனால் சுமார் 500 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்.

சேலம் மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பகுதியாகிய ஓமலூரில் மற்றொரு தொழிற்பேட்டை ரூ. 75 இலட்சத்தில் தொடங்கப்படுகிறது. இத் தொழிற்பேட்டை பீங்கான் பொருள் களையும் சூளைக் கற்களையும் சிறப்பு வகை ஜாடிகளையும் செய் வதற்கு வசதியாகவுள்ள தொழிற்கூடங்களைப் பெற்றதாக இருக்கும். இத் தொழிற்பேட்டை சுமார் 250 பேர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும்.

(2) மேலே உள்ள பட்டியலில் இனம் 3, 4 மற்றும் 6 ஆகிய வற்றில் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் புதிய முயற்சிகளாகும். பீங் கான் (செராமிக்) தொழில் நுணுக்கத்தில் முன்னேறியுள்ள மற்ற நாடுகளிலிருந்து தொழில் நுணுக்க செய்முறைகளை தெரிந்து கொள்வதற்கும் கூட்டுமுறையில் தொழில் தொடங்குவதற்கான தகுதிகள் வாய்ந்த கூட்டாளிகளைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டும் திட்ட அறிக்கையை தயார் செய்வதற்கு வேண்டிய நிதி தனியாக ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

(3) விருத்தாசலத்தில் ஏற்கெனவேயுள்ள பீங்கான் தொழில் சிறு பொருள்கள் பகுதியை,ஆதாயம் தரும் வகையில் முன்னேற்றம் செய்வதற்காக,தற்போது செய்யப்படும் பீங்கான்பொருள்களின் தரத்தைஉயர்த்த மற்றும் அழகுபடுத்த, மேற்கொண்டு இயந்திரங் கள் வாங்குவதற்காக ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீடுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

(4) திருமழிசை இயந்திர செங்கற்தொழிற்சாலையை பெரு மளவு இழப்பிலிருந்து மீட்கும் வகையில்,ஏற்கெனவேயுள்ள நிலம், கட்டிடம் மற்றுமுள்ள எந்திர வசதிகளை பயன்படுத்திக் கொண்டு கூட்டுத் துறையில் பளிங்கு சுவர் ஓடுகள் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(5) வெளி நாடுகளில் தரையில் பதிக்க புதுவகை ஓடுகளான பளிங்கு ஓடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இது பல்வண்ண ஓடு களின் (மொசைக்) முன்னேற்றமாகும். வெளி நாட்டு தொழில் நுணுக்கத்துடன் கூட்டுமுறையில் இப் பளிங்கு ஓடுகளை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



8. மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், டாசல் நிறுவனத்தின் இயக்கம் விரிவாக்கப்பட்டு அதனால் இந் நிறுவனம் வணிக முறையில் இயங்குவதற்கு ஏதுவாகும். என்றும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பையும் அதிகரிக்கும் என் றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.

நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையிலும், அவைகளை கலைப்பதற் கான நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும், தொழிலாளர் களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு அளிப்பதற்காகவும், 1969ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரணம் தேவைப்படும் நிறு வனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் விதிகளின்கீழ் இந் நிறு வனங்களை விடுப்பு நிறுவனங்களாக அரசு அறிவிக்கின்றது. விடுப்பு நிறுவனங்கள் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் உதவியுடன் மீண்டும் புத்துயிர் பெற்று இயங்குவதற்கு இச் சட்டம் வழி செய்கிறது. இச் சட்டத்தின்கீழ் விடுப்பு நிறுவனங் களுக்கு கடன் கொடுத்தவர்களின் பிடியிலிருந்து சிறிது காலத் திற்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மற்றும் தொழிலாளர் களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. மேலும் விடுப்பு நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டவை பின் வருமாறு :—

திருவாளர்கள் :

(1) ஓமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.

(2) தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட் (முன்னாள் லாஸ்கோஸ்டீல்ஸ் லிமிடெட்), தர்மபுரி.

(3) சதர்ன் ஸ்விச்கியர்ஸ் லிமிடெட், சென்னை.

(4) சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற் சாலை, சேலம்.

(5) தமிழ்நாடு எலக்ரானிக்ஸ் லிமிடெட், ஓசூர்.

(6) மதராஸ் மெஷின் டூல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(7) அருணா லெதர்ஸ் அண்டு எக்ஸ்போர்ட் லிமிடெட், சென்னை.

(8) காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை.

(9) சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாத புரம்.

(10) மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை.

(11) பிளாஸ்டிக் ரெஸின் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், சாருபுரம், திருநெல்வேலி,

(12) மாருதி கிரிஸ்ட்டல்ஸ் சால்ட் கம்பெனி லிமிடெட், சென்னை.
(13) சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ்லிமிடெட்,புதுக்கோட்டை
(14) குன்னியூர் பேப்பர் அண்டு போர்ட் மில்ஸ் லிமிடெட், சென்னை.
(15) மஹாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிடெட்,மதுரை.
(16) ஜெயலட்சுமி மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
(17) ஸ்ரீஹரி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்.
(18) தி ஜெனரல் ரிப்லெக்ட்ர்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை.

பின்வரும் நிறுவனங்களுக்கு அவற்றின் நடைமுறை மூலதனத்திற்காக வங்கிகள் வழங்கிய கடன்களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| (1) சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஒர்க்ஸ் லிமிடெட், சேலம். | 14.35 |
| (2) மது ஸ்பின்னிங்ஸ் அண்டு வீவிங்ஸ் மில்ஸ், கோயம்புத்தூர். | 30.00 |
| (3) மீனாட்சி மில்ஸ், மதுரை .. | 56.00 |
| (4) பின்னி லிமிடெட், சென்னை .. | 1,00.00 |
| (5) செயலட்சுமி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், சிங்கநல்லூர். | 30.00 |
| (6) ஜோதி மில்ஸ், கோயம்புத்தூர் .. | 50.00 |

நலிவுற்ற தொழிற் பிரிவுகள் விற்பனை வரி பாக்கிகளையும் பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும் சுலப தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத் தொழிற் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருட்களை, மத்திய மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு விற்பனை செய்ய அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கிறது. மேலும், இதற்கான விற்பனை விலைச் சலுகைகளையும் அளிக்கின்றது.

மைய அரசு செய்த முதலீடுகள்.

தமிழ்நாட்டில் மைய அரசு செய்த முதலீடுகள் மிகவும் குறைவு. தமிழ்நாட்டில் மேலும் பல மத்திய அரசுத் திட்டங்களை நிறுவவேண்டுமென மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

1. புதிய திட்டங்கள் :

நவீன போர் டாங்கிகளை தயாரிப்பதற்காக ஆவடியில் உள்ள கனரக டாங்கி தொழிற்சாலை தனது தொழிற்சாலையை விரிவாக்க கருதியுள்ளது. நவீன போர் டாங்கிகளை சோதித்துப்



பார்ப்பதற்காக செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டத்தில் 3,761 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை தமிழ்நாடு அரசு மத்திய அரசிற்கு இலவசமாக கொடுத்துள்ளது.

நாட்டில் இரயில் பெட்டி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன், ரு. 47.60 கோடி செலவில் நவீன உற்பத்தி திட்டம் ஒன்றை சென்னை இணைப்பு இரயில் பெட்டி தொழிற்சாலை நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாட்டில் ரூ. 30 கோடி செலவில் மின்னணுவியல் தொழிற்சாலை ஒன்றை அமைக்க பெங்களூர் பாரத் மின்னணுவியல் நிறுவனம் கருதியுள்ளது. நந்தம்பாக்கத்தில் இதனை அமைப்பதற்காக 49.99 ஏக்கர் நிலம் அந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திருச்சி படைக்கலத் தொழிற்சாலைக்கருகே ரூ. 70 கோடி செலவில் ஹெவி அலாய் பெனிட்டிரேடர் பிராஜக்ட் அமைக்க மத்திய அரசு பாதுகாப்பு அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இத் தொழிற்சாலைக்கு வேண்டிய நிலத்தை இலவசமாக வழங்க மாநில அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

கனரக ஆயுதம் தாங்கி ஊர்திகளை தயாரிக்க படைக்கலத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க மத்திய அரசு கருதியுள்ளது. இத் தொழிற்சாலையை அமைப்பதற்கு தகுந்த இடம் ஒன்றை தெரிந்தெடுக்க மத்திய அரசு குழு ஒன்றை நியமித்துள்ளது. தருமபுரியில் ஒன்றும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஒன்றுமாக இரண்டு இடங்களுக்கான விவரங்கள் இக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிற்கு 1984 ஜனவரியில் மேற்படி குழு வந்து இந்த இரண்டு இடங்களை பார்வையிட்டு மைய அரசுக்கு அறிக்கையை கொடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது. அதன் முடிவு எதிர்ப்பார்க்கப்படுகிறது.

சேலம் உருக்காலையை ஒருங்கிணைந்த உருக்காலையாக விரிவு படுத்துவதற்கும் மத்திய அரசு வலியுறுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசின் பதில் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

சென்னைக்கு அருகிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கருகில் நாப்தா கிராக்கர் பிரிவு ஒன்றை அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சென்னை சுத்திகரிப்பு ஆலை விரிவுபடுத்தப்பட்ட பிறகு அங்கு கிடைக்கும் நாப்தாவை இப் பிரிவு பயன்படுத்தலாம். பெட்ரோ கெமிக்கல் பொருள்களை தயாரிப்பதற்குப் பல தொழிற்சாலைகளை நிறுவத் தேவையான பொருள்களை வழங்கும் இது குறித்து மத்திய அரசின் முடிவு எதிர்ப்பார்க்கப்படுகிறது.

II. தற்போதுள்ள தொழிற்சாலைகள்—சென்னை பெரம்பூர் இணைப்புப் பெட்டி தொழிற்சாலை :

சுவிட்ஜர்லாந்து, ஜூரிச், சீலிரியன் திருவாளர்கள் சுவிஸ் கார், மற்றும் எலிவேட்டர் தயாரிப்பு நிறுவனத்தின் உடனுழைப்புடன் உருக்கி பற்றவைக்கப்பட்ட இலேசான எடையுள்ள ஆண்டி-டெலஸ்கோபிக் கட்டுமான அமைப்புடன் கூடிய இணைப்புப் பெட்டிகளை தயாரிப்பதற்காக சென்னை இணைப்புப் பெட்டி தொழிற்சாலை 1955-ல் அமைக்கப்பட்டது.

இந்திய இரயில்வேயின் பல்வேறு தேவைகளை இத் தொழிற்சாலை நிறைவு செய்கிறது. பிற நாடுகளுக்கும் இரயில் பெட்டிகளை ஏற்றுமதி செய்கிறது.

நிறுவனத் திறன் 800 பெட்டிகள் என்றிருக்க இணைப்புப் பெட்டி இரயில் தொழிற்சாலை 1984-ல் 817 பெட்டிகளை தயாரித்தது. நடப்பாண்டில் 825 பெட்டிகளை தயாரிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதன் மதிப்பீட்டுச் செலவு ரூ. 87 கோடியாகும். இத் தொழிற்சாலையில் 15,300 பேருக்கும் அதிகமான தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

இரயில் பெட்டித் தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 1,000 பெட்டிகள் தயாரிப்பதற்கென தற்போது கருதப்பட்டுள்ளது. அதற்கிணங்க 1984-85 இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 47.60 கோடி செலவில் நவீன திறன் உற்பத்தி திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், நெய்வேலி :

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 14-11-1956 அன்று தொடங்கப்பட்டது. இது ஒருங்கிணைந்த தொழில் தொகுதி ஆகும். இதில் பின்வரும் தொழிற் பிரிவுகள் அடங்கும் :—

(அ) திறந்த வகையிலான பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்.

(ஆ) அனல் மின் நிலையம்.

(இ) உரத் தொழிற்சாலை.

(ஈ) நிலக்கரி பாளங்கள் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலை.

(உ) களிமண் சுத்தப்படுத்தும் ஆலை.

இச் சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரி அனல் மின் நிலையத்திற்கும், நிலக்கரி கட்டித் தயாரிப்பு கரிம் ஆலைக்கும் மூலப் பொருளாக உள்ளது. இரசாயன ஆலைகளில் பயன்படுத்தத் தேவைப்படும் நீராவியை உற்பத்தி செய்யவும் மூலப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது. அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தி நெய்வேலி பழுப்பு





நிலக்கரி நிறுவனத்தின் தேவைக்கு அனுப்பப்பட்ட பின்னர் தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் தொகுப்புக்கு அனுப்பப்படுகிறது. களிமண் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை பழுப்பு நிலக்கரி சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் கச்சா வெள்ளை களி மண்ணை செய்முறைப்படுத்தி இதில் ஒரு பகுதியை தூளாக்கி தொழிற்சாலை பயனுக்கு உகந்ததாக விற்பனை செய்கிறது. லீக்கோ சுட்ட நிலக்கரி ஆகியவை தொழில் எரிபொருளாக விற்பனை செய்யப்படுகின்றன.

தொழிற்சாலையின் நிறுவு திறன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| (அ) சுரங்கம் I | .. | ஆண்டொன்றுக்கு 6.5 மில்லியன் டன். |
| (ஆ) அனல் மின் நிலையம் I | | 600 மெ. வா. |
| (இ) உரத் தொழிற்சாலை | .. | ஆண்டொன்றுக்கு 129,200 டன் யூரியா. |
| (ஈ) நிலக்கரி பாளம் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலை. | | 262,000 டன்கள் கல்கரி. |
| (உ) களிமண் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை. | | சுத்தப்படுத்தப்பட்ட 6,000டன் |

இந் நிறுவனத்தின் பங்குத் தொகை ரூ. 633.82 கோடியாகும். இந்நிறுவனம் மத்திய அரசிடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் முறையே ரூ. 50.71 கோடியும், ரூ. 0·79 கோடியும் கடனாகப் பெற்றுள்ளது.

1984-85-க்கு தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 2,100 மிலியன் யூனிட்டுகள் மின்சக்தி வழங்குவது 13-12-1984 அன்று பூர்த்தியாகியது. அதாவது திட்டமிட்ட 108 நாட்களுக்கு முன்னதாகவே வழங்கப்பட்டுவிட்டது. முந்தைய சாதனையைவிட 9 நாட்கள் முன்னதாகவே வழங்கப்பட்டது.

1984 ஏப்ரல் முதல் 1984 டிசம்பர் வரை உள்ள கால அளவில் 150,044 டன் கல்கரி உற்பத்தி செய்தது. கடந்த 15 ஆண்டுகளில் நிகரான கால அளவில் தயாரித்ததைக் காட்டிலும் இது அதிகமாகும்.

முந்தைய ஆண்டில் நிகரான கால அளவில் இருந்த 99.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை உள்ள கால அளவில் லிக்னைட் உற்பத்தி வகையில் இச் சுரங்கம் 107 சதவீதம் பயன்படுத்தியது. மேற்பரப்பு அகற்றல் வகையில் முந்தைய ஆண்டில் 102.9 சதவீதம் பயன்படுத்தியது என்பதற்கு மாறாக 114.2 பயன்படுத்தியது.

முந்தைய ஆண்டில் நிகரான கால அளவில் உள்ள 113 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை உள்ள கால அளவில் அனல் மின் நிலையம் 117 சதவீதம் உற்பத்தித் திறனை பயன்படுத்தியது. முந்தைய ஆண்டில் 73.16 சதவீதம் மின்சுமை இருந்ததற்கு மாறாக இந்த ஆண்டு 75.76 சதவீதம் மின் சுமையாக இருந்தது.

சுரங்கம் I, அனல் மின் நிலையம் I ஆகியவை தேசீய உற்பத்தித் திறன் பரிசை பெற்றன. உரத் தொழிற்சாலை தேசீய உற்பத்தித்திறன் குழுவிடமிருந்து 1983 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு பரிசைப் பெற்றது.

கட்டுமான திட்டங்கள் :

பின்வரும் திட்டங்கள் குறித்த பணி நடந்தேறி வருகிறது :—

(அ) ஆண்டொன்றுக்கு 4.7 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி பெறும் வகையில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல் :

(ஆ) 630 மெகா வாட். உற்பத்தி செய்யும் இரண்டாவது அனல் மின் நிலையம் தொடங்குதல்.

புதிய திட்டங்கள் :

பின்வரும் திட்டங்கள் குறித்த தொடக்க அறிக்கைகள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன : (அ) சுரங்கம் I விரிவாக்கம்—6.5 முதல் 10.5 மில்லியன் டன்களாக அதிகரித்தல் ; (ஆ) அனல் மின் நிலையம் I விரிவாக்கம்—உற்பத்தித் திறனை 720 மெ. வாட்டாக உயர்த்த 120 மெ. வாட் உற்பத்திப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல் ; (இ) உயர் வெப்ப கல்கரி இயந்திரம்—ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் கல்கரி தயாரித்தல் ; (ஈ) சுரங்கம் III—ஆண்டொன்றுக்கு 11.0 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி ; (உ) அனல் மின் நிலையம் III—1,500 மெ. வா. (3X500 மெ. வா.) ; (ஊ) அனல் மின் நிலையம் II இரண்டாம் நிலைக்கும் அனல் மின் நிலையம் IIIக்கும் 400 கே. வி. கம்பி டிரான்ஸ்மிசன் கம்பிகள் அமைத்தல்.

மேற்சொன்ன திட்டங்களைச் செயல்படுத்தி 7 ஆவது மற்றும் 8-ஆவது திட்டக் காலத்தில் ரூ. 3,626 கோடி என்ற மாபெரும் அளவில் முதலீடு செய்ய வேண்டிவரும்.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம், சென்னை :

டெலிபிரின்டர்களையும் துணைச் சாதனங்களையும் தயாரிப்பதற்காக இத்தாலியைச் சேர்ந்த திருவாளர்கள் Ing. C. Olivotti நிறுவனத்தின் உடனுழைப்புடன் 1960 டிசம்பரில் நிறுவனம்



அமைக்கப்பட்டது. தற்போது இந்த நிறுவனம் ஆண்டொ
றுக்கு 8,500 டெலிபிரிண்டர்களை தயாரிக்கும் திறன் கொண்ட
தாக உள்ளது. தபால்-தந்தித்துறை பாதுகாப்புப் படை, இ
ரயில்வே, விமானப் போக்குவரத்துத்துறை, செய்தி நிறுவனங்க
ஆகியவற்றின் தேவையை இது நிறைவு செய்கிறது.

இந் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 380 இலட்
சமாகும். இதில் ரூ. 298 இலட்சத்தை மத்திய அரசு வழங்
கியது. 1973, 1982 ஆண்டுகளில் இந்த நிறுவனம் ரூ. 6
இலட்சம் அளவிற்கு ஊதியத் தொகை பங்குகளாக வழங்கியது
31-3-1984 அன்றுள்ளவாறு இத் திட்டத்தில் பயன்படுத்த
பட்ட மூலதனம் ரூ. 1,450 இலட்சமாகும்.

1983-84-ல் இந்த நிறுவனம் 8,147 டெலிபிரிண்டர்கள் உ
பத்தி செய்தது. 1983-84இல் இது ரூ. 80.07 இலட்சம் மதி
புள்ள உதிரி பாகங்களை தயாரித்தது.

1984 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 5,444 டெலிபிரிண்ட
இயந்திரங்களை தயாரித்துள்ளது. ரூ. 61.54 இலட்சம் மதி
புள்ள உதிரிப் பாகங்களை அனுப்பியுள்ளது.

அதன் பல்திறப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக இ
நிறுவனம் மின்சாரத் தட்டச்சு இயந்திரத்தையும் மின்னணுவிய
டெலிபிரிண்டர்களையும் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.

இத்தாலியைச் சேர்ந்த திருவாளர்கள் ஒலிவெட்டி நிறுவன
திடமிருந்து வரப் பெற்ற 400 எஸ்.கே.டி. தட்டச்சு இயந்திர
திலிருந்து இந்த நிறுவனம் 400 மின்சாரத் தட்டச்சு இயந்திரத்
உருவாக்கியது. மின்சாரத் தட்டச்சு இயந்திரங்களின் விற்பனை
விலையைக் குறைக்கும்பொருட்டு, இந்த நிறுவனம் உற்பத்தி
உள்நாட்டிலேயே தொடங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

மின்னணு டெலிபிரிண்டர்களைத் தயாரிப்பதற்காக தி
வாளர்கள் சாகெம் (பிரான்சு) (Mis S: gem) என்ற நிறுவன
துடன் உடனுழைப்பு ஒப்பந்தத்தை அது முடித்துக் கொ
டுள்ளது. ஆண்டொன்றுக்கு 8,000 மின்னணு டெலிபிரிண்ட
களை தயாரிப்பதற்கான இசைவுக் கடிதம் இந்த நிறுவனத்திற்
வழங்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டம், ஓசூரில், "சிப்காட்
தொழில் தொகுதியில் இத் திட்டம் அமைக்கப்பட உள்ளது
இதற்கு தேவையான நிலத்தை அந்த நிறுவனம் ஏற்கெனவே
கையகப்படுத்தியுள்ளது. எஸ்.கே.டி., சி.கே.டி.யிலிருந்து மி
னணு டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்வது 1985-86இ
தொடங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

[1985 ஜூலை 11

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம், உதகமண்டலம்.

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் நிறுவனம் 1960-ல் அமைக்கப்பட்டு 1967 இல் உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் மொத்த நிறுவுத் திறன் அதாவது உதகமண்டலத்திலும், சென்னை அம்பத்தூரிலும் உள்ள தொழிற்சாலைகளில் ஒருங்கிணைந்த உற்பத்தியும் பெரிய படச் சுருள்களைச் சிறிய சுருள்களாக மாற்றும் உற்பத்தியும் 15.32 மில்லியன் சதுர மீட்டராகத் தற்போதுள்ளது.

இந்நிறுவனம் நுட்பமான புகைப்படச் சுருள்களையும் காகிதத்தையும் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்தில் இரு தயாரிப்புப் பிரிவுகள் உள்ளன. இதில் முதன்மையானத் தொழில் பிரிவு உதகமண்டலத்தில் உள்ளது. இங்கு எல்லா நிலைகளிலும், புகைப்படச் சுருள், காகிதம் தயாரிக்கும் பணி நடைபெறுகிறது. இதில் மற்றொன்று சென்னைக்கு அருகில் அம்பத்தூரில் தொழிற்பேட்டையில் அமைந்துள்ளது. இதுபணி நிறைவு செய்யும் தொழிற்பிரிவு ஆகும். இங்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு எக்ஸ் கதிர் படச்சுருள், கிராபிக் ஆர்ட் படச் சுருள் ஆகியவற்றை செய்முறைப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

ஒருங்கிணைந்த உற்பத்தியில் அடங்கும் உற்பத்திப் பொருட்கள் —

(அ) திரைப்பட பாசிடிவ் படச்சுருள்-கருப்பு,வெள்ளை.
(ஆ) திரைப்பட படச்சுருள் ஒலி நெகட்டிவ்.
(இ) மருத்துவ எக்ஸ் கதிர் படச் சுருள்.
(ஈ) புகைப்படக் காகிதம்.

பெரிய படச் சுருள்களை சிறியனவாக மாற்றும் உற்பத்தியில் அடங்கும் பொருட்கள் —

(அ) திரைப்பட கலர் பாசிடிவ் படச்சுருள்.
(ஆ) அமெச்சூர் ரோல் திரைப்படச்சுருள் கருப்பு, வெள்ளை.
(இ) தொழில் எக்ஸ் கதிர் படச் சுருள்.
(ஈ) கிராபிக் ஆர்ட் படச்சுருள்.
(உ) கலர் காகிதம்.

இவை தவிர எக்ஸ் கதிர்படச்சுருள் கிராபிக் ஆர்ட் படச் சுருள் ஆகியவற்றை கழுவுவதற்காக இரசாயனப் பொருள்கள் (Developer Chemicals) தயாரிப்பதும் தயாரிப்புப் பணியின் ஒரு பகுதியாகும்.



1985 ஜூலை 11]

இந்நிறுவனத்தின் சாதனைகள் பின்வருமாறு :—

| (1) | 1983—84 ஆம் ஆண்டு கணக்கு. (2) | 1984—85 ஆம் ஆண்டில் உற்பத்தி. (3) |
|---|---|---|
| உற்பத்தி அளவு (மி.மீ. 2).. | 11,705 | 12,100 |
| மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | 8,769 | 9,826 |
| விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 8,653 | 10,000 |
| ஆதாயம் (ரூபாய் இலட்சத்தில்) | 496 | 650 |

இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 16.32 இலட்சமாகும்.

31—12—1984 ஆம் நாள் நிலவரப்படி இந்நிறுவனத்தில் 3,187 பேர் பணிபுரிகின்றனர். இவர்களில் 592 பேர் ஆதி திராவிடர், பழங்குடியினராவர். இது தவிர, சிப்பம் செய்வதற்குரியப் பொருட்கள், உயர்ரக இரசாயனப் பொருட்கள், உதிரிப் பாகங்கள் ஆகியவற்றை இந்நிறுவனத்திற்கு வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள 29 துணைத் தொழில் பிரிவுகள் மூலமாக 1,000க்கும் மேற்பட்டவர்களுக்கு மறைமுகமாக வேலை வாய்ப்பு நல்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டிற்கு 12 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்ய வேண்டும். என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க 1984 டிசம்பர் வரை 8,646 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்யப்பட்டது. அதன் மதிப்பு ரூ. 65.94 இலட்சம் ஆகும். இதே போல இக்கால அளவில் ரூ. 5,654.97 இலட்சம் விற்பனையாகியது. ஆனால், 65,33.27 இலட்சம் விற்பனை செய்யவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

ரூ. 200 இலட்சம் மதிப்பீட்டு செலவிலான கூடுதல் மேல் பூச்சு தொழில் பிரிவு முடிக்கப்பட்டு 13—1—1985 ஆம் நாளன்று செயல்படத் தொடங்கியுள்ளது. இந்நிறுவனத்திற்கு அதிகப்படியாகத் தேவைப்படும், அதாவது 1.8 மில்லியன் சதுர மீட்டர் எக்ஸ் கதிர் படச்சுருள்களை வழங்குவதற்கும் அமெச்சூர் ரோல் படச் சுருள்களை ஒருங்கிணைந்த முறையில் தயாரிக்கவும் இத் தொழில் பிரிவு உதவியாக இருக்கும். இதனால், 102 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

அனைத்து வசதிகளையும் கொண்ட முழுமையான ஆராய்ச்சி வளர்ச்சி நிலையத்தை அமைக்கும் திட்டம் குறித்த பணிக்கு ரூ. 197 இலட்சம் மதிப்பீட்டு செலவில் நடைபெற்று வருகிறது. இது 115 பேர்களுக்கு வேலை வாய்ப்பு நல்கும்.

திரைப்பட கலர் படச்சுருள் வயாரிப்புத் தொழில் பிரிவு :

பெல்ஜியத்தில் உள்ள திருவாளர்கள் ஆக்பா-கவரட் என்ற நிறுவனத்துடன் தொழில் ஒத்துழைப்புக்கு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. முதலீடு செய்வது குறித்து முடி வெடுப்பதற்காக இத்திட்டம் பற்றிய அறிக்கையை மைய அரசு தற்போது பரிசீலித்து வருகிறது.

காந்த நாடா-தயாரிப்புத் தொழிற்பிரிவு :

காந்த நாடா (Magnetic Tapes) தயாரிப்பதற்குத் தொழில் உரிமம் பெற நிறுவனம் விண்ணப்பித்துள்ள அத்திட்டத்திற்காக சாத்தியக்கூறு அறிக்கையும் மைய அரசு பரிசீலனையில் உள்ளன.

நவீன மேற்பூச்சு கருவி தயாரிப்பு நிறுவனம் :

மருத்துவ எக்ஸ் கதிர் படச்சுருள் தயாரிப்புத் தொழில் பிரி வில் திறனை அதிகரிப்பதற்குத் தொழில் உரிமம் பெற இந்த நிறுவனம் விண்ணப்பித்துள்ள விண்ணப்பம் மைய அரசின் பரி சீலனையில் உள்ளது.

பாரத கனரக மின் நிறுவனம், திருச்சிராப்பள்ளி :

திருச்சியில் உள்ள உயர் அழுத்த கொதிகலன் தொழிற்சாலை 1960 ஆம் ஆண்டு தொடக்கத்தில் உருவாக்கப்பட்டு 1965 இல் உற்பத்தியை தொடங்கியது. தொடக்கத்தில் 24.5 கோடி முத லீடு செய்யப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 750 மெகாவாட் திறனுள்ள கொதிகலன் உதிரிப்பாகங்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் இந்த தொழிற்சாலை வடிவமைக்கப்பட்டது. இது இந்திய-செக்கோஸ்லோவியா பொருளாதாரக் கூட்டுறவு ஒப்பந்தத்தின் கீழ், செக்கோஸ்லோவியா உடனுழைப்புடன் தொடங்கப்பட்ட தாகும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் இதன் உற்பத்தித் திறனை எய் தியது. கூடுதலாக ரூ. 4.08 கோடி, ரூ. 17.86 கோடி முதலீடு செய்து முறையே ஆண்டொன்றுக்கு 1,100 மெகாவாட், 2,500 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் விரிவாக்கத் திட் டங்கள் வகுக்கப்பட்டன.

விரிவாக்கத்தின் அடுத்த கட்டப்பணி ரூ. 35.48 கோடி செல வில் அண்மையில் முடிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை, ஆண்டொன்றுக்கு 4,000 மெகாவாட் உற்பத்தித் திறனை மேற் கொள்ளும்.





திருச்சியில் தொழிற்சாலை பயனுக்காக அடைப்பான்களை (வால்வுகளை) தயாரிப்பதற்கான ரூ. 5.67 கோடி முதலீட்டுத் திட்டத்துடன் அதிகரிக்கப்பட்டு வருகிறது.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பதிலாக அதற் கிணையாக வேறு பொருட்களை தயாரிக்கும் ஒரு முயற்சியாக ரூ. 58.2 கோடி முதலீட்டுடன் 40,000 டன் ஆண்டு உற்பத்தித் திறனுடன் இணைப்பு இடைவெளியற்ற உருக்கு குழாய் தொழிற் சாலை நிறுவப்பட்டுள்ளது. இது இப்போது வணிக உற்பத் தியைத் தொடங்கியுள்ளது.

திருச்சியிலுள்ள பாரத் கனரக மின் நிறுவனத்தில் 16,000-க் கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் திருச்சி பாரத் கனரக மின் நிறுவனத்தின் பயிற்சி நிலையம் மனித சக்தியை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பல்வேறு தொழில்களில் அடிப்படைத் திறனைப் பெற்றுள்ள இளைஞர் களுக்கு பாரத் கனரக மின் நிறுவனத்தில் பணியை மேற்கொள்ள பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையம் மாநிலத்தில் உள்ள சிறந்த பயிற்சி நிறுவனம் என்று முடிவு செய்யப்பட் டுள்ளது.

துணைத் தொழில் சிறு தொழிற்பேட்டை 1969 இல் தொடங்கப்பட்டது. இப்போது பாரத் கனரக மின் நிறுவனத் தின் துணைத் தொழில்-சிறு தொழில் பிரிவுகளில் சுமார் 12,000 பேர் பணிபுரிகின்றனர். ஆனால், 1969 இல் 200 பேர் மட்டுமே இருந்தனர். துணைத் தொழில் சிறு தொழில் பிரிவுகள் அண்டை மாவட்டங்களான தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களி லும் தொடங்கப்பட்டுள்ளன. துணைத் தொழில் சிறு தொழில் பிரிவுகளின் வளர்ச்சி பாரத் கனரக மின் நிறுவனத்தின் விரை வான வளர்ச்சிக்கு இணையாக வளர்ந்து வந்துள்ளது.

பாரத கனரக மின் நிறுவனத்தின், கொதிகலன்கள் துணைப் பாகங்கள் தயாரிப்புத் தொழிற்சாலை, இராணிப்பேட்டை.

கொதிகலன் துணைப் பாகங்களான எலெக்ட்ரோ ஸ்டேட்டிக் பிரிசிபிடேட்டார் (Electrostatic Precipitators). ஏர்பிரிஹிட்டர்ஸ் (Air-Preheaters), என்சின் மின்விசிறி (Fans) போன்ற பாகங் களை, ஆண்டொன்றுக்கு 4,00 மெகாவாட் அளவிற்குத் தயாரிக் கும் வசதிகளை இத்தொழிற்சாலை பெற்றுள்ளது. ரூ. 3;280 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், 1980 ஆம் ஆண்டு ஜுலைத் திங்களில், இதற்கான ஒப்புதலை அரசு அளித்தது. இத்தொழிற் சாலை தமிழ்நாட்டில் பின்தங்கிய மாவட்டமாகிய வடஆற்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் 57,000 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் அமைக்கப்பெற்றுள்ளது. இது சுமார் 4,000 பேர் களுக்கு நேரடி வேலை வாய்ப்பளிக்கிறது.

1982 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் இத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கியது. இத் தொழிற்சாலை, 17,000 மெட்ரிக் டன் எடையுள்ள எலெக்ட்ரோஸ்டேடிக் பிரிசிபிடேட்டார்ஸ் (Electrostatic Precipitators), ஏர் ப்ரி ஹிட்டர்ஸ் (Air preheaters), என்ஜின் மின்விசிறி (Fans) போன்ற துணைக் கருவிகளை 1982–83 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்தது. இத்தொழிற்சாலை, 1983–84 ஆம் ஆண்டில் 34,000 மெட்ரிக் டன் எடையுள்ள கருவிகளை உற்பத்தி செய்தது. 1984–85 ஆம் ஆண்டில் 37,500 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்ய மதிப்பிடப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் எலெக்ட்ரோஸ்டேட்டிக் பிரிசிபிடேட்டார்ஸ் (Electrostatic Precipitators), ஏர் பிரிஹிட்டர்ஸ் (Air preheaters). என்சின் மின்விசிறி (Fans) போன்ற துணைக் கருவிகள் உட்பட 43,000 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்ய மதிப்பிடப்பட்டுள்ளது.

1984–85 ஆம் ஆண்டில் இரண்டாம் காலாண்டில் இயந்திர மின்விசிறி பிரிவில் தயாரிப்பு தொடங்கப்பட்டது. இந்த ஆண்டில், இத்தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் 57,000 மெட்ரிக் டன்னாக இருக்கும்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம் துணை நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக சுமார் 43 தொழில் முனைவோர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்துணை நிறுவனங்கள் அனைத்திலும் உற்பத்தி தொடங்கப்பட்டது. 1984–85 ஆம் ஆண்டில் இத்துணை நிறுவனங்களில் 15,000 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிலங்கள் குறித்து ஏற்பட்ட செல்வில் ரூ. 75 இலட்சம் வரை ஏற்க ஒப்புக்கொள்வதன் மூலம் மாநில அரசு தன் ஒத்துழைப்பினை மேலும் அளித்துள்ளது. இதைத் தவிர, நெடுஞ்சாலைகள் துறை, கிளைச் சாலையினையும் அமைத்துதவியது.

இத்திட்டத்திற்கு பெண்ணை ஆற்றிலிருந்து நீர் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது.

மணலி, சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலையானது 1965-ல் சென்னையில் உள்ள மணலியில் நிறுவப்பட்டது. இந்த ஆலை, 1969 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது.





இவ்வாலை செயல்படத் தொடங்கியதிலிருந்து மாநிலத்திற்குத் தேவைப்படும் பெட்ரோலியப் பொருட்கள் முழுவதும், அதாவது மோட்டார் ஸ்பிரிட், மண்ணெண்ணெய், உயர்வேக டீசல் எண்ணெய், குறைந்தவேக டீசல் எண்ணெய், தார் (ஆஸ்பால்ட்) உலை எண்ணெய், லியூப் எண்ணெய், சமையல் வாயு, நாப்தா. முதலிய பெட்ரோலிய உற்பத்திப் பொருட்கள் இந்த தூய்மைப் படுத்தும் ஆலையிலிருந்து பெறப்பட்டன.

1984 மார்ச் மாதம் நிலவரப்படி இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் 98.25 கோடி ரூபாய் ஆகும். இந்த நிறுவனச் சமபங்கு மூலதனத்தில் மத்திய அரசின் பங்கு 96.6 சதவீதமாகும். இரு வெளிநாட்டு உடனுழைப்பு நிறுவனங்களாகிய ''நேஷனல் ஈரானியன் ஆயில் கம்பெனி ஆஃப் ஈரான்'', ''அமோகோ இந்தியா இன்கார்பொரேடேட் ஆஃப் யூ. எஸ். ஏ.'' ஆகிய ஒவ்வொன்றின் பங்கு 1.7 சதவீதம் ஆகும். இந்த இரு வெளிநாட்டு உடனுழைப்பு பங்குதாரர்கள், தங்களது சமபங்குத் தொகையை அந்நியச் செலவாணியாகக் கொடுத்துள்ளனர். இந்த நிறுவனம் செயல்படத் தொடங்கிய முதல் ஆண்டிலிருந்து செலுத்தப்பட்ட மொத்த ஆதாயப் பங்குத் தொகையானது சமபங்கு மூலதனத்தில் 177.5 சதவீதமெனக் கணக்கிடப்படுகிறது.

எண்ணெய் தூய்மைப் படுத்தும் ஆலையானது தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ளதால், வளர்ச்சி குன்றிய தொழிற்சாலைகளை மேம்படுத்த இது தூண்டுகோலாக இருப்பதோடு, இரசாயன உரத் தொழிற்சாலை, பெட்ரோலிய இரசாயனத் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு முதன்மைத் தொழிற்சாலையாகவும் செயல்படுகிறது. வளர்ச்சி குன்றிய தொழிற்சாலைகளில் மிகவும் முக்கியமானவை, சென்னை இரசாயன உரத் தயாரிப்பு நிறுவனத்திற்கு அருகிலுள்ள இரசாயன உரத் தொழிற்சாலையும் ''இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்'' நிறுவனத்தைச் சேர்ந்த '' லியூப் கலவை டிரம் '' தயாரிப்புத் தொழிற்சாலையும் ''மதராஸ் பெட்ரோசெம் லிமிடெட்'' நிறுவனத்தைச் சேர்ந்த டிரான்ஸ்பார்மர் எண்ணெய்த் தயாரிப்புத் தொழிற்சாலையும் ஆகும். இத் தொழிற்சாலைகளில் வேலைக்கு நேரடியாக நியமிக்கப்பட்டவர்கள் 2,000 பேரும் மறைமுகமாக நியமிக்கப்பட்டவர்கள் 3,000-க்கு மேற்பட்டவர்களும் ஆவர்.

ஆலை இயக்குவதிலுள்ள சில சிக்கல்களை நீக்கி, நிறுவனத் திறனை எய்தும் அளவுக்குத் தேவைப்படும் சாதனங்கள் சிலவற்றை நிறுவுவதன் மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆலை நிறுவு திறன் 2.5 மில்லியன் டன்னிலிருந்து 2.8 மில்லியன் டன்னாக உயர்த்தப்பட்டது. இந்நிறுவனம் ரூ. 158.8 கோடி செலவில் தன்னுடைய ஆண்டொன்றின் நிறுவு திறனை 5.6 மில்லியன் டன்னாக இரட்டிப்பாக்கவும் ஆண்டொன்றுக்கு, 20,000 டன்

மெழுகினை உற்பத்தி செய்ய பாரஃபின் மெழுகுத் தொழிற் சாலையை நிறுவவும் வேண்டி, எண்ணெய் தூய்மைப் படுத்தும் ஆலை மேற்கொண்ட பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. 17.74 கோடி ரூபாய்ச் செலவில் அமைக்கப்பட்ட பாரபின் மெழுகுத் தொழிற்சாலையானது, களிமண் பிரிவு (கிலே கான் டாக்டிவ் யூனிட்) நீங்கலாக, 31—3—1984 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது. கச்சா எண்ணெய் காய்ச்சி வடிக்கும் பிரிவு 1984 அக்டோபரில் உற்பத்தியைத் தொடங் கியது. புளுயிட் கேட்டலிடிக் க்ரேக்கிங் தொழிற் பிரிவு 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் வெற்றிகரமாகச் செயல்படத் தொடங்கும் என்றும் இவ்விரிவாக்கத் திட்டத்தின் மூலம் கச்சா எண்ணெய் காய்ச்சி வடிகட்டும்போது கிடைக்கும் பொருள் ஆண்டொன்றுக்கு 1.1 மில்லியன் டன்னிலிருந்து 2.7 மில்லியன் டன்னாக உயரும்: பெட்ரோலிய திரவ வாயு (L.P.G.) வின் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 44,000 டன்னிலிருந்து 1,15,000 டன்னாக உயரும்.

புதிய திட்டங்கள் :

லியூப் விரிவாக்கம் :

ஆண்டொன்றுக்கு பிரைட் ஸ்டாக் (Bright Stock) சுமார் 0,000 டன் உட்பட மதிப்பீட்டுச் செலவு ரூ. 94,000 கோடி செலவில் ஆண்டொன்றுக்கு 2,70,000 டன் அளவிற்கு லியூப் அடிப்படையில் தயாரிக்கப்படும் பொருளின் உற்பத்தித் திறனைப் பெருக்கக் கருதப்பட்டுள்ளது. 1988 ஆம் ஆண்டு நடுவில் இத் திட்டம் முடிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு உற்பத்தியை அதிகரித்தால், போக்குவரத்துத் துறை, ஏனைய தொழில் துறைகளின் தேவைகளை எளிதாக ஏற்க இயலும்.

பிராப்பிலினைத் தயாரித்தல் :

ஆண்டொன்றுக்கு 16,000 டன்னிலிருந்து 17,000 டன் வரை யிலான அளவிற்கு பிராப்பிலினைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை 13.8 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் நிறுவ கருதப் பட்டுள்ளது. இச் செயற்குறிப்பினை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. இதற்குத் தேவையான ஒப்புதல் விரைவில் அளிக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் 1988-ல் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் நிறுவனத்திலி ருந்து கிடைக்கப்பெறும் ஈடு பொருள் இருப்பினைப் பயன்படுத்தி, ஆண்டொன்றுக்கு 50,000 டன் லினார் அல்கில் பென்சைனைத் தயாரிப்பதற்குரிய இசைவுக் கடிதத்தினை திருவாளர்கள் தமிழ் நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (டிட்கோ) அளித்துள்ளது. இத் திட்டத்திற்குத் தேவையான ஏற்பளிப்பு பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. டிட்கோ நிறுவனத்திற்குத் தேவையான இடுபொருள் இருப்பினை வழங்கத் தேவையான வசதிகளை அளிக்கவும் ல. பாராஃபின் வடித்தெடுத்த பின்னர் அதிலிருந்து கிடைக்கும் பொருளை மீண்டும் பயன்படுத்தும் பொருட்டு தொழிற் பிரிவு ஒன்றும் சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் நிறுவனத்தில் நிறுவப் படும்.



## சென்னை உர நிறுவனம், மணலி.

சென்னை உர நிறுவனம், அரசு நிறுவனமாகும். இது 1966 ஆம் ஆண்டு டிசம்பரில் அமைக்கப்பட்டது. இதில் மத்திய அரசு 51 சதவீத மூலதன பங்குகளை வகித்து வருகிறது. அமெரிக்கா விலுள்ள அமோகோ ஆயில் கம்பெனியும் ஈரானிலுள்ள நேஷனல் ஈரானியன் ஆயில் கம்பெனியும் ஒவ்வொன்றும் 24.5 சதவீத பங்குகளை வைத்துள்ளது. நாளொன்றுக்கான சென்னை உர நிறுவனத்தின் நிறுவு திறன் 750 மெட்ரிக் டன் அமோனியா 85 மெட்ரிக் டன் யூரியா. 1,800 மெட்ரிக் டன் கலப்பு உர மாகும். 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கியது. இந்த அறிக்கை ஆண்டின் முந்தைய இரு ஆண்டுகளில் சென்னை உர நிறுவனத்தின் சாதனை கள் கீழ்க் கண்டவாறாகும் :—

| | | 1982—83. | 1983—84. | 1984—85. (1984 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரையில்.) |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| உற்பத்திச் சாதனை (அளவு 000 மெட்ரிக் டன்னில்). | | | | |
| அமோனியா | .. | 202.422 | 130.221 | 153.774 |
| யூரியா .. | .. | 241.850 | 156.730 | 179.794 |
| என்.பி.கே. | .. | 603.560 | 508.300 | 469.132 |
| சாதனை அளவு (சதவீதத்தில்). | | 99 | 80 | .. |

[1985 ஜூலை 11

| (1) | 1982–83, (2) | 1983–84, (3) | 1984–85, (1984 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரையில்.) (4) |
|---|---|---|---|
| 2 விற்பனை (அளவு 000 மெட்ரிக் டன்னில்). | 641.4 | 665.00 | 565.2 |
| 3 வியாபாரத் தொகை (ரூபாய் கோடியில்). | 171.95 | 172.40 | 166.306 |
| 4 வரி விதிப்பிற்கு முன் ஏற்பட்ட ஆதாயம் (ரூபாய் கோடியில்). | 16.5 | 9.27 | 1.23 |
| 5 ஆதாயப் பங்கு (சத வீதத்தில்). | 25 | 25 | .. |
| 6 தேசிய கருவூலத்திற்கு அளிக்கப்படும் பங்குத் தொகை (ரூபாய் கோடியில்). | 29.03 | 22.89 | புள்ளி விவரம் கிடைக்க வில்லை. |

நாளொன்றுக்கு 1,350 மெட்ரிக் டன் அளவிற்கு அமோனியா தயாரிக்கும் தொழிற்சாலை, நாளொன்றுக்கு 2,000 மெட்ரிக் டன் அளவிற்கு யூரியா உரம் தயாரிக்கும் தொழிற்சாலை, நாளொன்றுக்கு 800 மெட்ரிக் டன் அளவிற்கு டி.ஏ.பி. உரம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவற்றைக் கட்டுவதன் மூலம் உற்பத்தியைப் இரட்டிப்பாக்கும் செயற் குறிப்பினை சென்னை உர நிறுவனம் மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்திற்கு ரூ. 550 கோடி செலவாகும். வருங்காலத்தில் இந்நிறுவனம் பாதிப்பிற்குள்ளாகாத வகையில் நிறுவனத்தின் செயற்குறிப்புகளுக்கு மத்திய அரசு விரைவில் அனுமதி வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

படைக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

இத் தொழிற்சாலை சிறு படைக்கலன்களை உற்பத்தி செய்வதற்காக 3–7–1966 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது.

தற்போது, இத் தொழிற்சாலையிலும், இதன் துணை நிறுவனங்களிலும், அதிகாரிகள், பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் உட்பட ஏறக்குறைய 2,900 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இராணுவத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு பல்வேறு வகையான சிறிய-நடுத்தர படைக்கலன்களை உற்பத்தி செய்வதற்காக இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.



1985 ஜூலை 11]

சேலம் உருக்காலை, சேலம் :

சேலம் உருக்காலைத் தொழிற்சாலை, மத்திய அரசின் நிறுவனமான இந்திய உருக்கு அதிகார மன்றத்தின் ஒரு பிரிவாகும். 1,20,000 டன் அளவுள்ள எவர்சில்வர் உருக்குகள், மின் உருக்குகள், ஏனைய தனி உருக்குகள் ஆகியவற்றை இரு நிலைகளில் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றினை அமைக்கவுள்ளது என்று சேலம் உருக்காலை தனது திட்டம் குறித்து விரிவான அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஆனால், ஒருங்கிணைந்த திட்டம் அல்லாத கொள்கை அடிப்படையில், இத் திட்டத்தின் முதல் கட்டப் பணிக்கு 1977 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தான் இசைவளிக்கப்பட்டது. 13–9–1981 ஆம் நாளன்று இத் திட்டத்தின் முதல் கட்டப் பணி தொடங்கப்பட்டது. வணிக ரீதியான உற்பத்தி 1982 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தொடங்கப்பட்டது.

முதல் கட்டமாக, இவ்வுருக்காலை ஆண்டொன்றுக்கு 32,000 டன் எவர்சில்வர் மென் உருக்கு சுருள்கள், தகடுகள், மின் கம்பிச் சுருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திறனைக் கொண்டிருந்தது. தற்சமயம் உருக்கு வளைவுகள், இடு பொருட்கள் ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. மூலப்பொருட்களை உள் நாட்டிலேயே தயாரிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத் தொழிற்சாலையில் முதல் கட்டத்தில் 1,300 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் பணி நடைபெறும் இடங்கள், பராமரிப்பு, பொது நிருவாகப் பணிகள், கட்டுமானப் பணிகள் ஆகியவற்றில் பயிற்சியாளர்கள் உட்பட இன்று 1,229 பணியாளர்கள் பணி புரிகிறார்கள்.

இத் தொழிற்சாலையில் முதல் கட்ட மூலதனச் செலவு, ரூ. 181.19 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் ரூ. 179.16 கோடி செலவிடப்பட்டுள்ளது.

1982–83 ஆம் ஆண்டில் இந்த உருக்காலையில் உற்பத்தி 6,247 டன்னாக இருந்தது. 1983–84 ஆம் ஆண்டில் இவ்வுருக்காலையில் உற்பத்தி 6,934 டன்னாகும். 1984–85 ஆம் ஆண்டில் இதன் இலக்கு 16,800 டன் என்று நிர்ணயிக்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் இந்த உருக்காலையின் உற்பத்தி 11,520 டன்னாகும். 1985–86 ஆம் ஆண்டில் இந்த உருக்காலையின் உற்பத்தி இலக்கு 21,600 டன் என்று தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தித் திறனை உரிய அளவு பயன்படுத்துவதற்காக 55.75 கோடி ரூபாய் செலவில், இரண்டாவது சென்ஸிமிர் (Second Sendsmir) மில்லை நிறுவுவதன் மூலம் உற்பத்தித்திறனை இரட்டிப்பாக்கும் செயற் குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

## தொழில் கொள்கையும், திட்டங்களும் (ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்).

கிராமப் பகுதிகளில் தொழில்களை உருவாக்குவதன் மூலம் அங்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதே தமிழ் நாடு அரசின் கொள்கையாகும். மிகச் சிறிய தொழில்கள், வீட்டிலேயே செய்யும் தொழில்கள் உட்பட சிறு தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் உருவாக்கி அவற்றை மேன்மேலும் வளர்ச்சி பெறச் செய்ய அரசு தனி முக்கியத்துவம் அளிக்கிறது. கிராமப் பகுதிகளில் தற்போதுள்ள தொழில் பிரிவுகளுக்கு ஊக்கமளிக்பதற்கும், புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்குச் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கவும் தனி திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன. தொழில் பிரிவுகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல், வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தல், மூலப்பொருள் வழங்கல், நிதியுதவி அளித்தல், விற்பனை வசதி செய்து கொடுத்தல், நலிவுற்ற தொழில் பிரிவுகளுக்குப் புத்துயிரூட்ட தனித் திட்டம் வகுத்தல் போன்ற வழிகளில் அரசு உதவி செய்கிறது. கிராமங்களில் தொழில்கள் உருவாக தேவையான இடுபொருள்களை அளிப்பதற்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம். சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் வணிக இயக்குநர் அலுவலகம் போன்ற மாநில அரசு நிறுவனங்களும் மத்திய அரசின் சிறுதொழில் பணி நிறுவனம், நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகள் ஆகியவையும் இணைந்து செயல்படுகின்றன. இதனுடன் பட்டுப்புழு வளர்ப்பு இயக்குநரகமும் தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனமும் குறிப்பிட்ட பகுதிகளில் உதவி செய்கின்றன. இந்நிறுவனங்கள் ஆற்றும் பணி பற்றி கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இம்முகவரமைப்புகள் செயல்படுத்தும் பல்வேறு பழைய புதிய திட்டங்கள் பின் வரும் அத்தியாயங்களில் விரிவாக விவாதிக்கப் படுகின்றன.

## தொழில் வணிக இயக்ககம் :

பொதுவாக தொழில்களை, குறிப்பாக சிறு தொழில்களை மேம்படுத்துவதற்காகத் திட்டங்களை வகுத்து செயற்படுத்துவது தொழில் வணிக இயக்ககத்தின் பொறுப்பாகும். இதன் கள அமைப்பான மாவட்டத் தொழில் மையம் சிறு தொழில் முனைவர்களுக்கு உதவி அளிப்பதன் மூலம் கிராமத் தொழில்களை உருவாக்கும் முக்கிய முகவரமைப்பாகச் செயல்படுகிறது. மாவட்டத்





தொழில் மையங்கள் புதிய தொழில் பிரிவுகளுக்கும். தற்போ
துள்ள தொழில் முனைவோருக்கும் அதிக உதவி அளிக்க இயலும்
வகையில் அவற்றை வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்
துள்ளது. சிறு தொழில் வளர்ச்சியிலிருந்து இத்திட்டத்தின்
வெற்றியை அறியலாம். தமிழ் நாட்டில் பதிவு செய்யப்பட்ட
சிறு தொழில்களின் எண்ணிக்கை 1977 ஆம் ஆண்டில் 18,789
லிருந்து 1984 மார்ச்-ல் 49,920 ஆக உயர்ந்து, 1985
மார்ச்சில் 60,259 ஆக அதிகரித்தது. இந்த இயக்ககத்தின்
மற்றொரு பிரிவு, தொழில் கூட்டுறவு அமைப்புகளைக் கவனித்துக்
கொள்கிறது. இக்கூட்டுறவுகளின் கீழ் தீப்பெட்டி தயாரித்தல்,
தேயிலை, தேங்காய்நார், பாலிதின் பைகள், ஆட்டோ முதலிய
துறைகள் உள்ளன. நெடுங்காலமாக உள்ள இத்துறைகளில்
தொழில் கூட்டுறவுகள் அமைப்பதைத் தவிர மின்னணுவியல்
முதலிய நவீன துறைகளிலும் கூட்டுறவுகளை ஏற்படுத்தும்
பணியை இத்துறை இந்த ஆண்டில் மேற்கொண்டுள்ளது.

## தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

இந்நிறுவனம் சிறுதொழில்களுக்காகக் கொட்டகைகள்
அமைத்தல், மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்குதல், இன்றி
யமையா மூலப் பொருள்களை வழங்குதல், விற்பனை உதவி
முதலிய அடிப்படை வசதிகளை அளிப்பதன் மூலம் தொடர்ந்து
உதவி அளிக்கிறது. இந்நிறுவனம், வட்டியில்லா விற்பனை
வரிக் கடன் அளித்தல் தொடர்பாக நிதியுதவி அளிக்கும் திட்டம்,
நலிவுற்ற தொழில் பிரிவுகளை மீண்டும் புதுப்பிக்கும் திட்டம்,
மாநில, மத்திய அரசு அளிக்கும் மூலதன முதலீடு உதவித்
தொகையை வழங்குதல், மாநில அரசு தொழில்களுக்கு அளிக்கும்
ஏனைய ஊக்க உதவித் தொகைகளை வழங்குதல் ஆகியவற்றைச்
செயல்படுத்துகிறது. சிறு தொழில் பிரிவுகளின மாறிவரும்
தேவைகளுக்கேற்ப வரும் ஆண்டுகளில் தன்னுடைய பணிகளைக்
கணிசமான அளவுக்கு விரிவுபடுத்த நிறுவனம் திட்டமிடுகிறது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் :

மாநில மட்டத்திலுள்ள முக்கியமான நிதி நிறுவனங்களில்
தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஒன்றாகும். தமிழ்
நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள சிறு மற்றும்
மத்தியதர தொழில்களின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும்
நிதியுதவி அளிப்பது இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில்
ஒன்றாகும். நிலம், கட்டிடம், தளவாடங்கள், எந்திரங்கள்
போன்ற நிலையான சொத்துக்களை வாங்க கடன் வழங்குவ
தோடு, காலம்தாழ்த்தி செலுத்துவதற்குரிய உத்திரவாதத்தை
யும், பங்கு மூலதனத் தொகையையும் வழங்குகிறது. கடன்
கேட்டு வரும் மனுக்களின் மீது விரைவில் தீர்வுகாண வேண்டும்

என்று கருதி, கடன் கேட்டு வரும் மனுக்களைப் பெற்ற 45 நாட்களுக்குள் முடிவு காணவேண்டும் என்று அரசு இந்நிறுவனத்திற்கு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) :

தற்போதுள்ள 56 உற்பத்தி மையங்களைத் தவிர கட்டுமானங்கள், தோல், வார்ப்படச்சாலை, எந்திரக் கருவிகள், மேசை, நாற்காலிகள் முதலியவை போன்ற வேறுபட்ட தொழில்களில் டான்சி பல புதிய திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது. இதனால் அதன் உற்பத்தி கணிசமான அளவிற்குப் பெருகும்.

தமிழ்நாடு தோல் பொருள்கள் மேம்பாட்டு நிறுவனம் :

இந்நிறுவனம், தோல் தொழிலுக்கு அடிப்படை வசதிகள் அளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. புதிய தொழில் நுட்பம் நிதி உதவி, பணி முடிக்கப்பட்ட பொருள்களின் விற்பனை ஆகிய பணிகளுக்கு வகை செய்வதன் மூலம் இந்நிறுவனம், சிறு கைவினைஞர்களுக்கு உதவத் திட்டமிட்டுள்ளது. இது மேலும், தோல் தொழிலுக்கு இன்றியமையாத் தேவையான கழிவு நீரகற்றும் பிரிவை பொதுவான வசதியாக அமைத்து வருகிறது.

தமிழ் நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம் :

கைவினைஞர்களுக்குத் தொழில் நுட்ப உதவி அளித்து பல விற்பனைக் கூடங்கள் வாயிலாக அவர்களுடைய உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு உதவி அளிப்பதன் மூலம் இம் மாநிலத்தில் கைத்திறத் தொழில்களை உருவாக்கி வளர்ச்சியடையச் செய்ய இந்நிறுவனம் 1973ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

பட்டுப்புழு வளர்ப்பு இயக்ககம் :

பட்டுப்புழு வளர்ப்பு அதிக அளவில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடியதும், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டதுமான ஊரகத் தொழிலாகும். இம் மாநிலத்தில், இத்தொழில் நல்ல முறையில் வளர்ச்சியடைவதற்குத் தொடர்ந்து உதவி அளிக்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப, பல்வேறு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நிதியுதவி அளித்தலும், தொழில் நுட்ப வசதிகள் அளித்தலும், இம்மாநிலத்தில் முசுக்கொட்டை பயிரிடப்பட்ட பகுதி 1979 ஏப்ரலில் 21,419 ஏக்கராக இருந்தது, 1985 மார்ச்சில் 67,062 ஏக்கராக உயர்ந்துள்ளது. இதன் பயனாக கச்சாப் பட்டு உற்பத்தி கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது.



பண்டகக் கொள்முதல் கொள்கை :

கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களை கிராம புறங்களில் உருவாக்க ஊக்கமளிப்பதின் மூலம் கிராம புறங்களில் வேலை வாய்ப்பினை உருவாக்குவது அரசு கொள்கையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இத்தொழில்கள் வளர்வதற்கு முக்கிய இடர்பாடு, இவைகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விற்பனை வசதியின்மையாகும். இத்தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விற்பனை வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு, அரசு துறைகள் வாரியங்கள், அரசு நிறுவனங்கள். தங்களுக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்வது பற்றி அரசு கொள்முதல் கொள்கை ஒன்றை வகுத்துள்ளது. அதன்படி அரசு துறைகள், நிறுவனங்கள், வாரியங்கள், உள்ளாட்சி மன்றங்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை கீழ்க்கண்ட நிறுவனங்களிடம் முன்னுரிமை கொடுத்து வாங்க வேண்டும்:—

1. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தைச் சேர்ந்த மற்றும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள தொழில் அலகுகள்.

2. சிறை இளங் குற்றவாளிகளின் பள்ளி மற்றும் சிறைத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தொழில் அலகுகள்.

3. முட்டுக்காட்டிலுள்ள நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம்.

4. அரசு நிறுவனங்கள் மற்றும் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள்.

5. அரசு பங்குத் தொகை உதவி பெற்ற கூட்டுறவு நிறுவனங்கள்.

6. இதர கூட்டுறவு நிறுவனங்கள்.

7. இம்மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள்.

8. இதர மாநிலங்களிலுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள்.

மேற்கூறிய முன்னுரிமை நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குத்தான் பொருந்தும். மற்றபடி கொள்முதல் செய்து, விநியோகம் செய்வதற்கு பொருந்தாது. அவ்வாறு நிறுவன முன்னுரிமை படி கொள்முதல் செய்யப்படும் பொருள்

களின் மீது உற்பத்தி செய்த அந்தந்த நிறுவனங்களின் முத்திரை இருக்க வேண்டும். மேற்கூறிய நிறுவனங்களின் 1 முதல் 5 வரையிலும் நிறுவனங்களிடம் கொள்முதல் செய்யும் பொழுது ஒப்பந்தப்புள்ளி பெற வேண்டியது இல்லை. இதர நிறுவனங்கள் (மேலே கூறப்பட்ட 6 முதல் 8 வரையிலும் உள்ள நிறுவனங்களிடம்) தற்பொழுது நடைமுறையிலுள்ள அரசு ஆணைகளின் படி ஒப்பந்தபுள்ளி கோருவதோடு விலை முன்னுரிமையையும் அளித்து கொள்முதல் செய்ய வேண்டும்.

தொழில் வணிக இயக்ககம் :

முன்னர் குறிப்பிட்டவாறு, இந்த இயக்ககம் ஊரகத் தொழில்கள், மிகச் சிறிய தொழில் ஆகியவை உட்பட சிறு தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்நோக்கங்களை பின்வரும் வழியின் மூலம் எய்தக் கருதப்பட்டுள்ளது:—

1. சிறுதொழில் முனைவோர்கள் அவர்கள் விரும்பும் தொழில் தொடங்குவதற்கு மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் தொழில் நுட்ப உதவியளித்தல் இதுபற்றிய தொழில்களின் பல்வேறு கூறுகள் அடங்கிய திட்ட அறிக்கைகள் பெருவாரியாகத் தயாரிக்கப்பட்டு தொழில் முனைவோருக்கு இலவசமாகக் கிடைக்கச் செய்யப் பெற்றுள்ளன.

2. தற்போதுள்ள மரபுவழி தொழிற்சாலைகளை வலுப்படுத்துவதற்கும் கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் தொழில் கூட்டுறவுகளுக்குத் தொழில் நுட்பம், நிர்வாகம், நிதி ஆகிய உதவியளித்தல்.

3. பரிசோதனை செய்தல், உற்பத்திப் பெருக்கம் ஆகியவற்றுக்கு வசதி செய்வதன் மூலம் மின்னணுவியல், இரசாயனத் தொழில்களுக்கு தனிக்கவனம் செலுத்துதல், மின்னணுத்தொழில்களுக்கென்றே சிறப்பான முறையில் இத்துறை அடிப்படை வசதிகளை அளித்துள்ளது.

இந்த நோக்கங்களை நிறைவேற்ற பின்வரும் நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டுள்ளது :—

சிறுதொழில்கள்—ஊரகத் தொழில்கள் :

இத்துறையின் வளர்ச்சிக்கு அரசு கொடுத்த முக்கியத்துவம் நல்ல பயனை அளித்துள்ளது. 1977 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதியில் 18,789 நிரந்தரமாக பதிவு செய்யப்பட்ட தொழில் பிரிவுகள் இருந்தன. இவை 1984 ஆம் ஆண்டு மார்ச்சுத்



திங்களுக்குள் 49,920 ஆக உயர்ந்துள்ளன. 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 60.259 ஆக மேலும் உயர்ந்துள்ளன. எட்டு ஆண்டுகளுக்குக் குறைவாக உள்ள காலத்தில் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 200 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்துள்ளன என்பதை இது காட்டுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 1985ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதிக்குள் 10,958 ஆக உயர்ந்துள்ளன. இது சென்ற ஆண்டைவிட இரு மடங்குச் சாதனையாகும். இந்த ஆண்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்.

சிறு தொழில் துறைக்கு உதவியளிப்பதன் மூலம் மாவட்டத் தொழில் மையங்கள் பயனுள்ள வகையில் தொடர்ந்து செயலாற்றி வருகின்றன. இதன் விவரங்கள் இணைப்பு 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளன. சிறுதொழில் நிறுவனங்கள் குறிப்பிட்ட முதலீட்டிற்கு அதிக வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலம் வேலை வாய்ப்பை அதிகரிக்கின்றன. இந்த தொழில் பிரிவுகளை கிராமப்பகுதிகளிலும் கணிசமான அளவிற்கு நிறுவப்பட்டுள்ளன. மாநில அரசு 1985–86 ஆம் ஆண்டில் சிறுதொழில் வளர்ச்சியை மேலும் விரைவுபடுத்தும்.

படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டம் :

நடப்பு ஆண்டிலும் மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக மத்திய அரசு பொறுப்பேற்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1983–84 ஆம் ஆண்டு இலக்கைவிட சாதனை அதிகரித்த ஒரு சில மாநிலங்களில் நமது மாநிலமும் ஒன்றாகும். மாவட்டத் தொழில் மையங்களுக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், தீவிரமாகவும் செயல் நோக்கிலும் உதவி புரிந்துள்ளதால் இத்திட்டத்தின் கீழ், இவ்வாண்டிலும் இலக்கு மீறப்பட்டுள்ளது. அதாவது 1984-85-ல் 21,700 நபர்களுக்கு உதவியளிக்க வேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்படிருந்தது. ஆனால் மார்ச் இறுதிக்குள் 22,500 நபர்களுக்கு ரூ. 42.49 கோடி ஒப்பளிப்பு செய்து சாதனை புரியப்பட்டுள்ளது. 1984–85-ல் முன்னேற்றம் பற்றிய விவரங்கள் இணைப்பு 2-ல் தரப்பட்டுள்ளன. மாவட்டத் தொழில் மையங்களால் அமைக்கப்பட்ட பணிக்குழு, 1985 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் மத்தியில் ரூபாய் 57.46 கோடி தொகைக்கான 28,602 விண்ணப்பங்களுக்கு இதுவரையில் வங்கிகளுக்குப் பரிந்துரைத்துள்ளது. 1983–84-ல் இத்திட்டத்தின் கீழ் வணிக நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளித்திருக்க சொத்துக்களை ஏற்படுத்தும் வகையிலும் அதிக அளவில் வேலை வாய்ப்பினை உருவாக்கும் வகையிலும் இவ்வாண்டு தொழில்களுக்கு மட்டும் அதிக அளவு

நிதி ஒதுக்கப்படுவது ஈண்டு குறிப்பிடுவது பொருத்தமாகும். கடந்த ஆண்டில் கடன் அனுமதிக்கப்பட்ட தொழில் பிரிவுகளில் 11,899 தொழில் பிரிவுகள் ஏற்கெனவே செயல்படத் தொடங்கியுள்ளன. எஞ்சியவை, பல்வேறு நிலைகளில் செயல்படத் தொடங்கி உள்ளன. இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறும் திட்டங்களுக்கு மின்னிணைப்பு கொடுக்க முன்னுரிமை கொடுத்து அரசு ஆணைகளும் பிறப்பித்துள்ளது.

நலிந்த சிறு தொழில்களுக்கு புத்துயிர் அளித்தல் :

ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகள் சுமுகமாக செயல்படுவதானது புதிய தொழில் பிரிவுகளை உருவாக்குவதைப் போல் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இச்சூழ்நிலையில் நலிந்த சிறு தொழில் பிரிவுகளை மீண்டும் தொடங்கி அவற்றிற்குப் புத்துயிர் அளிக்கும் திட்டத்தை மாநில அரசு உருவாக்கியுள்ளது. வழக்கமாக ஒரு நலிந்த தொழில் பிரிவானது மீண்டும் செயல்படத் தொடங்க அதற்குக் கூடுதல் நிதியுதவி தேவைப்படும் போது தொழில் முனைவர்கள் ஓரளவு தொகையை வங்கியில் செலுத்தமாறு வங்கிகள் வற்புறுத்துகின்றன. ஆனால் நிதி திரட்டும் நிலையில் அவர்கள் இருப்பதில்லை. மறு நிதியுதவிக்காக வங்கி எதிர்பார்க்கும் தொகையில் 50 சதவீதம் வரையில் நிதியுதவி அளிக்க அரசு முன்வந்துள்ளது. குறிப்பிட்ட ஒரு சில இனங்களில் அரசின் பங்கு 75 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த முன்வரம்பு உதவித் தொகைக்கு வட்டி கிடையாது. தொழில் துறை ஆணையர்—அரசுச் செயலாளர் தலைமையில் செயல்படுகின்ற மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழு இவ்வாறு நிதியுதவியை அளித்து வருகிறது. இது வரை 45 தொழில் பிரிவுகளுக்கு 71.92 இலட்சம் ரூபாய் வரையில் முன்வரம்பு தொகை உதவியாக அளிக்கப்பட்டுள்ளது.

நிதி நிறுவனங்கள் பிரிவுக் குழு :

தொழில் முனைவோர் வங்கிகளிடமிருந்து காலமுறைக் கடன்களையும் நடைமுதல் மூலதனக் கடன்களையும் பெறும் பொருட்டு, முதன்மை நிலையிலான குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிதி நிறுவனங்கள் துறையின் ஆணையர்—அரசுச் செயலாளர் இதன் தலைவராவார். துறைத் தலைவர்கள் இதன் உறுப்பினர்களாவர்.

வங்கிகளிடமிருந்து போதிய அளவுக்கு நடைமுறை மூலதனத்தைப் பெறுவததில் கிண்டி, அம்பத்தூர் தொழில் பேட்டை தொழில் முனைவோர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க தொழில் ஆணையர், மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர் தலைமயையில் மற்றொரு குழு அமைக்கப்பட்டுள்ளது.



ஒரே கூரையின் கீழ் தடைகளை நீக்கி அனுமதியளிக்கும் முறை :

தொழில் முனைவர், தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படுவதற்கு முன்பு, அவருக்குத் தேவைப்படும் அனுமதிகளுக்கு வெவ்வேறு துறைகளிடமிருந்து விரைவில் இசைவு பெறும் பொருட்டு மாநில மாவட்ட அளவுகளில் ''ஒரே கூறையின் கீழ் தடைகளை நீக்கி அனுமதியளிக்கும் முறை'' குறித்த குழு ஒன்றை அமைக்க வேண்டி கடந்த ஆண்டு முக்கியமான நடவடிக்கை ஒன்றை அரசு மேற்கொண்டது. மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட நிலையிலான குழுக்களின் தலைவராகவும் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் அமைப்பாளராகவும் உள்ளனர். மேலும், இக்குழுவில் மின் வாரியம், காற்றுத் தூய்மை கேடு தடுப்பு போன்ற சம்பந்தப்பட்ட துறைகளின் பிரதிநிதிகள் உள்ளனர். தொழில்களுக்கு விரைவில் அனுமதி பெறுவதற்காக இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (இவை 1,611 இனங்களில், 906 இனங்களில் தீர்வு காணப்பட்டுள்ளது மாவட்டக் குழுக்களின் பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் தலைமையிலான மாநில அளவிலான குழு முறையான கால இடைவெளிகளில் கூடுவதோடு, விரைவில் இசைவளிக்க வேண்டி கொள்கை அளவில் சில மாற்றங்களைச் செய்யுமாறும் கூறுகிறது.

சிறு தொழில்களுக்காக அமைக்கப்பட்ட ''ஒரே கூரையின் கீழ் தடை நீக்கி இசைவளிக்கும் முறை'' பற்றிய குழு வெற்றிகரமாகச் செயல்படுவதைக் கருத்தில் கொண்டு நடுத்தர, பெரிய தொழில் பிரிவுகளுக்கும் இதுபோன்ற பயன்களை அளிக்கும் பொருட்டு தொழில் துறை ஆணையர்—அரசுச் செயலாளர் தலைமையில் உயர் அதிகாரிகள் குழு ஒன்றை அரசு தற்போது நியமித்துள்ளது.

இத்தொழில் பிரிவுகள், உள்ளூரில் தயாரிக்கப்பட்டவையும் இறக்குமதி செய்யப்பட்டவையுமான மூலப் பொருட்களைப் பெறும் வகையில் இயக்குநர் அலுவலகம் இவற்றிற்கு உதவி புரிகின்றன. தொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருள்கள் அனைத்தும் போதியளவுக்குக் கிடைக்கிறது. நிலக்கரி, கல்கரி, மெழுகு முதலிய மூலப் பொருள்களை அட்டைகள் (கார்டுகள்) மூலம் பெறுவதற்காக சிறுதொழில் பிரிவுகளுக்குக் கார்டுகள் வழங்கும் முறை சீரமைக்கப்பட்டுள்ளது. முன்பு கார்டுகள் ஆண்டுக்கொருமுறை புதுப்பிக்கப்

பட்டு வந்தன, இம்முறைக்கு மாறாக, தொழில் பிரிவுகள், தங்களது கார்டுகளைப் புதுப்பிக்க நான்கு ஆண்டுகளுக்கொரு முறை இயக்குநர் அலுவலகத்தை அணுகவேண்டுமென இப் பிரிவுகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

தொழில் கூட்டுறவுகள் :

இவ்வாண்டில் ஏற்கனவே செயல்பட்டு வந்துள்ள சங்கங்களை ஒருங்கிணைத்து, அவற்றை வலுப்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தேயிலைத் தொழில், கூட்டுறவு தொழிற்சாலைகள் செயல்படுவது கணிசமான அளவுக்கு முன்னேறியுள்ளது. கூடலூரில் முதன் முதலாக நிறுவப்பட்ட தேயிலைத் தொழிற்சாலையை 17.40 இலட்சம் ரூபாய்ச் செலவில் நவீனப்படுத்தும் திட்டத்தை இத்துறை மேற்கொண்டுள்ளது. ஒவ்வோராண்டும் இரு தொழிற்சாலைகள் என்ற வீதத்தில் பிற தொழிற்சாலைகளை நவீனப் படுத்தும் திட்டம் குறித்து மாநில அரசு பரிசீலித்து வருகிறது. நீலகிரியில் கின்ன கோரை என்னுமிடத்தில் 60 இலட்சம் ரூபாய் செலவில் தேயிலைத் தொழில் கூட்டுறவு தொழில் சாலை ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கோடைக்கானலில் 258 இலட்சம் ரூபாய் செலவில் தேயிலை தொழில் கூட்டுறவு எஸ்டேட் ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

தென்னை நார்த் தொழில் :

இரண்டு ஆண்டுகளாக நிலவி வந்த கடும் வறட்சியின் காரணமாக தேங்காய் மட்டைகள் உற்பத்தி மிகவும் பாதிக்கப் பட்ட போதும் தென்னை நார்த் தொழில் சங்கங்களின் உற்பத்தியானது 1982–83-ல் 33.48 இலட்சம் ரூபாயிலிருந்து 1985 மார்ச் வரையில் 65.84 இலட்சம் ரூபாயாக உயர்ந் துள்ளது.

தென்னை நார் பிரிக்கும் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் உற்பத்தியைப் தொடங்கும்போது, கயிறு தயாரிக்கும் சங்கங்களின் உற்பத்தி ஒரே ஆண்டில் இரண்டு மடங்காகிவிடும். கயிற்று பொருள்களுக்கு விற்பனை வசதி அளிக்கும் பொருட்டு, தலைமை விற்பனைச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டு செயற்படத் தொடங்கியுள்ளது. சங்கங்கள் தயாரிக்கும் கயிற்றுப் பொருள்களை விற்கும் முகவரமைப்பாகச் செயற்பட தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நகரங்களில் விற்பனை நிலையங்களைத் தொடங்கக் கருதப்படுகிறது. கயிறு தயாரிக்கும் சங்கங்களின் மேம்பாட்டிற்காக, அவற்றை கயிறு தயாரிக்கும் தொழில் தொகுதியாக மாற்றக் கருதப்



பட்டுள்ளது. கயிறு தயாரிக்கும் சங்கங்கள் தற்போது நடத்தி வரும் கயிறு முறுக்கேற்றும் பணியுடன் தென்னை நார் பிரிக்கும் சங்கங்களின் பணி சேர்க்கப்படும். கயிறு தயாரிப்புத் தொழில் தொகுதி கிராமப் பகுதிகளின் விற்பனை நிலையங்களைத் தொடங்குவதுடன் உற்பத்திக்கும் வேலை வாய்ப் பிற்கும் வகை செய்யும். 1985–86-ல் கயிறு முறுக்கேற்றும் 5 சங்கங்களையும் தென்னை நார் பிரிக்கும் 3 சங்கங்களையும் 5 நூற்பு சங்கங்களையும் விற்பனைச் சங்கம் ஒன்றையும் அமைக்கக் கருதப்படுகிறது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ):

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு தனியார் நிறுவனமாக 1970-ம் ஆண்டு நிறுவப்பட்டு பின்னர் தமிழ்நாட்டில் உள்ள சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு உதவும் முக்கிய குறிக் கோளுடன் 1971-ம் ஆண்டில் இந்நிறுவனம் ஒரு பொது நிறுவனமாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு :—

(1) சிறுதொழில்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்.

(2) சிறு தொழில்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுத்தல்.

(3) முக்கிய மூலப்பொருட்கள் விநியோகம் செய்தல்.

(4) மத்திய மாநில முதலீட்டு மானிம் வழங்குதல்.

(5) சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்குதல்.

(6) நலிவுற்ற சிறு தொழில்களின் மறு வாழ்விற்கு முன் வரம்புத் தொகை உதவி அளித்தல்.

(7) சிறு தொழில்களுக்கு குறைந்த அழுத்த மின் கட்டண மானிய உதவி அளித்தல்.

சிறு தொழில்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்

சிறு தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சியடைவதற் அடிப்படை வசதிகள் மிகவும் இன்றியமையாததாகும். நா காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலிருந்தே இத்திட்டத் சிட்கோ நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இந்திய தொ வளர்ச்சி வங்கியின் மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ்,

நிறுவனங்கள் மற்றும் வர்த்தக வங்கிகள் மூலம் இத்திட்டத்தை சிட்கோ செயல்படுத்துகிறது. 27 இடங்களில் 1,035 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. முதற் பகுதியில் ஆலத்தூரில் மருந்துத் தொழில்களுக்காக கட்டப்பட்டுள்ள 12 தொழிற் கூடங்கள் உள்ளிட்டு மொத்தம் 100 தொழிற்கூடங்கள் 1984—85-ம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளன. ஆலத்தூரில் மருந்துத் தொழில்களுக்காக 12 தொழிற் கூடங்கள் கட்டப்படுவது நீங்கலாக கப்பலூர், குறிச்சி, அம்பத்தூர் முதலிய இடங்களில் 126 தொழிற் கூடங்களைக் கட்டுவதற்கு தீவிர முயற்சி எடுக்கும். 1985—86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான முதலீடு ரூ. 300.00 இலட்சமாகும்.

அரசு தொழிற்பேட்டைகளையும்; சீரமைக்கப்பட்ட தொழிற் பேட்டைகளையும் அரசின் முகவராக சிட்கோ நிறுவனம் நிர்வகித்து வருகிறது. தொழிற்கூடங்களை தவணை முறையில் வழங்கும் திட்டத்தின்கீழ் 714 சிறு தொழில்களுக்கு இசைவுக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. 166 சிறுதொழில் நிறுவனங்கள் தொழிற்கூடத்தின் விலை முழுவதையும் செலுத்தியுள்ளன. அரசுத் தொழிற்பேட்டைகளில் பயன்படுத்தப்படாமல் உள்ள நிலங்களை அபிவிருத்தி செய்து சீரமைக்கப்பட்ட மனைகளாக மாற்றி தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய சிட்கோ தீர்மானித்துள்ளது.

**சிறுதொழில்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுத்தல் :**

அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பொருள்களை சிறுதொழில் நிறுவனங்கள் வழங்குவதற்கு வகை செய்யும் பொருட்டு, சிறுதொழில்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுக்கும் திட்டம் 1978—79 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தில் கணிசமான அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1984—85 மற்றும் 1985—86 ஆம் ஆண்டுகளில் விற்பனை அளவு முறையே ரூ. 8.5 கோடி மற்றும் ரூ. 10 கோடி அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விநியோகம் மற்றும் பட்டுவாடா துறை பொது இயக்குநரின் (DGS & D) விலை ஒப்பந்தத்தின்படி பார்சோப், அமோனியா, அச்சு இயந்திரங்கள், ஆழ்கிணறு பம்புகள் குளிர்சாதனப் பெட்டிகள் முதலியவைகளும், பொது நலம் மற்றும் மருத்துவக் கல்வி மற்றும் கல்வித்துறைக்கு தேவைப்படும் கல்வி ஆய்வுச் சாதனங்கள், பற்பொடி, பண்டங்கள் முதலியவைகளும் இத்திட்டத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருள்களில் அடங்கும். இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1,300 சிறு தொழில்கள் பதிவு



செய்யப்பட்டுள்ளன. 952 பல்வேறு பொருள்கள் மாநில மற்றும் மத்திய அரசுத்துறைகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

**முக்கிய மூலப்பொருட்கள் விநியோகம் :**

சிறுதொழில் நிறுவனங்களுக்கு மூலப்பொருள்கள் விநியோகம் செய்வதில், சிட்கோ நிறுவனம் சிறுதொழில்களுக்கு தொடர்ந்து சேவை செய்து வருகிறது. இரும்பு மற்றும் எஃகு, கல்கரி, தீப்பெட்டி மெழுகு, பாரபின் மெழுகு, பொட்டாசியம் குளோரேட் மட்டன்டாலோ, துத்தநாகம், ஈயம் போன்ற பொருள்களை சிட்கோ விநியோத்து வருகிறது. கல்கரி, மெழுகு மற்றும் குளோரேட் விநியோகம் இந்நிறுவனத்தின் விற்பனைத் திட்டத்தில் பெரும் பகுதியாகும். 1984—85 ஆம் ஆண்டில் விற்பனை ரூ. 18.42 கோடி மதிப்புள்ள 36,800 டன்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1985—86 ஆம் ஆண்டில் பொருள்களின் விநியோகம் ரூ. 25.00 கோடி மதிப்புள்ள 42,500 டன்கள் அளவிற்கு எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மத்திய, மாநில முதலீட்டு மானியம் வழங்குதல் :**

15 சதவீதம் முதலீட்டு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள 33 வட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட சிறு தொழில்களுக்கு மத்திய முதலீட்டு மானியமும் 24 வட்டங்களில் மாநில முதலீட்டு மானியமும் 1984—85 ஆம் ஆண்டில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. திருத்தப்பட்ட மத்திய முதலீட்டு மானியத் திட்டம் 92 வட்டங்களிலும் மாநில முதலீட்டு மானியத் திட்டம் 34 வட்டங்களிலும் (நிலையூர் 1 கிராமம் உள்பட) செயல்படுத்தப்பட்டு வருகிறது. 22 வட்டங்கள் இரண்டு திட்டங்களிலும் அடங்கியுள்ளன. 1984—85 ஆம் ஆண்டில் சிட்கோ செலவு ஈட்டுத் தொகையாக ரூ. 200 இலட்சம் பெறும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெறும் சிறுதொழில் நிறுவனங்கள் சம்பந்தமாக சிட்கோ செய்து வந்த வேலைகள் அக்டோபர் 1983-லிருந்து தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. எனினும் 1985—86 ஆம் ஆண்டில் ரூ. 150.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய முதலீட்டு மானியம் வழங்குவதில் இம்மாநிலம் தொடர்ந்து முதல் இடத்தில் இருக்கும்.

மாநில முதலீட்டு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1983—84 ஆம் ஆண்டில் 123 சிறுதொழில்களுக்கு மானியமாக ரூ. 29.08 இலட்சம் சிட்கோ நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. 1984—85 ஆம் ஆண்டில் 112 சிறு

தொழில்களுக்கு மானியமாக ரூ. 29.54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 60 இலட்சமாகும்.

மோட்டார் வாகன உதிரி உறுப்புகள், மருந்துப்பொருள்கள், மின்னணுப் பொருட்கள் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களுக்கென்று நிலையான சொத்தில் 10 சதவீதம் மானியம் வழங்கும் திட்டத்தை சமீபத்தில் அரசு அறிவித்தது. 1984–85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த அரசு சிட்கோவிற்கு ரூ. 20 இலட்சம் வழங்கியுள்ளது.

### சிறுதொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்குதல் :

மக்கள் தொகை மூன்று இலட்சத்திற்கு அதிகமாக உள்ள நகரங்கள் சென்னை நகர எல்லைக்குள் 15 கிலோ மீட்டர் பகுதி, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் நகர எல்லைக்குள் 8 கிலோ மீட்டர் பகுதி தவிர, இம்மாநிலத்தில் மற்ற பகுதிகளில் புதிதாக ஆரம்பிக்கப்படும் சிறுதொழில்கள் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கு தகுதியுடையனவாகும். 1984–85 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த சிட்கோவிற்கு ரூ. 50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் 57 சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடனாக ரூ. 50.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 60 இலட்சம்.

### நலிவுற்ற சிறுதொழில்களின் மறுவாழ்விற்கு முன் வரம்புத்தொகை உதவி அளித்தல் :

நலிவுற்ற சிறுதொழில்களின் மறுவாழ்விற்காக முன்வரம்புத் தொகை வழங்கும் திட்டம் 1979–80 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் சிறு அளவில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் சீரான முன்னேற்றம் அடைந்துள்ளது. இம் மாநிலத்தில் சிறு தொழில்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் நலிவுறும் சிறு தொழில்களின் எண்ணிக்கையும் அதிகமாகலாம். 1984–85 ஆம் ஆண்டில் இத் திட்டத்தை, சிட்கோ மூலம் செயல்படுத்த ரூ. 55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### சிறுதொழில்களுக்கு குறைந்த அழுத்த உதவி அளித்தல் :

சிறு தொழில்களுக்கு மின் கட்டண மானியம் வழங்கும் திட்டம் சிட்கோ மூலம் செயல்படுத்தப்படுகிறது. 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் வழங்கப்படவிருக்கிறது. 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 12 இலட்சம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### இலாப நிலை :

சிட்கோ நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது. 1983–84 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இலாபமாக ரூ. 39.23 இலட்சம் ஈட்டியுள்ளது. இதே நிலை வரும் காலத்தில் தொடர்ந்து இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிக்).

### I. தோற்றுவாய் :

கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 1949 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மாநில அளவிலான முதன்மை நிதி உதவி நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிக்) 1951 ஆம் ஆண்டு மாநில நிதி உதவி நிறுவனச் சட்டத்தின் செயல் வரம்புக்குள் செயல்படுகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள சிறிய நடுத்தர தொழில்களுக்குத் தேவைப்படும் நீண்ட கால கடன் குறித்து நிதி உதவி அளிப்பதே அதன் முக்கிய நோக்கமாகும்.

மாநிலத்தில் அதிக அளவு வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்கும் பொருட்டு, சிறிய, மிகச் சிறிய தொழில் பிரிவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிலம், கட்டிடம், தளவாடம், இயந்திரம், கருவிகள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்க இக்கழகம் கால முறைக் கடன்களை வழங்குகிறது. புதிய தொழில் பிரிவுகளைத் தொடங்குவதற்கு மட்டுமின்றி ஏற்கெனவே உள்ள பிரிவுகளை விரிவுபடுத்துதல், பலதிறப்படுத்துதல், நவீனப்படுத்தல் ஆகியவற்றுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. ரூ. 500 முதல் ரூ. 30 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படுகிறது.

**II. நிதி ஆதாரங்கள் :**

தமிழ்நாடு அரசும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியும், அளித்த பங்கு மூலதன உதவி, இந்திய தொழில் வளர்ச்சி வங்கி அளித்த மறு நிதி உதவி, பத்திரங்கள் முதலியவை இக்கழகத்தின் நிதி ஆதாரங்களில் அடங்கும். 31–3–1984 அன்றுள்ளவாறும் 31–3–1985 அன்றுள்ளவாறும் உள்ள நிலைமை வருமாறு :—

| | 31–3–1984 | 31–3–1985 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் கோடியில்.) | |
| பங்கு மூலதனம், மூலதனத்திற்கு பதிலாகக் கடன் .. .. .. | 29.99 | 33.99 |
| பத்திரங்கள் .. .. .. | 39.31 | 52.22 |
| இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதி உதவி .. .. | 86.42 | 105.78 |
| | 155.72 | 192.00 |

**III. நடவடிக்கைகளின் சிறப்பு அம்சங்கள் :**

1949—79 (30 ஆண்டுகள்) வரை உள்ள கால அளவிற்கும், 1979—85 வரை உள்ள கால அளவிற்கும், பின்வருமாறு அளிக்கப்பட்ட நிதி உதவி, சிறிய, மிகச்சிறிய தொழில் பிரிவுகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுத்து இக்கழகம் அளித்த கூடுதல் நிதி உதவியை தெளிவாகக் காட்டுகின்றது:—

| கால அளவு ஆண்டு 1949—79. | மொத்த அனுமதி. | சிறிய தொழில் பிரிவுகளுக்கு அனுமதி. | வழங்கப்பட்ட தொகை. | வசூல். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் கோடியில்.) | | |
| 30 ஆண்டுகள் | 130.83 | 39.68 | 83.56 | 49.20 |
| 1979–80 .. | 17.19 | 8.86 | 10.67 | 10.55 |
| 1980–81 .. | 36.90 | 22.68 | 22.59 | 11.47 |
| 1981–82 .. | 52.13 | 44.44 | 35.07 | 13.75 |
| 1982–83 .. | 55.87 | 48.59 | 39.56 | 19.85 |
| 1983–84 .. | 59.74 | 53.53 | 41.11 | 25.23 |
| 1984–85 .. (தற்காலிகமானது.) | 67.97 | 62.73 | 48.65 | 32.40 |
| | 289.80 | 240.83 | 197.65 | 113.25 |



**IV. சுயவேலை வாய்ப்பைப் பெருக்குதல் :**

சிறப்புத் திட்டங்கள் மூலமாக சுய வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்க இக்கழகம் தாராளமாக நிதி உதவி வழங்குகிறது. அவர்களுக்கு சுயவேலை வாய்ப்பு வசதியை அளிக்கும் பொருட்டு, லாரிகள், டிரக்குகள், சுற்றுலா டாக்சிகள், டெம்போக்கள், வேன்கள் போன்ற போக்குவரத்து வண்டிகளை வாங்கக் கடன்கள் வழங்கப்படுகின்றன. 1984–85-ல் (1985 மார்ச் வரை) கடன் கேட்டு விண்ணப்பித்த 1,092 பேர்களுக்கு மொத்தத்தில் சுமார் ரூ. 13.09 கோடி தொகையை இக்கழகம் வழங்கியுள்ளது. முதன் முதலில் முயற்சிகளை மேற்கொள்கிற தொழில் முனைவர்களுக்கும், தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், தொழில் பிரிவுகளை அமைத்து சுயவேலை வாய்ப்பைப் பெறும் பொருட்டு ரூ. 2 இலட்சம் அளவிற்குக் குறைந்த வட்டிக் கடன்கள் வழங்கப்படுகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் குறைந்த வட்டிக் கடன் வழங்கு திட்டத்தின்கீழ் தொழில் முனைவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி விவரம் வருமாறு :—

| ஆண்டு | | | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1982–83 | .. | .. | 24.00 |
| 1983–84 | .. | .. | 59.00 |
| 1984–85 (தற்காலிகமானது.) | .. | .. | 90.00 |

**கிடைத்த வேலை வாய்ப்பு (ஐந்தாண்டுகளில்) :**

கடந்த ஐந்தாண்டுகளில் இக்கழகம் நிதி உதவி அளித்த, தொழில் பிரிவுகள் மூலம் 1,87,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

**சிறு தொழில் பிரிவுகளுக்கு நிதி உதவி :**

சிறு தொழில் பிரிவுகளுக்கு நிதி உதவி அளிப்பது தொடர்பாகவே 'டிக்' நிறுவனத்தின் பெரும்பாலான நடவடிக்கைகள் அமைந்துள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து இது தெரிய வரும்.

| ஆண்டு. | | | சிறுதொழில் பிரிவுகளுக்கு நிதி உதவி. (ரூபாய் இலட்சத்தில்.) | மொத்த அனுமதிக்கும் சதவீதம். எண்ணிக்கை (சதவீதம்.) | தொகை. |
|---|---|---|---|---|---|
| 1981–82 | .. | .. | 4,444 | 99 | 85 |
| 1982–83 | .. | .. | 4,859 | 99 | 88 |
| 1983–84 | .. | .. | 5,353 | 99 | 90 |
| 1984–85 31–3–1985 வரை. | .. | .. | 4,805 | 99 | 97 |

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அளித்த சராசரி -ன் தொகை ரூ. 1.70 இலட்சமாகும்.

V. சில வகை தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக உள்ள கட்டுப்பாடுகளை நீக்குதல் :

தகுதியுள்ள சிறு தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதன் அவசியத்தையும் பின்தங்கிய பகுதிகளில் தொழில்களை வளர்ப் பதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டும் தனித்தியங்கவல்ல தன்மை காரணமாக சில வகைப் பிரிவுகளிடமிருந்து வரும் கூடுதல் தேவையைச் சமாளிக்கும் பொருட்டு சில வகை தொழில் களுக்கு நிதி உதவி அளிப்பதைப் பரிசீலிப்பது குறித்து விதிக்கப் பட்ட தற்காலிக தடையை நீக்குவதென முடிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக, மிதியச்சுப் பிரிவுகள், மாவு ஆலைகள், எண்ணெய் பிழியும் ஆலைகள், மரம் அறுக்கும் ஆலைகள், ஐஸ் கட்டி தயாரித்தல் போன்ற வாலாயமான தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

VI. தொழில் மயமாக்கும் சிறப்புத் திட்டம், சென்னை நகர்ப் புற மேம்பாட்டுத் திட்டம் II

1985-86-ல் உலக வங்கி உதவியுடன் கூடிய சென்னை நகர்ப் புற மேம்பாட்டுத் திட்டம் (III) நிலை MUDT என்று அழைக்கப்படும் திட்டத்தை தமிழ்நாடு அரசு மூலம் செயல்படுத்த இக்கழகம் நிர்வாக அமைப்பாகவும் செயல்படுகிறது. 1985 டிசம்பருக்குள் முடிக்கப்பட வேண்டிய இத்திட்டம் சிறு தொழில் களுக்கு உற்பத்தி அடிப்படை வசதிகளை அளிப்பதற்கு வகை செய்கிறது.

VII. ஊக்கமுள்ள தொழில் முனைவர்களுக்கு விரைந்து நிதி உதவி அளிக்கவும், தனித்தியங்கவல்ல திட்டங்களைச் செயல் படுத்த அவர்களுக்கு உதவவும் இக்கழகம் தொடர்ந்து முயற்சி மேற்கொள்கிறது.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) :

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், 36 தொழில் பிரிவு களைக் கொண்ட பல்வேறு வகையான பொருட்களைத் தயா ரிக்கும் நிறுவனமாகும். இத்தொழிற் பிரிவுகள், தொழில்- வணிகத் துறையால் பணி-பயிற்சி நிலையங்களாக தொடங்கப் பட்டு, பின்னர் பொருளாதார ரீதியில் ஆதாயத்துடன் செயல் படச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் 1-12-1965 முதல் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டவை களாகும்.





இந்நிறுவனத்திலுள்ள 56 தொழிற் பிரிவுகளைப் பின்வ ருமாறு வகைப்படுத்தலாம் :—

(1) கட்டுமானப் பட்டறைகள்.
(2) கருவிகள் பிரிவு-இணைந்த தொழிற் பிரிவுகள்.
(3) பொறியியல் தொழில் பட்டறைகள்.
(4) கட்டுமானப் பணிப் பிரிவுகள்.
(5) வார்ப்படத் தொழிற் பிரிவுகள்.
(6) தச்சுத் தொழிற் பிரிவுகள்.
(7) தோல் பொருள் தயாரிப்புப் பிரிவுகள்.
(8) சிறப்பு வகையிலான பல்வகைத் தொழிற் பிரிவுகள்.

டான்சி நிறுவனத்தின் பெரும்பாலான தொழில் பிரிவுகள் அரசுத் துறைகளிடமிருந்தும், இரயில்வே, மின் வாரியங்கள் அஞ்சல், தந்தித்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்தும் வரும் பணிகளையும், தனியார் நிறு வனங்கள் கேட்கின்ற பணிகளையும் நிறைவேற்றி வருகின்றன.

1983-84 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் உற்பத்தியின் மதிப்பு இதுவரையில்லாத அதிக அளவான ரூ. 2,514 இலட்சமாகும்.

1984-85 ஆம் ஆண்டில் டான்சி நிறைவேற்றிய சில முக்கிய பணிகள் வருமாறு :—

(1) கிருஷ்ணா நீர் திட்டத்திற்குத் தேவையான தடித்த தகடுகள் மற்றும் வார்ப்பட பெட்டிகள்.

(2) ஸ்ரீ ஹரிகோட்டாவிலுள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு ஏவுகணைகளை செலுத்துவதற்குத் தேவைப்படும் பானல் போர்டுகள் மற்றும் சில துணை பாகங்களைத் தயாரித்து வழங்கியது.

(3) பம்பாயிலுள்ள மத்திய இரயில்வேக்கு துத்தநாகம் பூசப்பட்ட கட்டுமானங்கள் தயாரித்து வழங்கியது.

(4) பாதுகாப்புத் துறைக்குத் தேவையான மின்னி இழைகளைத் (ப்யூஸ்) தயாரித்து வழங்கியது.

(5) சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலைக்கு கட்டுமானப் பணிகள்.

1984 டிசம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குத் தேவையான ஒட்டுப் பெட்டிகள், கான்வாஸ் மற்றும் பாலிதீன் பைகள் ஆகியவற்றை ரூபாய் 1 கோடி அளவிற்குத் தயாரித்து குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கியது. இது 1984–85-ல் டான்சி நிறைவேற்றிய பணிகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

20 அம்ச திட்டத்தின் கீழ், பகுதி அளவிலான தானியங்கும் தறிகளை (நேபாளி) அறிமுகப்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கு டான்சி தயாரித்துள்ள இம்மாதிரியான 10 தறிகளுக்குக் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இவைகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டு பெருமளவு தேவை கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

1983–84 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு ரூபாய் 211.29 இலட்சம் இழப்பு ஏற்பட்டது. டான்சியின் செயலாக்கத்தை மேம்படுத்தவும் மற்றும் இழப்பை குறைக்கவும் நிறுவனத்தின் பிரிவுகளில் மாற்றங்கள் செய்யப்பட உள்ளன. இவைகளைத் தவிர உற்பத்தியை பல்வகைப்படுத்தவும், மேம்பட்ட தொழில் நுட்பம் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்யவும் உயர் தொழில் நுட்பம் வாய்ந்த பணிகளை ஏற்று நிறைவேற்றவும் 1985–86-ல் பின்வரும் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன:—

| திட்டங்களின் பெயர். | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1. விண்ணமங்கலத்திலுள்ள டான்சி தோல் பதனிடும் தொழில் பிரிவை நவீனப்படுத்துதல். | 29.00 |
| 2. மேட்டூர் அணையிலுள்ள துத்தநாகம் பூசும் தொழிற்சாலையை நவீனப்படுத்துதல் .. | 14.00 |
| 3. ஈரோட்டிலுள்ள வார்ப்பட மற்றும் கனரகத் தொழிற்சாலையில் சுழல் உலைக்கலன் அமைத்தல் .. .. .. | 14.00 |
| 4. சூரிய சக்தி மூலம் மரம் பக்குவப்படுத்த சூளை அமைத்தல் .. .. .. .. | 0.70 |
| 5. இராணிப்பேட்டையிலுள்ள டான்சி இயந்திரக் கருவி பிரிவில் தலிப்பணி இயந்திரத்திற்குத் தலைமை பிரிவை அமைத்தல் .. .. | 8.00 |



| | |
|---|---|
| 6. திருச்சி டான்சி கட்டுமானப் பணிப் பிரிவில் அழுத்தக் கலன்கள் தயாரித்தல் .. .. | 20.00 |
| 7. பால் பண்ணை சாதனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களைத் தயாரித்தல் .. .. | 26.00 |
| 8. 400 கி.வா. மின்கடத்தி கோபுரங்கள் தயாரிப்பை நவீனப்படுத்தல் மற்றும் விரிவுப் படுத்தல் .. .. .. .. | 66.00 |
| 9. மின் அழுத்த மாற்றிகள் தயாரிப்பை நவீனப் படுத்தலும், விரிவுப்படுத்தலும் .. | 27.50 |
| 10. கன்வேயர் தொகுப்புகளை உற்பத்தி செய்யும் திட்டம் .. .. .. .. | 24.50 |
| 11. எண்ணெய்க் கிணறு தோண்டும் சாதனங்களையும், துணை பாகங்களையும் இறக்குமதி செய்வதற்கு பதிலாக உற்பத்தி செய்தல்.. | 59.50 |
| 12. சூரிய சக்தியால் இயங்கும் சாதனங்களைத் தயாரித்தல் .. .. .. .. | 12.50 |
| 13. கையால் செய்யப்படும் காகிதம் தயாரிக்கும் சிறிய இயந்திரங்களைத் தயாரித்தல் .. | 10.50 |
| 14. சிறிய அளவு நெசவு இயந்திரங்களைத் தயாரித்தல் .. .. .. .. | 10.50 |
| 15. தாரை சேமித்து வைப்பதற்கான சாதனங்களைத் தயாரித்தல் .. .. .. | 26.00 |
| 16. பயன்பாட்டிலுள்ள இயந்திரக் கருவிகளை பழுதுபார்த்தல் .. .. .. | 26.00 |
| 17. இயந்திரக் கருவிப் பிரிவை நவீனப்படுத்தல் | 0.003 |

## தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனம்.

தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனம், டான்சியின் துணை நிறுவனமாக 1977 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மொபட்டுகளுக்கு போதிய கிராக்கி இன்மையாலும் பொருளாதார ரீதியில் சாத்தியப்படக் கூடிய வகையில் இவற்றை உற்பத்தி செய்ய முடியாததாலும் மொபட் வாகன உற்பத்தியை இந்நிறுவனம் நிறுத்திவிட்டு, உலோகத் தகடுகளை உருவாக்கல் மற்றும் இதர பணிகளை செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் வருங்கால செயற்பாடு குறித்து அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

## தமிழ்நாடு தோல் தொழில் வ்ளர்ச்சி நிறுவனம் (டால்கோ).

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் தமிழ்நாட்டில் தோல் தொழிலை பலதுறைகளிலும் வளர்ச்சியுறச்செய்ய ரூ. 10 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் 1983 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து இயங்கி வருகிறது.

2. தமிழ்நாட்டில் தோல் தொழில் குறித்து விரிவான ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை அளிக்கவும், டால்கோ நிறுவனம் மேற்கொள்ளக்கூடிய திட்டங்களை வகைபடுத்தி தெரிவிக்கவும் வல்லுநர்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு தனது ஆய்வுப்பணிகளை முடித்துவிட்டது அதன் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

3. டால்கோவின் முக்கிய குறிக்கோள்கள் இரண்டு வகைப்படும். முதலாவதாக தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதும், மதிப்பு வாய்ந்த தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் ஏற்றுமதியை ஊக்குவிப்பதும் ஆகும். இரண்டாவதாக, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், தொழில் நுட்பம், நிதி உதவி, விற்பனை வசதி ஆகிய அனைத்து வசதிகளை ஒருங்கிணைந்த முறையில் அளிப்பதாகும்.

4. 1985–86 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன:—

(1) தோல் பொருட்கள், காலணிகளைத் தயாரிப்பதற்குத் தேவையான நவீன இயந்திரங்களைக் கைவினைஞர்களுக்கு நியாயமான விலையில் வழங்கப் பொது வசதி மையம் அமைத்தல்.



(2) சிறிய அளவில் தோல் பதனிடுவோர்க்கு உதவுவதற்காக மிக நுணுக்கமான இயந்திரங்களைக் கொண்ட தோல் பதனிடும் பொது வசதி மையங்களை அமைத்தல்.

(3) தோல் தொழிலுக்கெனத் தனியாக ஒரு தொழிற்பேட்டையை திண்டுக்கல் அருகில் நிறுவி, தோல் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு உதவும் பொது வசதி மையங்கள், மூலப் பொருட்கள் வங்கி, நவீன வடிவமைப்புக் கூடம் ஆகிய அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற ஏற்பாடு செய்தல்.

(4) கைவினைஞர்கள் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கைவினைஞர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் கிடைக்க பல்லாவரம், பெரம்பூர் ஆகிய இடங்களில் உற்பத்தி வசதி மையங்களை அமைத்தல்.

(5) வேலூர், திண்டுக்கல் ஆகிய இடங்களில் ஆதி திராவிட வகுப்பு மகளிருக்கு தோல் பொருட்களைத் தயாரிப்பதில் பயிற்சி அளிக்க இரு பயிற்சி நிலையங்கள் நிறுவுதல்.

(6) ஈரோடு மற்றும் பல்லாவரம் ஆகிய இடங்களில் மூலப் பொருட்கள் வங்கிகள் அமைத்து அதன் மூலம் சிறு தோல் பதனிடுவோர்களுக்கும் கைவினைஞர்களுக்கும் தேவையான மூலப் பொருட்கள் மற்றும் இராசாயனப் பொருட்களை நியாயமான விலையில் வழங்குதல்.

(7) காலணி மேல் பாகங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுதல்.

5. தோல் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள், கழிவு நீரினால், சுற்றுப்புறச் சூழல் மிகவும் பாதிக்கப்படுகிறது. இப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் வகையில் டால்கோ நிறுவனம் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் கூடிய ஒரு மைய சுற்றுப்புறச் சூழல் மையத்தைத் (Nucleus environment Cell) தோற்றுவித்துள்ளது:—

(1) தோல் கழிவுப் பொருட்கள், கழிவுநீரைப் பதப்படுத்துவதற்கான பொது இயந்திரங்களை அமைக்கத் தேவையான வடிவமைப்பு, விரிவான பொறியியல் திட்ட அறிக்கை தயாரித்தல், நிதி வசதி, இயந்திரங்களை நிறுவுதல் மற்றும் அவைகளைப் பராமரித்தல் ஆகிய பணிகளுக்கு டால்கோ ஒரு செயலாண்மை முகவராகச் செயல்படும்.

(2) சிறு தோல் பதனிடுவோர்க்கு கழிவுப்பொருட்கள், கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பம், மத்திய தோல் தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒத்துழைப்புடன் வழங்கப்படும். நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிபெற்றுத் தரப்படும். இப்பணிகளை ஒரு வழிக்காவல் சேவையாக ( scort Servic ) அளிக்கப்படும்.

6. மேற்கூறிய அனைத்துத் திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ. 4.70 கோடி ஆகும். இத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் சுமார் 6,920 நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். அதில் 50 விழுக்காடு தோல். தொழில் கைவினைஞர்களாக இருப்பர்.

தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்:

கைவினைஞர்களுக்கு தொழில் நுட்ப உதவி, தொழில் வளர்ச்சிக்கான உதவிகள் அளிப்பதன் மூலமும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதன் மூலமும், இம் மாநிலத்தில் கைத்திறப் பொருட்களின் வளர்ச்சிக்கும், அதன் விரிவாக்கத்திற்கும் தனியானதோர் எழுச்சியையும், புதிய வழி முறைகளையும் உருவாக்கி கைத்திறன் தொழில் மேம்பாட்டு வளர்ச்சி அடையச் செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இதற்காக தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி நிறுவனம் 1973-ல் நிறுவப்பட்டது.

இந் நிறுவனத்தின் கொள்கைகளில் ஒன்றின் அடிப்படையில் கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைத்திறன் பொருள்களை தமிழ்நாட்டிலும், மற்றும் இதர மாநிலங்களிலும் உள்ள விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்வதற்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்தின் சாதனைகள் கீழ் வருமாறு:

விற்பனை :

1983–84 ஆம் ஆண்டில் விற்பனை தொகை ரூ. 224 இலட்சமாக இருந்தது. 1984–85-ல் விற்பனைத் தொகை ரூ. 230 இலட்சம். 1985–86 ஆம் ஆண்டிற்கான விற்பனை குறியீட்டுத் தொகை ரூ. 275 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விற்பனை குறியீட்டை அடைவதற்கு இந்நிறுவனம் புதிய விற்பனை நிலையங்களை துவக்குவதற்கும், குறிப்பிட்ட கைவினைப் பொருட்களின் பொருட்காட்சிகளையும் மற்றும் எல்லா கைவினை பொருட்களுக்கான பொருட்காட்சிகளையும்



முக்கிய பெருநகரங்களில் நடத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இதைத் தவிர, அதிகமான வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையில் விற்பனை நிலையங்களைப் படிப்படியாக அழகுபடுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

1984–85 ஆம். ஆண்டில் இந்நிறுவனம் தமிழ் நாட்டிலும் மற்றும் வெளி மாநிலங்களிலும் பல பொருட்காட்சிகளை, விற்பனை தொகையை. பெருக்குவதற்கு மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களில் தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களின் சிறப்பை வெளிப்படுத்துவதற்காகவும் நடத்தியுள்ளது. இதைத் தவிர இந்நிறுவனம் பல்வேறு இடங்களில் அரசுத் துறை மற்றும் உள்ளாட்சி துறையினரால் நடத்தப்பட்ட பொருட்காட்சிகளிலும் கலந்து கொண்டது.

1984–85 ஆம் ஆண்டில் இந் நிறுவனம் திருப்பதியில் ஒரு புதிய விற்பனை நிலையத்தைத் துவக்கியது. தற்போது இந் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் இல்லாத பிற மாநிலத் தலைநகரங்களிலும் படிப்படியாக புதிய விற்பனை நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசினுடைய அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அவர்களிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவியைக் கொண்டு சென்னை மற்றும் மதுரையில் உள்ள விற்பனை நிலையங்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

உற்பத்தி :

உற்பத்தி நடவடிக்கைகளில் சீரான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. 1983–84 .ஆம் ஆண்டில் ரூ. 68 இலட்சமாக இருந்த உற்பத்தி அளவு 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 70 இலட்சமாக உயர்ந்தது. இந்நிறுவனம் 1985–86 ஆம் ஆண்டில் உற்பத்தியை ரூ. 80 இலட்சத்திற்கு உயர்ந்த திட்டமிட்டிருக்கிறது. இந் நிறுவனத்தின் உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகளின் மூலம் சுமார் 250 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

பயிற்சி :

தற்பொழுது செய்யப்படுகிற கைவினைத் தொழில்கள் அழியாமல் இருக்கவும், நலிந்த கைவினைத் தொழில்களை உயிரூட்டுவதற்கும் வேண்டிய பயிற்சி அளிப்பது இந்நிறுவனத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாக விளங்குகிறது. இந்த பயிற்சித் திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ்பெறப்பட்ட நிதி உதவிக் கொண்டு திருச்சியில் பிரம்பு மற்றும் அறைகலன் ஆகியவற்றில் 30

நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்நாடு ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக வைரம் வெட்டும் கலையில், சூரத்திலுள்ள இந்திய வைர நிறுவனத்தில் பயிற்சி அளிக்க அரசு ரூ. 1 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது. தற்போது சூரத்தில் 16 கைவினைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி காலம் ஓராண்டாகும். பயிற்சியாளர்களுக்கு பிரதி மாதமும் உதவித் தொகை ரூ. 250 அளிக்கப்படுகிறது.

இதுவரை பல்வேறு கைத்திறத் தொழில்களில் 1,196 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1984–85-ல் 67 நபர்கள் இதுவரை பயிற்சியை முடித்துள்ளனர். மேலும் 38 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம், நிறுவப்பட்ட சமயத்தில் அரசிடமிருந்து இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிப்பதனால் ஏற்படும் இழப்பை நேர் செய்வதற்காக பிரதி ஆண்டிற்கும் ரூ. 5.50 இலட்சம் வரையிலும் தமிழக அரசு நிதி உதவி அளிக்கிறது.

நிதி நிலை :

1982–83 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ. 3.95 இலட்சத்தை நிகர இலாபகரமாக ஈட்டியது. 1983–84 மற்றும் 1984–85 ஆம் ஆண்டுகளில் இந் நிறுவனத்தின் இலாபம் ரூ. 2 இலட்சம் அளவில் (தோராயமாக) இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. விற்பனை மற்றும் நிர்வாகச் செலவுகள் அதிகரிப்பதால் 1985–86 ஆம் ஆண்டின் நிகர இலாபம் குறைந்த அளவில் இருக்கும்.

அரசு நிதி உதவி :

இந்நிறுவனத்தின் திட்டங்களை செயல்படுத்த தமிழக அரசு மற்றும் மத்திய அரசினுடைய அபிவிருத்தி ஆணையர் (கைத்திறப் பொருட்கள்) ஆகியோரிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாடு அரசிடமிருந்து பங்கு மூலதனமாக ரூ. 99.19 இலட்சமும் மானியம் மற்றும் உதவித்தொகையாக அரசு ஒப்பளிப்பாய் ரூ. 52.66 இலட்சமும் பெறப்பட்டுள்ளது. இதே போல் மத்திய அரசின் அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அவர்களிடமிருந்து ரூ. 54.50 இலட்சம் பங்கு மூலதனமாக நிதி உதவி பெறப்பட்டது.



எதிர்கால நடவடிக்கைகள் :

இந்நிறுவனம் ஏழாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் ரூ. 209 இலட்சம் செலவினத்தில் சில திட்டங்களை செயல்படுத்த உத்தேசித்துள்ளது. அவற்றுள் கீழ்க் காணும் திட்டங்கள் முக்கியமானவை :

1. மூலப்பொருட்கள் கிடங்கு நிறுவுதல்.
2. கைத்திறப் பொருட்கள் அருங்காட்சியகம் அமைத்தல்.
3. கைவினைஞர்களுக்கு வீடுகட்டும் திட்டம்.
4. புது விற்பனை நிலையங்கள் திறத்தல்.
5. கைவினைஞர்களிடமிருந்து பொருட்களை நேரடியாக கொள்முதல் செய்தல்.
6. கைத்திறப் பொருட்கள் பிரிவுகளை பதிவு செய்தல்.
7. ஆதிதிராவிடர்களுக்கும், ஆதிதிராவிட பழங்குடியினருக்கும் ஒருங்கிணைந்த திட்டம்.

1985–86 ஆம் ஆண்டில் ரூ. 30 இலட்சம் செலவினத்தில் கீழ்க்கண்ட திட்டங்களை செயற்படுத்த உத்தேசித்துள்ளது :—

1. பித்தளை மற்றும் வெங்கல பொருட்களை கொள்முதல் செய்து அவற்றை கைவினைஞர்களுக்கு விநியோகிக்கக் கொள்முதல் நிலையங்களை அமைக்க ஒரு சுழல் நிதி உருவாக்குதல்:

2. கோயம்புத்தூர், திருநெல்வேலி, பெங்களூர் மற்றும் புது டெல்லியிலுள்ள விற்பனை நிலையங்களை புதுப்பித்தல்:

3. கைவினைஞர்களிடமிருந்து கைத்திறப் பொருட்களை நேரிடை கொள்முதல் செய்தல்.

4. வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்.

5. உலோகத் தகட்டு கலையில் பயிற்சி அளிக்க மதுரையில் ஒரு பயிற்சி நிலையம் அமைத்தல்.

6. தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் கைத்திறன்களைப் பற்றி ஆய்வு செய்தல் ; மற்றும்

7. புது விற்பனை நிலையங்கள் துவக்குதல்.

## பட்டு வளர்ச்சித் துறை

பட்டு வளர்ப்பு, வேளாண்மைத் தொழில் சார்ந்த கிராமப் புறங்களில் அதிக வேலை வாய்ப்பளிக்கக் கூடிய ஒரு தொழிலாக இருப்பதால், இம்மாநிலத்தில் இத்தொழில் வளர்ச்சிக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட முன்னோடி வசதித் திட்டங்களின் பலனாகவும், தொழில்நுட்ப உதவி மற்றும் நிதியுதவி பரவலாக்கப்பட்டதின் விளைவாகவும் 1979 ஏப்ரல் மாதம் 21,419 ஏக்கர் அளவில் இருந்த முசுக்கொட்டைச் செடி பயிர் பரப்பளவு 1985 மார்ச் மாதம் 67,062 ஏக்கர் அளவிற்கு அதிகரித்துள்ளது. முசுக்கொட்டைச் செடி பரப்பளவை அதிகப்படுத்தும் திட்டமும், பட்டுத்தொழிலில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டமும் 1985–86 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து கடைப்பிடிக்க உள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் 5,000 ஏக்கர் பரப்பளவில் முசுக்கொட்டைச் செடி பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர மலைப்பகுதியில் மானாவாரிப் பயிராக 500 ஏக்கர் பரப்பளவில் முசுக்கொட்டைச் செடி பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. மலைப் பகுதியிலுள்ள பட்டு விவசாயிகளுக்கு வேரூன்றிய முசுக்கொட்டை விதைச் செடிகளை இலவசமாக விநியோகிக்கப்பட உள்ளது.

2. துரிதமான பிரச்சாரம் மற்றும் விளம்பரங்களின் விளைவாக, பட்டு வளர்ப்பு விவசாயிகளிடையே பட்டுவளர்ப்பு பற்றிய ஒரு பொதுவான விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, 1985–86 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சித் திட்ட கால அளவு 2 மாதத்திலிருந்து ஒரு மாதமாகக் குறைக்கப்பட்டு ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 100 உதவித் தொகை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் 3,000 விவசாயிகளுக்கு பட்டுவளர்ப்பில் நவீன முறை மற்றும் தொழில் நுணுக்கங்கள் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. 1985–86 ஆம் ஆண்டில் 1,500 விவசாயிகளுக்கு பட்டுவளர்ப்பு பற்றி பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

3. மத்திய பட்டு வாரியத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட உயர்மட்ட தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், பட்டு வித்து முட்டை உற்பத்தியை இம்மாநிலத்தில் சீரமைக்கும் திட்டத்தை 1985–86 ஆம் ஆண்டில் ஒரு முக்கிய திட்டமாக செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தை செயல் படுத்துவதின் மூலம் மைசூரில் உள்ள மத்திய பட்டு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் ஆராய்ச்சிகளின் மூலம் புதியதாக கண்டுபிடிக்கப்படுகிற புதிய பட்டுப்புழு இனங்களை அபிவிருத்தி செய்து விவசாயிகளுக்கு செவ்வனே விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இதனால், தரமான பட்டு



முட்டைகள் உற்பத்தி செய்வது உறுதிப்படுகிறது. இந்த நடவடிக்கைகளில் முக்கிய ஒரு செயலாக சில, அரசுப் பட்டுப் பண்ணைகளுக்குத் தேவையான கூடுதல் வசதிகள் செய்து தரப்படும்.

4. நியூயார்க்கிலுள்ள போர்டு புவுண்டேசன் எனும் நிறுவனத்தின் உதவியுடன் தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்புத்துறையில் பெண்களுக்காக சுயவேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்திற்கு அரசு 1984-ல் ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின் கால அளவு 3 ஆண்டுகளாகும். இத்திட்டத்திற்கான போர்டு பவுண்டேசன் நிறுவனத்தின் நிதி உதவி 2,80,000 அமெரிக்க டாலர்கள் ஆகும். (ரூ. 26.82 இலட்சம்) இத்திட்டத்தின் கீழ் 200 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் தற்போது சரகங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 100 விவசாய பெண்கள் பயிற்சியும் உதவியும் பெற்றுள்ளனர்.

5. 1985–86 ஆம் ஆண்டில் கூட்டுறவு அடிப்படையில் மேலும் மூன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகள் செய்து பட்டு நூற்புத் தொழில் பலப்படுத்தப்பட உள்ளது.

6. 1985–86 ஆம் ஆண்டுக்கு பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு ரூ. 170.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

# இணைப்பு—1

1–4–1984 முதல் 31–3–1985 வரையுள்ள காலத்திற்கான முன்னேற்ற அறிக்கை.

| வரிசை எண். | மாவட்டம். | பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் சான்றிதழ்களின் எண்ணிக்கை. | | | உற்பத்தியை தொடங்கிய கைவினைத் தொழில் கைவினை ஓர் தொழில் பிரிவுகள். | | வங்கிகள் மூலமாக நிதியுதவி. | | ஏனைய நிதியுதவி நிறுவனங்கள் தன் மூலமாக நிதியுதவி. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிலை மானவை. | தற்காலிக மானவை. | வேலை வாய்ப்பு | பிரிவுகள். | வேலை வாய்ப்பு. | பிரிவுகள் | தொகை | பிரிவுகள் | தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | செங்கல்பட்டு .. .. | 959 | 3,366 | 12,008 | 16 | 55 | 3,217 | 584.88 | 240 | 385.24 |
| 2 | தருமபுரி .. .. | 244 | 1,462 | 2,928 | 380 | 1,020 | 29 | 2.86 | 41 | 147.39 |
| 3 | கன்னியாகுமரி .. .. | 249 | 826 | 2,988 | 378 | 776 | 258 | 34.65 | 55 | 17.18 |
| 4 | புதுக்கோட்டை .. | 375 | 619 | 6,500 | .. | — | .. | .. | 106 | 22.41 |
| 5 | இராமநாதபுரம் .. | 500 | 1,834 | 6,790 | 155 | 252 | 3 | 1.33 | 54 | 4.60 |
| 6 | சேலம் .. .. | 879 | 2,875 | 16,548 | 406 | 1,281 | 23 | 22.51 | 60 | 107.80 |
| 7 | திருநெல்வேலி .. | 704 | 3,165 | 9,196 | 448 | 802 | 101 | 6.74 | 106 | 94.73 |
| 8 | தென் ஆற்காடு .. | 469 | 825 | 5,628 | 90 | 41,000 | 3 | 0.49 | 582 | 53.80 |
| 9 | மதுரை .. .. | 828 | 3,354 | 16,936 | 701 | 1,474 | 130 | 79.87 | 143 | 90.30 |
| 10 | வட ஆற்காடு .. .. | 754 | 2,398 | 9,048 | 868 | 2,466 | 19 | 2.50 | 219 | 174.38 |
| 11 | பெரியார் .. .. | 553 | 1,111 | 8,116 | 54 | 254 | 32 | 11.33 | 79 | 86.61 |
| 12 | தஞ்சாவூர் .. .. | 510 | 1,094 | 6,228 | 181 | 423 | 7 | 1.60 | 126 | 51.60 |
| 13 | திருச்சிராப்பள்ளி .. | 743 | 1,375 | 9,916 | 403 | 806 | .. | .. | 140 | 121.27 |
| 14 | கோயம்புத்தூர் .. | 1,877 | 3,236 | 27,524 | 472 | 1,180 | 16 | 2.30 | 1,509 | 99.86 |
| | மொத்தம் .. | 9,698 | 27,440 | 14,354 | 4,422 | 11,789 | 3,838 | 751.56 | 3,466 | 1,457.23 |

சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் இதில் சேர்க்கப்படவில்லை.
இவை இரண்டிலும் மொத்தம் 1,265 தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இணைப்பு—2

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டம்.

1984–85-ஆம் ஆண்டில் 31–3–1985 வரையான காலத்தின் முன்னேற்ற அறிக்கை

(ரூபாய் இலட்சத்தில்.)

| வரிசை எண். | மாவட்டம். | மத்திய அரசின் திட்ட இலக்கு. | நிதி மத்திய இலக்கு | மாவட்டத் தொழில் மையங்களால் அனுப்பப்பட்டு சிறப்புப் பணி பிரிவினால் பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்கள். | | வங்கிகளால் ஒப்பளிக்கப் பட்ட விண்ணப்பங்கள். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | அலகுகள். | தொகை. | அலகுகள். | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | செங்கல்பட்டு .. .. | 2,795 | 559 | 2,804 | 798.85 | 2,878 | 635.50 |
| 2 | வட ஆற்காடு .. .. | 2,600 | 520 | 3,701 | 920.34 | 2,683 | 561.55 |
| 3 | தென் ஆற்காடு .. .. | 1,100 | 220 | 1,452 | 303.40 | 1,081 | 224.39 |
| 4 | சேலம் .. .. | 1,750 | 350 | 2,285 | 480.45 | 1,785 | 348.63 |
| 5 | தருமபுரி .. .. | 650 | 130 | 764 | 143.01 | 568 | 105.59 |
| 6 | கோயம்புத்தூர் .. | 2,850 | 570 | 4,390 | 773.87 | 2,869 | 536.98 |
| 7 | பெரியார் .. .. | 1,300 | 260 | 1,420 | 207.30 | 1,007 | 196.37 |
| 8 | திருச்சிராப்பள்ளி .. | 1,425 | 285 | 1,781 | 308.50 | 1,281 | 232.48 |
| 9 | புதுக்கோட்டை .. | 650 | 130 | 839 | 161.86 | 644 | 114.21 |
| 10 | தஞ்சாவூர் .. .. | 1,100 | 220 | 936 | 191.35 | 1,182 | 233.48 |
| 11 | மதுரை .. .. | 2,150 | 430 | 2,693 | 611.31 | 2,288 | 487.37 |
| 12 | இராமநாதபுரம் .. | 1,730 | 346 | 2,109 | 335.09 | 1,738 | 272.29 |
| 13 | திருநெல்வேலி .. | 1,300 | 260 | 3,061 | 428.12 | 1,361 | 289.56 |
| 14 | கன்னியாகுமரி .. .. | 300 | 60 | 487 | 84.26 | 351 | 58.16 |
| | மொத்தம் .. | 21,700 | 4,340 | 28,602 | 5,746.01 | 22,084 | 4,216.49 |

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்.

செயலக வெளியீடு.

வெள்ளிக்கிழமை, 1985 ஜூலை 12, ஆனி 28, குரோதன,

திருவள்ளுவராண்டு-2016. VA 217 No. 2.

தொகுப்பு 217 எண் 2.

பொருளடக்கம். பக்கங்கள்


1. அரசின் தீர்மானங்கள்—

(1) கேள்வி நேரம் கைவிடப்படல் 257

(2) தொழில் கொள்கைகளும், திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி 261—326

(3) ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். 381

(4) பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். 381

2. அறிவிப்புகள்—

(1) ஆளுநரிடமிருந்து செய்தி 257

(2) பேரவையிலிருந்து செய்தி 258

3. கவன ஈர்ப்பு—

(1) தமிழ் நாட்டில் சுமார் 2 இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் விடுத்துள்ள வேலை நிறுத்த அறிவிப்பு குறித்து. 258—260

(2) பண்ருட்டி வடகைலாசம் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் செயல்படாமலிருப்பது குறித்து. 260—261

4. அரசின் சட்ட முன்வடிவுகள்—

(1) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1985). 326—353


143960

V211,32'N85
NS.217.1-2

(2) 1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1985.) 353—355

(3) 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1985). 355—380

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 382—384

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1985 ஜூலை 12.

ஆனி 28, குரோதன—திருவள்ளுவராண்டு-2016.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. அரசின் தீர்மானங்கள்.

(1) கேள்வி நேரம் கைவிடப்படல்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"மேலவை விதி 22 நிறுத்தி வைக்கப்பட்டு, இன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 22 நிறுத்தி வைக்கப்பட்டு, இன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் அவர்கள் 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவினை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

(2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப் படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/85).

2. 1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/85).

3. 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/85).

3. கவன ஈர்ப்பு.

(1) தமிழ் நாட்டில் சுமார் 2 இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் விடுத்துள்ள வேலை நிறுத்த அறிவிப்பு குறித்து.

திரு. க. சுப்பு: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"தென்னிந்திய பஞ்சாலை உரிமையாளர்கள் சங்கம் பஞ்சாலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் மீது கொண்டுள்ள தவறான கொள்கையினால் தமிழ் நாட்டில் சுமார் இரண்டு இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் விடுத்துள்ள வேலை நிறுத்த அறிவிப்பு காரணமாக ஏற்பட்டுள்ள கடுமையான நிலைமை குறித்து".

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே இது குறித்து ஒரு தகவல் அறிக்கை @ மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

---

@ 384—385 ஆம் பக்கங்களில் இணைப்பு- ஆக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. க. சுப்பு: தலைவரவர்களே, தகவல் அறிக்கையில் புதிதாகத் தகவல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் நிர்வாகத் தரப்பில் வைத்திருக்கும் கோரிக்கைகள்—(1) விஞ்ஞான ரீதியில் வேலைப் பளு நிர்ணயித்தல்; (2) உற்பத்தியுடன் இணைந்த ஊதியம்; (3) ஆறு மாதத்திற்கு ஒருமுறை பஞ்சப்படியுடன் விலைவாசிக் குறியீட்டுப் புள்ளியினை இணைத்தல் போன்ற எதிர்மறை கோரிக்கைகள் (கவுண்ட்டர் டிமான்ட்ஸ்) பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களின் 15 அம்சக் கோரிக்கை பற்றியோ அல்லது அவர்கள் 16 ஆம் தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட இருப்பது பற்றியோ இதில் எந்தவிதக் குறிப்புமில்லை. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகச் சம்பளம் கொடுக்கப்படுகிறதென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வடக்கே, மபத்லால் மில் போன்ற மில்களில் நவீன இயந்திரங்களை வைத்திருக்கிறார்கள். இங்கே மிகவும் மோசமான இயந்திரங்களை வைத்திருக்கிறார்கள். மனித உழைப்பு இங்கே அதிகம். வடக்கே இயந்திர உழைப்பு அதிகம். அங்கே ஒரு நிமிடத்திற்கு 340 மீட்டர்கள் அளவுக்கு இயந்திரங்கள் நெய்கின்றன. இங்கே கன்டெம் செய்ய வேண்டிய இயந்திரங்களை வைத்துக்கொண்டு, 190 மீட்டர் வரைதான் செய்ய முடியும். இன்னும் சொல்லப்போனால் குஜராத் மாநிலத்தில் அகமதாபாத்திலும், மராட்டிய மாநிலத்திலும் இருக்கக்கூடிய தொழிலாளர்களோடு 10 சதவீதம் ரிசர்வ் வைக்க வேண்டுமென்பதைக் கடைப்பிடிக்கிறார்கள். இங்கே, இருப்பதிலே 10 சதவிகிதம் குறைக்கிறார்கள். இங்கே தற்காலிகம், கேஷுவல் லேபர், கேட் லேபர் என்று எல்லாம் புகுத்தி பல்வேறு முறையில் கொள்ளை, சுரண்டல் இருக்கிறது. இதனால் மேன்மேலும் தொழிலாளர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்படுவதால், இதில் அவசர உணர்வோடு அரசு நடக்கவேண்டும். அந்த அவசர நிலையை உணர்ந்து, அமைச்சரவர்கள் இதில் உடனடியாகத் தலையிட்டு, தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு முன்பாக பிரச்சினையைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-05)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பொறுப்புமிக்க உறுப்பினருடைய ஆலோசனைக்கிணங்க இன்று முற்பகல் 10 மணிக்கு அவர்களை எல்லாம் கோட்டையில் அழைத்துப் பேசி ஒரு சுமுகமான முடிவைத் துரிதமாக எடுக்க இந்த அரசு ஆவன செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 ஜுலை 12

திரு. க. சுப்பு: இது குறிப்பில் இல்லை. வருகிற 15 ஆம் தேதி இந்தியப் பிரதமர் சென்னைக்கு வருவதால், அந்த நேரத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடலாம் என்கிற எண்ணம் இருக்கிறது. அதையும் மனதில் வைத்து பேச்சு வார்த்தையின்போது நல்ல முறையில் மாற்று ஏற்பாட்டிற்கு வழிவகை காணப்படுமா? ஸ்ட்ரைக் செய்துதான் தீர வேண்டுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இன்று சந்திக்கின்ற** நேரத்தில் இந்தக் கருத்துக்களை எல்லாம் மையமாக வைத்து சுமுகமான முடிவு ஏற்பட அரசு முயலும்.

### (2) பண்ருட்டி வடகைலாசம் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் செயல்படாமலிருப்பது குறித்து.

திரு. அ. ப. சிவராமன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"கடந்த ஆறு மாத காலமாக பண்ருட்டி வடகைலாசம் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் செயல்படாததால், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு குறித்து".

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அவைமுன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. அ. ப. சிவராமன்: 6—8—1984 அன்று தனி அலுவலரை நியமிக்க ஆணையிட்டுள்ளதாக அரசுத் தரப்பில் சொல்லப்பட்டிருப்பது வியப்பாக இருக்கிறது. 6—8—1984 முதல் 10—8—1984 வரை 5 **நாட்கள் மூடப்**பட்டிருந்ததால், சம்பந்தப்பட்ட ஊழியர்கள்தான் கோர்ட்டில் 'ஸ்டே' வாங்க உடந்தையாக இருந்திருக்கிறார்கள். சங்க நடவடிக்கைக்கு யார் காரணம்? முறைகேடாகப் பூட்டப்பட்டிருந்த அலுவலகத்தினுடைய பூட்டை அகற்றியிருக்கக் கூடாதா? சம்பந்தப்பட்டவர்கள் யார் என்று அறிந்து, காரணமானவர்கள் மீது கோர்ட் நடவடிக்கை எடுக்கப்படுமா? எனக்குத் தெரிந்த வரை, அதற்குக் காரணமானவர்கள் அதிகாரிகள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

---

@ 385–386 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1985 ஜூலை 12]

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** அது மூடப்பட்டதற்கு துறை அதிகாரிகள்தான் காரணம் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது பற்றி ஆராய்ந்து பார்த்து அவர் சொல்வது உண்மையாக இருக்கும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ப. சிவராமன்: கடந்த 6 மாத காலமாக சங்கம் செயல்படவில்லை. இந்தப் பகுதி விவசாயிகள் இதன் காரணமாக கடன் பெறுவதிலும், செலுத்துவதிலும் வழிவகை இல்லாத நிலையில் பெரும் துயரில் இருக்கிறார்கள். வேறு வழியில்லாத நிலையில் இந்தச் சங்கத்தை மட்டுமே அவர்கள் நம்பியிருந்தார்கள். இதற்கு ஒரு மாற்று வழி செய்தால் இந்தச் சங்கத்தை நம்பியிருந்த நூற்றுக்கணக்கான விவசாயிகளுடைய குடும்பத்தை வாழ வைத்தது மாதிரி இருக்கும். இதையும் மனதில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** இடைக்கால உத்தரவு வாங்கப்பட்டிருப்பதால், சம்பந்தப்பட்ட சங்கத்தின் மூலம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாதவாறு தடை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் விவசாயிகள் எல்லாம் ரொம்பவும் சிரமப்படுவதாகச் சொல்கிறார். அதை கருத்தில் கொண்டு மாற்று வழி செய்ய சட்டத்தில் வழிவகை இருந்தால், நிச்சயமாக விவசாயிகளுக்கு உதவி செய்ய, இந்த அரசு எப்போதும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 1. அரசின் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (2) தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. எம். பி. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது நேற்றையதினம் இரண்டு தரப்பிலேயிருந்தும் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அப்போது உறுப்பினர்கள் தமிழ்நாடு மேலும் தொழில்கள் தொடங்கி வளர்ச்சியடைவதற்குரிய ஆலோசனைகளைச் சொன்னார்கள். சில உறுப்பினர்கள் மத்திய அரசை தமிழ்நாடு அரசு வற்புறுத்தி, தொழில்களுக்குக் கூடுதலாக முதலீடு செய்ய வழிவகை காண வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் சமீப காலத்தில்

தமிழகத்தில் தொழில்கள் தொடங்க மத்திய அரசு அதிகமாக முதலீடு செய்ய வில்லை என்றும் தெரிவித்தார்கள். கடைசியாகப் பேசிய ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் கவிஞர் முத்துலிங்கம் அவர்கள் இந்த விவா தத்திலே சற்றும் பொருத்தமில்லாத வகையில் காங்கிரஸ் கட்சித் தலைவர் களைப்பற்றி, இந்த அவையிலே நடைபெறாத, வெளியிலே நடைபெற்ற பேச்சுகளை எடுத்துச் சொன்னதுடன், கிண்டலும் கேலியுமாகப் பேசியதை நான் பார்த்தேன். நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் ஒரு கருத்தைத் தெரி வித்தாராம். அதேபோல ஆந்திராவைச் சேர்ந்த திருமதி ஜமுனா அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தில் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே ஆளும் கட்சியாக காங்கிரஸ் கட்சி வரும் என்று சொல்லியிருக் கிறார்களாம். அதில் என்ன தவறு? அப்படிப் பேசக் கூடாதா? சட்ட சபையில் உறுப்பினர்களாக இல்லாமல் இருப்பவர்கள் கூட வெளியே பொதுக் கூட்டத்தில் பேசும்பொழுது ஆட்சியை பிடிப்போம் என்று பேசுகிறார்கள். அ.தி.மு.க. என்கிற பெயரை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைத்திருப்பதால், இந்திய அளவிலே நாங்கள் ஆட்சியைப் பிடிக்கப் போகிறோம் என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளட்டும். அப்படிச் சொல்வதிலும் தவறு இல்லை. காரணம் இவர் களுக்கும் அப்படிச் சொல்வதற்கு ஜனநாயக உரிமை இருக்கிறது. நிலைமை இவ்வாறிருக்க, மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் போது, அவர்கள் பொதுக் கூட்டத்தில் பேசியதைக் குறிப்பிட்டு, '1985 ஆம் ஆண்டின் ஈடு இணையில்லா நகைச் சுவையாக இருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-10)

என் இந்தக் கேலியும் கிண்டலும் என்பது எனக்குப் புரியவில்லை. ஒன்றை மட்டும் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன், அவரும், நானும் சேர்ந்த இந்தத் தமிழ்நாட்டை உள்ளடக்கிய பாரத தேசத்தில் உள்ள 22 மாநிலங்களில் இருக்கும் மக்களையும் ஆளும் அதிகாரத்தை இந்த நாட்டு மக்கள் காங்கிரஸ் கட்சியின் கையில்தான் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

இன்று நேற்றல்ல, 1946-லிருந்து சுதந்திரம் இந்த நாட்டுக்குக் கிடைப்ப தற்கு முன்பும், கிடைத்ததற்குப் பின்னாலும் சரி, 40 ஆண்டுக்காலமாக, இடையில் ஒரு மூன்றாண்டுக்காலம் தவிர, காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் இந்த நாட்டு மக்களிடையே கூடுதலான செல்வாக்கோடு, அரசாட்சியைச் செய்து கொண்டு வருகிறது. ஏன், இந்தத் தமிழ் நாட்டில்கூட, 1946 ஆம் ஆண்டு





முதல், 1967 ஆம் ஆண்டு வரை, 21 ஆண்டுக்காலம், தமிழ் நாட்டின் வரலாற்றில் பொற்காலம் என்று சொல்லக்கூடிய ஒரு நல்லாட்சியை ஏற்படுத்தித் தந்ததே காங்கிரஸ் கட்சிதான் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த நாட்டிற்கு சுதந்திரம் கிடைக்க அரும்பாடு பட்ட, பல்வேறு தியாகங்களைச் செய்த அறிஞர்கள், வல்லுநர்களை உருவாக்கிய காங்கிரஸ், நூற்றாண்டு விழா நடக்கிற இந்தக் காலக் கட்டத்தில், அந்தக் கட்சி ஆளுங்கட்சியாக வர வாய்க் கில்லை என்று உறுப்பினர் கருதுகிறார்களா என்று தெரியவில்லை.

ஒரு கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு, பிறகு நான்காண்டுகளுக்குள் தேர்தலைச் சந்தித்து, தன்னை வளர்த்த கட்சியையே தோற்கடித்துவிட்டு, தொடர்ந்து மூன்று முறை ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய அளவிற்கு அ.இ.அ.தி.மு.க. இருக்கும்போது, இந்த நாட்டின் பொற்காலத்தை உரு வாக்கிய ஒரு கட்சிக்கு மீண்டும் ஆளுங்கட்சியாக வர வாய்ப்பில்லை என்று சொல்லிவிட முடியுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்கள் காங்கிரஸ் கட்சியைப் பற்றி உணர்ச்சி பூர்வமாகப் பேச வேண்டுமென்றுதான் கவிஞர் முத்துலிங்கம் அவ்வாறு பேசியிருக்கக்கூடும்.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: நன்றி. ஆனால் அதற்கு இடம் இந்த அவை அல்ல. பொதுக் கூட்டங்களில் பேசலாம். இந்த அவையில் அவ்வாறு பேசியது தேவையில்லாதது என்று குறிப்பிட விரும்புகிறேன். அவர் கவிஞ ராக இருப்பதாலேயே காங்கிரஸ் கட்சி ஆளுங்கட்சியாக வர அருகதையில்லை என்று உறுப்பினர் உணர்ச்சி வசப்பட்டுப் பேச, அவையில் அப்படிப்பட்ட அவசியம் ஏற்பட்டுவிடவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் கவிஞராக இருந்தாலும், கவிதை நடையில்தானே பேசினார்?

திரு. எம். பி. சுப்பிரமணியம்: இந்த விவாதத்திற்குச் சற்றும் பொருத்தம் இல்லாத பேச்சு என்றுதான் குறிப்பிடுகிறேன்.

இன்றையதினம், தமிழ் நாட்டின் தொழில் கொள்கையை எடுத்துக்கொண் டால், தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் எத்தனையாவது இடத்தில் இருக் கிறது என்ற பிரச்சினை இல்லை. நாட்டில் வறுமையையும், ஏழ்மையையும் ஒழித்துவிட்டோமா என்றுதான் பார்க்க வேண்டும். ஆனால் வறுமையும், ஏழ்மையும் நிறைய இருக்கிறது. கிராமப்புறங்களில் வறுமையின் அளவு

50 சதவிதம் என்றும், நகர்ப்புறங்களில் 45 சதவிதம் என்றும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மக்களின் வறுமையைப் போக்க வேண்டுமென்று சொன்னால், மக்களின் வருமானத்தைப் பெருக்க வேண்டும். வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டும். வேலை வாய்ப்புப் பெருக வேண்டுமென்றால், தொழில்நுட்பம் பெருக வேண்டும் அப்படி வருமானத்தைப் பெருக்கவில்லையென்றால், ஏற்றத் தாழ்வுதான் ஏற்படும்.

ஏற்றத்தாழ்வு என்பது, நாட்டுக்கு நாடு வித்தியாசப்படலாம். ஒரு நாட்டினுள்ளே இருக்கிற ஒவ்வொரு மாநிலத்திற்கும்கூட ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடும். ஒரு மாநிலத்திற்குள்ளே இருக்கிற மாவட்டங்களுக்குள்கூட ஏற்றத்தாழ்வு இருக்க முடியும். ஆகவே, ஏற்றத்தாழ்வு எங்கே இருந்தாலும், சமுதாயத்தில் பல பிரச்சினைகள் உண்டாகியிருக்கின்றன என்பதுதான் உண்மை. உலகத்தில் உள்ள பல பகுதிகளில் ஏற்படுகிற குழப்பங்களுக்கெல்லாம் இந்த ஏற்றத்தாழ்வுகள்தான் காரணம். இந்த ஏற்றத் தாழ்வுகளால் சமுதாயத்திலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே இன்றையதினம், மத்திய அரசு தமிழ் நாட்டில் தொழில் முதலிடுகளை ஏராளமான அளவில் செய்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ரயில்பெட்டி தொழிற்சாலையானாலும் சரி, ஆவடியில் துணி உற்பத்தித் தொழிற்சாலையானாலும் சரி, டாங்க் பாக்டரியானாலும் சரி, ஹெவி வெகிக்கிள்ஸ் பேக்டரியானாலும் சரி, திருச்சியில் உள்ள 'பெல்' நிறுவனமானாலும் சரி, எல்லாம் மத்திய அரசு ஆரம்பித்த தொழில்கள்தான். ஆனால் அண்மைக்காலத்தில் மத்திய அரசாங்கத்தின் தொழில் முதலிடு கூடுதலாக இல்லையென்பதும் உண்மைதான். அதை நாம் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அதில் எங்கள் கட்சிக்கும் உடன்பாடு உண்டு. ஆனால் மத்திய அரசு வெறும் மூலதனம் போட்டு விடுவதால் மட்டுமே தமிழ் நாடு வருமானத்தில் பெரும் வளர்ச்சி அடைந்து விடுமென்ற ஒரு தவறான கருத்து இருக்கிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், பீகார் மாநிலத்தில் ஏராளமான அளவில் மத்திய தொழில் முதலிடு போடப்பட்டு, பல்வேறு தொழிற்சாலைகளைத் துவங்கியிருக்கிறார்கள். ஆனால் பீகாரை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், பல மாநிலங்களின் வளர்ச்சிக்குக் கீழேதான் அவர்களுடைய வளர்ச்சி, மக்களுடைய வாழ்வு இருக்கிறது என்ற நிலைமை



யைத்தான் நாம் காண முடிகிறது. அப்படி இருக்கும்போது, பெரிய அளவில், தொழில் முதலிடு செய்து தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்திவிட்டு, அதன் காரணத்தாலேயே மட்டும் அந்த மாநிலத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிடும் என்று சொல்வது பொருத்தமாக இல்லை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ் நாட்டில் பல தொழிற்சாலைகள் ஆரம்பித்தால், இங்கே உற்பத்தியாகும் அத்தனை பொருட்களும் தமிழ் நாட்டு மக்களுக்கே உரிமையானவை என்று கொண்டாட முடியாது. அனல் மின் நிலையமாக இருந்தாலும், ரயில்வே தொழிலானாலும் சரி, வேறு பல தொழிற்சாலைகளானாலும் சரி, அது அனைத்து மக்களுக்கும் பொதுவானதாகத்தான் இருக்க முடியும்.

(முற்பகல் 10-15)

உற்பத்தியாகக்கூடிய மின்சாரம்—அது அணு மின் நிலையத்திலிருந்து உற்பத்தியானாலும் சரி, அல்லது நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்து உற்பத்தியானாலும் சரி—எல்லா மாநிலங்களுக்கும் பொதுவாக இணைக்கப்பட வேண்டும். அதுதான் ஒப்புக்கொள்ளக்கூடிய வாதமாக இருக்க முடியும். தமிழ் நாட்டில் உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தை தமிழ் நாட்டுக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்று சொல்வது சரியல்ல.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டாலும், அவற்றில் பல இடங்களில் தொழிற்சாலைகள் தொடங்கும் பகுதியில் உள்ள சாதாரண தமிழ் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படுவதில்லை. சேலம் இரும்பாலையாக இருந்தாலும், கல்பாக்கம் அணு மின் நிலையமாக இருந்தாலும், அங்கெல்லாம் கேரளாக்காரர்கள், ஆந்திராக்காரர்கள்தான் கூடுதலாக இருக்கிறார்கள். விஞ்ஞானிகள், டெக்னீஷியன்கள் அவ்வாறு இருக்கலாம். ஆனால் 'அன்ஸ்கில்டு லேபர்' கூட அப்படி இருக்க வேண்டுமா? அந்தப் பகுதியில் வாழாதவர்கள் பணியில் இருப்பது இந்தத் தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் ஏற்படுவதன் அவசியத்தையே போக்கிவிடுகிறது. நான் மண்ணின் மைந்தன் கொள்கையை ஆதரிப்பதாக அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது. அப்படிப்பட்ட தொழில்களை இதுபோன்ற பகுதிகளில் ஆரம்பிப்பதன் உண்மையான குறிக்கோள் போய்விடுகிறது. சாதாரண மக்கள், பின்தங்கிய மக்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகத்தான் பின்தங்கிய பகுதிகள் எவை என்று தேர்ந்தெடுத்து அப்பகுதிகளில் இதுபோன்ற தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறார்கள். பின் அந்தத் தொழிற்சாலைகளில் அப்பகுதியிலுள்ள சாதாரண

மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை என்றால், அப்படி ஆரம்பிப்பதால் பயன் என்ன? இவ்வாறு அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்காவிட்டால், அப்பகுதிகளில் மத்திய அரசாங்கம் முதலீடு செய்வதனால் அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறிவிடும் என்று நினைப்பது தவறு என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததாக, தமிழ் நாடு தொழில் துறையில் நன்கு முன்னேறி இருந்தது, இப்போது 3-வது இடத்திற்குப் போய்விட்டது, 7-வது இடத்திற்குப் போய் விட்டது, 13-வது இடத்திற்கு போய்விட்டது என்று வாதிடுவது சரியல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த வாதத்தை ஏற்றுக்கொண்டால், மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் சொல்லலாம். தமிழ் நாடு மூன்றாவது இடத்தில் இருக்கிறது என்றால், அதன்பின் உள்ள 19 மாநிலங்கள் புறக்கணிக்கப் படுவதாக அவர்கள் சொல்லலாம். இந்த வாதம் சரியல்ல. தொழில் தொடங்க வேண்டுமானால், அதற்கான சாத்தியக்கூறுகள் (feasibility) வாய்ப்புகள் (resources) முதலியவற்றை ஒப்பிட்டுப்பார்த்து, எங்கே ஆரம்பித்தால் நல்லது என்கின்ற கருத்தின் அடிப்படையில்தான் தொழில்கள் துவங்க முடியுமே தவிர, அவற்றை எல்லாம் பரிசீலிக்காமல் தொழில் துவங்க முடியாது. அவ்வாறு பரிசீலித்து துவங்க முடியாவிட்டால், உடனே 'புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்கின்ற வாதம் சரியல்ல. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நீலகிரியில் ஏற்கெனவே கலர் பிலிம் தொழிற்சாலை இருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்கிறோம். அதற்கு ஏற்கெனவே அங்கே infrastructure இருப்பதால், அங்கே தொடங்குவது நல்ல பயக்கும் என்று நாம் சொல்கிறோம். சிலர் உத்திரப் பிரதேசத்தில் தொடங்குவது நல்லது என்று கூறி அதற்கு அவர்கள் சில காரணங்களைக் கூறுவார்கள். நாம் இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்து, அரசாங்கத்தின் குறைந்த மூலதனத்தில் மிக விரைவிலே நீலகிரியிலே தொடங்க வாய்ப்பிருக்கிறது என்ற வாதத்தைத்தான் வைக்கவேண்டுமே தவிர, தமிழ்நாடு புறக்கணிக்கப்படுகிறது என்றோ அல்லது வடக்கு-தெற்கு என்றோ கூறுவது சரியல்ல. இவ்வாறு கூறி மாநில, மத்திய அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்குக் கொண்டு போவது பொருத்தமல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கம் 1956 ஆம் ஆண்டு இண்டஸ்ட்ரியல் பாலிசி ரிசல்யூஷன் என்ற அடிப்படையிலே, பல திட்டங்களை, கொள்கைகளை வகுத்திருந்தாலும் தனியார் துறையினருக்கு இருக்கக்கூடிய சில தடைகளை நீக்கி, தொழில்கள் அவர்கள் அதிகமாகத் தொடங்க வேண்டும் என்பதற்காக இந்த ஆண்டு வரவு



செலவுத் திட்டத்திலே பல சலுகைகளை அளித்திருக்கிறது. ஒரு காலத்திலே நியாயம் அவசியம், தேவை என்று கருதப்பட்ட லைசன்ஸுகள், கட்டுப்பாடுகள் எல்லாம் இப்போது தளர்த்தப்பட்டிருக்கின்றன. இதன்மூலம் பொதுத் துறைக்கு உள்ள முக்கியத்துவத்தைக் குறைக்க வேண்டும் என்பதோ அல்லது அரசு சமதர்ம பாதையிலிருந்து நழுவிவிட்டது என்பதோ இதற்குப் பொருள் அல்ல. அவ்வாறு குற்றச்சாட்டு கூறுகிறவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவுடைமை சமுதாயம் அமைக்க வேண்டுமென்று சொல்கின்ற மேற்கு வங்கத்தின் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள்கூட, தனிப் பெரும் முதலாளிகளை வரவழைத்து தொழில்களைத் தொடங்க வேண்டுமென்று, தனிப்பெரும் முதலாளிகளுக்கு வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உதாரணத்திற்கு, மேற்கு வங்கத்திலே தனியார் துறையிலே இராமபிரசாத் கோயங்கா என்பவரோடு கூட்டாக 650 கோடி ரூபாய் மூலதனத்தில் பெட்ரோ-கெமிகல் பிராஜக்ட் ஒன்று எற்படுத்த விருப்பதாக பத்திரிகையில் செய்திகள் வந்திருப்பதைப் பார்த்தேன். அதேபோன்று, 90 கோடி ரூபாயில் "அக்ராமிக் பேபர் பிளாண்ட்" தொழிற்சாலையையும் ஹால்டியா என்ற இடத்தில் ஒரு பெரும் முதலாளியுடன் சேர்ந்து தொடங்க இருக்கிறார்கள். பிர்லாவை வரவழைத்து 'நைலான் பிலமெண்ட் யார்ன்' தொழிற்சாலை தொடங்க இருக்கிறார்கள். போதார் என்ற பெரும் முதலாளியாக இருக்கக்கூடியவரை வரவழைத்து 'கெமிகல் பிளாண்ட்' தொடங்க இருக்கிறார்கள். அதேபோல் கேரளாவில் திரு. நம்பூதிரிபாத் முதலமைச்சராக இருந்தபோது, பிர்லாவை வரவழைத்து புதிதாகத் தொழிற்சாலை தொடங்கியிருக்கிறார்கள். இவ்வாறு தனியார் துறை, பொதுத்துறை வாதத்தை ஒரு பக்கம் ஒதுக்கிவைத்துவிட்டு தொழில்கள் அதிகமாகத் தொடங்கினால்தான் வேலைவாய்ப்பைப் பெருக்க முடியும், வறுமையைப் போக்க முடியும் என்கிற அளவிலே மத்திய அரசாங்கம் தன்னுடைய கொள்கையை வகுத்து அதற்கான வழிவகைகளைத் தந்திருக்கிறது.

(முற்பகல் 10-20)

இன்றையதினம் பத்திரிகையிலே பொதுத் துறையைக் குறித்து கடுமையான வாதத்தை, விமர்சனத்தை, தாக்குதலை ஆரம்பித்திருக்கிறார்கள். பொதுத் துறையிலே ஏராளமான மூலதனம் இடப்பட்டுள்ளது. "அதில் நிர்வாகம் திறமையாகச் செயல்படவில்லை, தனியார் துறைக்கு விட்டு விட்டால், நிர்வாகம் நன்றாக நடக்கும்" என்று சொல்கிறார்கள். மேற்கு ஜெர்மனி, ஜப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகளில் பொதுத்துறையில்

இருந்துவந்த தொழில்களை தனியார் துறைக்கு விட்டிருக்கிறார்கள். இங்கும் தனியார் துறைக்கு விடுவதற்கு ஆலோசிக்க வேண்டுமென்று, பிரதமர் அவர்களை 'ஃபிளாட்டர்' செய்து இந்தப் பக்கம் கொண்டு வர வேண்டுமென்று பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். பொதுத் துறையிலே நிர்வாகம் திறமையாக நடைபெறவில்லை; லாபகரமாக நடைபெறவில்லை என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் தனியார் துறையிலே ஆரம்பிக்கப்பட்ட அத்தனையும் லாபகரமாக நடக்கின்றனவா? இல்லை என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அண்மையிலே, 3—5—1985 அன்று நாடாளுமன்றத்தில் நிதி இலாகா ராஜாங்க அமைச்சராக இருக்கிற திரு. ஜனார்த்தன் பூஜாரி அவர்கள் ஒரு அறிக்கை வாசித்திருக்கிறார்கள். இன்றையதினம் நாட்டிலே 80,110 சிக் யூனிட்ஸ் இருக்கின்றன. அதில் பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழில்களும் அடங்கும். பெரும் தொழில்கள் மட்டும் 491. அதில் எவ்வளவு கடன் முடக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னால், 2,014 கோடியே 33 லட்சம் ரூபாய் முடக்கப்பட்டிருக்கிறது. மையத் தொழில் என்று சொல்லக்கூடிய 1,256 தொழில் யூனிட்டுகளில் 337 கோடியே 97 லட்ச ரூபாய் கடன் கொடுக்கப் பட்டிருக்கிறது. சிறு தொழில்கள் 78,363. இவைகளுக்கு 728 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 80,110 சிக் யூனிட்டுகள் மூலமாக நாட்டினுடைய கிரெடிட் வசதிகள் 3,101 கோடி 25 லட்ச ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. தனியார் துறை என்று சொன்னால், அத்தப் பணம் முழுவதும் யாருடையது? மக்களுடைய பணத்தை அரசாங்கத்தின் நிதி நிறுவனங்கள் மூலமாக எடுத்து வைத்துக்கொண்டு தனியார் என்ற பெயரில் சிக் இன்டஸ்ட்ரியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் எதற்குத் துவக்கப்பட்டது என்றால், ஒரு காலத்திலே 25 பெரிய நூற்பாலைகளில் மென்மையான நூலைக் கொண்டுவந்து அதில் கைத்தறிக்கும், பவர் லூமிற்கும் வேண்டிய அளவு கொடுத்துவிட்டு மீதி இருப்பதை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காகத் துவக்கப்பட்டது. என்.டி.சி. என்பது தனியார் துறையிலே நடத்த முடியாமல், நட்டம் ஏற்பட்ட தொழில்களை நடத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டது என்று வாதிடுகிறவர்களுக்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்கே உங்கள் கோரிக்கையிலே நியாயம் இருக்கிறது? இப்போது என்.டி.சி.-யை எடுத்துக்கொள்ளலாம். 1983-84-ல் மட்டும் 860 கோடி ரூபாய் இதிலே முடக்கியிருக்கிறார்கள். அந்த ஓராண்டிலே மட்டும் 158.42 கோடி நட்டம் ஏற்பட்டிருக்கிறது. இதுவரையில் தொடர்ந்து கேரி ஓவர் லாஸ் 507 கோடி ரூபாய் என்று குறிப்பிட விரும்புகிறேன். இப்படி இருந்தும் அந்தத் தொழிலாளர்களுக்கு பல சலுகைகள் அளித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு கூட 'சிக் யூனிட்' சரியாக



நடைபெறவில்லை. 'சிக் யூனிட்' ஒன்றுகூட ஹெல்தியாக வந்துவிட்டது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இதுவரையிலே இல்லை என்று சொன்னால், தனியார் துறையிலே உள்ளவர்கள் உணர்ந்து பார்க்க விரும்புகிறேன். ஏதோ பொதுத் துறையை 'டிஸ்கரேஜ்' பண்ணுவதற்காக இந்த வாதத்தைச் சொல்வது சரியல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தனியார் துறையிலே நட்டம் ஏற்பட்டால், அந்த நட்டம் தனியாருக்கு. பொதுத் துறையிலே நட்டம் ஏற்பட்டால் அது மக்களுக்கு.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: இதில் பணத்தை வாங்கி தனியார் துறையிலே விளக்கைப் பொருத்தி வைத்து விட்டுவிட்டு, வீட்டை விட்டு ஓடி விடுவார்கள். பணம் யாருடைய பணம்? தனியார் துறையிலும், ஜாய்ண்ட் செக்டாரிலும் தேசியமயமான வங்கிகளிலிருந்து வாங்கக்கூடிய மூலதனம்; நிதி நிறுவனங்களிடம் வாங்கி இருக்கக்கூடிய கடன்கள், போட்ட மூலதனத்தை காலப் போக்கிலே எடுத்துவிட்டு யாருக்கு நட்டம் ஆக்கப்படுகிறது? தேசத்திலே உள்ளவர்களுக்கு மட்டுமே நட்டம் ஆக்கப்படுகிறது. தனியாருக்கு நட்டம் இல்லை. புத்திசாலியாக இருக்கக்கூடிய அத்தனை பேரும் ஆரம்பத்திலே ஒரு முதலைப் போட்டுவிட்டு காலப்போக்கிலே தொழில் முடிவதற்குள்ளாக முதலை எடுத்துக்கொண்டு விட்டு, மீதி பொதுப் பணத்திலே வந்தால் வரட்டும், வராவிட்டால் போகட்டும் என்ற நிலைமையிலேதான் நடத்துகிறார்களே தவிர, இது தனியாருக்கு நட்டம் என்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, அரசாங்கம் 10, 13 நிறுவனங்களை ஏற்படுத்தி தொழில்களை வேகமாகவும், செம்மையாகவும் நடத்துவதற்குரிய வழிவகைகளைக் காண முயற்சி எடுத்திருப்பதற்கு நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-25)

சிமிண்ட் ஆலைகளைப்பற்றியும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சிமிண்ட் ஆலைகளுக்கு சுண்ணாம்புக் கல் கொடுப்பதற்காக என்று சிறு சிறு ஒப்பந்தக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களாகவே தேவையான அளவுக்கு பாக்டரிகளுக்கு சுண்ணாம்புக் கற்களை சப்ளை செய்ய முடிவதில்லை. இதன் காரணமாக பல நேரங்களில் சிமிண்ட் ஆலைகளே பாதிக்கப்படுகின்றன என்ற புகார்கள் பல இடங்களிலிருந்து வந்திருக்கின்றன. தொழிலாளர்களுடைய கோணத்திலிருந்து பார்த்தால்கூட, பாக்டரிகளில் சுரங்கங்களில் வேலை செய்பவர்களுக்குக் கொடுக்கக்கூடிய கூலியை சுரங்கங்கள் வைத்திருப்

பவர்கள் இந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க முடிவதில்லை. ஒரு தொழிலாளிக்கு 10 ரூபாய்க்கு மேல் கூலி கொடுக்க முடியவில்லை என்று அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் பாக்டரியில் சுரங்கங்களில் வேலை செய்பவர்களுக்கு 40 ரூபாய்வரை கூலி கொடுக்கிறார்கள். இதற்குக் காரணம் பேக்டரிகள் சுரங்கங்கள் பெரிய நிறுவனங்களாக இருப்பதால், கொடுக்க முடிகிறது. எனவே அந்த வகையில் பார்த்தாலும், சிறு ஒப்பந்தக்காரர்களை ஊக்குவிப்பது என்பது சரியல்ல. அதோடு தொழிலாளர்களுக்குத் தேவையான சேஃப்டி நடவடிக்கைகளை எடுப்பதிலும் சிறு ஒப்பந்தக்காரர்களால் சரியாகச் செயல்பட முடியவில்லை. எனவே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், 20, 25 கிலோ மீட்டர் எல்லைக்குள் இருக்கும் அனைத்து லைம் சுரங்கங்களையும் பேக்டரிகளுக்கே கொடுத்துவிட்டால் பேக்டரிகளுக்கும் காலாகாலத்தில் சுண்ணாம்புக்கல் தேவையான அளவுக்கும் கிடைக்கும், அதைப்போலவே அங்கே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கும் கூடுதலான ஊதியமும், நன்மைகளும் கிடைக்கும். எனவே இதைப்பற்றி அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் டான்செம் என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக இரண்டு சிமிண்ட் ஆலைகளைத் தமிழகத்தில் ஆலங்குளத்திலும், அரியலூரிலும் நடத்தி வருகின்றது. ஆனால் இந்த இரண்டு தொழிற்சாலைகளுமே இலாபத்தில் நடக்கவில்லை என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆலங்குளம் சிமிண்ட் ஆலையைப்பற்றிக் குறிப்பிடும்போது, "எவ்வளவு முயற்சித்தும் கூட இலக்கினை எங்களால் எட்ட முடியவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் போலவே அரியலூரில் உள்ள சிமிண்ட் ஆலையின் உற்பத்தித் திறன் ஐந்து லட்சம் டன் என்றாலும் கூட, இதுவரை அந்த ஐந்து லட்சம் டன் இலக்கை அடைய முடியவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி அந்தத் தொழிற்சாலைகள் தங்களின் இலக்கையே எய்த முடியாது இருக்கும்போது, அவைகளை விஸ்தரிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது என்று சொல்லுவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த இரண்டு ஆலைகளுமே தங்களின் இலக்கை எட்ட முடியாத நிலைக்கு என்ன காரணம் என்றால், போதிய மின்சாரம் கிடைக்கவில்லை அல்லது போதிய அளவுக்கு நிலக்கரி கிடைக்கவில்லை அல்லது நிலக்கரி கிடைத்தாலும் போதிய ரெயில்வே வேகன்கள் கிடைக்கவில்லை என்பதாகும். இவையெல்லாம் எல்லாத் தொழிற்சாலைகளுக்குமே பொருந்துகிற காரணங்களே தவிர, இந்த இரண்டு ஆலைகளுக்கு மட்டுமே உரியதான விசேஷ காரணங்கள் அல்ல. அது மட்டுமல்ல, அரியலூர் சிமிண்ட் ஆலையைப் பொறுத்தவரையில், அதில் ஈரப்பதம் அதிகமாக இருப்பதன் காரணமாக, இலாபம் எய்த முடியவில்லை



என்றும் சொல்லுகிறார்கள். ஈரப்பதம் அதிகமாக இருக்குமா இல்லையா என்பதை அங்கே தொழில் தொடங்குவதற்கு முன்னரே அல்லவா யோசித்துப் பார்த்திருக்க வேண்டும். அங்கே தொழில் தொடங்கினால் சரியாக இருக்குமா, லாபகரமாக இருக்குமா, ஈரப்பதம் அதிகமில்லாமல் இருக்குமா என்றெல்லாம் ஆராய்ச்சி நடத்தாமலா இந்த சிமிண்ட் ஆலை அங்கே ஏற்படுத்தப்பட்டது என்பதை நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

இந்த ஆலைகள் தொடங்கி ஐந்து ஆண்டுகள்தான் ஆகின்றன. அதற்குள் மாடர்னைசேஷன் பிளாண்ட் தேவை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருபது, முப்பது ஆண்டுகளாக ஓடிக் கொண்டிருக்கிற நூற்பாலைகள் என்றால் பழைய மெஷினரிகளைக் கொண்டு ஓடுகின்றன; ஆகவே அதன் சாமான்கள் தேய்வடைந்திருக்கும், அல்லது புதிய டெக்னாலஜி வந்துவிட்டது என்ற காரணங்களால் புதிய மெஷினரிகளை வாங்க வேண்டும் என்றால், அர்த்தம் உண்டு. ஐந்து ஆண்டுகளுக்குள் 'மாடர்னைசேஷன்' என்றால் என்ன அர்த்தம் என்று எனக்குப் புரியவில்லை. அந்த அளவுக்கு முன்யோசனை இல்லாமலா இந்த சிமிண்ட் ஆலைகள் நிறுவப்பட்டன என்று நான் கேட்க விரும்புகிறேன். இப்படி ஐந்து ஆண்டுகளுக்குள் மாற்றப்பட வேண்டிய மெஷினரிகளைக் கொண்ட ஆலையை ஆரம்பித்து வைத்துவிட்டு, பொதுத் துறை நிறுவனங்களில் நட்டம் ஏற்படுகிறது என்று சொல்லி, பொதுவாகப் பொதுத் துறை நிறுவனங்கள் என்றாலே அதற்குக் கெட்ட பெயர் உருவாக்குவது நியாயமல்ல என்று தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிலையைக் கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் நாடு ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை. குழாய்களைச் செய்யும் இந்த இரண்டு தொழிற்சாலையும்கூட தன்னுடைய இலக்கை அடைய முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. 30,000 டன் திறனுடையது என்று சொல்லுகிறார்கள். 26,000 டன் அளவைக்கூட இந்த இரண்டு தொழிற்சாலைகளும் அடைய முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. எனவே இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் எப்படி இயங்குகின்றன என்பதைப் பற்றியும் அவைகள் நட்டத்தில் நடக்கின்றனவா லாபத்தில் நடக்கின்றனவா என்பதைப்பற்றியும், நட்டத்தில் நடந்தால் எவ்வளவு நட்டத்தில் நடக்கின்றன என்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினால் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில், மீண்டும் ஒரு வேலை நிறுத்தம் வரும் அபாயம் இருக்கிறது என்பதைப் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிகிறேன். இந்தப் பேராபத்து வராமல் அரசாங்கம் தடுக்க வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏற்கெனவே தமிழகத்தில் கூட்டுறவுத் துறையிலும், தனியார் துறையிலும், பொதுத் துறையிலுமாக மொத்தம் 22-ம் மத்திய அரசு நிர்வாகத்தின் கீழ் ஒன்றும் ஆக மொத்தம் 23 சர்க்கரை ஆலைகள் செயல்பட்டு வருகின்றன.

சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கிற கரும்புச் சக்கையை எரிபொருளாகப் பயன்படுத்தி வருகிறார்கள். அவைகளுக்கு மிஞ்சக் கூடிய கரும்புச் சக்கை அநேகமாக எங்கேயும் இல்லை. அப்படி இருந்தும் கரும்புச் சக்கையை வைத்து மின்சாரம் தயார் செய்யப் போவதாகவும் அதுவும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு சர்க்கரை ஆலையில் இதை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப் போவதாகவும் சொன்னார்கள். அப்படியென்றால் எந்தக் கரும்புச் சக்கையை வைத்துக்கொண்டு புகளூரில் உள்ள காகிதத் தொழிற்சாலையை நடத்தப் போகிறார்கள்? அதற்கு எங்கேயிருந்து கரும்புச் சக்கை வரப் போகிறது என்கிற விஷயத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நூற்பகல் 10-35)

கரும்புச் சக்கையை வைத்து காகிதம் தயாரிக்கும் ஆலைக்கு ஏறக்குறைய 350 கோடி ரூபாய் மூலதனம் தேவைப்படுகிறது. அதிலே உலக வங்கியிடமிருந்து கடன் 100 கோடி ரூபாய். மத்திய அரசு, மாநில அரசு மற்றும் பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றதையெல்லாம் சேர்த்து 350 கோடி ரூபாய் போட்டு துவக்கியுள்ள இந்த ஆலையிலிருந்து இரண்டாயிரம் டன் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டு பல பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கிறோம் என்று ஆளுநர் உரையில் மகிழ்ச்சியாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது கரும்புச் சக்கையிலிருந்து தயாரிக்கப்பட்ட காகிதமா என்றால், இல்லை. வழக்கமாகத் தயாரிக்கப்படும் மரக்கூழிலிருந்து, அமெரிக்காவிலிருந்து அந்த மரக்கூழை வரவழைத்துத் தயாரித்திருக்கிறார்கள். கரும்புச் சக்கையை வைத்து தயாரித்து விநியோகித்திருந்தால் பரவாயில்லை என்று சொல்லலாம். ஆகவே இதனுடைய உண்மையான இரகசியம் என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 75 சதவீதம் கரும்புச் சக்கையிலிருந்தும், மீதம் மரக்கூழிலிருந்தும் தயாரிக்கப்படும் என்றால், காலப்போக்கில் 75 சதவீதம் மரக்கூழிலிருந்தும் 25 சதவீதம் கரும்புச் சக்கையிலிருந்தும் தயாரிக்கப் போகிறார்களோ என்னவோ தெரியவில்லை. எதற்காக இந்தத் திட்டம் துவக்கப்பட்டது, அதன் தொழில் நுட்பங்கள் என்ன என்பதையெல்லாம் தயவுசெய்து விளக்க



வேண்டும். சமீபத்திலே ஒரு வார காலத்திற்கு முன்பு ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கூழ் தீப்பற்றி எரிந்துவிட்டது என்று சொல்லப்படுகிறது. அதைப் பற்றி வதந்திகள் வருகின்றன. அங்கே ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கூழே இல்லை, ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இன்ஷூரன்ஸ் பணம் 'க்ளெய்ம்' செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. இவைகளையெல்லாம் விளக்குவார்களானால் நல்லது என்று குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இதை தீவிரமாக விசாரிக்க வேண்டும். இவ்வளவு பணம் மூலதனம் போட்டு ஆரம்பிக்கக்கூடிய இந்த காகிதத் தொழிற்சாலையால் ஆண்டு ஒன்றுக்கு 40 கோடி ரூபாய் அந்நியச்செலாவணி மீதமாகும் என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் ஓராண்டுக்கு 40 கோடி ரூபாய் மதிப்புள்ள காகிதம், நியூஸ்பிரிண்ட், எழுதுகிற காகிதம் போன்றவை உற்பத்தியாகும். ரூபாய் 340 கோடி மூலதனத்திற்கு 40 கோடி ரூபாய் உற்பத்தி என்றால், லாபம் எவ்வளவு கிடைக்கும்? வட்டி கட்டுபடியாகுமா? அதன் அவசியம் என்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன். மேலும் அதன் 'டோட்டல் எக்கானமி' என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் நாடு மொப்பட் என்ற நிறுவனத்தை தமிழ் நாடு அரசாங்கம் 'டான்சி' மூலமாக 1972-ல் ஆரம்பித்து 1977-ல் உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது. இதற்கு 110 இலட்சம் ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறார்கள். இதனுடைய உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு 24,000 யூனிட்டுகள். ஆனால் உற்பத்தி செய்யப்பட்டது 1,654 தான். இந்த 1,654-ல் ஒன்றுகூட மார்க்கெட்டில் விற்கப்படவில்லை. தமிழ் நாட்டில் ஐந்தாறு 'மொப்பட்' செய்யும் கம்பெனிகள் வந்துவிட்டன, அதனால் லாபகரமாக இல்லை என்று 'காம்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல்' சொல்லிவிட்ட பிறகும் கூட, இந்தக் கம்பெனி தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கம்பெனியினால் ஏற்கெனவே நஷ்டம் 128 இலட்சம் ரூபாய். இப்போது அங்கே உற்பத்தி இல்லை, ஆனால் கம்பெனி தொடர்ந்து இருக்கிறது. இதனால் 128 இலட்சம் ரூபாயாக இருந்த நஷ்டம் 161 இலட்சம் ரூபாயாக வளர்ந்துகொண்டே போகிறது. நஷ்டத்திலே நடக்கக்கூடிய இந்த மொப்பட் தொழிற்சாலைக்காக செங்கற்பட்டுக்கருகில் உள்ள மறைமலை நகரில் 30 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு இன்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் ஏற்படுத்தி கட்டிடம் ஏன் கட்டப்பட்டிருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. உற்பத்தி செய்யாமல் உள்ள இந்தக் கம்பெனியை மூடிவிடலாம் என்று சட்ட மன்றப் பேரவையின் பப்ளிக் அண்டர்டேக்கிங் கமிட்டி கூட தனது

[திரு. எம். பி. சுப்பிரமணியம்]     [1986 ஜூலை 12

அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. அதற்கு மேலும் இந்த நிறுவனம் நடந்துகொண்டிருக்கிறது; அதற்காக பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், பொதுத் துறையைப்பற்றி மக்கள் எப்படி நினைப்பார்கள் என்பதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மேக்னசைட் என்ற அரும்பொருள் சேலம் மாவட்டத்திலே ஏராளமாகக் கிடைக்கிறது. இதற்காக ஐந்து கம்பெனிகள் அங்கே இருக்கின்றன. தமிழ் நாடு அரசாங்கமும் ஒரு கம்பெனியை ஏற்படுத்தி, நேரிடையாக அந்த மாக்னசைட்டை எடுத்து, பதப்படுத்தி அனுப்பிக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலுக்கு இப்போது ஓர் ஆபத்து வரவிருக்கிறது. இப்போது அரசாங்கத்திலிருந்து 'மைனிங் டாக்ஸ்' என்று ஒரு வரியைப் போட்டிருக்கிறார்கள். இதன் மூலம் அந்தத் தொழில் நசிந்து போகக்கூடிய பேராபத்து இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். சேலம் மாக்னசைட்டுக்கு இந்தியாவில் போட்டியாக இருக்கக்கூடிய இடம் உத்திரப் பிரதேசத்தில் உள்ள அல்மோரா என்னும் இடம்தான். அங்கே இதுபோன்று மைனிங் வரி விதிப்பு இல்லை. மூன்று சதவீதம் ராயல்டியைத் தவிர வேறு வரி ஏதும் இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் இப்போது ராயல்டி ஆறு சதவீதமாக இருக்கிறது. அதற்குமேல் செஸ் வரி, அந்த செஸ் வரிக்கு சர்ச்சார்ஜ், அதற்குப் பிறகு டர்ன்-ஓவர் டாக்ஸ், பிறகு எக்சைஸ் டியூட்டி ஆக எல்லாம் சேர்த்து டன் ஒன்றுக்கு 27 ரூபாய் கூடுகிறது. 27 ரூபாய் ஒரு டன்னுக்கு விலை கூடுமானால் அல்மோராவிலே

(முற்பகல் 10-35)

இருந்து வரும் மேக்னசைட்டோடுகூட நம்மால் போட்டிபோட முடியாது. இப்போதெல்லாம் சைனாவிலிருந்து மேக்னசைட் இங்கே இறக்குமதி செய்யப்படுகிறது. சைனாவிலிருந்து வருகின்ற மேக்னசைட் இங்கே நம்மிடம் உள்ளதைவிட தரத்தில் தூய்மையுடையதாக இருக்கின்றது. 96 சதவிகிதம், 98 சதவிகிதம் அளவுக்கு தூய்மையானதாகவும் இருக்கின்றது. அதே நேரத்திலே டன் ஒன்றுக்கு ரூ. 3,000 விலைக்குக் கிடைக்கக்கூடிய நிலை இருக்கின்றது. சேலத்திலே இருக்கின்ற மேக்னசைட் தூய்மையானது 90, 92 சதவிகிதம்தான் இருக்கின்றது. அது மட்டுமல்லாமல், அதனுடைய விலையும் ரூ. 3,200 ஆகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளில் நாம் மேலும் வரியைப் போட்டால், சேலத்தில் இருக்கின்ற மேக்னசைட் விலை போகாது. அங்கே பத்தாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் மனதில் வைத்துக்கொண்டு செயலாற்ற வேண்டும். நாம் இப்போது ரூ. 80 கோடி செலவில் புதியதாக Refractory Bricks செய்யப்போவதாக திட்டம் வகுத்திருக்கின்றார்கள். இந்த வரியைப்



1985 ஜூலை 12]     [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

போட்டால், தொழில் நசித்துவிடும். ஒன்று இதற்கு வரிவிலக்கு கொடுக்க வேண்டும் அல்லது வரியை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சவ்வரிசி ஸ்டார்ச் மாவு தொழிற்சாலை பற்றிச் சொல்கிறேன். சேலம், தர்மபுரி, ஈரோடு, திருச்சி, தென் ஆற்காடு மாவட்டங்களிலே ஏறத்தாழ 650 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்த நான்கு மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு பணம் கொடுக்கக்கூடிய கேஷ் கிராப்ஸ் மரவள்ளிக் கிழங்கு, குச்சிவள்ளிக் கிழங்குப் பயிர்களாகும். அது தோட்டத்திலே வளரலாம். மானம் பார்த்த பூமியாக இருந்தாலும் அங்கே வளரும். ஏக்கருக்கு ரூ. 2,000 அல்லது ரூ. 3,000 வரை வருமானம் வரக்கூடிய ஒரு பணப்பயிர் ஆகும். இன்றைக்கு அதனுடைய நிலை என்ன என்று சொன்னால், ஏற்கெனவே விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்குச் சரியான விலை கிடைப்பதில்லை. ஏனென்று சொன்னால், அந்த 650 தொழிற்சாலைகளிலே உற்பத்தியாகின்ற சவ்வரிசி மாவுக்கு விலை நிர்ணயிப்பது வியாபாரிகள் கையில் இருக்கின்றது. இடையில் புரோக்கர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் நினைத்தால், விலையை ஏற்றலாம் அல்லது குறைக்கலாம். அப்படிப்பட்ட மோசமான நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஒரு காலத்திலே மக்காச்சோளத்திலிருந்து மாவு எடுத்தார்கள். சவ்வரிசி வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்தார்கள். தேவையான சவ்வரிசி கிடைக்கும் நிலை ஏற்பட்டது. Sago serve-Strach serve என்று இரண்டு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. தர்மபுரியில், சேலத்தில் கோ-ஆப்பரேட்டிவ் அடிப்படையில் ஏற்படுத்தி ஓரளவுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலையில் கொடுக்கப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் என்ன என்று சொன்னால், உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருள்களுக்கு விலையை நிர்ணயிக்கக்கூடிய அளவுக்கு இந்த அமைப்பு செயல்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்போது நிலைமை என்ன என்று சொன்னால், தமிழ்நாடு சேல்ஸ் டாக்ஸ் மல்டிபாயின்ட் ஐந்து சதவிகிதம் என்று போட்டார்கள். ஒரு சதவிகிதம் சேல்ஸ் டாக்ஸைக் குறைத்து நான்கு சதவிகிதமாக ஆக்க வேண்டுமென்று கேட்டார்கள். அப்படிக் கொடுத்தால், இந்த வியாபாரம் கூட்டுறவு அமைப்புகளின் கையில் இருக்கும். இல்லையென்றால், அது தனியார் துறைக்குப் போய்விடக்கூடிய நிலைமைகள் ஏற்படும். ஆகவே மாநில அரசு அதற்கு சலுகை அளிக்க வேண்டும். அரசாங்கம் விதிவிலக்கு கொடுக்க வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு விதிவிலக்கு என்று கொடுக்கின்றார்கள். நிரந்தரமாக விலக்கு கொடுக்கவேண்டும். நிரந்தரமாக இந்த ஒரு சதவிகிதம் சேல்ஸ் டாக்ஸ் விலக்கு கொடுக்கலாம்.

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1985 ஜூலை 12

நிரந்தரமாக இந்த ஒரு சதவிகிதம் சேல்ஸ் டாக்ஸ் விலக்கு கொடுக்கலாம். அப்படிக் கொடுப்பதால் நிச்சயமாக பெரிய நஷ்டம் வந்துவிடாது. இந்தத் தொழில் மூலம் தமிழக அரசுக்கு இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை வரி வருகிறது. வரிகள் கூடுதலாக இருந்தால், அந்தத் தொழில் தனியார் வியாபாரிகள் மற்றும் புரோக்கர்கள் வசம் போகின்ற நிலை ஏற்படும். அப்படி அவர்களிடம் போனால், சரியான முறையில் வரி கட்டமாட்டார்கள். அது மட்டுமல்லாமல், பொருள்கள் விற்பனை மற்ற பகுதிகளுக்கு, கல்கத்தாவிற்குப் போகிறது. இங்கே 'சேல்ஸ் டிரான்ஸாக்ஷன்' இல்லை என்று சொல்லி வரியைக் கொடுக்காமல் ஏய்த்துவிடுவார்கள். இப்படி நிலைமைகள் ஏற்படக் கூடிய அளவுக்கு இருப்பதால், அதைப்பற்றி அரசாங்கம் நன்கு கவனித்து செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹை பவர் கமிட்டி ஒன்றைப்போட்டு வளரச் செய்ய வேண்டும். அரசாங்கமும் நல்ல ஆராய்ச்சிகள் செய்து பல தொழில்களை சேகோ மூலம் துவங்க ஆலோசனைகளை Gulucose தொழிற்சாலை ஒன்று தொடங்கப்போவதாக பத்தாண்டு காலமாக சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆத்தூரில் தனியார் துறையில் குளுகோஸ் தொழிற்சாலை ஒன்று தொடங்கப் போவதாகச் சொல்லி பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அரசாங்கமே செய்தால், அதை நம்பியிருக்கக்கூடிய விவசாயிகளுக்கும், அதையே நம்பி யிருக்கக்கூடிய 650 தொழிற்சாலைகளுக்கும் இதனாலே நல்ல பலன் ஏற்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய அரசினுடைய உதவியோடு செல்ப் எம்ப்ளாய்மெண்ட். பார் எஜுகேட்டட் அன் எம்ப்ளாய்ட் யூத்-க்களுக்கு என்று ஒரு திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. 14 மாவட்டங்களிலே மாவட்டத் தொழில் மையங்கள் இருக்கின்றன. 31—1—1985 தேதிவரை இந்தத் தொழில் மையங்கள் மூலமாக 25 தொழில் யூனிட்டுகளுக்கு ரூ. 50 கோடி செலவழிக்க வேண்டும் என்று திட்டமிருக்கிறது. அந்தப் பணம் செலவழிக்கப்படவில்லை.

(முற்பகல் 10-40)

25,000 பேர்களுக்குப் பதிலாக 5,709 பேர்களுக்கும், 50 கோடி ரூபாய்க்கு பதிலாக 10 கோடி ரூபாயும்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணம்? எங்கே தடை? விண்ணப்பங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. பரிந்துரைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால் வங்கிகள் மூலம் கிடைத்த பணம் 10 கோடி; நபர்கள் 5,000 பேர்கள் விண்ணப்பங்கள் செய்திருந்தும் கொடுக்கப்படவில்லை என்றால் கோளாறு எங்கே இருக்கிறது? அதை நீக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.



1985 ஜூலை 12] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

இன்னும் ஒன்று. சிறிய தேயிலைத் தோட்டம் வைத்திருப்பவர்களுக்காக 12 கூட்டுறவு டீ பேக்டரீஸ் நீலகிரியில் ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். இந்த 12 தொழிற்சாலைகளிலே பல நஷ்டத்திலே ஓடுவதாகப் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன என்றால், அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன். குந்தா போன்ற மூன்று இடங்களைத் தவிர, மற்ற இடங்களில் உள்ள தொழிற்சாலைகள் நஷ்டத்தில் இருக்கின்றன என்றால், அதைப் பரிசீலிக்க வேண்டும். அப்படிப் பரிசீலித்தால், அவற்றைத் திருத்த வசதியாக இருக்குமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, தீப்பெட்டித் தொழிற்சாலை. தீக் குச்சிகளைச் செய்வதற்கு என்று 10, 20 பேர்கள் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் 325 இருப்பதாகச் சொல்கிறார்கள். பல இடங்களில் பார்க்கிறேன். யாரும் இல்லாத நிலையிலே, 10 கட்டிடங்கள், 20 கட்டிடங்கள் இருக்கின்றன. தீக் குச்சிகள் செய்வதற்காக இருக்கின்றன. ஐந்து, ஆறு வருடங்களாக ஆட்களே அங்கே இல்லை. ஐ.ஆர்.டி.பி. ஸ்கீமில் காதி கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் தரப்படுகிற பணம் பிரயோசனமாகச் செலவழிக்கப்படவில்லை. பல தொழில்களுக்கு மத்திய அரசு சிபாரிசுகளை அனுப்புகிறார்கள். தமிழ்நாட்டுக்கு அந்தத் தொழில் பொருத்தம்தானா, தேவையானதுதானா, நம்முடைய சூழ்நிலைக்குத் தகுந்ததா என்று பார்த்து ஆலோசனை சொல்ல அரசாங்கத்திற்கு உரிமை கேட்டுப் பெறக்கூடாதா என்று கூறுகிறார்கள். நல்ல உறவு இருக்கின்ற புண்டு. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் நல்ல உறவு இருக்கிறது. ஆகவே காரணத்தாலே, சொல்ல. உரிமை இருக்கிறது. நல்ல உறவு இருந்தாலும், இல்லாவிட்டாலும், கட்சியோடு கூட்டு இருந்தாலும், இல்லாவிட்டாலும் நமக்குத் தேவையானதைப் பெறுவதற்கு, உறவைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. சரியில்லை என்று சொல்ல அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. நம்முடைய பகுதிக்குத் தேவையான தொழில் இது என்று சொல்ல உரிமை இருக்கிறது. திட்டக் கமிஷனில் சொல்கிறவர்கள்கூட தோராயமாக ஒரு மாதிரியை வைத்துக்கொண்டு, திட்டங்களை வைக்கலாம். கிராமப் புறங்களிலே உள்ள சாதாரண ஏழை, எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். நம்முடைய நிலைமைக்கு ஏற்பச் சொன்னால், மத்திய அரசும், திட்டக் கமிஷனும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றன.

கடைசியாக, ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். கைத்தறி சம்பந்தப்பட்ட பிரச்சினை. ஒவ்வொரு காலகட்டத்திலேயும் கைத்தறி நூல் கிடைப்பதில்லை. இதனால் தனி தேக்கமுறுகிறது. சேலத்திலே அம்மாப்பேட்டை கோவாப்பரேடிவ் சொசைட்டி மிகப் பிரசித்தி பெற்ற சொசைட்டி. இந்தியாவுக்கே அது

எடுத்துக்காட்டாக இருக்கிறது. கடந்த ஐந்து, ஆறு மாதங்களாக அங்கே மூன்று கோடி ரூபாய் பெறுமானமுள்ள துணிகள் தேங்கியிருக்கின்றன. அதை கோஆப்டெக்ஸ் நிறுவனம் எடுத்துக்கொள்ளத் தயாராக இல்லை. இதனால் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. பெரும் அவதியான நிலைமை இருப்பதால், இதைத் தீர்க்க நிரந்தரப் பரிகாரம் காண வேண்டும். கடந்த 20, 30 ஆண்டுகளாக இது நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு நிரந்தரப் பரிகாரம் காண வேண்டும். தமிழ் நாட்டிலே 1,510 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. நெசவாளர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணமுடையவர்கள் அந்தக் கூட்டுறவு சங்கங்களை ஆரம்பித்து, நடத்தி வந்தார்கள். இப்போது என்ன நடக்கிறது என்றால், 1,510 நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களிலே இருந்தவர்களை அடியோடு நீக்கிவிட்டு, கட்சிக் கண்ணோட்டத்தோடு, அதில் அக்கறை இல்லாதவர்களைப் போட்டதால், பல கூட்டுறவு சங்கங்கள் சரியாக நடக்கவில்லை என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். 1983-84-லேயே இந்தப் பிரச்சினையை சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். ஆனால் அது தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். சம்பந்தம் உடையவர்கள் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களை, அதிலே அக்கறை உள்ளவர்களைப் போட்டால், அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நன்றாக நடக்கும். அவர்களுக்குப் பொறுப்பு கொடுப்பதற்காகப் போடுவது என்பது சரியாக இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-45)

அதைப்போலவே காதி கிராம தொழிற்சாலை என்பது கிராமப்புறத்திலிருக்கிற சாதாரண ஏழையெளியவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் ஒரு நிறுவனமாகும். கம்ப்யூட்டர் மூலமாக வருங்காலத்தில் அதிக வருமானம் வரக்கூடிய தொழில்கள் எல்லாம் வர இருக்கின்றன, இருந்தாலும் கூட ஏழையெளியவர்களுக்கு தினம் 7 ரூபாய், 8 ரூபாய் அளவுக்குக் கிடைக்கும் வகையில் இத்தகைய சிறு தொழில்கள் கிராமங்களில் அமையக் கூடியவை என்கிற வகையில் இத்தகைய தொழில்களை கிராமங்களில் அதிக அளவில் ஏற்படுத்தி வேலைவாய்ப்பினை அதிக அளவில் ஏற்படுத்த வேண்டும், இதிலே கட்சிக் கண்ணோட்டம் பார்க்கத் தேவையில்லை என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னாலே, மிகச் சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லி முடிக்கிறேன். இம்மாமன்றத்தில்
10 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச்



சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஊரகக் கைத்தொழில் சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்லி, அவற்றுக்கான விளக்கங்களை நான் சொல்வதன் வாயிலாக அவர்களுடைய சந்தேகங்களைப் போக்க வேண்டுமென்று விரும்பியிருக்கிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக விவரங்களை எடுத்துச் சொல்வதற்கு முன்னாலே குறிப்பாக இந்தத் துறை மூலமாக கடந்த சில ஆண்டுகளிலே ஏற்பட்டிருக்கின்ற நன்மைகளை மிகச் சுருக்கமாக சுட்டிக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1960 முதல் 1978 ஆம் ஆண்டு வரையில் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களின் எண்ணிக்கை 18,780. ஆனால் கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில் அது படிப்படியாக வளர்ந்து 60,255 சிறு தொழில்கள் என்கிற அளவுக்குப் பெருகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் குறிப்பு பதிவு செய்யப்பட்ட தொழில்களை மட்டுமே கணக்கில் எடுத்துச்சொல்லப்பட்டதாகும். இதைத் தவிர பதிவு செய்யப்படாத பல தொழில்கள் இன்றைக்கு உருவாகியிருக்கின்றன. சென்ற ஆண்டிலே மட்டும் 10,500 தொழில்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

அடுத்து, சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், தமிழகத்தைப் பொறுத்த வரையில், மிகவும் சிறப்பான நிலையிலே இருந்துகொண்டிருக்கிறோம். 1983-84 ஆம் ஆண்டு 17,500 என்கிற அளவுக்கு இலக்கு இருந்தது. ஆனால் சுமார் 21,247 பேர்களுக்கு 33 கோடி ரூபாய் அளவுக்கு வழங்கி இலக்குக்கு மேலாக இத்திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். 1984-85-ல் 21,700 என்ற இலக்கை மீறி 22,084 பேர்களுக்கு 42 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் வழங்கியிருக்கிறோம்.

இன்றைக்கு 25 ஆயிரம் ரூபாய் என்று வழங்கும் அதிகபட்சக் கடனை 50. ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும், அப்போதுதான் சிறு தொழில் செய்பவர்களுக்கு உண்மையிலேயே உதவியாக இருக்கும் என்ற வகையில் இதுகுறித்து மைய அரசை வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். இந்தவகையில் நாம் மற்ற மாநிலங்களைவிட முன்னணியில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல மாநிலங்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் கூட இன்னும் அடைய முடியவில்லை. ஆறு மாதம் கடந்த பின்பும் கூட அவர்களால் இன்னும் இலக்கை அடைய முடியவில்லை. ஆனால் நாமோ 31—3—1985-க்குள் இலக்கை முடித்துள்ளதுடன் அதற்கு மேலும் கூடுதலாக வழங்கியிருக்கிறோம். இந்த ஆண்டு 60 கோடி ரூபாய் அளவுக்கு வழங்க வேண்டுமென்ற இலக்கை வைத்திருக்கிறோம்.

அடுத்து, தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் ஏராளமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். 1978 மார்ச்சில் 297 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. 1985 மார்ச் இறுதியில் அதன் எண்ணிக்கை 723 ஆக உயர்ந்துள்ளது. தேயிலையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு மிகச் சிறந்த ஏற்பாட்டைச் செய்து பல வழிவகைகளைச் செய்திருக்கிறோம். நீலகிரியில் தொழில் கூட்டுறவு சங்கங்கள் 12 இருக்கின்றன. அதுபோதுமானவை அல்ல என்ற வகையில் மேலும் இரண்டு சங்கங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலைக்குரிய விலை கிடைக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

அடுத்து, சின்னக்கோயில் என்கிற இடத்தில் ரூ. 600 லட்சத்தில் புதிய தொழில் தொடங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதுபோல் இருமாடு என்கிற இடத்தில் 72 லட்சம் ரூபாய் செலவில் தொழில் தொடங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அங்கு இன்னும் நான்கு மாதங்களில் உற்பத்தி தொடங்கப் பட்டு விடும். அதுபோல் கடலூரில் இருக்கின்ற கூட்டுறவுத் தொழிற்சாலையை நவீனப்படுத்துவதற்கு 17.48 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எப்படி நீலகிரியில் தேயிலை மிகுந்த

(முற்பகல் 10.50)

அளவுக்கு நம்மால் விளைவிக்க முடிகிறதோ, ஜனநெரிசல் இல்லாத, கிராமங்கள் அதிகம் இல்லாத அதேசமயம் விளைநிலம் அதிகம் இருக்கிற இடமாக நீலகிரி இருக்கிறதோ அதேமாதிரி, கொடைக்கானல் பகுதியில் ஏராளமான தரிசு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களில் தேயிலையை ஏராளமாகப் பயிரிட முடியும், அவைகள் தரமானதாக இருக்கும் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படி 1,000 ஏக்கரில் தேயிலை பயிரிடும் திட்டம் இப்போது அரசிடம் இருக்கிறது. ஏறத்தாழ 250 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு, வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டம் தொடங்கப்படும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன் மூலமாக 3,000 தொழிலாளர்கள், விவசாயிகள் பலன் அடைவார்கள் என்று நம்புகிறோம். இந்தியாவிலேயே வேறு எங்கேயும் தேயிலை கூட்டுறவுச் சங்கங்கள் கிடையாது. நீலகிரியில் தேயிலைக் கூட்டுறவுச் சங்கங்கள் வைக்கக் காரணம், சிறு சிறு துண்டு நிலங்களில் தேயிலையைப் பயிரிடுகிறார்கள். இதன் காரணமாக முன்பெல்லாம் பயிரிட்ட தேயிலையை ஒரு ரூபாய்க்கும், ஒன்றேகால் ரூபாய்க்கும் ஒரு கிலோ என்று விற்றுக் கொண்டிருந்த



நிலைமையை மாற்றி, இப்போது கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 4.00 என்ற அளவில் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு மூல காரணமே தேயிலைக் கூட்டுறவுச் சங்கங்கள்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேங்காய் நார்த் தொழிலிலும் நாம் குறிப்பிட்ட அளவில் முன்னேறி யிருக்கிறோம். இதுவரையில் கேரளாதான் நார்த் தொழிலில் முன்னணியில் இருந்து வந்தது. அடுத்து கர்நாடகம், அதற்கடுத்து தமிழகம் என்ற நிலை இருந்து வந்தது. அந்த நிலைமை மாற்றப்பட்டு, இப்போது நாம் தேங்காய் நார்த் தொழிலில் முன்னேறியிருக்கிறோம். ஏராளமான தென்னை மரங்கள் நம் நாட்டில் இருக்கிற காரணத்தால், நிறைய மட்டை கிடைக்கிறது. ஆனால் அதை நாராகப் பிரிக்க நாம் தயாரான நிலையில் இல்லாமல் இருந்தோம். இப்போது அரசு தொடர்ந்து எடுத்துள்ள நடவடிக்கையின் காரணமாக, இன்றையதினம் பல்வேறு பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. காரணம், கேரளாவைப் பொறுத்தவரையில், ஐந்து லட்சம் பேர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தர வேண்டுமென்று அங்கே சிறு இயந்திரத்தைக் கூட நார்த் தொழிலில் பயன்படுத்துவதில்லை. பத்து மாதகாலம் அந்த மட்டைகளை தண்ணீரில் ஊறவைத்து, கொட்டாப்புளி போன்ற மரக்கட்டைகளால் அடித்து நொறுக்கி, நார் பிரித்தெடுக்கிறார்கள். அதன்பிறகு நார்ப் பொருட்கள் செய்கிறார்கள்.

ஆனால், தமிழ் நாட்டில் அப்படி இல்லை. மூன்று நாட்கள் மட்டும் தண்ணீரில் ஊறவைத்த மட்டைகளிலிருந்து, 10 ஆயிரம் 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சிறு சிறு இயந்திரங்கள் மூலம் நாரைப் பிரித்தெடுத்து, நார்ப் பொருட்கள் செய்வதால், 10 மாத காலம் காத்திருக்கும் நேரம் மிச்சமாகிறது. இப்படிப்பட்ட உத்தியை நாம் கண்டுபிடித்திருப்பதால் காலதாமதம் தவிர்க்கப் படுகிறது. இதன்காரணமாக அதிகமான நார்ப்பொருட்களை நாம் உற்பத்தி செய்ய முடிகிறது. தேங்காயிலிருந்து மட்டையை உரித்த நான்கைந்து நாட்களில் நாம் நார்ப்பொருட்களை உற்பத்தி செய்துவிடுகிறோம். அப்படிச் செய்த பொருட்களை, கேரளாவைவிட, குறைந்த விலைக்கு விற்க முடிவதால், மார்க்கெட்டிலும் நமக்கு அதிக மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நார்த் தொழிலைப் பொறுத்தவரையில், இன்னும் கொஞ்ச காலத்தில் கேரளாவை மிஞ்ச முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1983-84-ல் 11 நார்க் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. 1985 மார்ச் இறுதியில் 61 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. 1983-84-ல் நார் உற்பத்தி, 33 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்குச் செய்திருக்கிறோம். 1984-85-ல் உற்பத்தி, 65 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய்க்குச் செய்திருக்கிறோம்.

கயிறு திரிப்பது, நார் கலந்த ரப்பர் தயாரிப்பது (அதாவது சோபா, படுக்கைகள் தயாரிக்க நார் கலந்த ரப்பர் உபயோகிக்கப்படுகிறது) இவைகள் எல்லாம் செய்வது என்ற உத்திகளை நாம் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறோம். இதற்காக கேரளாவிலும் பயிற்சி தருகிறார்கள். அதைவிட புதிய உத்திகளை நாம் கண்டுபிடித்திருக்கிறோம். இதற்கு மத்திய கயிறு வாரியம் உதவி செய்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் பிள்ளையார்பட்டியில் 34 லட்சம் ரூபாய் செலவில், இதற்கான பயிற்சிக் கட்டிடம் கட்டி முடித்திருக்கிறோம். இதில் 25 லட்சம் ரூபாயை காயர் போர்டிலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அங்கே 60 பேர்களுக்கு திறமையான பயிற்சியளிக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். 1985-86-ல் மேலும் 13 பயிற்சி கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க 20 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஆதிதிராவிட மக்களுக்கு, கயிறு கூட்டுறவுச் சங்கம் அமைக்க ரூ. 17 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். 1985-86-ல் 16 இடங்களில் நார் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத் தொழில் கூடங்கள் 24 லட்சம் ரூபாய் செலவில் ஏற்பாடு செய்திருக்கிறோம். இதன் காரணமாக கேரளாவுடன் போட்டி போட்டு, நார்ப் பொருட்களைக் குறைந்த விலையில் கொடுக்கும் நிலைமைக்கு வந்திருக்கிறோம்.

இப்போது பாலிதீன் பைகள் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் 16 இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே தனியார் துறையில் 158 சங்கங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. இடைக்காலத்தில் அதற்கான மூலப் பொருட்கள் கிடைக்காமல் இருந்தன. இப்போது மூலப்பொருட்கள் கிடைக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-55)

இந்த 15 நாட்களாக எந்தவித சிக்கலும் இல்லாமல் கிடைத்துக்கொண்டிருக்கிறது.

அடுத்து, ஜவ்வரிசி தொழிற்சாலைபற்றிக் குறிப்பிட்டார்கள். நம்முடைய தமிழகத்தில்தான் மரவள்ளிக் கிழங்கு அதிக அளவில் பயிரிடப் படுகிறது. சுமார் 55,000 ஹெக்டேர் நிலத்தில் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப் படுகிறது. சுமார் 17 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக சேலம், தர்மபுரி, தென்னாற்காடு , கன்னியாகுமரி மாவட்டங்களில் இது பயிரிடப்





படுகிறது. எனவே சேலத்திலும், தர்மபுரியிலும் இது சம்பந்தமான கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்து மேற்படி கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். 27-2-1982-ல் ஆரம்பிக்கப்பட்ட சேலம் கூட்டுறவுச் சங்கம் நன்றாக வளர்ச்சி அடைந்து இன்றைக்கு 50 கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்யக்கூடிய அளவுக்கு உயர்ந்திருக்கிறது. சென்ற ஆண்டு ரூ. 13.28 இலட்சம் லாபம் கிடைத்திருக்கிறது. தர்மபுரியில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தில் பவுடர் மட்டும் தயாரிக்கிறார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கம் 37 சிறு சிறு தொழில்களாக இருப்பவற்றை ஒன்றுபடுத்தி உருவாக்கப் பட்டது. அதில் சென்ற ஆண்டு ரூபாய் 53,720 லாபம் கிடைத்திருக்கிறது. இது மட்டுமல்லாமல், சேலம் மாவட்டத்தில் பெரிய காடான்பட்டியில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, அதன் உற்பத்தியைப் பெருக்குவதற்காக நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். நாமக்கல்லில் ஜவ்வரிசி கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த 'டாட்கோ' மூலமாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். இதில் விலைச்சரிவு ஏற்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம் வியாபாரிகள்தான். இந்த வியாபாரிகள் இதற்கு முன்பு கொள்ளை இலாபம் அடித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது அது முடியாமல் போய்விட்டதால், பெரும் குழப்பத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு சில கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களே உடந்தையாக இருந்து கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் விளைபொருளை வெளியிலே விற்றுவிடுகிறார்கள். கூட்டுறவு இயக்கத்தையே நசுக்குகின்ற அளவிலே இவர்கள் செயல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருந்து விட்டு உற்பத்தி செய்த பொருள்களை வெளியில் விற்பது நாட்டுக்குச் செய்யும் துரோகம் ஆகும். அவர்கள் இந்தச் செய்கைகளை விட்டுவிட்டு கூட்டுறவு இயக்கத்திற்கு ஒழுங்காக பாடுபடவேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 'டான்சி' நிறுவனம்பற்றி பல்வேறு உறுப்பினர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். மொத்தத்தில் அது நஷ்டத்தில் இயங்கி வருகிறது. இதில் கருத்து வேறுபாடு இல்லை. இது முதன்முதலில் பணிப் பயிற்சி நிலையங்களாகத் தொடங்கப்பட்டது. இது 56 தொழில் பிரிவுகளைக் கொண்ட பல்வேறு வகையான பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனமாகும். பொருளாதார ரீதியாக அவை வளர வேண்டும் என்பதற்காக முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். என்றாலும்கூட, நாம் நினைக்கக் கூடிய அளவுக்கு அவற்றை வேகமாக வளர்க்க சாத்தியமில்லை. சில இடங்களில் பல்வேறு விதமான தடங்கள் வருகின்றன. 1965-66 ஆம் ஆண்டு இது தொடங்கப்

பட்டவுடனே இதன் உற்பத்தி 389 லட்சம் ரூபாயாக இருந்தது, இப்போது 1985-86 ஆம் ஆண்டில் நம் எதிர்பார்ப்பு 3,500 லட்சம் ரூபாயாகும், இவ்வளவு அதிகமாக நம் எதிர்பார்ப்பு இருந்தாலும்கூட, அதில் போதுமான அளவுக்கு இலாபம் இல்லை. 1984-85 ஆம் ஆண்டு மட்டும் ஏறக்குறைய 285 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக எட்டே எட்டு தொழிற்சாலைகள் மூலமாக 80 விழுக்காடு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது அதிலும் குறிப்பாக மேட்டூர் அணையிலுள்ள 'டான்சி' நிறுவனத்தில் மட்டும் 70 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மொத்த நஷ்டத்தில் நான்கில் ஒரு பங்கு இதுவாகும். இவ்வாறு டான்சி நிறுவனத்தில் நஷ்டம் ஏற்படுவதற்கான சில முக்கிய காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிறுவனங்களின் சார்பில் ஆயத்தீர்வை சுமார் 150 இலட்ச ரூபாய நாம் செலுத்திக்கொண்டிருக்கிறோம். தனியாராக இருந்தால், அவர்களுக்கு வரிச் சலுகை தரப்படுகிறது. 40 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால் ஆயத் தீர்வை கிடையாது. அதற்கு மேல் இருந்தால், அவர்கள் கணக்கைச் சரியாக எழுதாமல் அரசை ஏமாற்றி விடுவார்கள். ஆனால் நம்மைப் பொறுத்த வரையில் கணக்கைச் சரியாகக் காட்டியாக வேண்டும். அதன் விளைவாக ஆயத் தீர்வை 150 இலட்சம் ரூபாய் கட்டவேண்டியிருக்கிறது. மூன்றில் இருபங்கு ஆயத் தீர்வை கட்டிக்கொண்டிருக்கிறோம்.

அடுத்து, டான்சி நிறுவனத்திற்கு அரசுத் துறை நிறுவனங்கள் தர வேண்டிய தொகை சுமார் 400 இலட்சம் ரூபாயாகும். அவை தொடர்ந்து பணத்தைத் தராமல் தள்ளிக்கொண்டே போகின்றன. இதனால் ஆண்டு தோறும் 70, 75 இலட்சம் ரூபாய் வட்டியாகச் செலுத்திக்கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 11-00)

அடுத்ததாக, 1964-65 லே போட்ட மெஷினரிகள் அவ்வளவு சரியாக நாம் எதிர்பார்க்கிற பலனைக் கொடுக்கவில்லை. தனியார் நிறுவனங்களோடு போட்டி போடமுடியவில்லை. அங்கு இருக்கிற ஊழியர்கள் 1965 லிருந்து ஏராளமாக இருக்கிறார்கள். போதிய அளவுக்கு மேலாக இருக்கிறார்கள். அலுவலர்கள், ஊழியர்கள் ஆயிரம் பேர்களுக்குக் கூடுதலாக இருக்கிறார்கள். 5500 பேர்கள் பணியாற்றுகிறார்கள். ஆண்டுக்கு 3 மாதம், 2 மாதம் வேலை இருக்கிறது. வேலை இல்லாமல் சும்மா இருக்கிற நிலைமையிலே அங்கு ஊழியர்கள் இருக்கிறார்கள். அடுத்து, அரசுத் துறையில் டான்சிக்கு 5 வது இடமாக இருந்ததை, 4 வது இடமாக அறிவித்து இந்த ஆண்டு உத்தரவு போட்டிருக்கிறார்கள். பல அரசு நிறுவனங்கள் டெண்டர் கேட்கிறார்கள். டெண்டர்



போடுவதால்தான், தனியாரோடு போட்டியிடுகிற தொழில்கள் சரியாக வரவில்லை. தனியார்கள் இந்த டாக்ஸ எல்லாம் கட்டுவதில்லை. தனியார் ஒரு ரூபாய்க்குத் தருகிறேன் என்று சொல்கிறபோது, ரூபாய் 10 காசுக்குத்தான் நாம் தர முடிகிறது. ஆகவே பெரிய நட்டம் ஏற்படுகிறது. அரசுக்குச் செலுத்த வேண்டிய பாக்கி மட்டும் ரூ. 1,261 இலட்சம். இதற்கு மட்டும் வட்டியைத் தொடர்ந்து செலுத்திக் கொண்டிருக்கிறோம். அது லாபகரமாக நடக்கிறது என்று சில விவரங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்திலே பேசினோம், 361 லட்சம் ரூபாயை பங்குத் தொகையாகவும், ஆயிரம் லட்சம் ரூபாயை வட்டி இல்லாத கடனாகவும் மாற்றித் தரும்படி கேட்டிருக்கிறோம். அப்படிச் செய்தால்தான், டான்சி நிறுவனம் நிமிர்ந்து இருக்க முடியும்.

அடுத்து ஒரு எட்டு தொழில்களைப் பற்றிச் சொன்னார்கள். அவைகளை மாற்றி, திருத்தி அமைக்க வேண்டுமென்று பரிசீலிக்கச் சொன்டிருக்கிறோம். ஏனென்றால் இழப்பைச் சரிக்கட்டுவதற்காக, 4 தொழில் பிரிவுகளை 14 தொழில் பிரிவுகளாகப் பிரித்து வைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். இதன் மூலம் செலவில் 4 ல் ஒரு பங்கு மிச்சப்படுத்த முடியும். இவ்வளவு இழப்பையும் அந்த நிறுவனங்கள் தாங்கிக்கொள்ள முடியாது. இருந்த போதிலும் டான்சி நிறுவனம் ஏராளமான பணிகளையும் செய்துள்ளது. உதாரணமாக ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள விண்வெளி நிலையத்தில் தொழில் நுட்பப் பிரிவுகளுக்கு 40 லட்ச ரூபாய் மதிப்புள்ள பணிகளை கடந்த 2 ஆண்டுகளில் செய்து கொடுத்திருக்கிறது. மேலும் 10 சர்க்கரை ஆலைகளுக்கும், 5 நூற்பாலைகளுக்கும் கட்டுமானப் பணிகளாக 400 லட்ச ரூபாய்க்கு செய்து கொடுத்திருக்கிறது. கிருஷ்ணா நதிநீர் திட்டத்திற்கு இந்த ஆண்டு மட்டும் ஏறக்குறைய 20 லட்ச ரூபாய் மதிப்புள்ள பொருள்களை வழங்கி இருக்கின்றது. பாதுகாப்பு. விமானப் படைப் பிரிவுக்கு இரகசியமாக சில பணிகளை டான்சியிலே கொடுத்து ஏற்கெனவே 35 லட்சம் ரூபாய்க்கு வேலை செய்து கொடுத்திருக்கிறது. பாதுகாப்புத் துறைக்கு 1985-86 ல் இந்தப் பணியை எல்லாம் பார்த்துவிட்டு 80 லட்ச ரூபாய் மதிப்பில் ஆர்டர் தற்போது கொடுத்திருக்கிறார்கள்.

கடந்த 1984 டிசம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு வேகவேகமாக ஓட்டுப் பெட்டிகள் செய்து தர வேண்டுமென்று ஆர்டர் வந்தது. அவைகளை 1 மாதத்தில் செய்து தர வேண்டுமென்று சொன்னார்கள். தமிழ் நாடு மட்டுமல்லாமல், ஆந்திரம், கர்நாடகம், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களுக்கும் அவைகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். 180 லட்ச ரூபாய் மதிப்பில் அவைகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். அந்தப் பெட்டிகளை 12 நாட்களுக்குள் தயார் செய்து தர வேண்டுமென்று சொன்னார்கள், அவைகளை 12

நாட்களிலே செய்து கொடுக்கக் கூடிய நிலைமைக்கு நம்முடைய டான்சி பணியாற்றியது. அடுத்து, சத்துணவுத் திட்டத்திற்காக 210 பொருட்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மையத்திற்கும் 630 லட்ச ரூபாய் செலவில் 2 மாத காலத்தில் டான்சி நிறுவனம் செய்து கொடுத்திருக்கிறது.

(முற்பகல் 11-05)

அதே நோக்கில் சத்துணவு மையக் கூடங்களுக்காகத் தேவைப்படும் ரூ. 217 லட்சம் மதிப்புள்ள தளவாட சாமான்கள் வழங்கியிருக்கிறது. இப்படி இவ்வளவு பணிகளைச் செய்தும் கூட அது நட்டத்தில் இயங்குகிறது. அதிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணத்தில், இப்போது 17 திட்டங்களைப் போட்டிருக்கிறோம். அவைகளைச் சுலபமாக டான்சி மூலம் செய்ய முடியும். ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கும் 56 யூனிட்டுகளிலும் இந்த 17 திட்டங்களையும் அதே ஆட்களை வைத்துக் கொண்டு செய்ய முடியும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்த 17 திட்டங்களுக்காகவும் ரூ. 404.70 லட்சம் ஒதுக்க திட்டக் குழுவும் மத்திய அரசும் ஒப்புதல் அளித்திருக்கின்றன. அதில் 250 லட்சம் ரூபாய் மாநில அரசு தர வேண்டும். மற்ற தொகையை நிதி நிறுவனங்கள் மூலமாகக் கடனாகப் பெற இருக்கிறோம். அந்தப் பணிகளின் மூலமாக மீண்டும் டான்சியை நிச்சயமாக லாபகரமாக மாற்ற முடியாவிட்டாலும்கூட நட்டத்தில் இருந்து விடுபடச் செய்ய முடியும் என்று நினைக்கிறோம்.

அடுத்து, சிட்கோ நிறுவனம் நல்ல முறையில் லாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதில் சிரமம் ஏதுமில்லை. ஆலந்தூரில் ஏறக்குறைய 12 தொழிற் கூடங்கள் மருந்துத் தொழிலுக்காக என்று கட்டப்பட்டிருக்கின்றன. 13 இடங்களை மேம்படுத்தப்பட்ட இடங்களாக அறிவித்திருக்கிறோம். மேலும் 2 வது, 3 வது கட்டத்தில் மேலும் 23 தொழிற்கூடங்கள் மற்றும் 27 மேம்பட்ட பணி மனைகள் தருவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மைய அரசு மற்றும் மாநில அரசு மானியங்களை சிரமம் பார்க்காமல் சிக்கல் இல்லாமல் சிட்கோ நிறுவனம் எல்லோருக்கும் வழங்கிக் கொண்டிருக்கிறது.

அதைப் போலவே ஆட்டோமொபைல் துறைத் தொழில்கள் மற்றும் மருந்து உற்பத்தித் தொழில்கள், மின்னணுப் பொருள்கள் தயாரிக்கும் தொழில்கள் போன்ற தொழில்களுக்கு அவை எந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டாலும், அதாவது பின் தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டாலும் சரி,





முன்னேற்றமடைந்த பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டாலும் சரி, மொத்த நிலையான சொத்தில் 10 சதவீதம் அல்லது பணி புரியும் தொழிலாளர்களில் ஒரு நபருக்கு ரூ. 20,000 என்ற வகையில் ரூ. 10,0000 க்கும் மேற்படாமல் மானியமாக வழங்கி வருகிறது. இவ்வாறு கடந்த 1984-85 ஆம் ஆண்டில் தொழில்களுக்கு மட்டும் ரூ. 7.72 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, விற்பனையைப் பொறுத்த வரையிலும்கூட, சிட்கோ எந்த விதமான சிரமமும் இல்லாமல் நடைபெற்று வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

போதிய அளவு மூலப் பொருள் கிடைக்கவில்லை என்றாலும்கூட, எப்படியாவது தருவித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். கடந்த 3 மாத காலமாக எந்தச் சிக்கலும் இல்லாமல் நடக்கிறது. நிலக்கரியானாலும் சரி, இரும்பு அல்லது எஃகு ஆனாலும் சரி, அவற்றையெல்லாம் எந்தச் சிக்கலும் இல்லாமல் கடந்த 3 மாதங்களாக வழங்கி வருகிறோம்.

அடுத்து, பட்டு வளர்ச்சியைப்பற்றிச் சொன்னார்கள். 1979ஆம் ஆண்டில் 21,000 எக்கரில் மட்டும்தான் பயிரிடப்பட்டது. தமிழகத்தில் 1956-க்கு முன் மொழிவழி மாநிலம் பிரிவதற்கு முன்னால் கொள்ளேகால் பகுதி நமது சென்னை மாகாணத்தில் இருந்தது. அப்போது நமது மாகாணம் பட்டு உற்பத்தியில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தது. மைசூருக்கு அடுத்து தமிழகம் இருந்தது. இன்றைக்கு கொள்ளேகால் கருநாடகத்திற்குப் போன பின்னாலே தமிழகத்தில் தாளவாடி, ஹோசூர் போன்ற பகுதிகளில் 500 எக்கர்தான் பட்டு உற்பத்தியில் இருந்து வந்தது. அதுவும் அரசுப் பண்ணைகளின் மூலம் முசுக் கொட்டை செடி பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு மார்ச் மாதம் வரை 67,000 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்படுகிறது. அதன் மூலம் நல்ல தரமான பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. எந்த அளவுக்கு முயற்சி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்து மானாவாரியில் இதைப் பயிர் செய்ய முடியும் என்ற நிலைக்கு வந்திருக்கிறோம். அதற்கு முன்னால் குளிர்ந்த பிரதேசத்தில் மட்டும்தான் முசுக் கொட்டை பயிரிட முடியும் என்றிருந்த நிலையை மாற்றி இன்றைக்கு பின் தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம், தஞ்சை மாவட்டம் போன்ற இடங்களில்கூட முசுக்கொட்டைச் செடி பயிரிடப்படுகிறது. இன்றைய தினம் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் முசுக் கொட்டைச் செடியைப் பயிரிட்டு வருகிறார்கள். அதுமட்டுமல்ல, விவசாயிகளுக்குப் பணப் பயிரில் கிடைக்கிற வருவாயை விட இந்த வகையில் அவர்களுக்கு அதிகமான வருவாய் கிடைக்கிறது.

ஒரு குடும்பத்தில் ½ ஏக்கர் நிலத்தில் ஒழுங்காகப் பட்டுப் புழு வளர்த்தால், மாதத்திற்கு 5,000 ரூபாய் கிடைக்கும். 2, 3 பெண்களை வைத்துக் கொண்டு அந்தப் பட்டுப் புழு வளர்ப்பதில் ஈடுபட்டால், அதற்கு 1,500 ரூபாய் அல்லது ரூ. 1,600 தான் செலவாகும். மீதி ரூ. 3,500 அல்லது ரூ. 3,600, ½ ஏக்கர் நிலத்தில் மட்டும் வருவாயாகக் கிடைக்கும். அந்த அளவுக்குச் சிறப்பான தொழிலாக இன்றைக்கு அது வளர்ந்திருக்கிறது. நாம் எதிர்பார்த்ததை விட மிக வேகமாக அது வளர்ந்திருக்கிறது. அதை மனதிலே கொண்டு 1985-86-ல்

(முற்பகல் 11-10)

மேலும் ஐந்தாயிரம் ஏக்கர் பரப்பிலும் மானாவாரியில் 500 ஏக்கர் பரப்பிலும் பயிரிட திட்டமிட்டிருக்கிறோம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஐம்பதாயிரம் ஏக்கரிலும், மானாவாரியில் 500 ஏக்கரிலும் பயிரிட திட்டமிட்டிருக்கிறோம். அந்த வகையில் ஏழாவது இடத்திலிருந்து நாம் மூன்றாவது இடத்திற்குச் சென்றிருக்கிறோம். அதே நேரத்தில் பட்டு வளர்ச்சியில் பெரிய தடையாக ஒன்று நம்மை பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. நாம் பட்டு உற்பத்தி செய்கிறோம். பட்டு உற்பத்தியின் மூலமாக விவசாயிகள் பலன் அடைய வேண்டும் என்பதற்காகத்தான் ஏராளமாகப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். தமிழக அரசு 6 இலட்சம் கிலோகிராம் பட்டு உற்பத்தி செய்கிறது. இதில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கை பட்டுக் கூடாகவே வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்கிறார்கள். கூட்டுறவு முறையில் வைத்துள்ள இடங்களுக்கு இது கிடைப்பதில்லை. சேலம், தர்மபுரி ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கும் பட்டு உற்பத்தியைக் கொண்டு போய் மைசூரில் விற்கிறார்கள். அதே நேரத்தில் இங்கேயுள்ள பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பட்டு வேண்டுமென்றால் கிடைப்பதில்லை. பட்டு இணையம் என்ற காஞ்சிபுரத்தில் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த நிறுவனத்தின் மூலமாக பட்டை கடனுக்கு வாங்குகிறார்கள். ரொக்கம் கொடுத்து வாங்க வேண்டும் என்று சொன்னால், இது தரமானதாக இல்லை, இதைவிட தரமான பட்டு மைசூரில் கிடைக்கிறது என்று சொல்லி, அங்கே போய் வாங்குகிறார்கள். தரமான பட்டு இங்கேயே சுலபமாகக் கிடைக்கிறது. வேண்டுமானால் தரத்தை உயர்த்திக் கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் இதை விட்டுவிட்டு மைசூரில் வாங்குகிறார்கள். அதற்கு எத்தனையோ காரண காரியங்களைச் சொல்லுகிறார்கள். இதனால் அந்த இணையத்திற்கு மட்டும் ஏறக்குறைய 2.7 கோடி ரூபாய் பாக்கியாகச் செலுத்த வேண்டும். இவ்வளவு பெரிய தொகை முடக்கப்பட்டிருக்கிறது. இதனால் சில விவசாயிகளுக்கு அந்த நிர்வாகம் பணம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட சிக்கல் இருக்கிறது. ஆகவே கூட்டுறவு உற்பத்தியில் உள்ள பல பேர் நேரிடை





யாகப் பணம் கொடுத்து வாங்குகிறார்கள். காஞ்சிபுரத்தில் மிகப் பெரிய நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அண்ணா கூட்டுறவுச் சங்கம், முருகன் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், காஞ்சி கூட்டுறவுச் சங்கம், திருவள்ளுவர் கூட்டுறவுச் சங்கம், வரதராஜசுவாமி கூட்டுறவுச் சங்கம், பல்லவன் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கதர் வாரியத்தின் சர்வோதயச் சங்கம் போன்ற சங்கங்கள் நேரிடையாகப் பணம் கொடுத்து வாங்குகிறார்கள். அவர்கள் இந்தப் பட்டைப்பற்றிக் குறை சொல்லவில்லை. கடனுக்கு வாங்கும் சொசைட்டியைச் சேர்ந்தவர்கள்தான் இது போன்ற குறைகளைச் சொல்லிவிட்டு வெளியே வாங்குகிறார்கள். ஆகவே கூட்டுறவுச் சங்கங்களில் தலைமை வகிக்கிற பெரியவர்கள், நண்பர்கள், தமிழகத்தின் பட்டை வாங்க வேண்டும் என்ற உணர்வு பெற்று வாங்க முன்வந்து, இந்தச் சிக்கலைத் தீர்க்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பட்டு வளர்ச்சிக்காக மட்டும் 1985-86 ஆம் ஆண்டு 175 இலட்சம் ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பட்டு வளர்ச்சிக்காக 26 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் ஏறக்குறைய 12½ இலட்சம் கிலோகிராம் கோரா பட்டு உருவாகும்.

கோவை மாவட்டத்தில், உடுமலைப்பேட்டை வட்டத்தில் மைவாடி கிராமத்தில் உயர்ந்த பட்டு நூல் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு மாவட்டத்திலும் நாட்றாம்பள்ளியில் கூட்டுறவு நூற்பாலையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏறக்குறைய 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிடப் பணி முடிந்து தயாராக இருக்கிறது.

காமராஜர் மாவட்டத்தில் சேலநூர் கிராமத்தில் 42 இலட்சம் ரூபாயில் பட்டு கிராமம் ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலும், முத்துராமலிங்கம் மாவட்டத்திலும் இரண்டு இடங்களில் பட்டு தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டத்திலும் நத்தத்தில் 35 கோடி ரூபாய் செலவில் பட்டு நூற்பாலை ஒன்று ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'டிக்' நிறுவனத்தைப் பொறுத்தவரையில், 1949-ல் இருந்து 1978 வரை முப்பது ஆண்டுகளில் வழங்கிய கடன் தொகை 74 கோடி ரூபாய். 1979 முதல் 1984 வரை உள்ள ஆறாண்டுக் காலத்தில் வழங்கப்பட்ட கடன் தொகை 158 கோடி ரூபாய். 1983-84-ல் வழங்கப்பட்ட கடன் தொகை ரூபாய் 41.11 கோடி. நடப்பாண்டுக்கு 1985-86-க்கு 60 கோடி ரூபாய் கடன் வழங்க

உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. நடுத்தர, சிறு தொழில்களுக்கு கடன் தருவதற்காகத்தான் நிறுவப்பட்டது 'டிக்' நிதி நிறுவனம். சிறு தொழில் வளர்ச்சிக்காக ஆரம்பிக்கப்பட்டதுதான் 'டிக்' நிறுவனம். இந்த நிறுவனம் தொடர்ந்து லாபத்திலே இயங்கி வருகிறது. 1983-84 ஆம் ஆண்டில் 133.16 இலட்சம் லாபம் அடைந்திருக்கிறது. டிக்கைப் பொறுத்தமட்டில், அதன் தொழிற்சாலைகள் மூலமாக ஏறத்தாழ 1,87,000 பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கின்றார்கள் என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.15)

அடுத்து, அந்தத் திட்டத்தினுடைய முக்கிய அம்சமாக, 1977 முதல் சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தால் திட்டம் நிறைவேற்றப்பட்டு அந்த நிறுவனம் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் போன்ற ஊர்களில் தொழில்கூடங்களைக் கட்டி, அக்கட்டிடங்கள் ஒதுக்கப்பட்ட தொழில் வினைஞர்களுக்கு இயந்திரம் வாங்குவதற்காக நிதி உதவி அளிக்கவேண்டும் என்பதற்காக, முதல் நிலைக் கடனாக, மதிப்பீடு ரூ. 218 லட்சம் ஒதுக்கியிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்றபோது யாரும் எழுந்து நின்று பேசக் கூடாது, உட்கார்ந்துகொண்டு மெதுவாகப் பேசிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன்: நடப்பு நிதி ஆண்டில், திட்டத்தின் இரண்டாவது நிலையில் பாடி, முகப்பேர் — அரும்பாக்கம் அருகிலுள்ள முகப்பேர்—போன்ற பகுதிகளில் சுமார் 150 தொழில் நிறுவனங்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கப்படுகின்றன. அம்மனைகளைப் பெறும் தொழில் வினைஞர்கள் இயந்திரங்கள் வாங்குவதற்கும், கட்டிடங்கள் கட்டுவதற்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இவை அனைத்திற்கும் சேர்த்து 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். டேன்செல் நிறுவனம் இன்றைக்கு சிறப்பாக இயங்க வேண்டுமென்ற திட்டத்தோடு பல்வேறு விதமான பணிகளை மேற்கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டில், தோல் உற்பத்தியில் 70 சதவிகிதத்தில் நாம் இருக்கிறோம். அதுபோலவே இறக்குமதியில் 65 சதவிகிதம். அந்தப் பொருள்கள் செய்வதிலே 20 சதவிகிதத்தில் இருக்கிறோம். நாம் இன்றைக்கு அந்த இடத்தைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ ஒரு லட்சம் திறமையுள்ள தொழிலாளர்கள் நம்மிடம் இருந்தும்கூட, அவர்கள் தோல் பொருள்களை செய்வதில் அதிக அக்கறை காட்டாமல் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் மாற வேண்டுமென்பதற்காக பல்



வேறு திட்டங்களை இன்றைக்கு நாம் தயார் செய்துகொண்டிருக்கிறோம். ஏறத்தாழ 5 இடங்களிலே தோல் பொருள்கள் தயாரிக்கின்ற பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்துகிறோம். மேட்டுப்பாளையம், பம்மல், வேலூர், ஈரோடு, திண்டுக்கல், திருச்சி, வாணியம்பாடி ஆகிய ஊர்களில் தோல் பொருள்கள் காலனிகளுக்கு பொது நோக்கமாக சேவை நிறுவனங்களை ஏற்படுத்த இருக்கிறோம். அதாவது சின்னச் சின்ன தொழில் செய்யக்கூடியவர்கள்கூட பொது சேவை மையங்கள் மூலமாக எல்லா இயந்திரங்களையும் வாங்கி, அந்த சிறு கைத்தொழில் வினைஞர்களும் அங்கே வந்து தொழில் செய்துவிட்டுப் போவதற்கு ஏதாவது ஒரு சிறு தொகையை அந்த இடத்திற்காக வழங்கிவிட்டுப் போவதற்கான ஏற்பாட்டைச் செய்து பொது நோக்க சங்கங்களை நாம் அமைக்க இருக்கிறோம்.

அதுபோலவே திருச்சி போன்ற இடங்களில் தோல் பதனிடும் பொது நோக்க கூட்டுறவு மையங்களை அமைக்க இருக்கிறோம். இவை அனைத்தையும் சேர்த்து ரூ. 420 லட்சம் மூலதனச் செலவில் திட்டங்கள் திட்டப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாமன்றத்திலே பல பேர்கள் சில ஐயப்பாடுகளை எல்லாம் உருவாக்கி அதற்கு பதில் எதிர்பார்ப்பார்கள் என்று நினைக்கிறேன். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரே பகுதியில் ஒரே மாதிரியான தொழிலை ஏராளமான பேர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள், அதனாலே தொழில் தொடங்குகின்ற பல பேர்களுக்கு அவர்கள் பொருளின் விற்பனையில் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்றார்கள். விற்பனைக்குப் போதிய வசதிகளுக்கு நாம் ஏற்பாடு செய்யவில்லை என்று சொன்னார்கள். அதில் இடர்ப்பாடுகள் இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கின்ற நிலைமையிலேகூட, பாலிதீன் பைகள் என்று சொன்னால் எல்லோருமே பாலிதீன் பைகள் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்று கருதுகிறார்கள். ஏனென்றால், விரைவில் நல்ல லாபம் கிடைக்கிறது என்ற கருத்தில் செய்கிறார்கள். யார் ஒருவர் ஒரு தொழிலை ஆரம்பிக்கின்றாரோ அதைப் பார்த்துவிட்டு எல்லோருமே ஒரே தொழிலை ஒரே ஊரிலே செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த நிலை மாறினால்தான், துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, பரவலாக விற்பனை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும். அந்த அளவிலே ஏறத்தாழ 6000 தொழில் நிறுவனங்களை உருவாக்க கணக்கீடு செய்திருக்கிறோம். மின்சாரம் மற்றும் மின்னணுவியல் அதற்காக ஒரு 600 தொழில்கள், ரசாயனம், மருந்து, பிளாஸ்டிக் தொழில்களுக்கு 400, தானியங்கி வாகனங்கள் உதிரிப்புகள்

தயாரிக்கும் தொழில்கள் 600, பொறியியல் தொழில் பொருள்கள் செய்யும் தொழில் 1403 மற்ற சிறுதொழில்கள் உறுப்புகள் செய்யும் தொழில்கள் 3000 என்று அந்த 6000 தொழிற்சாலைகளையும் ஒவ்வொரு இன் வாரியாகப் பகுத்திருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அதனாலேயே பல சிக்கல்களைக் குறைக்க முடியும் என்று நம்பிக்கை ஏற்படுகிறது.

டிக் நிறுவனத்தில் 'சாப்ட் லோன்' வழங்குவதுபற்றி மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதைப் பொறுத்த மட்டில், இன்றைக்கு ரூ. 2 லட்சம் தான் தருகின்றார்கள். அது போதுமானதாக இல்லை என்றார்கள். மொத்தத்திலே ஏறத்தாழ 90 லட்சம் ரூபாய் தந்திருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். "சாப்ட் லோன்", சுலப கடன் கொடுக்க ஒவ்வொரு மாநிலத்திலும் ஸ்டேட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது. அந்த நிலையில் நம் மாநிலத்திலே 'டிக்' நிறுவனம் இருக்கிறது. அந்த டிக் நிறுவனத்திற்கு ஐ.டி.பி.ஆல். வரையறுக்கப்பட்டு 'சுலப கடன்' ஆகத் தருகின்றன. ரூ. 2 லட்சம் வரை தருகிறது. அண்மையில் ஜூன் மாதத்திலிருந்து ஒரு உத்தரவு போடப்பட்டு, அந்த 2 லட்சம் ரூபாயை ரூ. 5 லட்சம் ரூபாயாக இன்றைக்கு மாற்றியிருக்கின்றார்கள். இந்த ஆண்டு மட்டும் ஏறத்தாழ ரூ. 100 லட்சம் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது, 1985 மார்ச் இறுதிவரையிலே, இதற்கு வட்டி 1 சதவிகிதம் இருப்பதால், அதிகமான பேர்கள் இதை எதிர்பார்க்கிறார்கள். அந்த அளவுக்கு முயற்சிகள் மேற்கொண்டு, அதை விரிவாக்க திட்டமிட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்து, டிக் நிறுவனத்தால் கடன் வழங்குவதில் கால தாமதம் ஏற்படுகிறது, குழுக்கள் அடைத்து என்ன செய்தாலும், அந்தக் காலதாமதத்தைக் குறைக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு 45 நாட்களுக்குள்ளாக மனுக்களைப் பரிசீலித்து, விரைவாகக் கடன் வழங்க வேண்டுமென்று உத்திரவு போடப்பட்டிருக்கிறது. இதற்காகக் குழுக்களை அமைத்துப் பரிசீலிக்கிறோம் என்றாலும், சில நேரங்களில் காலதாமதம் ஏற்படுகிறதென்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். குழுக்கள் 45 நாட்களில் பரிசீலித்து விடுகிறார்கள். அதற்குப் பிறகுகூட சம்பந்தப்பட்ட தொழில் முனைவர்கள் அக்கறை எடுத்துக்கொள்வதில்லை. தொழில் முனைவர்கள் தர வேண்டிய ஆவணங்களை உரிய நேரத்திலே தருவதில்லை. அவர்கள் முன்பணம் வைக்க வேண்டுமே, முதலீடு வைக்க வேண்டுமே அதைத் தயார் செய்வதில்லை. அவர்





களுக்கு மின்சார இணைப்பு கிடைப்பதில்லை. பல்வேறு தொல்லைகளால் காலதாமதம் ஏற்படுவது இயற்கையாக இருக்கிறது. இருந்தாலும் டிக் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், தொடர்ந்து 45 நாட்களுக்குள் பரிசீலனை செய்து முடித்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு 3 முறை நோட்டீஸ் அனுப்புகிறார்கள். நோட்டீஸ் அனுப்பியும் வரவில்லை என்றால், அந்த மனுக்களை எல்லாம் ரத்து செய்வதில்லை. அவற்றை 2 ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்து விடுகிறார்கள். அவர்கள் அந்த 2 ஆண்டில் எப்போது வந்து கேட்டாலும், மீண்டும் அந்த விண்ணப்பத்தைப் புதுப்பித்து; கடன் கொடுக்கும் அளவுக்கு, அதை ஒத்தி வைக்கிறார்கள். அந்த அளவுக்குப் பணிகள் செய்து வருகிறார்கள். எனவே காலதாமதம் தவிர்க்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

31—12—1982 அன்று தீர்வு காணாமல் இருந்த விண்ணப்பங்கள் 1868, இன்றைய நிலைமையில் 31-5-1985 நிலுவை 462. எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குக் குறைக்கிறோம். மேலும் குறைக்க தக்க முயற்சிகளை டிக் நிறுவனம் எடுக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட்டியில்லா விற்பனைக் கடன் சம்பந்தமாக கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்தார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களும் கேள்வி கேட்டார்கள். சிறுசிறு சிக்கல்கள் அதில் இருக்கின்றன. கொஞ்சம் காலதாமதம் ஆனாலும், அதை முடிக்க முடியுமென்று நம்புகிறேன். பரிசீலனையை விரைவாக்கி, முடிவெடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட்டியில்லா விற்பனைக் கடன் வழங்குவதில் உள்ள சிரமங்களைத் தவிர்க்க, சிட்கோ மூலம் வழங்குவதை மாற்றி, மாவட்டத் தொழில் மையங்களே தர வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். மாவட்டத் தொழில் மையங்களில் மனுக்களைப் பரிசீலனை செய்து, அதை சிட்கோவுக்கு அனுப்பி, அவர்கள் மூலமாகக் கடன் வழங்கி வந்தார்கள். இதற்கு 2 இடங்கள் தேவை இல்லை என்பதால், மாவட்டத் தொழில் மையங்களிலேயே இதை முடிக்க வேண்டுமென்று, இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.

தொழிற் துறை சம்பந்தப்பட்ட முக்கிய அலுவலர்களை அமைச்சர்கள் சந்தித்துப் பேச வேண்டுமென்று ஆலோசனையை இங்கே வழங்கினார்கள். மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் நீண்ட கால அனுபவம் உள்ளவர்கள், அவர்களுக்குப் பிரச்சினை ஏதும் இராது. ஆனால் நான் புதிதாகப் பொறுப்பு ஏற்றவன். எனவே கடந்த 4 மாதங்களில் 3 முறை அத்தனை அதிகாரிகளையும் கூட்டி, ஒவ்வொருவராகக் கூப்பிட்டு,

விவரங்களைக் கேட்டிருக்கிறேன். எனவே இதில் எந்தவிதச் சிக்கலும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து அப்படிப்பட்ட பணிகளைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சில தகவல்களைச் சொன்னார்கள்: தவறு செய்தவர்களைத் தண்டிக்க வேண்டுமென்றும், சிறப்பாகப் பணியாற்றியவர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்றும் சொன்னார்கள். டான்சியில் அப்படிப்பட்ட நிலைமைகளை விரைவாக மேற்கொண்டிருக்கிறோம். கொஞ்சம் மந்தமாக இருந்ததை விரைவுபடுத்தி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யார் யார் தவறு செய்தார்கள் என்று கண்டுபிடித்து, 7 பேர்கள்மீது நடவடிக்கை எடுத்து, 2 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். டான்சியைப் பொறுத்தமட்டில், அவ்வளவு இழப்பு இருந்தும், மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கே. அவர்களையும், டாக்டர் நாவலர் அவர்களையும் துணையாக வைத்துக்கொண்டு ஊதிய ஒப்பந்தம் குறித்துப் பேசி, ஏறக்குறைய 45 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவானாலும், அதை உரிய காலத்தில் செய்ய வேண்டுமென்ற முறையில் அவர்களுக்கெல்லாம் ஊதிய உயர்வு ஒப்பந்தத்தைச் செய்து கொடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், உற்பத்தியை ஒழுங்காகப் பெருக்கவேண்டுமென்பதற்காகவும் ஒழுங்காகப் பணியாற்றுகிறவர்களை மேலும் உற்சாகப்படுத்தவும் உற்பத்திப் பிரிவிலும் விற்பனைப் பிரிவிலும் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊக்க ஊதியம், இன்சென்டிவ் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் ஒரே கூரையின்கீழ் தடைகளை நீக்கி அனுமதி அளிக்கும் முறை போதிய அளவுக்கு இல்லை என்று சொன்னார்கள். எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு சிரமங்களைத் தவிர்த்திருக்கிறோம். 7, 8 இடங்களுக்குப் போய், அதாவது பஞ்சாயத்து யூனியனுக்குப் போவது, டி.எச்.ஓ.-வுக்குப் போவது, மின்வாரியத்திற்குப் போவது என்று பல இடங்களுக்குப் போய், திரிந்து அனுமதி பெறும் நிலைமை இருந்தது. இன்றைக்கு அந்த நிலைமை இல்லை. கொஞ்சம் குறைத்திருக்கிறோம். மேலும் குறைக்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். தொழில் முனைவோர் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்றால் பல்வேறு இடங்களில் இருந்து அனுமதி பெற வேண்டிய நிலை இருக்கிறது என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.





(முற்பகல் 11-25)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இப்போது நடைமுறையில் இருக்கிற சிக்கல்களைத்தான் சுட்டிக்காட்டினேன். இப்போதுள்ள நிலைமை என்னவென்றால், ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருந்தாலும் கூட, முடிவில் தொடர்புடைய அலுவலகத்திற்கு அனுமதி வேண்டி கோப்புகள் செல்ல வேண்டியிருக்கிறது என்று நினைக்கிறேன். அதற்கு மாறாக நிறுவனத்திலேயே இதற்காக ஒரு பிரிவை ஏற்படுத்தி, அங்கேயே கோப்புகளில் ஒப்புதல் பெற்று அனுமதியளிக்கும் நிலையை ஏற்படுத்தினால், இப்போது ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற காலதாமதம் போன்ற சிக்கல்களைத் தவிர்க்கலாம் அல்லவா? அதுதான் சரியான முறை.

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன்: உறுப்பினர் சொல்லுவது மாதிரி செய்யலாமா என்று தெரியவில்லை. ஆனால் இன்றைக்கு அந்தக் குழுவிலே உள்ளாட்சித் துறையில் சம்பந்தப்பட்டவர்கள், மாசு தடுப்பு வாரியத்திலுள்ள சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் நிறுவனத்திலுள்ளவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்குத் தலைவராக இருக்கிறார். இவர்கள் எல்லாம் கூடி ஆலோசனை செய்துதான் முடிவெடுக்கிறார்கள். 45 நாட்களுக்குள் முடிவெடுக்கப்படாத விண்ணப்பங்கள் குறித்து, அவ்வப்போது ஒன்று கூடி கலந்து பேசி முடிவெடுக்கிறார்கள். 1—4—1984 முதல் மார்ச் 1985 வரை 10 மாத காலத்தில் 1613 இடங்களுக்கு விண்ணப்பங்கள் வந்துள்ளதில் 906 இடங்களுக்குத் தீர்வு கண்டிருக்கிறோம். இதற்கு முன்பெல்லாம் இந்தமாதிரி காரியத்தில் 10 சதவிகிதம் கூட தீர்வு கண்டதில்லை. இது கூட போதாது. மேலும் இருக்கின்ற விண்ணப்பங்களைப் பொறுத்தவரையில், விரைவாகக் கலந்து பேசி சிக்கல்களைத் தீர்த்து ஆவன செய்ய முடியும் என்று உறுதியளிக்கிறேன்.

அடுத்து, நலிந்த தொழில் பிரிவினருக்கு போதுமான அளவிற்கு உதவி செய்யவில்லையென்று சொன்னார்கள். அதற்குக் கூடுதல் நிதி தேவைப்படுகிறது. சம்பந்தப்பட்ட வங்கியிடமிருந்து அதற்குப் பணம் வேண்டுமென்று கேட்டால், அவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை முன்பணம் என்கிற பெயரில் வங்கியில் கட்டினால்தான் பணம் 'சேங்ஷன்' செய்வோம் என்று சொல்கிறார்கள். ஆனால் நலிந்த நிலையில் இருக்கின்ற அவர்களால் முன்பணம் கட்ட முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே வங்கியிலிருந்து அவர்கள் பணம் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதை எண்ணிப்பார்த்த அரசு, பணத்தைக் கட்ட முடியாதவர்களுக்கு, அவர்கள்

[திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன்] [1985 ஜூலை 12

வங்கியில் செலுத்த வேண்டிய பணத்தில் 50 சதவிகிதம், 75 சதவிகிதம் என்கிற அளவுக்கு சிட்கோ மூலம் செலுத்திக்கொண்டிருக்கிறது. சிட்கோ தான் செலுத்திய பணத்தை பிறகு அரசிடத்திலிருந்து பெற்றுக்கொள்கிறது. இம் மாதிரி 45 தொழில்களுக்கு நாம் உதவி செய்திருக்கிறோம். மைய அரசின் மானியம் ஓரளவுக்கு பி மற்றும் சி தொழில் பிரிவுகளுக்கு மட்டும்தான் கிடைக்கிறது. ஏ பிரிவுக்கு அவர்கள் வழங்குவதில்லை. ஏ பிரிவிலும் பின் தங்கிய வட்டங்கள் இருப்பதால், அதுவும் பின்தங்கிய வட்டம்தான் என்று அறிவித்தால், நமக்கு 25 சதவிகிதம் உதவி கிடைக்கும். இப்போது பி, சி பிரிவுகளுக்கு 10 அல்லது 15 சதவிகிதம்தான் மானியம் கிடைக்கிறது. ஏ பிரிவுக்கும் வழங்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் மத்திய அரசிடத்திலிருந்து மானியம் பெறுவதைப் பொறுத்த வரையில், மற்ற எல்லா மாநிலங்களையும் விட நாம்தான் முதலிடத்தை வகிக்கிறோம் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். சிலர் தொழிற்சாலைகளைப் பதிவு செய்து உண்மையிலேயே தொழில் ஆரம்பித்திருக்கிறார்கள். ஏராளமான பேர், பதிவு செய்வது கோட்டாவுக்குத் தானே தவிர, தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதில்லை என்று சொன்னார்கள். சில பேர் தொழிற்சாலையை ஏற்படுத்தாமல் பதிவு செய்து இங்கே வாங்கி அங்கே கொடுப்பது மாதிரி செயல்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு சிட்கோ மூலம் அப்படிப்பட்டவைகளை எல்லாம் துருவித் துருவி ஆராய்ந்து, அப்படிப்பட்ட செயல்களைக் கண்டித்து அவர்களுக்கு அனுமதி கிடையாது என்று சொல்லி ரத்து செய்திருக்கிறோம். தொடர்ந்தும் கண்காணிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுத் துறையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அரசுத் துறைகள் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஐந்தாவது வரிசையில் பொது நிறுவனங்களிடமிருந்துதான் வாங்க வேண்டுமென்று வழிவகை செய்திருக்கிறோம். கதர் வாரியம், சிறைத் துறை, முட்டுக்காட்டிலுள்ள ஊனமுற்றோர் பயிற்சிப் பள்ளி போன்ற இடங்களிலிருந்துதான் பொருள்களை வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு

(முற்பகல் 11-30)

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், இது ஐந்தாவது இடத்தில் இருப்பதை மாற்றி நான்காவது இடத்தில் வைக்க முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். நமது கட்டுப்பாட்டில் இருக்கிற அரசு



85 ஜூலை 12] [திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன்]

றுவனங்கள் கூட இந்த நிறுவனத்திற்குக் கட்ட வேண்டிய பணத்தைக் கட்ட ாமதப்படுத்துகிறார்கள். நேரத்தோடு கட்டுவதில்லை. பொருட்கள் வாங்குதற்கு; டெண்டர் கேட்கிறார்கள். அந்த முறையை மாற்ற நடவடிக்கைகள் ாடுக்கப்பட்டு, இங்கே தயாராகும் பொருட்களை அரசு நிறுவனங்கள் வாங்க ;வண்டுமென்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

டான்சி நிறுவனத்தில் ஏற்படுகிற நஷ்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் தெரிவித்தார்கள். டான்சியைப் பொறுத்தவரையில் எல்லாத் தொழில்களிலும் நஷ்டம் ஏற்படவில்லை. 23 தொழில் யூனிட்டுகள் லாபத்தில்தான் இயங்குகின்றன. அவைகளில் கடந்த ஆண்டு ரூ. 79.93 லட்சம் லாபம் ஏற்பட்டிருக்கிறது. சிறு சிறு யூனிட்டுகளில், 10 பேர், 15 பேர் என்று வேலை செய்யும் யூனிட்டுகளில் நிர்வாக நடைமுறைகள் காரணமாக நஷ்டம் ஏற்படுகிறது. அதுபோன்ற 33 யூனிட்டுகள் இருக்கின்றன. அந்த நஷ்டத்தையும் விரைவில் சரிக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ப. மாணிக்கம் :** நான் மொத்த நஷ்டத்தைத்தான் குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலேயே 211 லட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் :** அவர்கள் சொல்வது சரிதான். 23 தொழில் யூனிட்டுகளில் 89.9 லட்ச ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. ஆனால் 33 பிரிவுகளில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நான் மறுப்புச் சொல்லவில்லை. இந்த நஷ்டத்தைச் சரிக்கட்டிக் கொள்ள முயற்சிகள் எடுத்து வருகிறோம்

தொழில் நிறுவனங்களில் ஆயிரம் பேர் அதிகமாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். வேலை இல்லாத இடங்களில் அதிகமாக ஆட்கள் பணியாற்றுகிறார்களா என்று கணக்குகள் எடுத்திருக்கிறோம். வேலை செய்யாத ஆட்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கும் நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. சில தொழிலகங்களில் போய் பார்த்தால், அங்கே தொழில்கள் நடக்கிறதா என்ற சந்தேகம் நமக்கே ஏற்படுகிறது. அலுவலர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே சரியான ஒத்துழைப்பும் ஒற்றுமையும் இல்லாததால், சில இடங்களில் எந்தவிதமான வேலையும் நடைபெறவில்லை என்ற தன்மையும் இருக்கிறது. அவைகளை மாற்ற நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

[திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன்] [1985 ஜூலை 12

நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, 27 தொழில் யூனிட்டு களுக்குச் சென்று பார்த்தேன். சில இடங்களில் திருப்திகரமாக நடைபெற வில்லை. அங்கும் சிறப்பாகப் பணி நடக்க தொடர்ந்து முயற்சிகளும், நட வடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு மாண்புமிகு உறுப்பினர் களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தொழில் பிரிவுகளில் நஷ்டம் ஏற்படுவதில்லை. அப்படி நஷ்டம் வருகிறது என்று சொன்னால், அதிலும் சிக்கல் இருக்கிறது. கைவினைஞர் களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. நாகர்கோயில் பகுதியில் தேர் செய்யும் கைவினைஞர்கள் அதிக அளவில் இருக்கிறார்கள். ஆனால் தேர்களுக்கான ஆர்டர்கள் நமக்குப் போதுமான அளவில் வரவில்லை. 17-18 பேர்கள் தேர் செய்யும் கைவினைஞர் கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது வேலை கொடுக்க வேண்டும். கைவினைப் பொருட்களை வைக்கும் ஷோ ரூம்களில் பல இடங் களில் நஷ்டம் ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை. காரணம், நஷ்டம் வருகிறதென்பதற்காக, அந்த ஷோ ரூம்களை மூடிவிட்டால், அதன் காரணமாக பலருக்கு வேலைவாய்ப்பு போய் விடுவதோடு, கைவினைஞர்களை ஊக்கு விக்கவும் இயலாமல் போய்விடும். அதனால், நஷ்டம் வந்தாலும், சிலவற்றை நாம் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. ஒரு தொழிலில் நஷ்டம் வந்தாலும், இன்னொரு தொழிலில் லாபம் வந்து அதைச் சரிக்கட்டும் நிலைமை பல இடங்களில் இருக்கிறது. கைவினைஞர்களுக்கும் போதுமான வேலைகளைக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவர் களை வாழவைக்க வேண்டுமென்ற பணியை இந்த அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் செய்து கொண்டிருக்கிறது.

டெல்லி, பெங்களூர், திருப்பதி, பாண்டிச்சேரி போன்ற இடங்களில் கை வினைப் பொருட்களுக்கான ஷோ ரூம்கள் வைத்திருக்கிறோம். டெல்லியிலும், பெங்களூரிலும் லாபம் வருகிறது. மற்ற இடங்களில் நஷ்டம் ஏற்படத்தான் செய்கிறது. அதற்காக அதை மூடிவிட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் கள் பல்வேறு குறைபாடுகளைச் சொன்னார்கள். அவைகளை நீக்க நட வடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகின்றன.

தோல் தொழிலைப் பொறுத்தவரையில், கழிவு நீர் வெளியேறுவதால் ஏற் படும் பிரச்சினைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கவலையுடன் தெரி வித்தார்கள். அந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று நமது அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பல எடுத்திருக்கிறது. அதிலே குறிப்பாக ஆறு, குளம் போன்ற இடங்களில் கழிவு நீரை விடக்கூடாது என்று கடுமை யான சட்டம் இப்போது இருந்தாலும், சட்டங்களால் அவைகளைத் தடுக்க



1985 ஜூலை 12] [திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன்]

இயலாத நிலை இருக்கிறது. காரணம், அத்தகைய கடுமையான சட்டங்களை அந்தத் தொழிற்சாலைகளுக்கு எதிராகப் பயன்படுத்தினால், அவர்கள் தொழிற் சாலைகளை மூடும்படியாகிவிடும். அதன் காரணமாக தொழிலாளர்கள்தான் வேலை இழப்பார்கள். தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, அந்த மாதிரி கடுமையான நடவடிக்கைகளை எடுக்காது என்று நிச்சய மாகவும் தைரியமாகவும் தொழிலதிபர்கள் நம்புகிறார்கள். இருந்தாலும், அவர் களை நாம் கண்காணித்துக்கொண்டுதான் வருகிறோம். அதற்கு முன்னேற் பாடாக இன்றைக்கு தோல் தொழில் சம்பந்தப்பட்ட கழிவு நீரை சுத்திகரிக்க இரண்டு கோடி ரூபாய் செலவில், வாணியம்பாடி பொது சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு அந்த சுத்திகரிப்பு ஆலை செயல்படத் துவங்கும் என்பதை மாண்புமிகு உறுப் பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-35)

இன்றைக்கு பல்வேறு நல்ல அனுகூலமான செய்திகள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. வாணியம்பாடியில் ஏற்படுவதற்குக் காரணம் அங்கே 45 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பக்கத்தில் பக்கத்தில் இருக் கின்றன. அங்கே சுத்திகரிப்பு பண்ணுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இராணிப்பேட்டையிலோ, ஆம்பூரிலோ அதற்கான வசதிகள் இல்லை. வாணி யம்பாடியில் அமைந்திருக்கும் இந் நிலையத்தின் வெற்றியைப் பொறுத்துத் தான் மற்ற இடங்களிலும் அதைத் தொடங்க இருக்கிறோம். இங்கே சுமார் இரண்டு மில்லியன் லிட்டர் கழிவு நீரை சுத்திகரிக்க முடியும். அங்கே வெற்றி கிடைத்து விட்டால், எல்லா இடங்களிலும் இதுபோல் செய்யலாம். இதில் நம் அரசின் பங்கு மூலதனம் 67 இலட்சம் ரூபாயாகும். முதன்முதலாக இந்தியத் துணைக்கண்டத்திலேயே ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையம் இதுதான். அதன் வெற்றியைப் பொறுத்தே மற்ற இடங்களிலும் இதுபோல் தொடங்க இருக்கிறோம். இந்த நிலையத்தை தொடங்குவதை மத்திய தோல் ஆராய்ச்சிக் கழகமும் வெகுவாகப் பாராட்டி, உதவிகளைச் செய்ய முன்வந் திருக்கிறது. மத்திய அரசினுடைய சுற்றுப்புற சுகாதார இலாகாவும் பல் வேறு உதவிகளைச் செய்ய முன்வந்திருக்கிறது. எனவே அந்தத் திட்டம் சிறப்பாகவும், சீக்கிரமாகவும் பயன் கொடுக்கும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

'டான்சி'யில் உள்ள தோல் சம்பந்தப்பட்ட தொழிற்கூடங்கள் ஐந்தை இத்துடன் சேர்க்க ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறோம். அதுபோல் யாநவாத்தில் இருக்கிற 'சிட்கோ'வில் இருக்கிற இது தொர்ட்டாள் நிறுவனங் களையும் 'டான்கோ'வில் இணைக்க முடிவு செய்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்களின் பல கேள்விகளுக்கு நான் பதில் சொல்லாமல் இருந்திருக்கலாம். ஒட்டுமொத்தமாக அவற்றின்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவை பரிசீலிக்கப் படும் என்று தெரிவித்துக்கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாலிதின் தொழிலைப் பொறுத்தமட்டில், 'பாலிதின் கிரான்யூல்' மூலப்பொருள் கிடைக்காத சிரமம் தற்போது நீங்கிவிட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆண்டுதோறும் இந்தச் சிரமம் வருவதைத் தவிர்ப்பதற்காக 'சிட்கோ' ஒரு "ரா மெட்டீரியல் பேங்க்" வைத்து வழங்கு கிற முறையைக் கையாளலாமே. அதோடு, நலிந்த தொழில்களுக்கு—சிக் இண்டஸ்ட்ரீஸ்க்கு—மூலதனம் மேலும் போடக் கூடாது என்று மத்திய அரசு வலியுறுத்தி வருகிறதே. எனவே இங்கே நலிந்த தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் வேலை இழக்காமல் இருக்கும் பொருட்டு வேறு தொழில்களை உருவாக்க அரசு முன்வருமா? அதுவும் பட்டுத் தொழில் நல்ல லாபகர மானது என்று சொல்கிறபோது, இந்த சிக் இண்டஸ்டிரிசை யூனிட்டுகளாக மாற்றலாமே, அரசு அதை ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாலிதின் பையினுடைய மூலப் பொருள்கள் இன்றைக்கு எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அப்படித் தடங்கல் ஏற்படும், சிக்கல் ஏற்படும் என்று எண்ணுகின்ற பட்சத்தில "சிட்கோ" உதவிகளை நிச்சயமாக நாம் பெறலாம்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'சிக் யூனிட்' பற்றி தெரிவித் தார்கள். நிச்சயமாக அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பேச்சில் தோல் தொழிற் சாலை சம்பந்தமான கழிவு சுத்திகரிப்பு நிலையம் வாணியம்பாடியில் அமைக் கப்படும் என்று சொன்னார்கள். தோல் தொழிற்சாலைகள் மிக அதிக அளவுக்கு ஆம்பூரில்தான் இருக்கின்றன. ஆகவே, அங்கே இதை அமைத்தால் தான், பயனுள்ளதாக இருக்கும். வாணியம்பாடி என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.



(முற்பகல் 11-40)

**மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன்:** இந்த சுத்திகரிப்பு நிலை யத்தை பொதுவாக கூட்டுறவு முறையிலே அமைக்கப்படும் புது நிறுவனமாக ஏற்பாடு செய்திருக்கிறோம். வாணியம்பாடியிலேதான் பக்கத்திற்குப் பக்க மாக 47 தொழில் பிரிவுகள் தனியார் துறையிலே நடந்து கொண்டிருக்கின்றன. அந்த 47 தொழில்களில் சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்துப் பேசி முடிவு எடுத்திருக்கிறோம். அவர்கள் எல்லாம் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். "நாங்கள் எல்லாம் கூட்டுறவு முறையிலே முதலீடு செய்கிறோம். அதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. எப்படியாவது சரி செய்தால் போதும்" என்ற எண்ணத்தோடு அரசுக்கு உதவ முன் வந்திருக்கிறார்கள். ஆகவேதான் அதை முதலிலே எடுத்துக்கொண்டு மொத்தமாக தண்ணீரை 'கலெக்ட்' பண்ணி, ஒரு பொதுவான இடத்தில் செலுத்தி, அதைச் சுத்திகரிப்பது சுலபம் என்பதற்காக 2 கோடி ரூபாய் திட்டம் தயாரித்திருக்கிறோம். பேரணாம்பட்டு, ஆம்பூரில் அடுத்த திட்டமாக 10 லட்ச ரூபாயை ஆய்வுப் பணிகளுக்காக இன்றைக்கு செலவு பண்ணத் தயாராக இருக்கிறோம். ஆம்பூருக்கும் இப்படிப் பட்ட திட்டத்தைக் கொண்டுவர இந்த அரசு முயற்சி செய்யும். ஆம்பூர், ராணிப்பேட்டைப் பகுதிகளில் எல்லாம் இங்கொன்றும், அங்கொன்றுமாக அந்தத் தொழில்கள் இருக்கின்றன. மொத்தமாக தண்ணீரை எப்படி 'கலெக்ட்' பண்ணுவது என்பதுதான் புரியவில்லை. தனித்தனியாகச் செய்ய வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அதற்கேற்றாற்போல வேறு திட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதையும் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் சிறப்பான முறையிலே ஒரு மணி நேரம் பேசி நிறைய விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் எல்லாம், இன்னும் விளக்கம் வேண்டுமென்று கேட்கிறார்கள் அதற்கு மேலே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பேச வேண்டி யிருக்கிறது. அப்புறம், அரசின் சட்ட முன்வடிவுகளையெல்லாம் நாம் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே உறுப்பினர்கள் விளக்கம் இல்லாமல் கேள்வியாகக் கேட்டால், பதில் சொல்லலாம். காலம் ரொம்பக் குறுகியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உரையாற்றுகிறபோது நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கான விலை ஒத்தகைதாரர் மூலமாக வைக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். அண்மையில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களும், நானும்,

மற்ற நண்பர்களும் குன்னூர் பகுதிக்குச் சென்று தேயிலை ஆலை ஒன்றுக்கு சென்ற நேரத்தில் அங்கே இருக்கிற அதிகாரிகள் ஒரு குறையைச் சொன்னார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** கேள்விதான் கேட்கிறேன். அங்கே அவர்கள் சொல்லிய நேரத்திலே, "தனியார் மூலமாக நாங்கள் பாரீஸ்க்கு எக்ஸ்போர்ட் செய்வதற்கு சங்கடமாக இருக்கிறது. நாங்களே நேராகத் தொடர்பு கொண்டு, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்ய முன்னுரிமை தந்தால் நன்றாக இருக்கும். ஏஜன்ஸீ மூலமாகச் செய்வது தடையாக இருக்கிறது" என்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அப்படி ஏஜன்ஸி இல்லாமல் அந்தத் தேயிலையை எல்லாம் சர்க்காரே நேராக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்றுதான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் :** துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விரிவாகப் பரிசீலிக்கலாம்.

**திரு. அ. ப. சிவராமன் :** துணைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனங்களிலேதான் அரசு நிறுவனங்களுக்கான பொருட்களைப் பெற வேண்டுமென்று ஒரு அரசு ஆணை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிற காரணத்தினாலே, நான் சான்றாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். டான்சிக்கு சம்பந்தமே இல்லாத பொருட்களை இடைத் தரகர்கள் மூலம் அதிகாரிகள் பெற்றுக் கொண்டிருப்பதை இந்த அரசு அறியுமா? அதைத் தவிர்க்க முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கவிஞர் முத்துலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்கவில்லை. நேற்று நான் மேலவையிலே பேசிய ஒரு குறிப்பை—முத்துராமலிங்கம் மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்றும், அப்படி அறிவிக்க முடியாவிட்டால் அங்கே இருக்கின்ற சிவகங்கை அல்லது மானாமதுரை தாலுக்காக்களையாவது பின்தங்கிய தாலுக்காக்கள் என்று அறிவிக்க வேண்டுமென்றும், தொழில் வளர்ச்சி இல்லாத மாவட்டத்தை அரசாங்கம் கவனிப்பது போல, மிகவும் பின் தங்கியிருக்கிற அந்த மாவட்டத்தை கவனிக்க வேண்டுமென்றும் நான் சொன்னதை, திரு. சுப்பு அவர்கள் சொன்னதைப்போல, நேற்று வானொலியிலே விமர்சனம் செய்தவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகவே நான் சொன்னதாக மீண்டும் அதை மாற்றி அறிவிக்க நடவடிக்கை எடுப்பார்களா?



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அது என்னவென்று தெரிய குறிப்பை எடுத்து சரி செய்வார்கள் என்று நான் தெரிவித்துக் கொள் ...லை. அது உண்மையாக இருந்தால் அதற்காக தகுந்த முறையிலே அவர் ...றேன்.

(முற்பகல் 11-45)

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரில் தொடங்கி இன்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் வரையில் ..0 மாண்புமிகு உறுப்பினர்கள் தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பல்வேறு நல்ல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, "பல பட்டதாரிகள் தொழில்களைத் தொடங்கத் தயாராக இருக்கிறார்கள். அப்படிப் பட்ட பட்டதாரிகளுக்கு எப்படித் தொழில்களைத் தொடங்குவது என்று வழிவகை தெரிவதில்லை. ஏதேதோ தொழில்களையெல்லாம் தொடங்கி விடுகிறார்கள். அதன் காரணமாக நட்டமடைகிறார்கள். எனவே அவர்களுக்கு உரிய வழிகாட்டவும், நல்ல ஆலோசனைகள் சொல்லவும் ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று நல்ல கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் இந்தத் துறையின் பொறுப்பேற்றுக் கொண்ட நாளிலிருந்து இந்த எண்ணத்தில் தான் இந்தத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் தமிழகத்தில் தொழில் தொடங்க வேண்டும் என்றால், இரண்டு தொழில்களைத்தான் அநேகமாக அனைவரும் செய்ய முன் வருகிறார்கள். ஒன்று சினிமா கொட்டகை, அடுத்தது 3,000 ஸ்பின்டில்களைக் கொண்டிருக்கிற வேஸ்ட் காட்டன் தொழிற்சாலை. கேட்டால், அவர் அந்தத் தொழிலைத் தொடங்கியிருக்கிறார். ஆகவே நானும் அதே தொழிலைத் தொடங்கினேன் என்கிறார்கள். இப்படி போட்டா போட்டியாகத் தொடங்குகிறார்களே தவிர, என்ன தொழில் தொடங்கினால் நல்லது என்று அறிந்து, தெரிந்து புரிந்து தொழில் தொடங்கும் ஆட்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள்.

பட்டதாரிகளைப் பொறுத்த வரையில், இன்றைய தினம் தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளின் மூலம் கடன் உதவி பெறுகிற சாத்தியக் கூறுகள் அதிகமாக இருக்கின்றன. 2, 3 அல்லது 10 பட்டதாரி மாணவர்கள் சேர்ந்து தொழில் தொடங்குவதற்கான நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. அவர்களுக்குப் பல நிதி உதவி நிறுவனங்கள் உதவிடத் தயாராக இருக்கின்றன. எனவே அவைகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1985 ஜூலை 12

உதாரணத்திற்கு பெருந்தொழில்களைப் பொறுத்த வரையில், டிட்கோ நிறுவனம் ஒரு கோடி ரூபாய் முதலீட்டிற்கு மேல் தொழில் தொடங்க முனைபவர்களுக்குத் தக்க அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் தருகிற கடமையைச் செய்து வருகிறது. அதைப் போலவே சிப்காட் போன்ற நிறுவனம் நல்ல அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது.

டி.ஐ.ஐ.சி. யிடம் உதவி கோரினால், "ஏற்கனவே இந்த இந்தத் தொழில்கள் இருக்கின்றன. எனவே அவைகளில் இதற்கு மேல் பணம் கொடுத்தால், பணம் திரும்பி வராது, வேறு தொழில் தொடங்குங்கள்" என்று தொழில் முனைபவர்களை அவர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

அடுத்து, ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் சர்வீஸ் இன்ஸ்டிடியூட் என்று மைய அரசின் நிறுவனம் இங்கே கிண்டியில் செயல்படுகிறது. அங்கே போனால் "எந்த எந்தத் தொழில்களை இங்கே தொடங்கலாம். எதைத் தொடங்கினால் லாபகரமாக நடத்த முடியும்" என்ற நல்ல ஆலோசனைகளை அவர்கள் தருகிறார்கள். எனவே புதிதாகத் தொழில் தொடங்க விரும்புகிறவர்கள் இவைகளையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோளாகும்.

மின் அணுவியல் எனப்படும் எலெக்ட்ரானிக் துறையில் நாம் நிறைய தொழில்களைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் நமது பாரதப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களுக்கும் பெரிதாக வந்திருக்கிறது என்பதை நாம் பத்திரிகை வாயிலாகப் பார்க்கிறோம். ஏறக்குறைய 10,000 கோடி ரூபாய் வரை முதலீடு செய்து இந்தியாவில் இந்தத் தொழில்களைத் தொடங்க வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறார். காரணம் மின்னணுத் துறையில் இந்தியா ஏறக்குறைய 25 ஆண்டுக்காலம் பின்னாலே இருக்கிறது. எனவே இந்தியாவை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவேதான் இன்றைக்கு பல ஆட்களைத் தேடி தேடிப் பிடித்துக் கொண்டு வருகிற முயற்சியில் நான் கூட ஈடுபட்டிருக்கிறேன். சமீபத்தில் திரு. ஜெயச்சந்திர பாபு என்ற ஒரு விஞ்ஞானி இந்த வகையில் நமக்குக் கிடைத்திருக்கிறார். அமெரிக்காவில் 10, 11 ஆண்டுகளாகப் பணியாற்றிவிட்டு அங்கே சம்பாதித்தது போதும் என்று இப்போது இங்கே வந்திருக்கிறார். அவர்கள் அந்தமானில் ஒரு தொழிலைத் தொடங்கி இந்தியக் குடியரசுத் தலைவரிடம் பரிசுகூட பெற்றிருக்கிறார். அவர் ஒரு சிறந்த விஞ்ஞானி. அவர்களை நம்முடைய சிப்காட் அதிகாரிகளோடு உட்கார வைத்துப் பேசி ஆயிரம் மின்னணுவியல் தொழில்களை—சுமார் ரூ. 3 லட்சம் முதல் ரூ. 30 லட்சம் வரை—எங்கெங்கே எப்படி எப்படியெல்லாம் தொடங்கலாம் என்றும், எதை எதைத் தொடங்கினால் வெளிநாடுகளுக்கு



1985 ஜூலை 12] [திரு. க. இராசாராம்]

ஏற்றுமதி செய்யலாம் என்றும், அதன் மூலம் எந்த அளவுக்கு லாபம் கிடைக்கும் என்றும் கேட்டிருக்கிறோம். அவருடைய ஆராய்ச்சி அறிவை நமக்குத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அவரும் நம்முடைய அதிகாரிகளோடு கலந்து பேசி சென்னையில் அவருடைய அலுவலகத்தின் கிளை ஒன்றைத் தொடங்கி அதில் நல்ல ஆலோசனைகளைப் படித்த பட்டதாரிகளுக்கும் தொழில் முனைவோருக்கும் தருவதற்குத் தயாராக முன் வந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, டிட்கோ நல்ல அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இதுவரை அதன் மூலமாக 11 கோடியே 71 லட்சம் ரூபாய் இங்கே முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. அது முதலீடு செய்துள்ள நிறுவனங்கள் நல்லபடியாக வளர்ந்திருப்பதன் காரணமாக அவற்றின் பங்குத் தொகை மதிப்பு ஏறத்தாழ 74 கோடியே 22 லட்சம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. எனவே இனி டிட்கோ நிறுவனத்தின் மூலமாக 1 கோடி மூலதனத்தோடு தொழில் தொடங்குகிறவர்களுக்கு உதவி செய்வது என்பதை மாற்றி, இனிமேல் 5 கோடிக்கு மேல் முதலீடு செய்பவர்களுக்கு மட்டும் அதன் மூலம் உதவி செய்ய வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம்.

(முற்பகல் 11-50)

'தமிழ் நாட்டில் தொழில்கள் இல்லையென்று சொல்லுகிறோம், குறைபட்டுக்கொள்கிறோம். தமிழ் நாட்டில் தொழில்களை ஆரம்பிக்க முன் வருகிறவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். அவர்களை வற்புறுத்தி ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. அப்படியே வந்தாலும் ஒரு கோடி ரூபாய் மூலதனம் போட்டு விடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். 'தமிழ்நாடே கோடியில் இருக்கிறது. நீங்கள் வேறு ஒரு கோடி போடாதீர்கள்' என்று சொல்லக்கூடிய துர்பாக்கியமான சூழ்நிலை இருக்கிறது. உலக வங்கி என்ன உதவி செய்கிறது, இன்டஸ்ட்ரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் என்ன உதவி செய்கிறது. லைஃப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் என்ன உதவி செய்கிறது என்பதைப் பற்றியெல்லாம் பலபேர் தெரிந்து கொள்வதில்லை. இன்னுமொரு காரணமும் இருக்கிறது. 'கன்சல்டன்சி' என்று சொல்லப்படுகிற ஆலோசகர்களைக் கலந்துகொள்கிற எண்ணம் பல தொழில் முனைவர்களுக்கு இல்லை. யாராவது ஒருவர் செய்தால் அதைப் பார்த்துவிட்டு நாமும் செய்யலாம் என்று வருகிறார்கள். 'டாட்டா கன்சல்டன்சி' இருக்கிறது. அதைப் போல பத்து நிறுவனங்கள் இந்தியாவில் இருக்கின்றன. அந்த நிறுவனங்களில் உள்ளவர்கள் பணம் கேட்பார்கள். அவர்களிடம் பணத்தைக் கொடுத்து என்ன தொழில் செய்யலாம் என்று கேட்டால், அவர்கள் அறிவுரை தருவார்கள். 200,

300 சதவீதம் இலாபத்தில் உள்ள தொழில்களுக்கு அறிவுரை தருவார்கள். மற்ற மாநிலத்தவர்கள் அவர்களிடம் சென்று கேட்டுக்கொண்டு இங்கே வருகிறார்கள். நம்முடைய மாநிலத்துக்காரர்கள் இந்தச் செலவை மிச்சப்படுத்துவதில் கவனமாக இருக்கிறார்கள். ஆகவேதான் இதிலே சங்கடங்கள், சிக்கல்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இதுவரையில் 'டிட்கோ' மூலமாக 575 கோடி ரூபாய் முதலீடு செய்யப் பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்றாண்டுக் காலத்தில் முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ள நிறுவனங்கள் மட்டுமல்லாமல் மற்ற நிறுவனங்களும் வெகு விரைவாக உருவாக்கப்படுமானால் 'டிட்கோ' நிறுவனம் ஆயிரம் கோடி ரூபாய் இலக்கை அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்ன கருத்துக்களுக்கு நான் விடையளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். சில நிறுவனங்களில் ஏற்படுகிற நஷ்டங்களைப் பற்றி அவர் சொன்னார். இப்படி நஷ்டம் வருவதற்கான காரண காரியங்களை, நான் பதவிக்கு வந்தவுடனே எடுத்து ஆராய ஆரம்பித்திருக்கிறேன். சர்க்கரை தொழிலில் நஷ்டம் வந்தது. கடந்த நான்கு மாத காலமாக அது சம்பந்தமான அதிகாரிகளை அழைத்து கூட்டம் போட்டு, எந்தெந்த இடத்திலே எதனாலே நஷ்டம் வருகிறது என்று கேட்டு, தனியார் துறையிலே லாபம் வரும்போது அரசுத் துறையிலே மட்டும் நஷ்டம் ஏன் என்று ஆராயும்படி கூறியிருக்கிறேன். கூட்டுறவுத் துறையிலே ஒரு தவறான எண்ணம் பரவிக்கொண்டே வருகிறது. லாபம் வராவிட்டாலும் பரவாயில்லை, நஷ்டம் வராமல் இருந்தாலே போதும் என்ற எண்ணத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இனி இதிலே லாபம் வந்தாக வேண்டும். அது அரசுத் துறைக்கு வர வேண்டும், மத்திய சர்க்காருக்கு வரி கட்டியது போக லாபம் வர வேண்டும் என்று நான் எடுத்துச் சொன்ன பிறகு, வேகமாக வேலை செய்யத் தொடங்கி இப்போது எல்லா ஆலைகளையும் சேர்த்துப் பார்த்தால், லாபம் காட்டத் தொடங்கியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு 'சிப்காட்' லாபம் பெற்றிருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள், என்னென்ன துறைகளில் என்னென்ன பொருள்களை உற்பத்தி செய்யலாம் என்ற கேள்வியை என்னிடத்திலே கேட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில், பெட்ரோலியம் பொருள்களில் நிறைய தொழில்களை நாம் செய்யலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறேன். பெட்ரோலியம் பொருள்களில் இன்றைக்கு 300 கோடி ரூபாய் வரையில் முதலீடு செய்யமுடியும். அதற்குப் பிறகு ஆயிரம் கோடி



ரூபாய் வரையில் உயர்த்திக் காட்ட சாத்தியக் கூறுகள் நிரம்ப இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே இருக்கின்ற எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் மூலமாக பல நிறுவனங்களில் பல தொழில்களைப் போட்டு பெட்ரோலிய பொருள்களின் உற்பத்தியைப் பெருக்க வசதி இருக்கிறது. அதற்காக முயற்சி எடுத்து மத்திய பேரரசுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். பெட்ரோலியத்திலே நாம் முதலில் 300 கோடி ரூபாய் முதலீடு செய்யலாம் என்றும் அதிலிருந்து பல பொருள்களை உற்பத்தி செய்ய முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் உருக்குத் தொழில் பற்றிக் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி விட்டார்கள். அடுத்து, மின் பிரிவுகள் தேவையென்று சொன்னார்கள். சட்ட மன்றப் பேரவையில் பேசுகின்றபோது, அதைப்பற்றிக் குறிப்பிட்டு, ராணிப் பேட்டை, கும்மிடிப்பூண்டி, கடலூர், ஓசூர் ஆகிய நான்கு இடங்களில் தனியாக குறைந்த அளவு, அதாவது 15 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்களைப்போட்டு அதன் மூலமாக மின்சாரத் தட்டுப்பாடு அந்தப் பகுதிகளில் இல்லாத தன்மையை உருவாக்க முயற்சியை மேற்கொண்டிருக்கிறேன் என்று கூறியிருக்கிறேன்.

(முற்பகல் 11-55)

அதைப் போலவே தமிழகத்திலே ஒரு (எக்ஸ்ப்ளோசிவ்) வெடி மருந்துத் தொழிற்சாலை காட்பாடிக்கு பக்கத்திலே உருவாகிக் கொண்டிருக்கிறது. அது நல்ல மலைகள் சூழ்ந்த ஒரு இடத்திலே இருக்கின்றது. மலைகளுக்கு இடையிலே இந்தத் தொழில் அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலை மறைவாக அமைந்துள்ளது. 'ஆட்டோமேடிக்' என்று சொல்லக்கூடிய, கையாலே தொடாமல் இயந்திரங்களே வெடி மருந்துகளைச் செய்கின்ற தொழிற்சாலை 21 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது. ஏறத்தாழ 14 கோடி ரூபாய் இதுவரையில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் இவ்வளவு செலவு செய்யும்போது, அதற்குத் தேவையான மின்சாரம் எவ்வளவு என்று பார்க்கும் போது, 3 மெகாவாட் தேவைப்பட்டது. சமீபத்திலே அதனுடைய நிர்வாகத் தலைவர் மேற்கு ஜெர்மனிக்குப் போயிருந்தார்கள். நான் மேற்கு ஜெர்மனியிலே ஹனோவரிலே இருக்கின்ற கண்காட்சியைப் பார்த்தபோது அங்கே காற்றாலை மூலமாக மின் உற்பத்தி செய்கின்ற இயந்திரங்களைப் பார்க்கின்ற

வாய்ப்பும், அங்கேயுள்ள தொழிற்சாலைகளை மேற்பார்வையிடுவதைப் பார்க்கின்ற வாய்ப்பும் ஏற்பட்டது. அவர்கள் தமிழகத்தோடு தொழில் கூட்டு வைத்துக்கொள்ளத் தயாராக இருக்கின்றார்கள். எம். பி. பி. நிறுவனத்தோடு நானே பேசிவிட்டு வந்தேன். இங்கே இருக்கின்ற வெடி மருந்துத் தொழிற்சாலை நிர்வாகிகள் அங்கே போய் பேசினார்கள். அவர்கள் பேசிய பிறகு அவர்கள் நல்ல செய்தியோடு வந்திருக்கின்றார்கள். அவர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டால், அங்கே இருக்கின்ற காற்று வேகத்தை வைத்துக் கொண்டு, 3 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரத்தை அந்தக் காற்றாலையில் பொருத்தி மின் உற்பத்தி செய்ய முடியும். அப்படி மின் உற்பத்தியைச் செய்தால் ஒரு யூனிட்டுக்கு 55 காசுக்கு மின்சாரம் கிடைக்கும் என்ற நல்ல செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூரில் எஸ்.டி.டி. இல்லை என்ற குறைபாட்டை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கான தக்க நடவடிக்கைகளை நம் துறையின் மூலமாக எடுக்க நான் கடமைபபட்டிருக்கிறேன். என்பதையும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிப்காட்டிலே அடிக்கடி தலைவர்கள் மாறுகின்றார்கள் என்ற குறைபாட்டைச் சொன்னார்கள். சிப்காட்டிலே இருந்தவர், அதன் சேர்மனாக இருந்த திரு. பிரியாக் அவர்கள் மத்திய அரசிலே அழைக்கப்பட்டு அவர்கள் அங்கே போய்விட்டார்கள். அதற்கு வேறு ஒருவரைப் போடுவதற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தவிர்க்க முடியாத காரணத்தினாலேதான் மாறுகிறார்களே தவிர, அடிக்கடி மாறுவதில்லை என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் பெரிய தொழில் அமைக்கிறோம். கடலூரிலே பெரிய தொழிற்பேட்டையாகத்தான் வந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஆட்களைக் கொண்டு வந்து சேர்த்தால், அது போதும் என்ற நிலை இருக்கிறது. ஏனென்றால் கடலூருக்கு ஆயிரம் ஏக்கருக்கு இடத்தை எடுத்தும்கூட கொஞ்சம் பேர்கள்தான் வந்திருக்கிறார்கள். நான் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் தங்களுக்குத் தெரிந்த நல்ல தொழில் நிபுணர்களை அங்கே வந்து தொழில் தொடங்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அப்படித் தொடங்கும்படி சொன்னால், அது மிக நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு 25 சதவிகிதம் சப்சிடி தர முயலவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அது பற்றி சட்டமன்றப் பேரவையில் குறிப்பிட்டிருக்கிறேன். மத்தியப் பேரரசு 15 சதவிகிதமும் மாநில அரசு 10 சதவிகிதமும் தருகிறது.



ஆக 10 சதவிகிதம் ஒரு இடத்திலே தருகிறார்கள், 15 சதவிகிதம் இன்னொரு இடத்திலே தருகின்றார்கள். இதற்கு அதிகாரிகளோடு கலந்து பேசி 21 இடங்களை நாம் தேர்ந்தெடுக்க இருக்கிறோம். தமிழ்நாட்டில் 21 இடங்களை இரண்டு ஆண்டு காலத்தில் தேர்ந்தெடுக்க வேண்டும். பின் தங்கிய இடங்கள் என்று அறிவித்து அந்த 25 சதவிகிதம் தருவதற்கு முன் வந்திருக்கிறோம். அப்படிச் செய்தாலாவது நமது ஆட்கள் தொழில்கள் தொடங்குவார்களா என்று பார்க்கிறோம். அந்த முடிவை நாங்கள் எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கவிஞர் முத்துலிங்கம் அவர்கள் 'பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம்" என்று சொன்னார்கள். மானாமதுரையில் தொழில்பேட்டை ஆரம்பித்து அது முன்னேறிய மாவட்டமாகக் கருதப் படுகிறது. ஆனால் இதை பின் தங்கிய மாவட்டம் என்கிறார்கள். அந்தப் பகுதி ஆட்களைப் பார்த்தாலும், அவர்கள் பின் தங்கியவர்களாகத்தான் இருக்கின்றார்கள். ஏதாவது ஒரு முறையில் முயற்சி எடுத்து அதை பின் தங்கிய மாவட்டமாக மாற்றினால், அந்த வகையிலே அதை முன்னேற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மானாமதுரை தொழில்பேட்டையிலும் அதிகமான தொழில்கள் இன்னும் ஆரம்பிக்காமல் இருக்கின்றது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** சிவகங்கையில் ஒரு கிராபைட் தொழிற்சாலை வர இருக்கிறது. விரைவிலே வருகிறது. அதற்கான அடிப்படை வேலைகள் முடிந்திருக்கின்றன. அதிகாரிகள் போடப்பட்டாகிவிட்டது. இந்தச் சட்ட மன்ற வேலைகள் முடிந்த பிறகு அந்த வேலையை மேற்கொள்ள இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

கிரானைட் பாலிஷ் செய்து கொடுக்க வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கிரானைட் பாலிஷ் செய்ய 5 கோடி ரூபாய் செலவிலே மேற்கு ஜெர்மனியிலிருந்து இயந்திரங்கள் தருவிக்கப்பட்டு, மணலிப் பகுதியில் தற்போது அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இன்னும் 6 மாதத்திற்குள் அதை அமைத்துவிடுவார்கள். அதற்குப் பிறகு நம்முடைய 'டாமின்' நிறுவனத்தின் கற்களை மட்டுமல்லாமல், வெளியில் உள்ள கற்களையும் எடுத்து பாலிஷ் செய்து, ஏற்றுமதி செய்யும் நிலைமையை மேற்கொள்ள இருக்கிறது. காரணம், அது அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்டங்களில் தொழில் இல்லாத மாவட்டங்கள் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமி காந்தன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்காக வருகிற 20 ஆம் தேதி தென் மாநிலங்கள் நான்கிலும் இருக்கிற அமைச்சர்களை அழைத்து, மத்திய தொழிலமைச்சர் மாண்புமிகு திரு. வீரேந்திர பாட்டில் அவர்களை அழைத்து, ஒரு மாநாடு கூட்டி, அதிலே விவாதித்து, தக்க முடிவைக் காண இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை விரிவாக்கம் எப்போது என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் கேட்டார்கள். அதை நம்முடைய அரசு வலியுறுத்திக் கொண்டு வருகிறது. அக்ரோ பேஸ்டு இன்டஸ்ட்ரீசில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் கரும்பு நன்றாக விளைந்து கொண்டிருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் கரும்பு 10,000 அல்லது 8,000 ஏக்கர்களில் இருந்தால், ஒரு சர்க்கரை ஆலை போட்டுவிட முடியும். திருநெல்வேலி மாவட்டத்தில் சர்க்கரை ஆலை இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. இந்தியாவிலே இந்த ஆண்டு எதிர்பாராத வகையிலே சர்க்கரையை இறக்குமதி செய்ய வேண்டிய துர்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், நிர்ணயித்த அளவுக்கு நாம் சர்க்கரையை உற்பத்தி செய்து தந்திருக்கிறோம். இன்னும் அதிக சர்க்கரை ஆலைகளை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு வந்திருக்கிறது. விவசாய இலாக்காவோடு கலந்து பேசியபோதும், மாவட்டங்களில் உள்ளவர்களைக் கலந்து பேசியபோதும், அவர்கள் கரும்பை ஏராளமாகப் பயிரிட வாய்ப்புகள் இருக்கின்றன என்றும், சர்க்கரை ஆலைகளை மேலும் நிறுவலாமென்றும் கருத்துக்களைச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே இன்றைக்கு தமிழகத்தில் மேலும் சர்க்கரை ஆலைகள் தேவை என்ற அளவிலே 3 ஆலைகளுக்கு அண்மையில் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். "இன்னும் 30-க்கு அனுமதி தாருங்கள், நாங்கள் நிறைய சர்க்கரை ஆலைகளை கூட்டுறவுத் துறையிலும், தனியார் துறையிலும் இரண்டிலும் கலந்தும் உருவாக்கி, தேவையான அளவுக்கு சர்க்கரையை உற்பத்தி செய்து, இந்திய நாட்டுக்குத் தர தயாராக இருக்கிறோம்" என்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவர்கள் என்ன ஆலோசனை செய்கிறார்கள் என்பது தெரிந்த பின்னர் இங்கே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

கம்யூட்டரிலே நாம் 25 ஆண்டுகள் அல்லது 50 ஆண்டுகள் பின் தங்கியிருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். கம்ப்யூட்டர் போன்ற மின்னணுப் பொருள்களைப்



செய்வதற்கு நான் பல்வேறு தொழில் நுட்ப வல்லுநர்களின் நட்பை நாடிக் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீசா கணேசன் அவர்கள் பேசும்போது, சஞ்சீவ் ராவ் அவர்களைப் பார்த்ததுபற்றி ஒன்றுமில்லையே என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் மின்னணுவியல் துறைத் தலைவராக இருக்கிறார்கள். நல்ல விஞ்ஞானி. அவர்களை சீன நாடு அழைத்து, அவருடைய அறிவுரையைப் பெற்றிருக்கிறது. அவர்கள் சென்னைக்கு வந்தார்கள். அவர்களிடம் பல தொழில்களுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தரும்படி கேட்டிருக்கிறேன். அவைகள் வந்தால், சிப்காட், சிட்கோ, மற்ற நிறுவனங்கள் மூலமாகக் கொடுத்து, அதை மாநிலத்தில் அறிவித்து, அதன்மூலம் மின்னணுக் கருவிகளைச் செய்வதற்கு நான் ஏற்பாடு செய்வேன் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்கள் ஜப்பான் நாட்டு முன்னேற்றம் பற்றியும், மக்கள் வாங்கும் சக்தி அதிகரிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு தொழிலை நாம் உருவாக்கும்போது நாம் பல பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்குகிறோம். வாங்கும் சக்தியை நம் நாட்டிலே அதிகரிக்க வேண்டுமென்றால், எல்லோரையும் தொழில் செய்வதிலே, ஊக்குவிக்க வேண்டும். அந்த ஊக்கம் குறைவாக இருக்கிறது. யாரைப் பார்த்தாலும், "எப்படியாவது வேலை வாங்கிக் கொடுத்துவிடு, என்னுடைய பையன் பிழைத்துக் கொள்வான்" என்று சொல்கிறார்களே தவிர. "என் பையனுக்கு ஒரு தொழில் வைத்துக்கொடு, அவன் பிழைத்துக் கொள்வான்" என்று சொல்லும் தந்தையை நான் சந்திக்கவில்லை. என்னுடைய இலாக்காவில் ஏறக்குறைய முக்கால்வாசி நேரம் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் மாதிரி இருக்கிறது. வருகிறவர்கள் அதற்காகத்தான் வருகிறார்கள். உங்களைப் போன்றவர்கள் இவர்களுக்கெல்லாம் சொல்ல வேண்டும்.

(பிற்பகல் 12-05)

அடுத்து, டெக்னலாஜி பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இந்தியாவில் இருக்கிற டெக்னாலஜி வளர்ச்சி உலகத்திலே இருக்கிற எந்த நாட்டிலும் கிடையாது. ரஷ்யாவில் இருக்கிற டெக்னாலஜி வளர்ச்சி அமெரிக்காவில் கிடையாது. அமெரிக்காவில் இருக்கிற டெக்னாலஜி வளர்ச்சி ரஷ்யாவில் கிடையாது. ஆனால் நம்முடைய நாட்டில் ரஷ்யாவின் டெக்னாலஜி வளர்ச்சியும், அமெரிக்காவின் டெக்னாலஜி வளர்ச்சியும் சேர்ந்து கிடைக்கிறது. அதோடு மட்டுமல்ல. ஜப்பான், இத்தாலி, செக்கோசிலேவிக்கியா, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற அனைத்து நாடுகளிலுள்ள டெக்னாலஜி வளர்ச்சியும் நமக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இஸ்ரேல் நாடு

ஒன்றைத் தவிர அநேகமாக அனைத்து நாடுகளின் டெக்னாலஜி வளர்ச்சியும் நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த அளவில் நாம் தொழில் நுட்ப அறிவை அதிகமாகப் பெற்றிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் இந்தியன் பெட்ரோலியம் லிமிடெட் 1,390 கோடி ரூபாய் செலவில் பரோடாவில் பிரம்மாண்டமான தொழிற்சாலையை ஆரம்பிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறோம். தொழில் நுட்ப அறிவில் ஆற்றல் மிகுந்த 5 நாடுகளின் தொழில் நுட்ப அறிவை நாம் பெற்றிருக்கிறோம். இவ்வாறு பெரிய அளவில் நாம் தொழிற்சாலை அமைத்திருப்பது இந்த 38 ஆண்டுகளில் நடைபெற்றுள்ள மிகப் பெரிய சாதனை. ஆக, நிரம்ப அளவுக்கு நம்மிடம் டெக்னாலஜி இருக்கிறது. ஆனால் அதைப் பயன்படுத்துகின்ற தன்மை தான் குறைவாக இருக்கிறது. 'ரிஸ்க்' எடுத்துக்கொள்ள யாரும் நம்முடைய நாட்டிலே தயாராக இல்லை. "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்கிற பழமொழிக்கேற்ப நம் நாட்டு மக்களிடையே எண்ணம் நிரம்ப இருக்கிறது. அதனால்தான் தொழில் வளர்வது ரொம்ப கஷ்டமான காரியமாக இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அரக்கோணம் ஸ்டீல் பிளான்ட் பற்றிச் சொன்னார். அரக்கோணம் ஸ்டீல் பிளான்டில் 1 லட்சம் டன் இரும்பு பில்லட்களை உருவாக்க வேண்டுமென்ற அளவுக்கு திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால் 30 ஆயிரம் டன் அளவுக்கு இரும்பு உற்பத்தி செய்யப்பட்டவுடன் நிறுத்தி விட்டார்கள். இப்போது வீட்டு வசதி வாரியத்திற்கு 75 ஆயிரம் டன்னுக்கு மேல் மாதத்திற்கு இரும்பு தேவைப்படுகிறது. ஆக, அரக்கோணத்தில் உற்பத்தி செய்யப்படும் இரும்பு நம்முடைய வீட்டு வசதி வாரியத்துக்கும் பொதுப் பணித் துறைக்கும் மட்டுமே போதுமானதாக இருக்கிறது. அந்த வகையில் அரக்கோணத்தில் குறைந்தது 1 லட்சம் டன் இரும்பு உற்பத்தி செய்யப்பட்டால் தான், உயர்ந்துகொண்டிருக்கின்ற இரும்பின் விலையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும். அதிலும் ஒரு சின்ன சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அங்கே மின்சாரம் தேவைப்படுகிறது. மின்சாரத்தை தனியாக உற்பத்தி செய்து பயன்படுத்தினால், நாம் போடும் பணம் திரும்பக் கிடைக்குமா என்பது பற்றி ஆராய்ந்து பார்க்கச் சொல்லியிருக்கிறோம். எப்படியும் ஒரு லட்சம் டன் இரும்பை உற்பத்தி செய்ய வேண்டுமென்பது தான நம்முடைய எண்ணம்.

அடுத்து, சிமெண்ட் பிளான்டிலே ஏன் நஷ்டம் என்று கேட்டார்கள். ஆரம்பிக்கப்பட்டபோது முதல் இரண்டு வருடம் லாபம் வந்தது. ஆலங்குளம் மற்றும் அரியலூர் பற்றிச் சொன்னார்கள். இன்றையதினம் குறிப்பாக அரியலூரைப் பொறுத்தவரையில்தான் கோளாறு அங்குள்ள சுண்ணாம்புக் கல்லில் ஈரம்



இருக்கிறது. மேலும் தூசி படிகிற நிலை இருப்பதால், நஷ்டம் வந்தது. இது சம்பந்தமாக அபிவிருத்தி செய்ய நிபுணர்களைப் போட்டு ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். எப்படியும் அதை லாப நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு சிமெண்ட் அதிக விலை விற்கிற நிலையில் ஏன் நஷ்டம் ஏற்பட்டது என்று கேட்டார்கள். அதற்கு நாம் வாங்கிய கடனை, முதல் தவணையை, ரூ. 1,300 லட்சத்திற்கு மேல் கட்டி முடித்திருக்கிறோம். எந்தத் தொல்லையும் இல்லாமல் வாங்கிய கடனில் முதல் தவணையைத் திருப்பிச் செலுத்தியிருக்கிறோம். நிகர லாபமாகப் பார்த்தால், மொத்த லாபம் என்கிற அடிப்படையில் கணக்கிட்டால், மொத்தம் கட்டியுள்ள தொகை, நஷ்டம் எல்லாவற்றையும் கணக்கிட்டால் முடிவிலே நமக்கு வந்திருக்கும் நஷ்டம் 202 லட்சம் ரூபாய். ஆகவே இந்த நஷ்டம் கூட வாராமல் லாபகரமாக இதனை மாற்ற எல்லாவித முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறோம். தூசு படிகின்ற தன்மை அநேகமாக மாற்றப்பட்டு விடும்.

அடுத்து, அதிகாரிகளைப்பற்றியெல்லாம் நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவருக்கே உரிய முறையில் குறிப்பிட்டார். அதையெல்லாம் கவனித்துக்கொள்ளும் தன்மையில் ஈடுபட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிமெண்ட் குழாய்களைச் செய்கிறோம். 85 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆர்டர்களை மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களிலிருந்து சிமென்ட் குழாய்களைப் பொறுத்தவரையில் பெற்றிருக்கிறோம். மேலும் 40 லட்சம் ரூபாய்க்கான ஆர்டர் கேரளாவிலிருந்து வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 12-10)

வேடசந்தூர் தாலுக்காவில், நான்கு லட்சம் டன் திறன் கொண்ட சிமெண்ட் ஆலை அமைக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். அப்படி இந்த சிமெண்ட் தொழிலில் நஷ்டம் ஏற்படுகிறபோது, இன்னொரு சிமெண்ட் ஆலை தேவைதானா என்று திரு. எம். பி. சுப்ரமணியம் அவர்கள் கேட்டார்கள். நஷ்டம் ஏற்படத்தான் செய்யும். பொதுத் துறையில் பல தொழில்களை உருவாக்கக் காரணம், நாம் விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான சூழ்நிலையில் நாட்டை வைத்திருக்கிறோம். பொதுத் துறையில் தொழிலை உருவாக்கினால்தான், மக்களுக்குப் படிப்படியான நன்மை கிடைக்கும் என்ற நோக்கத்தில்தான் ஜவஹர்லால் நேரு அவர்கள் பொதுத் துறையின் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தை உருவாக்கினார்கள்.

இந்தியாவில் திடீர் திடீரென்று விலைகள் ஏறுவதும் இறங்குவதும் சர்வ சகஜமாக இருந்த காரணத்தால், பொதுத் துறையில் தொழிலை உருவாக்கி னால்தான், எல்லா விலைகளையும் கட்டுப்படுத்த முடியும் என்று அவர் நம்பி னார். அதிலும் சிமெண்ட் போன்ற பொருட்கள், வீடு கட்டுவதற்கு அவசிய மான பொருளாகும். இவைகள் அதிக விலைக்குப் போய்விடாமல் நாம் கட்டுப் படுத்தித்தான் வருகிறோம். இப்போது கூட, சிமெண்ட் விலை ஏறிவிட்டது என்று குறைப்படுகிறார்களே தவிர . . .

*திரு. எம். பி. சுப்பிரமணியம்:* சிமெண்ட் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், 95 சதவீதம் தனியார் கையில்தான் இருக்கிறது. எப்படி அரசாங்கம் அதிலே 'கயாண்ட்டிங் ரைட்' எடுத்து, விலைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்:* என்ன விலை ஆகிறது என்று நமக்குத் தெரிகிறது. ஆகவே அதையும் கட்டுப்படுத்த நமக்கு வாய்ப்பிருக்கிறது. இப்போது சிமெண்ட் விலை ஏறியிருப்பதற்கு எக்சைஸ் டூட்டிதான் காரணம். உற்பத்திச் செலவு அதிகரித்துவிடவில்லை.

தமிழ் நாடு குரோமைட்ஸ்பற்றிக் குறிப்பிட்டார்கள். மினி சிமெண்ட் பிளான்ட்பற்றியும் பேசினார்கள். வெளி மாநிலங்களில் உள்ளவர்கள் அப்படி தொழிற்சாலைகளை இங்கே ஆரம்பிக்க முன்வருகிறார்கள். அதையும் நாம் வரவேற்கிறோம். தமிழ் நாடு குரோமைட்ஸ் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறோம். ஏனென்றால், அதிலிருந்து வெளிவரும் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதில், ராணிப்பேட்டையில் உள்ள பிரச்சி னைகளைப்பற்றிப் பேசினார்கள். அதோடு அங்கே உள் விவகாரம் சரியில்லை. அதையும் தடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாலிநோக்கம்-தம்பிக்கோட்டையில் சர்தார் வேதரத்தினம் அவர்கள் பெய ரால் உப்பளம் வைத்திருக்கிறார்கள். அந்த உப்பளங்கள் நல்ல நிலைமையில் இருக்கின்றன. தம்பிக்கோட்டைக்குப் போய் அவைகளைப் பார்வையிட்டேன். ஏறத்தாழ 3,000 ஏக்கர் எடுத்து அதில் 1,200 ஏக்கரில் 40 லட்சம் ரூபாய் செல வில் உப்பளத்தை அமைத்திருக்கிறார்கள். அங்கேயிருந்து, தொழிற்சாலை களுக்குத் தேவையான உப்பு உற்பத்தி செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது. அந்த நிறுவனம் நல்லபடியாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

திரு. சுப்பு அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். தொழிற் சாலைகள் வெளியூரில் இருக்கும்போது, தலைமையிடம் மட்டும் ஏன் சென்னை யில் இருக்க வேண்டுமென்று கேட்டார்கள். இங்கே எந்த உற்பத்தியும் கிடை



யாது. நான்கூட அதிகாரிகளைக் கேட்டேன். அவர்கள் தலைமையிடத்தை தொழிற்சாலைகளுக்கு அருகில் மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே தலைமையிடத்தை, வாலிநோக்கத்திற்கும் தம்பிக்கோட்டைக்கும் மத்தியில் இருக்கிற காரைக்குடியில் அமைக்கும் விதத்தில் ஆராய்ந்து கொண் டிருக்கிறார்கள். அப்படி மாற்றும் முயற்சிகளை விரைவில் மேற்கொண்டு, மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிநாட்டுக்குப் போய் வந்த பிறகு, அதிகாரிகள் ஒன்றும் செய்வதில்லை, அதற்குள் அவர்கள் வேறு வேலைகளுக்கு மாற்றல் செய்யப்பட்டு விடுகிறார்கள் என்று திரு. சுப்பு அவர்கள் தெரிவித்தார்கள். என்னைப் பொறுத்தவரையில், அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி விஷயங்களைத் தெரிந்துகொள்ளச் செய்வது என்பது நல்ல கொள்கைதான். கேளிக்கைக்காக அவர்கள் வெளி நாடு போனால் அது தவறுதான். உள்ளபடியே நல்ல நோக்கத்திற்காக போவதுதான் நல்லது. நாமும் அனுப்ப வேண்டியதுதான் முறை. அதனால் பலவற்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. நம் நாட்டில் இல்லாதவற்றை அங்கே போய்த்தான் புரிந்து கொள்ள வேண்டும். அங்கே உள்ள இந்தியர்களை அழைத்து, நம்முடைய நாட்டில் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்க முடிகிறது. நம்மிடையே அவர்களுக்கு ஏற்படும் நட்பின் காரணமாக தமிழ்நாட்டில் கொள்கையை எடுத்துச் சொல்லி, இங்கே வாருங்கள் என்று அழைக்க முடிகிறது. அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு சும்மா போய்விட்டு வந்தால்கூட, அதனால் நல்ல பலன்தான் ஏற்படும்.

நான் சமீபத்தில் ஜெர்மனிக்குச் சென்றபோது, நமது அதிகாரிகளையும் அழைத்துக்கொண்டு போயிருந்தேன். அங்கே பயோர் என்ற கம்பெனிக்குப் போனேன். அதுபோன்ற டயர்களை நமது பம்பாயில் தயாரிக்க இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மேலும் மலேரியா போன்ற நோய்களுக்குத் தேவையான மருந்துகளை நவீன முறையில் அங்கே உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே அங்கே சென்று, நம் நாட்டவர்களைச் சந்தித்து தமிழ்நாட்டில் வந்து தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டவுடன், அவர்களும் முயற்சி செய் கிறார்கள். வருகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி போய்க் கூப்பிட்டால் தான் வருவார்கள். அதிகாரிகள் போனால் பணச் செலவு ஆகிறது என்று கவலைப்பட்டு பிரயோசனம் இல்லை. அவர்கள் போகவேண்டியதுதான். சுற்று கிறார்கள் என்று சொன்னார்கள். ஊர் சுற்றினால் நல்லதுதான். ஏனென்றால், பொதுவாகவே, நமது ஆட்களுக்கு இருக்கிற குறைபாடே, குறை சொல்வது தான். இந்தியா பூராவையும் சுற்றிப் பார்த்தால் பரந்த அறிவு வரும். உல கத்தைச் சுற்றிப் பார்த்தால், இன்னும் சிறந்த, பரந்த அறிவு வரும். அப்படிப் பட்ட பரந்த நோக்கம் நமது அதிகாரிகளுக்கும் இருக்க வேண்டுமென்பதுதான் எனது எண்ணம்.

[திரு. க இராசாராம்] [1985 ஜூலை 12

(பிற்பகல் 12-15)

ஆகவே அவர்கள் வெளிநாடுகளுக்குப் போய்விட்டு வந்தபின் அவர்கள் வேறொரு இலாகாவிற்கு மாற்றப்பட்டால்கூட பரவாயில்லை. அவர்கள் தருகிற குறிப்புகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜாய்ண்ட் செக்டாரை ஊக்குவிக்கக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். யார் மீதோ கோபம் இருப்பதுபோல் தெரிகிறது. என்னைப் பொறுத்தவரையில், தனியார் துறையோ, கூட்டுறவுத் துறையோ, கூட்டுத் துறையோ எந்தத் துறையாக இருந்தாலும், வாருங்கள் என்றுதான் அழைக்கிறேன். எனக்கு ஆள்தான் தேவை. யார் வந்தாலும் உதவத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போதுகூட ஒன்றைக் குறிப்பிட்டார்கள். திரு. நம்பூதிரிபாத் அவர்கள் கேரளாவில் முதல் அமைச்சராக இருந்தபோது, பிர்லாவை கேரளாவில் தொழிற்சாலை தொடங்க அழைத்தார்கள் என்று சொன்னார்கள். அதைப் போல இங்கே யார் மூலதனம் போடத் தயாராக இருந்தாலும், அவர்கள் எல்லாம் வந்தால் இடம் தரத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நம்மைப் பொறுத்தவரை, நம் ஆட்களுக்கு வேலை கிடைத்தால் போதும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசும்போது, கன்சல்டேடிவ் கமிட்டி தேவை என்று சொன்னார்கள். சர்க்கரை ஆலைகளை அதிகமாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். முப்பது ஆலைகள் வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். அங்கிருந்து உரிமங்களைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். சர்க்கரை ஆலைகளுக்கு உரிமம் தருவதற்கு மத்திய அரசின் அனுமதி தேவைதானா என்பதே என்னுடைய கேள்வி. நானும் பத்தாண்டுகள் நாடாளுமன்றத்தில் இருந்திருக்கிறேன். சர்க்கரை இங்கேதான் விளைகிறது. சர்க்கரை ஆலைகளுக்கான இயந்திரங்களும் இங்கேதான் உற்பத்தி செய்கிறார்கள். பின் எதற்கு உரிமம் அங்கே போய் வாங்க வேண்டும்? இதுபோல் உரிமம் வழங்கும் அதிகாரத்தை மத்திய அரசு, அந்த அந்த மாநிலங்களுக்குத் தர வேண்டுமென்கிற எண்ணத்தைக்கூட விரைவிலே வெளியிட வேண்டுமென்று கருதுகிறேன். இது குறித்து மத்திய அமைச்சரிடத்திலே பேச வேண்டுமென்று இருக்கிறேன்.



1985 ஜூலை 12]

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது சர்க்கரை ஆலை அல்ல. சிமெண்ட் ஆலை. சாத்தான்குளம் பகுதியிலே சுண்ணாம்புக்கல் அதிகம் கிடைப்பதால் அங்கே சிமெண்ட் ஆலை துவங்கலாம் என்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. க இராசாராம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் ஆலைபற்றிக் குறிப்பிட்டார்கள். வேடசெந்தூர் பகுதியிலே தொடங்க அதற்கும் உரிமம் கேட்டிருக்கிறோம்.

அடுத்து, சேலம் உருக்காலையைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்தும் எங்கள் கருத்தும் ஒன்றுதான். அது உருட்டாலையாக இல்லாமல், உருக்காலையாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தமிழ்நாடு தொழில் துறையில் பத்தாவது இடத்தில், பன்னிரண்டாவது இடத்தில் இருப்பதாகவும், அதற்குக் காரணம் மின்சாரப் பற்றாக்குறைதான் என்றும் சொன்னார்கள். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டாயிரம் கோடி ரூபாய் மின்சார உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையில் தூத்துக்குடி மற்றும் பல்வேறு இடங்களில் புதிய மின் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் அவர்கள் அரக்கோணம் டீசல் பிளாண்ட் பற்றியும், மின்னணுவியல் பற்றியும் சொன்னார்கள். டாக்டர் சஞ்சீவிராவ் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் கவிஞர் முத்துலிங்கம் அவர்கள் பேசும்போது அவசியமில்லாமல் காங்கிரஸ்காரர்களோடு சண்டையெல்லாம் போட்டார்கள். அதற்குள் நான் நுழைய விரும்பவில்லை. அவருடைய கோரிக்கையின்படி நாமும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் ஏதாவது ஒரு பகுதியை எடுத்துப் பலப்படுத்த வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். இந்த முயற்சியிலே முழு மூச்சாக ஈடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களில் பல கருத்துக்களுக்கு ஏற்கெனவே நான் விடை அளித்திருக்கிறேன்.

“பாலக்காட்டில் கரும்புச் சக்கையைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்கிறீர்களே, அப்படியானால் புகளூரில் இருக்கக்கூடிய காகித ஆலைக்கு கரும்பு சக்கைக்கு என்ன செய்ய இருக்கிறீர்கள்?” என்று கேட்டிருக்கிறார்கள்.

[திரு. க. இராசாராம்] [1985 ஜூலை 12

(பிற்பகல் 12-20)

பாலக்கோட்டிலுள்ள கரும்புச் சக்கையை நாங்கள் புகளூர் வரை கொண்டு வருவதாக இல்லை. புகளூருக்கு நாங்கள் எடுக்கப் போகிற கரும்புச் சக்கை என்பது பக்கத்திலே இருக்கிற சக்தி ஆலை, அதற்கு பக்கத்திலே இருக்கிற மோகனூர் ஆலை, அந்தப் பக்கத்திலே இருக்கிற தஞ்சாவூர் ஆலை—இந்த மாதிரி சுற்றி இருக்கிற ஆலைகளிலிருந்துதான் எடுக்கிறோமே தவிர கரும்புச் சக்கையை கலெக்ட் செய்து அழுத்தம் செய்து அதைக் கட்டுகட்டாகக் கட்டித் தான் கொண்டு வரவேண்டியிருக்கிறது. அது தர்மபுரியிலிருந்து நீண்ட தூரத்திற்கு எடுத்துக்கொண்டு போகத் தேவையில்லை. புகளூருக்குப் பக்கத்திலே நிறைய ஆலைகள் இருக்கின்றன. அந்த ஆலைகளிலிருந்து நாங்கள் ஒரு லட்சம் டன் கரும்புச் சக்கை பெற்று இதுவரையிலும் சேர்த்து வைத்திருக்கிறோம்...

திரு. எம். பி. சுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதை பகுதி பகுதியாகப் பிரித்துச் சொல்வது சரியல்ல. கரும்புச் சக்கையை மூலமாக வைத்து அந்த ஆலை துவக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அந்த ஆலை 350 கோடி ரூபாய் போட்டு துவக்கப்பட்டது. அந்த ஆலைக்கு எவ்வளவு டன் கரும்புச் சக்கை தேவை? ஏற்கெனவே கரும்பு ஆலைகளுக்கு எரி பொருளாக கரும்புச் சக்கையைத்தான் பயன்படுத்துகிறார்கள். அதை எடுத்து விட்டால், மாற்று எரி பொருள் என்ன? ஆகவேதான் தர்மபுரி, பாலக் கோட்டை உதாரணத்திற்காகச் சொன்னேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : என்ன செய்கிறோமென்று கேட்டால், கரும்புச் சக்கையைத் தருகிற இடங்களுக்கு நிலக்கரியை வாங்கித் தந்து விடுகிறோம். நிலக்கரி கிடைக்கிறது. நிலக்கரியை மத்திய அரசிடமிருந்து வாங்கித் தந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் பாலக்கோட்டில் செய்யப் போகிற காரியம் கொஞ்சம்...

திரு. எம். பி. சுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நீண்ட நெடுங்காலமாக நிலக்கரியை நாம் அனல் மின்சார நிலையங்களுக்கே கொண்டு வர முடியாமல், கப்பல் வாங்கலாமா, இரயிலில் கொண்டு வரலாமா, வேகன் கிடைக்குமா என்று இந்தப் பிரச்சினை வளர்ந்து கொண்டு போகிறது. இப்போது ஏற்பட்டிருக்கின்ற அனல் மின் நிலையங்கள் ஏராளம். அவைகளுக்கே தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல், இந்த சர்க்கரை ஆலைகளுக்கு எங்கே நிலக்கரி கொண்டுவந்து கொடுத்து, அப்புறம் கரும்புச் சக்கையை எடுக்கப் போகிறார்கள் என்று எனக்குப் புரிந்துகொள்ள முடியவில்லை.



1985 ஜூலை 12]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இப்போது நிலக்கரி கிடைத்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசு தந்து கொண்டிருக்கிறது. நான் சொல்லும் போது, மத்திய அரசு என்று சேர்த்துச் சொல்லியிருந்தால், தவலையில்லாமல் இருந்திருக்கும். இப்போது மத்திய அரசு தந்து கொண்டிருக்கிறது. அது தருகிற வரைக்கும் அப்படித்தான் திட்டம் போடுகிறோம். அந்தத் திட்டத்தை மத்திய அரசு ஒத்துக் கொண்டுதான் 230 கோடி ரூபாய் செலவில் அந்த ஆலை நிறுவப்பட்டது. இப்போது இறக்குமதி செய்யப்பட்ட காகிதக் கூழ் எரிந்த தற்குப் பிறகு ஒரு குறிப்பு தந்திருக்கிறார்கள். அது எப்படி எரிந்தது என்பதிலே சந்தேகம் இருக்கிறது. அதைப்பற்றி ஒரு பத்திரிகை சந்தேகத்தைக் கிளப்பியது. சந்தேகத்திற்குக் காரணமே இல்லை. நானே போய்ப் பார்த்தேன். அங்கேயிருந்து கட்டுக்கட்டாக இருக்கிற காகிதக் கூழை லாரியைத் தவிர வேறு வழியில் வெளியிலே கடத்த முடியாது. ஆகவே தனியார் யாரும் அதை எடுத்துக்கொண்டு போக முடியாது. மலை மலையாக கட்டுக்கட்டாக வைக்கப் பட்ட காகிதக் கூழின் மத்தியிலேதான் நெருப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த மன்ற அளவுக்கு இருக்கிற ஒரு பெரிய மைதானத்தைச் சுற்றி பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிக்குள் புகை பிடிப்பவர்களோ, நெருப்புப் பெட்டி வைத்திருப்பவர்களோ யாரையும் அனுமதிப்பது இடையாது. எப்படி அந்தக் காகிதக் கூழின் மத்தியிலே நெருப்பு வந்தது என்று இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே அதற்கு ஒரு நீதி விசாரணை போட வேண்டுமென்று சொன்னேன். நல்லவேளை, பக்கத்திலே இருக்கிற ஆலைகளில் தீ புகாமல் தப்பியது. தீ பிடித்து இருந்தால் என்ன ஆகுமென்று தெரியாது. தீயை அணைப்பதற்கு 13 நெருப்பு அணைக்கும் இயந்திரங்கள் வந்து வேலை செய்ததினாலே அது அணைக்கப்பட்டது. அதிலே ஏற்பட்ட நட்டம் 90 லட்சம் ரூபாய். இது இன்ஷூரன்ஸிலே வந்து விடுமென்று நம்பு கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், பாலக்கோடு சர்க்கரை ஆலையிலே நாம் ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், எல்லா ஆலைகளிலும் கரும்புச் சக்கை வருகிறது. பாய்லரிலே கரும்புச் சக்கையைப் போட்டு எரித்துத்தான் ஆலைக்குத் தேவையான மின்சாரத்தை மட்டும் நாம் உற்பத்தி செய்கிறோம். அதை மாற்றி கரும்புச் சக்கையிலிருந்து அதிக மின்சாரத்தை எடுத்து பக்கத்திலே இருக்கிற பகுதிகளுக்கும் கொடுக்க முடியுமா என்பது எங்களுடைய எண்ணம். அதற்கான ஒரு முயற்சி எடுத்து, அதற்கு ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பை இந்தியாவிலே செய்திருக்கிறார்கள். ஆகவே அதிலிருந்து ஆறு மெகாவாட் உற்பத்தி செய்வதற்கு நாங்கள் அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம், அது நல்லபடி பயன் தந்தால், தமிழகத்

திலே அரசுக்கும், பொதுத் துறைக்கும், கூட்டுறவுத் துறைக்கும் சொந்தமாக இருக்கிற ஆலைகளிலேயிருந்து மட்டும் 120 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

காகித ஆலையிலே நான்கு கோடி ரூபாய் தானே லாபம் வந்திருக்கிறது, 230 கோடி ரூபாய் போட்டு வெறும் நான்கு கோடி ரூபாய் லாபம் வருவதற்கு ஒரு தொழிற்சாலை வைப்பானேன் என்ற கேள்வியை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். இந்தத் தொழிற்சாலை வைப்பதற்கான காரணம், பத்திரிகைக்குத் தேவையான நியூஸ் பிரிண்ட் என்ற காகிதத்தை, அந்நியச் செலாவணியைச் செலவு செய்து இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 12-25)

அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கான முயற்சியாகத்தான் இந்தத் தொழிற்சாலைக்கான உரிமத்தை வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை விரிவாக்கம் செய்வதற்கும் நல்ல சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மேக்னசைட்பற்றிக் குறிப்பிட்டார்கள். தென்னகத்தில் ஆந்திரத்திலும் கருநாடகத்திலும் மாக்னசைட் எடுப்பதற்கு வரி விதித்திருக்கிறார்கள் அந்த அடிப்படையில்தான் இங்கேயும் அந்த வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏதாவது தொல்லை ஏற்பட்டால், அரசு அதை ஆராயத் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வரியால் பெறப்படும் தொகை சுரங்கப் பணியாளர்களுக்கும் சுரங்கப் பணிகளுக்காகவும்தான் செலவிடப்படும். சுரங்கப் பணிகளுக்கும் சுரங்கப் பணியாளர்களுடைய நல்வாழ்வுக்கும் அதைத் திரும்பச் செலவழிப்பதுதான் அதன் நோக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த வகையில் தொழில் துறையில் பல நல்ல காரியங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களைத் தேடி வருகிறவர்களை தொழில் தொடங்க இங்கே அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கெல்லாம் உதவி செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



சென்ற ஆண்டு 1984-85-ல் தமிழ் நாட்டிற்கு மத்திய அரசு தொழில் முதலீட்டு மானியமாகத் தந்திருக்கும் தொகை ரூபாய் 3 கோடியே 26 லட்சமாகும். இது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் அதிகமான தொகையாகும். மாண்புமிகு மைய அரசின் அமைச்சர் திரு. வீரேந்திர பாட்டீல் அவர்கள் ஹோசூரில் கூட்டத்தில் பேசும்போது இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் மத்திய அரசின் மான்யத்தைப் பெறுவதில் தமிழகம் முன்னணியில் நிற்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறையின் மூலம் பல நல்ல காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தொழில்களைத் தொடங்குவதற்கு இங்கே யார் முன்வந்தாலும், அவர்களுக்கு நாங்கள் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம். அதற்கான வகையில்தான் பல்வேறு நிறுவனங்கள் இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கின்றன.

நான் ஹனோவர் கண்காட்சியைப் போய்ப் பார்த்தேன். அங்கேயிருந்து சுமார் 200 கேட்டலாக்குகளைக் கொண்டு வந்தேன். அயல்நாடுகளுக்கு என்னென்ன தேவை, நாம் அதில் என்னென்ன உற்பத்தி செய்யலாம் என்பதற்கான விவரம் அதன் மூலம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்வாறு அந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த கேட்டலாக்குகளை எல்லாம் எடுத்து வந்து ஐந்து நாட்கள் சிப்காட்டில் ஒரு கண்காட்சியாக அவற்றை வைத்தோம். அடுத்து, கோவை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களிலும் அவை கண்காட்சியாக வைக்கப்பட இருக்கின்றன. அதைப் பார்ப்பவர்கள் எந்தெந்தத் தொழில்களைத் தொடங்கலாம் என்று முடிவு செய்ய உதவியாக இருக்கும். ஹனோவர் கண்காட்சியில் நான்கு லட்சம் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. 800 ஸ்டால்கள் வைக்கப்பட்டிருந்தன. அதன் மூலம் இந்தியாவிலும் தமிழகத்திலும் அவற்றை உற்பத்தி செய்ய நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. மற்ற ஊர்களில் இந்த கேட்டலாக் கண்காட்சி நடக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய நண்பர்களுக்கும் அறிவுறுத்தி அதைப் பார்க்கும்படி செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் தமிழகத்தைத் தொழில் வளம் மிக்கதாகச் செய்ய முடியும் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்படும் தொழில்கள் இரண்டு என்றும் அதில் ஒன்று வேஸ்ட் காட்டன் மில் என்றும் குறிப்பிட்டார்கள். வேஸ்ட் காட்டன் மில் என்று அனுமதி வாங்கிவிட்டு நல்ல தரமான பஞ்சைப் பயன்படுத்தி நல்ல

பஞ்சாலையாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான நிபந்தனை குறைந்த கவுண்ட் போட வேண்டும். உயர்ந்த கவுண்ட் போடக் கூடாது என்பதுதான். ஆனால் உண்மையில் அவர்கள் எல்லாம் நல்ல பஞ்சாலைகளாக இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஒருவர் இருவர்தான் அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டமான சேலம் மாவட்டத்தில் 82 மில்கள் 3,000 ஸ்பிண்டில்களோடு தொடங்கி இருக்கிறார்கள். ரூபாய் 33 லட்சம் கடன். அதைக் கட்டப் போகிறார்களா இல்லையா என்பது இனிமேல்தான் தெரியும். கோயம்புத்தூர் மில்காரர்கள் என்று வருவதைப் போல் எங்கள் ஜில்லாவிலும் மில்காரர்களாகப் போனால் மரியாதையாக இருக்கும் என்று அவர்கள் போகிறார்கள் என்று நினைக்கிறேன்.

THIRUMATHI TARA CHERIAN : Hon. Deputy Chairman, Sir, I want to get a few clarifications and assurances from the Hon. Minister. I hope you will allow me. The Hon. the Minister for Rural Industries in his reply has admittted that there is loss in many Units and that many of the Units are still in the red. I do not know whether the Government are allowing them to be run as charitable institutions. The industries in the private sector, with all the same handicaps like shortage of coal, electricity and so on and so forth, are able to run them on a profitable basis. I am not casting aspersion on anybody because we know we have excellent administrators with experience. One of the explanations given is that we are not able to compete with the private sector because of employment of more labour and expensive administration and management. The time has come when we should consider ways to overcome the deficiencies in public sector units.

Then, if at all any Consultative Committee is necessary, it should be in the Industries Department. In such Consultative Committee, besides the Government officials like the Heads of Departments and legislators, we should have private industrialists with experience.

MR. DEPUTY CHAIRMAN : It appears the Hon. Lady Member has got many new ideas to offer.



(பிற்பகல் 12-30)

THE HON. THIRU K. RAJARAM : I presume the Hon. the Lady Member is referring to the fact that the overhead charges are less in private sector and more in public sector. Is that the point ?

THIRUMATHI TARA CHERIAN : Because of that, the public sector is not able to compete with the private sector.

The Hon. Thiru K. RAJARAM: A number of industries are getting good business, though a few of them had some teething troubles in the beginning. For instance, our Cement factories have begun to earn profits. So also the Corrugated Sheet Industries have earned a profit of Rs 35 lakhs. Now it has gone to Rs. 49 lakhs of profit. Gradually they are gaining ground.

THIRUMATHI TARA CHERIAN : I am glad to know that there is improvement. But so far as furniture is concerned, it is more expensive than in the private sector. We go and return thinking that we can purchase it cheaper in private sector units.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, because of the high overhead charges, the public sector could not compete with the private sector. Moreover, as the Hon. Minister, while replying, stated very clearly, we are bound to pay taxes, whereas the private sector people are able to evade taxes. These are some of the difficulties because of which we are not able to compete with the private sector.

THIRUMATHI TARA CHERIAN : That means that the Government are not able to collect the taxes due from the private sector.

Regarding Consultative Committee, experienced people from private sector, who have learnt by trial and error method, should find a place there, because the Consultative Committee, consisting of merely Government people and legislators, will not serve the purpose.

MR. DEPUTY CHAIRMAN : The Hon. Lady Member has got a number of points and she could have spoken on the Policy Note yesterday itself.

THIRUMATHI TARA CHERIAN : You have not given me a chance.

Mr. DEPUTY CHAIRMAN: The hon. Member did not ask for it. She must put a question and elicit answer.

THE HON. THIRU K. RAJARAM: Regarding the Consultative Committee, the Government are considering it.

THIRUMATHI TARA CHERIAN: There is another thing which I want to ask. We cannot have separate water-tight compartments. We find that quite a large number of persons have registered their names with the Employment Exchanges and are waiting to get jobs. Will the Hon. Minister consider having a link-up with the industrial units and the Employment Exchanges so that a person whose name had been in the list in the Employment Exchange for 10 or 15 years could know where he could get a job ? Secondly, ...

MR. DEPUTY CHAIRMAN: No, no.

Thirumathi TARA CHERIAN: In the whole Policy Note, cerned, we have already developed a small-scale industrial unit at for the women-entrepreneurs.

THE HON. THIRU K. RAJARAM: As far as women are concerned, we have already developed a small-scale industial unit at Coimbatore exclusively for women. If women from other places come forward, we are ready to allocate any area they want.

THIRUMATHI TARA CHERIAN: Such an arrangement has been made in only one place in Tamil Nadu. There are hundreds of unemployed women, both skilled and unskilled . .

THE HON. THIRU K. RAJARAM: I am not stating about jobs. I am telling about the allocation of industrial units specially for women. In that respect, Coimbatore has already got an industrial unit maintained by women alone.

MR. DEPUTY CHAIRMAN: Thiru M. P. Subramaniam.

THIRUMATHI TARA CHERIAN: I have only one more question, Sir.

Mr. DEPUTY CHAIRMAN: I have already called the hon. Member, Thiru M. P. Subramaniam. Probably, he wants to oblige the lady-Member belonging to his Party. I do not know.



THIRU M. P. SUBRAMANIAM: Two Members cannot be on their legs at the same time. Only after she resumes her seat, I can take the floor.

THIRUMATHI TARA CHERIAN: I have not finished, Sir.

Mr. DEPUTY CHAIRMAN: The hon. lady Member has already taken a long time.

(பிற்பகல் 12-35)

திரு. எம். பி. சுப்பிரமணியம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சேலம் மேக்னசைட்பற்றி குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் எம்.ஆர்.டி.பி. என்று சொன்னார்கள். கோளா, கர்நாடக மாநிலங்களை தமிழகத்தோடு ஒப்பிடுவது சரியில்லை. சேலம் மேக்னசைட் இந்தியாவின் 60 சதவிகிதம் தேவையைத்தான் பூர்த்தி செய்கிறது. மற்ற மாநிலங்களின் உற்பத்தி அளவு மிகமிக சொற்பம்தான். நான் சொன்னது வரி போடுவதன் மூலமாக மற்றவர்களுடன் கம்பீட் பன்ன முடியாது. அல்மோரா குறைந்த செலவில் உற்பத்தி செய்கின்றது. அத்துடன் நாம் கம்பீட் பண்ண முடியாது. அதுபோல சைனாவிலே இருந்து வருகின்றது. அதனுடைய தரத்துடன் கம்பீட் பண்ண முடியாது. விலையும் குறைவாக இருக்கின்றது. நம் மேக்னசைட் விலை கூடுதலாக இருக்கின்றது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, விலையைப்பற்றிச் சொல்கின்றார்கள். அதைப் பொறுத்த வரையில், நாம் நம்முடைய மேக்னசைட்டை நல்லபடியாகத்தான் பயன் படுத்திக் கொண்டு வருகிறோம். டாடா திறுவனம் நல்ல விலைக்கு வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதை நாமும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதிகமாக வெளியிடங்களுக்கு 'சப்ளை' செய்யப்படவில்லை. புதிய இயந்திரங்களை நாம் தருவித்திருக்கிறோம். நமக்கே அது பயனுள்ளதாக இருக்கின்றது. வரி போட்டால்கூட, அந்த வரி அரசுக்குத்தான் வருகிறது. அதனால் மேக்னசைட் தொழில் பாதிக்கப்படாது. யாருக்கும் வேலையில்லாத நிலைமைகள் ஏற்படாது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக முக்கியமான கருத்தை இங்கே சொன்னார்கள். மத்திய அரசு 15 சதவிகிதமும் மாநில அரசு 10 சதவிகிதமும் சப்சிடி தருகிறது என்றும், அதைச் சேர்த்து 25 சதவிகிதமாக சப்சிடியைத் தருவதாகச் சொல்கின்றார்கள். 21 இடங்களில் அதை அனுமதிக்கலாம் என்று

(திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்) [1985 ஜூலை 12

கருதி அதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அது மிகமிக நல்ல ஒரு அறிவிப்பு. அதை நான் பாராட்டுகிறேன். அதை நான் வரவேற்கிறேன். அதைக் குறித்து ஒன்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இராணிப்பேட்டை, கடலூர், கும்முடிபூண்டி, ஹோசூர், சிப்காட் காம்பளெக்ஸ் எல்லாவற்றையும் அதில் சேர்ப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அரசின் ஆராய்ச்சியில் இருக்கின்றது என்று சொன்னேன். இரண்டையும் சேர்த்துக் கொடுத்தால், எல்லோருக்கும் ஒரு கவர்ச்சி ஏற்படுத்தலாம். அந்த வகையிலேதான் இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றோம். ஏற்கெனவே உள்ள தொழிற்பேட்டைகளை சேர்ப்பதா அல்லது புதிதாக வருகின்ற தொழிற்பேட்டைகளுக்கு இந்த 21 இடங்களைத் தேர்ந்தெடுப்பதா என்பதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து பிறகு சொல்கிறேன்.

## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 38/1985)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 38/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

சென்னையில் தனியார் நிறுவனங்களுக்கு, அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான இடங்களில் விளம்பரப் பலகைகள் வைக்கும் உரிமை சென்னை மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டு வந்தது. இந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமை 1981 ஆம் ஆண்டுடன் முடிவடைந்தது. எனினும், ஒரு சிலர் இந்த உரிமையை மேலும் ஐந்து ஆண்டு காலத்திற்கு தங்களுக்கு அளிக்க வேண்டுமென சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்கள். மற்றொரு பிரிவினர் சென்னை மாவட்ட ஆட்சியருக்குச் செலுத்தும் உரிமத் தொகையில், உள்ளாட்சி வரி 23 சதவிகிதம் அடங்கியுள்ள

@ 387-398 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1985 ஜூலை 12] (திரு. ப. உ. சண்முகம்)

படியால், மாநகராட்சிக்கு விளம்பர வரி கட்ட தேவையில்லை என ரிட் மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். இந்த ரிட் மனுக்கள் மீது இன்னும் உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கவில்லை.

சென்னை மாநகராட்சியில் தற்போது சுமார் 900 விளம்பரப் பலகைகள் சாலை ஓரங்களில் உள்ளன. இவைகளில் உரிமம் பெறாத விளம்பரப் பலகைகள் மாநகராட்சியால் அகற்றப்பட்டு வருகின்றன. எனினும், நாளுக்கு நாள் உரிமம் பெறாத விளம்பரப் பலகைகள் வைப்பது சென்னையில் அதிகரித்து வருகிறது. மேலும், இவ்வாறு அதிகரிப்பதினால் ஆபாச விளம்பரங்கள் பெருகுவதற்கும் வாய்ப்பு அதிகரித்து வருகிறது. இதனால், உயிர்ச்சேதம் ஏற்படுமளவு பெரும் சாலை விபத்துக்களும் அதிகரிக்கின்றன. இவ்வாறு சில குறிப்பிட்ட தனியார் விளம்பர நிறுவனங்கள் உரிமம் பெற்றோ, பெறாமலோ விளம்பரப் பலகைகள் வைத்து லாபம் அடைவது மட்டுமல்லாமல், போக்குவரத்துக்கு இடைஞ்சலும், விபத்துக்களும் ஏற்பட காரணமாக இருக்கின்றனர். எனவே, அரசே இந்த உரிமைகளை எடுத்துக்கொண்டு, அரசு அனுமதிக்கும் இடங்களில், அரசு அல்லது அனுமதிக்கப்படும் நிறுவனங்கள் மட்டுமே விளம்பரம் செய்ய ஒரு புதிய சட்டம் கொண்டு வரலாம் என முடிவு செய்துள்ளது.

இச்சட்டம் சென்னை மாநகராட்சியைப் பொறுத்த மட்டில் 10—7—1985 முதல், அதாவது இப்பேரவையில் அறிமுகம் செய்யப்பட்ட நாளிலிருந்து அமுலுக்கு வரும். மற்ற இடங்களில் அரசு அறிவிக்கை வெளியிடும் நாளிலிருந்து அமுலுக்கு வரும். இச்சட்டம் அமுலுக்கு வரும் நாளிலிருந்து விளம்பரப் பலகைகள் மற்றும் அவற்றிற்கான உரிமம் அனைத்தும் அரசுக்குச் சொந்தமாகும். அதுவரை அந்த விளம்பரப் பலகைகளை அனுபவித்து வந்தவர்கள், தங்கள் உரிமைகளை உறுதிப்படுத்தி அதற்கான ஈட்டுத் தொகையை ஒரு ஒப்பந்தம் மூலம் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு ஒப்பந்தம் செய்ய அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், ஒரு நடுவர் நிர்ணயிக்கும் தொகையை ஈட்டுத் தொகையாகப் பெற்றுக்கொள்ளலாம். நடுவர் அளிக்கும் ஈட்டுத் தொகை திருப்திகரமானதாக இல்லையென்றால், பாதிக்கப்பட்டவர்கள் தீர்ப்பு ஆயத்திற்கு மேல் முறையீடு செய்யலாம். இச்சட்டம் அமுலுக்கு வரும் நாளில் உள்ள நிலவரத்திற்கேற்ப, ஈட்டுத் தொகை வழங்கப்படும். உரிமம் பெற்று விளம்பரம் செய்தவர்களுக்கு எஞ்சியுள்ள உரிமக் காலத்தில் எவ்வளவு வருமானம் கிடைத்திருக்குமோ அந்த அளவுக்கு ஈட்டுத் தொகை நிர்ணயிக்கப்படும். ஆனால் முறையான உரிமம் இல்லாமல் அல்லது முறையான ஒப்பந்தம் இல்லாமல் விளம்பரப் பலகைகள் வைத்திருந்தால், அவர்களுக்கு ஈட்டுத்

(திரு. ப. உ. சண்முகம்) [1985 ஜூலை 12

தொகை வழங்கப்பட முடியாது. கொடுக்க மாட்டோம். இச்சட்டம் அமுலுக்கு வந்த காலத்தில் உரிமம் முடிவடைந்திருந்தால், அவர்களுக்கு ஒரு மாத காலத்தில் கிடைத்த வருமானம் ஈட்டுத் தொகையாக வழங்கப்படும்.

இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறைத் தண்டனையோ, அல்லது அபராதமோ அல்லது சிறைத் தண்டனையுடன் அபராதமோ அளிக்கப்படும். தனியார் நிறுவனங்கள் இச்சட்டத்தை மீறினால், நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(பிற்பகல் 12-40)

இச்சட்டப்படி (1) மத்திய மாநில அரசுக்குச் சொந்தமான விளம்பரப் பலகைகள், (2) அரசு அனுமதி அளிக்கும் வேறு எந்த நிறுவனங்களுக்குச் சொந்தமான விளம்பரப் பலகைகள், (3) தனியார் நிறுவனங்கள், தாங்கள் தொழில் நடத்தும் இடங்களிலோ அல்லது கட்டிடங்களிலோ உள்ள அந்தத் தொழில் சம்பந்தப்பட்ட விளம்பரப் பலகைகள், (4) ஒரு இடத்தின் பெயர் அல்லது கட்டிடத்தின் பெயர் கொண்ட விளம்பரப் பலகைகள், ஆகியவைகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

இனி, விளம்பரம் செய்ய இடங்களைத் தேர்ந்தெடுக்க மாவட்டக் காவல் துறை அதிகாரி அல்லது துணை காவல் துறை ஆணையர்; உள்ளாட்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் மற்றும் ஐந்து அரசு அதிகாரிகளுக்கு மிகாமல் அரசால் நியமிக்கப்படுபவர்களடங்கிய குழு அமைக்கப்படும்.

இச்சட்டத்தை நிறைவேற்றத் தேவையான விதி முறைகளும் உடனடியாகத் தயார் செய்யப்படும். இச்சட்ட முன்வடிவுக்கு இந்திய அரசின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. இச் சட்ட முன்வடிவு மேலவையில் நிறைவேறிய பிறகு இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்படும்.

எனவே இம் மாநிலத்திலுள்ள அனைத்து விளம்பரப் பலகைகள் மற்றும் அவற்றிற்கான உரிமைகளை அரசு கையகப்படுத்த கொண்டுவரப்படும் இச் சட்ட முன்வடிவை இம் மேலவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூலை 12]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு, விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

**மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, விளம்பரப் பலகைகளை அரசு எடுத்துக்கொள்ளும் சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களைச் சொல்லுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை இங்கே அறிமுகப்படுத்துகின்ற நேரத்தில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 'டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ் ஆஃப் ஸ்டேட் பாலிசி' என்கின்ற அந்த நான்காம் பிரிவில் உள்ள ஆர்ட்டிகிள் 31-ஐச சுட்டிக் காட்டி, அதிலே இருக்கின்ற 'பி', 'சி' பிரிவுகள் பிரகாரம் ஒரு விளக்கத்தைச் சொல்லி, இந்த விளம்பரப் பலகைகளை எல்லாம் அரசு கையகப்படுத்தி இருக்கிறது என்ற குறிப்பினை மாண்புமிகு அமைச்சரவர்கள் தந்திருக்கிறார்கள்.

இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கம் என்று சொல்லுகிற வகையிலே நோக்க-காரண விளக்கவுரை என்று குறிப்பிட்டு, அதைக்கூட மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். போக்குவரத்து இடர்களையும் எண்ணிறந்த விபத்துக்களையும் விளைவிக்கின்ற வகையில், இம்மாநிலத்தின் வெவ்வேறு மாநகர்களிலும், நகரங்களிலும் விளம்பரப் பலகைகள் ஒழுங்கற்ற வகையில் அண்மைக் காலத்தில் பெருகி வந்திருக்கின்றன. அவற்றில் பல விளம்பரங்கள் ஆபாசமாக உள்ளன. விளம்பரப் பலகைகளைத் தாறுமாறாக அமைப்பதன் மூலமும், கண்ணியமற்ற ஆபாசமான அத்தகைய விளம்பரப் பலகைகளின்மீது விளம்பரங்களைக் காட்சிக்கு வைப்பதன் மூலமும், செல்வம் ஓரிடத்தில் குவிகின்ற வகையில் சிலர் தகாத முறையில் தாங்களே செல்வங்களைப் பெருக்கிக் கொள்கின்றார்கள் என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைகளை நீக்கும் நோக்கோடு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். உள்ளபடியே இந்நாட்டிம்தான் நோக்கம் என்றால், அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பொதுவாக தனியாரிடத்தில் செல்வம் குவிவதைத் தடுக்க அரசு ஈடுபடுவது உள்ளபடியே பாராட்டப்பட வேண்டிய ஒன்று. ஆனால் என்னைப் பொறுத்தவரையில்,

(பிற்பகல் 12-45)

விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவின் உள் பகுதிக்குள் சென்று படித்துப் பார்க்கும்போது, அதன் நோக்க காரண விளக்க உரை சரியாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவேளை வேண்டாதவர்களை ஒழித்து, வேண்டியவர்களை வளர்க்கும் சட்ட முன்வடிவு இது என்று ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தால், என்னைப் போன்றவர்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டிய அவசியமே இருந்திருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நோக்க—காரண விளக்க உரையில் ஒன்றைச் சொல்லிவிட்டதற்குப் பிறகு, "விலக்கு அளிப்பதற்கான அதிகாரம்" என்று 25-வது பத்தியில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். முதலில் இதன் மூலம் ஆபத்து ஏற்படுகிறது, பல பேர் இறக்கிறார்கள், சிலர் லாபம் பெறுகின்ற நிலை இருப்பதால் கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு, 25-வது பத்தியில் விளக்கம் என்றும் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அரசு தானாக முறையிடு முறையிலோ, வேறு வகையிலோ இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக சொந்தக்காரர்கள் யாருக்காவது இன்னல் ஏற்பட்டால், அரசு ஆணை மூலம் பிராஸ்பெக்டிவ் ஆக அல்லது ரெட்ராஸ்பெக்டிவ் ஆக சட்டத்திற்கு உட்பட்டு அத்தகைய விளம்பரப் பலகைகளுக்கு விலக்களிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். முதலில் ஒன்றைச் சொல்லிவிட்டு பிறகு உள்ளே "சிலருக்கு மட்டும் அரசு நினைத்தால் தருவோம்" என்று சொல்வது சரிதானா? அரசுக்குத் தெரிந்தால் 'நாங்களாகத் தருவோம்' என்று சொல்லும்போது தான் சந்தேகம் வருகிறது. இப்படிச் சொல்லியிருப்பதன் வாயிலாக வேண்டாதவர்களை ஒழித்து விட்டு, வேண்டிய சிலருக்குத் தருகின்ற வாய்ப்பு வந்து விடுமோ என்கிற ஐயத்தை நான் வெளிப்படுத்துகிறேன். பிறகு ஏன் இதனைக் கொண்டு வருகிறோம் என்பதற்கு விளக்க உரை சொன்னார்கள். சென்னையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே 1965 ஆம் ஆண்டிலிருந்தே விளம்பரப் பலகை வைக்கின்ற முறை இருக்கிறது. சட்டசபையிலே இது அறிமுகம் செய்யப்பட்ட நாளான 10—7—1985 ஆம் நாளிலிருந்தே அரசு கையகப்படுத்த ஆரம்பித்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். 1965 ஆம் ஆண்டிலிருந்தே லீஸ் எல்லாம் பெறப்பட்டு குத்தகை வாங்கப்பட்டு வந்தது இத்தகைய முறை 1965 ஆம் ஆண்டிலிருந்து 1979 ஆம் ஆண்டு வரை இருந்திருக்கிறது. ஆனால் மீண்டும் புதுப்பிக்கின்ற நிலை வருகிறபோது அரசு சார்பாக மீண்டும் புதுப்பித்துத் தர மாட்டோம் என்று சொல்லப் பட்டது. பிறகு இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுப்பால்



கிட்டத்தட்ட 65 மனுக்கள் கோர்ட்டுக்குப் போய் இன்னும் தீர்ப்பு கூட வழங்கப்படாத நிலையில் அவைகள் பெண்டிங்கில் இருக்கின்றன. இன்னின்ன காரணத்திற்காக அவர்கள் ரிட் மனுக்கள் போட்டிருக்கிறார்கள் என்றும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் லீஸ் பணத்தையெல்லாம் ஒழுங்காகக் கட்டிக்கொண்டுதான் வந்திருக்கிறார்கள். அவர்கள் கட்டணம் செலுத்த மாட்டோம் என்று சொல்லவில்லை. 1979 ஆம் ஆண்டிலிருந்து கட்டணம் செலுத்தாமல் லாபம் பெறுகின்ற சூழ்நிலையில் இல்லை. அவர்கள் கட்டணம் செலுத்தத் தயாராக இருக்கிறார்கள். கட்டணம் செலுத்த முன் வந்தபோது அதை வாங்கவில்லை. 'செக்' கொடுத்தபோது 'வாங்க மாட்டோம்' என்று அதிகாரி மறுத்துவிட்டார். 1—7—1981-லிருந்து இன்றுவரை சென்னையிலே விளம்பரப் பலகை வைத்திருப்பவர்கள் 1¼ கோடி ரூபாய் கட்ட முன் வருகிறார்கள். சில பிரச்சினைகள் என்று வரும்போது, அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய பணத்தைக் கட்ட மாட்டோம் என்று சொல்லி வழக்குமன்றத்திற்குப் போகின்ற நிலை இருக்கிறது. ஆனால் இங்கே அப்படி அல்ல. அரசுக்குச் செலுத்த வேண்டிய வாடகையைச் செலுத்துகிறோம் என்று முன் வந்த பிறகும். வேண்டாம் என்று அரசு அதிகாரிகள் சொல்கிறார்கள். இந்த வகையில் அரசுக்கு 1¼ கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது. இதனால் அரசுக்கு வர வேண்டிய வருவாய் வராத சூழ்நிலை இருக்கிறது. 1965-க்கு முன்னால் கூட இப்படிப்பட்ட விளம்பரப் பலகைகள் எந்த அடிப்படையில் வைக்கப்பட்டன என்பதைப் பார்க்க வேண்டும். பி.டபிள்யூ.டி. எல்லைக்கு உட்பட்ட இடத்தில் என்றால், அவர்களிடமிருந்தும், மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட இடத்தில் என்றால் மாநகராட்சியிடமிருந்தும், மாவட்டங்களில் என்றால் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தும் அனுமதி பெற வேண்டிய நிலை இருந்தது. சில இடங்களில் தவறு நடைபெற்று இருக்கலாம். அதற்குக் காரணம் அவர்களைக் கேட்டால், இவர்களிடம் போய்ப் பாருங்கள் என்றும், இவர்களைக் கேட்டால் அவர்களிடம் போய்ப் பாருங்கள் என்றும் சொல்கின்ற நிலை இருந்தது. பிறகு சென்னையைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதிகாரத்தைக் கொடுத்து. 1974 ஆம் ஆண்டு பொதுப் பணித் துறை ஆணை எண் 1672 மூலம் முறைப்படுத்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி முறைப்படுத்தப்பட்டு, கலெக்டருக்கு மனுச் செய்து,

(பிற்பகல் 12-50)

அவர் அனுமதி கொடுத்தால்தான், விளம்பரப் பலகை வைக்கலாம் என்ற சூழ்நிலை இருந்தது. அப்படி முன்னால் உள்ள குறைபாடுகளை நீக்கி, 1974 ஆம் ஆண்டு அரசாணை போட்டு, கலெக்டருக்கு அதிகாரம் என்று

சொல்லியிருக்கிறார்கள். எனவே அப்படி ஒழுங்குபடுத்தப்பட்டு, விளம்பரப் பலகைகளை வைத்து விளம்பரம் செய்யலாம் என்ற நிலைமையை மாற்றி இன்றைக்கு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆபாச விளம்பரங்கள் என்று சொல்கிறார்கள். ஆபாசம் என்று சொன்னால், பல சினிமா போஸ்டர்கள் மிகவும் ஆபாசமான நிலையில் காட்சியளிக்கின்றன. சமீபத்தில் கோர்ட்டில் ஒரு ரிட் சம்பந்தமாக, ஒரு ஆபாச போஸ்டரைக் கூட காண்பித்தார்கள். இன்னொரு சம்பவத்தைக் கூட நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னையில், ஒரு முறை இரண்டு சினிமா போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. அதிலே ஒரு போஸ்டர் மிகவும் ஆபாசமாக இருந்தது. அதற்குப் பக்கத்தில் 'ஆதிபராசக்தி' என்ற ஒரு தெய்வீகப் படத்தின் போஸ்டர் ஒன்றும் போடப்பட்டு, கடவுளின் உருவத்தை அதிலே வரைந்திருந்தார்கள். இதில் என்ன சிறப்பு என்றால், அந்த ஆபாசப் படத்தை அப்படியே விட்டுவிட்டு, அந்த தெய்வீகமான படத்தின் மீது கருப்புத் தார் பூசி அழித்திருந்தார்கள். அங்கிருந்தவர்களை நான் கேட்டபோது, கார்ப்பரேஷனுக்கு வரி செலுத்திவிட்டுத்தான் இதுமாதிரி போஸ்டர்களைப் போட்டு விளம்பரப்படுத்த முடியும், இந்தப் படத்திற்கு அம்மாதிரி வரி செலுத்தவில்லை, ஆகவே கார்ப்பரேஷன் அதிகாரிகள் கருப்புத் தார் பூசி அழித்திருக்கிறார்கள், ஆபாசப் படத்திற்கு வரி கட்டப்பட்டிருப்பதால், அதை அழிக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, ஆபாசத்திற்கு, வரி கட்டினால், அதை அழிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதை நான் இந்த மன்றத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது சாதாரண பொதுமக்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை. ஆபாசப் படத்தை விட்டுவிட்டு, தெய்வீகமான படத்தைத் தார் பூசி அழித்திருக்கிறார்களே என்றுதான் பார்ப்பவர்கள் நினைப்பார்கள்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அதற்காகத்தான் ஆபாச சுவரொட்டித் தடுப்புச் சட்ட முன்வடிவு இங்கே அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது.

**மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு இந்தச் சட்டம் வருகிறபோது, ஆபாச விளம்பரம் என்று சொல்லி, போஸ்டர் அடிக்கிறார்கள் பல பிரஸ்களில். தமிழகத்தில் பல்வேறு அச்சகங்களில் அத்தகைய போஸ்டர்கள் அடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும் அரசு முன்வர வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.



தனியாரிடம் செல்வம் பெருகுகிறது, அதைத் தடுக்கத்தான் இந்தச் சட்டம் கொண்டுவருகிறோம் என்று சொல்லப்படுகிறது. தனியாரிடம் செல்வம் பெருக எத்தனையோ வழிகள் இருக்கின்றன. பஸ்களைத் தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கை சரியானதுதான் என்று ஒரு வழக்கில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்திருந்தபோதிலும், இந்த அரசு தனியாருக்குச் சலுகைகள் அளிப்பதில்தான் கவனம் செலுத்துகிறது. எல்லா தனியார் பஸ்களையும் தேசியமயமாக்குவதில் அக்கறை காட்டவில்லை. இன்றுவரை அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குதிரைப் பந்தயத்தை வைத்துக்கொண்டு தனியார் எந்தெந்த அளவுக்கு லாபம் சம்பாதிக்கிறார்கள், செல்வத்தைப் பெருக்கிக் கொள்கிறார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரியும். இப்படி பல்வேறு முறைகள் எடுத்துக்காட்டலாம். இவைகளை தேசியமயமாக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட நிலை இன்றுவரை ஏற்படவில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். குதிரைப் பந்தயத்தை தேசியமயமாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார் என்றால், அது அவருடைய தனிப்பட்ட கருத்தா, அல்லது அவருடைய கட்சியின் கருத்தா ?

**மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** பிரச்சினை அதுவல்ல அதை ஒழித்தே விடலாம் என்பதுதான் எனது கருத்து. பஸ்களை தேசியமயமாக்கவேண்டுமென்ற பேச்சோடு, குதிரைப் பந்தயம் என்ற வார்த்தையும் வந்துவிட்டது என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் நாட்டிலே இருக்கின்றன என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

ஆகவே, இத்தகைய சட்ட முன்வடிவுகள் கொண்டு வரப்படுவதன் நோக்கம் ஆளுங்கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் வேண்டியவர்களுக்கு நன்மை செய்யவும் அல்லாதவர்களை ஒழிக்கவும் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டது என்ற கருத்தைத் தெரிவித்து, எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமருகிறேன்.

(பிற்பகல் 12-55)

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்படும் 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு மீது அதை ஆதரித்து சில கருத்துக்களை இங்கே பேச விரும்புகிறேன்,

**1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1985)**

[திரு. ஜேப்பியார்] [1985 ஜூலை 12

இன்றைக்கு சென்னை மாநகரத்திலே விளம்பரப் பலகைகள் என்பது ஒரு வியாபாரப் பொருளாகத்தான் இருக்கிறது. பத்து பதினைந்து ஆண்டுகளாக விவரம் தெரிந்தவர்கள்—அதிலும் அரசியல் கட்சிகளிலே அங்கம் வகிப்பவர்கள், அனுபவப்பட்டவர்கள்—இதை ஒரு தொழிலாக நடத்தி வந்தார்கள். இவர்கள் இரவு நேரங்களிலே அரசின் அனுமதி பெறாமல் விளம்பரப் பலகைகளை எடுத்து வைத்துவிடுவார்கள். அரசு அகற்ற வந்தால், காலை பத்து மணிக்கு நீதிமன்றம் திறந்தவுடன் நீதிமன்றம் சென்று, "நான் பல ஆண்டுகாலமாக விளம்பரப் பலகையை வைத்து நடத்தி வருகிறேன். அது என்னுடைய ஜீவாதார உரிமை. அது பறிக்கப்படுகிறது. எனவே தடை உத்தரவு வேண்டும்" என்று சொல்லி தடை உத்தரவு வாங்கிவிடுகிறார்கள். அப்படி அனுமதி பெறாமல் விளம்பரப் பலகை வைத்துள்ள ஆக்கிரமிப்பாளர்கள் இந்த நாட்டிலே நிறைய பேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நண்பர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய பணம் பல கோடி ரூபாய் இருக்கும். அவர்கள் இவ்வாறு அரசுக்குப் பணமும் கட்டுவதில்லை. அரசினுடைய இடத்தையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். நீதிமன்றங்களில் தடை உத்தரவு வாங்கி பல இடங்களில் இதுமாதிரி செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் அரசு நிறுவனங்கள் நடத்துகிற கட்டிடங்களில்கூட தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, விளம்பரங்கள் வைத்திருக்கிறார்கள். அரசு இவற்றை எடுக்க முனைந்தால், உடனே நீதிமன்றங்களுக்குச் சென்று வழக்குகள் நடத்தக்கூடிய பெரும் புள்ளிகளும் சென்னையிலே ஏராளமாக இருக்கின்றார்கள்.

இதில் மாண்புமிகு உறுப்பினர் வழக்குரைஞர் திரு. மிசா. கணேசன் அவர்கள் குதிரைப் பந்தயம் குறித்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சென்னை மாநகர், அண்ணா சாலையிலுள்ள ஜெமினி மேம்பாலத்திற்குக் கீழே தேவை இல்லாமல் இரண்டு விளம்பரங்கள் இருக்கின்றன. குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்ட நாள் என்று அவற்றில் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் குதிரைப் பந்தயம் அழகாக நடந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்த விளம்பரம் தேவையா? "இந்த நாள் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்ட நாள். அதை மக்களுக்கு நினைவு படுத்துகிறோம்" என்று அரசாங்கமே அரசுச் செலவிலே அங்கே விளம்பரம் செய்து வைத்திருக்கிறது. தேவை இல்லாத அந்த விளம்பரத்தை இந்த நேரத்தில் எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூலை 17]

சுற்றுலா வளர்ச்சியை மனதிலே எண்ணி அதை கிரயம் பெற்றுக்கொள்ளாமல், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு தருமானால், அந்தச் செலவையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டு, அந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று கேட்டிருக்கிறோம். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது. அதிலே நமக்கு என்று இப்போது எந்தச் செலவும் இல்லை. நமக்கு அதிக செலவாகவோ அல்லது இழப்பாகவோ இருக்காது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்படி பயணிகள் பயன்படுத்துவதற்கு மத்திய அரசினுடைய விமானப் போக்குவரத்துத் துறையும் சுற்றுலாத் துறையும் அனுமதி வழங்கியிருக்கின்றது. அரசினிடமிருந்து நாம் அந்த பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவர் அவர்களே, பொதுவாக வெளி நாட்டிலேயிருந்து வரும் பயணிகள் தமிழகத்திற்கு வருவது கணிசமாகக் குறைந்து வருகின்றது. அதற்குக் காரணம் தமிழகத்தில் பல்வேறு வசதிகள் இல்லாததுதான். இப்போது இதுபோன்று ஹெலிகாப்டர் சர்வீஸ் எல்லாம் ஏற்படுத்தினால், நிச்சயமாக பயணிகள் எண்ணிக்கை அதிகமாக ஆகும். நிறைய பேர்கள் வருவார்கள். இதுபோன்ற ஹெலிகாப்டர் சர்வீஸ்கள் மதுரையிலே இருந்து கோடைக்கானல், மற்றும் சேலத்திலேயிருந்து ஏற்காடு, கோயம்புத்தூரிலேயிருந்து ஊட்டிக்குப் போக ஏற்படுத்தும் திட்டங்கள் அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-35)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவரவர்களே, இப்படிப்பட்ட பயணத் திட்டங்களை மனதிலே வைத்துத்தான் 'தேர்ட் லைன் ஃபீடர் சர்வீஸ்' என்ற சிறிய விமானப் போக்குவரத்துக்கான அனுமதியை மத்திய அரசிடத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அல்லது மத்திய அரசே அப்படிப்பட்ட பயணத்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது இருக்கும் பிரச்சினை, தமிழக அரசிடத்தில் அதற்குச் சொந்தமான ஹெலிகாப்டர் அதிகப் பயனில்லாமல் இருக்கிறது என்பதுதான். அதைப் பயன்படுத்தலாம் என்ற திட்டத்தைத்தான் மத்திய அரசு அனுமதி பெற்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. அ. மயில்சாமி:** தலைவரவர்களே, முதுமலை போன்ற பகுதிகளுக்கு எல்லாம் கோடை காலத்தில் ஏராளமானவர்கள் செல்கிறார்கள். ஆனால் சில நேரங்களில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக முதுமலைக்குப் பயணிகள் அனுமதிக்கப்படுவதில்லை. அதற்கு அடிப்படைக் காரணம் காட்டுச் செல்வம் அழிந்ததால்தான், மழை பெய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகையால் காட்டுச் செல்வத்தைக் காப்பாற்ற தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

செலுத்துகிற பணத்தைவிட அதிகப் பணம் மாநகராட்சிக்குக் கிடைக்கும். அந்தப் பணம் ஒரு ரூபாய் என்றால், மாநகராட்சி தருவது 10 காசு கூட வராது. அதைப்போலவே நீங்கள் நேரடியாக அந்த அமைப்புகளுக்குத் தருவீர்களேயானால் நாங்கள் தருகிற அந்த ஒரு ரூபாயும் நேரடியாக மாநகராட்சிக்கு வந்துவிடும்.

இன்னொன்று மாநகராட்சியிலே போஸ்டர்கள் ஒட்டுகிறபோது, ஒரே ஒரு சீட்டிலேதான் முத்திரை குத்துகிறார்கள். போஸ்டர் என்பது 20-30. 30-40, 60-40, 60-80 என்ற சைஸ்களில் இருக்கும் 4 பீட், 2 பீட், 6 பீட் என்றெல்லாம் போடுகிறோம். மாநகராட்சியிலே 6 பீட்—ஒரே ஒரு சீட்டிலே மட்டும் முத்திரை குத்துகிறார்கள். ஆனால் கருப்பு மையை அடிக்கிறவர்கள் அந்த ஒரு சீட்டைப் பார்த்துவிட்டு மற்றதை அழித்துவிடுகிறார்கள். இதையும் அதிகாரிகள் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற சட்டம் மாநகராட்சிக்கு வர வேண்டுமென்று சொல்கிறார்கள். சாலைகள் இருப்பது நேஷனல் ஹைவேஸில். நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றுகிற அதிகாரிகள் ஒரு சட்டத்தைக் கண்காணிக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு பக்கத்தைக் கண்காணிக்கிறார். மாநகராட்சி ஒரு பக்கத்தைக் கண்காணிக்கிறது. மூன்றும் தனித் தனியாக இருக்கிறது. இங்கே கொண்டு வந்திருக்கிற சட்டம், சென்னை நகரத்திற்குள்ளே இருக்கிற எல்லா இடங்களும்—அது கலெக்டருடைய இடமாக இருந்தாலும் சரி, ஹைவேஸினுடைய இடமாக இருந்தாலும் சரி, மாநகராட்சியினுடைய இடமாக இருந்தாலும் சரி—மூன்றையும் ஒருங்கிணைத்து ஒருவருடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தால்தான் தவறு நடக்காமல் இருக்கும். மாநகராட்சியிலே இந்த அதிகாரத்தைப்பற்றிக் கேட்கிறபோது, எனக்கு கோர்ட் ஆர்டர் வந்திருக்கிறது என்பார்கள், இல்லையென்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி கொடுத்துவிட்டார் என்பார்கள். இதைப் பார்க்கிற அதிகாரிகள் அந்த அதிகாரத்தைப் பார்த்துவிட்டு திரும்பிப் போய்விடுகிறார்கள். ஆகவே, இருக்கின்ற இடமெல்லாம் மாநகராட்சிக்குச் சொந்தமாக இருக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நேரடியாக மாநகராட்சிக்குக் கொண்டுவந்தால், இது ரொம்ப உதவியாக இருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் 1½ கோடி ரூபாய் ரெடியாக வைத்திருக்கிறோமென்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரை பணம் செலுத்துவதே இல்லை. பணம் செலுத்தினால் வாங்குவதற்கு



அரசாங்கம் தயாராக இருக்கும். ஆனால் கன்டிஷன் போட்டுக் கேட்கிறார்கள். எங்களைக் 'கன்டினியூ' பண்ண விடுங்கள்; இந்தப் பணத்தைத் தருகிறோமென்று கேட்கிறார்களே தவிர, நாங்கள் இதுவரை இதற்குண்டான பணத்தைக் கட்டுகிறோமென்று இன்னும் யாரும் சொல்லவில்லை.

**மிசா. ஆர். கணேசன் என்கிற ஆர். கணேசன் :** துணைத் தலைவர் அவர்களே, அதற்கு அதிகாரி திரு. சிரியாக் என்று எண்ணுகிறேன். அவர்களுக்கு அதற்குண்டான 'செக்' கொடுக்கப்பட்டு, அவர்கள் வேண்டாமென்று திருப்பி அனுப்பியதாகத் தெரிகிறது.

**திரு. ஜேப்பியார் :** அரசுக்குப் பணம் செலுத்துகிறவர்களை எந்த அரசும் வேண்டாமென்று சொல்லாது. "கன்டிஷன் போட்டு, எங்களை அனுமதித்து விடுங்கள், நாளை இத்தனை கோடி ரூபாய் தருகிறோம்" என்று கேட்டிருப்பார்கள் என்றுதான் கருதுகிறேன். இத்தனை காலம் வைத்திருக்கிற பணத்தைக் கட்டுகிறோமென்று யாரும் முன்வரவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அப்படி பணம் தந்து, வாங்க மறுத்த அதிகாரி யார் என்று தயவுசெய்து அவர்கள் ஆதாரத்தோடு சொன்னால், கண்டிப்பாக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமைகள் இத்தனை ஸ்குயர் பீட் வைக்க வேண்டுமென்று முதலிலே அனுமதி பெற்றிருக்கிறார்கள். அந்த அனுமதிக்குண்டான தொகையைக் கட்டிவிட்டு, அதற்கு மூன்று மடங்கு, நான்கு மடங்கு உயரத்திலே பெரிய பலகைகளை அடித்து பல லட்ச ரூபாய் அல்ல, பல கோடி ரூபாயை சம்பாதிக்கிறார்கள். அந்த மாதிரி சூழ்நிலை எதிர்காலத்திலே வந்துவிடக் கூடாது. திட்டங்கள் போடுகிறபோது இத்தனை ஸ்குயர் பீட் வைத்துக் கொள்ளலாம், அதற்கு மேலே வைக்கிறபோது அந்த உரிமத்தை ரத்து செய்து விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே விளம்பரத்தை வைப்பதற்கு முன்னாலே அந்த விளம்பரத்தின் டிசைனை முதலிலே பெற்றுக்கொண்டு அந்த 'டிசைன் அப்ரூவ்' ஆன பிறகு அந்த டிசைன்தான் வைக்க வேண்டுமென்று ஒரு கண்டிப்பான நிலையைக் கொண்டுவருவீர்களானால், அதில் ஆபாசம் என்பது சிறிது கூட வருவதற்கு ஏது இருக்காது. இது அரசுக்கு ஒரு பெரிய லாபமாக இருக்கும். நிறைய பேர் விளம்பரம் தானே, ஸ்குயர் பீட்டுக்கு இவ்வளவு ரூபாய் கொடுத்து விட்டோம் என்று சொல்லிவிட்டு, அங்கீகரிக்கப்படாத மெடிக்கல் கவுன்சில், அல்லது வெவ்வேறு மனித அமைப்புகள், அங்கீகரிக்கப்படாத அமைப்புகள் எல்லாம் பணம் கொடுத்துவிட்டால், விளம்பரத்திற்கு அனுமதி தந்துவிட்டால்,

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** சிரமம் பெறாமல் இலவசமாக சுற்றுலாத் துறைக்கு அதை வழங்கினால் நன்றாக இருக்கும் என்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அரசு கிரயம் தர வேண்டுமென்று விரும்பி னாலும், சுற்றுலாத் துறை ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறது. இது குறித்து முடிவு செய்யப்பட்ட பிறகு, மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி யடைகின்ற வகையில் நடைபெறும். அச்சப்படத் தேவையில்லை.

பருத்தி சாகுபடியாளர்கள்.

*90. வினா—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில், பருத்தி சாகுபடியாளர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்க, தனியாக வல்லுனர்களை நியமிக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) இம்மாவட்டத்தில் கூட்டுறவு பருத்தி அறவை ஆலைகள் தொடங்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) இல்லை.

(இ) ஆம்.

**திரு. அ. ப. சிவராமன் :** தென்னாற்காடு மாவட்டத்தில் குறிப்பாக பண்ருட்டி மற்றும் விழுப்புரம் போன்ற வட்டங்களில் 600-க்கு மேற்பட்ட கிராமங்களில் சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகளால் பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், கோடையில் மிக அதிக அளவில் பருத்தி உற்பத்தி செய்யப்படுவது இங்குதான். அத்துடன் பருத்தி மகசூலுடன்கூட 75 சதவிகிதம் மணிலா ஊடுபயிராகப் பயிரிடப்படுகிறது. மேலும் அங்கு பயிரிடப்படும் பருத்தியைப் பொறுத்த வரையிலும், அது நீண்ட நூல் இழை போன்றவற்றில் இந்தியாவிலேயே முதல் தரம் வாய்ந்தது என்று சொல்கிறார்கள். அங்கு ஏராளமாகப் பருத்தி சாகு படியாவதால் அதிக பருத்தி மகசூல் செய்யும் வகையில் உயர் ரக பருத்தி உற்பத்தி செய்வது பற்றி ஆராய்ச்சி செய்து பருத்தி சாகுபடியாளர்களுக்கு ஆலோசனை கூற இதற்காக ஒரு தனி அதிகாரியை நியமனம் செய்ய வேண்டு மென்று அங்குள்ள பருத்தி சாகுபடியாளர்கள் நீண்ட நாட்களாக அரசுக்குக் கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதோடுகூட நம்முடைய விவசாய இலாகா இயக்குநர் அவர்கள் அண்மையில் இம்மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோதுகூட, இதற்காக வேண்டி ஒரு வல்லுநர் குழு





அமைக்க வேண்டுமென்று சொல்லி கோரிக்கை தந்திருக்கிறோம். விவசாயத் துறையில் தற்போது ஏராளமான ஆட்களை, நல்ல விளைச்சலை ஏற்படுத்து வதற்காக 'டிரெயினிங் அன்ட் விசிட்' என்கிற முறையில் நியமித்திருக் கிறார்கள். அந்த வகையில் பருத்தி மகசூலை அதிகரிப்பதற்காக ஆலோ சனை நல்க, பருத்தி சாகுபடியில் அதிகமான எண்ணிக்கையில் ஈடுபட்டுள்ள வர்கள் இருக்கிற மாவட்டம் என்கிற வகையில் பருத்தி சாகுபடியாளர்களுக்கு விரைவில் வல்லுநர் குழு ஒன்று ஏற்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** ஒவ்வொரு பயிருக்கும் தனித் தனி யாக வல்லுநர்கள் அடங்கிய குழுவை அமைப்பது சிரமம். அந்தந்த மாவட்டத் தில் எந்தப் பயிர் அதிகமாகச் சாகுபடியாகிறதோ அதற்கேற்றவாறு வல்லு நர்கள் ஏற்கெனவே நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் ஆலோசனை வழங்கப் பட்டு வருகிறது. அந்த வகையில் இங்கேயும் பருத்தி உற்பத்தி பற்றி ஆலோ சனை வழங்குவார்கள்.

**திரு. அ. ப. சிவராமன் :** கோவையிலே மைய பருத்தி ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. அதன் கிளை ஒன்றையாவது தென்னாற்காடு மாவட்டத்தில் அமைக்க மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** ஆராயும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மூலக் கேள்வியின் (இ) பிரிவுக்கு பதி லளிக்கையில் அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன்னார்கள். ஆகவே, அப்படிப்பட்ட கூட்டுறவு அரவை ஆலைகள் தொடங்கும் கருத்துருவைப் பற்றிய விவரங்களை நாங்கள் அறிந்துகொள்ளலாமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** விழுப்புரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலமாக தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவி யோடு 8.5 லட்சம் செலவிலே ஒரு பருத்தி அரவை ஆலையைத் தொடங்க வேண்டுமென்ற வகையில் கூட்டுறவுப் பதிவாளரிடத்திலேயிருந்து தேசிய மேம் பாட்டுக் கழகத்திற்கு ஒரு கருத்துரு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. அ. ப. சிவராமன் :** கோடைப் பருவத்திலே பண்ருட்டி மற்றும் விழுப் புரம் தாலுக்காக்களிலே பயிர் செய்யப்படுகின்ற பருத்தி முழுவதையும், அரவை செய்வதற்காக, 11 மைல்களுக்கு அப்பால் இருக்கிற பல்வேறு இடங் களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அப்படி கஷ்டப் பட்டு எடுத்துச் சென்றும் அந்த விவசாயிகளுக்கு உரிய நியாயமான விலை கிடைப்பதில்லை. மேலும் போக்குவரத்துச் செலவும் அதிகமாகிறது. இதை யும் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே 'கூட்டுறவு அரவை ஆலை தோற்றுவிக்கப்படும்' என்று சொன்னதற்காக என்னுடைய

Sir, somehow, we have allowed the display of these boardings to go on for a long time. Whenever I saw such hoardings in the Thousand Lights area, I used to wonder whether the American Consulate near whose premises the hoardings were displayed would have allowed it because, normally, the Consulate would have seen to the removal of the hoardings by either moving the Court or complaining to the authorities. Now, I am glad that this Bill gives the Government enough powers to deal with people who put up such hoardings. I only wish to suggest that information should be given to the public—particularly, people like the hon. Member who spoke before me, who are interested in this—about the places where the display of hoardings is banned. If prior information is given properly. I am sure that people will not venture to do anything that is wrong and get penalised for that. Thank you.

(பிற்பகல் 1-10)

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விளம்பரம் என்பது நாட்டிலே தவிர்க்க முடியாத ஒன்று. மருந்துகளுக்குக் கூட தயாரிப்புக்கு ஆகும் செலவை விட விளம்பரத்திற்குக் கூடுதலாகச் செலவாகும் இந்த நாட்களில் விளம்பரம் தேவையான ஒன்றாக இருக்கிறது. ஆனால் அந்த விளம்பரத்தின் மூலமாக மக்களைக் கவர வேண்டும் என்பதற்கு முதலில் சிலையாகப் போட்டு, பிறகு படமாகப் போட்டு, பின்னர் பேனராக வந்து, இன்றைக்கு பேனர்களை திரீடி எபெக்ட் கொடுத்து போகிற வருகிறவர்களைக் கட்டிப் பிடிக்கும் காட்சி என்ற அளவிற்கு ஆகுமோ என்ற அளவிற்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவின் காரணமாக ஒரு சிலர் வருத்தப்படலாம். பெரும்பான்மையான மக்கள் அதிகம் வருத்தப்படமாட்டார்கள். காரணம் முப்பத்துக்கு பத்து பேனர் வைக்க வேண்டுமென்றால் பத்தாயிரம் ரூபாய் செலவாகும். அதற்கு 300 ரூபாய் வாடகை தருவார்கள். ஆண்டுக்கு 3,600 ரூபாய் வாடகை கிடைக்கும். ஆண்டுக்கு ஒரு முறை வழக்கமாக வீசும் புயலால் அது பாதிக்கப்படும். அதைச் சரி செய்ய வேண்டும். அதற்குள் அதில் பாதியை பலர் திருடிக் கொண்டு போவார்கள். ரோடிலே விழுந்துவிட்டால் அது என்னுடையது இல்லை என்று சொல்லும் கட்டாயம் வரும். அதனாலே அதிகம் பேர் வருத்தப்படமாட்டார்கள். இதனால் அதிக வருமானம் வரும் என்றும் சொல்லுவதற்கில்லை. விதிவிலக்கு அளிக்கலாம் என்று வரும்போது, காவல் துறை சில அறிவிப்புகளைச் செய்ய வேண்டி வரும், நெடுஞ்சாலைத் துறை சில



அறிவிப்புகளைச் செய்ய வேண்டி வரும். அரசியல் கட்சிகள் பல மாநாடுகள் நடத்தும்போது, விதிவிலக்கு அளிக்கப்படலாம். சென்னையில் கன்டோன்மென்ட் என்று ஒரு பகுதி இருக்கிறது. வாடகை கொடுக்க வேண்டும் என்றால், ஒரே இடத்திலே கார்ப்பரேஷனைச் சேர்ந்தவர்களும் கொடுப்பார்கள், நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்தவர்களும் கொடுப்பார்கள், கன்ட்டோன்மென்ட்டைச் சேர்ந்தவர்களும் கொடுப்பார்கள். இத்தனையையும் சமாளிக்க வேண்டும். ஓராண்டுக்குக் கிடைப்பது மறு ஆண்டுக்குக் கிடைக்காமல் போகும். ஆகவே வியாபார நோக்கில் இது பலருக்கு லாபமாக இருக்கும் என்று கருதுவதற்கில்லை, ஒரு சிலருக்கு அப்படி இருக்கக்கூடும். இந்தச் சட்டம் கன்ட்டோன்மென்ட் பகுதிக்கும் பாயுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இதிலே உள்ள குறைபாடுகள் என்று சொல்லுகிறபோது, ஆபாசம் பல்வேறு இடங்களில் இருக்கின்றது. கண்ணுக்குப் படுவதைத் தீர்த்துவிடுவது நல்லது. இருந்தாலும் ஆபாசம் வேறு வடிவங்களில் வந்து கொண்டிருக்கும் என்பதை யாரும் தவிர்க்க முடியாது.

உலக அளவிலே பார்க்கும்போது, விளம்பரத்திற்கு தொலைக்காட்சி மிக அதிக அளவில் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது. வெளிநாடுகளில் தொலைக்காட்சியில் விளம்பரங்கள் செய்கிறார்கள். வெளிநாட்டில் உள்ளவர்கள் இங்கே வந்து சென்னை நகரத்தில் உள்ள பேனர்களையும், போஸ்டர்களையும் படம் எடுத்து, அவர்கள் நாட்டிலே காட்டி எல்லோரும் வேடிக்கையாக அதைப் பார்த்துச் சிரிப்பது நடந்துகொண்டிருக்கிறது. சென்னை நகரம் அப்படிப்பட்ட விளம்பரத்தைக் கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. தொலைக்காட்சியிலேகூட விளம்பரங்கள் செய்யலாம். விளம்பரப் பலகைகளைத் தடை செய்யும்போது, அதற்கு வேறு வழிகளைச் செய்தாக வேண்டும். தொலைக்காட்சி மத்திய அரசின் பொறுப்பிலே இருக்கிறது. தொலைக்காட்சியில் இந்தி நுழைந்துகொண்டிருப்பதால், தொலைக்காட்சியைப் பார்ப்பது என்பதே தொல்லைக்காட்சி என்று கருதுகிறார்கள். மாநில அரசுகள்கூட தொலைக் காட்சிகளையும், வானொலிகளையும் நடத்த நேரம் வரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது, அவர் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியை படம் எடுக்க அனுமதி தர வேண்டும் என்று பிலிம் இன்ஸ்டியூட் மாணவர்கள் கேட்டார்கள். அண்ணா அவர்கள் அனுமதியளித்த பிறகு, அவர்கள் படம் எடுத்தார்கள். அந்தப் படத்தைப் பார்த்த அண்ணா அவர்கள், அதைப் போலவே நம்முடைய இன்ஸ்ட்டிடியூட்டின் மூலமாகப் படம் எடுத்து செய்தித்

[1985 ஜூலை 17

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ரூபாய் 30,000 செலவில் புதிய குளோரின் பிளாண்ட் ஒன்றுக்கு நகராட்சி திட்டம் வகுத்து, இந்த முறையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். சிக்கலுக்கு ஆளாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. அ. ப. சிவராமன் : முதலில் குளோரின் பிளாண்ட் அமைப்பது சம்பந்தமான டெண்டர் கோரப்பட்டது. டெண்டர் கோரப்பட்டதில் அதிகாரிகளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதன் காரணமாக தவறாக அதை ‘ கான்சல் ’ செய்து விட்டார்கள். அங்கே நகராட்சியில் உள்ள இன்சினியருக்கும், வடிகால்வாரிய இன்சினியருக்கும் இடையில் இதன் காரணமாகச் சிக்கல் ஏற்பட்டு, அது தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, நகராட்சியின் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க சிறப்பு கவனம் செலுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : சிக்கல் தீர்ந்து விட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

## Hearing Aids.

* 94. Q.—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :

(a) whether it is a fact that a survey was conducted by the Director of Medical Education to assess the incidence of deafness so as to supply hearing aids to deaf persons; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) 1984-85-ல் இலவச காதொலிக் கருவிகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்திட அரசு முடிவெடுத்தது. பயன் பெறுவோர் தேவையை உணர்ந்து Disability Grade பரிசோதனை முகாம்களின் மூலம் மருத்துவ பயன் பெறுவோர்களைத் தேர்ந்தெடுத்து, இக்கருவிகளை வழங்குவதென அரசு முடிவெடுத்தது. இப்பரிசோதனை முகாம்கள் சமூக நலத்துறையின் மூலம், மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர் மற்றும் மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் மருத்துவக் கல்வி இயக்குநர் ஆகியவர்களால் அனுப்பப்பட்ட மருத்துவ வல்லுநர் குழுவினால் நடத்தப்பட்டன.



1985 ஜூலை 12] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

கின்ற நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது. இப்படி நாம் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்துவிடுகிறோம். பாதிக்கப்படுபவர்கள் சட்டத்தின் துணையைத் தேடுகின்றார்கள். அவர்கள் சுப்ரீம் கோர்ட்வரை செல்வார்கள். இப்படி நம்முடைய நல்லெண்ணம் முழுவதையும் நடைமுறைப்படுத்த முடியாத நிலையும் ஏற்படுகிறது. இப்படி இன்னொரு புறம் இருப்பதைக் காட்டிலும் அவர்களுக்கும் அவகாசம் அளித்து இத்தனை நாட்களில் செய்யுங்கள் என்றுகூட செய்து, அவர்களையும் கலந்து பேசி இதிலே ஒரு வழிவகை காண இயலும் என்றால் அந்த முறையிலே அணுக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு மாநகராட்சி அளவிலே மட்டுமா அல்லது தமிழகம் முழுவதுமா என்றும், குறிப்பாக வீதிகளிலே பாதை ஓரங்களிலே, நெடுஞ்சாலைகளிலே இப்படி வைக்கப்படுகின்றனவா என்றும் பார்க்க வேண்டும். அது சில நேரங்களிலே ஓட்டுநர்களுக்கு இடையூறாக வந்துவிடுகின்றது. அதே நேரத்திலே விளம்பரத்திற்கு அது தேவையாகவும் இருக்கிறது. இவையெல்லாம் அடிப்படையாக வைத்து, முழுக்க எடுப்பதைக் காட்டிலும் படிப்படியாக அதை நிறைவேற்றமுடியுமா என்பதைக்கூட அரசு ஆலோசிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக தமிழகத்திற்கு வருகின்ற வெளிநாட்டார்கள், சுற்றுலாப் பயணிகள் இவர்களுக்கெல்லாம் இவை சில நேரங்களிலே தடையாக இருக்கின்றன. நீலமலையில் கூட, நடைபாதை போகின்ற இடங்களிலே எல்லாம் புதிய புதிய போர்டுகளை வைத்து, அங்கே உள்ள இயற்கைக் காட்சிகளை கண்ணுக்கு மறைக்கின்ற அளவுக்கு செயற்கைக் காட்சிகள் இருக்கின்ற நேரத்தில் அதைத் நடைமுறைப்படுத்தி, வரையறைப்படுத்தி அமைப்பதை நான் வரவேற்கிறேன். ஒன்றே ஒன்று. அவர்களைக் கலந்து பேச வேண்டும். இந்தத் தொழிலைச் சேர்ந்திருப்பவர்களை அழைத்துப் பேசி, அவர்களுக்கு அவகாசம் கொடுத்து அதை நிறைவேற்றலாம் என்பதை அரசு கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறி இதை வரவேற்று அமைகிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு 10 ஆம் தேதி சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்பட்டு, 11-ம் தேதி நிறைவேற்றப்பட்டு, 12-ஆம் தேதி இங்கே வந்திருக்கிறது. எங்கே நேரம் இருக்கிறது? நான் அவகாசம் எடுத்துக் கொண்டு படித்து திருத்தம் கொண்டுவர வாய்ப்பு எங்கே இருக்கிறது? ஏறத்தாழ எல்லா மசோதாக்களையும் அவசரக்கோலத்திலே கொண்டுவந்து 11 மணிக்குக் கொண்டு வந்து 11½ மணிக்கு முடித்துவிட்டு, 12 மணிக்குச் சட்டமாக ஆக்குகிறோம் என்று சொன்னால், நிச்சயமாக அரசினுடைய நோக்கம்

நிறைவேறாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையிலே, இந்த முடிவு மிகவும் பாதிக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல், அறிமுகப்படுத்திய அந்த நாளிலேயே, 10-ஆம் தேதி முதலே, அது சென்னையில் அமல்படுத்தப்படுகிறது. அரசாங்கம் விரும்புகின்ற இன்னொரு நாளில் அது தமிழகம் முழுவதும் வர இருக்கிறது. அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்கள், தனியாருக்குச் சொந்தமான இடங்கள் அல்லது இதனால் எத்தனை இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்ற விளம்பரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று பார்க்கும்போது, அதைப் பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கு செலக்ட் கமிட்டி ஒன்றை ஏன் போடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் அப்படி ஒரு திருத்தம் கொண்டுவர விரும்பினேன். இப்போது நான் திருத்தம் கொடுக்கவில்லை. இருந்தாலும் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இதன் விளைவுகள் பெருமளவுக்கு இருக்கும். பாதிப்புகள் ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டமுன் வடிவினுடைய நோக்கத்தை 100-க்கு 100 நான் ஆதரிக்கிறேன். ஆனால் அது நிறைவேறுமா? அதனால் பாதகமான விளைவுகள் கூடுதலாக வருமா என்பதைத்தான் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சட்டமுன்வடிவு 4-வது பிரிவு, 3-வது உட்பிரிவில் என்ன இருக்கிறது?

'If any question arises whether any hoarding was in existence on the date of the commencement of this Act in any local area, the burden of proving such question shall lie, on the person who claims to be a person interested in respect of such hoarding.'

ஒரு தனியார் இடத்திலே ஒரு விளம்பரப்பலகை இருந்ததாக நாம் சொல்கிறோம். அது அவர்களுக்குச் சொந்தம் என்று சொல்கிறோம். அவர்கள் "அது எங்கள் விளம்பரப் பலகை இல்லை" என்று சொல்கின்றார்கள். நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்? அந்த விளம்பரப்பலகையில் யாருக்கு அக்கறை இருக்கின்றதோ அவர்களையே அதை நிரூபிக்கும் பொறுப்பு சாரும் என்று சொல்கின்றீர்கள். அவர்கள் அது தங்களுடைய விளம்பரப்பலகை, அந்த இடத்தில் இல்லை என்று சொல்லும் போது, பிரச்சினை எழவில்லையா? அது இந்தச் சட்டத்திலே எப்படி உட்பட்டு வரும் என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று சொல்கிறேன். 5-வது பிரிவு



"For the vesting of the hoarding under section 4, every person interested shall be entitled to receive such amount as may be determined in the manner hereinafter set out, that is to say—

(a) where the amount can be fixed by agreement, it shall be determined in accordance with such agreement;"

ஒப்பந்தம் செய்துகொண்டு முடிவு செய்யலாம் என்று சொல்கின்றார்கள். யார் யாரிடம் ஒப்பந்தம் செய்துகொள்வது? தவறுகள் நடப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதுதான் என்னுடைய கருத்து. அரசாங்கத்தின்

(பிற்பகல் 1-20)

நோக்கத்தை நான் சந்தேகிக்கவில்லை. விளைவுகள் எப்படி இருக்குமென்றால், ஒப்பந்தத்தின் மூலம் நஷ்ட ஈட்டுத் தொகையை நிர்ணயிக்கலாம் என்றால், அங்கே தவறுகளுக்கு இடம் வருமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். டெபுடி கலெக்டர் அந்தஸ்து உள்ள ஒருவரை ஆர்பிட்ரேட்டராக நியமித்திருக்கிறார்கள். அதிலும் தவறுகள் வரலாம். அப்படி என்றால் எப்படி நிர்ணயிப்பது என்று கேட்கலாம். செலக்ட் கமிட்டி போட்டு, அங்கே விவாதித்தால் எப்படிச் செய்யலாம் என்பதை அங்கே சொல்ல முடியும்.

அடுத்து, 5-ஆம் பிரிவில்

(c) the arbitrator shall, after hearing the dispute make an award determining the amount which appears to him just and reasonable and also specifying the person or persons to whom the amount shall be paid and in making the award he shall have regard to the circumstances of each case, and the provisions of the Schedule so far as it is applicable.

இது தொகை எவ்வளவு என்று நிர்ணயிப்பதற்கு இருக்கிறது. யாருக்குச் சொந்தம் என்று நிர்ணயிக்கும் அதிகாரத்தை எப்படிக் கொடுக்கலாம்? தொகை எவ்வளவு கொடுக்கலாம் என்று சொல்வதற்காக ஆர்பிட்ரேட்டர் போட்டிருக்கிறார்கள். விளம்பரப் பலகை யாருக்குச் சொந்தம் என்று அவர் சொல்வது பொருத்தமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். யாருக்குச் சொந்தம் என்று ஆர்பிட்ரேட்டர் நிர்ணயிப்பது சரியல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து 6-ஆம் பிரிவு

"Where any person aggrieved by an award has preferred an appeal under section 8, eighty per cent of the amount as determined by the award of the arbitrator shall be paid within a period

of three months from the date of the award, and the balance amount, if any, due in accordance with the order of the Tribunal under section 8 shall be paid within a period of three months from the date of such order.

வழக்குத் தொடர்ந்து, 3 மாதத்திற்குள்ளாக யார் என்று முடிவு செய்யாமல், தொகையைக் கொடுத்தால் பின்னர் அதனால் விளைவுகள் ஏற்பட வழிவகைகள் இருக்கின்றன. இந்தச் சட்டச் சிக்கல்களை எல்லாம் சாங்கோபாங்கமாகப் பேசுவதற்கு அவகாசம் கொடுக்க வேண்டும். அதற்காக இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். இந்த சந்தேகங்கள் எல்லாம், அரை மணி நேரம் பார்த்ததில் ஏற்பட்ட சந்தேகங்கள். முழுமையாகப் பார்த்தால், பல சந்தேகங்கள் வரலாம். பல இடங்களில் பாதை ஓரங்களில், காடு மேடுகளில் விளம்பரப் பலகைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் எங்களுக்குச் சொந்தம் என்று சொல்லப் போகிறீர்கள். நோக்கம் நல்லதாக இருந்தாலும், விளைவுகள் பாதகமாக இருக்கும். திடீரென்று இன்றைக்கு ஏன் இதைச் செய்ய வேண்டும்? ஏதாவது எமர்ஜென்சி வந்துவிட்டதா? ஆறு மாதம் கழித்து வந்தால், ஏதாவது ஆபத்து வந்துவிடுமா? எனவே இதைப்பற்றி நிதானமாக அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, விளம்பரப் பலகைகளை கையகப்படுத்தும் சட்டமுன்வடிவை நாங்கள் தயாரித்து, மத்திய அரசினுடைய அனுமதிக்காக அனுப்பினோம். மத்திய அரசின் எல்லாத் துறைகளும் அதைப் பரிசீலித்து, இதில் ஒரு திருத்தம் மட்டும் செய்ய வேண்டுமென்று எங்களுக்குச் சொன்னார்கள். நாங்கள் முதலிலே போட்ட வரைவின்படி அரசு குறிப்பிடும் தேதியிலிருந்து இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் என்று இருந்தது. ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசு, எந்தத் தேதியில் சட்டமுன்வடிவை சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்துகிறார்களோ அந்தத் தேதியிலிருந்து இது அமுலுக்கு வர வேண்டுமென்று ஆலோசனையைச் சொல்லி, அப்படிப் போட வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அதனால்தான் அப்படிப் போடப்பட்டுள்ளது. வேறு காரணமல்ல. தமிழக சட்டத் துறையும் இதைப் பரிசீலித்தது. மத்திய அரசின் சட்டத் துறையும் இதைப் பரிசீலித்தது. மத்திய அரசில் இருக்கிற பல்வேறு துறைகள்—உள் துறை, சட்டத் துறை, விளம்பரத் துறை போன்ற பல்வேறு துறைகள் இதைப் பரிசீலித்து, இறுதியாகச் சொல்லியிருப்பது, இது நல்ல அருமையான சட்டம், தமிழ் நாடு அரசு



இதைக் கொண்டுவந்திருக்கிறது; இதே போன்ற சட்டத்தை மற்ற மாநிலங்களும் கொண்டு வர வேண்டுமென்று சொல்லப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மத்திய அரசைக் காட்டி பயமுறுத்துவது சரியல்ல. மத்திய அரசைக் காட்டி பயமுறுத்த வேண்டிய அவசியமில்லை. சில விதி முறைகளுக்காக மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டியிருக்கலாம். அங்கே உள்ள சில அதிகாரிகள் திருப்திப்பட்டிருக்கலாம். அதே போன்று இங்கே உள்ள அதிகாரிகள் திருப்திப்பட்டிருக்கலாம். சட்டத்தை நிறைவேற்றிடும் எங்களுக்கும் ஒரு பொறுப்பு இருக்கிறது. நாங்கள் அதைப் புரிந்துகொண்டு திருப்திப்பட வேண்டும். யாரோ டெல்லியில் ஒருவர் திருப்திப்படுகிறார், இங்கே ஒருவர் திருப்திப்படுகிறார், அதற்கு ஆமாம்சாமி போடுங்கள் என்றால், அந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

(பிற்பகல் 1-25)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞர். நீண்ட நாட்களாக எனக்கும் அவருக்கும் தொடர்பு உண்டு. அவருடைய ஆற்றல்பற்றி எனக்குத் தெரியும். 1957 ஆம் ஆண்டிலிருந்து சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த காலத்திலிருந்து அவர்களை நான் தெரிந்து வைத்திருக்கிறேன். நல்ல திறமையானவர். நான் மத்திய அரசைக் காட்டி பயமுறுத்தவில்லை. மத்திய அரசு அனுமதியளித்திருக்கிறது. மத்திய அரசு அனுமதியளித்த ஒன்றுக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டுமென்றும் நான் சொல்லவில்லை. மத்திய அரசு அனுமதியளித்திருக்கிறது, ஆனால் ஒரு விதி முறையைச் சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். அதனால்தான் அவர்கள் சொல்லியபடி, '10 ஆம் தேதியிலிருந்து' என்று நாம் போட்டிருக்கிறோம்.

விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் அவர்கள் வேண்டாதவர்களை ஒழித்து விட்டு வேண்டியவர்களுக்கு அனுமதி கொடுத்து விடுவோம் என்று சந்தேகிப்பதாக வலியுறுத்திப் பேசினார். நான் தலைவர் அவர்கள் மூலமாக பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இச்சட்டத்தின் மூலம் யாரையும் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்ப்பதாகவோ, பழி வாங்குவதாகவோ, சலுகை அளிப்பதாகவோ இல்லை என்று நான் உறுதியளிக்கிறேன்.

விதிவிலக்குப் பற்றியும் பேசினார்கள். இந்த சபைக்கு நான் உறுதியளிக்கிறேன். அந்த சபையிலும் உறுதியளித்திருக்கிறேன். ஏஜென்சியை நியமிக்கப் போகிறோம் என்றால் எந்த ஒரு தனிப்பட்டவர்களுக்கும் ஏஜென்சி கிடையாது. அதனை மாநகராட்சிக்குத்தான் கொடுக்கப் போகிறோம் என்று உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே வருமானம் பூராவும் மாநகராட்சிக்குத்தான் போகும். தனிப்பட்டவர்கள் யாருக்கும் சலுகைகள் அளிக்கப்பட மாட்டாது. மிக உறுதியாக இதை நான் சொல்கிறேன். அரசும் இதில் உறுதியாக இருக்கிறது. வேண்டாதவர்கள் வேண்டியவர்கள் என்று பார்க்கின்ற நோக்கம் இந்த அரசுக்குக் கிடையாது. அப்படிப்பட்ட தவறான எண்ணம் யாருக்காவது இருந்தால், தயவுசெய்து திருத்திக்கொள்ள வேண்டும்.

1—7—1981-லிருந்து இன்றுவரை அரசுக்கு 1¼ கோடி ரூபாய் வருமானம் பாக்கிஇருக்கிறது என்று சொன்னார்கள். மூன்று வருடத்திற்கு 1¼ கோடி ரூபாய் வருவாய் வரும் அளவுக்கு இருக்கிறது என்றால், இது எப்படிப்பட்ட தொழில் என்று நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் இந்த அளவுக்குப் பண வருவாய் தருகிற தொழில் இது என்று இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு பணம் வருமா என்பதுபற்றி எனக்குத் தெரியாது.

போஸ்டர்கள், சுவரொட்டிகள்பற்றி எல்லாம் பேசினார்கள். அதுபற்றி மாண்புமிகு விளம்பரத் துறையைப் பார்க்கின்ற அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வகையில் ஆபாச போஸ்டர்களை ஒழிக்கும் வகையில் சட்டமுன்வடிவு வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஸ்களை தேசியமயமாக்குபவர்கள் இன்றைக்கு இதிலே ஈடுபட்டிருக்கிறீர்களே என்றும் சொன்னார்கள். அவைகளும் காலப் போக்கில் செய்யப்படும். அதிலே எவ்வித மன மாற்றமும் கிடையாது. நிதி ஆதாரத்திற்கு ஏற்றாற்போல் படிப்படியாகச் செய்யப்படும். சினிமா போஸ்டர்களில் இருக்கின்ற ஆபாசம்பற்றிச் சொன்னார்கள். அதில் மட்டுமல்ல, எங்கும் ஆபாசம் இருக்கிறது. ஆனால் நம் கண்ணுக்குத் தெரிந்தவைகளை எல்லாம் தடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆபாசம் எந்த வடிவில் வந்தாலும், அதைத் தடுத்து நிறுத்த இந்த அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் பேசும்போது, அண்ணா மேம்பாலத்திலிருந்து அருகில் இரண்டு குதிரைசிலைகள் நிறுத்தப்பட்டிருப்பது பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதற்கும் இச்சட்டமுன்வடிவிற்கும் தொடர்



பில்லையென்றாலும் கூட, பிரச்சினை எழுப்பப்பட்டதால் சொல்கிறேன். நான் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபோது ஒரு பத்திரிகையில் வந்த ஒரு படத்தைப் பார்த்தேன். குதிரை ஒன்றில் சிறுவன் உட்கார்ந்துகொண்டு அதன் கடிவாளத்தை அவன் இழுத்துப் பிடிப்பது மாதிரி படம் வந்திருந்தது. அதை வைத்து இப்படி ஒரு சிலை செய்ய முடியுமா என்று நான் பொதுப் பணித்துறை அதிகாரிகளைப் பார்த்துக் கேட்டேன். அவர்கள் அதேமாதிரி மாதிரி ஒன்றைச் செய்து காண்பித்தார்கள். பிறகு அதேமாதிரி வெண்கலத்தில் உண்டாக்க 50 ஆயிரம் ரூபாய் ஆகும் என்றும் சொன்னார்கள். அந்த இடத்தில் வைப்பதற்காகத்தான் ஒன்றைச் செய்யுங்கள் என்று சொன்னேன். அப்படிச் செய்து ஒரு பக்கத்தில் வைத்தவுடன், இன்னொரு பக்கத்திலும் வைத்தால் நன்றாக இருக்கும் என்று அன்றைக்கு இருந்த முதலமைச்சர் சொன்னார்கள். அதனால் இன்னொரு பக்கத்திலும் வைத்தோம். ஆகவே இதற்கும் குதிரைப் பந்தயத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. பிறகு சட்டமுன்வடிவு திருத்தப்பட்டது. பிறகு தடை விதிக்கப்பட்டு வேறுவிதமாக அது ஆனது. ஆனால் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த எனக்கே தெரியாத அளவில், மறுநாள் பத்திரிகையில் இது சம்பந்தமான ஒரு விளம்

(பிற்பகல் 1-30)

பரத்தைப் பார்த்தேன். அப்படி அந்த குதிரை சிலைகளுக்குக் கீழே இப்படிப் போட்டிருக்கிறார்கள் என்ற செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படும் என்று அறிவித்த அந்தத் தேதிக்கும், இந்தச் சிலைகள் செய்த தேதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது உண்மைக்குப் புறம்பான செய்தி என்று ஒப்புக்கொள்கிறேன். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவிற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இந்தக் கருத்தை அப்போது அமைச்சரவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோதே சொல்லியிருந்திருக்கிறார்களா, அது எங்காவது பதிவாகி இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கருத்து வெளியிட ஒன்றுமில்லை. திடீரென்று ஒரு நாள் அந்தப் பக்கம் போனபோது, அந்தச் சிலைகளுக்குக் கீழே இருந்த குறிப்பைப் பார்த்தேன். எப்படி வைக்கப்பட்டது என்று கேட்டேன். முதலமைச்சர்தான் அப்படி எழுதி வைக்கச் சொன்னார் என்று அப்போது தலைமைப் பொறியாளராக இருந்தவர் தெரிவித்தார். அவர் சொன்னார் என்றால், அதை அப்படியே விட்டுவிடுங்கள் என்று கூறிவிட்டேன். அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கும்

எனக்கும் ஒரு பத்திரிகைச் சர்ச்சை வந்தபோது, 'அண்ணா' பத்திரிகையில் அதைப்பற்றி ஒரு கடிதம் கூட நான் எழுதியிருக்கிறேன். அதிகாரி சொன்னதற்கு எந்தவிதக் குறிப்பும் கிடையாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அப்போதே பொதுப்பணித் துறை அதிகாரிகளை விசாரித்து, அவர்கள் வாய்மொழியாகச் சொல்லியிருப்பவைகள், ரிக்கார்டுபூர்வமாக இல்லை என்று அமைச்சர் ஒத்துக்கொள்கிறார். அப்படி இல்லாத ஒன்றை, இப்போது பதிவாகக்கூடிய முறையில் இந்த அவையில் குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டிய அவசியம் அமைச்சருக்கு என்ன வந்தது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உண்மைகளைச் சொன்னேன். குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. உறுப்பினர் விபரம் கேட்டார். உண்மையைச் சொன்னேன். அதற்காக வருத்தப்படத் தேவையில்லை. நடந்த உண்மை அது. ஆகவே சட்டத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. இதைத் தனிப்பட்ட முறையில் பேசிக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லா இடங்களிலும் விளம்பரப் பலகைகள் வைக்க, அதிகாரத்தை ஒரே அதிகாரிக்கே கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு.. ஜேப்பியார் தெரிவித்தார். அதற்காக ஒரு குழு நியமிக்க இருக்கிறோம். அந்தக் குழுதான் எந்தெந்த இடங்களில் போஸ்டர்களை வைக்க வேண்டும் என்று முடிவு செய்யும். பணம் வசூலிப்பது, வாடகை வசூலிப்பது போன்ற அதிகாரங்கள் மாநகராட்சியிடம்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி தாரா செரியன் அவர்கள் இந்தச் சட்டத்தை வரவேற்றுப் பேசினார்கள். அவர்கள் பேசும்போது, சுவரொட்டி ஒட்டுவதற்குக் கூட விதிமுறைகள் வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக தனி விதிமுறைகள் கொண்டுவரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். விதிவிலக்குக் கொடுத்திருப்பதால் misuse செய்வார்கள் என்று சொன்னார்கள். நான் தெரிவிப்பது,

I assure the hon. Member that we will not misuse the exceptions given. We are going to entrust it to the Corporation and not to any private person. I assure the hon. Member that there will be no misuse.





இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும்போது, கன்டோன்மென்ட் பகுதிகளுக்கும் உடனே வந்துவிடுமா, அல்லது கொஞ்ச காலங்கழித்து வருமா என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் கேட்டார்கள். தமிழ்நாடு முழுவதற்கும் கொண்டு வரப்படுகிற இந்தச் சட்டம், கன்டோன்மென்ட் உள்பட எல்லாப் பகுதிகளுக்கும் பொருந்தும். இது சாதாரண சட்டம். படிப்படியாகச் செய்வதற்கு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, செலக்ட் கமிட்டி போடலாம் என்று சொன்னார்கள். ஏன் அவசரம் அவசரமாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று அவருக்கே உரித்தான அறிவுத்திறனோடு சொன்னார்கள். அவசரப்படவில்லை. எந்தவிதமான குறைகளும் இந்தச் சட்டமுன்வடிவில் இல்லை. துருவித் துருவித் தேடிப் பார்த்துத்தான் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

ஹோர்டிங்குகளை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. அவ்வளவுதான். ஆகவே இதற்கு செலக்ட் கமிட்டி தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். யாரையும் அழிக்க வேண்டுமென்ற கெட்ட நோக்கம் எதுவும் கிடையாது. பொது நோக்கோடு கொண்டு வரப்பட்டதுதான், இந்தச் சட்ட முன்வடிவு.

டாக்டர் இரா. சனார்த்தனம்: கன்டோன்மென்ட் பகுதிகளில் ரயில்வே வருகிறது. மின்சார ரயில்கள் அங்கே செல்கின்றன. அங்கே, கார்ப்பரேஷனுக்கு முன்புள்ள பகுதிகளில் ஹோர்டிங்குகள் வைக்கிறார்கள். ரயில்வே டிபார்ட்மென்ட் நமக்கு வழக்கமாக ஒத்துழைக்காததைப் போல, இதிலும் ஏதாவது தடை செய்வார்களா ? அதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தடைகள் இருக்காது என்று நம்புகிறேன். அப்படியே தடைகள் வந்தாலும் அவைகளைப்பற்றி பேச்சு வார்த்தை நடத்தி, அனுமதி பெறப்படும்.

(பிற்பகல் 1·35)

மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பத்திலேயே மைய அரசுக்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டு, அவர்களுடைய ஒப்புதலோடு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்கிறபோது, தேதியையும் அவர்களிடம் சொல்லி, இந்த அவையிலே அறிமுகப்படுத்தப்பட்ட

தேதியிலிருந்து அமுலுக்கு வரலாம் என்று சொன்னதாகச் சொன்னார்கள். ஆனால் இங்கே இந்தச் சட்ட முன்வடிவு சென்னையில் மட்டும்தான் 10—7—85 லிருந்து வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிற பகுதிகளுக்கு அரசு தெரிவிக்கின்ற நேரத்திலே வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட குறிப்பு ஏதும் மத்திய அரசிடமிருந்து வந்ததா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தை அமல்படுத்தும்போது முதலில் எந்த இடத்திற்கு சட்டம் வருகிறதோ அந்தத் தேதியைச் சொல்லுங்கள், சொல்லி அதிலிருந்து அறிமுகப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அவ்வாறு அறிமுகப் படுத்தும்போது பத்தாம் தேதி அறிமுகப்படுத்துவதாக பேரவையிலே அனுமதி அளித்தார்கள். பத்தாம் தேதி என்று அந்தச் சட்டத்திலே குறிப்பிட்டோம். இப்போது சென்னை மாநகராட்சியில் மட்டும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவிருக்கிற காரணத்தால், அதை மட்டும் இப்போது சொன்னால் போதும் என்றுதான் விட்டிருக்கிறோமே தவிர, வேறல்ல. பிற தேதிகளைப்பற்றிச் சொல்வதற்கு சட்டத்திலே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 27 வரை அட்டவணை ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985-ஆம் ஆண்டு, தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1985) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) 1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1985).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மதுரை மாநகராட்சிக்குத் தேர்தல் கடைசியாக 1978-ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் ஆறு ஆண்டு பதவிக் காலம் 29—7—1984 நண்பகலுடன் முடிவடைந்தது. மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் தேர்தல்கள் நடத்துவதற்குமுன், வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டை வழங்க வேண்டுமென்று அரசு தீர்மானித்ததால், 29—7—1984 அன்று மதுரை மாநகராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைந்ததும், மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 48-அ பிரிவின்படி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மதுரை மாநகராட்சியின் மேயர் பணிகளைச் செய்ய தனி

@ ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஜூலை 12

அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனி அதிகாரியாக நியமிக்கப்பட்ட நாளிலிருந்து அதாவது 29—7—1984-ஆம் நாள் நண்பகலிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் மதுரை மாநகராட்சிக்குத் தேர்தல் நடத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 62-அ பிரிவின் கீழ் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஓராண்டு காலமும் 29—7—1985 நண்பகலுடன் முடிவடைய இருக்கிறது.

ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் தேர்தல்களை முதல் கட்டமாகவும், மாநகராட்சித் தேர்தல்களை இரண்டாம் கட்டமாகவும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஊராட்சி மற்றும் நகராட்சித் தேர்தல்களை 9—9—1985-இல் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. அக்டோபர் மாதம் ஊராட்சி, நகராட்சித் தேர்தல்கள் நடைபெற்று முடிந்த பிறகு, மாநகராட்சித் தேர்தல்களை நடத்துவது குறித்து முடிவு செய்யப்படும். எல்லா மாநகராட்சிகளிலும் 1—1—1984 அன்று 18 வயது அடைந்தவர்கள் பெயர்களை வீடு வீடாகச் சென்று கணக்கெடுத்து, புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் 1—1—1985 அன்று 18 வயது அடைந்தவர்கள் பெயர்களையும் சேர்த்து புதிதாக அச்சடிக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு மாநகராட்சித் தேர்தல்கள் நடத்தலாம் என்று கருதுகிறோம். இவ்வாறு வாக்காளர் பட்டியல் திருத்தி அமைத்தபின் தேர்தல் நடத்த மேலும் ஆறு மாத காலமாகலாம். ஆகவே, ஓராண்டிற்குள் அதாவது 29—7—1985-க்குள், மதுரை மாநகராட்சித் தேர்தல் நடத்தப்படுவதற்கான கால அளவை மேலும் ஆறு மாத காலம் நீட்டித்து, அதாவது 29—1—1986-க்குள் தேர்தலை நடத்த வேண்டுமென்று சட்டத் திருத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மதுரை மாநகராட்சித் தேர்தல்களை 29—1—1986-க்குள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய கொண்டு வரப்படும் இச்சட்ட முன்வடிவை மேலவை ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.



1985 ஜூலை 12] [மேலவைத் துணைத் தலைவர்]

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985-ஆம் ஆண்டு மதுரை, மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 1-40)

**(3) 1985-ஆம் ஆண்டு தமிழ் நாடு நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1985)**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு, நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் இம் மாநகராட்சி அலுவலர்களை நகராட்சி ஏதேனும் ஒன்றின் பணிக்கோ அல்லது அந்த நகராட்சிகளின் அலுவலர்களை இம் மாநகராட்சிப் பணிக்கோ மாற்றம் செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இம் மாநகராட்சியின் அலுவலர்களை மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் பணிக்கு

@ 399—403 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாற்றம் செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. மதுரை மாநகராட்சி சட்டத்தில் அம்மாநகராட்சி அலுவலர்களை, சென்னை மாநகராட்சி அல்லது நகராட்சி ஏதாவது ஒன்றின் பணிக்கு மாற்றம் செய்வதற்கும் அதேபோன்று சென்னை மாநகராட்சி அல்லது நகராட்சி அலுவலர்களை இம் மாநகராட்சிப் பணிக்கு மாற்றம் செய்வதற்கும் மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இம்மாநகராட்சி அலுவலர்கள் எவரையும் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பணிக்கு மாற்றம் செய்வதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. எனினும் கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தில் இம் மாநகராட்சி அலுவலர்களை சென்னை மாநகராட்சி அல்லது மதுரை மாநகராட்சி அல்லது நகராட்சிப் பணிக்கு மாற்றம் செய்வதற்கும் அதேபோன்று சென்னை மாநகராட்சியும் அல்லது மதுரை மாநகராட்சியும் அல்லது நகராட்சி ஏதாவது ஒன்றின் அலுவலர்களை இம் மாநகராட்சிப் பணிக்கு மாற்றம் செய்வதற்கும் மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிச் சட்டத்தில் ஒரு நகராட்சி அலுவலர்களை வேறு ஒரு நகராட்சிப் பணிக்கு சம்பந்தப்பட்ட நகராட்சிகளைக் கலந்து ஆலோசித்து பின்பு மாற்றம் செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு நகராட்சி அலுவலர்களை ஒரு மாநகராட்சிப் பணிக்கு மாற்றம் செய்வதற்கோ, அதேபோல் ஒரு மாநகராட்சி அலுவலர்களை ஒரு நகராட்சிப் பணிக்கு மாற்றம் செய்வதற்கோ மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. இம்மாநிலத்தில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றில் நிர்வாகத்தை மேம்படுத்தவும் அவை பொது மக்களுக்கு மேலும் சிறந்த முறையில் பணியாற்றவும் ஒரு மாநகராட்சியில் வேலையிலுள்ளவர்களை, சில மாநகராட்சிகள், நகராட்சிகள் ஒவ்வொன்றுக்கும், நகராட்சிப் பணியில் வேலையிலுள்ளவர்களை தற்போது இருந்துவரும் மற்றும் புதிதாக அமைக்கப்படக்கூடிய மாநகராட்சி மற்றும் பல நகராட்சிகளுக்கும் மாற்றம் செய்வதற்கு ஆளுகைக்கு உட்பட வேண்டுமென்று அரசு கருதுகிறது. எனவே இந்த நோக்கத்தை எய்தும் பொருட்டு சென்னை மாநகராட்சி சட்டம், மதுரை மாநகராட்சி சட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், மாவட்ட நகராட்சிகள் சட்டம் ஆகியவற்றை தக்கவாறு திருத்த அரசு முடிவு செய்துள்ளது. எனவே மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி அலுவலர்களை மற்றொரு நகராட்சி அல்லது மாநகராட்சிக்கு மாற்றம் செய்ய வகை செய்து கொண்டுவரப்படும் சட்ட முன்வடிவை மேலவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

இந்தச் சட்ட முன்வடிவுபற்றிப் பேசுவதற்கு நான்கு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் பேச வேண்டும். இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேறிய பிறகு, ஆதித் திராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்பட்டோர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு இருக்கிறது. ஆகவே பேசுகிற உறுப்பினர் ஐந்து நிமிடங்களுக்கு மேற்படாமல் பேசினால், விரைவில் முடிப்பதற்கு அது ஏதுவாக இருக்கும்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி மற்றும் பல்வேறு மாநகராட்சிகளினுடைய ஊழியர்களை மாற்றுவதற்குரிய ஒரு சட்ட முன்வடிவை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிமுகம் செய்து அதுபற்றி சிலவற்றை இங்கே சொல்வதற்கு எனக்கு வாய்ப்பினைத் தந்திருக்கிறார்கள். பொதுவாக நான் ஒரு வேண்டுகோளை நம்முடைய அவை முன்னவர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும், அவைத் தலைவர் அவர்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டங்கள், மசோதாக்கள் எல்லாம் இங்கே வாதத்திற்கு வருவதற்கு முன்னதாகவே நேரமாகிவிட்டது, அதை முடித்து விடவேண்டும், ஆகவே அவசரமாக நீங்கள் ஐந்து நிமிடங்கள் பேசுங்கள் என்று சொல்வது வழக்கமாக இருக்கிறது. சட்ட மன்றம் நடைபெறுகின்ற நாட்களிலே, பேரவை நடைபெறுகின்ற நாட்களிலே பாதி நாட்கள்கூட மேலவை நடைபெறுவதில்லை. மேலவை நடைபெறுகின்ற நாட்களிலே சில நாட்களிலே கேள்வி நேரம் வெட்டப்படுகிறது. ஆகவே இங்கே நாங்கள் எதற்கு வந்திருக்கிறோமோ, எவ்வளவு கடுமையாக உழைத்து நாங்கள் எங்களுடைய பொது மக்களுக்கு அல்லது எங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறோமோ அதைச் செய்வதற்குரிய வாய்ப்பு மறைமுகமாக பறிக்கப்படுவதாகவே என்னைப் போன்றவர்கள் கருதுவதற்கு வாய்பாக இருக்கிறது. சட்டமன்ற பேரவை மாதக் கணக்கிலே எத்தனை நாட்கள் நடைபெறுகின்றது? மேலவை ஒருநாள் கூட...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். சட்ட முன்வடிவின்மீது பேசலாம். அவையினுடைய உறுப்பினருக்கு நேரம் மறுக்கப்படுகிறது, பேச முடியவில்லை என்பது தலைவருடைய அறையிலே அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வந்தால், அங்கு பேசிக் கூட நாட்கள் வைக்கலாம். எவ்வளவு காலம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதற்குள்தான் நாம் நிர்ணயிக்க முடியுமே தவிர, இதை வேறு பேச ஆரம்பித்தால் இதற்கு வேறு நாழியாகும். உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது நான் சொல்லும்படியான ஒரு கடமை வருகிறது. அந்தக் கடமை வருகிறபோது, நான் உறுப்பினருக்காகச் சொல்வதாக அதை உறுப்பினர் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-45)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும். தாங்களே குறிப்பிட்டீர்கள். எனவேதான் நான் பேசும்போது அதைத் திருப்பிக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு யாரும் பேசுவது கூடாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு லெக்சர் அடிக்கவே அனுமதிக்கிறீர்கள். எனவேதான் இதைக் கோடிட்டுக் காட்ட வேண்டியிருக்கிறது.

தற்போது மாநகராட்சியில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் உள்ள பணியாளர்களை வேறு மாநகராட்சிகளுக்கோ, நகராட்சிகளுக்கோ மாற்றம் செய்யும் திட்டத்திற்கு உறுதுணையாக இந்தச் சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நான் இந்தச் சட்ட முன்வடிவை வன்மையாகக் கண்டிக்கிறேன், எதிர்க்கிறேன். என்ன காரணம் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கு முன்னாலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சிறந்த நிர்வாகத் திறமை பெற்றவர். நிர்வாகத்தில் உள்ள நல்ல நுணுக்கங்களையெல்லாம் அறிந்தவர். நுணுக்கமான அறிவு பெற்றவர்கள். நீண்டகாலமாக உள்ளாட்சி மன்றத்தில் தலைவராகப் பதவி வகித்ததோடு மட்டுமல்லாமல் அமைச்சர்வரை ஏற்கனவே பல பொறுப்புகளை வகித்தவர் அவர்கள் இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்புக்கு வந்த பிறகு, செய்யக் கூடிய சிலபல செயல்கள் அந்தத் துறையினை மேலும் ஆக்க பூர்வமாகவும் வேகமாகவும் திறம்பட செயல்படக்கூடிய முறையில் அமையும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு. அந்த அடிப்படையில்தான் இப்படிச் செய்யலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



கருதியிருப்பார்களோ என்றுகூட நான் நம்புகிறேன். இன்றையதினம உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றுகிற பணியாளர்களையும் மற்றவர்களையும் வேறு உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றுவதற்கு உரிய வகையில் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது உள்ளாட்சித் துறையோடு சம்பந்தப்பட்டிருப்பதால், இன்னொரு கருத்தையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏற்கெனவே உள்ளாட்சித் துறையில் பணியாற்றிக்கொண்டிருந்த ஆசிரியர்களெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு கல்வித் துறையிடம் ஒப்படைக்கப்பட்ட ஆசிரியர்களை இன்றைக்கு மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களிடமே ஒப்படைப்பதாக இருக்கிறார்கள். இந்த எண்ணமே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக வந்த பிறகுதான் உருவாகியிருக்கிறது. அவர்தான் அதற்கு முன்னோடியாக இருப்பார் என்று எண்ண வேண்டியிருக்கிறது. "முன்பெல்லாம் அமைச்சர் அவர்கள் சென்றவிடமெல்லாம் உள்ளாட்சித் துறையைச் சார்ந்த ஆசிரியர்கள் மாலையும் கையுமாக வந்திருந்து நம்மை வரவேற்றார்கள். இப்போது நாம் போகும்போது யாரும் வந்து வரவேற்க மாட்டேன் என்கிறார்களே என்று எண்ணி கொண்டு வந்திருக்கலாம்" என்று வெளியே இருப்பவர்கள் பேசிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட எண்ணத்தை வலுப்பெறச் செய்வதைப் போல் இன்றைக்கு உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றுகிறவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு வரும்போதே மாநகராட்சி ஊழியர்களும் மற்றப் பணியாளர்களும் அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். இப்போதே அங்கெல்லாம் எந்தப் பணியும் நடக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். என்றைக்கு நம்மைத் தூக்கி எறியப் போகிறார்களோ என்ற அச்சம் அவர்கள் மத்தியில் இப்போதே வந்துவிட்டது, இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்தைப்பற்றிச் சொல்லும்போது நிர்வாக மேம்பாட்டிற்காகவும், புதிதாக அமைக்கப்படும் உள்ளாட்சி மன்றங்களில் அனுபவம் மிக்கவர்களை அனுப்பி வைப்பதன் மூலம் அங்கெல்லாம் நிர்வாகம் திறம்படச் செயல்பட முடியும் என்ற நம்பிக்கையிலும் கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி சிறந்த நிர்வாகம் வேண்டுமென்றால், தனியதிகாரிகளை இப்போது போடுவதுபோல் டெபுடேஷனில் சில காலத்திற்குச் சில அதிகாரிகளை அனுப்பலாம். அப்படி அனுப்புவதை விட்டுவிட்டு நிரந்தரமாக மாற்றம் என்னத்தைக் கொண்டு

இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருப்பது, "இந்த மாற்றல் அதிகாரம், மிரட்டல் அதிகாரம் எங்கள் கையில் இருந்தால்தான் எங்கள் அரசியலுக்கு அது உதவியாக இருக்கும், மற்றவர்களைப் பணிய வைக்க முடியும், எங்களுடைய கட்சியை வளர்த்துக்கொள்ள முடியும்" என்ற எண்ணத்தோடு இங்கே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறாரோ என்று என்னைப் போன்றவர்கள் சந்தேகிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இருந்ததில் என்ன குறைபாடு இருந்தது, மற்ற மாநகராட்சிகளில் பணியாற்றுகிறவர்கள் சரியாகப் பணியாற்றவில்லையா ? அங்கே நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு வேலை வாங்கும் ஆற்றல் இல்லையா ? எதற்காக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள் ? தங்களுக்கு மாற்றலே இருக்காது என்று நம்பி இங்கேயே வீடு வாசல் வாங்கி, கடன் வாங்கி வீடு கட்டிக் கொண்டவர்கள், குடியிருப்பு போன்றவற்றைத் தேடிக் கொண்டவர்கள் இனி என்ன ஆவது ? வெளியே போய் நம்மை அலைக்கழிக்கப் போகிற நிலை வந்துவிட்டதே என்று அச்சப்படுகிற நேரம் வந்துவிட்டது. வேண்டுமென்றே பழிவாங்கும் எண்ணத்தோடு நம்மையெல்லாம் மாற்றுவதற்கு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்று சொல்லுவதற்கு, புகார் சொல்லுவதற்கு என் இடமளிக்க வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன். நல்ல முறையில் செயல்படும் ஒரு அமைப்பில் ஏன் இந்த மாற்றத்தைக் கொண்டு வர விரும்புகிறீர்கள் ? செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 'உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்' என்றால் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன் என்று பொருள்படும். எனவே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்ல வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

கல்வித் துறையில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். நிர்வாகக் காரணங்களுக்காக ஆசிரியர்களை மாறுதல் செய்ய வேண்டாம் என்று இருக்கிறது. ஆனாலும் இது கல்வித் துறையையே பாழ்படுத்திவிடும் என்று சொல்லி ஆசிரியர்களை மாற்றம் செய்து கொண்டிருக்கிறோம். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலேயே நினைத்தால் ஆசிரியர்கள் சஸ்பென்ஷன், நினைத்தால் மாறுதல், மெம்பர்கள் நினைத்தால் அது உடனே 'கேன்சலேஷன்'—இப்படி அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வது அல்லது அவர்களுடைய பிடியில் கொண்டு வந்து சிக்க வைத்துக் கொள்வது என்று இருக்கிறது. அதைப் போல்தான் இதுவும் வந்திருக்கிறது. அதிகாரிகளுடைய பிடிப்பில் அல்லது நிர்வாகத்தில் பஞ்சாயத்து மெம்பர், வார்டு கவுன்சிலர் அல்லது அவர்களுக்கு மேலே அங்கே இருக்கிற அதிகாரிகள் அல்லது வட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என்று இப்படியே எல்லோருடைய பிடிப்பிலும் இந்தப் பணியாளர்களைக் கொண்டு போய் நிறுத்துகிற அச்சம் ஏற்படும்.





(பிற்பகல் 1-50)

இன்றைக்குக் கூட காரியாபட்டியில் மாற்றப்பட்டிருக்கிறார்கள். விருதுநகரில் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் அமைச்சரிடம் பட்டியலைத் தருகிறார்கள். அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்காகச் சொல்லுகிறேன். அதிகாரிகளைப் பார்த்து மாற்றுங்கள் என்று பட்டியலைப் போட்டு . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதைப் போல இன்னும் அந்த உத்தரவு கூடப் போகவில்லை. அதற்குள் மாற்றுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அது எப்படி என்று தெரியவில்லை. ஏற்கெனவே இருந்த உத்தரவின்படி மாற்றுகிறார்கள் என்று அவரே தெரிவிக்கிறார் என்று கருதுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இப்போது இருக்கின்ற சட்டத்திலே கொஞ்சம் பாதுகாப்பு உள்ளது. இந்த நேரத்திலேயே மிரட்டல், உருட்டலோடு கல்வி அதிகாரிகளைப் பயன்படுத்தி மாற்றுகிறார்கள். இப்படி சட்டத்திற்குப் புறம்பாக மாற்றப்பட்டதால், வழக்குத் தொடர்ந்து 'ஸ்டே' வாங்கி விருதுநகருக்கு மாற்றப்பட்டவர்களை அருப்புக்கோட்டையிலேயே நிறுத்தி வைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட பழிவாங்கும் சூழ்நிலை இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை மீண்டும் ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைப்பதன் மூலமாக, தாங்கள் சொல்வதை அவர்கள் கேட்க வேண்டும், தங்கள் கட்சி வேலையைச் செய்ய வேண்டும், செய்யாவிட்டால் பழி வாங்க வேண்டும் என்ற நோக்கோடு செய்திருக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. மாநகராட்சியில் இப்படிச் செய்தால், அங்கேயுள்ள பணியாளர்கள் நிம்மதியாகப் பணியாற்றமாட்டார்கள். ஆர்வத்தோடு பணியாற்றமாட்டார்கள். எந்த நேரத்திலும் அச்சத்தோடு இருப்பார்கள். அரசியல் குறுக்கீடுகள் அதிகமாக இருக்கும். அதிகாரிகளுக்குச் செல்வாக்கு இல்லாமல் போகும்; அவர்கள்

ஒரு பட்டியலைத் தருகிறார்கள். அந்தப் பட்டியலில் இன்னின்ன இடத்திற்கு இவர் இவரைப் போடுங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியில்லாமல் அதை மாற்றிப் போட்டால், 'உன்னைத் தொலைத்து விடுவேன்' என்று சொல்கிறார்கள். இதற்கு ஆதாரம் வைத்திருக்கிறேன். ஆனால் வெளிப்படையாகச் சொல்ல வேண்டாமென்று கருதுகிறேன். இப்படியெல்லாம் செய்கிறார்கள். இதைச் செய்ய வேண்டாம் என்ற எண்ணத்தைத் தெரிவித்துக் கொள்வதற்காகத்தான் நான் இதைச் சொன்னேன். இந்த நிலைக்கு அமைச்சர் அவர்களேதான் காரணம் என்று நான் கருதுகிறேன். ஏற்கெனவே பேசுகின்றபோதுகூட சொன்னார்கள். பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது, முதலமைச்சர் விருப்பத்திற்கு மாறாக செய்துவிட்டதைப்பற்றி விசாரித்துப் பார்த்துவிட்டு வாளாவிருந்தேன் என்று சொன்னார்கள். அப்படித்தான் இதிலும் வாளாவிருக்க வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறதோ என்ற ஐயப்பாடு இயல்பாகத் தோன்றியிருக்கிறது. இப்படி நல்ல பெயர் உள்ள நீங்கள் இப்படியெல்லாம் எங்களை வருத்தாதீர்கள், பணியாளர்களை வருந்தாதீர்கள் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்குச் சார்பான சங்கத்தினர்களை ஏஜெண்டுகளாக வைத்துக் கொண்டு அவர்கள் மூலமாக காரியத்தைச் செய்ய பயன்படுத்துகிறீர்கள், இப்படியெல்லாம் செய்வதற்காகத்தான் நீங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் பிற்போக்குவாதி அல்ல, முற்போக்குவாதி. ஏற்கெனவே முற்போக்கு எண்ணத்தோடு செய்த நடவடிக்கையை மாற்றும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிச் செய்ய வேண்டாம் என்று கேட்டு அதையே வேண்டுகோளாக வைக்கிறேன். தேர்தல் வரையில் இது தேவைதான் என்று கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இதற்காக நாங்கள் எல்லோரும் சேர்ந்து மிகப் பெரிய போராட்டம் நடத்தியிருக்கிறோம். அதற்குப் பிறகு 'காம்ப்ரமைஸ்' பண்ணலாம் என்ற நிலை இல்லாமல், நடுநிலையோடு நீங்கள் நடந்து கொள்ளுங்கள் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பல ஆண்டு காலமாக சிந்திக்கப்பட்ட திட்டம் இன்றைக்குச் செயல்வடிவம் பெறுவதைப் பார்த்து நான் உள்ளபடியே பெருமை அடைகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், மாநகராட்சி அலுவலர்களை மாற்றுவதற்காக உள்ள சூழ்நிலைகளைச் சுட்டிக்காட்டி அவருக்கே உரிய பாணியில் 'ஆசிரியர்களை மாற்றுவார்கள்' என்று மறைமுகமாக ஆசிரியர்களுக்கு எடுத்துச் சொல்வது போல பேசினார்கள்.





திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்குப் பொருந்தாது என்று சொன்னால், நான் ஒத்துக்கொள்கிறேன். அலுவலர்கள் என்று போட்டால் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று நான் கருதுகிறேன். அப்படி இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னால், நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார் : சட்டம் மிகத் தெளிவாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாநகராட்சியில் உள்ள சீப் என்ஜினியர் வேறு துறையில் வேலைக்குச் சேர்ந்திருந்தால், எக்சிகியூட்டிவ் என்ஜினியர் அளவிற்குத்தான் வந்திருக்க முடியும். மாநகராட்சியில் பதவி உயர்வை விரைவில் பெற்றுவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை இன்னொரு நகராட்சிக்கு அனுப்புகிறபோது, அவருடைய தகுதியுடையவர்கள் அங்கே இல்லாமல் இருந்து அவர்களை இங்கே சீப் என்ஜினியராக மாற்றுகிறபோது, சீனியாரிட்டி போய் விடும் என்று அச்சப்படுகிறார்கள். இதனால் மூன்று மாநகராட்சிகளுக்கும் 'சீனியாரிட்டி பிக்ஸ்' பண்ணி அதன்படி புரோமோஷன் கொடுத்து வெளியே அனுப்புவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 1-55)

திடீரென்று இங்கேயிருந்து ஒரு சீப் இன்ஜினியர் கோவைக்குப் போகவேண்டும் என்று சொல்கிறோம். அவர் அங்கே போகின்றபோது, அவருக்கு சீனியராக இருப்பவர் அங்கே இருக்கக்கூடும் அல்லது ஜூனியராக இருப்பவர் அங்கே இருக்கக்கூடும். அந்த சீப் இன்ஜினியர் பதவியை இங்கே வேறு ஒருவருக்குத் தருகிறபோது இங்கே சீப் இன்ஜினியராக வருபவர் நான் கோவை மாநகராட்சியிலே சீப் இன்ஜினியராக இருந்தேனே என்று சொல்வார். இங்கே சென்னைக்கு மாற்றுகிறபோது இங்கே எனக்கு ஏன் அந்தப் பதவியைத் தரக்கூடாது என்ற வருத்தம் இங்கே வரக்கூடும். எனவே 'சீனியாரிட்டி பிக்ஸ்' பண்ணிவிட்டால் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதுபோலவே கடைநிலை ஊழியர்களை மாநகராட்சியில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுகிறபோது சிக்கலுக்கு என்று வருகிறது. ஆகவே கடைநிலை ஊழியர்கள் போன்றவர்கள் அனுப்பப்படாமல் இருக்கலாம். சென்னைக்கும் கோவைக்கும் 300 மைல். கெசட்டட் பதவி பெற்றவர்கள், ஒரு பி.டி.ஓ. என்ற அந்தஸ்த்தில் இருக்கின்ற அதிகாரிகளை மாற்றுவதிலே சங்கடம் இருக்காது என்று நான் கருதுகிறேன். அதற்கு மேல் இருக்கின்றவர்களை மாற்றிக்கொண்டிருந்தால், அவர்கள் போவதற்கும்

...மாக இருப்பார்கள். ஏனென்றால் நிரந்தரமாக கோவையிலேயோ இருக்கப் போவதில்லை. நிரந்தரமாக மதுரையிலே இருக்கப்போவதில்லை. வந்து கொண்டுதான் இருப்பார்கள். அதிலே அச்சப்பட ஒன்றுமில்லை என்று கருதுகிறேன். அவர்கள் வேண்டுமானால் இங்கே வீட்டை வாடகைக்கு விட்டு விடலாம். அங்கே வீடு வாடகைக்கு எடுத்துக்கொள்ளலாம். அங்கே அவர்கள் போய்வந்து வந்தால் சிறப்பாக அங்கே பணியாற்றி, அந்த சிறப்பு அம்சங்களை இங்கே நிறைவேற்றலாம். மதுரையில் பணியாற்றிவிட்டு வந்தால், சென்னையிலே அங்குள்ள சிறப்பான அம்சங்களைக் கொண்டுவரலாம். அப்படிப் பணியாற்றியவர்களால் சென்னை பெருமை பெறலாம். ஆகவே இந்த மாற்றங்கள் கொண்டு வருவதால் அவர்களைப் பழிவாங்குவதாக எண்ணக்கூடாது. அவர்கள் இன்னும் சுறுசுறுப்பாக இயங்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான், அரசு அதை கவனத்தில் கொண்டுதான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதை நான் பாராட்டி அமைகிறேன்.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அலுவலர் பணியாளர்கள் நகராட்சி, மாநகராட்சிகளிலிருந்து பிற நகராட்சி, மாநகராட்சிகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்ற சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய திறமையும் ஆற்றலும் யாவரும் அறிந்ததுதான். அவர்கள் ஆசிரியப் பெருமக்கள் சமுதாயத்திலும் ஏனைய அலுவலர்கள் மத்தியிலும் ஒரு பெருந்த அச்சமும், ஒரு பயமும், ஒரு வேதனையும்கூட இதனால் இருக்கின்றது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகக்கூட இத்தகைய ஒரு கருத்து வந்து மாநகராட்சிகளிலே மாற்றப்பட வேண்டுமென்ற கருத்து உருவானபோது அது ஏதோ காரணத்தினாலே தடுத்து நிறுத்தப்பட்டதாக நான் கருதுகிறேன். அன்று மாண்புமிகு அமைச்சராக இருந்த திரு. குழந்தைவேலு அவர்கள் சொன்னார்கள். விரைவிலே அனைத்து மாநகராட்சிகளுக்கும் சேர்ந்து "We are going to bring in a comprehensive-Act" என்று சொன்னார்கள். பரவலாக்கப்பட்ட அந்த மாநகராட்சிச் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டால், நம்முடைய மாநிலத்திலே பல புதிய மாநகராட்சிகள் உருவாகி வரும்போது, அந்தப் பதவி உயர்வுகளுக்கும், மாற்றங்களுக்கும் சரியான விதிமுறைகளை வகுக்க முடியும். அப்படி வகுத்துவிட்டால், இடர்ப்பாடுகள், தடைகள் இருக்காது என்று சொன்னார்கள். அத்தகைய சட்ட முன்வடிவு இன்னும் வரவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக மாற்றல் தொடர்பான சட்டம் ஒன்று தான் வந்திருக்கிறது. இதிலே பெருங்குறை என்னவென்றால்,



ஏற்கெனவே முனிசிபல் சர்வீஸ் என்று எடுத்துக்கொண்டிருந்ததால், அது ஒரு தனி மாநில அமைப்பாக அமைந்திருக்கிறது. டைரக்டர் ஆப் முனிசிபாலிட்டிஸ் ஒரு மாநகராட்சியிலிருந்து மற்றொரு மாநகராட்சிக்கு மாற்றுகின்றார்கள். அப்படி மாற்ற உரிமை பெற்றிருக்கின்றார்கள். ஒருவர் பதவி உயர்வு பெறும்போது, பொதுவாக அதைச் செய்கின்றார்கள். பள்ளியிலே ஆசிரியர்கள், மற்றவர்கள், பொறியாளர்கள் இப்படி பல துறைகள் இணைக்கப்பட்ட காரணத்தினால், அவர்கள் மாறும்போது மாற்றுகின்றார்கள். காரணம் பதவி உயர்வு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சென்னை மாநகராட்சியிலிருந்து மதுரை மாநகராட்சிக்கும், மதுரை மாநகராட்சியிலிருந்து கோவைக்கும், திண்டுக்கல்லுக்கும் மாற்றவேண்டுமென்றால், ஒரு விசேஷமான அதிகாரம் அரசுக்குத் தேவையா? இப்போது நடைபெறவில்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. எனக்குத் தெரியும். மதுரை மாநகராட்சிக்கு சென்னை மாநகராட்சி அலுவலர் ஒருவர் அந்த ஆணையாளரிடம் மனுவைக் கொடுத்து, மதுரை மாநகராட்சியில் ஒப்புதல் பெற்று, ஆணையாளருடைய அனுமதியைப் பெற்று, உள்ளாட்சித் துறை செயலகத்திலே இருந்து அனுமதியை வாங்கி மாறியிருக்கின்றார்கள். அதுபோலவே மாநகராட்சியில் மாறியிருக்கின்றார்கள். அப்படி ஒரு திட்டம் இருக்கும்போது, இந்த மாதிரி மாற்றம் தேவையா? அது

(பிற்பகல் 2-30)

அவசியம்தானா? பொதுவாக இவ்வாறு ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகளிலே பணிக்கு வந்த ஆசிரியப் பெருமக்கள் மாநிலக் கல்வித் துறைப் பணியைத் தவிர்த்துவிட்டு, தங்கள் சொந்த இடங்களிலேயே நல்ல முறையிலே பணியாற்றி, கல்வித் தரத்தை உயர்த்தலாம், தங்கள் குடும்பத்தையும் பேணிக் காக்கலாம் என்ற நல்லெண்ணத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இங்கே மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. லீலாவதி அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சென்னை மாநகராட்சியில் இருக்கிறார்கள். திடீரென்று அவர்கள் மதுரைக்குப் போகும் நிலைமை ஏற்படலாம். எனவே அவருடைய ஆதரவு எனக்கு இருக்கும் என்று நினைக்கிறேன். நிச்சயமாக அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் எனக்குத் துணையாக வருவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் ஆளும் கட்சிக்காரர்களை 'கான்வாஸ்' பண்ணலாமா? (சிரிப்பு)

திரு. பா. ரா. தாமஸ்: இவ்வாறு 'கான்வாஸ்' செய்வது நம்முடைய உரிமை.

**செல்வி ஆ. லீலாவதி:** இப்படி 'கான்வாஸ்' செய்வதால், நாங்கள் 'ப்ரெயின்வாஷ்' ஆக மாட்டோம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்தை, அவர்கள் பேசும்போது தெளிவாகத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் யார் சார்பிலே இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறார்களோ, அந்த ஆசிரியப் பெருமக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை அவர்கள் நிச்சயமாகச் சொல்லுவார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** 'கான்வாஸ்' பண்ணினாலும், பண்ணாவிட்டாலும், பயமுறுத்தக்கூடாது.

**திரு. பா. ரா. தாமஸ்:** அவர்கள் பயப்படமாட்டார்கள். பொதுவாக இப்படிப் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்கள் அங்கே வீட்டு வசதிகளைக்கூட பெற்றிருக்கிறார்கள். ஏராளமான வீடுகளைக் கட்டி, அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கான பணத்தை ஊதியத்திலிருந்து செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் திடீரென்று மாற்றம் ஏற்படும் சூழ்நிலை வந்தால், அவர்கள் பெருத்த வேதனையடைவார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களிடம் கோரிக்கைகள் வைத்தபோது, அவர்கள் கருணையோடு செய்வேன் என்று சொன்னார்கள். சென்னை மாநகராட்சியிலே 1—8—1984 லிருந்து ஓய்வு பெறுகிறவர்கள் 5,000 ரூபாய் நிச்சயம் பெற முடியும். அவர்கள் 5,000 ரூபாய் பெற்றால், மேலும் 5,000 ரூபாய் பெறலாம் என்று ஆணை வந்துவிட்டது. ஒரு வழிப் பயணச் சலுகையை சென்னை மாநகராட்சி ஊழியர்கள் பெற்று வருகிறார்கள். மதுரையிலே அந்த சலுகை இல்லை. It is considered a self-financing scheme என்று மறுக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல கருத்தைச் சொன்னார்கள். அனுதாபத்தோடு கவனிப்பேன் என்று சொன்னார்கள். வீடு கட்ட லோன் தருவது கிடையாது. ஓய்வு பெற்றால் 10,000 ரூபாய் கிடையாது, ஒரு வழிப் பயணச் சலுகை இல்லை. பெருத்த முரண்பாடுகள் இருக்கின்றன. மேலும் ஒவ்வொரு மாநகராட்சிக்கு தனித் தனியாகச் சட்டம் வைத்திருக்கிறோம். மதுரை மாநகராட்சிக்கும் தனிச் சட்டம் இருக்கிறது. அடானமஸ் பாடியாக அவர்கள் செயல்படுகிறார்கள். பல நேரங்களில் கேள்விகள் கேட்கும்போது, இதைக் காரணம் சொல்லி தள்ளிவிடுகிறார்கள். என்ன சொல்லுகிறார்கள்,

"It is coming under a separate Act. You cannot raise a question on the floor of the House"



என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் பார்த்து கவனிக்கும்போது, இத்தகையதொரு நிலை வேண்டுமா என்று நினைக்கத் தோன்றுகிறது. கணவனும், மனைவியும் ஒரே மாநகராட்சியில் பணியில் இருக்கலாம். மனைவி டாக்டராகவும், கணவன் ஆசிரியராகவும் இருக்கலாம். அவர்கள் குடும்பம் பிரிக்கப்படக்கூடிய நிலைமை உருவாகும். பொதுவாகப் பதவி உயர்வு என்று பார்த்தால், அதிகமான பதவி உயர்வுகள் மாநகராட்சியிலும், நகராட்சியிலும் இல்லை. ஆசிரியர் என்றால், அவர் தலைமை ஆசிரியர் ஆவார். அதற்கு மேற்பட்ட பதவிகளுக்கு கல்வித் துறையிலிருந்து அழைக்கப்படுகிறார்கள். பின் துறைக்கு, பின் வாரியத்திலிருந்து கொண்டு வருகிறார்கள். அங்கேயே அனுபவம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. பதவி உயர்வு கொடுத்து, அதிகாரிகளை மாற்றும்போது அதனை ஆட்சேபிக்க முடியாது. ஒரு ஆசிரியர், அலுவலர் அல்லது பணியாளர் அவரே மாற்றத்திற்கு விரும்பினால், நிச்சயமாக அந்த மாற்றத்திற்கு ஆட்சேபனை சொல்லத் தயாராக இல்லை. பொதுவாக இப்போதுள்ள சட்டப்படி உடனடியாகச் செய்ய முடியாது. முனிசிபல் மேனுவல் இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிபற்றி விதிமுறைகள் அதில் இருக்கின்றன. ஆனால் மேல்நிலைப் பள்ளி வந்த பிறகு, அதற்குரிய விதிமுறைகளை வகுக்காததால், நகராட்சிகளிலே புதிய உயர்வு கொடுக்கக்கூட முடியாமல் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. அவையெல்லாம்பற்றிப் பேசியிருக்கிறோம். ஒரு உதாரணம் சொல்கிறேன். மதுரை மாநகராட்சியிலே ஒருவர் ஓய்வு பெற்றார். 600 ரூபாய் ஓய்வூதியம் வருகிறதென்றால், அதில் 200 ரூபாயைக் 'கம்யூடேஷன்' செய்துவிட்டு, 400 ரூபாய்

(பிற்பகல் 2-05)

ஓய்வூதியம் பெறுகிறார். 400 ரூபாய் ஒருவர் ஓய்வூதியம் பெறுகிறார் என்றால் அவருக்கு உரிய அகவிலைப்படி வழங்க வேண்டும். ஆனால் அங்கே அதற்குரிய பணம் இல்லையென்று சொல்கிறார்கள். 200 ரூபாயை 'கம்யூடேஷன்' செய்துவிட்ட நிலையில் ஓய்வூதியம் பெறுவோர் சென்னையைப் பொறுத்தவரையில், முழுமையாகப் பெறுகின்ற நிலையில், மற்ற இடங்களில் இத்தகைய நிலை இல்லை, எல்லா இடங்களிலும் அகவிலைப்படியுடன் சேர்த்து ஓய்வூதியத்தை வழங்க வேண்டும். அதுமாதிரி பதவி உயர்வு என்று வரும்போது, அவர்களுக்குத் தொல்லை இல்லாத வகையில் அவர்கள் விரும்பினால், மாற்றம் செய்ய வேண்டுமென்று சொல்லி வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**செல்வி ஆ. லீலாவதி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாநகராட்சிப் பணியாளர்களை மாற்றம் செய்யும் அதிகாரம் அரசுக்கு உண்டு. இதில் மாற்றம் என்று வரும்போது, பொதுவாக மாநகராட்சி அலுவலர்களைப்பற்றி

மட்டும் குறிப்பிட்டிருப்பதாக நான் கருதுகிறேன். இச்சட்ட முன்வடிவு 1984 ஆம் ஆண்டு வருவதாக இருந்தது. அப்போது நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, "இதனால் ஆசிரியர்கள் அனைவரும் மிகவும் வேதனையோடு இருக்கிறார்கள். இச்சட்டம் நடைமுறைக்கு வராமல் தடுத்து நிறுத்த வேண்டும்" என்று சொன்னேன். அப்போது அவர்கள் ஆசிரியர்களை மாற்றம் செய்யமாட்டோம் என்று கூறினார்கள். அந்த நல்லெண்ணத்தோடு இச்சட்ட முன்வடிவும் ஆசிரியர்களை மட்டும் விட்டுவிட ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை அளிக்கும் போது; ஆசிரியர்கள் இதிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று சொல்லுவார்கள் என்று நம்புகிறேன். காரணம் பொதுவாக ஆசிரியர்கள் பதவி உயர்வு இல்லாதவர்கள். மேலும் சென்னை மாநகராட்சியில் ஆறு ஆயிரம் ஆசிரியர்கள் மொத்தம் இருக்கிறார்கள் என்றால், 5,500 ஆசிரியர்கள் பெண்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களை மாற்றம் செய்ய முன்வரமாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். சட்டத்தின் நோக்கத்திலும், காரணத்திலும் நிர்வாகத்தை மேம்படுத்த இந்த மாற்றம் செய்யப்படுகிறது என்று சொல்லியுள்ளபடியால், ஆசிரியர்கள் நிர்வாகத்தை மேம்படுத்துகின்ற பணியில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்கள் வருங்கால சமுதாயத்தை உருவாக்குகின்ற சிற்பிகள் என்பதால், ஆசிரியர்கள் இச்சட்டத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, மாற்றம் செய்யப்பட மாட்டார்கள் என்கிற உறுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்க உரையில் சொல்லுவார்கள் என்று நம்பி ஆசிரியர்கள் சார்பில் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

**திரு. க. சுப்பு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவு மீது ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் சென்னை மாநகராட்சியை எந்த அளவுக்கு மேம்படுத்தலாம் என்பதுபற்றி ஆய்வு நடந்தபோது, பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. அதில் இதுவும் ஒரு கருத்து. சென்னை மாநகரத்திலே வாழ்கின்ற மக்களின் நன்மையை மனதிலே வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட மாறுதலைக் கொண்டுவர வேண்டுமென்று அப்போது வற்புறுத்தப்பட்டது. யாரையும் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தில் இது என்றைக்கும் நடைமுறைப் படுத்தப்பட மாட்டாது என்று நாம் உறுதியாக நம்பலாம். மேலும் ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கும் ஒரே இடத்தில், ஸ்டேக்னேஷன் என்கிற அளவுக்கு





எத்தனை ஆண்டுகள் தான் இருப்பது என்கிற எண்ணம் இருக்கிறது. பல இடங்களில் தனியார் பள்ளிகளில் பணிபுரிபவர்களுக்கு மாறுதல் ஒன்றும் இல்லையாதலால், இது ஒரு பெரிய குறை மாதிரி அவர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்கு மாற்றம் ஏற்படுவதில் விருப்பம் என்றாலும்கூட "கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்பது மாதிரி அவர்கள் ஒரே இடத்தில் பல வருடங்கள் பணியாற்ற வேண்டிய நிலை இருக்கிறது. பழி வாங்குவதற்கு அல்ல, பரந்த எண்ணத்தோடுதான் இந்த அரசு இச்சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தனியார் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் நன்றாகச் சொல்லிக்கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** எல்லா தனியார் பள்ளிகளும் மோசம் என்றோ எல்லா அரசுப் பள்ளிகளும் மோசம் என்றோ எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. தனியார் பள்ளியில் படிக்கிறவர்கள் நிறைய மார்க்குகள் வாங்குகிறார்கள் என்றால், அவர்கள் நிறைய மார்க்குகளைச் சேர்ப்பதால் அப்படி இருக்கலாம். ஆனால் தனியார் பள்ளிகளை விட அரசுப் பள்ளிகளில் தான் நன்றாகச் சொல்லிக்கொடுக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நன்றாகச் சொல்லிக் கொடுக்காமல் மாணவர்கள் யாரும் நிறைய மதிப்பெண்கள் வாங்க முடியாது. ஆசிரியர்கள் மனம் புண்படும் வகையில் தயவுசெய்து உறுப்பினர் பேச வேண்டாம்.

**திரு. க. சுப்பு:** அப்படி என்றால் தனியார் பள்ளிகளில் மட்டும்தான் நன்றாகச் சொல்லிக் கொடுக்கிறார்கள், அரசுப் பள்ளிகளில் அப்படி அல்ல என்று பொருளா ? என்னைப் பொறுத்தவரையில், தனியார் பள்ளிகளை விட அரசுப் பள்ளிகளில் தான் நன்றாகச் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால், தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் பாடத்தை மட்டும் படித்து மாணவர்கள் மார்க் வாங்குவதில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-10)

கிராமப் புறத்தில் உள்ள ஆசிரியர்களும் சொல்லிக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களையும் நான் குறை சொல்லவில்லை. அப்படி நினைப்பது தவறு.

[திரு. க. சுப்பு] [1985 ஜூலை 12

இங்கே மாநகராட்சியில் பணியாற்றும் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் பல்வேறு மனக்குறை அவர்களுக்கு இருக்கிறது. அவர்களால் வெளியூர்களுக்குப் போக முடியாது. இன்னும் சொல்லப்போனால் அவர்களுக்கும் மனக்குறை இருக்கிறது. இங்கேயே தொழில் ஆரம்பித்து விட்டார்கள். அந்தத் தொழிலை விட்டுவிட்டு ஆசிரியர் வேலையை அவர்கள் எப்படிப் பார்க்க முடியும்? ஆகவே அவர்களுடைய குறைகளை அனுதாபத்தோடு பரிசீலிக்க வேண்டும். (சிரிப்பு) காலையில் அட்டென்டென்ஸில் வேறு ஒருவனை கையெழுத்துப் போடச் சொல்லிவிட்டு, இவர்கள் ஆட்டோ ஓட்டப் போய் விடுகிறார்கள். இப்படி மாநகராட்சி ஆசிரியர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதிகாரிகளுக்கு வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள். இவர்களிடம் வட்டிக்குப் பணத்தை வாங்கிவிட்டு, அவர்களால் இவர்களைக் கண்டிக்க முடியவில்லை. இவர்களிடம் வேலை வாங்குவது கிடையாது. நாங்கள் பிராக்டிகலாகப் பார்க்கிறோம். நானும் தொழிற்சங்கத்தில் அமைவப்பட்டவன். நாங்கள் யாரையும் பழி சொல்வதாக நினைக்கக் கூடாது. ஒரு மாநகராட்சியில் இருந்து இன்னொரு ஆட்சிக்கு மாற்றுவது மூலம் அவர்களைப் பழி வாங்குகிறார்கள் என்று சொல்வது தவறு. அடிப்படையிலிருந்து இது பழையதுதான். 1919 லிருந்தே இந்தச் சட்டம் இருக்கிறது. அப்போது வேறு மாநகராட்சி கிடையாது. சென்னை ஒன்று தான் கார்ப்பரேஷன். மற்ற எல்லாம் முனிசிபாலிட்டிகள். கார்ப்பரேஷனிலிருந்து மற்றொரு முனிசிபாலிட்டிக்கு மாற்றலாம் என்று சட்டம் இருக்கிறது. இப்போது பல கார்ப்பரேஷன்கள் வந்துவிட்டன. ஆகவே ஒரு கார்ப்பரேஷனிலிருந்து இன்னொரு கார்ப்பரேஷனுக்கு மாற்றுகிறார்கள். இதில் தவறு கிடையாது. எங்கே வேலை பார்த்தால் என்ன? அடிப்படையில் ஒன்று தான், மாற்றலாம் என்பது உண்மை தான். மாற்றவேண்டாம் என்று சொன்னால், பணியிலிருந்து வெளியேறி சுதந்திரமாக இருக்கலாம். யார் வேண்டாம் என்று சொன்னது? இந்த மாநிலத்திற்குள்ளே வேலை செய்ய மனம் இல்லையென்றால், என்ன அர்த்தம்? திரு தாமஸ் அவர்கள் சொன்ன மாதிரி, ஏற்றத்தாழ்வு இருக்கிறது. அதை மாற்றுங்கள், ஒரே சீராக வையுங்கள் என்றால் அதில் அர்த்தம் இருக்கிறது. ஒரு இடத்தில் சலுகை அதிகமாக இருக்கிறது. இன்னொரு இடத்தில் குறைவாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். பணி நிலைமைகளை சீராக எல்லா இடத்திலும் கொண்டு வர வேண்டுமென்று சொல்லலாமே தவிர மாற்றம் செய்யக்கூடாது என்று சொல்லக் கூடாது. அது தவறு. மாற்றம் இல்லாமல் இருக்க வேண்டும். எல்லாச் சலுகைகளையும் சென்னையிலேயே அனுபவிக்க வேண்டுமென்று சொன்னால், விருதுநகர்க்காரன் என்ன செய்வான்? சலுகையை அனுபவிக்க



1985 ஜூலை 12] [திரு. க. சுப்பு]

விருதுநகர்க்காரன் சென்னைக்கு வரட்டுமே? சலுகையை அனுபவித்த சென்னைக்காரன் விருதுநகருக்குப் போய் நாசமாய்ப் போகட்டும். (சிரிப்பு) என்ன காரணம்? ஒருத்தர் சலுகையை அனுபவித்துக்கொண்டே இருப்பார், இன்னொருவர் ... ாக வேண்டுமா? அவர்களும்தான் சென்னையை வந்து பார்க்கட்டுமே?

ஆகவே எல்லா இடத்திலும் பணி நிலைமையை ஒரே சீராக அமைக்க வேண்டுமென்று வாதாட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கருத்து வெளியிடுவது வேறு, இந்தச் சட்ட திருத்தமே வேண்டாம் என்று சொல்வது வேறு. நீங்களே குறைகளை, தவறுகளை உருவாக்குவது, அவர்களிடம் வெஸ்டட் இன்டரஸ்ட்டை உருவாக்குவது தவறு.

எனக்கு அதிகாரிகள் மீது எந்தவித வருத்தமும் கிடையாது. இன்றைக்கு இருக்கிற சட்டம் அதிகாரிகளை மாற்றலாம் என்பது தான். அவர்கள் முனிசிபாலிட்டி. எம்ப்ளாயீசாக இருப்பவர்களை மாற்ற முடியாது என்பது இருக்கிறது. இதனால் என்ன நினைக்கிறார்கள் என்றால், ஒன்று நாமும் சாவோம், வருகிறவனையும் சாகடிப்போம் என்ற நிலைக்கு வந்து விடுகிறார்கள். அப்படி இருப்பதால், இந்த வெஸ்டட் இன்டரஸ்ட்டை மாற்றினால் ஒழிய, என்ன செய்தாலும் நடக்க மாட்டேன் என்கிறது. இங்கே இருக்கிற அதிகாரிகளே பினாமி காண்ட்ராக்டர்களாக இருக்கிறார்கள். அவர்களை எப்படி மாற்றுவது? கார்ப்பரேஷனுக்கு அவர்களைப் போட வேண்டும். இது யாருடைய நன்மைக்கு? மக்களுடைய நன்மைக்கு.

வரி கொடுத்த மக்கள் கொசுக்கடியால் சாகிறார்கள். ஒன்றும் இல்லாத ஆள் இன்னொரு கொசுவாக மாறுகிறான். அப்படியானால் என்ன அர்த்தம்? கொசுவுக்கு மேல் இன்னொரு கொசுவா? அப்படியானால் இன்னொரு கொசுவை யார் ஒழிப்பது? பறக்கிற கொசு ஒன்று. இவனே கொசுவாக இருந்தால், அவனை எப்படி ஒழிப்பது? இப்படிப்பட்ட மோசமான நிலைமை தான் நீடிக்கிறது என்ற யதார்த்தமான உண்மைகளை மாண்புமிகு உறுப்பினர் திரு மீனாட்சிசுந்தரம் அவர்கள் உணர வேண்டும்.

அவர்கள் கார்ப்பரேஷனில் குடியிருக்கவில்லை. ஆகவே அவருக்குக் கஷ்டம் தெரியவில்லை. இங்கே பேசிவிட்டு, தஞ்சாவூருக்கு ஓடிப்போய் விடுகிறார். தஞ்சாவூரிலிருக்கிற நிலைமை வேறு, இங்கே இருக்கிற நிலைமை வேறு. அவர்களுக்கு அரசியல் ரீதியாகப் பேசக்கூடிய கட்டாயம் ஏற்பட்டிருக்கலாம். அது வேறு. ஆனால் எனக்குத் தெரிந்த வரை, இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்தினால்தான் உண்மையான நிலையைக் கொண்டு

[திரு. க. சுப்பு] [1985 ஜூலை 12

வரும். அதை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். மாநில ரீதியில் ஆசிரியர்களை மாற்றுவதற்குத் தக்கவாறு சட்டம் கொண்டு வர வேண்டும். திரு. தாமஸ் சொன்னது மாதிரி, இங்கே சென்னையில் இருந்து மதுரைக்கு மாற்றம் செய்ய வேண்டுமென்றால், இங்கே ஒரு தீர்மானம் போட்டு அந்தக் கார்ப்பரேஷனுக்கு அனுப்பினால், அப்புறம் அவர்கள் ஒரு தீர்மானம் போடு வார்கள். இதற்குள் மாற்றம் செய்யப்படவேண்டிய ஆள் செத்துவிடுவான். எதிலும் ஸ்பீடியாகச் செய்யவேண்டும். ஷார்ட் கட்டில் போக வேண்டும். நாம் இப்போது எங்கே இருக்கிறோம்? கம்ப்யூட்டர் யுகத்தில் இருக்கிறோம். அதை விட்டு இன்னும் குப்பைத்தொட்டி யுகத்திலா இருக்கவேண்டும்? அதனால் நினைத்த நேரத்தில் எந்த ஊரிலும் வேலை செய்வதற்கு நாம் நம்மைத் தயார் படுத்திக்கொள்ளவேண்டும். அந்த அடிப்படையில் ஊழியர்களை உற்சாகப் படுத்த வேண்டும். அவர்கள் குழந்தைகள் எந்த ஊருக்குப் போனாலும் படிக்க முடியும். எல்லா ஊரிலும் பள்ளிக்கூடம் இருக்கிறது. இந்த ஊரில் இருப்பவன்தான் மனிதன், மற்ற கார்ப்பரேஷனில் குடியிருப்பவர்கள் எல்லாம் மாடா? எல்லா ஊரிலும் மனிதர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே எல்லா ஊருக்கும் மாற்ற வேண்டும். அப்போதுதான் எல்லோரும் வாழ வழி ஏற்படும். எல்லா இடத்திலும் வாழ கற்றுக்கொள்ளவேண்டும். ஆகவே இப்படிக் கொண்டு வருகிற மசோதாக்களை அரசியல் ரீதியாக எதிர்த்தாலும், காழ்ப்புணர்ச்சியோடு எதிர்க்கக்கூடாது. பொதுவாக ஆசிரியர்களுக்கு அரசியல் தெரியாது. அவர்கள் பொதுவாக இருக்க வேண்டியவர்கள். அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்பார்கள். அவர்களுடைய குறைகளை கவனத்தில் கொண்டு, அதை நீக்க நாம் எல்லாம் சேர்ந்து பாடுபடுவோம், ஒரே சீரான பணி, சலுகைகள் ஆகியவற்றுக்காக நான் வருங்காலத்தில் உங்களோடு சேர்ந்து போராடுவேன் என்று தெரிவித்து, இப்போது எங்களோடு நீங்கள் வாதாட தயாராக இருக்கவேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் ஏற்கவில்லை. எதிர்க்கவும் இல்லை. இந்தச் சட்ட முன்வடிவில் உள்ள சில விஷயங்களை நான் வரவேற்கிறேன். காரணம், நண்பர் திரு சுப்பு அவர்கள் சொன்னதுபோல, மாநகராட்சி ஆசிரியர்கள், அதிகாரி களை மாற்றுவது என்பது நடைமுறையில் உள்ள விதிகளின் படிதான். பல தேர்தல்களில் எனக்கு நன்றாகத் தெரியும்.



185 ஜூலை 12] (திரு. எம். பி. சுப்பிரமணியம்)

(பிற்பகல் 2-15)

அரசு ஊழியர்களில் அவ்வாறில்லை. ஆனால் நகராட்சி அலுவலகங்களிலோ, அல்லது தனியார் அலுவலகங்களிலோ பணியாற்றுகிற ஊழியர்கள் அரசியல் கட்சிகளில்கூட பொறுப்பு வகிக்கிறார்கள். இதையெல்லாம் தவிர்த்தாக வேண்டும். மற்றவர்களுக்கு இல்லாத சலுகை இவர்களுக்குத் தேவை இல்லை. பொதுவாக உத்தியோகத்திற்கு வரும்போது, எப்படியாவது வேலை கிடைத் தால் போதும் என்று சொல்வார்கள். பிறகு ஊரை விட்டுப் போகத் தயாராக இல்லை என்று சொல்கிறார்கள்.

அடுத்து, இங்கே ஊழியர்களை எல்லாம் 'ரெக்ரூட்' செய்வதற்கு ஒரு அமைப்பு இருந்தால் நல்லது. இந்த நகராட்சி ஊராட்சி ஒன்றியங்களில் பணிசெய்கின்ற ஊழியர்களை, அதிகாரிகளை யார் 'ரெக்ரூட்' செய்வது? மாநிலம் முழுவதற்கும் ஒரு அமைப்பு இருக்கப் போகிறதா? அவர்கள் பிரமோஷன் வாய்ப்பு எப்படி இருக்கும்? அதுகுறித்து விவரமான அறிக்கை அரசாங்கத்திடம் இருக்குமானால், அது வரவேற்கத்தக்கது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தூய்மையான நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டமுன்வடிவின்மீது கடுமையான வார்த்தைகளைத் தூவி தன்னுடைய கோபத்தைக் காட்டிக்கொண்டார் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு உறுப்பினர் திரு மீனாட்சிசுந்தரம் அவர்கள். நான் துவக்கத் திலேயே தெரிவித்துக் கொள்கிறேன், இந்தச் சட்டமுன்வடிவு ஏதோ ஆசிரி யர்களை மனதில் கொண்டு வரப்பட்ட சட்டம் என்று கருதிக் கொண்டு பேசக்கூடாது. இது பொதுவாகக் கொண்டுவரப்பட்ட சட்ட முன்வடிவமாகும். இன்னொரு உறுதியையும் அளிக்கிறேன். இது யாரையும் பழிவாங்கவேண்டுமென்ற நோக்கத்தோடும் கொண்டுவரப்படவில்லை. அரசுக்கு யாரையும் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால், இப்போ திருக்கும் சட்டத்தை வைத்தே செய்ய முடியும். எனவே இந்தச் சட்ட முன் வடிவைத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சமயத்தில் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்களை நம்பி தமிழக மக்கள் வாக்களித்து அவரை மூன்றாவது முறையாக முதலமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள். முதலமைச்சர்

அவர்கள் நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, அரசு ஊழியர்கள் அத்தனை பேருக்கும் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய மிகப்பெரிய பொறுப்பையும் ஏற்றிருக்கிறார்கள். அவர், முதலமைச்சராக இருக்கிற காரணத்தால் எல்லோருக்கும் முழுப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியவராவார்கள். எனவே, நிச்சயமா, உறுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தவறான நோக்கத்தோடு இச் சட்டமுன்வடிவைக் கொடுக்கவில்லை.

இன்னும் ஒன்று அவர் பேசும்போது சொன்னார். கட்சியை வளர்ப்பதற்காக பயமுறுத்துகிறார்கள் என்று சொன்னார். நாங்கள் அவர்களை மிரட்டியா கட்சியை வளர்க்க வேண்டும். நாங்கள் வளர்ந்திருக்கிற இடம், எவ்வளவு உயரத்தில் வளர்த்திருக்கிறோம் என்பதை நாங்கள் உணர்கிறோம். ஆனாலும் அடக்கத்தோடு இருக்கிறோம் ஒருவரை மிரட்டி, கட்சியை வளர்க்க வேண்டிய அளவுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தாழ்ந்துவிடவில்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் போயும் போயும் ஆசிரியர்களை மிரட்டியா கட்சியை வளர்ப்பது? நிச்சயமாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளியிலே போய் அப்படிப் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள், ஊழியர்கள் எல்லாம் அதிர்ச்சி அடைந்து வேலைசெய்ய முடியாமல் திகைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். இப்படி ஒரு சட்டமுன்வடிவு கொண்டு வருவதாலேயே, நாளை காலையிலேயே சென்னையிலிருந்து 200 பேரை மதுரைக்கும், மதுரையிலிருந்து 200 பேரை சென்னைக்கும் மாற்றப் போவதாகக் கருத வேண்டிய அவசியமில்லை. யாரையும் பயமுறுத்துவதற்கோ, மாற்றுவதற்கோ இது கொண்டுவரப்படுகிறது என்று தவறான வாதத்திற்குப் போக வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப்பற்றிச் சொன்னார்கள். நான் அன்றைய தினமே பதிலளித்தேன். அவர் அன்று அப்போது அவையில் இல்லை. அப்போது நான் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். நான் இப்போதும் சொல்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியதிலிருந்து பின்வாங்கவில்லை. நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களைக்கூட அரசு ஊழியர்களாக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். "டெபுடேஷன்" என்று சொல்லி ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கச் சொல்கிறோம். அவ்வளவுதான்.



(பிற்பகல் 2-20)

இப்போது இருக்கிற ஏ.ஈ.ஓ.-க்கள் கல்வி இலாக்காவிலே இருந்து வந்து ஆசிரியர்களைப் பராமரிக்கும் ஏ.ஈ.ஓ.க்களை அப்படியே எடுத்துக்கொண்டு அதைச் செய்யப் போகிறோமே தவிர வேறல்ல. ஆசிரியர்களைக் கண்டபடி மாற்றும் அதிகாரத்தை முன்பு இருந்தாற்போல, பி.டி.ஓ. கையில் கொடுப்பதாக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். முழுப் பாதுகாப்பு அவர்களுக்கு இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அதற்கு ஒரு தனிக் குழு போடவேண்டுமென்று சொல்லி அந்தக் குழுவில் ஏ. ஈ. ஓ. இருக்க வேண்டுமென்று, நாங்கள் சட்டத்தைத் திருத்துவதற்காகவும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோமே தவிர ஆசிரியர்களை அநாதைப் பிள்ளைகளைப் போல் விட்டுவிடுவதாக இந்த ஆட்சி நினைக்கவே இல்லை. ஒருநாளும் அப்படி கிடையாது. ஒருவேளை திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், ஆசிரியர்கள் அத்தனை பேரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆசிரியர்கள் அத்தனை பேரும் கட்சி சார்பற்ற ஊழியர்கள் என்றுதான் நம்பிக் கொண்டிருக்கிறோம். அப்படித் தான் அவர்கள் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். . . .

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, ஆசிரியர்கள் அனைவரும் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் அல்ல. அவர்கள் நடுநிலைவாதிகள் தான். ஆனாலும் ஆசிரியர் சங்கங்கள், அதாவது அரசுக்கு வேண்டிய சங்கங்கள் உட்பட இன்றைக்கு அந்தத் திட்டத்தை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, பூனை பையை விட்டு வெளியே வந்து விட்டது என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோல அரசுக்கு வேண்டிய சங்கம் என்று சொல்வது, வேண்டாத சங்கம் என்று தன்னையே ஒப்புக்கொள்கிறாரா? அவர் ஏன் இந்த வம்புக்கு வருகிறார் என்று எனக்குப் புரியவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அதை நீங்கள் நடைமுறையிலே காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். வேண்டிய சங்கம்; வேண்டாத சங்கத்தை மிரட்டுகிறார்கள் என்று நான் சொன்னேன். ஆதாரம் வைத்திருக்க முடியாது. அமைச்சர் அவர்கள் மிரட்டவே இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி மிரட்டாமல் இருக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள் கூட;

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு திரு. மீனாட்சிசுந்தரம் தவறாகப் புரிந்து கொண்டு பேசுகிறார்கள். இந்த ஆட்சியைக் கண்டாலே அவருக்கு இருக்கிற வெறுப்பின் காரணமோ, எதிர்ப்பு உணர்ச்சியின் காரணமோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. ஒரு தூய்மையான நோக்கத்தோடு எந்த ஒரு நல்ல சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தாலும், அதை அரசியல் கண்ணோட்டத்தோடே பார்க்க விரும்புகிறாரே. அவர் ஆசிரியராக இருப்பதைவிட அரசியல்வாதியாக அதிக நேரம் இருக்க வேண்டும். அதை தான் விரும்புகிறேன். அப்படியே வந்துவிட வேண்டுமென்று நம்புகிறேன். ஆசிரியர்களிடத்தில் எனக்கு பற்று பாசம் அதிகம் உண்டு. இன்னொன்றை நான் பெருமையாக மாண்புமிகு திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர் அல்லாத ஒருவர், ஆசிரியர் பயிற்சி பெறாத ஒருவர், ஆசிரியராகப் பணியாற்றாத ஒருவர் ஆசிரியர் தொகுதியிலே இருந்து வெற்றி பெற்று முதல் வரலாறு பெற்றவன் இந்த சண்முகம் தான் என்பதை நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எனவே அந்தப் பெருமையை எனக்குத் தேடித்தந்த ஆசிரியர்களை மனம் புண்படும்படி நிச்சயமாக நடத்த மாட்டேன் என்று உறுதி அளிக்கிறேன். அப்போது எல்லாம் பேசும்போது நான் சொல்வதுண்டு. வாழ்விலே விளக்கேற்றி வைத்த ஆசிரியர்கள் என்று சொல்வதுண்டு. அவர் ஏதோ ஒன்று சொன்னார். ஆசிரியர்கள் மாலை எல்லாம் கொண்டுவந்து வரவேற்க காசு இல்லை என்று கோபத்திலே செய்தீர்களா என்று சொன்னார். மன்னித்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை நான் போகிற இடங்களுக்கு ஆசிரியர்கள் வருவது அவர் கண்ணுக்குத் தெரியவில்லையோ அல்லது வருகிறவர்கள் போகவில்லை என்று தவறாக அவருக்குத் தகவல் கொடுக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. வர வேண்டுமென்று எந்த ஆசிரியர்களையும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் வருகிறார்கள்; வரவேற்க வேண்டிய இடத்திற்கு வருகிறார்கள். இப்போதுகூட பல ஆசிரியர்கள் சங்கங்களில் பேசிவிட்டு வந்திருக்கிறேன். ஆகவே ஆசிரியர்களுக்கும் எங்களுக்கும் எந்தவிதத் தகராறும் கிடையாது. இடையிலே சில பேர் இப்படி முடிச்சுப்போட்டு பார்ப்பது சரியாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போராட்டம் பற்றிச் சொன்னார்கள். தயவுசெய்து ஆசிரியர்களுக்கு நாங்கள் முழுப் பாதுகாப்பு அளிக்கிறோம், இந்த ஆட்சி அளிக்கும் என்று நான் உத்திரவாதம் அளிக்கிறேன். நிச்சயமாகப் பழி வாங்கும் நோக்கத்தோடு இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவரவில்லை. இன்னும் ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கு



மேயானால், ஊராட்சி ஒன்றியங்களில் இருந்த ஒத்துழைப்பு மாநில அளவிலே இருந்தால் தான் பழிவாங்குவதற்கு வெகு சுலபமாக இருக்கும். வடார்க்காடு மாவட்டத்தில் இருப்பவரைத் தூக்கி கன்னியாகுமரி மாவட்டத்தில் போடலாம். யூனிட்டே இல்லை. மாநிலம் முழுவதும் யூனிட் என்று கருதிவிட்டால், எந்த ஆசிரியரையும் எங்கு வேண்டுமானாலும் மாற்றலாம். ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றுகிற ஒரு ஆசிரியரை இன்னொரு இடத்திற்கு மாற்றும்போது, 'சீனியாரிட்டி பிக்ஸ்' பண்ணும்போது தகராறு வரும். ஊராட்சி ஒன்றியத்தில் இருப்பவர்களை வேறு ஒரு இடத்திற்குக் கொண்டு போய் போடுவது என்ற ஒரு கெட்ட நோக்கத்தில், இதைக் கொண்டுவரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்களை பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கு மேயானால், இப்போது இருக்கிற சட்டம் தான் சுலபமான சட்டம். அப்படிச் செய்யவில்லை என்று உறுதி அளிக்கிறேன். அதைப் பொறுத்தமட்டில், மிகத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார் அவர்கள் பேசும்போது 'காமன் சீனியாரிட்டி லிஸ்ட்' வேண்டுமென்று சொன்னார்கள். அதை மாநகராட்சிக்கு மட்டும் ஏற்படுத்தினால் போதாது. பொதுவாக இப்படி ஒரு சட்டம் வர இருந்தது என்று மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். அந்தச் சட்டம் வர இருக்கிறது. விரைவில் அந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவரப் போகிறோம். அப்படிச் சட்டம் வரும் போது திரு. ஜேப்பியார் சொன்ன 'காமன் சீனியாரிட்டி' பற்றி யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் பேசும்போது, ஆசிரியர்கள் எல்லாம் அச்சத்தோடும் வேதனையோடும் இருக்கிறார்கள் என்றார்கள். அச்சமும், வேதனையும் இருக்க வேண்டாமென்று இப்போதே தெரிவித்துக்கொள்கிறேன். ஏதோ இந்தச் சட்டத்தை நிறைவேற்றியவுடன் நாளை காலையிலே பழி வாங்குகிற வேலையில் ஈடுபடுவதுபோல, ஒரு தவறான எண்ணம் யார் மத்தியிலும் வரக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-25)

அப்படி ஒரு பழி வாங்கும் எண்ணம் அரசுக்கு இருந்தால், தவறான எண்ணம் இருந்தால், அதைப்பற்றி பின்னாலே இந்த அவையிலும் சரி இதற்கு வெளியேயும் சரி, நீங்கள் எந்த நடவடிக்கை எடுத்தாலும் சரி, அதற்கு இந்த ஆட்சி பதில் சொல்லக் கட்டுப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஜுலை 12

அடுத்து, கம்முடேஷன் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது இந்தச் சட்ட முன்வடிவோடு தொடர்புடையது அல்ல. மேலும் அதுபற்றிய முழுத் தகவல்களும் என்னிடம் இல்லை. இருந்தாலும், அப்படி இருந்தால் அதைப் பரிசீலிக்கலாம் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் பேசும்போது நகராட்சி, மாநகராட்சி ஊழியர்கள் பட்டியலிலிருந்து ஆசிரியர்களை எடுத்துவிட வேண்டும் என்று சொன்னார்கள். நகராட்சி ஊழியர்கள் பட்டியலில் தான் ஆசிரியர்களும் வருகிறார்கள். அவர்களைப்பற்றி அதில் சொல்லவில்லையே என்று குறிப்பிட்டார்கள். கெட்ட நோக்கத்தோடு ஆசிரியர்களைப் பிரித்துப் பேசக்கூடாது. அப்படி அவர்களைப் பிரித்தால், அக்கவுண்டென்ட்கள் என்ன ஆவது, ஜுனியர் அசிஸ்டென்ட்கள் என்ன ஆவது, கேஷியர்கள் என்ன ஆவது. பில் கலெக்டர்கள் என்ன ஆவது, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் என்ன ஆவது? எனவே இப்படிப் பிரிவு பிரிவாக பிரிக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களை மாற்ற வேண்டும் என்ற நோக்கம் இல்லை. இப்போது சென்னையிலேயே கூட சில மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். அதாவது 10 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே இடத்தில் பணியாற்றிய ஆசிரியர்களை மாற்றியிருக்கிறார்கள். நான் அதிகாரிகளைக் கூப்பிட்டுக் கேட்டேன். ஆமாம் என்றார்கள். எப்படி மாற்றினீர்கள் என்று கேட்டபோது, 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றியவர்களைப் பக்கத்து தெருவில் உள்ள பள்ளிக்கு மாற்றியிருக்கிறோம் அல்லது 4 தெருக்களைத் தாண்டி மாற்றியிருக்கிறோம் என்றார்கள். இப்படி மாநகராட்சிக்குள்ளேயே மாற்றியதையே எதிர்க்கிறார்கள். 10 ஆண்டுகளானாலும் சரி ஒரே இடத்தில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதே உணர்வோடுதான் அரசாங்கம் அதைச் சமாளிக்குமே தவிர, இரும்புக் கரத்தோடு ஒடுக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் அரசு தயாராக இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நல்ல கருத்துக்களையெல்லாம் தெரிவித்தார்கள். அவர்களுக்குப் பதில் சொல்ல எனக்கு நேரம் இல்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது யாரையும் பழி வாங்கக்கூடாது என்றார்கள். தூய நோக்கத்தோடு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நான் அதை வரவேற்கிறேன். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1985 ஜுலை 12] [திரு. ப. உ. சண்முகம்]

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் இங்கே இந்த உறுதிமொழியை அளிக்க விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவு கெட்ட நோக்கத்தோடு இங்கே கொண்டு வரப்படவில்லை. யாரையும் பழி வாங்கும் நோக்கத்தோடு கொண்டு வரப்படவில்லை. நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டம் இது என்று சொல்லி, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, யாரையும் பழி வாங்கக் கொண்டு வரவில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கே தெரியும் ஒரு தமிழாசிரியர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேடைகளில் புனை பெயரோடு இன்றைக்கும் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் மாநகராட்சியில் ஊழியர். அவர் மீது நடவடிக்கை எடுத்து வெளியே அனுப்ப முடியாதா? செய்தோமா? . . . . . .

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மையாகக்கூட இருக்கலாம். அதைப் போலவே அ.தி.மு.க. விலும் பேச்சாளர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியிலும் பேச்சாளர்கள் இருக்கிறார்கள். அந்தப் பட்டியல் என்னிடம் இருக்கிறது. இது ஒரு கட்சிப் பிரச்சினை மட்டுமல்ல. எல்லாக் கட்சியிலும் இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பழிவாங்க வேண்டாம் என்று சொன்னதற்காக நான் இதைப் பதிலாகச் சொன்னேன். பழி வாங்க வேண்டுமென்றால், எதிர்க் கட்சியில் இருப்பவர்களைத்தான் பழி வாங்குவார்களே தவிர எங்கள் கட்சிக்காரர்களைப் போய் பழி வாங்குவார்களா? எனவே தி.மு.க.வைச் சேர்ந்தவர் ஒரு மாநகராட்சி ஊழியர், தமிழாசிரியராகப் பணியாற்றுபவர் புனை பெயரில் பொதுக்கூட்டங்களில் எல்லா இடங்களிலும் பேசுகிறார். போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை செல்லும் அளவுக்கு இருக்கிறார். பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தால், நாளைக்கே நோட்டீஸ் கொடுத்து வெளியே அனுப்பிவிட முடியும். செய்யவில்லை. காரணம் அந்த அளவுக்குப் பெருந்தன்மையோடு இருக்கிற புரட்சித் தலைவர் அவர்களின் இந்த ஆட்சியைச் சந்தேகிக்க வேண்டாம் என்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1985) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



## 1. அரசின் தீர்மானங்கள்.

### (3) ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின்முன் வைக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

(பிற்பகல் 2-30)

### (4) பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் சார்பில்) :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின்முன் வைக்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு * பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானங்கள்—

"சட்டமன்ற மேலவையின்முன் வைக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளின்மீது விவாதம் 15—7—1985 அன்று தொடரும்.

மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 15—7—1985 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

---

@ 403-438 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது

* 439-488 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(பிற்பகல் 2-30)

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

258. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 22—5—1985 ஆம் நாளிட்ட 538-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது.]

259. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 22—4—1985-ஆம் நாளிட்ட 427-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

260. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 22—5—1985-ஆம் நாளிட்ட 539-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

261. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

262. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1983-84-ஆம் ஆண்டிற்கான முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]



1985 ஜுலை 12]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

*163. ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

@ 164. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரப் பலகைகளைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1985).

@ 165. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1985).

@ 166. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985-ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1985.

@ 167. 1985-86 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

@ 168. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1985-86 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

@ 169. 1985-86 ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

170. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முதலாவது அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்),

171. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை (தமிழ்).

172. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் தொழில் துறைகள் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை (தமிழ்).

173. நிதி நிறுவனங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1985-86 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

174. கடல் கடந்த நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கும் குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர்தணிப்பும் மறு வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

175. 1985-86 ஆம் ஆண்டிற்கான மறு வாழ்வுத்துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

176. தமிழ் நாடு பரிசு சீட்டு திட்டம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

177. 1985-86 ஆம் ஆண்டிற்கான சிறு சேமிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

178. மானியக் கோரிக்கை எண் 59 மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

## இணைப்பு—I

(258 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 352 பஞ்சாலைகளில் சுமார் 1,55 லட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். 1979 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாடு பஞ்சாலைத் தொழிலாளர்களின் சார்பாக பல தொழிற் சங்கங்கள் ஊதிய மாற்றம், பஞ்சப்படி போன்ற பல பொதுக்கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்த அறிவிப்பை அறிவித்தது. இத் தொழில் தகராறில் நடந்த சமரசப் பேச்சு வார்த்தைகள் தோல்வியுற்றதால் அரசு ஒரு சிறப்புத் தொழில் நீதிமன்றத்தை அமைத்து இத்தொழிற் தகராறை அதன் தீர்ப்பிற்கு விட்டது. இதற்கிடையே கோவை தென்னிந்திய பஞ்சாலை அதிபர்கள் சங்கத்திற்கும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் நடந்த நேரடிப் பேச்சு வார்த்தைகளின் பயனாக 17-7-79 அன்று தொழிற் தகராறு சட்டப் பிரிவு 18(1)-ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டது. மேற்சொன்ன சிறப்பு தொழில் நீதிமன்றமும் இந்த ஒப்பந்த அடிப்படையில் தனது தீர்ப்பை 28—9—79 அன்று அறிவித்தது.

---

* 10-7-1985 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

@ 11-7 1985 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.



மேற்சொன்ன ஒப்பந்த காலம் ஜூலை 1984-ல் முடிவடைந்ததால் பல தொழிற் சங்கங்கள் புதிய கோரிக்கைகளை நிர்வாகத்தின் முன் வைத்து இதன் மீது கோவை பஞ்சாலை அதிபர்கள் சங்கத்திற்கும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் நடந்த நேரடிப் பேச்சு வார்த்தைகளில் நிர்வாகத் தரப்பில் விஞ்ஞான ரீதியில் வேலைப்பளு நிர்ணயித்தல், உற்பத்தியுடன் இணைந்த ஊதியம், ஆறு மாதத்திற்கு ஒரு முறை பஞ்சப்படியுடன் விலைவாசிக் குறியீட்டுப் புள்ளியினை இணைத்தல் போன்ற எதிர் கோரிக்கைகள் (கவுண்டர் டிமாண்ட்ஸ்) வைக்கப்பட்டன. மேலும், எந்த ஊதிய உயர்வும் உற்பத்தி உயர்வுடன் தொடர்பு இருக்க வேண்டுமென்றும், ஊதிய உயர்வு மட்டும் இருக்கக் கூடாது என்று நிர்வாகத் தரப்பில் தெளிவாகக் கூறப்பட்டது. ஆனால் தொழிற் சங்கங்கள் நிர்வாகத் தரப்பில் கூறப்பட்ட கருத்துக்களை ஏற்க மறுத்தன.

இத்தொழிற் தாவாவில் கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் இரு தரப்பினர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தினார். அதன் பின்பு கோவை தென்னிந்திய பஞ்சாலை அதிபர் சங்கமும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் மீண்டும் நேரடிப் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டனர்.

கடைசியாக 14-6-85 அன்றும் 22-6-85 அன்றும் நடந்த நேரடிப் பேச்சு வார்த்தைகளில் உடன்பாடு ஏற்படவில்லை. அதனால் சங்கங்கள் வேலை நிறுத்த அறிவிப்புகள் கொடுத்து 16-7-85 முதல் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று தெரிவித்துள்ளது. இத்தொழிற் தகராறில் மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் 2-7-1985 அன்று சென்னை, தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் முன்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்பேச்சு வார்த்தைகளின் முடிவை எதிர்பார்த்து இத்தொழிற் தகராறில் ஒரு சுமுகமான உடன்பாடு ஏற்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். தற்சமயம் பதட்ட நிலைமை ஏதுமில்லை. நிலைமை அமைதியாக உள்ளது.

## இணைப்பு—II

(260 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள வடகைலாசம் கிராமக் கூட்டுறவு விவசாய சேவை சங்கத்தின் செயல்பாட்டினை கூட்டுறவுச் சங்கங்களின் 1961 ஆம் வருட சட்டப்பிரிவு 66-ன் கீழ் ஆய்வு செய்ததில், நிர்வாகக் குழு ஒழுங்கான முறையில் செயல்படாத காரணத்தினால் சில முறைகேடுகளும், கடுங் குறைகளும் ஏற்பட்டு, சங்கத்தின் நிதி நிலைமை பாதிக்கப்பட்டுள்ளதாக அறிந்து, தென்னாற்காடு மண்டல இணைப் பதிவாளருக்கு இச்சங்கத்தின்

செயல்பாட்டினை கூட்டுறவுச் சங்க சட்டப் பிரிவு 72(1)-ன் கீழ் நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்ததன் அடிப்படையில், தென்னாற்காடு மண்டல இணைப் பதிவாளரின் செயல்முறை ஆணை எண் 18829/84 மவ, நாள் 31-7-1984-ல் சட்டப்பிரிவு 72(1)-ன் கீழ் மேற்படி சங்க நிர்வாகக் குழுவினை 'கலைத்துக் கைகொள்ள ஆணை வழங்கப்பட்டது. மேலும், இச்சங்கத்திற்கு கூட்டுறவுத் துறை முதுநிலை ஆய்வாளர் ஒருவரை 6-8-1984 அன்று தனி அலுவலராக பொறுப்பேற்க வகை செய்யப்பட்டது. ஆனால், 6-8-1984 முதல் 10-8-1984 வரை சங்கம் மூடப்பட்டே இருந்ததால், தனி அலுவலரால் பொறுப் பேற்க இயலவில்லை.

இதற்கிடையில், மேற்படி ஆணையை எதிர்த்து திரு. ஆர். எஸ். மணி என்ற நிர்வாகஸ்தர், சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபேராணை விண்ணப்பம் எண். 8166/84 நாள் 10-8-1984 மூலம் தடையுத்தரவு பெற்றுள்ளார். மேற்படி தடையுத்தரவை ரத்து செய்ய 5-9-1984 அன்று சென்னை உயர்நீதி மன்றத் தில் எதிர் ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது. சென்னை உயர் நீதி மன்ற நானாவித ரிட் மனு எண் 12973/84 மற்றும் 16312/84 ஆகியு வைகள் விவாதிக்கப்பட்டு 16-11-1984-இல் ஏற்கனவே வழங்கப்பட்ட இடைக் கால தடையுத்தரவு நிரந்தரமாக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டதன் அடிப் படையில், தற்போதுள்ள நிர்வாகஸ்தர்கள் தொடர்ந்து பதவியில் நீடித்து வருகிறார்கள்.

தற்போதுள்ள சங்க நிர்வாகஸ்தர்களால் தொடர்ந்து சங்கம் செயல்பட அனுமதிக்கப்பட்டால், சங்கம் பலவகைகளில் பாதிப்புக்குள்ளாகி நிதியிழப்பு ஏற்படுவதற்கு இந்த தடையுத்தரவு உறுதுணையாக இருக்குமென்பதால், இந்த நிரந்தர தடையுத்தரவை (Stay Made Absolute) நீக்கக் கோரி உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இதுவரையில், மூல மனு உயர்நீதி மன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மேற்குறித்த உயர்நீதி மன்றத் தடையிருப்பதால், உயர்நீதி மன்ற நிரந்தரத் தடையை சாதகமாக எடுத்துக்கொண்டு குற்றமிழைத்த நிர்வாகஸ்தர்கள் தொடர்ந்து பதவியிலிருந்து வருகின்றனர். உயர்நீதி மன்றத் தடை நீக்கப் பட்ட பின்னரே சங்கம் நல்ல முறையில் செயல்பட நடவடிக்கை எடுக்க இயலும்.





## இணைப்பு -III.

(326 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

## L.A. BILL No. 38 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill to provide for the acquisition of the right, title and interests in hoardings and to prevent haphazard growth of hoardings and for matters incidental thereto.*

WHEREAS there has been in the recent past haphazard growth of hoardings in different places which leads to traffic hazards and numerous accidents;

AND WHEREAS it is necessary that hoardings should be put up only in convenient and select places;

AND WHEREAS for achieving that objective it is necessary that only the Government or such other authorities as may be authorised by the Government should alone erect hoardings at such convenient and select places;

AND WHEREAS, for fully achieving the said objective all existing hoardings should be acquired by the State Government for a public purpose;

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Acquisition of Hoardings Act, 1985.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall,—

(i) be deemed to have come into force in the City of Madras on the 10th July 1985; and

(ii) come into force in any other local area in the State of Tamil Nadu, on such date as the Government may, by notification, appoint; and different dates may be appointed for different local areas.

2. *Declaration as to the policy of the State.*—It is hereby declared that this Act is for giving effect to the policy of the State towards securing the principles specified in clauses (*b*) and (*c*) of Article 39 of the Constitution.

3. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(*a*) "amount" means the amount payable under this Act for the acquisition of the hoarding;

(*b*) "Authorised Officer" means an Authorised Officer appointed under section 12;

(*c*) "date of the commencement of this Act" in relation to the City of Madras means the 10th July 1985 and in relation to any other local area means, the date appointed by the notification issued under sub-section (3) of section 1 in relation to such other local area;

(*d*) "Government" means the State Government;

(*e*) "hoarding" means any screen of boards or framework or other support,—

(i) intended for exhibiting advertisement, or

(ii) on which any advertisement has beeen exhibited, which is erected wholly or in part upon or over any land, building, wall or structure, which or any part of which shall be visible from some point in any public place or private place and includes all and every part of any such screen of boards, framework or other support;

(*f*) "local area" means the City of Madras and any area, whether urban or rural, declared by the Government, by notification, to be a local area for the purposes of this Act;

(*g*) "person interested" in relation to any hoarding includes any person who has an interest in the hoarding and any other person who is affected by the vesting of the hoarding and claiming or entitled to claim an interest in the amount;

(*h*) "private place" means any place other than a public place;

(*i*) "public place" means any place (including a road, street or way, whether a throughfare or not, and a landing place) to which the public are granted access, or have a right to resort or over which they have a right to pass.



4. *Transfer to, and vesting in, the Government of all hoardings.*—(1) Save as otherwise provided in this Act, on and from the date of the commencement of this Act in any local area, all hoardings in existence on the date of such commencement in such local area and the right, title and interests of any person in relation to such hoardings, shall stand transferred to and vest in the Government for a public purpose free from all encumbrances.

(2) Any person interested, shall have no claim on or in relation to such hoarding, except a claim to the amount payable in respect of such hoarding under this Act.

(3) If any question arises whether any hoarding was in existence on the date of the commencement of this Act in any local area, the burden of providing such question shall lie, on the person who claims to be a person interested in respect of such hoarding.

5. ***Principles and method of determining the amount payable for the hoarding.***—(1) For the vesting of the hoarding under section 4, every person interested shall be entitled to receive such amount as may be determined in the manner hereinafter set out, that is to say,—

(*a*) where the amount can be fixed by agreement, it shall be determined in accordance with such agreement;

(*b*) where no such agreement can be reached, the Government shall appoint as arbitator a person who is not below the rank of a Deputy Collector;

(*c*) the Government may, in any particular case, nominate a person having expert knowledge as to the nature of the hoarding to assist the arbitrator and where such nomination is made, the person intersted may also nominate an assessor for the same purpose;

(*d*) at the commencement of the proceedings before the arbitrator, the Government and the person interested, shall state what in their respective opinion is the amount payable;

(*e*) the arbitrator, shall, after hearing the dispute, make an award determining the amount, which appears to him just and reasonable, and also specifying the person or persons to whom the amount shall be paid and in making the award he shall have regard to the circumstances of each case, and the provisions of the Schedule so far as it is applicable;

(f) where there is any dispute as to the person or persons who are entitled to the amount, the arbitrator shall decide such dispute and if the arbitrator finds that more persons than one are entitled to the amount he shall apportion the amount amongst such persons:

(g) nothing in the Arbitration Act, 1940 (Central Act X of 1940) shall apply to the Arbitrations under this section.

(2) Every award made by the arbitrator under clause (e) of sub-section (1) shall also state the amount of costs incurred in the proceedings before him and by what persons and in what proportions such amount is to be paid.

6. *Notice of determination of amount under sectios 5 to be given to all persons interested.*—Reasonable notice in respect of the amount determined under section 5 shall be given to all the persons interested.

7. *Manner of payment of amount for the hoarding acquired.*—(1) The amount determined under section 5 shall be given by the Government to the person interested.

(2) Where the amount has been fixed by agreement, it shall be paid in accordance with the terms of the agreement within a period of three months from the date of the agreement.

(3) Where the amount has been determined by an award of the arbitrator under section 5 and where no appeal has been preferred under section 8, the amount shall be paid within a period of three months from the date of the award.

(4) Where any person aggrieved by award has preferred an appeal under section 8, eighty per cent of the amount as determined by the award of the arbitrator shall be paid within a period of three months from the date of the award, and the balance amount, if any, due in accordance with the order of the Tribunal under section 8 shall be paid within a period of three months from the date of such order.

8. *Appeal from awards in respect of amount.*—(1) Any person aggrieved by an award may prefer an appeal to the Tribunal.

(2) The Government may constitute as many Tribunals as may be necessary for the purposes of this Act.

(3) The Tribunal shall consist of one person only who shall be a judicial officer not below the rank of a Subordinate Judge.





9. *Powers of the Tribunal.*—On receipt of any appeal, the Tribunal shall after—

(i) giving the parties an opportunity of making their representations;

(ii) making, if necessary, such enquiry as it deems fit, and

(iii) considering all the circumstances of the case, make such order as it deems just and equitable.

10. *Time for appeal.*—No appeal under section 8 shall be preferred after the expiry of thirty days from the date on which the award appealed against was received by the appellant :

Provided that the Tribunal may in its discretion allow further time not exceeding thirty days for preferring any such appeal if it is satisfied that the appellant had sufficient cause for not preferring the appeal in time.

11. *Arbitrator to have certain powers of civil court.*—The Arbitrator while holding arbitration proceedings under this Act shall have all the powers of a civil court while trying a suit under the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908) in respect of the following matters, namely :—

(a) summoning and enforcing the attendance of any person and examining him on oath,

(b) requiring the discovery and production of any document or other material object which is producible as evidence.

(c) reception of evidence on affidavits.

(d) requisitioning any public record or a copy thereof from any court or office,

(e) issuing commissions for the examination of witnesses or documents.

12. *Appointment of Authorised Officers.*—(1) The Government may appoint such number of officers as may be considered necessary and possessing such qualifications as may be prescribed, as Authorised Officers for the purposes of this Act.

(2) The Authorised Officer shall carry out such functions and duties as may be assigned to him by the Government for carrying into effect the provisions of this Act.

(3) Any person aggrieved by any order of the Authorised Officer under this Act may, within thirty days from the date of such order prefer an appeal to the Government or any officer specially empowered by the Government in this behalf:

Provided that the Government or the officer so empowered may entertain the appeal after the expiry of the said period of thirty days if they are, or he is, satisfied that the appellant was prevented by sufficient cause from filing the appeal in time.

13. *Power to obtain information.*—The Government or the Authorised Officer or any other officer specially empowered in this behalf by the Government may with a view to carrying out the purposes of this Act by order require any person to furnish to such officer as may be specified in the order, such information in his possession as may be specified relating to any hoarding. Such information shall be furnished by such person within the time specified in such order.

14. *Power to enter and inspect.*—The Authorised Officer or any other officer empowered in this behalf by the Government by general or special order, may after reasonable notice enter any premises and inspect the hoarding with a view to carrying out the purposes of this Act.

15. *Service of orders and notices.*—(1) Subject to the provisions of this section, and any rules that may be made under this Act, every order or notice made or issued under this Act shall,—

(*a*) in the case of any order or notice of a general nature or affecting a class of persons, be published in the *Tamil Nadu Government Gazette;*

(*b*) in the case of any order or notice affecting a corporation or a firm, be served in the manner provided for the service of summons in rule 2 of Order XIX of rule 3 of Order XXX, as the case may be, in the First Schedule to the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908); and

(*c*) in the case of any order or notice affecting an individual person (not being a corporation or firm) be served on such person—

(*i*) by delivering or tendering it to that person, or

(*ii*) if it cannot be so delivered or tendered, by delivering or tendering it to any officer of such person or any adult male member of the family of such person, or by affixing a copy thereof on the outer door or on some conspicuous part of the premises in which that person is known to have last resided or carried on business or personally worked for gain; or failing service by these means,



(*iii*) by post.

(2) Where the ownership of the hoarding is in dispute or where the persons interested in the said hoarding are not readily traceable and the order or notice cannot be served without undue delay, the order or notice may be served, by publishing it in the *Tamil Nadu Government Gazette*, and where possible, by affixing a copy thereof on any conspicuous part of the hoarding.

16. *Protection of action taken in good faith.*—(1) No suit, prosecution or other legal proceeding shall lie against any person for anything which is in good faith done or intended to be done in pursuance of this Act or any rule or order made thereunder.

(2) No suit or other legal proceeding shall lie against the Government, or any other officer for any damage caused or likely to be caused by anything which is in good faith done or intended to be done in pursuance of this Act or any rule or order made thereunder.

17. *Bar of jurisdiction of civil courts.*—Save as otherwise expressly provided in this Act, no civil court shall have jurisdiction in respect of any matter which the Government are, or an arbitrator or Authorised Officer is, empowered by or under this Act to determine, and no injunction shall be granted by any court or other authority in respect of any action taken or to be taken in pursuance of any power conferred by or under this Act.

18. *Prohibition for erection of hoardings by any person other than the Government, etc.*—Notwithstanding anything contained in the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) or the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) or the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981) or in any other law for the time being in force, on and from the date of the commencement of this Act no person other than the Government or any other authority or officer specially authorised by the Government, in this behalf, shall erect any hoarding in any public place or any private place:

Provided that where any person erects any hoarding in any public place or any private place within the City of Madras on and after the 10th July 1985 and before the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*, any officer specially authorised by the Government in this behalf shall after giving an opportunity to the person interested, remove such hoarding and no amount shall be paid in respect of the hoarding so removed.

19. *Penalty for offences.*—Whoever contravenes—

(*a*) in the City of Madras on or after the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*; and

(*b*) in any other local area on or after the date appointed by the notification issued under sub-section (3) of section 1 in relation to such other local area any provision of this Act or any rule or order made under this Act, or obstructs the lawful exercise of any power conferred by or under this Act, shall be punished with imprisonment for a term which may extend to three years or with fine, or with both.

20. *Offences by companies.*—(1) Where an offence under this Act has been committed by a company, every person who, at the time the offence was committed, was inchage of, and was responsible to, the company, for the conduct of the business of the company, as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment, if he proves that the offence was committed without his knowledge or that he had exercised all due diligence to prevent the commission of such offence.

(2) Notwithstanding anything contained in sub-section (1), where any offence under this Act has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of, or is attributable to any neglect on the part of any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall be deemed to be guilty of that offence and shall be liable to be proceeded against and punished accordingly.



*Explanation.*—For the purposes of this section,—

(*a*) "company" means any body corporate and includes a firm or other association of individuals; and

(*b*) "director", in relation to a firm, means a partner in the firm.

21. *Certain persons to be public servants.*—Every arbitrator, Authorised Officer and every other officer empowered by the Government, while exercising any power or performing any duty under this Act shall be deemed to be a public servant within the meaning of section 21 of the Indian Penal Code (Central Act XLV of 1860).

22. *Act to override other laws, etc.*—Save as otherwise provided this Act, the provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the Act being in force " or in any decree or order of any court, tribunal or other authority."

23. *Utilisation of acquired hoardings.*—It shall be open to the Government to remove any hoarding acquired under this Act or to use or permit the use of such hoarding in public interest in such manner as they deem fit.

24. *Exemptions.*—Nothing contained in this Act shall apply to,—

(*a*) any hoarding belonging to,—

(*i*) the Central Government;

(*iii*) any State Government;

(*iii*) any company or other authority owned or controlled by the Central Government or any State Government; or

(*iv*) any such institution as may be approved by the Government in this behalf; or

(*v*) any hoarding on which is exhibited any adbertisement which relates to,—

(*i*) the trade or business carried on within the land or building, upon or over, which such hoarding is erected or to any sale or letting of such land or building or any effects therein or to any sale, entertainment or meeting, to be held upon or in such land or building; or

(ii) the name of the land or building, upon or over which the hoarding is erected or to the name of the owner or occupier of such land or building.

25. *Power to exempt.*—Where the Government, of their own motion or otherwise, are satisfied that the application of the provisions of this Act would cause undue hardship to any class of persons owning the hoardings, the Government may, by order, exempt, whether prospectively or retrospectively, and subject to such conditions, if any, as may be specified in the order, such hoardings from all or any of the provisions of this Act.

26. *Committee for selecting places where hoardings can be erected.*—(1) There shall be constituted a Committee for each local area whose duty shall be to select places for erection of hoardings.

(2) Every such Committee shall consist of—

(a) an officer of the police department not below the rank of a Deputy Commissioner of Police or a Superintendent of Police;

(b) a representative of the local authority concerned;

(c) not more than five other official members;

to be appointed by the Government.

(3) The Government shall appoint one of the members specified in sub-section (2) to be the Chairman of the Committee.

(4) Every Committee shall, in selecting places, for erection of hoardings have regard to the following matters, namely:—

(a) the location of the proposed hoarding;

(b) the effect of such hoarding on moving traffic; and

(c) such other matters as may be prescribed.

27. *Power to make rules.*—(1) The Government may make rules for carrying out the purposes of this Act.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:—

(a) the procedure to be followed in arbitration proceedings and appeals under this Act;



(b) the principles to be followed in apportioning the cost of the proceedings before the arbitrator and an appeal under this Act;

(c) the manner of service of notices and orders;

(d) any other matter which has to be, or may be prescribed.

(3) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette* and unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(4) Every rule made under this Act shall, as soon as possible after it is made, be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

## THE SCHEDULE.

(*See* section 5.)

## PRINCIPLES FOR DETERMINING THE AMOUNT.

1. In respect of every hoarding, the amount to be paid shall be the market value of such hoarding as on the date of the commencement of this Act.

2. In the case of any lease or licence in respect of the place where the hoarding has been erected or in respect of the hoarding itself, the persons interested shall be paid an amount equal to the income that would have been derived by them during the unexpired period of lease or licence, if the provisions of this Act had not come into force:

Provided that where any such lease or licence has expired on or before the date of the commencement of this Act, the persons interested shall be paid an amount equal to the income that would have been derived by them for a period of one month if the provisions of this Act had not come into force:

Provided further that in the case of any hoarding which has been erected on any land without the consent of the owner and the hoarding is in existence on the date of the commencement of this Act and where any lease or licence has been entered into in respect of such hoarding, no amount shall be paid to any person interested in such lease or licence, whether the period of lease or licence has expired or not.

*Explanation I.*—For the purposes of the second proviso, a 'hoarding' shall be deemed to have been erected without the consent of the owner, if the consent of the owner though obtained initially, has not been expressly obtained in writing for the renewal of the lease or licence.

*Explanation II.*—For the purpose of the second proviso, 'owner' includes any person deriving rights through him.

## இணைப்பு IV

*[353ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக் குறிப்பைக் காண்க].*

(L.A. Bill No. 37 of 1985.)

(As Passed by the Assembly)

*A Bill further to amend the Madurai City Municipal Corporation Act, 1971.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madurai City Municipal Corporation (Amendment) Act, 1985.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 62-A, Tamil Nadu Act 15 of 1971.*— In sub-section (1) of section 62-A of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), for the expression "within a period of one year", the expression "within a period of one year and six months" shall be substituted.





## இணைப்பு V

*[355ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக் குறிப்பைக் காண்க].*

L.A. Bill No. 39 of 1985.

(As passed by the Assembly)

*A Bill further to amend the laws relating to Municipal Corporations and Municipalities.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

### PART I.

### PRELIMINARY.

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Municipal Laws (Amendment) Act, 1985.

(2) it shall come into force at once.

### PART II.

### AMENDMENT TO THE MADRAS CITY MUNICIPAL CORPORATION ACT, 1919.

2. *Substitution of section 97, Tamil Nadu Act IV of 1919.*— For section 97 of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), the following section shall be substituted, namely :—

"97. *Power of State Government to transfer officers and servants of the corporations or municipalities.*—(1) Notwithstanding anything contained in this Act or in any other law for the time being in force, the State Government shall have power—

(*a*) to transfer any officer or servant of the corporation to the service of the Municipal Corporation of Madurai constituted under the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) or the Municipal Corporation of Coimbatore constituted under the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981) or any other municipal corporation constituted under any law for the time being in force; or

(*b*) to transfer any officer or servant of the Municipal Corporation of Madurai constituted under the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) or the Municipal Corporation of Coimbaore constituted under the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981). or any other municipal corporation constituted under any law or the time being in force, to the service of the corporation, or

(*c*) to transfer any officer or servant of the corporation to the service of any municipality constituted Act, Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920); or

(*d*) as transfer any officer or servant of any municipality constituted under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), to the service of the corporation.

(2) The State Government shall have power to issue such general or special directions as they may deem necessary for the purpose of giving due effect to any transfer made under sub-section (1) ".

## PART III.

## AMENDMENT TO THE TAMIL NADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920.

3. *Substitution of section 73-A, Tamil Nadu Act V of 1920.*— For section 73-A of the Tamil Nadu district municipalities Act 1920 (Tamil Nadu Act V of 1920), the following section shall be substituted, namely :—

" 73-A. *Power of State Government to transfer officers and servants of municipalities or corporations.*—(1) Notwithstanding anything contained in the Act or in any other law for the time being in force, the State Government shall have power—

(*a*) to transfer any officer or servant of a municipality to the service of the Municipal Corporation of Madras constituted under the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) or the Municipal Corporation of





Madurai constituted under the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), or the Municipal Corporation of Coimbatore constituted under the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981) or any other municipal corporation constituted under any law for the time being in force; or

(*b*) to transfer any officer or servant of any of the municipal corporation referred to in clause (*a*), to the service of any municipality; or

(*c*) to transfer any officer or servant of any municipality to the service of any other municipality.

(2) The State Government shall have power to issue such general or special directions as they may deem necessary for the purpose of giving due effect to any transfer made under sub-section (1) ".

## PART IV.

## AMENDMENT TO THE MADURAI CITY MUNICIPAL CORPORATION ACT, 1971.

4. *Substitution of section* 114, *Tamil Nadu Act* 15 *of* 1971.— For section 114 of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), the following section shall be substituted, namely :—

" 114. *Power of Government to transfer officers and servants of the corporation or municipalities.*—(1) Notwithstanding anything contained in this Act or in any other law for the time being in force, the Government shall have power—

(*a*) to transfer any officer or servant of the corporation to the service of the Municipal Corporation of Madras constituted under the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) or the Municipal Corporation of Coimbatore constituted under the Coimbtore City Municipal Corporation Act. 1981 (Tamil Nadu Act 25 of 1981) or any other municipal corporation constituted under any law for the time being in force, or

[1985 ஜூலை 12

(b) to transfer any officer or servant of the Municipal Corporation of Madras constituted under the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) or the Municipal Corporation of Coimbatore constituted under the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981) or any other municipal corporation constituted under any law for the time being in force, to the service of the corporation; or

(c) to transfer any officer or servant of the corporation to the service of any municipality constituted under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920); or

(d) to transfer any officer or servant of any municipality constituted under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), to the service of the corporation.

(2) The Government shall have power to issue such general or special directions as they may deem necessary or the purpose of giving due office to any transfer made under sub-section (1) ".

## PART V.

## AMENDMENT TO THE COIMBATORE CITY MUNICIPAL CORPORATION ACT, 1981.

5. *Substitution of section* 116, *Tamil Nadu Act* 25 *of* 1981.—For section 116 of the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981), the following section shall be substituted, namely:—

" 116. *Power of Government to transfer officers and servants of the Corporation or Municipalities.*—(1) Notwithstanding anything contained in this Act or in any other law for the time being in force the Government shall have power

(a) to transfer any officer or servant of the corporation to the service of the Municipal Corporation of Madras constituted under the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) or the Municipal Corporation of



1985 ஜூலை 12]

Madurai constituted under the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) or any other municipal corporation constituted under any law for the time being in force, or

(b) to transfer any officer or servant of the Municipal Corporation of Madras constituted under the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) or the Municipal Corporation of Madurai constituted under the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) or any other municipal corporation constituted under any law for the time being in force, to the service of the corporation; or

(c) to transfer any officer or servant of the corporation to the service of any Municipality constituted under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920); or

(d) to transfer any officer or servant of any municipality constituted under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), to the service of the corporation."

(2) The Government shall have power to issue such general or special directions as they may deem necessary for the purpose of giving due effect to any transfer made under sub-section (1)'.

## இணைப்பு VI

*(381 ஆம் பக்கத்தில் இனம் 1 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)*

*தமிழ் நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றம்.*

*"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்" என்ற தலைப்பின் கீழ் 1985-86 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 31-இல் ரூ. 1,409.60 இலட்சம் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு இச்சட்டமன்றப் பேரவையினை வேண்டுகிறேன்.*

*2. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதி திராவிடர் 88.81 இலட்சம் பேர். இது மொத்த மக்கட் தொகையில் 18.35 விழுக்காடு ஆகும். பழங்குடியினர் 5.20 இலட்சம் பேர். இது இம்மாநிலத்தில் மொத்த மக்கட் தொகையில் 1.07 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டில் மொத்த மக்கட் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 46.76 விழுக்காடு ஆகும். ஆதிதிராவிடர்களில் 29.67 விழுக்காடும், பழங்குடியினரில், 20.45 விழுக்காடும் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.*

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மானிய கோரிக்கையின் மீது அரசின் கொள்கை விளக்கத்தை இப்பேரவையில் நான் எடுத்துக் கூறும் முன் அவர்களுக்காக பல்வேறு துறைகள் மூலம் அரசு எடுத்த சமூக, பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளைப் பற்றி கூற விழைகிறேன்.

4. இவ்வரசு ஆதிதிராவிடர்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்தும் பணிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. அவர்களுடைய நலிவுற்ற பொருளாதார நிலையின் காரணமாக, சமூக நிலையில் தாழ்வுற்று இருக்கிறார்கள். அதனால் அவர்கள் சமூக நிலையில் கொடும் செயல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். எனவே அவர்களுடைய மேம்பாட்டுக்கு திட்டமிடப்பட்ட ஒரு சீரிய பொருளாதார அடிப்படையில் ஒரு நிரந்தர தீர்வு காண இந்த அரசு விழைகிறது.

5. நெடுங்காலமாக தமிழக அரசு ஆதி திராவிடர்/பழங்குடியினர் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

6. ஆதிதிராவிடர்களுக்காக வகுக்கப்பட்ட சிறப்பு உள்ளடக்க திட்டம் மற்றும் பழங்குடியினருக்காக பழங்குடியினர் நல துணைத் திட்டம் ஆகியவற்றை துவக்கியதன் மூலம் அவர்களுடைய முன்னேற்றம் மேலும் வலுப்பட்டுள்ளது. இவ்விரண்டு திட்டங்களும், அவர்களுடைய வாழ்க்கைக்கு புது நம்பிக்கையினை தோற்றுவித்துள்ளன. ஆதி திராவிடர்கள் நலனுக்காக சிறப்பு உள்ளடக்க திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வளர்ச்சி துறையிலும் குறிப்பிட்ட பணியில் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு; அதன் மூலம் உண்டான திட்டங்களினால், இருமுனைக் குறிக்கோள்களாகிய (1) வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள 50 விழுக்காடு ஆதிதிராவிடர் குடும்பங்களை வறுமை நிலையிலிருந்து விடுவித்து நல்ல நிலைமைக்கு கொண்டு வருதல் மற்றும் (2) ஏழாவது ஐந்தாண்டு கால திட்டத்தில் ஆதிதிராவிடர் காலனிகளில் அடிப்படைத் தேவைகளையும் மற்றும் இதர வசதிகளையும் செய்து கொடுக்க வகை செய்தல் ஆகியவை நிறைவேற்றப்படுகிறது. பொருளாதார வளர்ச்சித் திட்டங்களினால் ஆறாவது ஐந்தாண்டு கால திட்டத்தின் குறியீடான 6 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களில் 8-90 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். ஏழாவது ஐந்தாண்டு கால திட்டத்திற்கான குறியீடு 10 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களில் 8.90 இலட்சம் குடும்பங்கள் பயனபட்ட குறியீடு 2 இலட்சம் குடும்பங்கள், பொருளாதார மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்துவதுடன் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் காலனிகளில் அடிப்படை வசதிகளை ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செய்து கொடுப்பதை குறிக்கோளாக கொண்டுள்ளது. 1985-86 இல் இத் திட்டத்தின் கீழ் பல்வேறு வளர்ச்சித் துறைகளின் மூலம் 125.34 கோடி செலவிடப்படும். இது குறித்த விவரங்கள் இணைப்பு II -ல் உள்ளது.



7. பழங்குடியினர் மக்கள் தொகை குறைவாக இருந்த போதிலும், அவர்கள் பிரச்சினைகள் தனித்தன்மை வாய்ந்ததாகவும், சிக்கலானதாகவும் உள்ளன. பழங்குடியினர் மிகுந்து காணப்படும் சேலம், தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி மற்றும் வடாற்காடு மாவட்டங்களில் 9 தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் பழங்குடியினர் துணைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பழங்குடியினர் துணைத் திட்டமானது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் பழங்குடியினர் குடும்பங்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் தீவிரத் திட்டமாகும். தமிழ்நாட்டில் மேற்கண்ட 9 குறியிடப்பட்ட இடங்களில் சுமார் 2.10 இலட்சம் பழங்குடியினர் வாழ்கிறார்கள். இத்திட்டத்தின் கீழ் பொருளாதார முன்னேற்ற பணிகளும் அவர்கள் வசிக்கும் பகுதி மேம்பாடு அடையவும் குடிநீர் வசதி, சாலை அமைத்தல், மின்வசதி அளித்தல், பள்ளி வசதி, சுகாதார வசதி போன்ற அனைத்து முன்னேற்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்படி 1985-86 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளின் மூலம் பழங்குடியினர் நலனுக்காக ரூ. 761.57 இலட்சம் செலவு செய்யப்படும். இதன் விவரங்கள் கீழே இணைப்பு III-ல் உள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 19,000 பழங்குடியினர் குடும்பங்கள் பயன் பெறுவர் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருந்தும், அத்திட்டத்தின் மூலம் இதற்கு மேலாக 27,254 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ஏழாவது ஐந்தாண்டுக் காலத் திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 46,979 பழங்குடியினர் குடும்பங்களாகும்.

8. சுருங்கக் கூறுமிடத்து அரசு மேற் கொண்ட முயற்சிகளால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் சமூக பொருளாதார நிலைகளில், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில் கற்றோர் நிலை 1971 இல் இருந்ததைவிட இப்போது முறையே 7.85 மற்றும் 11.43 விழுக்காடு உயர்ந்துள்ளது. இதே கால அளவில் பொது மக்கள் தொகையில் கற்றோர் நிலையில் உயர்வு 7.30 விழுக்காடு ஆகும். 1985-86 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கு அரசு செலவிடும் மொத்தத் தொகை ரூ. 712.66 கோடிகளாகும்.

[1986 ஜூலை 12

9. நான் இதுவரை ஆதிதிராவிடர் மற்றும பழங்குடியினர் மேம்பாட்டுக்காக அரசு மேற்கொண்ட முயற்சிகளை பொதுவாகக் கூறியுள்ளேன். இப்போது 'ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்தின்' கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் சிறப்பியல்புகளை தங்கள முன வைக்கிறேன்.

**கல்வி :**

10 ஆதி திராவிடர்களின் சமூக பொருளாதார முன்னேற்றம் கல்வியைச் சார்ந்து உள்ளதால், அரசு இதற்கு முன்னுரிமை தருகிறது. தமிழ்நாட்டில் 12-வது வகுப்பு வரை எல்லோருக்கும் இலவச கல்வி அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு முதுநிலை பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. அதிக அளவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி அளிக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. பள்ளிக்குச் செல்லும் வயதுடைய 25 இலட்சம் ஆதிதிராவிடர் குழந்தைகளில் 19.56 இலட்சம் பேர் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதாவது, 78.3 விழுக்காடு பள்ளி செல்லும் வயது வந்த ஆதிதிராவிடர் மாணவர்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏழாவது ஐந்தாண்டுக் காலத் திட்டத்தில் மேலும் 4 இலட்சம் ஆதிதிராவிடர் குழந்தைகள் கல்வி அறிவு பெற வகை செய்யப்படும். எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்புகளின் அருகாமையில் ஆரம்பக் கல்வி பெற, பள்ளி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய உறுதியான நடவடிக்கைகளினால் ஆதி திராவிடர் பழங்குடியினர்களுடைய கல்வி நிலை விகிதம் மேலே கூறியபடி குறிப்பிடத் தக்க வகையில் உயர்ந்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பெற்றோர்கள், அவர்களது குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பதனால் ஏற்படும் சுமையை குறைக்க, அவர்களின் குழந்தைகளுக்கு மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு மற்றும் மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பு பெற படிப்பு உதவித்தொகை வழங்கப்படுகிறது. மெட்ரிக் படிப்புக்கு முந்திய படிப்புக்கு வழங்கப்படும் உதவித் தொகை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பெற்றோரின் ஆண்டு உச்சவருமானம் நீக்கப்பட்டு விடுதியில் தங்கிப் பயிலாத அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களும் பயன்பெறும்படி தற்பொழுது வகை செய்யப்பட்டுள்ளது. ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கு மேற்படாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெற்றோர்களின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகையாக மெட்ரிக் படிப்புவரை உறைவிட படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. தற்போதைய உண்டு உறைவிடக் கட்டண விதம் அவர் ஆணா பெண்ணா என்பதைக் கொண்டும் அவர் எந்த வகையான படிப்பு பயிலுகிறார் என்பதைக் கொண்டும் கணக்கிட்டு ரூ. 250-லிருந்து ரூ. 350 வரை அளிக்கப்படுகிறது.



1985, ஜூலை 12]

**மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு :**

11. மெட்ரிக் படிப்புக்கு மேற்படிப்பு வரை எல்லா ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கும் இலவச கல்வி அளிக்கப்படுகிறது. மாணவர்களால் செலுத்தப்படும், தனிக் கட்டணம் மற்றும் இதர அனைத்துச் செலவுகளும் உதவித்தொகையில் அடங்கும். விடுதியில் தங்கிப் படிப்பவர்களைப் பொறுத்தவரையில் மேற்கண்ட சலுகைகளும், புத்தகத்திற்காகும் செலவு மற்றும் உண்டு-உறைவிடச் செலவு சேர்த்தும் படிப்புதவித் தொகையாக வழங்கப்படும். மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பு உதவித்தொகை திட்டத்தின்கீழ் மாநில அரசு படிப்பு உதவித்திட்டம் மற்றும் மத்திய அரசின் படிப்பு உதவித்திட்டம் என இரண்டு திட்டங்கள் உள்ளன. (மத்திய அரசு முழு உதவித்தொகையையும் இத்திட்டத்தின்கீழ் கொடுப்பதில்லை). மத்திய அரசு மற்றும் மாநில அரசு படிப்பு உதவித்திட்டத்தின்கீழ் உதவி பெறும் மாணவரின் பெற்றோர் ஆண்டு வருமானம் முறையே ரூ. 12,000-க்குள்ளும் மற்றும் 6,000-க்குள்ளும் இருக்க வேண்டும். விடுதியில் தங்கிப் பயிலாத மாணவர்கள் மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் ஆண்களா அல்லது பெண்களா மற்றும் எந்த படிப்பு பயிலுகின்றனர் என்பதை கணக்கில் கொண்டு மத்திய அரசு பராமரிப்பு உதவித்தொகை மாதந்தோறும் முறையே ரூ. 50-லிருந்து ரூ. 120 மற்றும் ரூ. 75-லிருந்து ரூ. 200 வரை தற்போது தரப்படுகிறது. மாநில அரசு திட்டத்தின் கீழ் ரூ. 50-லிருந்து ரூ. 75 வரை விடுதியில் தங்கி படிக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதந்தோறும் அளிக்கப்படுகிறது. மேற்கண்ட இவ்விரு திட்டங்களின்கீழ் ஆண்டு தோறும் கிட்டத்தட்ட 59,000 ஆதிதிராவிடர் மாணவர்களும் 300 பழங்குடி மாணவர்களும் பயனடைகிறார்கள். மேற்காணப்பட்ட படிப்பு உதவித் தொகைகளைத் தவிர காந்தியடிகள் நினைவு படிப்புத் தொகை, தகுதி-வருவாய் பரிசுத்திட்டம் மற்றும் தகுதிக்கென்று வழங்கும் தனி மானியம் போன்ற ஊக்க உதவித் தொகைகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. படிப்பு உதவித்தொகை தவிர படிப்புக்கு ஆகும் செலவை சரிகட்ட, கடன் உதவித் தொகை தேவைப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்விதம் பயன் பெறுவோர் ஆண்டிற்கு சுமார் 8,200 மாணவர்கள் ஆவர். துப்புரவு பணிகளில் ஈடுபட்டுள்ளோர்களின் பிள்ளைகள் பயன் அடையும் வகையில் சிறப்பு உதவித்தொகைகள் தரப்படுகின்றன. இதன் வாயிலாக பயனடைவோர் கிட்டத்தட்ட 600 மாணவர்கள் ஆவர்.

**பள்ளிகள் :**

12. இந்த அரசு நடத்தி வரும் 952 பள்ளிகளில் 2.09 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். இம்மாணவர்களுக்கு பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் ஒன்று முதல் எட்டு வகுப்புவரை உள்ள வகுப்புகளில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாக இரண்டு ஜதை சீருடைகள் வழங்கப்படுகின்றன. பழங்குடியினர் மாணவர்களின் நலன் கருதி அரசு 160 பள்ளிகளை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் 9,800 பழங்குடியினர் மாணவர்களுக்கு உணவு மற்றும் உறைவிட வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, 500 உயர் நிலைப் பள்ளிகளிலும் மற்றும் 300 மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளி நேரம் முடிந்த பின் ஒன்றரை மணி நேரம் சிறப்பு பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுகிறது. (அ) ஆங்கிலம், (ஆ) கணிதம், (இ) இயற்பியல், (ஈ) இரசாயனம், (உ) விலங்கியல், (ஊ) தாவரவியல், (எ) வணிகவியல் போன்ற பாடங்கள் மேற்படி திட்டத்தில் உள்ளடங்கும். மேற்படி திட்டத்தினால் 57,000 மாணவர்கள் பயனடைகின்றனர்.

**விடுதிகள் :**

13. ஆதிதிராவிடர் மாணவர்கள் இலவசமாக உணவு மற்றும் தங்கும் வசதியுடன் கல்வி பயில 735 விடுதிகள் (713 ஆதிதிராவிடர்களுக்கு மற்றும் 22 பழங்குடியினர்களுக்கு) அரசால் நடத்தப்படுகின்றன. இவ்விடுதிகளில் 50,238 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற மாணவர்கள் தங்கி கல்வியைத் தொடருகிறார்கள். ஆதிதிராவிடர் மாணவர்கள் ஆதிதிராவிடர் அல்லாத பிற மாணவர்களுடன் கலந்திருக்கும் பொருட்டு மூற்பட்டோர் மற்றும் பின் தங்கிய வகுப்பு மாணவர்களும் இவ்விடுதிகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு விடுதிகளில் தங்கும் மாணவர் ஒருவருக்கு ஆகும் உணவுச் செலவு அவ்விடுதியிலிருக்கும் பகுதியைப் பொறுத்தும், மாணவர் பயிலும் படிப்பு பிரிவைப் பொறுத்தும் ரூ. 60 லிருந்து ரூ. 95 வரை நிர்ணயிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மாணவருக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகளை அளிப்பதற்காக 1985-86-ல் 15 புதிய விடுதிகள் திறக்கப்படும். இவ்வாண்டில் ஆதிதிராவிடர் விடுதிகளில், கூடுதலாக 750 மாணவர்களை சேர்க்கும் பொருட்டு, தற்பொழுதுள்ள விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். புதிய விடுதிகளைத் திறப்பதற்காகவும், பராமரிப்பதற்காகவும் 1985-861ல் ரூ. 561.80 இலட்சங்கள் செலவிடப்படும்.



அரசு நடத்தும் விடுதிகள் தவிர, மேலும் இத்தகைய 41 விடுதிகள் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இந்த விடுதிகளுக்கு அரசால் நிதி உதவி கொடுக்கப்பட்டு வருகிறது.

**விடுதிகளுக்கான கட்டிடங்கள் கட்டுதல்.**

14. விடுதியில் தங்கி படிப்பவர்களுக்காக இன்றியமையாத வசதிகள் கொண்ட விடுதிகள் படிப்படியாக கட்டப்படுகின்றன. இதற்காக 1985-86-ல் ரூ. 160 இலட்சம் செலவிடப்படும். மேலே குறிப்பிடப்பட்டவற்றிலிருந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி மேம்பாட்டுக்கு அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது என்பது தெளிவாகும். உண்மையிலேயே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல திட்டங்களுக்காக அளிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் 50 விழுக்காட்டுக்கு மேல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்விக்கென செலவிடப்படுகிறது.

**பொருளாதார மேம்பாடு:**

15. தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதிதிராவிடர்களில் சுமார் 7.40 இலட்சம் பேர் விவசாயிகள். இவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காக பாசனக் கிணறுகள் வெட்டுவதற்காக ரூ. 5,000-ம், உழவு மாடுகள் வாங்குவதற்காக ரூ. 600-ம் மானியமாக வழங்கப்படுகின்றன. இதில் மானியத் தொகை மொத்த செலவில் 1/3 பகுதியாகும். எஞ்சிய 2/3 பகுதியான தொகை நிதி உதவி நிறுவனங்களால் வழங்கப்படும். 1985-86 ஆம் ஆண்டில், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ. 10.13 இலட்சங்கள் செலவிடப்படும்.

கிராமப்புற கைவினைஞர்கள் பிறர் உதவியை எதிர்நோக்காமல், தங்கள் சுய முயற்சியினால் தங்கள் தொழிலை மேற்கொள்ளும்பொருட்டு தொழில் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

சிறு தொழில்கள் தொடங்குவதற்காக நிதி உதவியும் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது :—

| | |
|---|---|
| (1) அரசு மான்யம் | 25 விழுக்காடு |
| (2) தொடக்க செலவுத் தொகை | 25 விழுக்காடு |
| (3) வங்கி மூலம் கடன் | 50 விழுக்காடு |

[1985 ஜூலை 12

ஆதிதிராவிடர்கள், கறவை மாடுகள் வளர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டு தலைக் கருத்தில் கொண்டும், பாலின் மிகுதியான தேவையினைக் கருத்தில் கொண்டும், பால் வழங்கு கூட்டுறவு சங்கங்கள் அவர்களுக்காக நிறுவப்பட்டுள்ளன. கறவை மாடு ஒன்றின் விலை ரூ. 2,500. இதில், 50 விழுக்காடு தொகை ரூ. 1,250 மானியமாகவும், எஞ்சிய தொகை நிதி நிறுவனங்களாலும் வழங்கப்படுகிறது. மானியமாக வழங்கப்படும் 50 விழுக்காடு தொகையில், 33½ விழுக்காடு தொகை, ஆதிதிராவிடர் நலத்துறை நிதியிலிருந்தும், எஞ்சிய தொகை, மத்திய சிறப்பு நிதியில் இருந்தும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் இரண்டு கறவை மாடுகள் வாங்குவதற்கு தகுதியுடையவர் ஆவர். இத்திட்டத்தின் கீழ், 1985-86-ல் ரூ. 32.15 இலட்சங்கள் செலவிடப்படும்.

**பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு :**

16. தமிழ் நாடு தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தொகுதி-4 பணிக்குரிய போட்டித் தேர்வினை எழுத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் காலம் இரண்டு மாதங்களாகும்.

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி போன்ற அனைத்து இந்திய பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத விழையும் ஆதிதிரகவிடர் மற்றும் பழங்குடியினரின் வெற்றி வாய்ப்பினை மேம்படச் செய்ய முன் பயிற்சி 1966 ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்படுகிறது. முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுகின்ற திறமை மிக்க ஆதிதிராவிடர் விண்ணப்பதார மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000 அல்லது அதற்கு குறைவாக இருப்பின் டெல்லியில் உள்ள டாக்டர் ராவின் படிப்பு மையத்திற்கு குடிமுறை அரசுப் பணித் தேர்வுகளில் சிறப்பு பயிற்சி பெறவும் அனுப்பப்படுகிறார்கள். வழக்கறிஞர் தொழில் செய்ய விரும்பும் ஆதிதிராவிடர் மற்றும், பழங்குடியைச் சேர்ந்த சட்ட பட்டதாரிகள் தங்கள் பெயரை வழக்கறிஞர் குழுவில் பதிவு செய்து கொள்ளவும், அவர்கள் தங்கள் தொழிலை நடத்தும் பொருட்டு நீதி மன்றக் கட்டிடங்களில் ஒதுக்கப்படுகின்ற வழக்கறிஞர்களுக்கான அறை வாடகை போன்ற செலவினத்திற்கு கடனாக ரூ. 750-ம் மற்றும் சட்ட புத்தகங்கள், மரச் சாமான்கள் முதலியவை வாங்குவதற்கு ரூ. 750-ம் அரசு மான்யமாகவும் வழங்கப்படுகிறது.



1985 ஜூலை 12]

**வீட்டு வசதி :**

17. (1) **வீட்டு மனைகள் வழங்கல்.**—வசிப்பதற்கென்று சிறிதளவு நிலம் கூட சொந்தமாக இல்லாத ஆதிதிராவிடர்களின் நிலை பரிதாபத்திற்குரியது. இக்குறைகளைக் களைய அவர்களுக்கு வீட்டு மனைகளை அரசு வெகு காலமாக வழங்கி வருகிறது. அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்குமிடத்து, அவைகள் வீட்டு மனைகளாக ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினர்களுக்கு மாவட்ட ஆட்சியர்களால் ஒப்படைப்பு செய்யப்படுகின்றன. குடியிருப்பு சட்டத்தின் கீழும் அவர்களுக்கு நிலங்கள் ஒப்படைப்பு செய்யப்படுகின்றன. தனியார் நிலங்களும் நில எடுப்பு செய்யப்பட்டு, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகளாக ஒப்படைப்பு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திற்கும் 3 சென்ட் நிலம், வீட்டு மனையாக ஒப்படைப்பு செய்யப்படுகிறது. இதுவரை தனியார் நிலங்கள் எடுப்பு செய்யப்பட்டு, 4,47,880 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இவற்றைச் சேர்த்து இதுவரை 8 இலட்சத்திற்கும் அதிகமான ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் வீட்டுமனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1985-86-ல் 98.88 இலட்சம் செலவில் நில எடுப்பு செய்து சுமார் 20,000 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படும்.

(2) **வீடுகள் கட்டல்.**—ஆதிதிராவிடர் குடும்பங்களுக்காக வீட்டு வசதி வழங்கும் திட்டம் வெகு காலமாக இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வீட்டு வசதியளிக்கும் பணியில் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன. ஆரம்பத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டும் பொறுப்பு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திடம் (தாட்கோ) ஒப்படைக்கப்பட்டு இருந்தது. தற்போது ஆதிதிராவிடர்களுக்காக வீடுகள் கட்டுதலில், மேற்பார்வையிடல், தொழில் நுட்ப ஆலோசனை கூறல், அரசு மானியத்தை பயன் பெறுவோருக்கு வழங்கல் போன்ற பணிகளை செய்யும் வகையில் தாட்கோவின் செயல் முறை மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. தற்சமயம் சமவெளிப் பகுதி மற்றும் மலைப் பகுதிகளில் முறையே ரூ. 6,000 மற்றும் ரூ. 9,000 செலவில் வீடுகள் கட்டப்படுகின்றன. வீடுகள் கட்டும் பணி பயன்பெறுவோர் பொறுப்பிலேயே விடப்படுகின்றது. வீட்டு வசதி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து 71,397 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கிறது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆதிதிராவிடர்களுக்காக சுமார் 1.54 இலட்சம் வீடுகள் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டிருக்கின்றன. இவை தவிர தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு காப்புறுதித் திட்டங்களின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன.

### அடிப்படை வசதிக்கான மேம்பாட்டு திட்டங்கள் :

18. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது தலையாய திட்டங்களில் ஒன்றாகும். பொதுவாகக் கூறுமிடத்து இப்பொழுது அனேகமாக எல்லா குடியிருப்புகளிலும் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்" என்ற பிரிவின்கீழ் கிணறு ஒன்று ரூ. 7,500 என்ற வீதத்தில் குடிநீர் கிணறுகளும் மற்றும் ரூ. 15,000 செலவில் தரைமட்ட நீர்த்தேக்கமும் ஏற்படுத்தப்படுகிறது. 1985-86-ல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காக ரூ. 14.41 இலட்சம் செலவு செய்யப்படும். இது தவிர, எல்லா ஆதி திராவிடர் குடியிருப்புகளிலும் குடிநீர் வசதி கிடைத்திட ஊரக வளர்ச்சி இயக்ககம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் போன்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் நிதியையும் திரட்டப்படும்.

பற்பல சமயங்களில் ஆதிதிராவிடர்களின் சமூக கொந்தளிப்பிற்கு, அவர்களின் மயானத்திற்கு பொதுபாதை இல்லாமையே மூல காரணங்களில் ஒன்றாகும். ஆதிதிராவிடர்களின் மயானங்களுக்கும், குடியிருப்புகளுக்கும் சாலைகள் அமைக்க 1985-86-ல் ரூபாய் 20.00 இலட்சம் செலவு செய்யப்படும். சமீபத்தில் சேகரித்த புள்ளி விவரப்படி சுமார் 2,850 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதிகள் தேவைப்படுகின்றன. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு காப்புறுதி திட்டம் மூலம் இக்குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்து கொடுக்க வகை செய்யப்படும்.

1985-86-ல் கூடுதல் நீர்புற சலவைக் கூடங்கள், மற்றும் சமூகக் கூடங்கள் அமைக்கப்படும்.

### தீண்டாமை ஒழிப்பு :

19. பன்னெடுங்காலமாக நிலவிவரும் தீண்டாமையை ஆதிதிராவிடர்களுக்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார வளர்ச்சி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களால் மட்டும் ஒழித்துவிட முடியாதென்பதை உணர்ந்துள்ள இந்த அரசு மாநிலத்தில் 'குடியியல் உரிமைகள் பாதுகாப்பு திட்டத்தை, தீவிரமாக செயல்படுத்திக் கொண்டு வருகிறது. 21 நடமாடும் காவல் படை பிரிவுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த காவல் படை பிரிவுகள் 1984 டிசம்பர் முடிய 10,866 வழக்குகளை பதிவு செய்துள்ளன. இவற்றில் 4,112 வழக்குகள் நீதிமன்றங்களால் தண்டனை வழங்கப்பட்டு



முடிக்கப்பட்டுள்ளன. குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்க நான்கு தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீதிமன்றப் பணிகளைக் கவனிப்பதற்காக ஆறு தனி வழக்குத் தொடர்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர ஒவ்வொரு வட்டத்திலும் துப்புரவாகப் பராமரிக்கப்படும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்பிற்காக பாடுபடும் கிராமங்களில், அப்பணியில் சிறந்து விளங்கும் இரு கிராமங்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்பு பற்றி பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் சனவரி '24 தேதி முதல் 30 தேதி முடிய' "தீண்டாமை ஒழிப்பு வாரம்" கொண்டாடப்படுகிறது. தீண்டாமை ஒழிப்பிற்கு அரசு முயற்சி மட்டும் போதாது. தீண்டாமையினை ஒழிப்பதற்கு அரசு எடுக்கும் முயற்சிக்காக சமூக சேவை செய்யும் தொண்டு நிறுவனங்கள் பெரிய அளவில் ஆதரவு அளிக்கக்கூடும் என்று அரசு கருதுகின்றது. ஆதலால், இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் ஆதிதிராவிடர்களுக்கு கொடுமை இழைக்கக் கூடிய இடங்களில் 104 கிராமங்களில் தீண்டாமை ஒழிப்பிற்கான பிரச்சாரம் செய்வதற்கு தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த 104 கிராமங்களிலும் ஆதிதிராவிடர் நலன் மற்றும் இன ஒற்றுமை விஷயங்களுக்காக கிராம அளவிலான குழு மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் ஏற்படுத்தி அரசு ஆணைகள் இடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள 12 கிராமங்களில் பரிட்சார்த்த முறையில் பொது இறை வழிபாடு, விளக்கு பூஜை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தீண்டாமையின் கொடுமை ஒழிப்பினை பிரச்சாரம் செய்வதற்காக "தீர்த்த யாத்திரை" (Pilgrimage) என்ற செய்தித் திரைப்படம் தயாரிக்கப்பட்டு அதை கிராமங்களில் திரையிட்டுக் காட்ட ஒரு கூண்டு உந்து வாங்கப்பட்டிருக்கிறது.

சாதி சமயமற்ற ஒரு சமுதாயத்தினை உருவாக்கும் நோக்குடன் கலப்பு மணம் புரிந்த தம்பதியருக்கு தங்கபதக்கங்களும் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இவை தவிர இத்தகைய தம்பதியரின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 அல்லது அதற்கு குறைவாக இருந்தால் அவர்கள் பெயரில் ரூ. 4,000 தேசிய சேமிப்புப் பத்திரத்தில் முதலீடு செய்யப்படுகிறது. மேலும் திருமண செலவிற்கான ரூ. 300-ம் வழங்கப்படுகிறது. கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கென்று, ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ்., முதலாம் ஆண்டு பட்டப் படிப்பிற்காக 6 இடங்களும், முதலாம் ஆண்டு பொறியியல்

பட்டப் படிப்பிற்காக 5 இடங்களும் சித்த மருத்துவக் கல்லூரியில் 2 இடங்களும் நாட்டு முறை மருந்தாக்கப்பட்டிய பார்மசி வகுப்பில் 1 இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

*தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் (தாட்கோ) :*

20. இந்நிறுவனம் 1974-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணி இக் கழகத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம் 1974-ல் இருந்து 1985 ஏப்ரல் முடிய 51,760 வீடுகளை ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டியுள்ளது. தற்சமயம், வீடொன்று, சமவெளி மற்றும் மலைப் பகுதிகளில் முறையே ரூ. 6,000 மற்றும் ரூ. 9,000 செலவில் கட்டப்படுகிறது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகம் தற்சமயம் பயன்பெறக் கூடிய ஆதிதிராவிடர்களை, அவர்களுடைய வீடுகளைக் கட்டும் பணியில் ஈடுபடச் செய்யும் நோக்குடன் அவர்களுக்கு வீடுகட்டுதல் குறித்து தொழில் நுட்ப ஆலோசனை வழங்குதல், இவ்வாறு கட்டப்படும் வீடுகளை மேற்பார்வையிடுதல் மற்றும் அரசு மானியத்தை வழங்கல் முதலிய பணிகளை செய்யும் வகையில் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. பயன் பெறுவோர் ஆர்வத்துடன் பங்கு கொள்ளும் நோக்கத்துடன், வீடுகளை கட்டும் பொறுப்பு அவர்களிடையே விடப்பட்டுள்ளது. மேலும், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், மாணவர் இல்லங்கள், ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள் மற்றும் பணிக் கொட்டில்கள் கட்டும் பொறுப்பினையும் நல்ல முறையில் விரைவில் முடிக்கும் நோக்குடன் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அகில இந்திய கோட்பாட்டின் வழி நின்று, ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்காக தாட்கோவில் வளர்ச்சிப் பகுதி ஒன்று அரசு தொடங்கியுள்ளது. ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு மத்திய அரசிடமிருந்து பெறப்படும் சிறப்பு நிதி உதவித் தொகை இந்நிறுவனத்திடமே ஒப்படை செய்யப்படுகிறது. அரசின் ஒப்புதலின் பேரில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு இந்நிறுவனம் பணம் வழங்குகின்றது. மாநிலத்தில் 30 வட்டாரங்களில் இந்நிறுவனம் கூட்டுக் கிராம வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்துகிறது.

தொடக்கச் செலவு வழங்கும் திட்டத்தை செயல் படுத்தும் பொறுப்பும் தாட்கோவிடமே விடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்படி ஒரு தொழிலுக்குத் தேவைப்படும் மொத்தத் தொகையில் 25 விழுக்காடு தொடக்க செலவு தொகை 4 விழுக்காடு வட்டிக்கு வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகை அரசு



உயர்ந்திருந்தது.

மானியமாகவும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். மொத்த செலவில் 49 விழுக்காடு மத்திய அரசாலும் எஞ்சிய 51 விழுக்காடு மாநில அரசாலும் பொறுப்பேற்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 10.00 கோடி தாட்கோவிடம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. 95,793 ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் தாட்கோ இதுவரை ரூ. 662.26 இலட்சம் வழங்கியுள்ளது. 1985-86-ல் இத்திட்டத்திற்காக ரூ. 200,00 இலட்சம் தாட்கோவிற்கு ஒப்படை செய்யப்படும். தொடக்க செலவு வழங்கும் வழி முறைகளை எளிதாக்கக் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் இத்திட்டம் துரிதமாக செயல்படுத்த வழி வகுக்கும்.

*இட ஒதுக்கீடு பற்றிய விதிமுறை :*

21. (அ) **கல்வி நிலையங்களில் சேர்க்கை.**—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கல்வி நிலையங்களில் முறையான பிரதிநிதித்துவம் வழங்கும் பொருட்டு மருத்துவம், பொறியியல் மற்றும் தொழில் கல்வி நிலையங்கள் உட்பட ஒவ்வொரு கல்வி பிரிவிலும் 18 விழுக்காடு என இட ஒதுக்கீடு தற்பொழுது வழக்கத்தில் உள்ளது.

(ஆ) **அரசு பணிகளில் நியமனம்.**—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மாநில அரசு பணிகளில் 18 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணி நியமன அதிகாரிகள் இட ஒதுக்கீட்டு விதிமுறைகளை வழுவாமல் பின்பற்றுகிறார்களா என்பதை நிலையாக ஆய்வு செய்யும் பொருட்டு துறைத் தலைவர்களும், தலைமைச் செயலகத் துறைகளும், ஆண்டு விவர அறிக்கை சமர்ப்பிக்கும்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அவர்களின் தலைமையில் ஒரு உயர் அதிகார கண்காணிப்புக் குழு இட ஒதுக்கீடு விதிமுறைகளை செயற்படுத்துதல் பற்றி ஆய்வு செய்கிறது.

**விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மறு வாழ்வு அளித்தல் :**

22. பண்ணையடிமைகளாக துன்பப்பட்டு வந்த கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டு சமூகத்தில் உரிமையுடனும் பொருளாதாரத்தில் சுதந்திரமாகவும் வாழ அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. இதுவரை 32,576 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டு, வீட்டு மனை வழங்குதல், விவசாய நிலங்கள் அளித்தல், உழவுத் தொழில் கருவிகள் வழங்குதல், மாட்டுப் பண்ணை மற்றும் கோழிப் பண்ணைகள் உருவாக்க மானியம் வழங்குதல் ஆகிய திட்டங்களின் கீழ் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு

பொறுப்புத் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் சேர்க்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். எல்லா மாவட்டங்களிலும் கொத்தடிமைகள் மறுவாழ்வுத் திட்டங்களை சிறப்பாக நடைமுறைப் படுத்துவதற்கான வழி வகை குறித்து ஆலோசனை கூறுவதற்காக மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிறப்பு உள்ளடக்கத் திட்டம் :

23. தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர்களின் மேம்பாட்டை துரிதப்படுத்துவதற்காக அரசு 1980-81 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு :—

(அ) ஆதி திராவிடர் குடும்பங்களில் ஐம்பது சதவீதத்தினர் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வறுமைக் கோட்டினை கடக்க உதவி செய்தல்.

(ஆ) ஆதிதிராவிடர் காலனிகளுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் இதர வசதிகள் செய்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைவதற்கு பல முனைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பல்வேறு துறைகளின் மூலதனங்களை ஒன்றாக்கி, ஆதிதிராவிடர் குடும்பங்கள், ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களின் மூலம் பயன்பெற்று வறுமைக் கோட்டினைக் கடக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதர பிரிவுகளிலிருந்து குறிப்பாக பயன் பிரித்து கூற முடியாத திட்டங்களிலிருந்து பெறும் நன்மையை கணக்கில் கொள்ளாது, பயன் பிரித்தறிய கூடியத் திட்டங்களிலிருந்து ஆதிதிராவிடர் அடையக் கூடிய நன்மையை மட்டுமே சிறப்பு உள்ளடக்கத் திட்டம் குறிக்கோளாகக் கொள்ளும்.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளது:

24. (1) பொருளாதார முன்னேற்றம் : (அ) தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட 7.40 இலட்சம் விவசாயிகள் ஆதி திராவிடர்கள் ஆவர். உற்பத்தி திறனை உயர்த்துவதன் மூலம், ஆதிதிராவிடர் விவசாயிகள் வருமான நிலையை உயர்த்த உயர் ரக விளைச்சலைத் தரும் விதைகள், நாற்றுகள், உரங்கள், 25 சதவீதம் மானிய விலையில் கொடுக்கப்படுகின்றது. 1984-85 ஆம் ஆண்டு இரண்டு இலட்சங்களுக்கு மேற்பட்ட ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு விதைகளும் மற்றும் நாற்றுகளும் 25 சதவீத மானியம் விலையில் விநியோகிக்கப்பட்டது. உபரி நிலங்களை ஒதுக்கிடப் பெற்றவர்களுக்கு, நிலத்தை பயன்



படுத்துவதற்காகவும் மேம்படுத்தப்பட்ட வேளாண்மை இடு பொருட்களை பயன்படுத்துவதற்காகவும், ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 2,500 கொடுக்கப்படுகிறது. 1984—85-ல், 1,761 ஆதிதிராவிடர் பயன் அடைந்தனர். பாசனக் கிணறுகள் வெட்டவும் உழவு மாடுகள் வாங்கவும் அதற்காகும் செலவில் 33-1/3 சதவீதம் மானியமாக கொடுக்கப்படுகிறது. தேவையான இடங்களில் ஆதி திராவிடர்களின் நிலங்களில் மண் வளப்பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. 4,014 ஆதிதிராவிடர் விவசாயிகளின் நிலங்களில் இம் மண் வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 3,000 ஆதிதிராவிடர் நிலத்தில் 1985-86 ஆண்டில் இப்பணி மேற்கொள்ளப்படும். 1984-85-ல் பட்டுப் புழு வளர்ப்புத்திட்டத்தின்கீழ் 997 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் அடைந்தனர். வருமான இடைவெளியை நிறைவு செய்ய, செம்மறி ஆட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை, கறவை மாடுகள் வளர்த்தல் போன்ற துணை வாழ்க்கைத் தொழில் நடத்த உதவி வழங்கப்பட்டுள்ளது. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு தகுந்த கூலி பெற குறைந்த அளவு கூலி நிர்ணயித்தல் செயற்படுத்தும் சட்டம் மிகுந்த பயனை தந்துள்ளது.

(ஆ) அவர்கள் வருமானத்தை அதிகப்படுத்திக்கொள்ள செம்மறி ஆட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை, கறவை மாடுகள் வளர்த்தல் போன்றவற்றின் வழியாகவும் உதவி தரப்படுகின்றது. 1984-85-ல் 12,469 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடைய வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. ஊரக கைவினைஞர்களுக்கு கருவிகள் மற்றும் துணைக் கருவிகள் இலவசமாக கொடுக்கப்படுகின்றன. ஆதிதிராவிடர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தால் பயனடைந்தவர்களில் கிட்டத்தட்ட 45 விழுக்காடு ஆதிதிராவிடர்கள். 1984-85-ல் இத் திட்டத்தின்கீழ் 1,02,409 ஆதிதிராவிடர் பயன் அடைந்தனர்.

(இ) ஆண்டு முழுவதும் வேளாண்மை மற்றும் அதன் சார்புடைய பணிகள் ஆதாயம் தரத்தக்க வகையில் இருக்காது என்ற காரணத்தால் வாழ்க்கைத் தொழில் படிவு மாற்ற தேவையை உன்னிப்பாக, கவனித்துப் பார்த்து அதனால் அவர்களின் வாழ்க்கைத் தொழில் படிவத்தில் மாற்றம் செய்ய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மைய அரசிடமிருந்து பெறக்கூடிய மத்திய அரசு சிறப்பு நிதி உதவி மூலம், ஆதிதிராவிடர்களுக்கு தொடர்ந்து பணியில் வருமானம் தரக்கூடிய செங்கல் உற்பத்தித் தொழில், கயிறு உற்பத்தித் தொழில், கையால் காகித உற்பத்தி செய்தல், நேபாள நெசவு இல்லங்கள், ஊரக நெசவு நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறு தொழில் போன்ற இதர தொழில் நடத்த தாராளமாக நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1984-85-ல் 2,376 ஆதிதிராவிடர் பயன் பெறுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

(ஈ) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பின்தங்கிய வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த வட்டாரத்தில், பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம், பயனடைய வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 1,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் குடும்பத்தில், ஒருவருக்கு வருடம் முழுவதும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. 1982-83-ல், 15 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கூட்டு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டன. 1984-85-ல், அவ்வாறு 15 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 6,875 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் பெற ரூ. 474.52 இலட்ச செலவில் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டன. செய்யும் தொழில்களில் அதிக ஆதாயம் தரத்தக்கதாக ஆக்க, உதவி வழங்கும் முறை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக பால்பண்ணை வைப்பதன் மூலமாக அதிக ஊக்கமும் பயனும் பெற, தரப்படும் மானிய அளவு 50 விழுக்காடு உயர்த்தப்பட்டுள்ளது. ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வில் வெற்றி பெற மாணவர்களுக்கு தேர்வுக்கு முன் பயிற்சி அளிக்கப்படுகிறது. நகரப் பகுதிகளில் வசிக்கக்கூடிய ஆதி திராவிடர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களின் மூலம் உதவி வழங்கப்படுகின்றனர். 1984-85-ல் 5,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடையும், பொருளாதார திட்டங்களில் கணிசமான அளவில் பெண்கள் பயன் அடைந்துள்ளனர்.

சுருக்கமாகச் சொல்லப் போனால், ஆதிதிராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத்தில் வெற்றி காண ஆதிதிராவிடர்களுடைய தேவைக்கேற்ப திட்டங்களை மாற்றி அமைப்பதுபற்றி எல்லாவித உரிய வழிகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1984-85-ல் 1.80 இலட்ச ஆதிதிராவிடர் குடும்பங்கள் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயனடைய வேண்டும் என்று தீர்மானித்து இருந்தபோதிலும் 2.20 இலட்சம் குடும்பங்கள் இத்திட்டங்களின் மூலம் பயன் அடைந்தனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்வேறு பொருளாதார முன்னேற்றத் திட்டத்தின் வாயிலாக குறியீடு நிர்ணயம் செய்யப்பட்ட 9 இலட்சம் குடும்பங்களில் 8.90 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் பெறும்.

24. (2) சமுதாயப் பணி.—சமுதாயப் பணிப் பிரிவில் போதிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அனைத்து 26,000 காலனிகளுக்கு குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 3,000 ஆதிதிராவிடர்களின் காலனிகளில் (புதிய காலனிகள் உட்பட) அவர்கள் வசிக்கும் இடத்தின் அருகில் குடி-நீர் வசதி தேவைப்படுகிறது. 1985-86-ல் 745 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்படும். தேசிய ஊரக வேலை



வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு காப்புறுதி திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் காலனிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும். 1984-85-ல் 372 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டன. ஊரக மின் வசதி திட்டத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. அண்மைக்காலத்தில் ஏற்பட்ட குடியிருப்புகளைத் தவிர மற்ற எல்லா காலனிகளுக்கும் மின் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. குடிசைகளுக்கு மின்வசதி ஏற்படுத்தும் திட்டத்தில், 1984-85-ல் 23,284 ஆதிதிராவிடர் குடிசைகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டின் குறியீடு (i) 160 குடியிருப்புகள்; (ii) 10,000 ஆதி திராவிடர் குடிசைகள்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனைத்து ஆதி திராவிடர் காலனிகளில் வசிப்போருக்கும் தேவையான குடிநீர் வசதி, இணைப்பு சாலைகள், தெரு விளக்குகள், மயான வசதிகள், மயானத்திற்கு செல்லக்கூடிய பாதை வசதிகள் மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

பழங்குடியினர் :

25. தமிழ்நாட்டில் பழங்குடி மக்கட் தொகை 5.20 இலட்சமாகும். அவை மொத்த மக்கட் தொகையில் 1.07 சதவீதமாகும். பழங்குடியினர் முன்னேற்றத்தை விரைவுபடுத்த அவர்கள் செறிந்துள்ள பகுதிகளில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பழங்குடியினர் துணைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பழங்குடியினர் துணைத் திட்டத்தை செயற்படுத்த, பழங்குடியினர் அதிகமாக உள்ள 9 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட 2.10 இலட்சம் தமிழகப் பழங்குடியினர் இந்த 9 பகுதிகளில் வசிக்கின்றனர். பழங்குடி துணைத் திட்டத்தின்கீழ் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களான தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மண் வளப் பாதுகாப்பு, சிறு பாசனம், பட்டுப் புழு வளர்ப்பு, சிறு தொழில், தேனீ வளர்த்தல், போன்றவை செயல்படுகின்றன. மேற்கண்ட தொழிலுக்குத் தேவையான இடு பொருள்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கல்ராயன் தவிர (75 சதவீதம் மானியம் தரப்பட்டுள்ளது) மற்ற பகுதிகளில் பழங்குடியினருக்கு 50 சதவீதம் மானியமாகக் கொடுக்கப்படுகின்றது. 1984-85-ல் உயர்ரக விளைச்சல் தரக்கூடிய விதைகள் மற்றும் நாற்றுகள் 4,854 ஏக்கர் பரப்புள்ள பழங்குடியினர் நிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. பட்டுப்புழு வளர்க்கும் தொழிலில் 405 பழங்குடியினர் குடும்பங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 50 விழுக்காடு மானிய விலையில், 1,330 பழங்குடியினர் குடும்பங்களுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டன. 200-க்கு மேற்பட்ட பழங்குடியினர் குடும்பங்களுக்கு, தேனீக்கள்

வளர்ப்பு கூடுகள் வழங்கப்பட்டன. 3,747 குடும்பங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இத் திட்டங்கள் யாவும் பழங் குடியினர் பண்பாட்டினை பாதிக்காத வகையில் நேர்த்தியாகத் திட்டப்பட்டுள்ளது. 1984-85-ல் இருபது அம்சத் திட்டத்தின்கீழ், 5,850 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைய குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இவ் வருடத்தில் 11,235 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளனர். மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனங்கள், தோட்டக் கலைத் துறை மற்றும் கால் நடை வளர்ப்புத் துறைகள் மூலம் இக்குடும்பங்கள் அதிக அளவில் பயன் அடைந்துள்ளனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் வாயிலாக 27,254 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வாறு 35,000 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைய வழிவகுக்கும். பழங்குடியினருடைய பொருளாதாரத்திற்கு பாதிப்பு உண்டாக்கக்கூடிய இடைத் தரகர்களின் நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டு 12 பெரிய அளவிலான பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (லேம்ப்ஸ்) இப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக, இப் பகுதிகளில் வசிக்கும் எல்லாப் பழங்குடியினரும் இக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாவர். இச்சங்கங்கள் பயன்பாட்டுக் கடன்கள் மட்டுமல்லாமல், குறுகிய காலக் கடன், நடுத்தரக் காலக் கடன் தருகின்றது. இது மட்டுமல்லாமல், நியாயமான அளவில் ஆதாயம் அவர்களுக்குக் கிட்டுவதற்காக அவர்களுடைய தயாரிப்பு பொருட்களை இச்சங்கங்கள் விற்கும் பொறுப்பினை ஏற்றுள்ளன. இச்சங்கங்களின் வாயிலாக பழங்குடியினருக்கு அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலையில் விற்கப்படுகின்றன. மேற் குறிப்பிட்ட குடும்ப வறுமையை ஒழிக்கும் திட்டங்களைத் தவிர, சாலை அமைத்தல், சுகாதார வசதி செய்தல், பள்ளிக் கட்டிடங்கள் ஏற்படுத்துதல், தெருக்கள் காலனிகளில் மின் வசதி செய்தல், குடிநீர் வசதி செய்தல் போன்ற பகுதி முன்னேற்றத் திட்டங்கள் இப்பழங்குடியினர் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. 1984-85-ல் 104 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. இதே ஆண்டில், பழங்குடியினர் கிராமங்களை சமவெளி பகுதிகளுடன் இணைப்பதற்கு ரூபாய் 155.51 இலட்சம் செலவு செய்யப்பட்டது. பழங்குடியினர் துணைத் திட்டப்



பகுதியில் 20 பழங்குடியினர் கிராமங்களுக்கு மின் இணைப்பு வசதி அளிக்கப்பட்டது. 29 துணை சுகாதார நிலையங்கள் இப்பகுதிகளில் அமைக்கப்பட்டன. 10,200 பழங்குடியினர் குழந்தைகளின் நன்மைக்காக 160 பள்ளிகள் மற்றும் 22 விடுதிகள் (பழங்குடி துணைத் திட்டம் செயல்படாத இடங்களிலும்) பராமரிக்கப்படுகின்றன. அரசின் முயற்சியின் காரணமாக பொது மக்கட்தொகையில் படித்தவரின் அளவு 1971-ல் 7.30 சதவிதமாக உயர்ந்திருந்த போது பழங்குடியினரின் படித்தவர்கள் எண்ணிக்கை 11.43 சதவிதமாக உயர்ந்திருந்தது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பழங்குடியினர் குடும்பத்தினருக்கு மேலே குறிப்பிடப்பட்ட எல்லா திட்டங்களும் செயல்படுத்துவதுடன், காலனிகளுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும்.

பழங்குடியினர் துணைத் திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளில் வாழும் பழங்குடியினர் நலனுக்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் அவர்களது நலன் பாதுகாக்கப்படும்.

வேளாண்மை தொழில் நுட்ப அளவு திறன் பெறாத மற்றும் எண்ணிக்கையில் குறைந்து கொண்டிருக்கும் பண்டைய பழங்குடியினர் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களுக்காக தனித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**1985–86 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வசிக்கக் கூடிய 9,309 பழங்குடியினர் குடும்பத்திற்கு ரூ. 761.57 இலட்சம் செலவழிக்கப்படும். இவற்றில் பண்டைய பழங்குடியினரும் அடங்குவர்.**

இருபது அம்சத் திட்டம் —7 (அ) மற்றும் 7 (ஆ) :

**26. பாரதப் பிரதமர் அவர்களின் இருபது அம்சத் திட்டமானது தீவிரமாகச் செயல்படுத்தப்படுகிறது. இருபது அம்சத் திட்டத்தின் ஏழாவது அம்சம் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்**

குடியினரின் முன்னேற்றத்தை விரைவு படுத்துவதற்கு வழிவகை செய்கிறது. 1980–85 ஆம் ஆண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களில் 8.90 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களினால் பயன் பெற்றுள்ளனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 19,000 பழங்குடியினர் குடும்பங்கள் பயன் பெறுவர் என்று குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தும், இத்திட்ட காலத்தில் 27,254 பழங்குடியினர் குடும்பங்கள் பொருளாதார திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ளனர். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்வகை பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாக 10 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களும், 46,979 பழங்குடியினர் குடும்பங்களும் பயன் பெற வகை செய்யப்படும்.

27. கோரிக்கை எண். 31-ன் கீழ் ரூ. 4,409.60 இலட்சமும், கோரிக்கை எண் 43 (பல்வகை) விருந்து ரூ. 0.37 இலட்சமும், கோரிக்கை எண் 58 (பல்வகை முலதனம்)-விருந்து ரூ. 410.00 இலட்சமும், கோரிக்கை எண் 59 (கடன் மற்றும் முன் பணம்) -விருந்து ரூ. 71 இலட்சமும் ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக 1985–86ஆம் ஆண்டில் செலவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

28. இவ்வாறாக, இம் மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை—1985–86ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

இணைப்பு 1.

| தொடர் எண்ணும் திட்டத்தின் விவரங்களும். | மத்திய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டங்கள்-மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பங்கிட்டுக்கொண்ட மாநில திட்டங்கள். | | மாநிலத்திட்டங்கள். | | திட்டத்தில் சேராதவை. | | மொத்தம். | | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதி-திராவிடர். | பழங்-குடியினர். | ஆதி-திராவிடர். | பழங்-குடியினர். | ஆதி-திராவிடர். | பழங்-குடியினர். | ஆதி-திராவிடர். | பழங்-குடியினர். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | (ரூபாய் ஆயிரத்தில்,) | | | | | | | | |
| | 65,399 | 538 | 1,63,120 | 18,483 | 2,00,279 | 11,192 | 4,28,798 | 30,213 | 4,59,011 |
| I. கல்வி : | | | | | | | | | |
| 1. படிப்புதவித் தொகை .. | 33,039<br>684<br>200 | 155<br>..<br>.. | 3,267<br>5,575<br>(க)<br>235*<br>(க) | ..<br>..<br>.. | 16,975<br>17,169<br>100<br>(க) | 230<br>.. | 77,244<br>.. | 385<br>.. | 77,629<br>.. |
| 2. பள்ளிகள் .. .. | .. | .. | .. | 324 | 60,699<br>1,615 | 4,571 | 62,314 | 4,895 | 67,209 |
| 3. முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டம். | .. | .. | 1,941 | .. | 9,1856 | .. | 11,798 | .. | 11,798 |
| 4. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் பழுதுபார்த்தல்... | . | .. | 1,302<br>5,000<br>(மு) | 180 | 1,195 | 275 | 7,497 | 455 | 7,952 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. சீருடைகள் .. .. | .. | .. | 1,882 | 26 | 10,663 | 548 | 12,545 | 574 | 1,3113 |
| 6. சாரணப்பயிற்றுநர், சாரண சாரணியருக்கு சீருடை வழங்கல். | .. | .. | 119 | 10 | .. | .. | 119 | 10 | 129 |
| 7. பாடப் புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள், எழுது பலகைகள் வழங்குதல், பள்ளிகளுக்கு சாதனங்கள் வழங்குதல். | .. | .. | 1,629 | .. | 2,096 | 104 | 3,725 | 104 | 3,829 |
| 8. ஆசிரியர்களுக்கு இல்லங்கள் | .. | .. | 207 | 200 | 33 | 25 | 240 | 225 | 465 |
| 9. பள்ளி சுற்றுலா .. .. | .. | .. | 37 | .. | .. | 8 | 37 | 8 | 45 |
| 10. பரிசுப் பொருட்கள் .. | .. | .. | .. | .. | 64 | .. | 64 | .. | 64 |
| 11. மாணவர் இல்லங்கள் பராமரிப்புச் செலவு. | .. | .. | 3,122<br>182 | 135 | 47,908 | 3,803<br>1030 | 51,212 | 4,968 | 56,180 |
| 12. மாணவர் இல்லங்களுக்கு கட்டடங்கள் கட்டுதலும் பராமரித்தலும். | 1,0000**<br>(மூ) | .. | 5,500<br>(மூ) | 500<br>(மூ) | 471 | 24 | 15·971 | 524 | 16,495 |
| 13. பகுதி நேர சித்ராசிரியர்கள் | .. | .. | .. | .. | 137 | 10 | 137 | 10 | 147 |
| 14. உணவு மானியம் .. .. | .. | .. | .. | .. | 1,048 | 100 | 1,053 | 100 | 1,153 |
| 15. ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வழங்கப்படும் மானியம். | .. | .. | 1,490 | .. | .. | .. | 1,490 | .. | 1,490 |
| 16. தேர்வு முன் பயிற்சி நிலையங்கள். | 878** | .. | 1,22 | .. | .. | .. | 1,000 | .. | 1,000 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17. கல்வி நிலையங்களில் பல்கலைக் கழகங்கள் இழப்பீட்டுத் தொகை. | .. | .. | .. | .. | 275 | .. | 275 | .. | 275 |
| 18. கல்லூ மாணவர்களுக்கு தனிப் பயிற்சி அளித்தல். | .. | .. | 100 | .. | .. | .. | 100 | .. | 100 |
| 19. திறமையான மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை. | .. | .. | 10<br>103* | .. | 413 | 68<br>50 | 526 | 118 | 644 |
| 20. பட்டயக்கணக்கர் தேர்வுகள் | .. | .. | .. | .. | 10 | .. | 10 | .. | 10 |
| 21. தட்டச்சு / சுருக்கெழுத்து பயிற்சி. | .. | .. | 369<br>71* | .. | .. | .. | 440 | .. | 440 |
| 22. திறமையான மாணவ மாணவிகளுக்கு தனிப் பயிற்சி. | .. | .. | .. | .. | 25 | .. | 25 | .. | 25 |
| 23. ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையை சேர்ந்த கல்விப் பிரிவில் கூடுதல் பணியாளர்கள் நியமித்தல். | .. | .. | 22 | .. | 596 | .. | 618 | .. | 618 |
| 24. தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தொழிற் பயிற்சி பெறும் ஆதி திராவிடர் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி உதவித் தொகை. | .. | .. | 261 | .. | 1,044 | .. | 1,305 | .. | 1306 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவிகளுக்கு தேர்வு ஊக்கத் தொகை வழங்குதல். | .. | .. | 106 | .. | .. | .. | 106 | .. | 106 |
| 26. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இந்திய தொழில் நுட்பக கல்லூரியில் சேர பயிற்சி அளித்தல். | ** | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| மொத்தம்—I. கல்வி .. | 44,802 | 155 | 32,652 | 1,375 | 1,72398 | 10,846 | 2,49,852 | 12,376 | 2,62,228 |
| II. வேலை வாய்ப்பு பொருளாதார முன்னேற்றம்.— | | | | | | | | | |
| 27. வேளாண்மை .. .. | .. | .. | 668<br>1,45* | 200 | .. | .. | 813 | 200 | 1,013 |
| 28. கூட்டுறவு .. .. | .. | 29** | 1 | .. | .. | .. | 1 | 29 | 30 |
| 29. பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள். | .. | .. | 3,000<br>100* | .. | 115 | .. | 3,215 | .. | 3,215 |
| 30. குடிசைத் தொழில்கள் .. | .. | .. | 5<br>1* | .. | 265 | 25 | 271 | 25 | 296 |
| 31. பயிற்சி—உற்பத்தி நிலையங்கள். | .. | .. | .. | 50 | .. | .. | .. | 50 | 50 |
| 32. தொழில் நுட்ப பயிற்சி பெற்றோருக்கு உதவித் தொகை. | .. | .. | 800<br>100* | 100 | .. | .. | 900 | 100 | 1,000 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| 33. பயிற்சி வேலை வாய்ப்புப்—பிரிவு 4. | .. | .. | 1* | .. | .. | .. | 2 | .. | 2 |
| 34. சிறு வணிகக் கடன் .. | .. | .. | 1,000-(க)<br>100*(க)-* | 50-(க) | .. | .. | 1,100 | 50 | 1,150 |
| 35. அலுவலகத் தேர்வுகளில் வெற்றி பெற சிறப்பு பயிற்சியளித்தல். | .. | .. | 1* | .. | * | .. | 2 | | 2 |
| 36. முப்படைகளில் கமிஷன் பதவித் தரத்தில் நியமிக்கப் பெற ஆதி திராவிடர்/ பழங்குடியினருக்கும் தனிப் பயிற்சி அளித்தல். | .. | .. | .. | .. | 2 | .. | 2 | .. | 2 |
| 37. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிருக்கு வானொலி / தொலைக் காட்சிப் பெட்டிகளை பழுது பார்ப்பதில் பயிற்சி அளிக்கும் திட்டம். | .. | .. | 27 | .. | .. | .. | 27 | .. | 27 |
| 38. தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூல தன முதலீடு. | 20,000*<br>-*(மு)* | .. | .. | .. | .. | .. | 20,000 | .. | 20,000 |
| 39. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி வட்டாரங்களில் ஆதி திராவிடர்களுக்கு நிலம் பயக்கும் தனித் திட்டங்கள் (ஆதி திராவிடர்களுக்கான தனி துணைத் திட்டத்திற்கு சிறப்பு மத்திய உதவி). | .. | .. | 1,10,000 | .. | .. | .. | 1,10,000 | .. | 1,10,000 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 40. வங்கிப் பணித் தேர்வுக்கு குறுகிய காலப் பயிற்சி அளித்தல். | .. | .. | 25 | .. | .. | .. | 25 | .. | 25 |
| மொத்தம்—II வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும். | 20,000 | 29 | 1,15,976 | 400 | 382 | 25 | 1,36,358 | 454 | 1,36,812 |
| III. சுகாதாரம், வீட்டு வசதி ஏனைய திட்டங்கள்.— | | | | | | | | | |
| 41. வீட்டு வசதிகள் .. .. | .. | .. | 1 | 200 | .. | .. | 1 | 200 | 201 |
| 42. வீட்டு மனைகள் .. .. | .. | .. | 1(சா) 111 9,888 | .. | .. | .. | 10,000 | .. | 10,000 |
| 43. பொது சுகாதாரம் .. | .. | | 2,000 | .. | .. | .. | 2,000 | .. | 2,000 |
| 44. குடிநீர்க் கிணறுகள் .. | .. | | ‘1000 | 298 | .. | .. | 1,143 | 298 | 1,441 |
| 45. மருத்துவம் .. .. | .. | | 143* | 25 | 132 | 321 | 132 | 346 | 478 |
| 46. மின் வசதி .. .. | .. | | 1 | 1 | 1 | | 2 | 1 | 3 |
| 47. சாலைகள் .. .. | .. | .. | 215 | .. | .. | .. | | 215 | 215 |
| 48. விளம்பரச் செலவுகள் .. | 09** | .. | .. | .. | .. | | . | 209 | 209 |
| 49. தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு பரிசுகள். | . | .. | .. | .. | .. | 23 | | 23 | 23 |
| 50. துப்புரவாக வைத்திருக்கும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குப் பரிசு. | .. | .. | .. | | 75 | | | 75 | 75 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51. ஆதி திராவிடர் குடிசை வாழ் மக்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு தொலைக் காட்சி பெட்டி வழங்குதல். | 1** | ** | .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| 52. சமுதாய நிலையங்கள் .. | .. | .. | .. | .. | 595 | .. | 595 | -- | 595 |
| 53. சமுதாய கூடங்கள் .. | .. | .. | 500 | .. | .. | .. | 500 | .. | 500 |
| 54. கலப்புத் திருமணங்கள் .. | .. | .. | 750 | .. | .. | .. | 750 | .. | 759 |
| 55. தமிழ் நாடு பழங்குடியினர் மேம்பாட்டு அதிகார மன்றம். | .. | .. | .. | 10 | .. | .. | .. | 10 | 10 |
| 56. நீர்ப்புறசலவைக் கூடங்கள் கட்டுதல். | .. | .. | 10 10(க) | .. | .. | .. | 20 | .. | 20 |
| 57. துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுதல். | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 58. துப்புரவாளர்கள் மற்றும் சுத்தி தொழிலாளர்கள் பணியை மேம்படுத்துதல். | .. | .. | 75 | .. | .. | .. | 75 | .. | 75 |
| 59. பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல். | .. | 34** | .. | .. | .. | .. | .. | 354 | 354 |
| 60. ஈமக் கடன்கள் செய்வதற்காக தொகை அளித்தல். | .. | .. | .. | .. | 5283 | .. | 5,283 | .. | 5283 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 61 ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்ககத்தில் கண்காணிப்புப் பிரிவு. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 1 |
| 62 ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்திட்டங்களை மதிப்பாய்வு செய்வதற்காக புலனாய்வு ஆராய்ச்சிப் பிரிவு. | 87** | .. | .. | .. | .. | .. | 87 | .. | 87 |
| 63 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்தும் நிர்வாகம். | 300** | .. | .. | .. | .. | .. | 300 | .. | 300 |
| மொத்தம்—III சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள். | 597 | 354 | 14.492 | 749 | 6,109 | 321 | 21,198 | 1,424 | 22,622 |
| IV. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்.— | | | | | | | | | |
| 64 இயக்குதலும் நிர்வாகமும். | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 65 பழங்குடியினர் மேம்பாட்டுக்கான துணைத் திட்டம் குறித்து முன்னோடி நடவடிக்கைக்காக ஒருங்கிணைப்பு மேம்பாட்டு திட்ட பணிகளுக்கான வல்லுநர்குழு. | .. | .. | .. | 342 | .. | .. | .. | 342 | 342 |
| 66 பழங்குடியினர் தங்கிப் பயிலும் வசதியுடன் கூடிய பள்ளிகளைத் திறத்தலும் பராமரித்தலும். | .. | .. | .. | 6,495 | .. | .. | .. | 6,595 | 6,495 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 67 பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் நீர் வழங்கும் திட்டம். | .. | .. | .. | 4.000 | .. | .. | .. | 4.000 | 4,000 |
| 68 பழங்குடியினர் கிராமங்களுக்கு மின் வசதி திட்டம். | .. | .. | .. | 1,500 | .. | .... | .. | 1,500 | 1,500 |
| 9 பழங் குடியினர் பகுதி துணைத் திட்டத்தின்கீழ் சிறு பாசனத் திட்டம். | .. | .. | .. | 2,700 | .. | .. | .. | 2,700 | 2,700 |
| 0 கல்ராயன் மலைக்கான நிர்வாக அமைப்பை ஏற்படுத்துதல். | .. | .. | .. | 260 | .. | .. | .... | 260 | 260 |
| 1 பங்குடியினர் ஆராய்ச்சி வளர்ச்சி. | .. | .. | .. | 225 | .. | .. | .. | 225 | 225 |
| 2 தொன்மைப் பழங்குடியினர் மேம்பாடு. | .. | .. | .. | 135 | .. | .. | .. | 135 | 135 |
| '3 பரவலாக வாழும் பழங்குடியினர் தொகுதிகள். | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| '4 ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின் பகுதிகளில் பழங்குடியினருக்கு இல்லம் கட்டுதல். | .. | .. | .. | 263 | .. | .. | .. | 263 | 263 |
| மாத்தம்-IV—பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம். | .. | .. | .. | 15,922 | .. | .. | .. | 15,922 | 15,922 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| V கொத்தடிமையின் புது வாழ்வுத் திட்டம்— | | | | | | | | | |
| 75 கொத்தடிமைகள் புதுவாழ்வு | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 76 விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு வீட்டு வசதிக்கான உதவி. | | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 77 கொத்தடிமைகளுக்கான புது வாழ்வுத் திட்டம். | .. | .. | .. | 35 | .. | .. | .. | 35 | 35 |
| மொத்தம்—V. கொத்தடிமைகள் புது வாழ்வு திட்டம். | .. | ... | .. | 37 | .. | .. | .. | 37 | 37 |
| VI நெறிப்படுத்தலும் நிர்வாகமும்— | | | | | | | | | |
| 78. தலைமையிடம் மற்றும் மாவட்ட பணியாளர்கள் | .. .. | .. | .. | .. | 2(சா) 21,388 | | 21,390 | . | 21,390 |
| மொத்தம்—VI. நெறிப்படுத்தலும் நிர்வாகமும். | .. | .. | .. | .. | 21,390 | .. | 21,390 | .. | 21,390 |



சுருக்கம்.

(ரூபாய் ஆயிரத்தில்.)

| (1) | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மத்திய மாநில அரசுகள் சம அளவில் செலவுப் பொறுப் பேற்கும் திட்டங்கள். | | மாநிலத் திட்டங்கள். | | திட்டத்தில் சேராதவை. | | மொத்தம். | | பெரு மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதி திரா விடர் (2) | பழங் குடி யினர் (3) | ஆதி திரா விடர் (4) | பழங் குடி யினர் (5) | ஆதி திரா விடர் (6) | பழங் குடி யினர் (7) | ஆதி திரா விடர் (8) | பழங் குடி யினர் (9) | (10) |
| I. கல்வி.. .. .. .. | 44,802 | 155 | 32,652 | 1,375 | 1,72,398 | 10,846 | 2,49,852 | 12,376 | 2,62,228 |
| II. வேலைவாய்ப்பு பொருளாதார மேம்பாடு. | 20,000 | 29 | 1,15,976 | 400 | 382 | 25 | 1,36,358 | 454 | 1,36,812 |
| III. சுகாதாரம் வீட்டு வசதி ஏனைய திட்டங்கள். | 597 | 354 | 14,492 | 749 | 6,109 | 321 | 21,198 | 1424 | 22,622 |
| IV. பழங்குடியினர் பகுதி துணைத் திட்டங்கள். | .. | .. | .. | 15,922 | .. | .. | .. | 15,922 | 15,922 |
| V. கொத்தடிமைகள் புது வாழ்வுத் திட்டம். | .. | .. | .. | 37 | .. | .. | .. | 37 | 37 |
| VI. நெறிப்படுத்தலும் நிர்வாகமும் தலைமையிடம் மற்றும் மாவட்ட பணியாளர்கள். | .. | .. | .. | .. | 21,390 | .. | 21,390 | .. | 21,390 |
| மொத்தம் .. | 65,377 | 538 | 1,62,120 | 18,483 | 2,00,279 | 11,192 | 4,28,798 | 30,213 | 4,59,011 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வருவாய்— | | | | | | | | | |
| சாட்டியது .. .. .. | .. | .. | 1 | .. | 2 | .. | 3 | .. | 3 |
| அனுமதித்தது .. .. | 35,399 | 538 | 1,45,699 | 17,933 | 2,00,177 | 11,192 | 3,81,275 | 29,663 | 4,10,938 |
| மூலதனம் .. .. .. | 30,000 | .. | 10,500 | 500 | .. | .. | 40,500 | 500 | 14,000 |
| கடன்களும் முன்பணங்களும் .. | .. | .. | 6,920 | 50 | 100 | .. | 7,020 | 50 | 7,070 |
| பெரு மொத்தம் .. .. | 65,399 | 538 | 1,63,120 | 18,483 | 2,00,279 | 11,192 | 4,28,798 | 30,213 | 4,59,011 |

*கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர்கள்.
**மத்திய மாநில அரசுகள் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள்
சா—சாட்டியது.
மூ—மூலதனம்.
க—கடன்களும் முன்பணங்களும்.



## இணைப்பு II.

### சிறப்பு உள்ளடக்கத் திட்டம்.

### 1985–86.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | வேளாண்மை-பயிர் பராமரிப்பு .. .. | 632.25 |
| 2. | நிலச் சீர்திருத்தம் .. .. .. .. | 2.00 |
| 3. | ஊரக வளர்ச்சிக்கான சிறப்பு பகுதித் திட்டம். | 930.25 |
| 4. | நில மற்றும் நீர்வள பாதுகாப்பு .. .. | 22.50 |
| 5. | கால்நடைப் பராமரிப்பு .. .. .. | 30.56 |
| 6. | பால் பண்ணை .. .. .. .. | 0.03 |
| 7. | வனவளம் [சமுதாயக் காடு] .. .. | 402.00 |
| 8. | சமுதாய மேம்பாடு .. .. .. .. | 560.80 |
| 9. | கூட்டுறவு .. .. .. .. .. | 1.84 |
| 10. | மின் அபிவிருத்தி .. .. .. .. | 161.00 |
| 11. | கிராம மற்றும் சிறு தொழில்கள் .. .. | 4.57 |
| 12. | சாலைகள் மற்றும் பாலங்கள் .. .. | 67.56 |
| 13. | கல்வி .. .. .. .. .. | 1.017.74 |
| 14. | மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் .. | 329.95 |
| 15. | கழிவு நீர் அகற்றுதல் மற்றும் குடிநீர் வழங்கள் | 1,532.88 |
| 16. | வீட்டு வசதி .. .. .. .. .. | 417.94 |

## இணைப்பு II.

சிறப்பு உள்ளடக்கத் திட்டம்—தொடர்ச்சி.

1985—86—தொடர்ச்சி.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 17. நகர்ப்புற வசதி .. .. .. | 494.50 |
| 18. வேலை வாய்ப்பு .. .. .. .. | 270.00 |
| 19. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம். .. | 1,004.09 |
| 20. சமூக நலம் .. .. .. .. | 2,052.09 |
| 21. மாட்டச்சத்து .. .. .. .. | 2,599.23 |
| மொத்தம் | 12,533.78 |



## இணைப்பு III.

பழங்குடியினர் துணைத் திட்டம் 1985—86.

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | மாநில திட்டம். | மைய நிதியுதவி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 தோட்டக்கலை .. .. | 36.26 | 36.00 |
| 2 மண்வளப் பாதுகாப்பு .. | 20.00 | .. |
| 3 கால்நடை பராமரிப்பு .. | 20.75 | 24.00 |
| 4 கிராமத் தொழில்கள் .. | 25.13 | 2.00 |
| 5 பட்டு உற்பத்தி .. | 61.14 | 5.00 |
| 6 சிறு பாசனம் .. .. | 10.00 | 10.00 |
| 7 வனம் .. .. | 39.40 | 10.00 |
| 8 கூட்டுறவு .. .. | 75.86 | 20.00 |
| 9 மின் வசதி .. .. | 25.00 | .. |
| 10 சாலை வசதி .. .. | 108.56 | .. |
| 11 வீட்டு வசதி .. .. | 0.52 | .. |
| 12 மானிடத் திறன் மற்றும் தொழில் வாய்ப்பு | 3.35 | .. |
| 13 கல்வி வசதி .. .. | 12.59 | 2.00 |
| 14 சத்துணவு .. .. | 33.00 | .. |
| 15 குடிநீர் வசதி .. .. | 75.00 | .. |

## இணைப்பு III—தொடர்ச்சி.

### பழங்குடியினர் துணைத் திட்டம் 1985—86-தொடர்ச்சி.

(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | | (2) | (3) |
|---|---|---|---|
| 16 சமுதாய வளர்ச்சி | .. | 4.55 | .. |
| 17 மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலன் | | 25.11 | 19.00 |
| 18 பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் | | 5.11 | 6.00 |
| 19 ஆரம்ப சுகாதார நிலையங்கள் | | 25.94 | 10.00 |
| 20 ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் நல இயக்கம் [கல்வி நீங்கலாக] | | 5.20 | 2.00 |
| 21 சிதறி வாழும் பழங்குடியினர் | | 0.10 | .. |
| 22 பண்டைய பழங்குடியினர் | | .. | 3.00 |
| மொத்தம் | .. | 612.57 | +149.00— |
| | .. | | 761.57 |



## இணைப்பு VII

(381 ஆம் பக்கத்தில் இனம் 1 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### மானியக் கோரிக்கை எண் 32.

### 1985-86.

### 1. முன்னுரை.

மானியக் கோரிக்கை எண் 32 "பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம்" என்ற தலைப்பில் ரூ. 11,54,12,000 வழங்குமாறு நான் முன் மொழிகிறேன்.

2. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் நலத்தைப் பேணுவதற்காக 1969-ல் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டது. அது ஓர் ஐ.ஏ.எஸ். அலுவலரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. மாவட்டங்களில் துணை ஆட்சியர் தகுதியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் வேலைகளை கவனித்து வருகின்றனர். சீர்மரபினர் முன்னேற்றத்திற்கென தனித் துணை ஆட்சியர் மதுரையில் செயலாற்றி வருகிறார்.

3. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறுவதற்காக, பிற்படுத்தப் பட்டோர் நலம் குறித்த தனி மானியக் கோரிக்கை 1971-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. 1967-68-ம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,61,40,000 படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 1985-86-ம் ஆண்டில் ரூ. 11.54,12,000 ஆக உயர்ந்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலையை உயர்த்துவதற்கான திட்டங்களைச் செயல் படுத்துவதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அடைந்துள்ள துரித முன்னேற்றத்தை இவ்வுயர்வு எடுத்துக் காட்டுகிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் மேம்பாட்டுக்காக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நலத் திட்டங்களின் விவரம் பின்வருமாறு :

### II கல்வி.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் எல்லா துறைகளிலும் முன்னேற்றம் பெறக் கல்வி முக்கியமான சாதனம் என்று அரசு கருதுகிறது. எனவே, இந்த அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் கல்வியில் ஏற்றம் பெறத் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. பிற்படுத்தப்

பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ-மாணவியர்கள் முன்னேற்றம் பெற வழிகோலும் வகையில் அவர்களுக்காகப் பள்ளிகள், உண்டு விடுதிகள் போன்ற வசதிகளை அரசு செய்துள்ளது. அரசு இவர்களுக்காக மெட்ரிக் படிப்புக்கு முன் மற்றும் மெட்ரிக் படிப்புக்குப் பின் உபகாரச் சம்பளம், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் போன்றவைகளை வழங்குவதன் மூலம் நிதியுதவியளித்து வருகிறது.

(i) பள்ளிகள்: சீர்மரபினர் கல்வி மேம்பாட்டுக்காகத் தமிழ் நாட்டில் 277 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளைப் பற்றிய மாவட்ட வாரியான விவரங்கள் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1984-85-ம் ஆண்டு 50,453 மாணவர்கள் இப்பள்ளிகளில் பயின்றனர். ரூ. 1,82,02,000 செலவிடப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் கல்வித் தரத்தை முன்னேற்றுவதற்காக 1985-86-ம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது :—

(1) 36 கள்ளர் நடுநிலைப் பள்ளிகளுக்கு போதனா உபகரணங்கள் வழங்க ரூ. 54,000 செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

(2) 36 கள்ளர் நடுநிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டுக் கருவிகள் வாங்கி வழங்க ரூ. 72,000 செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

(3) 81 கள்ளர் பள்ளிகளுக்கு மரச் சாமான்கள் வாங்கி வழங்க ரூ. 81,000 செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பள்ளிகளில் படிக்கும் 52,573 மாணவ-மாணவியர் நலனுக்காக 1985-86-ல் இப்பள்ளிகளை நடத்திட ரூ. 1,84,13,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 8-ம் வகுப்பு, எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு ஆகியவற்றில் ஆண்டுத் தேர்வுகளில் மிக அதிக மதிப்பெண்களும், அதற்கு அடுத்தபடியாக அதிக மதிப்பெண்களும் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும், சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கும் முதல் பரிசும், இரண்டாம் பரிசும் வழங்குவதற்காக ஆண்டிற்கு ரூ. 4,000 ஒதுக்கப்படுகிறது. இது தவிர, மாநில அளவில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லது சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் ரூ. 500 மதிப்புள்ள பரிசும் வழங்கப்படுகிறது.



மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகளின் மதிப்பு :

எஸ்.எஸ்.எல்.சி.

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 100 |
| இரண்டாம் பரிசு | ரூ. 50 |

எட்டாம் வகுப்பு

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 50 |
| இரண்டாம் பரிசு | ரூ. 10 |

இப் பரிசுத் தொகைகளை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களிடையே மேல்நிலைப்பள்ளித் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும் தலா ரூ. 1,000 மதிப்புள்ள இரு முதல் பரிசுகள் மற்றும் போக்குவரத்துக் கட்டணமாக தலா ரூ. 100-ம் வழங்கும் திட்டத்தை அரசு 1983-84-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. 1984-85-ம் ஆண்டில் 66 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. ரூ. 7,000 செலவிடப்பட்டது. இதற்காக 1985-86-ம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 16,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 66 மாணவர்கள் பயனடைவார்கள்.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் :

கிராம மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இத்துறை நடத்தும் சீர்மரபினருக்கான பள்ளிகள் அனைத்திலும் 1—7—1982-லிருந்து 5 வயது முதல் 9 வயது வரையிலும் உள்ள எல்லா மாணவ-மாணவிகளும் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 15—9—1984 முதல் மதுரை மாவட்டத்தில் உள்ள 10 பள்ளிகளில் பயிலும் 10 முதல் 15 வயது வரையிலுள்ள 3,212 பள்ளி மாணவ-மாணவியர்களுக்கும் கூடுதலாக இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1984-85-ம் ஆண்டில் 40,000 மாணவர்கள் பயன்பெற்றனர். இதற்காக ரூ. 25,39,000 செலவிடப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டிற்காக ரூ. 26,63,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 40,000 மாணவர்கள் பயனடைவார்கள்.

**புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள் :**

மூன்றாம் வகுப்பு வரை படிக்கும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கு அரசு பாட நூல் நிறுவனத்தினால் வெளியிடப்படும் பாட புத்தகங்களும், எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. நான்காம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை பயிலும் சீர்மரபினர் மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்களும், நோட்டுப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 10,73,000 செலவிடப்பட்டது. 45,000 மாணவர்கள் பயானடைந்தனர். 1985-86 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 6,37,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 46,000 மாணவர்கள் பயனடைவார்கள்.

**உடைகள் (பள்ளிகள்) :**

எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவ-மாணவிகளுக்கும் இரண்டு ஜோடி உடைகள் வழங்கப்படுகின்றன. 1984-85-ம் ஆண்டு 62,000 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. ரூ. 20,06,000 செலவிடப்பட்டது. இத்திட்டத்திற்காக 1985-86-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 21,05,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 65,000 மாணவ, மாணவியர் பயனடைவர்.

) அரசு மாணவர் இல்லங்கள் : பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபின. மாணவர்களுக்காக இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்கள் தங்கள் படிப்பை இடையூறு இல்லாமல் தொடர அரசு வகைசெய்துள்ளது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்கும், மாணவியர் களுக்கும் தனித்தனியே இல்லங்கள் நடத்தப்படுகின்றன. ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேற்படாத பெற்றோர்களின் பிள்ளைகள் இந்த இல்லங்களில் சேருவதற்கு தகுதியுடையவராவார். பிற்படுத்தப்பட்ட வகுப்பையும் மற்றும் சீர்மரபினர் இனத்தையும் சார்ந்த மாணவ, மாணவியரின் பயனுக்காக நடத்தப்பட்டுவரும் மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை, அவற்றில் தங்கியுள்ள மாணவ-மாணவியர் எண்ணிக்கை ஆகியவை ஆண்டு வாரியாக இணைப்பு IIல் கொடுக்கப்பட்டுள்ளது.

1984-85-ம் ஆண்டு வரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களின் நலனுக்காக பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை 523 மாணவர் இல்லங்களை ஏற்படுத்தி நடத்திவருகிறது. 1984-85-ம் ஆண்டு 30,803 மாணவ, மாணவிகள் விடுதிகளில் சேர்ந்து தங்கிப் பயனடைந்தனர். இதற்காக ரூ. 3,13,32,000 செலவிடப்பட்டது. இந்த 523 மாணவர் இல்லங்களில், 68 இல்லங்கள் கல்லூரி மாணவ-மாணவியருக்கும், 8 இல்லங்கள் தொழிற்பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கும் ஏற்படுத்தப்



பட்டுள்ளன. 1985-86-ம் ஆண்டில் ரூ. 13,33,000 செலவில் பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினருக்காக மேலும் 20 மாணவர் இல்லங்கள் திறக்கப்பட உள்ளன. இந்நாள் வரை திறக்கப்பட்டிருக்கும் மாணவர் இல்லங்கள் பராமரிப்புக்கென 1985-86-ம் ஆண்டுக்கு ரூ. 3,82,85,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 32,000 மாணவ, மாணவியர் பயனடைவர். இதில் புதியதாக திறக்கவிருக்கும் 20 இல்லங்களிலுள்ள மாணவ, மாணவியரின் எண்ணிக்கையும் அடங்கும்.

**மரச்சாமான்கள் :—**

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர் இல்லங்களுக்கு மரச் சாமான்கள் வழங்க 1985-86-ம் ஆண்டில் முறையே ரூ. 4,00,000-மும், ரூ. 50,000-மும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**உணவுச் செலவு :**

1981-82-ம் ஆண்டிலிருந்து மாணவர் இல்லங்களிலுள்ள மாணவ, மாணவியருக்குப் பின்வரும் விகிதத்தில் உணவுச் செலவு அனுமதிக்கப் படுகிறது :—

| தொடர் எண். | மாணவர் இல்லங்கள். | மாநகர். | வெளியூர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| 1. | கல்லூரி மாணவர் இல்லங்கள் | 95 | 80 |
| 2. | தொழிற் கல்வி மாணவர் இல்லங்கள் | 95 | 80 |
| 3. | பள்ளி மாணவர் இல்லங்கள் | 60 | 60 |

**மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்டுதல் :**

தற்பொழுது, இத்துறையால் 523 மாணவர் இல்லங்கள் நடத்தப் படுகின்றன. இவற்றில், 49 விடுதிகள் மட்டுமே அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் உள்ளன. மற்றவை வாடகைக் கட்டடங்களில் உள்ளன. 1985-86-ல் அரசு மேலும் 20 விடுதிகளைத் திறக்க உள்ளது. எல்லாவற்றிற்கும் கட்டடம் கட்ட அதிகத் தொகை தேவை என்பதால், இவற்றிற்குப் படிப்படியாக கட்டடங்கள் கட்ட அரசு திட்டமிட்டு, 1985-86-ம் ஆண்டிற்கு இரண்டு மாணவர் இல்லங்கள் கட்டுவதற்கென ரூ. 8,00,000 ஒதுக்கியுள்ளது.

**சீருடைகள் வழங்குதல் (மாணவ, மாணவியர் இல்லங்கள்) :**

1971-72-ம் ஆண்டு முதல் அரசு நடத்தும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மற்றும் சீர்மரபினருக்கான மாணவர் இல்லங்களிலுள்ள மாணவர்களுக்கும் இரண்டு ஜோடி சீருடைகள் அளிக்கப்படுகின்றன. 1984-85-ம் ஆண்டு 24,367 மாணவ, மாணவிகள் பயனடைந்தனர். ரூ. 16,98,000 செலவிடப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 18,34,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 25,367 மாணவ, மாணவிகள் பயனடைவார்கள்.

**பகுதி நேர போதனை ஆசிரியர்களை நியமித்தல் :**

மாணவர் இல்லங்களில் சேர்ந்து படிக்கும் ஒன்பது, பத்து மற்றும் மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு காலையில்/மாலையில் போதிப்பதற்கு ஏறக்குறைய எல்லா உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களிலும் பகுதி நேரப் போதனை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

**உணவு மானியம் வழங்குதல் :**

தனியாரால் நடத்தப்படும் அங்கிகரிக்கப்பட்ட 47 மாணவர் இல்லங்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையிடமிருந்து உணவு மானியத்தைப் பெறத் தகுதியுடையன. சென்னை நகரம், மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையிடங்களிலுள்ள இல்லங்களில், மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 வீதமும், மற்ற இடங்களிலுள்ள இல்லங்களில் ரூ. 40 வீதமும், உணவுச் செலவுக்காகப் பத்து மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. உணவு மானியம் பெறும் இல்லங்களில் தங்கிப் பயில ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்குக் குறைவாக உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளே தகுதியுடையவர்களாவர். 1984-85-ம் ஆண்டு 2,500 மாணவர்கள் பயனடைந்தனர். ரூ. 9,29,000 செலவிடப்பட்டது. இம்மானியச் செலவை ஏற்பதற்கிாக 1985-86-ம் ஆண்டிற்கு ரூ. 10,07,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2,500 மாணவ, மாணவியர் பயனடைவர்.

**(iii) படிப்புதவித் தொகைகள் :**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் முன்னேற்றத்திற்கு கல்வியே மிக முக்கியமானதொரு அம்சம் என்று கருத்திற் கொண்டு அரசு அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்கி வருகிறது. இவ்வாறு வழங்கப்படும் உதவித் தொகையில் மாணவர்களின் படிப்புக் கட்டணம், தனிக் கட்டணங்கள், புத்தகங்களின் விலை, தேர்வுக் கட்டணம், விடுதிகளில் தங்கிப் படித்தால்



அதற்கான உண்டி, உறையுள் கட்டணமும் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களில் அடங்கும். பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும் சீர்மரபினர் இனத்து மாணவர்களுக்கு நான்காம் வகுப்பிலிருந்தும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. சீர்மரபினர் மாணவர்களுக்கு மூன்றாம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள், எழுது பலகைகள் முதலியன இலவசமாக கல்வித் துறையால் அளிக்கப்படுகிறது. இந்த இனங்களைச் சார்ந்த மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேற்படாமல் இருந்தால் பிற்படுத்தப்பட்ட நலத்துறையினரால் வழங்கப்படும் படிப்பு உதவித் தொகையைப் பெறுவதற்கு இம் மாணவர்கள் தகுதியுள்ளவர்களாவார்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைப் பொறுத்த மட்டில், முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண்ணிற்குக் குறையாமல் பெற்றிருந்தால், அந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆனால், சீர்மரபினர் மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே, படிப்பு உதவித் தொகையைப் பெற தகுதியுடையவர்களாவார்கள். 1984-85-ம் ஆண்டில் பள்ளிப் படிப்பு மற்றும் பட்டப் படிப்பு மாணவ, மாணவிகள் மொத்தம் 4,18,500 பேர் ரூபாய் 3,86,15,000 படிப்புதவித் தொகையாகப் பெற்று பயனடைந்தனர். இவர்களில் 2,34,000 மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். 1,84,500 மாணவர்கள் சீர்மரபினர் ஆவர்.

1982-83-ம் ஆண்டிலிருந்து கல்லூரிகள் மற்றும் தொழிற் கல்வி நிறுவனங்களின் முதல்வர்களுக்கு அவர்களுடைய கல்லூரிகள், தொழிற் கல்வி நிறுவனங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. தகுதியுள்ள மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகையை விரைவில் அனுமதித்து, வழங்கும் பொருட்டு முந்தைய ஆண்டில் அந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையில் 90 சதவீதத்திற்குச் சமமான தொகை கல்வி நிறுவனங்கள் முதல்வர்களிடம் முன் பணமாகக் கொடுக்கப்படுகிறது. கல்வி நிறுவன முதல்வர்களிடமிருந்து வரப் பெறும் அனுமதியின் அடிப்படையில் தேவையாயின், மேலும் நிதி அளிக்கப்படுகிறது.

புதிதாக உதவித்தொகை கோரும் மாணவர்களுக்கு அவர்கள் தகுதி பற்றிய அட்டைகள் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அலுவலர்களின் மூலமாகக் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. முந்தைய ஆண்டுகளில் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை, உதவித் தொகை வழங்குவதற்குச் செலவிடப்பட்ட தொகை ஆகியவற்றின் விவரங்கள் இணைப்பு III ல் கொடுக்கப்பட்டுள்ளன.

கலை, விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், கால் நடை மருத்துவம், வேளாண்மை, சட்டம், பட்டப்படிப்பு, சான்றிதழ் படிப்பு, பட்டயக் கணக்கர் படிப்பு போன்ற மெட்ரிக் படிப்பிற்குப் பிந்திய பாட வகுப்புகளுக்கும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. தகுதி வாய்ந்த எல்லா பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்களும் மற்றும் சீர்மரபினரும் இந்த படிப்பு உதவித் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(iv) விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் படிப்பு உதவித் தொகையில் அடங்கும் உணவு உறைவிடக் கட்டண விதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :

| தொடர் எண். | பாடம். | பிற்படுத்தப் பட்ட வகுப்பினர். | சீர் மரபினர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (மாதம் ஒன்றுக்கு ரூபாய்.) | |
| **சென்னை மாநகரம் :** | | | |
| 1. | கலை, விஞ்ஞானம், சட்டம் | 60 | 70 |
| 2. | மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால் நடை மருத்துவம் இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள். | 60 | 75 |
| 3. | தொழில், தொழில் நுட்பக்கல்வி | 50 | 60 |
| **வெளியூர் :** | | | |
| 1. | கலை, விஞ்ஞானம், சட்டம் | 50 | 55 |
| 2. | மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால் நடை மருத்துவம் இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள். | 55 | 70 |
| 3. | தொழில், தொழில் நுட்பக்கல்வி | 45 | 50 |



(v) படிப்புக் கட்டணச் சலுகைகள் :

மேல் நிலைப் பள்ளி வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு கல்வித் துறையின் மூலமும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலமும் படிப்புக் கட்டணச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன :—

| வருமானம். | மிகவும் பிற்படுத்தப் வகுப்பினர். | சீர் மரபினர் | பிற்படுத்தப் பட்ட வகுப்பினர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி முழுக் கட்டணச் சலுகை. | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி முழுக் கட்டணச் சலுகை. | தமிழ்நாடு கல்வி விதி எண் 92-ன் படி அரைச் சம்பளச் சலுகை. (பாதிப் படிப்புக் கட்டணம் உதவித் தொகையுடன் சேர்த்து பிற்படுத்தப் பட்டோர் நலத் துறையால் வழங்கப்படுகிறது.) |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,501 முதல் ரூ. 5,000 வரை வருமானம் உள்ளவர்களுக்கு | கல்வித்துறையிடமிருந்து சலுகை எதுவும் கிடையாது. இம் மூன்று பிரிவினருக்கும் பாதிப் படிப்புக் கட்டணச் சலுகை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. | | |

உதவித் தொகை வழங்குவதற்காக 1985-86-ம் ஆண்டிற்கு ரூ. 3,69,65,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 4,57,392 மாணவ, மாணவியர் பயனடைவர்.

(vi) கடன் உதவித் தொகை :

தொழிற் படிப்புகளைப் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு அவரவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,001 முதல் ரூ. 10,000-க்கு உட்பட்டு இருந்தால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 வீதம் கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட படிப்பை படிக்கும் காலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு

மிகாமல் உதவித் தொகை ரூ. 2,500 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. 1984-85-ம் ஆண்டு 29 மாணவர்களுக்குக் கடன் உதவித் தொகை வழங்கப்பட்டது. ரூ. 14,500 செலவிடப்பட்டது. 1985-86-ம் ஆண்டுக்கு ரூ. 50,00 ஒதுக்கப்பட்டுள்ளது. 100 பேர் பயனடைவார்கள்.

### பயிற்சி வகுப்புகள்.

### ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற அனைத்திந்திய பணிகளுக்கான சிறப்பு பயிற்சி நிலையம்.

1971-ம் ஆண்டு டிசம்பரில் அனைத்திந்திய உயர் அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு அந்தத் தேர்வு எழுத பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் தொடங்கப்பட்டது. இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சிப் பெற்ற மாணவர்கள், தேர்வு எழுதியவர்கள், மற்றும் தேறிய மாணவர்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு IV-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மத்தியப்பணித் தேர்வாணைக்குழு நடத்தும் அரசுப் பணி தேர்வுகள் எழுத புதுடெல்லியில் உள்ள டாக்டர் ராவின் ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற தமிழ் நாட்டில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 10 பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களை அனுப்பி வைக்கும் இத்திட்டத்தை அரசு 1983-ம் ஆண்டில் கொண்டு வந்தது. பயிற்சி திட்டத்திற்கான மூன்று நிலைகளுக்குமாக அரசு ரூ. 1,00,000 அனுமதித்துள்ளது. இத்திட்டம் மூன்றாண்டுகளுக்கு சோதனை முறையில் செயலாக்கப்படவிருக்கிறது. 1984-85-ம் ஆண்டு 50 மாணவர்கள் பயனடைந்தனர். ரூபாய் 4,34,000 செலவிடப்பட்டது. 1985-36-ம் ஆண்டிற்கு ரூ. 6,43,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 50 பேர் பயனடைவர். இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் விவரம் இணைப்பு V-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### பொதுநோக்கு பொறியியல் பட்டறைகள் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டத்தில் செக்கனூரணியிலும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் வீரகேரளம் புதூரிலும் உள்ள மூன்று பொதுநோக்குப் பொறியியல் பட்டறைகள் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் நேரடி மேற்பார்வையில் உள்ளன. இவை தொழிற் பயிற்சி நிலையங்களின் தரத்திற்கு உயர்த்தப் பட்டுள்ளன. இவற்றிற்காகும் செலவு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் ஏற்றுக் கொள்ளப் படுகிறது. இப்பட்டறைகளில் பொருத்துதல், பற்றவைத்தல் மற்றும் கடைசல் ஆகியவற்றில் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது.



சீர்மரபினர் மேற்கூறிய தொழில்களில் வேரூன்றி நின்று அவர்களுடைய பொருளாதார நிலைமை மேம்படுத்திக் கொள்வதோடல்லாமல் சுயவேலையில் ஈடுபட அவர்களிடம் போதிய தொழில் நுட்பத் திறமையை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆண்டொன்றுக்கு 60 சீர்மரபினர் மாணவர்கள் இப்பயிற்சி நிலையங்கள் மூலம் பயன்பெறுவர். இதற்கான செலவு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையிலிருந்து வழங்கப்படுகிறது.

### தொழிற்பயிற்சி நிலையங்கள் :

சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலனுக்காக பின்வரும் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன :—

1. தையல் மற்றும் ஆயத்த ஆடை பயிற்சி நிலையம், செட்டியார்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

2. தையல் மற்றும் பூ வேலைப்பாடு நிலையம், செக்கானூரணி, மதுரை மாவட்டம்.

3. பிரம்பு மற்றும் நார்இழைப் பிரிவு, நக்கலை மற்றும் குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

4. தையல் நிலையம், இருஞ்ஞான் கோவில் கன்னியாகுமரி மாவட்டம்.

5. தையல் நிலையம், திருவெண்ணெய்நல்லூர், தென்னாற்காடு மாவட்டம்.

6. தையல் நிலையம், கம்பம், மதுரை மாவட்டம்.

7. தையல் நிலையம். தேவர்குளம், திருநெல்வேலி மாவட்டம்.

8. தையல் நிலையம், திருவாடனை, இராமநாதபுரம் மாவட்டம்.

1984-85-ம் ஆண்டு ரூபாய் 10,03,000 செலவிடப்பட்டது. 1985-86-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 11,06,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் :

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு வேலை வாய்ப்புப் படிப்புகளுக்கான பயிற்சித் திட்டத்தினை அரசு 1984-85-ம் ஆண்டு முதல் துவக்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாணவருக்கும் அதிக பட்சமாக ரூ. 500-க்கு மேற்படாத கல்விக் கட்டணத்தை வழங்கி, மூன்று மாத பயிற்சி அளிக்கப்படுகிறது.

[1985 ஜூலை 12

இத்திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்கத்துடன் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற பல்வேறு நிறுவனங்களின் பணி நியமனங்களுக்கான போட்டித் தேர்வுகளை எழுதத் தனிப் பயிற்சி அளிக்கப் படுகிறது. இதைத் தவிர, கம்ப்யூட்டர் புரோகிராமிங், விற்பனையாளர் போன்ற துறைகளிலும் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இதுவரை இத்துறை மூலம் வங்கி புரபேஷனரி அதிகாரி தேர்வு எழுதப் பயிற்சி, கம்ப்யூட்டர் பயிற்சி, விற்பனையாளர் போன்ற பயிற்சிக்கு 239 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். இவர்களில் 20 பேர் பெண்கள் ஆவர்.

**இதுவரை இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தோர் விவரம்:**

| | |
|---|---|
| 1. வங்கி புரபேஷனரி அதிகாரி தேர்வுப் பயிற்சி முதல் குழு | 40 |
| இரண்டாவது குழு | 33 |
| 2. கம்ப்யூட்டர் புரோகிராமிங் முதல் குழு | 100 |
| இரண்டாவது குழு | 56 |
| 3. விற்பனையாளர் பயிற்சி | 10 |

இப்பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலத்தில் சென்னையில் தங்கிப் பயில ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் இரண்டு விடுதிகள் திறக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆண்கள் விடுதி திறக்கப்பட்டு அக்டோபர், 1984 முதல் இயங்கி வருகிறது. 1984-85-ம் ஆண்டு 239 மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக ரூ. 1,87,000 செலவிடப்பட்டது. இத்திட்டத்திற்காக 1985-86-ம் ஆண்டிற்கு ரூ. 8,16,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 600 மாணவர்கள் பயனடைவர்.

**சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்:**

பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த சட்டம் படித்த பட்டதாரிகள் புகழ் பெற்ற முதுநிலை வழக்குரைஞர்களிடம் பயிற்சி பெற இயலவில்லை. எனவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களிடையே இருந்து ஆண்டுதோறும் 20 சட்டப் பட்டதாரிகளைத் தெரிந்தெடுத்து, அவர்கள் பல்வேறு அனுபவம் பெறும் பொருட்டு, பல்வேறு சட்டப் பிரிவுகளில் வல்லமை பெற்று சிறந்து விளங்கும் முதுநிலை வழக்குரைஞர்களிடம் பயிற்சிக்கு அமர்த்தி 3 ஆண்டுகளில் பயிற்சி பெற திட்டமொன்றினை அரசு உருவாக்கியிருக்கிறது. பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுவோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 பயிற்சி உதவித் தொகையாக



1985 ஜூலை 12]

வழங்கப்படும். முதுநிலை வழக்குரைஞர்கள் இத்திட்டத்தில் பங்கேற்பதை சிறப்பிக்கும் பொருட்டு அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5,001 மதிப்பூதியம் வழங்கப்படும். 1985-86-ம் ஆண்டுக்கு ரூ. 3,22,000 ஒதுக்கப் பட்டுள்ளது.

## IV பொருளாதார முன்னேற்றம்.

**முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், மற்றும் போயர் ஆகியோருக்கு தொழிற் கருவிகள் வழங்குதல்.**

முடிதிருத்துதல், சலவைத் தொழில் செய்துவரும் நாவிதர், வண்ணார் போன்ற வகுப்பினைச் சார்ந்த ஏழை மக்களுக்கு அவர்கள் தங்கள் தொழிலைச் செய்து வாழ, அத்தொழில்களுக்குத் தேவையான கருவிகளை இலவசமாக அரசு வழங்குகிறது. முடிதிருத்தும் தொழிற் கருவிகள் ரூ. 120 மதிப்பிலும், சலவைக் கருவிகள் ரூ. 406 மதிப்பிலும் அரசால் வழங்கப் படுகின்றன.

கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள போயர்களுக்கு இலவசமாகத் தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம் 1978-79-ம் ஆண்டிலிருந்து செயலில் உள்ளது. இதற்கான கருவிகளின் விலை ரூ. 200. தற்பொழுது இத்திட்டம் சென்னை மாநகர் தவிர, எல்லா மாவட்டங்களிலும் செயலில் உள்ளது. 1984-85-ம் ஆண்டு 6,000 பேர் பயனடைந்தனர். இதற்காக ரூ. 20,15,000 செலவிடப்பட்டது. 1985-86-ம் ஆண்டிற்கு ரூ. 16,07,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு 5,500 நபர்கள் பயனடைவர்.

**சலவைத் துறைகள் கட்டுதல்:**

சலவைத் துறைகள் கட்டுவது சலவைத் தொழிலாளர்களுக்கென்று செய்து கொடுக்கப்படும் முக்கிய வசதியாகும். பேரூராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சி களுக்கும் சலவைத்துறை கட்ட பின்வருமாறு நிதி உதவி அளிக்கப் படுகின்றன:—

| | |
|---|---|
| 1. அரசு உதவித் தொகை | 75 சதவீதம். |
| 2. உள்ளாட்சி மன்றம் அளிக்கும் தொகை | 20 சதவீதம். |
| 3. பயனடைவோர் அளிக்கும் தொகை | 5 சதவீதம். |

1984-85-ம் ஆண்டு 3 சலவைத்துறைகள் கட்ட ரூ. 1,44,000 செலவிடப்பட்டது. 1985-86-ம் ஆண்டுக்கு ரூ. 2,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**பாசனக் கிணறுகள் தோண்டுதல் :**

சீர்மரபினர் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு அவர்களில் 2 ஏக்கருக்கும் குறைவான நிலச் சொந்தக்காரர்களுக்கு பாசனக் கிணறுகள் வெட்ட மான்யம் அளிக்கப்படுகிறது. ஒரு கிணறு வெட்ட வழங்கப்படும் அதிகபட்ச உதவித் தொகை ரூ. 2,500 ஆகும். 1984-85-ம் ஆண்டு 105 பேர் பயனடைந்தனர். ரூ. 2,62,000 செலவிடப்பட்டது. 1985-86-ம் ஆண்டிற்கு இத் திட்டத்திற்கு ரூ. 1,18,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 48 பேர் பயனடைவார்கள்.

**வீட்டுவசதி :**

சீர்மரபினர் சமுதாயத்தினருக்காக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 1979-80 மற்றும் 1980-81-ம் ஆண்டுகளில் மொத்தம் 967 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. இவற்றுள் 663 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1985-86-ம் ஆண்டிற்கு ரூ. 1,000 (அடையாளமாக) ஒதுக்கப்பட்டுள்ளது.

**குழந்தை நல நிலையங்கள் :**

அஜீஸ் நகர் குடியிருப்புப் பகுதியில் செயல்பட 5 குழந்தை நல நிலையங்கள் தற்பொழுது உளுந்தூர்பேட்டை வட்டத்திலுள்ள எடக்கால் என்ற இடத்தில் இயங்கி வருகின்றன. இந்நிலையங்கள் தற்பொழுது முதலமைச்சரின் சத்துணவுக் கூடங்களுடன் இணைக்கப்பட்டு சமூக நல இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக வீட்டு மனைகள் கையகப்படுத்துதல் :**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள மக்களுக்காக, குறிப்பாகத் தொழில் அடிப்படையிலான வகுப்புகளைச் சார்ந்தவர்களும், மிகவும் நலிந்த நிலையிலுள்ளவர்களுக்குமான குட்டா, நாவிதர், வண்ணார், நரிக்குறவர் வகுப்பை சார்ந்தவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்க நிலங்களைக் கையகப்படுத்தும் சிறப்புத் திட்டமொன்றை அரசு 1981-82-லிருந்து செயல்படுத்தி வருகிறது. 1984-85-ம் ஆண்டு ரூ. 23,51,000 இதற்காகச் செலவிடப்பட்டது. இத்திட்டத்திற்கு 1985-86-ம் ஆண்டிற்கு ரூ. 10,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



**V. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கோடு, ரூ. 10 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன், 'தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்' என்னும் அமைப்பை அரசு ஏற்படுத்தியுள்ளது. இக்கழகத்தின் நோக்கம் பின்வருமாறு :—

1. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டுத் தொழில் தொடங்குவதற்கான தொடக்க மூலதனத் தொகையைக் குறைந்த வட்டியில் வழங்குதல் ; மற்றும்

2. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்கு அவசியமென்று கருதக்கூடிய வர்த்தக, வணிகத் தொழில் ரீதியான மற்றும் பொதுவான நடவடிக்கைகளை நேரடியாக அல்லது மறைமுகமாக மேற்கொள்ளுதல்.

இக்கழகத்தின் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அரசு இதுவரையில் ரூ. 30,00,000 பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது. மேலும், ரூ. 10,00,000 வழிமுறை ஏற்பாட்டு முன்பணம் வழங்கியுள்ளது. இக்கழகம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமே கடன் வழங்குகிறது. கால்நடை வளர்த்தல், கிராம குடிசைத் தொழில்கள் வளர்ச்சி மற்றும் இவை போன்ற தொழில்களைச் செய்து பிற்படுத்தப்பட்டோரின் வாழ்க்கை ஏற்றம் பெற தொழிலுக்குத் தேவையான முதலீட்டில் 20 சதவீதத் தொகையை 4 சதவீதம் வட்டி விதத்தில் இக்கழகம் கடனாக வழங்குகிறது. எஞ்சியுள்ள 80 சதவீத முதலீட்டுத் தொகையை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து, கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

1983-84-ல் ரூ. 55,47,000 மொத்த மூலதனச் செலவில் 23 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்படுவதற்காக ரூ. 11,09,000 கடனாக இக்கழகம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 717 குடும்பங்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

VI. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர்களுக்காக ஏற்படுத்தப் பட்ட இரண்டாம் உயர் ஆணைக்குழு.

திரு. ஜே. எ. அம்பாசங்கர், இ.ஆ.ப. (ஓய்வு பெற்ற) அவர்களின் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக்குழுவை 1982-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் அரசு அமைத்தது. இக்குழு தன்னுடைய அறிக்கையை 28—2—1985-ல் அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

முடிவுரை.

இவ்வாறு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மானியக் கோரிக்கைக்கு ஒப்புதலளிக்குமாறு அவையிடம் நான் வேண்டுகிறேன்.





இணைப்பு 1.

சீர்மரபினர் இனத்து மாணவர்களுக்கான பள்ளிகள்.

| மாவட்டங்கள். | மேல்நிலைப்பள்ளி. | | உயர்நிலைப் பள்ளி. | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ மாணவியர். | எண்ணிக்கை. | மாணவ, மாணவியர். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. வட ஆற்காடு | .. | .. | .. | .. |
| 2. தென்னாற்காடு | .. | .. | .. | .. |
| 3. மதுரை (கள்ளர்சீரமைப்பு). | 2 | 1,833 | 8 | 2,248 |
| 4. இராமநாதபுரம் (காமராசர் மாவட்டமும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டமும் உட்பட). | .. | .. | .. | .. |
| 5. திருநெல்வேலி | .. | .. | .. | .. |
| 6. சேலம் | .. | .. | .. | .. |
| 7. பெரியார் | .. | .. | .. | .. |
| 8. கோயம்புத்தூர் .. | .. | .. | .. | .. |
| 9. தர்மபுரி | .. | .. | .. | .. |
| மொத்தம் | 2 | 1,833 | 8 | 2,248 |

[1985 ஜூலை 12

## இணைப்பு 1—தொடர்ச்சி.

சீர் மரபினர் இனத்து மாணவர்களுக்கான பள்ளிகள்—தொடர்ச்சி.

| மாவட்டங்கள். | நடுநிலைப் பள்ளிகள். | | ஆரம்பப் பள்ளிகள். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ, மாணவியர். | எண்ணிக்கை. | மாணவ மாணவியர். |
| (1) | (6) | (7) | (8) | (9) |
| 1. வட ஆற்காடு .. | .. | .. | 4 | 445 |
| 2. தென்னாற்காடு | | | 1 | 225 |
| 3. மதுரை (கள்ளர் சீரமைப்பு) | 30 | 12,298 | 208 | 30,748 |
| 4. இராமநாதபுரம் (காமராசர் மாவட்டமும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டமும் உட்பட). | 1 | 403 | 5 | 1,084 |
| 5. திருநெல்வேலி .. | 1 | 322 | 9 | 1,098 |
| 6. சேலம் .. | 1 | 170 | 1 | 261 |
| 7. பெரியார் .. | 1 | 370 | 1 | 299 |
| 8. கோயம்புத்தூர் .. | .. | .. | 1 | 36 |
| 9. தர்மபுரி .. | 2 | 532 | 1 | 201 |
| மொத்தம் .. | 36 | 14,095 | 231 | 34,397 |

1985-86-ல் மொத்தப் பள்ளிகள்—277.
மொத்த மாணவர்கள்—52.573.
1984—85-ல் மொத்தப் பள்ளிகள்—277
மொத்த மாணவர்கள்—50,453.



1985 ஜூலை 12]

## இணைப்பு II.

அரசு பிற்படுத்தப்பட்டோர்—சீர்மரபினர் இனத்து மாணவர் இல்லங்கள்.

| ஆண்டு. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். | | சீர்மரபினர் இனத்தவர்கள். | |
|---|---|---|---|---|
| | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1969-70 .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1970-71 .. | 28 | 2,144 | 40 | 4,039 |
| 1971-72 .. | 83 | 5,333 | 46 | 4,369 |
| 1972-73 .. | 123 | 7,608 | 46 | 4,369 |
| 1973-74 .. | 144 | 9,348 | 54 | 5,099 |
| 1974-75 .. | 177 | 11,210 | 54 | 5,099 |
| 1975-76 .. | 196 | 12,060 | 53* | 5,069 |
| 1976-77 .. | 215 | 13,305 | 51* | 4,919 |
| 1977-78 .. | 227 | 14,065 | 57 | 5,219 |
| 1978-79 .. | 237 | 14,565 | 57 | 5,219 |
| 1979-80 .. | 261 | 15,538 | 60 | 5,369 |
| 1980-81 .. | 295 | 17,263 | 62 | 5,469 |
| 1981-82 .. | 335 | 19,263 | 62 | 5,469 |
| 1982-83 .. | 375 | 21,028 | 65 | 5,684 |

[1985 ஜூலை 12

## இணைப்பு II—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5)* |
|---|---|---|---|---|
| 1983-84 .. | 415 | 23,078 | 68 | 5,834 |
| 1984-85 .. | 443 | 24,369 | 80 | 6,434 |

* தேவையான மாணவர்கள் இல்லாததினால் மூன்று சீர் மரபினர் இனத்தோருக்கான இல்லங்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான இல்லங்களாக மாற்றப்பட்டன.

1984-85-ல் மொத்த மாணவர் இல்லங்கள்—523.

மொத்தம் பயனடைந்த மாணவர்கள்—30,803.



1985 ஜூலை 12]

## இணைப்பு III.

படிப்பு உதவித் தொகை வழங்கப்பட்ட மாணவர்களைன விவரம்.

சீர்மரபினர் இனத்து மாணவர்கள்.

| ஆண்டு. | மேல்நிலைப் பள்ளிப் படிப்பு. | கல்லூரிப் படிப்பு. | ரூபாய் இலட்சங் களில். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1969-70 .. .. | 41,361 | 2,828 | 21.16 |
| 1970-71 .. .. | 53,769 | 3,173 | 25.55 |
| 1971-72 .. .. | 60,614 | 3,805 | 30.85 |
| 1972-73 .. .. | 67,772 | 4,638 | 34.29 |
| 1973-74 .. .. | 65,876 | 4,338 | 34.38 |
| 1974-75 .. .. | 60,661 | 4,673 | 35.66 |
| 1975-76 .. .. | 61,845 | 3,964 | 29.64 |
| 1976-77 .. .. | 57,026 | 3,985 | 33.65 |
| 1977-78 .. .. | 1,10,639 | 4,183 | 29.80 |
| 1978-79 .. .. | 1,84,772* | 3,902 | 31.08 |
| 1979-80 .. .. | 1,71,486 | 6,939** | 33.60 |
| 1980-81 .. .. | 1,65,820 | 6,398 | 35.16 |
| 1981-82 .. .. | 1,69,413 | 7,438 | 38.69 |

## இணைப்பு III—தொடர்ச்சி.

| (1) | | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|---|
| 1982-83 | .. | .. | 1,72,881 | 9,054 | 41.31 |
| 1983-84 | .. | .. | 1,73,209 | 9,214 | 44.05 |
| 1984-85 | .. | .. | 1,75,000 | 9,500 | 50.78 |

* இந்த ஆண்டில் 1977-78 ஆம் ஆண்டும் அடங்கும்.

** 1978-79 ஆம் ஆண்டு மேல்நிலைப் பள்ளி படிப்பு படித்த மாணவர்களுக்கான உதவித் தொகைகள்—அரசாணை பெறப்பட்ட பின்னர் 1979-80 ஆம் ஆண்டில்தான் சேர்த்து வழங்கப்பட்டது. ஆதலால், 1979-80-ல் பயன்பெற்றோர் எண்ணிக்கை மிகுந்துள்ளது. ஆனால், 1980-81-ல் அங்ஙனம் உதவித் தொகை சேர்த்து வழங்கப்படவில்லை. ஆதலின், பயன்பெற்றோர் எண்ணிக்கை அதிகமாக இல்லை.

1984-85 ஆம் ஆண்டு உதவித் தொகை பெற்றுப் பயனடைந்த மொத்த சீர்மரபினர் மாணவர்கள்—1,84,500.

1984-85 ஆம் ஆண்டு உதவித் தொகை வழங்க மொத்தம் செலவிடப்பட்ட தொகை—ரூ. 50,78,000.



## இணைப்பு III—தொடர்ச்சி.

### படிப்பு உதவித் தொகை.

### பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்.

| ஆண்டு. | | | மேல்நிலைப் பள்ளிப் படிப்பு. | கல்லூரிப் படிப்பு. | ரூபாய் இலட்சங்களில். |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| 1969–70 | .. | .. | 42,515 | 48,050 | 160.89 |
| 1970–71 | .. | .. | 74,842 | 59,407 | 201.20 |
| 1971–72 | .. | .. | 92,694 | 72,281 | 290.50 |
| 1972–73 | .. | .. | 1,04,486 | 87,652 | 324.65 |
| 1973–74 | .. | .. | 94,032 | 80,025 | 318.86 |
| 1974–75 | .. | .. | 88,897 | 86,494 | 331.68 |
| 1975–76 | .. | .. | 90,620 | 71,433 | 317.08 |
| 1976–77 | .. | .. | 80,372 | 78,741 | 295.00 |
| 1977–78 | .. | .. | 1,07,501 | 74,469 | 291.53 |
| 1978–79 | .. | .. | 1,02,490 | 66,341 | 264.83 |
| 1979–80 | .. | .. | 1,02,672 | 1.03,911 | 261.61 |
| 1980–81 | .. | .. | 1,07,073 | 94,456 | 275.49 |
| 1981–82 | .. | .. | 1,10,155 | 1,04,779 | 293.25 |
| 1982–83 | .. | .. | 1,34,884 | 1,14,734 | 319.42 |

இணைப்பு III—தொடர்ச்சி.

| (1) | | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|---|
| 1983–84 | .. | .. | 1,15,506 | 1,17,882 | 322.41 |
| 1984–85 | .. | .. | 1,16,000 | 1,18,000 | 335.37 |

குறிப்பு:—1977–78-ம் ஆண்டு முதல் பள்ளிக் கல்வி மாணவர்களுக்கான உதவித் தொகை பொருள் வடிவில் அதாவது புத்தக வடிவில் வழங்கப்பட்டது. சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணங்கள் நேரிடையாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் செலுத்தப்படுகின்றன.

---

1984–85-ம் ஆண்டு உதவித்தொகை பெற்று பயனடைந்த மாணவர்கள்—2,34,000.

1984–85-ம் ஆண்டு உதவித்தொகை வழங்க செலவிடப்பட்ட தொகை—ரூ. 3,35,37,000.



இணைப்பு IV.

சிறப்புப் பயிற்சி நிலையம்.

பழைய முறை.

| அணி எண். | ஆண்டு. | சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | யு.பி.எஸ்.சி. தேர்விற்குச் சென்றவர்கள். | நேர்முகத் தேர்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். | நேர்முகத் தேர்விற்குப் பின் இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள். ஐ.ஏ.எஸ். | ஐ.பி.எஸ். | மத்திய அரசுப் பணிகள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | 1971–72 | 12 | 8 | 3 | .. | .. | .. |
| 2 | 1972–73 | 57 | 34 | 6 | 1 | .. | 2 |
| 3 | 1973–74 | 46 | 33 | 4 | 1 | 1 | .. |
| 4 | 1974–75 | 51 | 46 | 8 | .. | 1 | 2 |
| 5 | 1975–76 | 60 | 52 | 3 | .. | 1 | .. |
| 6 | 1976–77 | 40 | 35 | 2 | 1 | .. | .. |
| 7 | 1977–78 | 42 | 38 | 1 | | .. | 1 |

## இணைப்பு IV—தொடர்ச்சி.

புதிய முறை.

| அணி எண். (1) | ஆண்டு. (2) | பூர்வாங்கத் தேர்விற்குச் சேர்க்கப்பட்டவர்கள். (3) | அதில் தேறியவர்கள். (4) | யு.பி.எஸ்.சி. தேர்வுக்குச் சென்றவர்கள். (5) | நேர்முகத் தேர்விற்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள். (6) | நேர்முகத் தேர்வில் இறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஐ.ஏ.எஸ். (7) | ஐ.பி.எஸ். (8) | மத்திய அரசுப் பணிகள். (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1979 .. | 48 | 12 | 16 (12+4*) | 1 | .. | .. | 1 |
| 9 | 1980 ... | 49 | 22 | 27 (22+5*) | 6 | .. | .. | 2 |
| 10 | 1981 .. | 42+ 90** | 8+ 4** | 4+ 3** | .. | .. | .. | .. |
| 11 | 1982 .. | 38+ 62** | 5+ 5** | 5+ 5** | .. | .. | .. | .. |
| 12 | 1983 | 43 | 17+ 2 | 10+ 4* | .. | .. | .. | .. |
| 13 | 1984 .. | 35 | 6 | 6 | தேர்வு முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. | | | |
| 14 | 1985 .. | 42 | | பயிற்சி நடந்து கொண்டிருக்கிறது. | | | | |

* வெளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.
** துணைப் பயிற்சி நிலையங்களிலிருந்து சேர்க்கப்பட்டவர்கள்.



## இணைப்பு V.

டாக்டர் ராவின் ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையம், புதுடெல்லி.

| ஆண்டு. (1) | தேர்வு. (2) | தேர்வுக்குச் சென்றவர்கள். (3) | தேறியவர்கள். (4) | இறுதியாக நேர்முகத் தேர்வில் தேறியவர்கள். ஐ.ஏ.எஸ். (5) | ஐ.பி.எஸ். (6) | மத்திய அரசுப் பணிகள். (7) |
|---|---|---|---|---|---|---|
| 1983 | நேரிடைத் தேர்வு | 7 | 2 | .. | .. | 2 |
| 1983 | சிவில் சர்வீஸ் இறுதித் தேர்வு. | 10 | 1 | .. | .. | .. |
| 1984 | சிவில் சர்வீஸ் பூர்வாங்கத் தேர்வு. | 9 | 5 | ... | ... | ... |
| 1984 | நேரிடைத் தேர்வு | 7 | 2 | .. | .. | 2 |
| 1984 | சிவில் சர்வீஸ் இறுதித் தேர்வு. | 10 | முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. | | | |
| 1985 | சிவில் சர்வீஸ் பூர்வாங்கத் தேர்வு. | 9 | பயிற்சி நடந்து கொண்டிருக்கிறது. | | | |

அட்டவணை ' அ '

கொள்கை விளக்கக் குறிப்பு, 1985–86ஆம் ஆண்டு.

1985–86-ம் ஆண்டிற்கான மதிப்பீடு.

(ரூபாய் ஆயிரத்தில்.)

மொத்தம் : 11,54,12. நிர்வாகத்தில் : 72,11 திட்டத்தில் : 10,82,01.

| திட்டத்தின் பெயர். | ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,76,52 | | திட்டத்தில் இல்லாதவை 9,05,49. | |
|---|---|---|---|---|
| | பிற்படுத்தப் பட்ட வகுப் பினருக்காக. | சீர்மரபினர் இனத்த வருக்காக. | பிற்படுத்தப் பட்ட வகுப் பினருக்காக. | சீர்மரபினர் இனத்த வருக்காக. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்). | | |
| உதவித் தொகை .. .. .. | .. | 74 | 3,26,17 | 46,34 |
| பள்ளிகள் .. .. .. .. | .. | 2,07 | .. | 1,82,06 |
| மதிய உணவு .. .. .. | .. | 6,70 | .. | 19,93 |
| புத்தகம் மற்றும் உடை .. .. | 10,34 | 28,10 | 3,44 | 4,38 |
| உணவு மானியம் .. .. .. | 1 | .. | 9,88 | 18 |
| விடுதிகள் .. .. .. .. | 87,29 | .. | 2,27,34 | 65,08 |
| பல்கலைக் கழகத்திற்கு மானியம் .. | .. | .. | 3,00 | .. |
| ஆசிரியர்களுக்கு வீடுகள் .. .. | .. | 15 | .. | .. |
| விவசாயம் .. .. .. | .. | .. | .. | 1,18 |
| தொழிற் பயிற்சி .. .. .. | .. | 2,55 | 1,49 | 7,02 |
| இலவசக் கருவிகள் .. .. .. | 15,01 | .. | 75 | 31 |
| குடிநீர் .. .. .. .. | .. | .. | .. | 10 |
| சலவைத் துறை .. .. .. | 2.00 | .. | .. | .. |
| தனிப்பயிற்சி நிலையம் .. .. | .. | .. | 6,43 | .. |
| சீர் மரபினர் இனத்தவருக்கு வீடுகள் | .. | 1 | .. | .. |
| வீட்டு மனைகள் ஆர்ஜிதம் .. | 10,00 | .. | .. | .. |
| சிறப்புப் பயிற்சி .. .. .. | .. | .. | 1 | .. |
| பட்டயக் கணக்கர் படிப்பு .. | .. | .. | 40 | .. |
| சிறந்த மாணவர்களுக்குப் பரிசு .. | 16 | .. | .. | .. |
| விடுதிகள் கட்டுதல் (சில்லரை வேலைகள்) | 1 | .. | .. | .. |
| பயிற்சியாளர்களுக்கு விடுதிகள் .. | 8,16 | .. | .. | .. |
| சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி.. | 3,22 | .. | .. | .. |
| மொத்தம் .. .. | 1,36,20 | 40,32 | 5,78,91 | 3,26,58 |

1985–86-ல் மொத்தம் .. ரூ. 11,54,12,000.
1984–85-ல் மொத்தம் .. ரூ. 10,98,64,000.

## அட்டவணை 'ஆ'

### அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர்/மாணவியர் இல்லங்கள்.

### 1984–85.

| (1) | அனுமதிக்கப்பட்ட மாணவர் மாணவியர் எண்ணிக்கை. (2) |
|---|---|
| சென்னை மாவட்டம்— | |
| 1. கல்லூரி மாணவர் இல்லம், கோடம்பாக்கம் .. | 105 |
| 2. கல்லூரி மாணவர் இல்லம், தியாகராயநகர் .. | 105 |
| 3. கல்லூரி மாணவர் இல்லம், சூளைமேடு .. | 105 |
| 4. தொழிற் பயிற்சி மாணவர் இல்லம், வேப்பேரி | 75 |
| 5. மாணவியர் இல்லம், திருவான்மியூர் .. | 120 |
| 6. மாணவியர் இல்லம், திருவல்லிக்கேணி .. | 70 |
| 7. கல்லூரி மாணவியர் இல்லம், தியாகராயநகர் | 50 |
| 8. கல்லூரி மாணவர் இல்லம், சூளை .. .. | 50 |
| செங்கல்பட்டு மாவட்டம்— | |
| 9. கல்லூரி மாணவர் இல்லம், காஞ்சீபுரம் .. | 100 |
| 10. கல்லூரி மாணவர் இல்லம், செங்கல்பட்டு .. | 50 |
| 11. கல்லூரி மாணவர் இல்லம், திருத்தணி .. | 50 |
| 12. கல்லூரி மாணவியர் இல்லம், காஞ்சீபுரம் .. | 50 |
| 13. மாணவர் இல்லம், வங்கனூர் .. .. | 50 |
| 14. மாணவர் இல்லம், கனகம்மா சத்திரம் .. | 50 |
| 15. மாணவர் இல்லம், மதுரமங்கலம் .. .. | 25 |
| 16. மாணவர் இல்லம், சாலவாக்கம் .. .. | 25 |
| 17. மாணவர் இல்லம், பெரியபாளையம் .. .. | 50 |
| 18. மாணவர் இல்லம், கருங்குழி .. .. .. | 30 |
| 19. மாணவர் இல்லம், அத்திமாஞ்சேரிபேட்டை .. | 50 |
| 20. மாணவர் இல்லம், பாதிரிவேடு .. .. | 50 |
| 21. மாணவர் இல்லம், சுண்ணாம்புக்குளம் .. | 40 |
| 22. மாணவர் இல்லம், சோமங்கலம் .. .. | 25 |
| 23. மாணவர் இல்லம், ஒரத்தி .. .. .. | 50 |
| 24. மாணவர் இல்லம், வாலாஜாபாத் .. .. | 100 |
| 25. மாணவியர் இல்லம், வாலாஜாபாத் .. .. | 60 |
| 26. மாணவியர் இல்லம், மதுராந்தகம் .. .. | 40 |
| 27. மாணவியர் இல்லம், திருத்தணி .. .. | 50 |
| 28. மாணவிரி இல்லம், ஆவடி .. | 50 |
| 29. மாணவரி இல்லம், மதுராந்தகம் .. | 50 |
| 30. மாணவர் இல்லம், பேரம்பாக்கம் .. | 50 |







| (1) | (2) |
|---|---|
| செங்கல்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி. | |
| 31. மாணவர் இல்லம், மானாம்பதி | 50 |
| 32. மாணவர் இல்லம், வள்ளியூர் | 50 |
| 33. மாணவர் இல்லம், நந்திவரம் | 50 |
| 34. மாணவர் இல்லம், எல். எண்டத்தூர் | 50 |
| 35. மாணவர் இல்லம், காஞ்சிபுரம் | 50 |
| 36. மாணவர் இல்லம், ஆர். கே. பேட்டை | 50 |
| வட ஆற்காடு மாவட்டம் : | |
| 37. கல்லூரி மாணவர் இல்லம், குடியாத்தம் | 50 |
| 38. கல்லூரி மாணவர் இல்லம், செய்யாறு | 60 |
| 39. கல்லூரி மாணவர் இல்லம், வேலூர் | 50 |
| 40. கல்லூரி மாணவர் இல்லம், வாணியம்பாடி | 50 |
| 41. கல்லூரி மாணவியர் இல்லம், வாலாஜாப்பேட்டை | 50 |
| 42. மாணவர் இல்லம், பொன்னை | 50 |
| 43. மாணவர் இல்லம், திருவண்ணாமலை | 50 |
| 44. மாணவர் இல்லம், திருப்பத்தூர் | 50 |
| 45. மாணவர் இல்லம், குடியாத்தம் | 50 |
| 46. மாணவர் இல்லம், ஜோலார்பேட்டை | 50 |
| 47. மாணவர் இல்லம், ஆரணி | 50 |
| 48. மாணவர் இல்லம், போளூர் | 50 |
| 49. மாணவர் இல்லம், செங்கம் | 50 |
| 50. மாணவர் இல்லம், ஆற்காடு | 50 |
| 51. மாணவர் இல்லம், வந்தவாசி | 50 |
| 52. மாணவியர் இல்லம், செங்கம் | 50 |
| 53. மாணவர் இல்லம், அரக்கோணம் | 50 |
| 54. மாணவர் இல்லம், பேரணாம்பட்டு | 50 |
| 55. மாணவர் இல்லம், கே. வி. குப்பம் | 50 |
| 56. மாணவர் இல்லம், பேரணமல்லூர் | 50 |
| 57. மாணவர் இல்லம், சேத்துப்பட்டு | 50 |
| 58. மாணவர் இல்லம், வேட்டவலம் | 50 |
| 59. மாணவியர் இல்லம், காவேரிப்பாக்கம் | 50 |
| 60. மாணவர் இல்லம், ஆலங்காயம் | 50 |
| 61. மாணவர் இல்லம், தேசூர் | 50 |

| (1) | (3) |
|---|---|
| வட ஆற்காடு மாவட்டம்—தொடர்ச்சி. | |
| 62. மாணவர் இல்லம், மாதனூர் | 50 |
| 63. மாணவர் இல்லம், நெடுங்குளம் | 50 |
| 64. மாணவர் இல்லம், நாட்ராம்பள்ளி | 50 |
| 65. மாணவியர் இல்லம், சோளிங்கர் | 50 |
| தென்னாற்காடு மாவட்டம்— | |
| 66. கல்லூரி மாணவர் இல்லம், கடலூர் | 75 |
| 67. கல்லூரி மாணவர் இல்லம், திண்டிவனம் | 50 |
| 68. கல்லூரி மாணவர் இல்லம், விருத்தாச்சலம் | 150 |
| 69. கல்லூரி மாணவியர் இல்லம், கடலூர் | 50 |
| 70. மாணவர் இல்லம், விருத்தாச்சலம் | 100 |
| 71. மாணவர் இல்லம், பெண்ணாடம் | 90 |
| 72. மாணவர் இல்லம், பெரியகுப்பம் | 70 |
| 73. மாணவர் இல்லம், சேத்தியாத்தோப்பு | 140 |
| 74. மாணவர் இல்லம், திருநாவலூர் | 50 |
| 75. மாணவர் இல்லம், சிறுபாக்கம் | 75 |
| 76. மாணவர் இல்லம், கம்மாபுரம் | 50 |
| 77. மாணவர் இல்லம், தேவபாண்டலம் | 50 |
| 78. மாணவர் இல்லம், சோமந்தர்குடி | 50 |
| 79. மாணவர் இல்லம், வடக்கனேந்தல் | 50 |
| 80. மாணவர் இல்லம், தொழுதூர், புவனகிரி | 50 |
| 81. மாணவியர் இல்லம், பரங்கிப்பேட்டை, புவனகிரி | 40 |
| 82. மாணவியர் இல்லம், தியாகதுர்க்கம் | 50 |
| 83. மாணவர் இல்லம், இல்லோடு | 50 |
| 84. மாணவர் இல்லம், சித்தலிங்கமடம் | 50 |
| 85. மாணவர் இல்லம், ஆனந்தபுரம் | 50 |
| 86. மாணவர் இல்லம், கிடார் | 50 |
| 87. மாணவர் இல்லம், ப. முட்லூர் | 50 |
| 88. மாணவர் இல்லம், மஞ்சக்கொல்லை | 50 |
| 89. மாணவர் இல்லம், சின்னசேலம் | 50 |
| 90. மாணவர் இல்லம், சித்தேரிப்பட்டு | 50 |
| 91. மாணவியர் இல்லம், அன்னியூர் | 50 |



| (1) | (2) |
|---|---|
| தென்னாற்காடு மாவட்டம்—தொடர்ச்சி. | |
| 92. மாணவர் இல்லம், ஒரத்தூர் | 50 |
| 93. மாணவர் இல்லம். ரெட்டணை | 50 |
| 94. மாணவர் இல்லம். கிள்ளை | 50 |
| 95. மாணவியர் இல்லம், கள்ளக்குறிச்சி | 50 |
| 96. மாணவர் இல்லம், இளவன்சூர் கோட்டை | 50 |
| 97. மாணவர் இல்லம், குமராட்சி | 50 |
| 98. மாணவர் இல்லம், ஸ்ரீமுஷ்ணம் | 50 |
| 99. மாணவர் இல்லம், சி. முட்லூர் | 50 |
| 100. மாணவர் இல்லம், குறிஞ்சிப்பாடி | 50 |
| தஞ்சாவூர் மாவட்டம்— | |
| 101. கல்லூரி மாணவர் இல்லம், தஞ்சாவூர்-1 | 175 |
| 102. கல்லூரி மாணவர் இல்லம், தஞ்சாவூர்-2 | |
| 103. கல்லூரி மாணவர் இல்லம், கும்பகோணம் | 50 |
| 104. கல்லூரி மாணவர் இல்லம். திருவாரூர் | 50 |
| 105. கல்லூரி மாணவியர் இல்லம், மயிலாடுதுறை | 50 |
| 106. கல்லூரி மாணவியர் இல்லம், தஞ்சாவூர் | 40 |
| 107. மாணவர் இல்லம், பேராவூரணி | 50 |
| 108. மாணவர் இல்லம், மகாதேவப்பட்டினம் | 50 |
| 109. மாணவர் இல்லம், மன்னார்குடி | 100 |
| 110. மாணவர் இல்லம், நீடாமங்கலம் | 75 |
| 111. மாணவர் இல்லம், உம்பளசேரி | 30 |
| 112. மாணவர் இல்லம், வேதாரண்யம் | 50 |
| 113. மாணவர் இல்லம், ஆலத்தூர் | 40 |
| 114. மாணவர் இல்லம், கண்ணாந்நான்குடி | 50 |
| 115. கல்லூரி மாணவர் இல்லம், மயிலாடுதுறை | 75 |
| 116. மாணவர் இல்லம், மதுக்கூர் | 40 |
| 117. மாணவர் இல்லம், செம்பனார்கோவில் | 50 |
| 118. மாணவர் இல்லம், காளி | 50 |
| 119. மாணவர் இல்லம், பூம்புகார் | 50 |
| 120. மாணவர் இல்லம், பாபநாசம் | 50 |
| 121. மாணவியர் இல்லம், வலங்கைமான் | 50 |
| 122. மாணவியர் இல்லம், நன்னிலம் | 40 |
| 123. மாணவியர் இல்லம், குற்றாலம் | 50 |

| (1) | (2) |
| --- | --- |
| **தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 124. மாணவர் இல்லம், பச்சங்கோட்டை | 50 |
| 125. கல்லூரி மாணவியர் இல்லம், கும்பகோணம் | 50 |
| 126. மாணவியர் இல்லம், நாகப்பட்டினம் | 50 |
| 127. மாணவர் இல்லம், திருவிடைமருதூர் | 50 |
| 128. மாணவர் இல்லம், வைத்தீஸ்வரன்கோவில் | 50 |
| 129. மாணவர் இல்லம், திருவோணம் | 50 |
| 130. மாணவர் இல்லம், முத்துப்பேட்டை | 50 |
| 131. மாணவர் இல்லம், மணக்குடி | 50 |
| 132. மாணவியர் இல்லம், பட்டுக்கோட்டை | 50 |
| 133. மாணவர் இல்லம், அம்மாப்பேட்டை | 50 |
| 134. மாணவர் இல்லம், கீவளூர் | 50 |
| 135. மாணவர் இல்லம், கொரடாச்சேரி | 50 |
| 136. மாணவர் இல்லம், பூதலூர் | 50 |
| 137. மாணவர் இல்லம், வெல்லூர் | 50 |
| 138. மாணவர் இல்லம், தரங்கம்பாடி | 50 |
| 139. மாணவர் இல்லம், திருப்பொன்தாருத்தி | 50 |
| 140. மாணவர் இல்லம், கருச்சாடிப்பட்டி | 50 |
| 141. மாணவர் இல்லம், தகட்டூர் | 50 |
| **சேலம் மாவட்டம்—** | |
| 142. கல்லூரி மாணவர் இல்லம், சேலம் சந்திப்பு | 100 |
| 143. கல்லூரி மாணவர் இல்லம், நாமக்கல் | 40 |
| 144. கல்லூரி மாணவியர் இல்லம், நாமக்கல் | 50 |
| 145. மாணவர் இல்லம், எலம்பிள்ளை | 90 |
| 146. மாணவர் இல்லம், கொங்கனாபுரம் | 70 |
| 147. மாணவர் இல்லம், மகுடஞ்சாவடி | 70 |
| 148. மாணவர் இல்லம், முத்துநாயக்கன்பட்டி | 50 |
| 149. மாணவர் இல்லம், தாராமங்கலம் | 70 |
| 150. மாணவர் இல்லம், தீவட்டிப்பட்டி | 70 |
| 151. மாணவர் இல்லம், எடப்பாடி | 70 |
| 152. மாணவர் இல்லம், எருமைப்பட்டி | 70 |
| 153. மாணவர் இல்லம், மல்லசமுத்திரம் | 70 |
| 154. மாணவர் இல்லம், எலச்சிப்பாளையம் | 70 |
| 155. மாணவர் இல்லம், வாழைப்பாடி | 50 |



| (1) | (2) |
| --- | --- |
| **சேலம் மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 156. மாணவர் இல்லம், ராமாபுரம் | 40 |
| 157. மாணவர் இல்லம், ஆட்டையாம்பட்டி | 40 |
| 158. மாணவர் இல்லம், ஆதனூர் | 50 |
| 159. மாணவர் இல்லம், சாத்துப்பாடி | 75 |
| 160. மாணவர் இல்லம், வீரகனூர் | 50 |
| 161. மாணவியர் இல்லம், தாரமங்கலம் | 50 |
| 162. மாணவர் இல்லம், காரைக்குறிச்சிபுதூர் | 50 |
| 163. மாணவியர் இல்லம், முள்ளுக்குறிச்சி | 50 |
| 164. மாணவர் இல்லம், மங்களாபுரம் | 50 |
| 165. மாணவர் இல்லம், விட்டம்பாளையம் | 50 |
| 166. மாணவர் இல்லம், சேலம் | 50 |
| 167. மாணவர் இல்லம், கொளத்தூர் | 50 |
| 168. கல்லூரி மாணவியர் இல்லம், சேலம் | 50 |
| 169. மாணவர் இல்லம், கிரிப்பட்டி | 50 |
| 170. மாணவர் இல்லம், பெத்தநாயக்கன்பாளையம் | 50 |
| 171. மாணவர் இல்லம், மேச்சேரி | 50 |
| 172. மாணவர் இல்லம், சர்க்கார்கொல்லப்பட்டி | 50 |
| 173. மாணவர் இல்லம், செல்லப்பம்பட்டி | 50 |
| **தர்மபுரி மாவட்டம்—** | |
| 174. கல்லூரி மாணவர் இல்லம், கிருஷ்ணகிரி | 150 |
| 175. மாணவர் இல்லம், ஹொசூர் | 50 |
| 176. மாணவர் இல்லம், சிங்காரப்பேட்டை | 50 |
| 177. மாணவர் இல்லம், பாலக்கோடு | 50 |
| 178. மாணவர் இல்லம், போச்சம்பள்ளி | 50 |
| 179. மாணவர் இல்லம், ஊரூர் | 40 |
| 180. மாணவர் இல்லம், தொகாப்பள்ளி | 40 |
| 181. மாணவர் இல்லம், காரிமங்கலம் | 40 |
| 182. மாணவர் இல்லம், அஞ்செட்டி | 50 |
| 183. மாணவர் இல்லம், பென்னாகரம் | 50 |
| 184. மாணவர் இல்லம், மாரண்டஹள்ளி | 50 |
| 185. மாணவர் இல்லம், கோணங்கி நாயக்கன்ஹள்ளி | 50 |
| 186. மாணவர் இல்லம், கோட்டப்பட்டி | 50 |

| (1) | (2) |
|---|---|
| தர்மபுரி மாவட்டம்—தொடர்ச்சி. | |
| 187. மாணவியர் இல்லம், பாப்பாரப்பட்டி | 50 |
| 188. மாணவியர் இல்லம், காவேரிப்பட்டினம் | 50 |
| 189. மாணவர் இல்லம், திருமலவாடி | 50 |
| 190. மாணவர் இல்லம், மொரப்பூர் | 50 |
| 191. மாணவர் இல்லம், கெலமங்கலம் | 50 |
| 192. மாணவியர் இல்லம், லளிகம் | 50 |
| 193. மாணவர் இல்லம், பேரிகை | 50 |
| 194. மாணவர் இல்லம், சூளகிரி | 50 |
| 195. மாணவர் இல்லம், குன்னத்தூர் | 50 |
| 196. மாணவர் இல்லம், பாலதொட்டனபள்ளி | 50 |
| 197. மாணவியர் இல்லம், தர்மபுரி டவுன் | 50 |
| 198. மாணவர் இல்லம், வேப்பனபள்ளி | 50 |
| 199. மாணவர் இல்லம், அதியமான்கோட்டை | 50 |
| 200. மாணவர் இல்லம், புலிக்கரை | 50 |
| 201. மாணவியர் இல்லம், பர்கூர் | 50 |
| கோயம்புத்தூர் மாவட்டம்— | |
| 202. கல்லூரி மாணவர் இல்லம், கோயம்புத்தூர் | 100 |
| 203. கல்லூரி மாணவர் இல்லம், திருப்பூர் | 100 |
| 204. கல்லூரி மாணவர் இல்லம், உடுமலைப்பேட்டை டவுன் | 50 |
| 205. மாணவர் இல்லம், தொண்டமுத்தூர் | 50 |
| 206. மாணவர் இல்லம், மேட்டுப்பாளையம் | 50 |
| 207. மாணவர் இல்லம், சொக்கம்பாளையம் | 50 |
| 208. மாணவர் இல்லம், பெத்திக்குட்டை | 50 |
| 209. மாணவர் இல்லம், பல்லடம் | 50 |
| 210. மாணவர் இல்லம், உடுமலைப்பேட்டை | 50 |
| 211. மாணவர் இல்லம், கிணத்துக்கடவு | 50 |
| 212. மாணவர் இல்லம், ஆனைமலை | 50 |
| 213. மாணவர் இல்லம், கோட்டூர் | 50 |
| 214. மாணவர் இல்லம், பொங்கலூர் | 50 |
| 215. மாணவர் இல்லம், கோயில்பாளையம் | 50 |
| 216. மாணவர் இல்லம், மடத்துக்குளம் | 50 |
| 217. மாணவியர் இல்லம், சின்னத்தடாகம் | 50 |
| 218. மாணவியர் இல்லம், சொக்கம்பாளையம் | 50 |



| (1) | (2) |
|---|---|
| பெரியார் மாவட்டம்— | |
| 219. கல்லூரி மாணவர் இல்லம், ஈரோடு | 50 |
| 220. கல்லூரி மாணவர் இல்லம், கோபிசெட்டிப்பாளையம் | 100 |
| 221. மாணவர் இல்லம், பெருந்துறை | 50 |
| 222. மாணவர் இல்லம், சத்தியமங்கலம் | 60 |
| 223. மாணவர் இல்லம், குருவாரெட்டியூர் | 40 |
| 224. மாணவர் இல்லம். அந்தியூர் | 40 |
| 225. மாணவர் இல்லம், கோபிசெட்டிபாளையம் | 50 |
| 226. மாணவியர் இல்லம், புஞ்சைப் புளியம்பட்டி | 50 |
| 227. மாணவர் இல்லம், புஞ்சைப் புளியம்பட்டி | 50 |
| 228. மாணவர் இல்லம், சிவகிரி | 50 |
| 229. மாணவர் இல்லம், சென்னிமலை | 50 |
| 230. மாணவர் இல்லம், தாராபுரம் | 50 |
| 231. மாணவர் இல்லம், காங்கேயம் | 50 |
| 232. மாணவர் இல்லம், தாளவாடி | 50 |
| 233. மாணவர் இல்லம், மூலனூர் | 50 |
| 234. மாணவர் இல்லம், வெள்ளக்கோவில் | 50 |
| 235. மாணவியர் இல்லம், பெருந்துறை | 50 |
| 236. மாணவர் இல்லம், ஊத்துக்குழி | 50 |
| 237. மாணவர் இல்லம், தாயம்பாளையம் | 50 |
| 238. மாணவியர் இல்லம், பவானி | 50 |
| நீலகிரி மாவட்டம் : | |
| 239. கல்லூரி மாணவர் இல்லம், உதகமண்டலம் | 100 |
| 240. கல்லூரி மாணவியர் இல்லம், உதகமண்டலம் | 50 |
| 241. மாணவர் இல்லம், கூனூர் | 30 |
| 242. மாணவர் இல்லம், தேவர்சோலை | 40 |
| 243. மாணவர் இல்லம், அம்பலமூலா | 50 |
| 244. மாணவர் இல்லம், தூதூர்மடம் | 50 |
| 245. மாண்வர் இல்லம், எருமாடு | 50 |
| 246. மாணவர் இல்லம், கூடலூர் | 30 |
| 247. மாணவர் இல்லம், பில்லிக்கொம்பை | 50 |
| 248. மாணவர் இல்லம், இத்தலார் | 50 |
| 249. மாணவர் இல்லம், தூனேரி | 50 |

| (1) | (2) |
|---|---|
| திருச்சிராப்பள்ளி மாவட்டம்— | |
| 250. கல்லூரி மாணவர் இல்லம் 1, தென்னூர், திருச்சிராப்பள்ளி டவுன். | 100 |
| 251. கல்லூரி மாணவர் இல்லம் 11, காஜாமலை, திருச்சிராப்பள்ளி | 125 |
| 252. கல்லூரி மாணவர் இல்லம், புதூர் | 75 |
| 253. கல்லூரி மாணவர் இல்லம், கரூர் | 40 |
| 254. கல்லூரி மாணவர் இல்லம், அரியலூர் | 40 |
| 255. கல்லூரி மாணவியர் இல்லம், உறையூர் | 40 |
| 256. கல்லூரி மாணவர் இல்லம், முசிறி | 50 |
| 257. மாணவர் இல்லம், கொளக்குடி | 50 |
| 258. மாணவர் இல்லம், திருவெறும்பூர் | 100 |
| 259. மாணவர் இல்லம், ஜெயங்கொண்டான் | 60 |
| 260. மாணவர் இல்லம், பெரம்பலூர் | 50 |
| 261. மாணவர் இல்லம், லாலாப்பேட்டை | 75 |
| 262. மாணவர் இல்லம், பஞ்சப்பட்டி | 50 |
| 263. மாணவர் இல்லம், கண்ணனூர் | 50 |
| 264. மாணவர் இல்லம், துங்காபுரம் | 50 |
| 265. மாணவர் இல்லம், அரியலூர் | 75 |
| 266. மாணவர் இல்லம், மருவத்தூர் | 100 |
| 267. மாணவர் இல்லம், மணப்பாறை | 100 |
| 268. மாணவர் இல்லம், பொன்பரப்பி | 50 |
| 269. மாணவர் இல்லம், வி. களத்தூர் | 40 |
| 270. மாணவர் இல்லம், குலக்காநத்தம் | 40 |
| 271. மாணவர் இல்லம், உடையார்பாளையம் | 50 |
| 272. மாணவியர் இல்லம், செட்டிக்குளம் | 50 |
| 273. மாணவர் இல்லம், திருமழப்பாடி | 50 |
| 274. மாணவியர் இல்லம், மேட்டுப்பாளையம் | 30 |
| 275. மாணவியர் இல்லம், இராமலிங்கபுரம் | 30 |
| 276. மாணவர் இல்லம், தரகம்பட்டி | 50 |
| 277. மாணவர் இல்லம், கூத்தூர் | 50 |
| 278. மாணவர் இல்லம், நொய்யல் | 50 |
| 279. மாணவர் இல்லம், திருமானூர் | 50 |
| 280. மாணவர் இல்லம், டி. பழூர் | 50 |



| (1) | (2) |
|---|---|
| திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி. | |
| 281. மாணவர் இல்லம், தோகைமலை | 50 |
| 282. மாணவர் இல்லம், மீன்சுருட்டி | 50 |
| 283. மாணவர் இல்லம், தவரங்குறிச்சி | 50 |
| 284. மாணவர் இல்லம், கிழப்புலியூர் | 50 |
| 285. மாணவியர் இல்லம், சின்னத்தாராபுரம் | 50 |
| 286. மாணவர் இல்லம், கருங்குளம் | 50 |
| 287. மாணவர் இல்லம், சிலப்பழுவூர் | 50 |
| 288. மாணவர் இல்லம், திருவரங்கம் | 50 |
| புதுக்கோட்டை மாவட்டம் : | |
| 289. கல்லூரி மாணவர் இல்லம், புதுக்கோட்டை | 175 |
| 290. கல்லூரி மாணவர் இல்லம் (கூடுதல்), புதுக்கோட்டை | 75 |
| 291. கல்லூரி மாணவர் இல்லம் (கூடுதல்), புதுக்கோட்டை. | 50 |
| 292. கல்லூரி மாணவியர் இல்லம், புதுக்கோட்டை | 50 |
| 293. மாணவர் இல்லம், ஆலங்குடி | 40 |
| 294. மாணவர் இல்லம், திருமயம் | 50 |
| 295. மாணவர் இல்லம், விராலிமலை | 75 |
| 296. மாணவர் இல்லம், இலுப்பூர் | 50 |
| 297. மாணவர் இல்லம், வடகாடு | 50 |
| 298. மாணவர் இல்லம், சுப்பிரமணியபுரம் | 50 |
| 299. மாணவர் இல்லம், மணமேல்குடி | 50 |
| 300. மாணவர் இல்லம், பொன்பேத்தி | 40 |
| 301. மாணவியர் இல்லம், அறந்தாங்கி | 40 |
| 302. மாணவர் இல்லம், ஆவுடையார்கோயில் | 50 |
| 303. மாணவர் இல்லம், திருக்களம்பூர் | 50 |
| 304. மாணவர் இல்லம், அண்டகுளம் | 50 |
| 305. மாணவியர் இல்லம், அரிமழம் | 50 |
| 306. மாணவர் இல்லம், கீரமங்கலம் | 50 |
| 307. மாணவர் இல்லம், கீரனூர் | 50 |
| 308. மாணவர் இல்லம், காரம்பக்குடி | 50 |
| 309. மாணவர் இல்லம், புதுக்கோட்டை | 50 |

| (1) | (2) |
|---|---|
| **புதுக்கோட்டை மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 310. மாணவர் இல்லம், பூவைமாநகர் | 50 |
| 311. மாணவர் இல்லம், கிள்ளுக்கோட்டை | 50 |
| 312. மாணவியர் இல்லம், கிரமங்களம் | 50 |
| 313. மாணவர் இல்லம், அறந்தாங்கி | 50 |
| 314. மாணவர் இல்லம், ஆலூர் | 50 |
| 315. மாணவர் இல்லம், கடையப்பட்டி | 50 |
| **மதுரை மாவட்டம்:** | |
| 316. கல்லூரி மாணவர் இல்லம், மதுரை | 50 |
| 317. கல்லூரி மாணவர் இல்லம், திண்டுக்கல் | 50 |
| 318. கல்லூரி மாணவர் இல்லம், மேலூர் | 100 |
| 319. கல்லூரி மாணவியர் இல்லம், மதுரை | 40 |
| 320. கல்லூரி மாணவர் இல்லம், மதுரை டவுன் | 50 |
| 321. மாணவர் இல்லம், அலங்காநல்லூர் | 104 |
| 322. மாணவர் இல்லம், திருநகர் | 80 |
| 323. மாணவர் இல்லம், தல்லாகுளம் | 110 |
| 324. மாணவர் இல்லம், தர்மபுரி (பெரியகுளம் தாலுகா.) | 60 |
| 325. மாணவர் இல்லம், திருமங்கலம் | 50 |
| 326. மாணவர் இல்லம், பெரியகுளம் | 80 |
| 327. மாணவர் இல்லம், சேக்கம்பட்டி | 75 |
| 328. மாணவர் இல்லம், மேலவளவு | 50 |
| 329. மாணவர் இல்லம், போடிநாயக்கனூர் | 120 |
| 330. மாணவர் இல்லம், தி. வாடிப்பட்டி | 80 |
| 331. மாணவர் இல்லம், அச்சம்பட்டி | 70 |
| 332. மாணவர் இல்லம், மட்டப்பாறை | 40 |
| 333. மாணவர் இல்லம், பாப்பநாயக்கன்பட்டி | 50 |
| 334. மாணவர் இல்லம், கே. பெருமாள்பட்டி | 50 |
| 335. மாணவர் இல்லம், ஏழுமலை | 50 |
| 336. மாணவர் இல்லம், கருங்காலக்குடி | 50 |
| 337. மாணவர் இல்லம், பழனி | 50 |
| 338. மாணவர் இல்லம், சின்னாளப்பட்டி | 90 |



| (1) | (2) |
|---|---|
| **மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 339. மாணவியர் இல்லம், சின்னாளப்பட்டி | 60 |
| 340. மாணவியர் இல்லம், பேரையூர் | 50 |
| 341. மாணவியர் இல்லம், தி. கல்லுப்பட்டி | 50 |
| 342. மாணவியர் இல்லம், ஆண்டிப்பட்டி | 50 |
| 343. மாணவர் இல்லம், கூடக்கோயில் | 50 |
| 344. மாணவர் இல்லம், வெம்பர்பட்டி | 50 |
| 345. மாணவர் இல்லம், கொடைக்கானல் | 50 |
| 346. மாணவர் இல்லம், சேடப்பட்டி | 50 |
| 347. மாணவர் இல்லம், நெய்க்காரப்பட்டி | 50 |
| 348. மாணவர் இல்லம், கே. இராமநாதபுரம் | 50 |
| 349. மாணவர் இல்லம், ரெங்கசமுத்திரம் | 50 |
| 350. மாணவர் இல்லம், கொட்டாம்பட்டி | 50 |
| 351. மாணவர் இல்லம், லஷ்மிநாயகன்பட்டி | 50 |
| 352. மாணவர் இல்லம், சின்னமனூர் | 50 |
| 353. மாணவர் இல்லம், கொத்தப்பட்டி | 50 |
| 354. மாணவர் இல்லம், கம்பம், புதுப்பட்டி | 50 |
| 355. மாணவியர் இல்லம், தாண்டிக்குடி | 50 |
| *** இராமநாதபுரம் மாவட்டம்:** | |
| 356. கல்லூரி மாணவர் இல்லம், விருதுநகர் | 50 |
| 357. கல்லூரி மாணவர் இல்லம், இராமநாதபுரம் | 100 |
| 358. கல்லூரி மாணவர் இல்லம், சிவகங்கை | 40 |
| 359. மாணவர் இல்லம், கண்டாமாணிக்கம் | 50 |
| 360. மாணவர் இல்லம், வடக்கு சமுத்திரம் | 50 |
| 361. மாணவர் இல்லம், திருக்கோஷ்டியூர் | 70 |
| 362. மாணவர் இல்லம், காரியப்பட்டி | 40 |
| 363. மாணவர் இல்லம், புதுவயல் | 50 |
| 364. மாணவர் இல்லம், திருத்தங்கல் | 60 |
| 365. மாணவர் இல்லம், மண்டல மாணிக்கம் | 40 |
| 366. மாணவர் இல்லம், கூமாபட்டி | 50 |

* காமராசர் மாவட்டமும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டமும் உட்பட்டுள்ளது.

[1985 ஜூலை 12

| (1) | (2) |
|---|---|
| **இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி** | |
| 367. மாணவர் இல்லம், பரமக்குடி | 50 |
| 368. மாணவர் இல்லம், பெரியகோட்டை | 50 |
| 369. மாணவர் இல்லம், செய்தூர் | 50 |
| 370. மாணவர் இல்லம், தேவிப்பட்டினம் | 50 |
| 371. மாணவர் இல்லம், சாயல்குடி | 50 |
| 372. மாணவியர் இல்லம், பாகனேரி | 30 |
| 373. மாணவியர் இல்லம், நாட்டரசன்கோட்டை | 40 |
| 374. மாணவியர் இல்லம், தேவக்கோட்டை | 50 |
| 375. மாணவியர் இல்லம், குள்ளூர்சந்தை | 75 |
| 376. மாணவியர் இல்லம், பிரான்மலை | 50 |
| 377. மாணவியர் இல்லம், காரியப்பட்டி | 50 |
| 378. மாணவர் இல்லம், பெருநாளி | 50 |
| 379. மாணவர் இல்லம், மண்டபம் | 50 |
| 380. மாணவர் இல்லம், நரிக்குடி | 50 |
| 381. மாணவர் இல்லம், ராஜபாளையம் | 50 |
| 382. மாணவர் இல்லம், திருவாடானை | 50 |
| 383. மாணவியர் இல்லம், இராமேஸ்வரம் | 50 |
| 384. மாணவர் இல்லம், ஜோகில்பட்டி | 50 |
| 385. மாணவர் இல்லம், மானாமதுரை | 50 |
| 386. மாணவர் இல்லம், அபிராமம் | 50 |
| 387. மாணவர் இல்லம், சிக்கல் | 50 |
| 388. மாணவர் இல்லம், தொண்டி | 50 |
| 389. மாணவர் இல்லம், திருஉத்திரகோசமங்கை | 50 |
| 390. மாணவர் இல்லம், கோபாலபுரம் | 50 |
| 391. மாணவர் இல்லம், ஒக்கூர் | 50 |
| 392. மாணவர் இல்லம், ஏ. தேக்கூர் | 50 |
| 393. மாணவர் இல்லம், கட்டிகுளம் | 50 |
| 394. மாணவியர் இல்லம், கீழ்ப்பூங்குடி | 50 |
| 395. கல்லூரி மாணவியர் இல்லம், சிவகங்கை | 50 |
| **திருநெல்வேலி மாவட்டம் :** | |
| 396. கல்லூரி மாணவர் இல்லம், திருநெல்வேலி | 50 |
| 397. கல்லூரி மாணவர் இல்லம், தூத்துக்குடி | 50 |
| 398. கல்லூரி மாணவியர் இல்லம், பாளையங்கோட்டை. | 40 |



1985 ஜூலை 12]

| (1) | (2) |
|---|---|
| **திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 399. மீனவர் மாணவர் இல்லம், தூத்துக்குடி | 150 |
| 400. மாணவர் இல்லம், ஏருவாடி | 50 |
| 401. மாணவர் இல்லம், பனிக்கநாடார் குடியிருப்பு | 150 |
| 402. மாணவர் இல்லம், சாமிநாதபுரம் | 40 |
| 403. மாணவர் இல்லம், மேலப்பாளையம் | 50 |
| 404. மாணவர் இல்லம், இடிந்தகரை | 60 |
| 405. மாணவர் இல்லம், மணப்பாடு | 70 |
| 406. மாணவர் இல்லம், விளாத்திக்குளம் | 40 |
| 407. மாணவர் இல்லம், பழவூர் | 50 |
| 408. மாணவர் இல்லம், எட்டையாபுரம் | 50 |
| 409. மாணவியர் இல்லம், புதூர் | 75 |
| 410. மாணவியர் இல்லம், நாங்குனேரி | 40 |
| 411. மாணவியர் இல்லம், தூத்துக்குடி | 50 |
| 412. மாணவியர் இல்லம், பாளையம்கோட்டை | 50 |
| 413. மாணவியர் இல்லம், பேட்டை | 50 |
| 414. மாணவர் இல்லம், கூட்டப்புளி | 50 |
| 415. மாணவர் இல்லம், கழுகுமலை | 50 |
| 416. மாணவர் இல்லம், இடைக்கல் | 50 |
| 417. மாணவியர் இல்லம், பனிக்கநாடார் குடியிருப்பு | 50 |
| 418. மாணவியர் இல்லம், கருங்குளம் | 50 |
| 419. மாணவியர் இல்லம், கூட்டப்புளி | 50 |
| 420. மாணவியர் இல்லம், சங்கர்நகர் | 50 |
| 421. மாணவர் இல்லம், பேட்டைக்குளம் | 50 |
| 422. மாணவர் இல்லம், உவரி | 50 |
| 423. மாணவர் இல்லம், இராதாபுரம் | 50 |
| 424. மாணவர் இல்லம், மாதாப்பட்டினம் | 50 |
| 425. மாணவர் இல்லம், ஆலங்குளம் | 50 |
| 426. மாணவர் இல்லம், முக்கூடல் | 50 |
| 427. மாணவர் இல்லம், மைப்பாறை | 50 |
| 428. மாணவர் இல்லம், கும்மிடிக்கோட்டை | 50 |
| 429. மாணவர் இல்லம், பணகுடி | 60 |
| 430. மாணவியர் இல்லம், திருச்செந்தூர் | 50 |

[1985 ஜூலை 12

| (1) | (2) |
|---|---|
| கன்னியாகுமரி மாவட்டம் : | |
| 431. கல்லூரி மாணவியர் இல்லம், நாகர்கோவில் | 50 |
| 432. கல்லூரி மாணவியர் இல்லம், குழித்துறை | 50 |
| 433. கல்லூரி மாணவியர் இல்லம், அகஸ்தீஸ்வரம் | 50 |
| 434. மாணவியர் இல்லம், குளச்சல் | 50 |
| 435. மாணவியர் இல்லம், குலசேகரம் | 50 |
| 436. மாணவியர் இல்லம், பூதப்பாண்டி | 50 |
| 437. மாணவியர் இல்லம், தக்கலை | 50 |
| 438. மாணவர் இல்லம், ஆரல்வாய்மொழி | 50 |
| 439. மாணவியர் இல்லம், கருங்கல் | 50 |
| 440. மாணவியர் இல்லம், இரணியல் | 50 |
| 441. மாணவியர் இல்லம், அழகப்பபுரம் | 50 |
| 442. மாணவர் இல்லம், பூட்டேத்தி | 50 |
| 443. மாணவியர் இல்லம், புதுக்கடை | 50 |

சுருக்கம்.

| | |
|---|---|
| 46. கல்லூரி மாணவர் இல்லங்கள் | 3,510 |
| 18. கல்லூரி மாணவியர் இல்லங்கள் | 860 |
| 312. உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்கள் | 16,574 |
| 66. உயர்நிலைப்பள்ளி மாணவியர் இல்லங்கள் | 3,350 |
| 1 தொழிற்பயிற்சி இல்லம் | 76 |
| 443 மொத்தம் .. | 24,369 |



1985 ஜூலை 12]

அட்டவணை 'இ'.

அரசு சீர்மரபினர் மாணவர்/மாணவியர் இல்லங்கள், 1984-85.

| | அனுமதிக்கப்பட்ட மாணவர்/ மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|
| செங்கற்பட்டு மாவட்டம் : | |
| 1. மாணவியர் இல்லம், பல்லாவரம் | 50 |
| வட ஆற்காடு மாவட்டம் : | |
| 2. மாணவியர் இல்லம், பி. எல். தண்டா | 50 |
| கோயம்புத்தூர் மாவட்டம் : | |
| 3. மாணவர் இல்லம், அவினாசி | 50 |
| 4. மாணவர் இல்லம், திருப்பூர் | 50 |
| 5. மாணவியர் இல்லம், ஆலந்துறை | 50 |
| பெரியார் மாவட்டம் : | |
| 6. மாணவியர் இல்லம், பங்களான் புதூர் | 50 |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம்: | |
| 7. மாணவர் இல்லம், இருதயபுரம் | 50 |
| 8. மாணவர் இல்லம், மேலமாயனூர் | 50 |
| 9. கல்லூரி மாணவியர் இல்லம், திருச்சி டவுன் | 50 |
| தஞ்சாவூர் மாவட்டம் : | |
| 10. மாணவர் இல்லம், மல்லிப்பட்டினம் | 50 |
| 11. மாணவர் இல்லம், வலங்கைமான் | 50 |
| 12. மாணவியர் இல்லம், வெள்ளூர் | 50 |
| 13. மாணவியர் இல்லம், பேராவூரணி | 50 |
| 14. கல்லூரி மாணவியர் இல்லம், தஞ்சாவூர் டவுன் | 50 |

| (1) | (2) |
|---|---|
| **புதுக்கோட்டை மாவட்டம் :** | |
| 15. மாணவர் இல்லம், கந்தர்வகோட்டை | 50 |
| 16. மாணவர் இல்லம், புதுக்கோட்டை | 44 |
| 17. மாணவியர் இல்லம், பொன்னமராவதி | 50 |
| 18. மாணவர் இல்லம், கொத்தமங்கலம் | 50 |
| 19. மாணவர் இல்லம், மர மடக்கி | 50 |
| 20. மாணவியர் இல்லம், வடக்காடு | 50 |
| 21. கல்லூரி மாணவியர் இல்லம், புதுக்கோட்டை டவுன். | 50 |
| **மதுரை மாவட்டம் :** | |
| 22. தொழிற் பயிற்சி மாணவர் இல்லம், புதூர் | 100 |
| 23. தொழிற் பயிற்சி மாணவர் இல்லம், தேனி | 50 |
| 24. மாணவர் இல்லம், திருமங்கலம் | 125 |
| 25. மாணவர் இல்லம், திண்டுக்கல் | 180 |
| 26. மாணவர் இல்லம், உசிலம்பட்டி | 650 |
| 27. மாணவர் இல்லம், ஞானஒளிவுபுரம் | 60 |
| 28. மாணவர் இல்லம், செக்கானூரணி. | 220 |
| 29. மாணவர் இல்லம், நாட்டார்மங்கலம் | 120 |
| 30. மாணவர் இல்லம், உத்தமபாளையம் | 200 |
| 31. மாணவர் இல்லம், வத்தலகுண்டு | 140 |
| 32. மாணவர் இல்லம், கடமலைக்குண்டு | 60 |
| 33. மாணவர் இல்லம், பாப்பாப்பட்டி | 80 |
| 34. மாணவர் இல்லம், ராஜதானி | 70 |
| 35. மாணவர் இல்லம், அல்லிநகரம் | 60 |
| 36. மாணவர் இல்லம், மேலக்கால் | 50 |
| 37. மாணவர் இல்லம், விளாம்பட்டி | 50 |
| 38. மாணவர் இல்லம், போடிநாயக்கனூர் | 50 |
| 39. மாணவர் இல்லம், ஆம்மக்குண்டு | 50 |
| 40. மாணவர் இல்லம், கம்பம் | 50 |
| 41. மாணவர் இல்லம், ராயப்பன்பட்டி | 50 |
| 42. மாணவர் இல்லம், வெள்ளையம்மாள்புரம் | 50 |
| 43. மாணவியர் இல்லம், உசிலம்பட்டி | 650 |
| 44. மாணவியர் இல்லம், திருமங்கலம் | 125 |
| 45. மாணவியர் இல்லம், சின்னமனூர் | 100 |
| 46. மாணவியர் இல்லம், கம்பம் | 50 |



| (1) | (2) |
|---|---|
| **மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 47. மாணவியர் இல்லம், செக்கானூரணி | 50 |
| 48. மாணவியர் இல்லம், கூடலூர் | 50 |
| 49. மாணவியர் இல்லம், திண்டுக்கல் | 50 |
| 50. மாணவர் இல்லம், கூடலூர் | 53 |
| 51. மாணவர் இல்லம், கள்ளப்பட்டி | 50 |
| 52. மாணவர் இல்லம், விளாத்தூர் | 45 |
| 53. மாணவர் இல்லம், கருணக்காமுத்தன்பட்டி | 50 |
| 54. மாணவர் இல்லம், சாணார்பட்டி | 50 |
| 55. மாணவர் இல்லம், திலக்கோட்டை | 50 |
| 56. கல்லூரி மாணவியர் இல்லம், மதுரை டவுன் | 50 |
| ***இராமநாதபுரம் மாவட்டம் :** | |
| 57. மாணவர் இல்லம், கோவிலாங்குளம் | 50 |
| 58. மாணவர் இல்லம், கமுதி | 150 |
| 59. மாணவர் இல்லம், அருப்புக்கோட்டை | 100 |
| 60. மாணவர் இல்லம், நைனார்கோயில் | 75 |
| 61. மாணவர் இல்லம், முதுகுளத்தூர் | 100 |
| 62. மாணவர் இல்லம், பொம்மநேந்தல் | 50 |
| 63. மாணவர் இல்லம், கடலாடி | 60 |
| 64. மாணவர் இல்லம், மேலக்கடாரம் | 50 |
| 65. மாணவியர் இல்லம், அருப்புக்கோட்டை | 50 |
| 66. மாணவியர் இல்லம், கமுதி | 50 |
| 67. மாணவியர் இல்லம், முதுகுளத்தூர் | 50 |
| 68. மாணவர் இல்லாம், டி. மரியூர் | 30 |
| **திருநெல்வேலி மாவட்டம் :** | |
| 69. மாணவர் இல்லம், கயத்தார் | 50 |
| 70. மாணவர் இல்லம், கோவில்பட்டி | 60 |
| 71. மாணவர் இல்லம், சங்கரன்கோயில் | 110 |
| 72. மாணவர் இல்லம், அம்பாசமுத்திரம் | 75 |
| 73. மாணவர் இல்லம், பாளையங்கோட்டை | 75 |
| 74. மாணவர் இல்லம், தென்காசி | 60 |
| 75. மாணவர் இல்லம், வீரகேரளம்புதூர் | 40 |
| 76. மாணவர் இல்லம், வெள்ளாங்குளம் | 40 |

* காமராசர் மாவட்டமும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டமும் உட்பட்டது.

| (1) | (2) |
|---|---|
| திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி. | |
| 77. மாணவர் இல்லம், வன்னிக்கோநேந்தல் | 50 |
| **78. மாணவர் இல்லம், சாயமலை** | 30 |
| 79. மாணவர் இல்லம், வாசுதேவநல்லூர் | 50 |
| 80. மாணவியர் இல்லம், சங்கரன்கோவில் | 50 |

**சுருக்கம்.**

| | |
|---|---|
| **55 உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்கள்** | 4,400 |
| **19 உயர்நிலைப்பள்ளி மாணவியர் இல்லங்கள்** | 1,675 |
| 2 தொழிற்கல்வி மாணவர் இல்லங்கள் | 150 |
| 4 கல்லூரி மாணவியர் இல்லங்கள் | 200 |
| 80 மொத்தம் | 6,134 |



| தொழிற் பயிற்சிக் கூடங்கள். | துவக்கப் பட்ட ஆண்டு. | பயிற்சி யாளர்களின் எண்ணிக்கை. | உதவிப் பண விகிதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அ. சென்னை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் கீழ் நடப்பவை : | | | |
| 1. பொதுநோக்கு பொறியியல் பட்டறை, முதுகுளத்தூர், இராமநாதபுரம் மாவட்டம். | 1961 | 30 | 45 |
| 2. பொதுநோக்கு பொறியியல் பட்டறை, செக்கானூரணி, மதுரை மாவட்டம். | 1963 | 15 | 45 |
| 3. பொதுநோக்கு பொறியியல் பட்டறை, வீரகேரளம் புதூர், திருநெல்வேலி மாவட்டம். | 1965 | 15 | 45 |
| ஆ. சென்னை பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கீழ் நடப்பவை : | | | |
| 1. பிரம்பு பயிற்சி நிலையம் தக்கலை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 15 | 30 |
| 2. தும்பு பயிற்சி நிலையம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 25 | 30 |
| இ. சென்னை சமூக நல இயக்குநரின் கீழ் நடப்பவை : | | | |
| 1. தையல் மற்றும் ஆயத்த ஆடை நிலையம், ரெட்டியார் பட்டி, திருநெல்வேலி மாவட்டம். | 1970 | 20 | 30 |

| | | | |
|---|---|---|---|
| 2. தையல் மற்றும் பூ வேலை நிலையம், செக்கானூரணி, மதுரை மாவட்டம். | 1971 | 50 | 30 |
| 3. தையல் பயிற்சி நிலையம், திருவெண்ணெய்நல்லூர், தென்னாற்காடு மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 4. தையல் பயிற்சி நிலையம்; கம்பம், மதுரை மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 5. தையல் பயிற்சி நிலையம், திருவாடனை, இராமநாதபுரம் மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 6. தையல் பயிற்சி நிலையம், தேவர்குளம், திருநெல்வேலி மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 7. தையல் பயிற்சி நிலையம், கிருஷ்ணன் கோவில், கன்னியாகுமரி மாவட்டம். | 1978 | 20 | 30 |

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL

## ERRATA

Page iv—

In line 2, *for* 'வினாக்களுக்குப்', *substitute* 'துறைகளுக்குப்'

Page vi—

In line 10, *for* 'உள்ளிட்ட', *substitute* ''உள்ளிட்ட''

Page 8—

In line 3 from the bottom, *for* 'சொல்லியிருக்கிறாரா?', *substitute* 'சொல்லியிருக்கிறார்'

Page 17—

(i) In line 10 from the bottom, *for* 'affi.rs', *substitute* 'affairs' and for 'tems' *substitute* 'some'

(ii) In line 6 from the bottom, *for* "much", *substitute* 'such'.

Page 18—

In line 12 *for*, 'interst', *substitute* 'internal'

Page 25—

(i) For the name heading, '(திரு. எம். பி. சுப்பிரமணியம்)', *substitute* 'டாக்டர் மு. கருணாநிதி'

(ii) In line 3, *for* 'அந்தாக் கருத்துக்கான்', *substitute* 'அந்தக் கருத்துக்கள்'

Page 26—

In the last line, *for* 'மக்களைந்', *substitute* 'மக்களைப்'.

Page 29—

In line 3, *for* 'முதல்'. *substitute* 'முதலில்'

Page 44—

In line 13 from the bottom, *for* 'ஒளி', *substitute* 'ஒளி'

Page 45—

In line 15, *for* 'அலை', *substitute* 'அலையை'

Page 47 —

In line 9 from the bottom, *for* 'அந்தக் காலத்திலே', *substitute* 'இந்தக் காலத்திலே'.

Page 49—

In line 6 from the bottom, *for* 'ஒரு சட்டத்தை' *substitute* ''ஒரு மாறுதலான சட்டத்தை''.

Page 51—

In line 1, *for* 'தர்மஸ்'. *substitute* 'தர்ம'

page 54—

In line 8, *for* 'ஆலையங்களுக்கும்', *substitute* "ஆலயங்களுக்கும்'

Page 55—

In line 1, *for* 'அறநிலலயத்', *substitute* 'அறநிலையத்'

Page 58—

In line 17, *for* "power of the", *substitute* "power at the"

Page 61—

(i) In line 3, *for* 'அன்று', *substitute* ''என்று'

(ii) In line 7, *for* 'மின்சாரம்', *substitute* 'மின்சார உற்பத்தி'

Page 62—

In line 16, *for* 'ஃபைனான்ஸ் எக்ஸ்பிரஸ்', *substitute* 'ஃபைனான்சியல் எக்ஸ்பிரஸ்'

Page 66—

In line 3 from the bottom, *for* 'வரிகையில'', *substitute* 'வரிசையில்'

Page 76—

In line 3 from the bottom, *omit* 'ஆகவே'

Pag 78—

(i) In iine 2, *for* 'என்பதான', *substitute* 'என்பது ஆபத்தான'

(ii) In line 4 from the bottom, *for* ''பிரச்சினை, *substitute* 'பிரச்சினை'

Page 82—

(i) In line 7, *for* ''Serial No. 124''. *substitute* ''125''

(ii) In line 13, *for* "619( )", *substitute* "619(A)"

P. PLALIKONDAPERUMALL
*Secretary.*

Tamil Nadu Legislative Council Debates, dated the 18th March 1985—(Volume 212—No. 1).

TAMIL NADU LEGISLATIVE COUNCIL

## ERRATA

Contents' page —

In line 4 from the bottom, against item 3, *for* ''மிதிநிலை'' *substitute* ''நிதிநிலை''.

Page 88—

In line 9, *for* 'தயாரிகிக்' *substitute* 'தயாராகிக்'

Page 94—

In line 20, *for* 'வே அண்ட்', *substitute* 'வேய்ஸ் அண்ட்'

Page 96—

In the page heading, in between lines 3 and 4, *insert* 'நிதிநிலை அறிக்கை, 1983-84 ஆம் ஆண்டுக்கான'

Page 102 —

In line 10, *for* 'மாநிலத்திலே', *substitute* 'அறிக்கையிலே'

Page 110—

In the page heading, in between lines 3 and 4, *insert* 'நிதிநிலை அறிக்கை, 1983-84 ஆம் ஆண்டுக்கான'

Page 115—

In line 7, *for* 'தான்', *substitute* 'தென்'

Page 121—

In line 12, *for* 'நிறுவனங்களிலே', *substitute* 'நிறுவனங்களிலே'

Page 130—

In line 9, *for* 'ஆளுகிறோ', *substitute* 'ஆளாகிறோ'

Page 146—

*Omit* line 13

Page 150—

(i) In the name heading, *for* 'திரு கு. ச. இராமச்சந்திரன்' *substitute* ''திரு. ச. இராமச்சந்திரன்'

(ii) In line 9 from the bottom, *for* 'போய்', *substitute* 'போய்க்'

Page 151—

For the name heading, ''திரு கு. ச. இராமச்சந்திரன்' *substitute* 'திரு. ச. இராமச்சந்திரன்'

Page 152 —

For the name heading, 'மேலவைத் தலைவர்', *substitute* 'மேலவைத் துணைத் தலைவர்'

Page 155—

In line 7, *for* 'நிலை II', *substitute* 'நிலை III',

Page 157 —

In line 17, *for* 'hydra', *substitute* 'hydro'

Page 158—

(i) In line 14, *for* 'stablished' *substitute* 'established'

(ii) In line 25, *for* 'Uniot', *substitute* 'Unit'

Page 159—

In line 5, in second column, *for* 'antiopation', *substitute* 'anticipation'

Page 160—

In line 16, *for* 'Romagundam', *substitute* 'Ramagundam'

Page 162—

In line 7 from the bottom, *for* 'Sigareni' *substitute* 'Singareni'

Page 165—

In line 16, *for* 'ஆனல்', *substitute* 'அனல்'

P. PALLIKONDAPERUMAL
*Secretary*



TAMIL NADU LEGISLATIVE COUNCIL

ERRATA

*'Contents' Page* —

In line 6, *for* 'ஓய்வு' *substitute* 'ஒய்வு'

*Page* 172—

In the foot-note, *add* 254 and 1 between @ and ஆம் and 'இணைப்பு' and 'ஆக' respectively.

*Page* 174—

In line 15, from the bottom, *for* 'அந்தட்' *substitute* 'அந்தப்'

Page 176—

In line 12, *for* 'சத்திகரிப்பு', *substitute* 'சுத்திகரிப்பு'.

Page 182—

(i) In line 9, *for* 'அதை' *substitute* 'அது'

(ii) In line from the bottom, *for* 'Legislative' *substitute* 'Legislature'.

Page 184—

In line 4, from the bottom, *for* 'மாசோதாவை', *substitute* 'மசோதாவை'.

Page 185—

In line 11, *for* 'இன்றும்' *substitute* 'இன்னும்'

Page 186—

In line 2, *for* 'பிராயணம்' *substitute* 'பிரயாணம்'

Page 188—

In line 3 from the bottom, *for* 'நண்ட' *substitute* 'நீண்ட'

Page 202—

(i) In line 24 *for* 'ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட' *substitute* 'நிறைவேற்றப்பட'.

(ii) After line 24, *insert* 'தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது'.

(iii) *Omit* lines 7 and 6 from the bottom.

Page 214—

In line 14, *for* ' மிதந்துக்கொண்டே' *substitute* 'மிதந்து கொண்டே'.

Page 217—

In line 12, *for* 'மைலப்பூர்' *substitute* 'மைலாப்பூர்'

Page 218—

In the last line *for* 'திருத்தம்' *substitute* 'திருத்தும்'

Page 220—

In line 2, from the bottom, *for* 'Corporation' *substitute* 'Corporations'

Page 221—

In line 2, *for* 'Parliamentarian', *substitute* 'Parliamentarians'.

Page 222—

(i) In line 4 *for* 'felt', *substitute* 'fact' and for 'ding' *substitute* 'doing.'

(ii) In line 5, *for* 'ciey' *substitute* 'City'

(iii) In line 7, *for* 'Ciey' *substitute* 'City'

(iv) In line 9, *for* 'were' *substitute* 'where'

(v) In line 10, *for* 'bear' *substitute* 'hear'

(vi) In line 16, *for* 'poster' *substitute* 'posted'

(vii) In line 18 from the bottom, *add* 'a' between 'such' and 'two'

(viii) In line 2 from the bottom, *for* 'pepole' *substitute* 'people

Page 223—

(i) In line 9, *for* 'subect' *substitute* 'subject'

(ii) In line 20, *for* 'had' *substitute*, 'has'

(iii) In line 23, *for* 'benefitted' *substitute* 'benefited'

Page 224—

In line 8, *for* 'vesteu', *substitute* 'visited'.

Page 227—

In line 10, *for* 'நடத்தவது', *substitute* 'நடத்துவது'

Page 230—

In line 13, *for* 'நகரீயங்கள்', *substitute* 'நகரியங்கள்'



Prge 240—

In line 7, *for* 'மகநகராட்சிப்' *substitute* 'மாநகராட்சிப்'

Page 24

(i) In line 16, *for* 'எரித்தார்' *substitute* 'எறிந்தார்

(ii) In line 7 from the bottom, *for* 'எரிந்து' *substitut* 'எறிந்து'

Page 242—

In the subject heading, *for* 'சட்ட வடிவு' *substitute* 'சட்ட முன் வடிவு'

Page 246—

(i) Transpose lines 1 and 2.

(ii) In the foot-note, *for* 'பக்கங்களில்' *substi ute* 'பக்கத்தில்' and *add* VI between 'இணைப்பு' and 'ஆக'.

Page 247—

In the foot-note, *for* 'பக்கங்களில்' *substitute* 'பக்கத்தில்' an *for* ' * ' *substitute* '@'

Page 249

(i) In line 9, *for* '3,2' *substitute* '2,3'

(i) In line 4 from the bottom, *for* 'ராட்சி' *substitute* ஊராட்சி'

P, PALLIKONDAPERUMAL.
*Secretary*

---

Tamil Nadu Legislative Council Debates, dated 20th March 1935—(Volume No. 212—No. 3).

## TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

### ERRATA

Page 266—

In the foot-note, *for* '101', *substitute* '363' and *for* '1' *substitute* 'I'

Page 272—

In the page heading, *for* '1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி. *substitute* 'மேல்நிலைப் பள்ளிகளில் எம். லிட். பயின்று ஆசிரியர்களாகப்'

Page 276—

In line 14 from the bottom, *for* 'Each ' *substitute* 'இருக்காது Each'

Page 273—

In the page heading, *for* 'மேகில்நிலைப் பள்ளிகளில் எம். லிட். பயின்று ஆசிரியர்களாகப்' '*substitute*' 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி'

Page 279—

In the page heading *for* 'பாரதியார் பல்கலைக் கழகம் பாரதிதாசன்' *substitute* தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி

Page 285—

In the page heading *for* 'தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி' *substitute* 'பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன்'

Page 304—

In line 9 from bottom, *omit* 'அவர்'

Page 313—

Inline 5, *for* ,பேராசியர்' *substitute* 'பேராசிரியர்'

Page 315—

(i) In line, *for* 5 'ஜுமும்பா' *substitute* 'ஜமும்பா'

(ii) In line 12, *for* 'வெளியேறுகின்றவர்' *substitute* 'வெளியேறுகின்ற'

Page 321—

In the foot-note *for* 'இணைப்பு' *substitute* 'இணைப்பு V'

Page 322—

In the foot-note, *for* 'பக்கங்களில்' *substitute* 'பக்கத்தில்' and *for* 'இணைப்பு I' *substitute* 'இணைப்பு VI'

Page 325—

(i) In line 14 from the bottom, *for* 'Member' *substitute* 'Members'

(ii) In line 3 from the bottom, *for* 'Members' *substitute* 'Member'

Page 332—

(i) For the name heading *substitute* '(செல்வி ஆ. லீலாவதி)'

(ii) In line 14, *for* 'சொன்னோப' *substitute* 'சொன்னோம்'

Page 333—

(i) For the name heading *substitute* '(செல்வி ஆ. லீலாவதி)'

(ii) In line 8 from the bottom, *for* 'முற்பகல்' *substitute* 'பிற்பகல்'

Page 345—

In line 13, *for* 'பொருத்தவரையில்' *substitute* 'பொறுத்து வரையில்'

Page 349—

In line 3 from the bottom, *for* 'வாடகைதாரரர்' *substitute* 'வாடகைதாரர்'

Page 350—

For page No. '340' *substitute* '350'

Page 354—

In the name-heading, *for* '(திரு. செ. அரங்கநாயகம்)' *substitute* '(மேலவைத் துணைத் தலைவர்)'

Page 350—

In the foot-note, *for* 'பக்கங்களில்' *substitute* 'பக்கத்தில்'

Page 332—

In line 16, *for* 'Offiecr' *substitute* 'Officer'.

Page 334—

(i) *For* page No. '8' *substitute* '384'

(ii) In line 2, *for* 'Rescarcher' *substitute* 'Rescarchers'

(iii) In line 15, *for* 'substiuted' *substitute* 'substituted'.



Page 385—

In the last line *for* 'Research' *substitute* 'Rescaroher'

Page 386—

In line 9, *for* '386' *substitute* '322'.

Page 389—

*For* page No. '38' *substitute* '389'

P. PALLIKONDAPERUMAL

*Secretary.*

---

Tamil Nadu Legislative Council Debates, dated the 21st March 1985—(Volume 212—No. 4).

## TAMIL NADU LEGISLATIVE COUNCIL

### ERRATA

Contents Page:—

(i) Against item 1, *for* 391-394 *substitute* 391-393'

(ii) Against item 2, *for* '294-533' *substitute* '393-433'

Page 391—

In the foot-note *for* '42' *substitute* '435'

Page 404—

In line 14 from the bottom, *for* "Hindu". *substitute* "Hindu"

Page 408—

In the first line, *for* '575' *substitute* '675'

Page 409—

In line 2 from the bottom, *for* 'என்' *substitute* 'ஏன்'

Page 419—

(i) In the first line, omit 'பகுதி'

(ii) In line 4, *for* 'ஆணையை' *substitute* 'ஆலையை'

P. PALLI KONDAPERUMAL

*Secretary.*

143960
600 008.
D
V211, 32'N85
N85-217-1-2

Tamil Nadu Legislative Council Debates, dated 25th March $19_3{}^5$
(Volume 212—No. 53)

D.2 C 63—5